சஞ்சீவி

ஜனவரி - மார்ச்
2007

JL
V2llm N70 TA
P07. 38-7-9
228653


தமிழரசு
விலை
செய்தி-மக்கள்தொடர்புத் துறையின் வெளியீடு
2007



மகளிர் நலம் காக்க

மகப்பேறு நிதியுதவி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்

30-12-2006 அன்று,

வருமுன் காப்போம் திட்ட தொடக்கவிழாவில்
டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித்
திட்டத்தின்கீழ் பயனாளிகளுக்கு
காசோலைகளை வழங்கினார்.



# தமிழரசு

செய்தி – மக்கள் தொடர்புத் துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2037–38
மார்கழி – தை
ஜனவரி 2007
மலர் : 38 இதழ் : 7

**சமத்துவப் பொங்கல்** 2
மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள்

**மனிதனை உயர்த்தும் அடிப்படையை வகுத்த திருவள்ளுவர்** 9
மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்

**மூன்று மாதத்திற்கு ஒருமுறை இலவச நிலம் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படும்** 25
மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள்

**இன்றைய இளைஞர்கள் நல்ல பண்புகளுக்கு எடுத்துக்காட்டுகளாய் இருந்திடல் வேண்டும்** 45
மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள்

**செம்மொழி** 57

**சான்றோர் போற்றும் திருக்குறள்** 72



## திருக்குறள்

**உழுவார் உலகத்தார்க் காணியஃ தாற்றா**
**தெழுவாரை எல்லாம் பொறுத்து.**

குறள் : 1032

பல்வேறு தொழில் புரிகின்ற மக்களின் பசி போக்கிடும் தொழிலாக உழவுத்தொழில் இருப்பதால் அதுவே உலகத்தாரைத் தாங்கி நிற்கும் அச்சாணி எனப்படும்.

**கலைஞர்** திருக்குறள் உரையிலிருந்து...

## அட்டைப்பட விளக்கம்

நான்காம் பக்க அட்டை : சென்னை மாநகரக் காவல்துறையின் 150ஆவது ஆண்டு விழா. (4.1.07)

ஆசிரியரும் வெளியிடுபவரும் : சி.கோசலராமன், இ.ஆ.ப., இயக்குநர்,
செய்தி – மக்கள்தொடர்பு மற்றும் அலுவலால் [illegible] தமிழ்நாடு அரசு,
சென்னை – தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது, [illegible] தோட்டம்,
அண்ணாசாலை, சென்னை – 600 002. தொலைபேசி : 25368926 / 25364906 [illegible] 25364906
மின்அஞ்சல் : tamilarasu2@hotmail.com இணைய தளம் : www.tn.gov.in

சென்னை-600 008
நூலகம்



# சமத்துவப் பொங்கல்

228653

தமிழச சமுதாயத்தின் தலைசிறந்த பண்பாட்டினை உலகுக்கு உணர்த்தும் வகையில் தைத் திங்கள் முதல் நாள் தமிழர் திருநாள் என ஆண்டுதோறும் கொண்டாடப்படுகிறது.





தமிழ்ச் சமுதாயம் கொண்டாடும் இந்தப் பொங்கல் விழா சாதி, மத, இன வேறுபாடு எதுவுமின்றி உழைப்பையும், உழைப்புக்கு உதவியவர்களையும் எண்ணி நன்றி தெரிவிக்கும் இனிய பண்பாட்டுத் திருவிழாவாக, மனித நேயம் வளர்க்கும் மகத்தான திருவிழாவாகக் கொண்டாடப்படுகிறது. மனித சமுதாயத்திற்கே பொதுவான திருவிழாவாகத் தமிழர்கள் கண்டுள்ள தனிப்பெரும் திருநாள், பொங்கல் திருநாள்!

**உழவன் நன்றியுரைத்து கொண்டாடும் திருநாள் பொங்கல் திருநாள்**

உழுது பயிரிட்டு விளைந்த நெல் மணிகளை வீடு சேர்த்த உழவன் அதன் பயனை நுகரும்பொழுது நன்றியுரைத்துக் கொண்டாடும் திருநாள் பொங்கல் திருநாள்!



வாழும் இல்லத்தைத் தூய்மைப் படுத்தி, புத்தாடை உடுத்தி மாக்கோலம் போட்டு, வீட்டு வாசலில் பொங்கலிட்டு உழவுத் தொழிலுக்குத் தேவையான வெப்பத்தையும், மழையையும் தந்துதவிய கதிரவனுக்கும் கார்மேகக் கூட்டங்களுக்கும் நன்றி தெரிவித்து வணங்கிப் பொங்கல் புது நாளைக் கொண்டாடுகிறான் உழவன், உவகை பொங்கிட; இணை மயிலுடன், இளந்தளிர்களுடன்!

உறவினர் நண்பர்கள் சூழ ஒன்றுகூடி, வீர விளையாட்டுகளில் திளைத்து, ஒருவரை ஒருவர் வாழ்த்தி பாராட்டி மகிழ்ந்து பொங்கல் விழாவில் நிறைவு காண்கிறது தமிழ்க்குலம்!

இப்படி, உழவுத் தொழிலின் பயன் நுகரும் பொங்கல் விழாவை நன்றி நவிலும் பண்பாட்டினை உலகுக்கு வெளிப்படுத்தும் உன்னதத் திருவிழாவாகக் கொண்டாடுகிறது தமிழ் நிலம்!

அந்தப் பொங்கல் திருநாள் தமிழகம் முழுவதும் ஒவ்வொரு ஆண்டும் தனிச் சிறப்புடன் கொண்டாடப்பட வேண்டும் என தமிழக அரசு கருதுகிறது. அந்த வகையில், தமிழகத்தின் ஒவ்வொரு நகரிலும், ஊரிலும், குக்கிராமங்களிலும், ஒவ்வொரு வீட்டிலும் பொங்கல் திருவிழா இந்த ஆண்டு முதலே எழுச்சியுடன் கொண்டாடப்பட வேண்டும் என்பது தமிழக அரசின் விழைவாகும்!

பொங்கல் நாளன்று ஒவ்வொரு வீட்டிலும் வண்ணக் கோலங்கள் போட வேண்டும்! வீடுகளில் மாவிலை தோரணங்கள் கட்டப்பட வேண்டும்.

பொதுவிடங்கள் வண்ணத் தோரணங்களுடன் தென்னை, வாழை, ஈச்சங் குலைகளும், தோகை விரிந்த கரும்புகளும், இஞ்சி, மஞ்சள் கொத்துகளும் இன்னபிறவும் கொண்டு அலங்கரிக்கப்பட வேண்டும். பொது இடங்களை அழகுபடுத்தி, அனைவரும் அங்கு கூடி வீடுகள் வாரியாகத் தனித்தனியே பானைகள் வைத்து, 'சமத்துவப் பொங்கல்' கொண்டாடப்பட வேண்டும்.

மகளிர் இளைஞர் திறம் விளங்கக் கோலப் போட்டிகளும், வீர விளையாட்டுகளும் அந்நாள்களில் நடைபெற வேண்டும். கிராமப்புற நடனங்களும், இதர கலை நிகழ்ச்சிகளும் அங்கங்கே நிகழ வேண்டும்; இருபாலின இளைஞர்களையும், பள்ளிச் சிறுவர், சிறுமிகளையும் ஊக்கப்படுத்தும் வகையில் பரிசுகளும், விருதுகளும் அளிக்கப்பட வேண்டும்.

வணிக நிலையங்கள் – சாலைகள், சோலைகள் – வண்ண விளக்குகளால் ஒளி உமிழட்டும்! கிராமப்புறங்களிலும் நகரங்களிலும் அமைந்துள்ள வீடுகளிலும், அரசு கட்டடங்கள் அனைத்திலும் பொங்கல் நாளன்று வண்ண வண்ணமாய்ச் சர விளக்குகள் அமைக்கப்பட்டு எழில் பெருக்கிட வேண்டும்;

இப்படித் தமிழகம் முழுவதும் தமிழ்ச் சமுதாயத்தின் தனிப்பெரும் பண்பாட்டைத் தரணிக்கு வெளிப்படுத்தும் 'தமிழர் திருவிழா' மகிழ்ச்சியுடனும், எழுச்சியுடனும் தமிழகம் எங்கும் – ஒவ்வொரு பகுதியிலும் கொண்டாடப் பட வேண்டும்.

அரசியல், சாதி, மத, இன, மொழி, வேறுபாடுகளுக்குச் சற்றும் இடங் கொடுத்திடாமல் ஒவ்வொரு பகுதியிலும் உள்ள உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்கள், உறுப்பினர்கள், அரசு அதிகாரிகள், ஆசிரியப் பெருமக்கள் ஆங்காங்கே உள்ள அரசு அமைப்புகளின் பிரதிநிதிகள், நல்லுள்ளம் கொண்ட சான்றோர்கள் என யாவரும் ஒருங்கிணைந்து இப்பெரும் பணியைத் திருப்பணியாக ஏற்று, இந்த அரசின் அன்பு வேண்டுகோளை நிறைவேற்றித் தர பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**ஒருங்கிணைவோம்!**
**ஒற்றுமையை நிலைநாட்டுவோம்!**
**வருங்காலத் தலைமுறை**
**வலிமை பெற**
**வழிகாட்டுவோம்!**

**– மு. கருணாநிதி**
**முதலமைச்சர்,**
**தமிழ்நாடு.**

* * *



# தமிழகம் எல்லாத் துறைகளிலும் செழித்திட - உணர்வுடன் பாடுபட உறுதியேற்போம்!

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பொங்கல் வாழ்த்து**

**தை**த்திங்கள் முதல் நாள்! தமிழர் வீடெல்லாம் இன்பம் பொங்கும் இனிய தனித் தமிழ்த் திருவிழாவாகப் பொங்கல் விழா கொண்டாடப்படும் நாள்! சேற்றில் உழைத்து ஞாலமக்கள் அனைவர்க்கும் சோற்றினைப் படைக்கும் உழவர் பெருமக்கள் உழைத்தவர்க்கும் உதவியோர்க்கும் நன்றியுரைக்கும் நன்னயப் பெருவிழா நாள்!



ஒரு வகையில் உலகத்தவர் அனைவரும் அந்த உழவர் பெருமக்களுக்கு நன்றி உரைத்திட வேண்டிய உன்னதத் திருவிழா நாள்! உழவர் பெருமக்களின் உழைப்பின் அருமையை உணர்ந்த காரணத்தால் அவர்தம் துயர் தீர்த்திட வரலாறுகாணாத வகையில் ஏழாயிரம் கோடி ரூபாய் கூட்டுறவுக் கடன்கள் தள்ளுபடி; இந்த நிதி ஆண்டின் விவசாயக் கடன்களுக்கான வட்டி ஒன்பது விழுக்காட்டிலிருந்து ஏழு விழுக்காடாகக் குறைப்பு; தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் – விவசாயிகள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டம் தொடக்கம்; சிறப்புத் தொகை செலுத்தி இணைப்புப் பெற்ற விவசாயிகளுக்கும் இலவச மின்சாரம்; தடைபட்ட இலவச வேட்டி சேலைத் திட்டம் தொடர்ந்துநடைமுறை; இந்த ஆண்டின் பொங்கல் விழா புதுத் திட்டமாக இலவச எரிவாயு இணைப்பும் அடுப்பும் வழங்கும் திட்டம் எனப் பொங்கல் திருவிழாவையும், உழவர் பெருமக்களையும் பெருமைப்படுத்தி வருகிறது தமிழக அரசு.

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்"

"உழுதுண்டு வாழ்பவர்களே உயர்ந்த வாழ்வினர்; ஏனென்றால், மற்றவர்கள் அவர்களைத் தொழுதுண்டு வாழவேண்டியிருக்கிறது."



என்னும் அய்யன் திருவள்ளுவரின் அருங்குறளின் பொருளுணர்ந்து உழவர்களை என்றும் போற்றும் வகையில் பொங்கல் பெருவிழாவைச் சமத்துவத் திருவிழாவாகத் தமிழகம் முழுவதும் – வானத்து விண்மீன்கள் வரிசை வரிசையாய் வந்து நம் வீதிகள்தோறும், வீடுகள்தோறும் தங்கி மின்னி மிளிர்வதுபோல் வண்ண வண்ணச் சரவிளக்குகள் அமைத்து சாதி, மத, இன வேறுபாடுகளின்றி அனைவரும் இணைந்து பொங்கலோ பொங்கலென முழங்கிக் கொண்டாடுவீர் என வேண்டுகோள் விடுத்து இந்த அரசு சிறப்பிக்கும் அருமைத் திருவிழா பொங்கல் திருவிழா. இத்திருநாளில் தமிழக மக்கள் அனைவருக்கும் என் இதயம் கனிந்த நல்வாழ்த்துகளைத் தெரிவித்து மகிழ்கிறேன்.

தமிழரும் தமிழ் மொழியும் தரணியில் என்றும் தலைநிமிர்ந்து நின்றிட வேண்டும்; தமிழகம் எல்லாத் துறைகளிலும் செழித்துச் சிறந்தோங்கிட வேண்டும் என்னும் உணர்வுடன் பாடுபடுவோம் என இந்நன்னாளில் அனைவரும் உறுதியேற்போமாக!

## தந்தை பெரியார்



# தமிழர் திருநாள்

திராவிடத்தின் ஆதி மக்களான தமிழர்களுக்கு தமிழர்களுக்குரிய பண்டிகை என்பதாக ஒன்றைக் காண்பது மிக அரிதாக உள்ளது.

இதன் காரணம் என்னவென்றால், கலாசாரத் துறையில் தமிழனை ஆதிக்கம் கொண்டவர்கள் தங்களது கலாசாரங்களைத் தமிழனிடம் புகுத்துகிற வகையில் முதல் பணியாக – தமிழ்நாட்டின் தமிழனின் கலாசாரங்களை, பழக்க வழக்கங்களை அடியோடு அழித்து மறைத்து விட்டார்கள். இதனால் தமிழனுக்குரிய கலாசாரம் எது என்று அறிவது கூட மிகமிகக் கடினமான காரியமாக ஆகி விட்டது. தமிழனின் கலாசார பண்புகள் அழித்து ஒழித்து மறைக்கப்பட்டுவிட்டன என்பது மாத்திரமல்லாமல், தமிழனுக்கு வரலாறு, சரித்திரம் என்பது கூட இல்லாமல் அழிக்கப்பட்டு விட்டது.

எனவே, இன்று தமிழன் கலாசாரம், பண்பு, வரலாறு அற்ற ஒரு அடிமை ஜீவனாக விளங்குகிறான். இப்படி விளங்குவது மாத்திரமல்லாமல் இன்று தமிழன் கொண்டாடும் – நடத்தும் கலாசாரப் பண்பு, வரலாறு என்பவைகள் எல்லாம் தமிழனுக்கு இழிவும் அடிமைத் தன்மையும் தந்து அவற்றை நிலைநிறுத்துபவைகளாகவே இருந்து வருகின்றன.

தமிழனுக்குள்ள கலைகள் என்பனவெல்லாம் தமிழனை அடிமையாக்குவனவாகவே இருந்து வருகின்றன. தமிழனுக்கு அடியோடு சமயம் என்பதே இல்லாமல் போய்விட்டதே எனலாம். மக்களுக்கு, விழா முக்கியமான தேவையாகும். விழாவை முன்னிட்டு மக்களுக்கு மகிழ்ச்சி, ஓய்வு, மக்களுடன் அளவளாவுதல், கவலையற்ற கொண்டாட்டம் கொள்ளுதல், அன்பு, ஆசைப்பரிமாற்றம், சுயேச்சையான களியாட்டம் முதலியவைகளை அனுபவிக்க முடிகின்றது. இவைகளை ஏற்படுத்துவதால்தான் இவற்றை விழா என்று கூறுகிறோம்.

கிறித்தவர்கள் காலத்தைக்காட்ட கிறித்துவ ஆண்டு (கி.பி.) இருக்கிறது. முஸ்லிம்கள் காலத்தைக்காட்ட இஸ்லாம் ஆண்டு (ஹிஜ்ரி) இருக்கிறது. இது போல, தமிழனுக்கு என்ன இருக்கிறது? இதற்குத் தமிழனின் ஆதாரம் என்ன இருக்கிறது?



மற்றும், இப்படியேதான் தமிழனுக்குக் கடவுள், சமயம், சமயநூல், வரலாற்றுச் சுவடி, இலக்கியம் முதலியவை என்று சொல்ல எதுவும் காண மிகமிகக் கஷ்டமாக இருக்கிறது.

இப்படிப்பட்ட நிலையில், தமிழர் விழா (பண்டிகை) என்பதாக நான் எதைச்சொல்ல முடியும்? ஏதாவது ஒன்று வேண்டுமே? அதை நாம் கற்பிப்பது என்பதும், எளிதில் ஆகக் கூடியது அல்லவே என்று கருதிப் பொங்கல் பண்டிகை என்பதைத் தமிழன் விழாவாகக் கொண்டாடலாம் என்று முப்பது ஆண்டுகளுக்கு முன் நான் கூறினேன். மற்றும் யாராவது கூறியும் இருக்கலாம்.

இந்தப் பண்டிகையும் (Harvest Festival) அறுவடைத் திருவிழா என்ற கருத்தில் தானேயொழிய, சங்கராந்திப் பண்டிகை, போகிப் பண்டிகை, இந்திர விழா என்று சொல்லப்படும் கருத்தில் அல்ல. இந்தப் பொங்கல் பண்டிகையை தமிழர் எல்லோரும் கொண்டாட வேண்டும்.

('விடுதலை' 30.1.1959)

பொங்கல் பண்டிகை என்பது நாள், நட்சத்திரம், மதக்–கதை ஆதாரம் முதலியவை எதுவுமே இல்லாமல் தை மாதம் ஒன்றாம் தேதி என்பதாகத் தை மாதத்தையும் முதல் தேதியையுமே ஆதாரமாகக் கொண்டதாகும்.

இதற்கு எந்தவிதமான கதையும் கிடையாது. இந்தப் பண்டிகை உலகில் எந்தப் பாகத்திற்கும் எந்த மக்களுக்கும் உரிமையுள்ள பண்டிகையாகும். என்றாலும், மற்ற இடங்களில் மற்ற மக்களால் பல மாதங்களில் பல தேதிகளில் பல பேர்களால் கொண்டாடப்படுவதாகும்.

இக் கொண்டாட்டத்தின் தத்துவம் என்னவென்றால், விவசாயத்தையும் வேளாண்மையையும் அடிப்படையாகக் கொண்டு அறுவடைப் பண்டிகையென்று சொல்லப் படுவதாகும். ஆங்கிலத்தில் 'ஹார்வெஸ்ட் பெஸ்டிவல்' (Harvest Festival) என்று சொல்லப்படுவதின் கருத்தும் இதுதான்.

('விடுதலை' 13.1.1970)





# இசைபட வாழ்வோம்

- அறிஞர் அண்ணா

தம்பி,

பொங்கல் நன்னாள் இன்று; எனவே, எத்துணை தான் என்மீது கோபம் இருப்பினும் – காரணம் உண்டு; அதனை மறுப்பவனும் அல்ல நான் – அதனை மறந்து உவகையுடன் என்னை நோக்குவாய் என்பதனை நான் நன்கு அறிவேன். இந்த நன்னாளில், நமது எண்ணங்கள் கலந்து குழைந்து, எவர் இட்டார், எவர் குழைத்தார், அளவும், வகையும் எவரெவருடையது, எங்ஙனம் இருந்தது என்று கண்டறியக் கூடாதவாறு தேனென இனித்து, மலர்மணம் அளித்து, மாண்புடன் இருந்திடும். உண்மை, இயற்கை. இன்றன்றோ தமிழகமெங்கணும், இல்லமெங்கணும், எங்கிருந்தோ வந்து பூரிப்பைப் பொங்கவைக்கிறது ஓர் விழா உணர்வு. பட்ட பாடுதனைக்கூட ஓரளவு மறந்திடச் செய்கிறது – கவலைப் படலம் கணப்பொழுது மறைகிறது, விழாக் கொண்டாடுகிறோம், வீரமும் தீரமும் வெற்றி நடைபோட்ட, எந்தையர் நாடு இன்று ஏற்றம் குறைந்து, மாற்றார் யார் உற்றார் எவர் என்று அறிந்து செயல்படும் திறமும் தேய்ந்து, கலைந்துள்ள ஓவியமாய், காதிலே முன்னமோர் நாள் கேட்ட இசையாய் இருந்திடுகிறது; எனினும், இருக்கும் இன்னலை மறந்து, கன்னல் நிகர் சுவை தரும் எண்ணங்களைத் தழுவி நிற்கிறது.

செய்தவினை யாதோ, அதற்கு அளிக்கப்பட இருக்கும் அல்லல் எத்தகையதோ, அதனைக் குறைத்திட, இயன்றால் போக்கிட, எவர் அடி வீழ்வது, என்ன பொருள் தந்து ஏத்தி நிற்பது, என்ற எண்ணத்தைக் கொண்டதோர் பண்டிகை நாளல்ல; பாடுபட்டால் பலன் உண்டு, பாழ்வெளியும் செழுமை பெறும், என்ற பொது உண்மையை உணரவும், உழைப்பு எனும் அச்சாணியே உலகு இயங்குதற்கு அமைந்துளது, அதன் வலிவு கெடாமலிருக்கு மட்டுமே இயங்கும், எக்காராணம்கொண்டு, அந்த அச்சாணிக்குக் கேடு செயினும், உலகுக்கு ஊறு நேரிடும் என்பதை அறியவும், ஊறு நேரிடாமல் காத்திட உழைப்பின் மேம்பாட்டினை ஏற்று நடக்கவும், உழைப்பை அளித்திடும் உத்தமர்களை உருக்குலைய வைத்திடும் உலகொப்பா முறைகளை மாற்றிடவும். தோழமை மலர்ந்திடல் வேண்டும். அஃதொன்றே இல்லாமை எனும் நோயையும் நீக்கிடும் மாமருந்து என்று தெளிவு பெறவும்,



அந்தத் தெளிவு பெற்றதன் காரணமாகத் தோழைமைமையைக் கெடுத்திட மூட்டிவிடப்படுகிற, கெடுமதி, கீழ்ச்செயல், பேதபுத்தி, தன்னலம் அடிமைகொளல், அடுத்துக் கெடுத்தல், இல்லது கூறி நல்லது மாய்த்தல், உள்ளது மறைத்து உண்மையைச் சாய்த்திடல் போன்ற, கயமையை எதிர்த்துப் போராடியேனும் வீழ்த்திடல் வேண்டும் என்ற உறுதி பெறவுமான உயர்ந்த மனநிலை ஏற்பட, இவ்விழாப் பயன்படல் வேண்டும்.

வீட்டிலே, கலாபம் விரித்தாடும் காரிகை கண்டும், யாழ் வேண்டாமென்று எண்ணிடவைத்திடும் மழலைமொழிக் குழவி கண்டும், புத்தாடை ஒளிதர, புன்னகை இதயத்தைத்தொட, இளமைக்கோலத்தை அந்தப் பருவம் மாறி இருப்பினும், எளிதில் பெற்றும் இன்புறுவர்.

மிடுக்கு ஏன் போதுமான அளவு இல்லை! இதற்குள் எப்படி வந்தது நரை! ஏன் இவனுக்கு உடலில் தளர்ச்சி! அந்த நாட்களில், நான்......என்று இரு நாற்பது ஆண்டுகளை இனிதே கடந்த முதியவர் கேட்டுத், தம்மை ஒத்தவரிடம், அருவிக்கரை ஓரத்திலும், ஆலும் வேலும் சூழ்ந்த காவிலும், குன்றின் முகட்டிலும் கடலோர மணற் பரப்பிலும், அங்காடியிலும், ஆடல் அரங்கிலும், மற்போர்க் கூடத்திலும், சொற்போர்ப் பள்ளியிலும், இருந்ததையும், இனிமை பெற்றதையும், கூறிக் கூறிக் களிப்படையும் காட்சியைக் கண்டு தந்தையாகித், தத்தைமொழியாளின் முத்தத்தில் ஒரு பகுதி இழந்து, வந்தானே வம்புக்கு! என்று மகிழ்ச்சியுடன் கேட்டபடி மகனைக் கொஞ்சிடும் வயதினர், அக்காலம் இக்காலம் என்றெல்லாம் பேசுவதில் பொருள் என்னை! எக்காலமும், இந்தத் துறையைப் பொறுத்த மட்டில் ஒன்றேதான்! புற நானூறு மாறி இருக்கலாம் – மாறி இருக்கிறது – மாற்றப்பட்டிருக்கிறது! மறுத்தல் இயலாது, ஆயின அகநானூறு மட்டும், அப்பழுக்கின்றி அன்றுபோல் இன்றும் உளது. காலம் அதனைக் கெடுத்திடல் இயலாது; அது தமிழரின் தனிச் சிறப்பு; வழி வழி வந்தது; மரபு ஆகி நிற்பது; என்று எண்ணி மகிழ்கின்றனர்.

தம்பி! அந்த நாட்களில் அருந்தமிழ் வளர்த்து ஆற்றலுடன் நாடாண்ட, மன்னர்களின் ஓவியத்தைக் காணத்தானே, இங்குமங்கும் பார்க்கிறாய்! அது தெரியாமல், உன் செங்கரும்பு பார், நானிருக்க இவர் நயனம் நானா பக்கம் பாய்வதேன் என்று கேட்கிறார்– கேட்கவில்லையா உன் செவிக்கு! அதோ பழத்தைத் தோலோடு தின்ன முற்படும் உன் அருமை மகனிடம் பேசுகிறாள்பார், அந்த அணி மயில்! ஒரு இடமாக உட்காரக்கூடாதா ? இங்கும் அங்கும்... என்று பேசுவது தெரிகிறதா! உனக்காகத்தான்! நீ தேடுவது வேறோர் தேன்மொழியையோ என்று தோன்றுகிறது; நீ தேடுவதோ, அருந் தமிழ்நாட்டை ஆண்ட மன்னர்களின் ஓவியத்தை, தேடிப்பயனில்லை, தம்பி, துளியும் பயனில்லை. தமிழர் இல்லங்களில் தமிழ் அரசர் ஓவியங்கள் இரா! இல்லங்களில் மட்டுந்தானா இல்லை! பலர் உள்ளங்களிலேயே இல்லையே அந்த நினைப்பு.

அரசு இழந்தது மட்டுமல்ல, என்னருந்தம்பி! அந்த நினைப்பையே இழந்துவிட்டோம்! அதிலேதான் இருக்கிறது. நமது வீழ்ச்சிக்கான காரணம் அந்தக் காரணம் விளங்கினால், அடுத்த கணம் விழிப்புணர்வு! ஆம்! உறுதி!

அரசு உணர்வு, நமக்குக் கிடைத்திட, நமக்கென்று உள்ள வாய்ப்புகள் மிக மிகச்சில! அதிலே தலை சிறந்தது, இந்தத் திருநாள்! எனவேதான், திருநாள் கொண்டாடத் தக்க 'நிலை' இல்லை எனினும்கூட, நமது கழகம், எப்பாடுபட்டேனும், இந்த விழாவினை, நாட்டுக்கோர் பொதுவிழாவாக்கி நடாத்த வேண்டும் என்று விரும்புகிறது; அம்முறையில் பணியும் புரிந்து வருகிறது; இயன்றமட்டும்!

தமிழகத்தின் தனிச்சிறப்பை, தரணிமெச்ச நம்மவர் தனி அரசு நடத்திய வரலாற்றினை, நாம் எடுத்துக்கூறி வருகிறோம், மக்களிடையே அதன் பயனாக ஏற்பட்டுவரும் மகத்தான எழுச்சி கண்டு, மனமகிழ்கிறோம். ஏனோவெனில், நாட்டுப்பற்று ஊற்றெடுத்தோட வேண்டுமாயின், நாடு நன்னிலையில் இருந்த வரலாறு மக்கட்குத் தெரிந்திருக்க வேண்டும். இல்லையேல் விழிப்பும் இல்லை, எழுச்சியும் ஏற்படாது, விடுதலை உணர்ச்சி இல்லை, வீறிட்டெழுவார் இரார். ★



(திராவிட நாடு பொங்கல் மலர் 1960)



## மனிதனை உயர்த்தும் அடிப்படையை வகுத்த

# திருவள்ளுவர்

மாண்புமிகு நிதி அமைச்சர்
பேராசிரியர் **க. அன்பழகன்**



கடந்த நூற்றாண்டிலேதான் வள்ளுவனை உணருகிற வாய்ப்பு நமக்கு கிடைத்தது. ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த கிரவ் என்ற அறிஞர் அதை மொழி பெயர்த்து அந்தக் கருத்து மேல்நாட்டுக்குச் சென்ற காரணத்தால், அதைத் தொடர்ந்து ஜி.யூ. போப் மொழிபெயர்ப்பு காரணமாக, அவர் எழுதிய முன்னுரை காரணமாக, நாலடியார் மொழிபெயர்ப்பு என்ற நூலில் அவர் வரைந்த அந்த முன்னுரையால் தமிழன் வள்ளுவரைப் பற்றி அறிந்து கொள்கிற வாய்ப்பை பெற்றான்.

ஜி.யூ.போப் அந்த நாளில் எழுதினார் – திருக்குறளும் நாலடியார் போன்ற அரிய ஒழுக்க நூல்களை, பண்பாட்டு நூல்களை பெற்றிருக்கிற தமிழ்நாட்டு மக்கள், தன்னுடைய பண்பாடு பற்றியோ, தாய்மொழி பற்றியோ, தாழ்வானது என்று எண்ணி வெட்கப்பட்டு நடக்க வேண்டிய அவசியமில்லை. உலகத்தில் உள்ள வேறு எந்த மொழியிலும், நாகரீகத்திலும் கிடைக்காத உயர்ந்த கருத்துக்கள் இந்த நூல்கள் மூலமாக உலகத்திற்கு கிடைக்கின்றன. அது குறித்து தமிழர்கள் பெருமைப்படலாம் என்று எழுதினார்.



அறம் – பொருள்–இன்பம் இது வடமொழியில் அறம் என்பது தர்மம். அது தனி. அதில் கட்டளைகள் தனித்தனியாகப் பிறக்கும். அதைப்போல அவர்களின் அர்த்த சாஸ்திரம் என்பது அரசன் ஆட்சி நடத்த என்னென்ன செய்ய வேண்டுமோ அது. இன்பம் என்பது எப்படி வேண்டுமானாலும் அடையக் கூடியது. வள்ளுவர் கண்ட இன்பம் தூய நல்லின்பம். வள்ளுவர் வகுத்த பொருள் – முயற்சியினால் தேடுகிற பொருள் அடிப்படையில் உலகியல் வாழ்க்கைக்கு தேவையான எல்லாம் என்பதாகும். வள்ளுவர் கண்ட அறம் – மனத்துக்கண் மாசிலன் ஆதல்.

**பண்பாட்டை பெரிய தத்துவமாக்கினார் வள்ளுவர்**

மனிதன் மூன்று வகையில் வாழ்கிறான் ஒன்று மனிதன் மனத்தால் வாழ்கிறான். மனம் மனிதனை ஆண்டு கொண்டிருக்கிறது. மனிதன் அறிவால் முன்னேறுகிறான். அறிவு அவனுக்கு துணையாகிறது. மனிதன் உடலால் இயங்குகிறான். அதை அவன் தவிர்த்துகொள்ள முடியாது. உடலோடு கூடிய இயற்கை இன்ப நாட்டம். அறிவோடு கூடிய செயற்பாடு முயற்சி. அந்த முயற்சியின் விளை பொருள். அதன் விளைவு அரசியல் வரையில், மனம் – அறிவு – உடல் இந்த மூன்றையும் மனிதன் விட்டு விலக முடியாது. உடம்பை கட்டுப்படுத்தலாம். அறிவை நெறிப்படுத்தலாம். மனதை ஆண்டு ஆண்டு, பழக்கிப் பழக்கி தவறான வழியில் போகாமல் நிறுத்தலாம். இந்த மூன்றுக்கும் தேவையான அறம் – பொருள் – இன்பத்தை வள்ளுவர் வகுத்தபோது மனிதனை உயர்த்துவதற்கான அடிப்படையில் அவர் வகுத்தார். மனிதனை வாழ்விக்கச் செய்வதற்கான அடிப்படையை வகுத்தார்.

இந்த அடிப்படையைத்தான் தென்னகத்து மக்களுடைய தொன்மை நாகரீகத்தில் முகிழ்த்த கலாச்சாரத்தின் விளைவு எளிய மக்களின் வாழ்க்கையிலே இழையோடியிருந்த பண்பாட்டை வள்ளுவர் பெரிய தத்துவமாக்கினார்.



②

எனவே, அப்படி ஒரு அற்புதமான அடிப்படை வள்ளுவரால் உலகத்திற்கு கிடைத்தது. நமக்கு கிடைத்தது. நமக்கு கிடைத்த அற்புதத்தை நாம் உணரவில்லை. காரணம் மதம் நம்மை பல்வேறு வகையில் ஆண்டது. ஜாதி பல்வேறு வகையில் நம்மை கெடுத்தது. தீண்டாமை போன்ற கொடுமைகள் நம்மிடம் மெல்ல, மெல்ல புரையோடிய புண்ணாக வளர்ந்தது. மனிதத் தன்மையை நாம் இழந்தோம். வள்ளுவரைப் புரிந்துகொள்ள நாம் தவறினோம்.

எனவே, காலம் மாறுகிறது. வள்ளுவரைப் புரிந்துகொள்கிற ஒரு நல்ல சூழல் உருவாகிறது. மேலும் மேலும் உருவாகும்.

இப்படிப்பட்ட அரும்பெரும் வாய்ப்பாக – தமிழ் மக்கள் எல்லோரையும் உயர்த்துவதாக – எந்த பாகுபாடுக்கும் இடம் தராததாக – எல்லா சமயத்தவரையும் இணைப்பாக ஒரு அடிப்படை அமைத்த திருவள்ளுவரின் திருக்குறள் இந்திய அரசியல் சட்டத்திற்கு இந்தியாவில் இருக்கிற ஒரே ஒரு சான்று நூல். இன்றைக்கு சமயச்சார்பற்ற கொள்கையை அரசு மேற்கொள்ள வேண்டும் என்பது சட்டம். சமய நல்லிணக்கம் மக்களிடையே தேவை. இது நம்முடைய வேண்டுகோள். ஜாதி எண்ணம் அடியோடு ஒழிய வேண்டும். இது நம்முடைய குறிக்கோள். தீண்டாமை ஒழிய வேண்டும். அந்த நல்லெண்ணம் நம்மிடம் வளர வேண்டும். இப்படி எத்தனையோ,

*"இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து*
*கெடுக உலகியற்றி யான்"*

என்று வள்ளுவர் சொன்னதுகூட மனிதன் பிச்சையெடுத்து வாழலாம் என்று சில சமயங்கள் சொல்லியிருக்கின்றன. இன்னும் சொல்லப்போனால் துறவிகள் பிச்சை எடுத்துத்தான் வாழ வேண்டும். துறவி தனக்கென்று எதுவும் தேடிக்கொள்ளக் கூடாது என்பதற்காக அப்படி ஒரு இலக்கணம்.

வள்ளுவர் சொன்னார் – எந்த காரணத்திற்காகவும் ஒருவர் பிச்சை எடுத்து வாழ்ந்து துறவு நிலையை உயர்த்த வேண்டிய அவசியம் இல்லை என்று கருத்துப்பட ஒரு பொது நோக்கில் கூறினார்.

*குமரிமுனையில் நடந்த*
*திருவள்ளுவர் சிலை திறப்பு விழாவில் (1.1.2000)*
*ஆற்றிய தலைமையுரையிலிருந்து...*

## அரசு விழாக்களில் முக்கிய பிரமுகர்களுக்கு சிறந்த நூல்களை வழங்க தமிழக அரசு அறிவுறுத்தல்

தமிழக அரசின் நலத்திட்டங்கள் குறித்து பொதுமக்கள் அறிந்து கொள்ளும்வண்ணம், அரசின் பல்வேறு துறைகள், கழகங்கள், வாரியங்கள் மற்றும் அரசு சார்பு நிறுவனங்களின் சார்பில் பல்வேறு நிகழ்ச்சிகள் மற்றும் விழாக்கள் நடைபெற்று வருகின்றன. அரசு நிகழ்ச்சிகள் மற்றும் விழாக்களில் கலந்து கொள்ளும் முக்கிய பிரமுகர்களுக்கு மாலைகள் மற்றும் பொன்னாடைகள் அணிவிக்கப்படுகின்றன. இனிவரும் காலங்களில் அரசு விழாக்களில் கலந்து கொள்ளும் முக்கிய பிரமுகர்களுக்கு மாலைகள், பொன்னாடைகள் அணிவிப்பதை தவிர்த்து, சிறந்த நூல்கள் வழங்கும் பழக்கத்தினை கடைபிடிக்க வேண்டுமென்று அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. (அரசாணை எண். 305 செய்தி மற்றும் சுற்றுலா (பொருட்காட்சி)த் துறை, நாள். 26.12.2006) இதனால் சிறந்த நூல்களை வழங்கும் உயரிய நெறிமுறை கடைபிடிக்கப்படுவதோடு, புத்தக ஆர்வலர்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பைப் பெற்று நூல்களைப் படிக்கும் வழக்கத்தை ஊக்குவிக்க வழிவகுக்கும். அரசு விழாக்களை நடத்துவோர், இனி மேற்கண்ட நடைமுறையை கடைபிடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.



# பொங்கல் வாழ்த்து

– பாவேந்தர் பாரதிதாசன்



பொன்னாய்ப் பூவாய்ப் பொலிந்த ஞாயிறே,
உண்ணும் விழிகள் உவக்கும்ஓ வியமே,
முன்னைக்கு முன்னர் முளைத்தழ தொளியே,
இந்நாள் மட்டும் இளமைமா றாமல்
புதிது புதிதெனப் போற்றும் பரிதியே,
இந்நாள் புதுமையிற் புதுமை இயற்றினாய்:

காலை மலரெடுத்துக் கட்டழகு கொட்டிக்
கோலக் கதிர்கள் குலுங்க, நீலக்
கடல்மிசை எழுந்த கதிரின் செல்வனே,
ஆடல்வா ழியநின் அழகு வாழிய!
புத்தம் புதிய முத்தரிசி ஆய்ந்து
தித்திக் கும்பால் செம்மையின் அளாவ
அலரிச் செவ்விதழ் அவிழ்த்தன போல
இலகெரி அடுப்பில் ஏற்றிய பானை,
பொங்கிடப், "பொங்கலோ, பொங்கலென்றார்த்தே

புரையீர் வெல்லம், புலிப்பல் போன்ற
ஏலம், பருப்புச் சேலத்து நறுநெய்
நன்று சேர்த்துக் குன்றென இறக்கித்
தேன்பெய்து, முக்கனி சேர்த்து விருந்துடன்
ஒக்கலும் மக்களும் உரிமையின் உட்கார்ந்
திருள்நீக்கி எழுநன் எழுச்சி வாழ்த்தி
அருள்தேக் குழவர் வாழ்த்தி அந்தமிழ்
வாழ்வினை வாழ்த்தி வாழ்த்தி
மூழ்குவர் இன்பத்து முழுதுண்டு நன்றே!

# புத்தகக் கண்காட்சி நடத்த அரசு சார்பில் இடம் ஒதுக்கீடு






மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
கலைஞர் **மு. கருணாநிதி** அவர்கள்
அறிவிப்பு

**நீ**ண்ட காலத்திற்குப் பிறகு பல முறை அழைக்கப்பட்டும்கூட, வருகின்ற வாய்ப்பு தவறி, வர இயலாமல் போய், இன்றைய தினம் இந்த 30ஆவது புத்தகக் கண்காட்சித் திறப்பு விழாவில் கலந்துகொள்கின்ற உன்னதமான வாய்ப்பைப் பெற்றமைக்காக நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். கோரிக்கைகள் எழுப்பப்பெறும், அவைகளை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு நம் தலையிலே விழும் என்ற அச்சத்தின் காரணமாக வருவதை நான் தவிர்க்கவில்லை. என்ன கோரிக்கை வரும், எப்போது வரும், எப்படி வரும் என்றெல்லாம் எதிர்பார்ப்பவன் நான் என்பதை நீங்கள் அறிவீர்கள். இங்கே நம்முடைய நல்லி குப்புசாமி அவர்கள் அந்தக் கோரிக்கைக்கான அடிக்கல்லை நாட்டியிருக்கிறார். தொடர்ந்து பேசிய தம்பி துரைமுருகன் அவர்கள், அந்த அடிக்கல் நாட்டு விழாவையொட்டி அடுத்த விழாவிற்கான அறிவிப்பைச் செய்திருக்கிறார். இடம்தான் எது என்று குறிக்க வேண்டிய பணியை எனக்கு விட்டிருக்கின்றார்கள். நான் என்னுடைய உரையின் இறுதிக் கட்டத்தில், அது பற்றி கூறலாமென்று இருக்கிறேன்.



இங்கே நம்முடைய எழுத்தாளர் பிரபஞ்சன் அவர்களுக்கும், மற்றும் இந்தப் புத்தகத் துறையிலே நீண்ட அனுபவமும், ஆற்றலும் பல வெற்றிகளைக் குவித்த பாங்கும் பெற்ற நண்பர்களுக்கெல்லாம் விருதுகள் வழங்கப்பெற்றன. அந்த விருதுகளைக் கண்டபோது, நான் வியப்புற்றேன். இப்போதெல்லாம் விருது வழங்கினால், அந்த விருதுகளோடு சால்வை அல்லது பொன்னாடை, அண்மையிலே தமிழக அரசு பிறப்பித்த ஆணை அல்லது வேண்டுகோளின்படி புத்தகங்கள் இவைகளை வழங்குவது மரியாதைக்காக, ஆனால் விருது வழங்குவது மரியாதைக்காக மாத்திரமல்ல, அவர்கள் ஆற்றிய ஒரு பெரும் தொண்டின் வெற்றிக்காக அவர்களைப் போல மற்றவர்களும் அந்த விருதுகளைப் பெறுகின்ற அளவிற்கு ஆற்றலைப் பெற வேண்டும், சமுதாயத்திற்கு தொண்டாற்ற வேண்டும் என்பதற்காக விருதுகள் வழங்கப்படுவதாகத் தான் நான் உணருகின்றேன். ஆனால் இங்கே வழங்கப்பட்ட விருதுகள், முதலிலே என்னுடைய கையிலே சால்வையைத் தந்தார்கள், அதை அணிவித்தேன், அடுத்து கேடயத்தைத் தந்தார்கள், அதை வழங்கினேன், மூன்றாவது ஒரு பொற்கிழி தருவார்களோ, அதை வாங்கி வழங்கலாம் என்று எதிர்பார்த்தால், கண்ணதாசன் மகன் என்னை ஏமாற்றிவிட்டார், என்னை அல்ல, விருதுகளைப் பெற்றவர்களை ஏமாற்றிவிட்டார். நான் இது போன்ற மேடைகளில் கேலி புரிவதற்கென்றே ஒரு நண்பர் பல ஆண்டு காலம் என்னோடு பழகிக் கொண்டிருந்த ஒரு நண்பர் கண்ணதாசன் என்பதை நீங்கள் அறிவீர்கள். அந்தக் கண்ணதாசன் இன்றைக்கு இல்லாவிட்டாலும், அந்தக் கண்ணதாசன், காந்தி கண்ணதாசன் உருவத்திலே இங்கேயிருப்பதைக் காணும்போது எனக்கு எத்தனையோ நினைவுகள்.

கண்ணதாசனை சேலத்திலே மாடர்ன் தியேட்டரிலே சந்தித்தது, அப்படி சந்தித்த பிறகு சிவகங்கை மாநாட்டிலே அறிஞர் அண்ணா அவர்களிடம் அழைத்துப் போய் அறிமுகப்படுத்தியது, அண்ணா அவர்கள் கனிவோடு வரவேற்றது, அப்படி வரவேற்ற போது வெள்ளைக்காரன் ஸ்டைலில் கண்ணதாசன் சிகரெட் டின்னை அண்ணாவிடம் நீட்டியது, நான் உடனே கண்ணதாசன் கையைப் பிடித்திழுத்து அப்படியெல்லாம் செய்யக்கூடாதென்று தடுத்தது – இவைகள் எல்லாம் நான் இந்த மேடையிலே அமர்ந்து காந்தி கண்ணதாசனைப் பார்த்தபோது என் நெஞ்சத்தில் நிழலாடின.

இது ஏதோ கண்ணதாசனைப் பற்றிக் குறை சொல்வதற்காக அல்ல. எத்தகைய நினைவுகள் எல்லாம் கண்ணதாசன் என்கிறபோது எனக்கு வருகிறது என்பதற்காக இதைச் சொன்னேனே அல்லாமல் வேறல்ல. பிறகு ஒரு முறை பொள்ளாச்சியில் நடைபெற்ற ஒரு கூட்டத்திற்குச் சென்றது, செல்கிற வழியில் கோவையில் கண்ணதாசனை ஒரு கடை வாசலில் சந்தித்தது, காரை நிறுத்தி ஏன் இங்கே நிற்கிறீர்கள் என்று கேட்டது, நான் எங்கே போகிறேன் என்று அவர் என்னை வினவியது, பொள்ளாச்சி கூட்டத்திற்கு போகிறேன் என்று நான் சொன்னது, நானும் வருகிறேனே என்று அவர் கேட்டது, இருவரும் ஒரே காரில் பொள்ளாச்சி கூட்டத்திற்குச் சென்றது, அங்கே மேடைக்கு கீழே அவர் அமர்ந்திருந்தது, நான் பேசுவதற்கு முன்பு அவர் என்னைப் பார்த்து நானும் பேசுகிறேனே என்று கேட்டது, திடீரென்றெல்லாம் இந்தக் கட்சிக் கூட்டத்திலே பேச முடியாதய்யா என்று நான் சொன்னது, ஏன் என்று கேட்டது, நெற்றியிலே பூசியிருப்பது என்று நான் காரணம் சொன்னது, உடனே அதை அழித்துவிட்டு மேடையிலே வந்து அவர் பேசியது – அப்படி அவசர அவசரமாக மாறிய காரணத்தால்தான் மறுபடியும் மாறியது இவைகள் எல்லாம் கண்ணதாசனுடைய பெயரை நினைக்கும்போது எனக்கு எழுகின்ற எண்ணங்கள். ஆனால் என்றைக்கும் மறக்க முடியாத ஒரு பெயராக அது இருப்பதை நான் இங்கே பேசுவதிலிருந்து நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

எத்தனையோ நண்பர்கள் எனக்கு உண்டு. ஒரு முறை நான் ஒரு இடத்திலே அமர்ந்து வசனம் எழுதிக் கொண்டிருந்த போது, தொலைபேசியிலே ஒரு நண்பரைத் தொடர்பு கொண்டு பேசினேன். குறுக்கே ஒரு குரல் கேட்டது. அந்தக் குரல் யாருடைய குரல் என்று நான் சிந்தித்தபோது, அது கண்ணதாசனின் குரலாக இருந்தது. நீயா பேசுகிறீர் என்று அவர் என்னைக் கேட்டார். ஆமாம், நான்தான், நீயா பேசுகிறாய் என்று நான் அவரைக் கேட்டது. அந்தக் குறுக்குக் குரல் பேச்சிலே எங்களுக்குள் இருந்த மனச் சங்கடங்களையெல்லாம் போக்கிக் கொண்டது, அப்போது நான் சொன்னது, நன்றாகத்தான் திட்டுகிறாய் மேடைகளில், தமிழில் திட்டுவதால் அது எனக்கு இனிக்கிறது என்று நான் சொன்னது – அந்தத் தமிழைக் கேட்டுக் கேட்டு நான் இன்புற்றது, அப்படிப்பட்ட கண்ணதாசனின் மகனை, இரண்டாவது தலைமுறையை இங்கே நான் சந்திக்கும் நேரத்தில் எனக்கு எவ்வளவு இன்பம் இருக்கும் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

அவரும் இருந்து இதுபோன்ற நிகழ்ச்சிகள் நடைபெற்றால் எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி, மூன்று மடங்கு மகிழ்ச்சி, முன்னூறு மடங்கு மகிழ்ச்சிகூட இருந்திருக்கும். எனவே இந்தப் புத்தகக் கண்காட்சி திறப்பு விழாவில் நான்

கண்ணதாசனை நினைவு கூர்வது என்னுடைய கடமை. நான் அவர்பால் வைத்திருந்த உண்மையான பாசத்திற்கு அடையாளம் என்ற காரணத்தால் என்னுடைய ஆருயிர் நண்பன் கண்ணதாசனை இங்கே நினைவு கூர்ந்தேன் என்று மாத்திரம் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

எழுத்தாளர் பிரபஞ்சன் அவர்களுக்கும் மற்றும் எழுத்துத் துறையிலே அச்சிடுவோர், புத்தகம் வெளியிடுவோர், பதிப்பகத்தார் ஆகியோருக்கும் பரிசுகள் வழங்கி அவர்கள் எல்லாம் இங்கே ஊக்கப்படுத்தப் பட்டிருக்கிறார்கள். இந்த அரசைப் பொறுத்தவரையில் பொதுமக்கள் அறிந்துகொள்ளும் வண்ணம் பல்வேறு துறைகள், கழகங்கள், வாரியங்கள் மற்றும் அரசு நிறுவனங்கள் சார்பில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. அரசு நிகழ்ச்சிகள் மற்றும் விழாக்களில் கலந்துகொள்ளும் முக்கிய விருந்தினர்களுக்கு அல்லது பிரமுகர்களுக்கு மாலைகள் மற்றும் பொன்னாடைகள் அணிவிக்கப்படுகின்றன. இனி வருங்காலங்களில் அரசு விழாக்களில் கலந்துகொள்ளும் முக்கிய பிரமுகர்களுக்கு மாலைகள், பொன்னாடைகள் அணிவிப்பதைத் தவிர்த்து, சிறந்த நூல்கள் வழங்கும் திட்டத்தைப் பின்பற்ற வேண்டும் என்று 26.12.2006இல் அரசாணை ஒன்று வெளியிடப்பட்டிருக்கின்றது.

இந்த அரசாணை 2006இல் இப்போது வெளியிடப்பட்டிருந்தாலும் கூட நம்முடைய நல்லி குப்புசாமி அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப்போல கன்னிமாரா நூல் நிலைய ஆண்டு விழா ஒன்றில் நான் பேசும்போது இதை அப்போதே குறிப்பிட்டேன். 97ஆம் ஆண்டு என்று கருதுகிறேன். இனி மேல் விழாக்களில் மாலை மரியாதை, பொன்னாடை போர்த்துதல் இந்த மரியாதை களையெல்லாம் விட்டுவிட்டு புத்தகங்கள் வாங்கித்தர வேண்டும் என்று குறிப்பிட்டேன். இடைக்காலத்தில் அதை நிறைவேற்றுகின்ற பொறுப்பு எனக்கு வராத காரணத்தால், நீங்கள் தராத காரணத்தால், இப்போது தந்திருக்கிறீர்கள் என்ற வகையில் அந்தப் பொறுப்பை நிறைவேற்றுகின்ற வகையில் புத்தகங்கள்தான் இனிமேல் வாங்கி வழங்க வேண்டுமென்று அரசாணையே பிறப்பிக்கப்பட்டிருகின்றது. எனவே அரசு விழாக்கள் எதுவாயினும், அரசைச் சேர்ந்தவர்கள், அமைச்சர்கள் கலந்துகொள்கின்ற விழாக்கள் எதுவாயினும் அந்த விழாக்களில் எல்லாம் மரியாதை செய்வதற்குப் புத்தங்களைத் தான் வாங்கித் தரவேண்டும். இதை ஆணை என்று உரைத்தாலும்கூட, புத்தகங்கள் மீது நீங்கள் காட்டுகின்ற மரியாதை என்ற அளவில் எடுத்துக் கொண்டு, இந்தக் கடமையை நிறைவேற்ற வேண்டுமென்று அனைவரையும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

பொதுப்பணித்துறை அமைச்சர் தம்பி துரைமுருகன் அவர்கள் நிரந்தரமாக இந்தப் புத்தகக் கண்காட்சியை நடத்துவதற்கு சென்னையிலே ஒரு பெரிய இடம் பார்த்திருக்கிறேன் என்று இரண்டு இடங்களைக் குறிப்பிட்டார். ஒன்று எத்திராஜ் கல்லூரிக்கு அருகிலே உள்ளது. மற்றொன்று சைதாப்பேட்டையிலே உள்ளது என்று சொன்னார். அந்த இரண்டு இடங்களையும் ஆண்டுதோறும் இந்தப் புத்தகக் கண்காட்சியை நடத்திக் கொண்டிருக்கின்ற இந்தப் பொறுப்பிலே உள்ள நண்பர்களும், இந்த சங்கத்திலே, இந்த அமைப்பிலே உள்ளவர்களும் சென்று பார்த்து எது ஏற்ற இடம் என்று சொல்வார்களேயானால், அந்த இடத்தை அரசு சார்பிலே உங்களுக்கு ஒதுக்கித் தரத் தயாராக இருக்கிறோம் என்பதை ஒரு அறிவிப்பாகவே இங்கே வெளியிட விரும்புகிறேன்.

அதை அரசு கட்டுவதா ? அல்லது இந்த அமைப்பு கட்டுவதா ? என்று கேட்டால் இருவரும் சேர்ந்தே கட்டுவோம், இரண்டு பேர் சேர்ந்து கட்டினால்தான் நன்றாக இருக்கும் என்பது உங்களுக்கெல்லாம் தெரியும். தனித்தனியாக கட்டினால் கட்டுவதாக இருக்காது, ஆகவே சேர்ந்தே கட்டலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அது மாத்திரமல்ல, நம்முடைய பிரபஞ்சன் இங்கே சொன்னார், முதல் அமைச்சர் வந்தால் ஏதாவது அறிவிப்பு இல்லாமல் இருக்காது என்றார். அவர் சொன்னது வீண் போகக்கூடாது, ஒரு எழுத்தாளன் சொன்னது வீண் போய்விடக் கூடாது அல்லவா ? அதனால் ஒரு அறிவிப்பைச் செய்ய விரும்புகிறேன்.

எனக்கு ஒரு குறை என்று தொடக்கத்தில் சொன்னேனே, நம்முடைய காந்தி கண்ணதாசன் அவர்கள் எப்படியோ கொஞ்சம் கருமியாக இருந்து பொன்னாடையோடு, கேடயத்தோடு விட்டு விட்டார் அல்லவா ? யாருக்கும் எந்தப் பொற்கிழியும் வழங்காமல்! அப்படி வழங்குவதற்கான ஒரு நிகழ்ச்சிக்கு ஒரு ஏற்பாட்டைச் செய்திருக்கிறேன்.

உங்களுக்குத் தெரியும், எனக்கு ஏற்கெனவே ஓராண்டுக்கு முன்பு சன் தொலைக்காட்சியின் சார்பில் எனக்குத் தரப்பட்ட என்னுடைய பங்குத் தொகையில்





மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், 10.1.2007 அன்று சென்னையில் 30ஆவது புத்தகக் கண்காட்சியினை திறந்துவைத்து உரையாற்றும்போது அறிவித்தவாறு, தென்னிந்திய புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர் சங்கத்திற்கு தனது சொந்த பொறுப்பிலிருந்து கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில், ரூ.1 கோடிக்கான காசோலையினை 11.1.2007 அன்று வழங்கினார்.

ஐந்து கோடி ரூபாயை நான் வங்கியிலே அறக்கட்டளை பெயரால் டெபாசிட் செய்து, அதிலே வருகின்ற வட்டியை நலிந்தவர்களுக்கு, குறிப்பாக உடல் நலிந்தவர்களுக்கு, நோயுற்றவர்களுக்கு, கல்வி தேவைப்படுகிறவர்களுக்கு, மேல்படிப்பு படிக்க விரும்புவர்களுக்கென்று மாதந்தோறும் அவர்களுடைய மனுக்களைப் பெற்று, வேண்டுகோளைப் பெற்று, அவர்களுக்கு உதவி நிதி வழங்கிக் கொண்டிருக்கின்றோம். இப்போது கூட நேற்றையதினம் வந்த செய்தியின்படி இரண்டு இலட்சத்து அறுபதாயிரம் ரூபாய் வட்டித் தொகை உதவி நிதியாக வழங்கப் பட்டுள்ளது.

நான் இந்த அமைப்புக்கும், காந்தி கண்ணதாசனுக்கும் சொல்லிக் கொள்கிறேன். எதிர்பார்க்கிறோம் என்று குறிப்பிட்ட அருமை நண்பர் பிரபஞ்சனுக்குச் சொல்லிக் கொள்கிறேன். அறக்கட்டளை பெயரால் வங்கியிலே போடப்பட்டுள்ள அந்தத் தொகையிலிருந்து ஒரு கோடி ரூபாயை நான் இந்த அமைப்புக்கு தருகிறேன். அந்த ஒரு கோடி ரூபாயை வங்கியிலே டெபாசிட் செய்து, அதிலே கிடைக்கின்ற வட்டியைக் கொண்டு ஆண்டுதோறும் நல்ல புத்தகங்கள், சமுதாயச் சீர்திருத்தப் புத்தகங்கள், எதிர்கால இளைஞர்களுக்கு ஆக்கப்பூர்வமான பணிகளை ஒதுக்கித் தருகின்ற புத்தகங்கள், அறிவார்ந்த புத்தகங்களை தேர்வு செய்து அதை எழுதிய புத்தக ஆசிரியர்கள் ஐந்து பேருக்கு, ஆளுக்கு ஒரு இலட்சம் ரூபாய் என்று ஐந்து இலட்சம் ரூபாயைத் தருவதற்காக அந்த ஒரு கோடி ரூபாய் என்னுடைய சொந்தப் பொறுப்பிலே வங்கியிலிருந்து இந்த அமைப்புக்கு ஒதுக்கப்படுகிறது என்ற நல்ல செய்தியைச் சொல்லி, இந்த நல்ல விழாவிலே உங்களையெல்லாம் சந்திப்பதற்கு ஒரு நல்ல வாய்ப்பு ஏற்பட்டமைக்காக நன்றியினைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

**சென்னையில் 10.1.2007 அன்று**
**30ஆவது புத்தகக் கண்காட்சியினை**
**திறந்து வைத்து**
**மாண்புமிகு தமிழக முதலமைச்சர்**
**கலைஞர் மு. கருணாநிதி**
**அவர்கள் ஆற்றிய உரை**



## ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் சாதனைகள் படைத்த தமிழக வீரர்களுக்கு ரூ.60 இலட்சம் பரிசு

**தோ**ஹாவில் நடைபெற்று முடிந்துள்ள பதினைந்தாவது ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் இந்திய அணியில் இடம் பெற்றுத் தமிழகத்தின் சார்பில் கலந்துகொண்டு சாதனைகள் படைத்த வீரர்களில், தடகளப் பிரிவில் மகளிருக்கான 800 மீட்டர் ஓட்டத்தில் வெள்ளிப்பதக்கம் வென்ற புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த வீராங்கனை சாந்திக்கு 15 இலட்சம் ரூபாயும், சதுரங்கப் போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற சென்னையைச் சேர்ந்த வீரர் சசிகிரண் கிருஷ்ணனுக்கு 20 இலட்சம் ரூபாயும், வீராங்கனை அஞ்சு பி. ஜார்ஜ் நீளம் தாண்டுதல் போட்டியில் வெள்ளிப்பதக்கம் வென்றமைக்கு 15 இலட்சம் ரூபாயும், ஸ்குவாஷ் ஒற்றையர் போட்டியில் வெண்கலப்பதக்கம் வென்ற வீரர் சௌரவ் கோசலுக்கு 10 இலட்சம் ரூபாயும் பரிசுத் தொகையாக வழங்கப்படும் எனத் தமிழக அரசினால் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்தது.

அந்த அறிவிப்பின்படி 18.12.2006 அன்று தலைமைச் செயலகத்தில், தோஹா ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் சாதனைகள் படைத்த தமிழக விளையாட்டு வீரர்களான சசிகிரண் கிருஷ்ணனுக்கு 20 இலட்சம் ரூபாயையும், அஞ்சு பி. ஜார்ஜ்க்கு 15 இலட்சம் ரூபாயையும், சாந்திக்கு 15 இலட்சம் ரூபாயையும், சௌரவ் கோசலுக்கு 10 இலட்சம் ரூபாயையும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வழங்கி தமது பாராட்டுகளைத் தெரிவித்தார்.

தடகளப் போட்டியில் வெள்ளிப்பதக்கம் வென்ற வீராங்கனை சாந்தியின் பெற்றோர்கள் தம் வீட்டில் தொலைக்காட்சிப் பெட்டி இல்லாததால் தமது மகள் தோஹாவில் நிகழ்த்திய சாதனையைக் காணமுடியாமல் போனது எனக் கூறியதன் அடிப்படையில், வீராங்கனை சாந்திக்கு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி ஒன்றையும் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் பரிசாக வழங்கினார்.

இந்நிகழ்வின்போது மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் டாக்டர் க. பொன்முடி, மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.டி.பி.எம்.மொய்தீன் கான், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை செயலாளர் திரு. அம்பேத்கர் ராஜ்குமார், இ.ஆ.ப., தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் – செயலர் செல்வி அபூர்வா இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர்.





## சான்றோர்களை ஊக்கப்படுத்துவதன் மூலம் எதிர்காலச் சமுதாயத்திற்கு ஏற்றம் கிடைக்கும்

(சென்னை, கலைவாணர் அரங்கத்தில்
8.1.2007 அன்று நடைபெற்ற
தமிழக அரசின் விருதுகள் வழங்கும் விழாவில்
மாண்புமிகு முதலமைச்சர்
கலைஞர் மு. **கருணாநிதி** அவர்கள்
ஆற்றிய உரை)

**அ**ன்பார்ந்த விழாத் தலைவர், தமிழக அரசின் நிதி அமைச்சர், இனமானப் பேராசிரியர் அவர்களே, அய்யன் திருவள்ளுவர் விருதினைப் பெற்று நமக்கெல்லாம் எழுச்சியுரை ஆற்றிய முனைவர் அறவாணன் அவர்களே, தந்தை பெரியார் விருதைப் பெற்று, கொள்கை முரசு ஆர்த்த இனமுரசு, தம்பி சத்தியராஜ் அவர்களே, அண்ணல் அம்பேத்கர் விருதினைப் பெற்றுக்கொண்டு சமத்துவ சமுதாயம் படைப்பதற்கு நமக்கெல்லாம் உறுதுணையாக இருப்பேன், ஒத்துழைப்புத் தருவேன் என்றுரைத்த அன்புத்தம்பி தொல். திருமாவளவன் அவர்களே, அறிஞர் அண்ணா விருதினைப் பெற்று திராவிட இயக்கத்தின் ஆரம்ப காலத்திலிருந்து ஆற்றிய பணி தொடரும் என்ற உறுதிமொழியினை வழங்கி, உற்ற நண்பர் என்ற வகையிலே உரையாற்றிய ஆருயிர் சகோதரர் ஆர்.எம்.வீ. அவர்களே, சட்டப் பேரவையிலே பல்லாண்டு காலம் நாங்கள் எல்லாம் "அக்கா, அக்கா" என்றழைத்து, எங்களிடம் அளவற்ற அன்பு காட்டி எந்த இயக்கத்தில் இருந்தாலும், கொள்கையிலே பிடிப்போடு இருப்பேன் என்பதை எடுத்துக்காட்டி வாழ்ந்து வருகின்ற, இன்று பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் விருதினைப் பெற்ற அருமை அக்கா, பொன்னம்மாள் அவர்களே, மகாகவி பாரதியாரின் விருதைப் பெற்று – காமராஜர் தமிழருவி என்றார், மூப்பனார் நயாகரா நீர் வீழ்ச்சி என்றார், நாமெல்லாம் இது கோடை மழையா, குளிர் தென்றலா என்று வியப்புறும் வண்ணம் உரையாற்றிய அருமைத்தம்பி தமிழருவி மணியன் அவர்களே, பாவேந்தர் பாரதிதாசன் விருதினைப் பெற்று, அரியதோர் உரையினை ஐந்தாறு நிமிடங்களில் இங்கே ஆற்றி நம்மையெல்லாம் கவர்ந்த முனைவர், அறிஞர் பெருமகன் செல்லப்பன் அவர்களே, தமிழ்த் தென்றல் திரு. வி. க. விருதினைப் பெற்று, என்னுடைய அன்புக்கும் நட்புக்கும் நீண்டகாலமாக ஆட்பட்டிருக்கின்ற அருமைத்தம்பி திருநாவுக்கரசு அவர்களே, வரவேற்புரையாற்றிய தலைமைச் செயலாளர், அருமை நண்பர் திரிபாதி, ஐ.ஏ.எஸ். அவர்களே,



③



நன்றியுரையாற்றவிருக்கின்ற தமிழ் வளர்ச்சித்துறைச் செயலாளர் திரு. ராஜேந்திரன், ஐ.ஏ.எஸ்., அவர்களே, அமைச்சர் பெருமக்களே, பல்வேறு இயக்கங்களைச் சார்ந்த நண்பர்களே, கலையுலகத் தோழர்களே, தாய்மார்களே, தோழர்களே, என் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புக்களே,

நீண்ட நேரம் இந்த நிகழ்ச்சி நடைபெறும் என்று நாம் எண்ணியிருந்தாலுங்கூட எட்டு பேர் விருது பெற்றிருந்தாலும், அந்த எட்டு பேரும் தங்களுடைய உரையை அளவோடு ஆற்றி உரிய நேரத்தில் நிகழ்ச்சியை நிறைவு செய்கின்ற ஒரு கட்டத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆனால் நான் நீண்ட நேரம் பேசுகின்ற நிலையிலே இல்லை. காரணம் எனது உள்ள நிலை உற்சாகமாக இருக்கிறது. என்றாலும், உடல் நிலை இடம் தரவில்லை. விரைவில் சில செய்திகளோடு என்னுடைய உரையை நிறைவு செய்ய விரும்புகிறேன்.

இங்கே நன்றியுரையாற்றிய விருதுபெற்ற வித்தகர்கள் அனைவரும் ஒன்றைச் சொன்னார்கள். வசை பாடியவர்களுக்கும் நீங்கள் அன்பு காட்டி விருது வழங்கியிருக்கிறீர்கள் என்றார்கள். வசை பாடியவர்களுக்கு விருது வழங்கினேன் என்று என்னை உயர்த்தியதாக நான் அதைக் கருதவில்லை. என்னைப் பொறுத்தவரையில் வசை பாடியவர்கள் என்னை இந்த அளவிற்கு வளர்த்து விட்டிருந்தார்கள் என்ற உறுதி படைத்தவன் நான்.

ஒரு இரும்புத் துண்டை சுத்தியல்களை வைத்து, சம்மட்டிகளை வைத்து அடித்துக் கொண்டேயிருந்தால், அதற்காக இரும்புத் துண்டு கோபப்படாது. மிகவும் கஷ்டப்பட்டு நம்மை ஒரு கடையாணியாகவோ, அச்சாணியாகவோ ஆக்குவதற்காக அடித்துக் கொண்டிருக்கிறான், என்றுதான் அந்த இரும்புத் துண்டு அதைப் பொறுத்துக் கொள்ளும். அதைப் போலத்தான் யார் என்னை வசை பாடினாலும், அவைகள் எல்லாம் என்னை உருவாக்குவதற்கு, என்னை ஒரு தேருக்கு அல்லது வண்டிக்கு, அல்லது ஒரு சக்கரத்திற்கு அச்சாணியாக ஆக்குவதற்கு அல்லது கடையாணியாக ஆக்குவதற்கு நீங்கள் செய்த உதவி என்றுதான் அதை கருதுகிறேனே அல்லாமல், பார், பார், இவ்வளவையும் தாங்கிக் கொள்கிறேன் என்று என்னுடைய பலத்தைக் காட்டுவதற்காக அல்ல என்பதை இந்த மாமன்றத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விருது வழங்குகின்ற விழா தமிழர்களுடைய பண்பாடு தமிழ் மன்னர்களுடைய கொலு மண்டபங்களில் இந்த விழாக்கள் நடைபெற்ற வரலாறுகள் உண்டு. அதற்கு இலக்கியச் சான்றுகள் உண்டு. பட்டினப்பாலைப் பாடிய கடியலூர் உருத்திரங்கண்ணனார், கரிகாற் சோழன் வழங்கிய விருதைப் பெற்றான் என்று இலக்கியம் சாற்றுகிறது. ஜெயங்கொண்டார் பாடிய கலிங்கத்துப் பரணியில் இராச பாரம்பரியம் என்ற பகுதியில், 198வது தாழிசையில்,

"தத்துநீர் வரால் குருமி வென்றதும்,
தழுவு செந்தமிழ் பரிசில் வாணர் பொன்

பத்தோடு ஆறு நூறாயிரம் பெற
பண்டு பட்டினப் பாலை கொண்டதும்"

என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்குப் பொருள், பரிசு கொடுப்பது மாத்திரமல்ல, இன்றைக்கு விருது பெற்றவர்களுக்கு நாம் கொடுத்தது ஒரு இலட்சம் ரூபாய்தான். எட்டு பேருக்கும் சேர்த்தால் எட்டு இலட்சம் ரூபாய். ஆனால் கடியலூர் உருத்திரங்கண்ணனாருக்கு கரிகாற் சோழன் பதினாறு இலட்சம் பொன் வழங்கினான் என்று கலிங்கத்துப்பரணி பாடலிருந்து தெரிய வருகிறது.

இப்படி தமிழ் அரசர்கள் விருதுகளும், பரிசுகளும் வழங்கி சான்றோர்களைப் போற்றியிருக்கிறார்கள். அன்று அரசர்கள் செய்த வேலையை, இன்று அரசு செய்கிறது. செய்திருக்கிறது. சான்றோருக்கு, சரித்திர நாயகர்களாக விளங்குகின்றவர்களுக்கு, புலவர்களுக்கு, தமிழ் அறிஞர்களுக்கு, அவர்களை நாம் ஊக்கப்படுத்துவதின் மூலம் இந்த உலகத்திற்கு நன்மை கிடைக்கும், எதிர்காலச் சமுதாயத்திற்கு ஏற்றம் கிடைக்கும்



என்ற அந்தத் தன்னலத்தோடுதான் இன்றைய விழா நடைபெறுகிறதே அல்லாமல், பார், பார், நாங்கள் நாட்டை ஆளுகிறோம், இவர்களுக்கெல்லாம் விருது வழங்குகிறோம் என்று காட்டிக் கொள்வதற்காக அல்ல.



விருது பெற்றவர்கள் நாங்கள் நன்றி மறக்க மாட்டோம் என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். இந்த நன்றியைப் பற்றி அதிகமாக பேசப் பேச, பலருக்கு சந்தேகம் கூட ஏற்படலாம். பேசியவர்களைப் பற்றி அல்ல. நன்றி மறப்பவர்களும் தமிழகத்திலே இருக்கிறார்களா ? என்று பலருக்கு சந்தேகம் கூட ஏற்படலாம். நன்றி மறப்பவர்கள் தமிழகத்திலே இல்லை, இருக்கக்கூடாது என்பதில் நான் அழுத்தமான கருத்து உடையவன். நன்றி மறந்தே கூட ஏதாவது ஒரு செயலில் அவர்கள் ஈடுபடுவார்களேயானால், அவர்கள் மீண்டும் உண்மையை உணர்ந்து நம்முடைய கருத்துகளைக் கேட்பவர்களாக நம்மோடு இணைந்து பொதுத் தொண்டு – பொதுத் தொண்டு என்றால் என்ன ? தமிழுக்காக, தமிழர்களுக்காக, தமிழ்நாட்டிற்காக, தமிழ் மக்களுக்காக ஆற்றுகின்ற அந்தத் தொண்டை ஆற்றுவதற்கு – முன்வருவார்களேயானால், அவர்கள் நன்றி மறந்திருந்தாலும், அதை மறக்க நான் தயாராக இருக்கிறேன். ஏனென்றால் ஒரு நாட்டினுடைய எதிர்காலத்தை நிர்ணயிக்க வேண்டிய, எதிர்காலத்தை வகுத்திட வேண்டிய பெரும் பொறுப்பு நமக்கெல்லாம் இருக்கின்றது. நம்முடைய பேராசிரியர் அவர்கள் இங்கே பேசும்போது சொன்னார்கள். தம்பி சத்தியராஜ் அவர்கள் இன்று தாடி வைத்துக்கொண்டு வயதானப் பெரியாராக காட்சி அளிக்கிறார்.

உண்மையிலேயே தாடி முளைத்து, தண்டூன்றி, அவர்கள் வருகின்ற காட்சியை நாம் காண வேண்டும், காணத்தான் போகிறோம் என்று சொன்னார். பேராசிரியருக்கு அவ்வளவு நம்பிக்கை சத்தியராஜ்க்கு தாடி முளைத்து, மீசையெல்லாம் வெள்ளையாகி, கூனிக் குருகி, தண்டூன்றி நடக்கின்ற வரையில் நாம் வாழப் போகிறோம் என்ற நம்பிக்கை பேராசிரியருக்கு இருக்கிறது. இயற்கை அப்படி நம்மையெல்லாம் விட்டுவைக்கும் என்று நான் கருதவில்லை. நம்மை இயற்கை அழைத்துக் கொண்டாலுங்கூட, அதற்கிடையிலே நாம் வளர்த்து விட்டுப் போகின்ற இந்தச் சமுதாய எழுச்சி நாம் இன்றைக்கு என்ன இந்த நாட்டில் நடக்க வேண்டும், எத்தகைய நிலை உருவாக வேண்டுமென்று கருதுகிறோமோ, அதைக் கொண்டு சேர்க்க வேண்டுமென்ற நம்பிக்கையோடுதான் நாம் கண்களை மூடுவோம், மூட வேண்டும், அதற்கு நீங்கள் எங்களுக்கெல்லாம் துணை நிற்க வேண்டுமென்று உங்களையெல்லாம் கேட்டுக்கொள்கிறேன்.

நான் தமிழ் நிலத்தை ஐந்தாவது முறையாக ஆளுகின்ற பொறுப்பை ஏற்றிருக்கிறேன் என்றால், அது தனி ஒரு கருணாநிதியினுடைய திறமை அல்ல, சாமர்த்தியம் அல்ல, அறிவு ஆற்றல் அல்ல. பெரியாரும், அண்ணாவும் தந்த பிச்சை. நீங்கள் எல்லாம் தந்து கொண்டிருக்கின்ற ஆதரவு. அதை வைத்துத்தான் என்னால் முடிந்த செயல்களை இன்றைக்குச் செய்து கொண்டிருக்கின்றேன். அதற்கு எத்தனையோ விமர்சனங்கள், எத்தனையோ எதிர்ப்புகள் இருந்தாலும்கூட பெரியார் வளர்ந்த விதமே, எதிர்ப்பிலே தான் வளர்ந்தார். எதிர்ப்பு இல்லாவிட்டால் இயக்கத்தை வளர்க்க முடியாது என்று பெரியார் கருதினார். இன்றைக்கும், பெரியார் மறைந்த பிறகும்கூட, பெரியார் சிலைக்கே எதிர்ப்பு என்கின்ற அளவிற்கு பெரியாருடைய அந்த வீச்சு, அவர் உருவாக்கிய அந்த இயக்கத்தின் வேகம் இவைகளைத் தாங்கிக் கொள்ள முடியாத சிலர் அதனால் தாங்கள் பாதிக்கப்படுகிறோம், தங்களுடைய கொள்கைகள், தங்களுடைய எண்ணங்கள், தங்களுடைய ஆதிக்கம் வீழ்த்தப்படுகிறது என்ற காரணத்திற்காக பெரியாரையே இன்றைக்கு தாக்குகின்ற நிலைமைகளையெல்லாம் பார்க்கின்றோம்.

நான் இந்த நேரத்திலே இந்த விழாவைப் பயன்படுத்திக்கொண்டு தமிழக முதலமைச்சர் என்ற முறையிலே ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இப்போது சில நாட்களாக, ஏன்



சில மாதங்களாக பெரியாருக்கு எதிர்ப்பு, அதைக் கண்டு துடிக்கின்ற பெரியாருடைய ஆதரவாளர்கள், எங்களைப் போன்றவர்கள் படுகின்ற கோபம், அந்தக் கோபத்தால் ஏற்படுகின்ற எதிரொலி, விளைவு, இரு புறத்திலும் – ஒரு புறத்திலே பெரியாருடைய சிலை உடைக்கப்பட்டால், அல்லது சேதப்படுத்தப்பட்டால் அல்லது களங்கப்படுத்தப்பட்டால், அதற்கு மாறாக, இன்னொரு புறத்தில் வேறொரு ஆன்மீக வாதியின் சிலை, ஒரு பக்தனுடைய சிலை, அல்லது ஒரு கடவுளின் சிலை சேதப்படுத்தப்படுகிறது என்றால் நான் இந்த இரண்டு நிலையையும் ஆதரிக்கவில்லை.

எப்படி பெரியாருடைய சிலைக்கு ஒரு சேதம் வருகின்ற நேரத்திலே சேதப்படுத்தியவர்களை தேச விரோதிகள் என்று அடையாளம் காட்டப்பட்டு, சட்டப்படி அவர்களைத் தண்டிக்கிறோமோ அதைப் போலவேதான் ஒரு ஆன்மீகவாதியினுடைய, ஒரு ஆண்டவனுடைய சிலையை யாராவது சேதப்படுத்தினால், அதனால் ஏற்படுகின்ற அந்த அராஜகங்கள், அமைதியின்மை இதற்கு காரணகர்த்தா அவர்களும் தேச விரோத சட்டப்படி தண்டிக்கப்பட வேண்டியவர்கள்தான் என்பதை நான் ஏற்கெனவே அறிவித்திருக்கிறேன். எனவே இந்த நேரத்தில் அதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். யாராக இருந்தாலும் பெரியார் அமைதியைத்தான் விரும்பினார்.

தன்னுடைய புரட்சிகரமான கருத்துகளைக்கூட அமைதியாகத்தான் சொல்ல வேண்டுமென்று கருதினார். அவர் எந்த நேரத்தில் சட்டத்தை மீறினாலும்கூட, சட்டத்தை மீறி நடப்பேன் என்று சொன்னாலுங்கூட, அப்படி மீறுகின்ற கட்டம் வரையிலேதான் சொல்வார். அந்தக் கட்டம் வருகின்ற நேரத்தில் அதனால் பாதிப்புகள் ஏற்படக் கூடாது. அதனால் நாட்டில் நாச காரியங்கள் விளைந்திடக் கூடாது. இதைப் பயன்படுத்திக் கொண்டு விஷமிகள் நாட்டை வேட்டையாடிவிடக் கூடாது என்று பெரியார் கருதினால், அந்தக் கிளர்ச்சியைக்கூட அவர் திரும்பப் பெற்றுக் கொள்வார்.

உங்களுக்குச் சொல்கிறேன். பெரியபுராணத்தைக் கொளுத்த, கம்பராமாயணத்தைக் கொளுத்த பெரியார் நாள் குறித்தார். நாள் குறித்து அதற்கான இடமும் தேர்ந்தெடுத்தார், அறிவித்தார். நாடு முழுவதும் இருந்த பெரியாரின் தொண்டர்கள் அந்த மாநாட்டிலே திரண்டார்கள். கடைசி நேரத்தில் பெரியாருக்கு ஆர்.கே. சண்முகம் செட்டியாரிடமிருந்து தகவல் வந்தது. இதனால் ஏற்படுகின்ற விளைவுகளை எண்ணிப்பாருங்கள் என்று. அவ்வளவுதான், எண்ணிப்பார்த்தார். மற்றவர்களை எண்ணிப்பார்க்கச் சொன்ன பெரியார், அதனால் ஏற்படக் கூடிய விளைவுகளை எண்ணிப் பார்த்தார். தான் கொண்ட கொள்கையிலே உறுதியாக இருந்து, கம்பராமாயணத்தைக் கொளுத்தியே தீருவேன் என்று இல்லாமல், இப்படி கொளுத்தினால் என்ன ஆகும் என்ற விளைவுகளை எல்லாம் எண்ணிப்பார்த்து நாட்டில் அமைதிதான் முக்கியம், அமைதியான முறையிலேதான் அறிவார்ந்த கொள்கைகளை மக்களுக்குச் சொல்ல முடியும் என்று அவர் தன்னுடைய போராட்டத்தையே விலக்கிக் கொண்டார் என்றால், பெரியாருக்கு தன்னுடைய கொள்கை மீது இருந்த பற்றைவிட, மக்களிடத்திலே ஏற்படக் கூடிய அராஜகக் குழப்பத்தைத் தவிர்க்க வேண்டும் என்பதிலே இருந்த குறி தான் முக்கியமாக இருந்தது. எனவேதான் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

எந்த பெரியாருடைய கொள்கைகளிலே அழுத்தமாக இருக்கின்ற நிலை ஒரு பக்கம் இருந்தாலும், அதை எதிர்க்கின்ற ஆத்திகர்களுடைய அணிவகுப்பு இன்னொரு புறத்திலே இருந்தாலும் இரண்டு பேரையும் நான் கேட்டுக்கொள்வது, இருவருக்கும் முக்கியம் உங்கள் கொள்கைகளை அமைதியாகச் சொல்லுங்கள். அவர்கள் கொள்கைகளை அமைதியாக சொல்லட்டும். கருத்துக்கு கருத்து, கொள்கைக்குக் கொள்கை, இலட்சியத்திற்கு இலட்சியம் என்று எடுத்து வையுங்கள், இதற்குப் பதிலாக வன்முறை, அராஜகம் விளைந்தால் அது பெரியாருக்கும் நல்லதல்ல, அவருடைய கொள்கைக்கும் நல்லதல்ல, பெரியாரை எதிர்க்கின்றவர்களுக்கும் நல்லதல்ல,





நாட்டிற்கும் நல்லதல்ல என்பதை நான் எடுத்து தெரிவித்து இதிலே சட்டப்படி நடந்து கொள்ள இந்த அரசு தயங்காது என்பதை இந்த விழாவிலே நான் அறிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கின்றேன்.

எனவே இன்று நடைபெறுகின்ற இந்த நிகழ்ச்சியில் நம்முடைய நண்பர்கள் எல்லாம் எடுத்துக்காட்டியதைப்போல் எப்படியெப்படி சான்றோர்களும், ஆன்றோர்களும் இன்றைக்குப் பாராட்டப் பட்டிருக்கிறார்களோ, அதைப்போல தொடர்ந்து அவர்கள் பாராட்டப்பட, இந்த ஆட்சி தன்னுடைய நடவடிக்கைகளை மேற்கொள்ளும். அப்படி நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற நேரத்தில் நீங்கள் எல்லாம் இந்த ஆட்சிக்கு ஆதரவாக இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக இங்கே உரையாற்றியவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். நாங்கள் இந்த ஆட்சிக்கு உறுதுணையாக இருப்போம் என்றார்கள். உறுதுணையாக இருப்பதென்றால், இந்த ஆட்சி நீடிப்பதற்கு உறுதுணை என்று அல்ல. இந்த ஆட்சி எந்தெந்த சாதனைகளைச் செய்திருக்கிறதோ, அந்தச் சாதனைகள் வென்றிட, அந்த எண்ணங்கள் நிறைவேறிட ஆதரவாக இருந்தால், அதுதான் நான் வரவேற்கக் கூடிய ஆதரவு. அந்த ஆதரவை நீங்கள் தொடர்ந்து தாருங்கள் என்று அவர்களையெல்லாம் கேட்டுக்கொள்கிறேன்.

தம்பி திருமாவளவன் இங்கே பேசும்போது அண்ணல் அம்பேத்கர் அவர்களுக்கு இந்த அரசு செய்திருக்கின்ற அடையாளச் சின்னங்களைப்பற்றியெல்லாம் சொன்னார்கள். நான் நினைவூட்ட விரும்புகிறேன். மராட்டிய மண்டிலத்தில் தோன்றியவர், அங்கே தன்னுடைய கருத்துக்களை எடுத்து வைத்தவர் அண்ணல் அம்பேத்கர் என்றாலுங்கூட, அவருடைய பெயரால் ஒரு பல்கலைக்கழகம் அங்கே உருவாக, அங்குள்ளவர்கள் எதிர்த்தார்கள். அதனால் அந்தப் பல்கலைக்கழகம் உருவாக முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. சட்டப் பேரவையிலே தீர்மானம் நிறைவேற்றிய பிறகும் கூட, மராட்டிய மண்டிலத்தில் சட்டசபை தீர்மானத்திற்குப் பிறகும்கூட, அந்தப் பல்கலைக்கழகத்தை நிர்மாணிக்க முடியவில்லை. இதைப்பற்றி, பத்திரிகைகளிலே ஒரு துண்டு செய்திதான் வந்தது. அதை நான் படித்துப் பார்த்தேன். உடனடியாக தி.மு.க. சார்பாக ஒரு அறிக்கை கொடுத்து மராட்டியத்திலே அம்பேத்கர் பெயரால் பல்கலைக்கழகம் தொடங்காமல் இருப்பது தவறு, உடனடியாக தொடங்க வேண்டும் என்பதை வலியுறுத்தி தமிழ்நாட்டிலே உள்ள தி.மு.கழகத் தோழர்கள் அத்தனை பேரும் கடிதமோ, தந்தியோ இலட்சக்கணக்கில் மராட்டிய அரசுக்கு அனுப்புங்கள் என்று வேண்டுகோள் கொடுக்க இலட்சக்கணக்கான கடிதங்களும், தந்திகளும் மராட்டியத்திலே உள்ள முதலமைச்சருக்கும், அப்போது அங்கே ஆளுநராக இருந்த அலெக்சாண்டருக்கும் போய்க் குவிந்தன.

அவைகளையெல்லாம் பார்த்த அலெக்சாண்டர் எனக்கு கடிதம் எழுதினார். உங்கள் தந்திகள் எல்லாம் வந்து சேர்ந்தன, உடனடியாக அதற்கான முயற்சிகளை எடுக்க மராட்டிய அரசை வற்புறுத்துவேன் என்று கவர்னர் அலெக்சாண்டர் கடிதம் எழுதினார். தொடர்ந்து ஒரு வாரத்திற்கெல்லம் அதற்கான அரசாணை பிறப்பித்து, அந்த அரசாணையின் நகலை எனக்கு அனுப்பி வைத்து, இதோ பார், நான் சொன்னபடி செய்து விட்டேன் என்று சொன்னார் என்றால், தி.மு.கழகத்திற்கு – பெரியாரால், அண்ணாவால் வளர்க்கப்பட்ட தி.மு. கழகத்திற்கு அம்பேத்கர்பால் உள்ள அன்பும், உறுதியும் அவர் பெயரால் ஒரு நினைவாலயம், பல்கலைக்கழகம் உருவாவதை தடுக்கிறார்கள் என்றால், அதைத் தகர்க்கக் கூடிய துணிவும் உண்டு என்பதை நிலைநாட்டுகின்ற வகையிலேதான் அந்த வெற்றியை நாம் பெற முடிந்தது.

அதைப் போலவே இங்கே, நான் கடந்த முறை முதலமைச்சராகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது தம்பி துரைமுருகன் பொதுப்பணித்துறை அமைச்சர். இப்போதும் அப்படித்தான். அவர் ஒரு பெரிய வீட்டை, நான் வசதியாக குடியிருப்பதற்காக, சொந்த வீட்டிலே குடியிருப்பது என்ற கொள்கையை மாற்றிக்




கொண்டு, இங்கே வந்து அமருங்கள் என்று துரைமுருகனும், நம்முடைய வீராசாமி போன்றவர்களும் என்னை வலியுறுத்தி நானும் சரி அந்த வீட்டை நினைக்கிறபடி நிர்மாணியுங்கள், அங்கே நான் குடும்பம் வந்து விடுகிறேன் என்று சொன்னேன். அவர்கள் அப்படியே நிர்மாணித்தார்கள். ஒவ்வொரு நாளும் என்னை அழைத்துக் கொண்டு போய், பார் பார், இங்கே பூங்கா அமைத்திருக்கிறோம், இங்கே நீச்சல் குளம் கட்டியிருக்கிறோம், இங்கே சலவைக்கற்கள் போட்டிருக்கிறோம் என்றெல்லாம் காட்டுவார்கள். நன்றாக இருக்கிறது, தொடரட்டும் என்பேன். எல்லாம் முடிந்த பிறகு என்றைக்கு குடி வருகிறாய் என்று கேட்டார்கள். நான் குடி வருவதற்காக இல்லையப்பா இது, அம்பேத்கர் பல்கலைக்கழகத்தின் அலுவலகம் இது என்று சொன்னேன்.

அப்படி அம்பேத்கர் கொள்கையிலே நாட்டமும், அந்தக் கொள்கை பரவ வேண்டும் என்பதில் ஆர்வமும், அக்கறையும் இன்று நேற்றல்ல, இன்று ஏதோ நம்முடைய திருமாவளவன் இங்கே பேசினார் என்பதற்காக அல்ல. விடுதலை சிறுத்தைகள் ஏராளமாக இங்கே வந்திருக்கிறீர்கள் என்பதற்காக அல்ல. எனக்குத் தெரிகிறது, நீங்கள் அதிகமாக வந்திருப்பது அதற்காக அல்ல. என்னுடைய அரசியல் ஆரம்ப வாழ்க்கையே ஆதிதிராவிடர்களுடைய காலனிகளிலேதான் ஆரம்பமாயிற்று. ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன்.

என்னுடைய ஆருயிர் நண்பர் ஒருவர் நான் முதலமைச்சராக இருந்த போது, ஒரு நாள் பிற்பகல் 2 மணிக்கு வேகமாக என் வீட்டிற்கு வந்தார். நான் பெயரைச் சொல்ல விரும்பவில்லை. பெரிய சீர்திருத்தவாதி. என்ன என்று கேட்டேன். ஒரு காரியம் நீங்கள் முடித்துக் கொடுக்க வேண்டும் என்றார். என்ன காரியம் என்றேன். என்னுடைய அண்ணன் மகன், ஒரு ஆதிதிராவிடப் பெண்ணைக் காதலிக்கிறான், அதைத் தடுத்தாக வேண்டும். நான் எப்படி தடுக்க முடியும்? என்றேன். முதலமைச்சர் என்ற முறையில் அதிகாரத்தைப் பயன்படுத்தி தடுத்தே ஆக வேண்டுமென்றார். முதலமைச்சராக இருந்தால் காதலைத் தடுப்பதுதான் வேலையா? என்றேன். இல்லை, இல்லை, எங்கள் சாதியிலே ஒத்துக் கொள்ளமாட்டார்கள், நாங்கள் பெரிய குடும்பம், நாங்கள் ஆதிதிராவிடப் பெண்ணை வீட்டிற்குள் சேர்த்துக் கொள்ளத் தயாராக இல்லை, நீ தான் சமாதானம் செய்து பணிய வைக்க வேண்டும், அதிகாரத்தைப் பயன்படுத்து என்றார். கொஞ்சம் வீட்டிற்குள் வா என்று அவரை அழைத்துக் கொண்டு அடுப்பங்கரைக்கு அழைத்துச் சென்றேன்.

இதோ பார், இங்கே நிற்பது யார் தெரியுமா? இந்தப் பெண்ணின் பெயர் காந்தி. இது யார் தெரியுமா, என் மகன் அழகிரியின் மனைவி. நீ சொல்கிறாயே, ஆதிதிராவிடப் பெண் என்று அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர். என் வீட்டு அடுப்பங்கரையில் ஒரு ஆதிதிராவிடப் பெண்ணை மருமகளாக வைத்துக் கொண்டு, உன் வீட்டுக்கு ஆதிதிராவிடப் பெண் வரக் கூடாது என்று சொன்னால், அந்தப் பெண் கேட்குமா, கேட்காதா? உன் வீட்டில் மாத்திரம் ஆதிதிராவிடப் பெண் இருக்கலாம், நான் வரக் கூடாதா என்று கேட்டால் யார் பதில் சொல்வது என்றேன். பிறகு வெற்றி எனக்குத்தான் கிடைத்தது – மன்னிக்கவும் – அந்தப் பெண்ணுக்கும், பிள்ளைக்குத்தான் கிடைத்தது. நன்றாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இப்போது அவர்களுடைய பிள்ளை திருமணத்திற்கு நான் சென்று வாழ்த்துக் கூறினேன்.

ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், சமுதாயத்தில் இப்படிப்பட்ட எழுச்சியும், புரட்சியும், சமத்துவ நிலையும், ஏற்றத்தாழ்வற்ற ஒரு நிலையும் உருவாக பாடுபட்ட இயக்கத்தின் பங்களிப்பு, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு உண்டு. அந்த ரத்தம். எங்கள் உடம்பில் ஓடிக்கொண்டுதான் இருக்கிறது. ஆனால் பகுத்தறிவு பேசுகின்ற சிலர் கூட, இந்தச்





சாதியிலே ஏற்படுகின்ற ஏற்றத் தாழ்வை அகற்றுவதை இன்னமும் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை என்பதை நான் வெட்கத்தோடு ஏற்றுக் கொள்கிறேன்.

நான் ஒத்துக் கொள்வதை திருமாவளவன் ஏற்றுக் கொள்வார் என்றே கருதுகிறேன். நான் "ஒரே ரத்தம்" என்று ஒரு புத்தகம் எழுதினேன். அதை திரைப்படமாக எடுத்தார்கள். வெளியிட்ட போது, அது ஓரளவு வெற்றிகரமாக ஓடியது. பராசக்தி போலவோ, மனோகரா போலவோ பெரு வெற்றியை அடையவில்லை. நம்முடைய கழத்தைச் சேர்ந்த ஒருவரே என்னைப் பார்த்து என்ன அண்ணே, இந்தக் காலத்திலே போய் இதை எழுதிக் கொண்டிருக்கிறீர்களே என்றார். ஒரே ரத்தம் என்று சொன்னால், ஆதிதிராவிடர்களின் ரத்தமும் என்னுடைய ரத்தமும் ஒன்றுதான் என்று சொல்வதுதான் ஒரே ரத்தம். அந்த ஒரே ரத்தத்தைக்கூட அனுமதிக்காத பகுத்தறிவாளர்கள் சிலர் இன்னமும் இருக்கத்தான் செய்கிறார்கள். அதையெல்லாம் நாம் பண்படுத்த வேண்டும். அதையெல்லாம் திருத்த வேண்டும்.

அந்த ஆத்திரத்தில்தான் பராசக்தி படத்திலே "கா..கா.." பாடலில் ஒரு வரி வரும். "பட்சமாக இருங்க....பகுத்துண்டு வாழுங்க.... எங்கள் பகுத்தறிவாளரை பார்க்காதீங்க" நீங்கள் பல பேர் அதைக் கவனித்திருக்க மாட்டீர்கள். பராசக்தி பாட்டாயிற்றே. அதைக் கிண்டல் செய்யக் கூடாது என்று நினைத்திருப்பீர்கள். பகுத்தறிவாளர்கள் இதை ஒத்துக்கொள்ள மாட்டார்கள் என்று அப்போதே என் மனதில் இந்தக் கருத்தைச் சொல்லி, அதை உடுமலை நாராயணக் கவி அவர்கள் பாட்டாக எழுதினார்கள். எனவே எவ்வளவுதான் சீர்திருத்தம் பேசினாலும், எவ்வளவுதான் புரட்சிகரமாகப் பேசினாலும், இந்த மாதிரி சாதி என்று வரும்போது அந்த உயர்வு தாழ்வு இருக்கிறதே, அதை நம்மை விட்டுப் போனால்தான் உண்மையான சுயமரியாதை வந்ததாக அர்த்தம்.

பெரியார் கொள்கைகளை நாம் உண்மையாக கடைப்பிடிப்பதாக அர்த்தம். அண்ணாவை நாம் உண்மையாக பின்பற்றுவதாக அர்த்தம். அம்பேத்கரை நாம் உண்மையாக பின்பற்றுவதாக அர்த்தம். இல்லாவிட்டால் நடிப்பாக ஆகி விடும். நடிப்பு என்பது தவறான ஒன்றல்ல. இங்கே கூடச் சொன்னார்கள். நடிப்பு கூடாது என்று, நடிப்பு கூடாது என்பதல்ல. நடிப்பு தத்ரூபமாக இருக்கலாம். ஆனால் அது நடிப்பாக இருந்து விடக் கூடாது. நடிப்பு; திறமையைக் காட்டுவதற்காகத்தான் பயன்பட வேண்டுமே தவிர, நடிப்பு மற்றவர்களை ஏமாற்றுவதற்குப் பயன்படக்கூடாது.

இங்கே உரையாற்றிய விருது பெற்ற அத்தனை பேரும், ஒவ்வொருவரைப் பற்றியும் பேராசிரியர் அவர்கள் மிக அழகாக, பகுதி பகுதியாகச் சொல்லி விட்டார்கள். நானும் அதையே திரும்பச் சொல்ல விரும்பவில்லை என்பதல்ல, தேவையில்லை. அனைவரையும் நீங்கள் அறிவீர்கள். வெவ்வேறு இயக்கத்திலே இருந்து பாடுபட்டவர்கள். இன்றைக்கும் வேறு வேறு இயக்கத்திலே இருப்பவர்கள்தான். ஆனால் ஒரே இயக்கம் – தமிழ் இயக்கம் – தமிழர் இயக்கம் – அறிவு இயக்கம் – இந்த இயக்கத்தில் நாம் எல்லாம் ஒரே இயக்கத்தைச் சேர்ந்தவர்கள்தான். இதை நினைத்துத்தான் நேற்றைக்குக்கூட பொங்கலை முன்னிட்டு ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறேன். படித்திருப்பீர்கள் என்று கருதுகிறேன். பொங்கல் திருநாளை தமிழர்கள் அனைவரும் சமத்துவ நோக்கத்தோடு கொண்டாட வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறேன்.

நாம் வெளிநாடுகளில் பார்த்திருக்கிறோம். அமெரிக்க சுதந்திர நாள் அன்று பார்த்தால் ஜெகஜோதியாக அமெரிக்கா காட்சி தரும். அதைப்போல ஆண்டுப் பிறப்பிலே பார்த்தால், ஆங்கிலேயர் வாழுகின்ற இங்கிலாந்து ஆனாலும் பிரெஞ்சுக்காரர்கள் வாழுகின்ற பாரீஸ் ஆனாலும் அங்கெல்லாம் விளக்குகள் மின்ன, வீதிகள் எல்லாம் அலங்கரிக்கப்பட, குழந்தைகள், மாணவர்கள், சிறார், பெரியவர் உட்பட அத்தனை பேரும் குதூகலத்தோடு

நடனங்கள் ஆட ஆங்காங்கு அகமகிழ்ச்சியில் துள்ளிக் கொண்டிருப்பார்கள். அதைப் போல நாம் தீபாவளி அன்றுதான் பட்டாசு வெடிக்கிறோம். நான் தீபாவளி கொண்டாடாதே என்று சொல்வதற்காக இதைச் சொல்லவில்லை. அதைவிட அழகாக, அமைதியாகக் கொண்டாட ஒரு விழா இருக்கிறது. நரகாசுரனைப் போல அது யாரும் செத்துப் போனதற்காக கொண்டாடுகின்ற விழா அல்ல. நாம் சாகாமல் இருப்பதற்காகக் கொண்டாடுகின்ற விழா. தமிழன் வாழ்வதற்காக, தமிழன் வளத்தோடு வாழ்வதற்காக கொண்டாடுகின்ற விழா, பொங்கல் விழா. அந்தப் பொங்கல் விழாவை ஆண்டுதோறும் கொண்டாடுவதற்கு பாரதிதாசன் பாடினான் – மார்கழி உச்சியில் மலர்ந்தது பொங்கல் – எவ்வளவு அழகான வரி பாருங்கள். தமிழருவி மணியன் இதை ரசிப்பார் என்று கருதுகிறேன்.



அதாவது மார்கழி உச்சியில் மலர்ந்தது பொங்கல் என்கிறார் . தை முதல் நாள் பொங்கல் என்று சொல்லாமல், மார்கழி மாதம் முடிகிறதாம், பொங்கல் மலருகிறதாம். அது பாரதிதாசனுக்கு கை வந்த கலை, இந்தக் கற்பனை. அப்படி மார்கழி உச்சியிலே மலர்ந்த பொங்கலை நம்முடைய மக்கள் எல்லோரும் தமிழர்களாக நின்று கட்சிகளை மறந்து – நீ எந்தக் கட்சி, நீ எந்தக் கட்சி என்பதையெல்லாம் கவலைப்படாமல், நம்முடைய ஆர்.எம்.வீ. அவர்கள் சொன்னதைப் போல எல்லோரும் ஒற்றுமையாக இருந்து பொங்கலை நாம் கொண்டாட வேண்டும். அப்படி கொண்டாட வேண்டுமென்ற வேண்டுகோளை அரசின் சார்பாக இன்று நான் கையெழுத்திட்டு அறிக்கையாக வெளியிட்டிருக்கிறேன். அது ஒரு பக்கம் முரசொலியிலே அறிக்கையாக வந்திருக்கிறது. தினத்தந்தியிலே வெளி வந்திருக்கிறது. மற்ற பத்திரிகைகளிலும் வருமென்று எதிர்பார்க்கின்றேன். ஆகவே எல்லோரும் பொங்கலை ஒரு பெரும் திருவிழாவாகக் கொண்டாட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆண்டுக்கு ஒரு நாள் தை முதல் நாள் – தை பிறந்தால் வழி பிறக்கும் – இன்னும் செல்லப் போனால் – அன்றைக்கு ஆன்றோரும் புலவர்களும் அமர்ந்து பேசி, தமிழனுடைய ஆண்டுப் பிறப்பு தை முதல் நாள்தான் என்றே நிர்ணயித்திருக்கிறார்கள். அது இப்போது உடனடியாக நிறைவேறுகின்ற குறிக்கோளாக இல்லாவிட்டாலுங்கூட, கொஞ்ச காலம் கழித்து நிறைவேறுகின்ற ஒன்றாக அது இருந்தாலும், தமிழன் ஆண்டு பிறப்பு ஒரு காலத்தில் தமிழனுடைய ஆண்டுப் பிறப்பு இதுதான், சித்திரை முதல் நாள் போல, தை முதல் நாள், வருடப் பிறப்பு என்பதைப் போல வருகின்ற வரையிலாவது பொங்கல் திருநாளை உற்சாகமாக, உத்வேகமாக, உவகையோடு ஒவ்வொரு குடும்பத்திலும் கொண்டாட வேண்டும்.

உழவர்கள் கொண்டாட வேண்டும், நெசவாளர்கள் கொண்டாட வேண்டும், வணிகர்கள் கொண்டாட வேண்டும், வீதியெங்கும் தோரணங்கள் கட்டப்பட வேண்டும். அப்படிப்பட்ட விழாவாக இந்தப் பொங்கலைக் கொண்டாட வேண்டும். அதுதான் இன்றைய தினம் நடைபெறுகின்ற இந்த விழாவினுடைய அரசு செய்தியாக – இது அரசு விழாவாக இருக்கின்ற காரணத்தால் – அரசு செய்தியாக நான் வெளியிட விரும்புகிறேன். இதை வெறும் செய்தி என்று கருதாமல், இது உங்கள் சிந்தைக்கு, உங்கள் செயலுக்கு நான் அளிக்கின்ற ஊக்கத்தோடு கூடிய வேண்டுகோள் – இந்த வேண்டுகோளை நிறைவேற்றித் தர வேண்டும் என்று உங்களையெல்லாம் கேட்டுக் கொண்டு – இந்த அளவில் அனைவருக்கும் என்னுடைய பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்து விருது பெற்றோர் அனைவருக்கும் நன்றி கூறி அவர்கள் இந்த விருதுகளைப் பெற்றுக் கொண்டார்கள் என்பதற்காக நன்றி கூறி வாழ்த்தி விடைபெறுகிறேன்.

★ ★ ★





# மூன்று மாதத்திற்கு ஒரு முறை
# இலவச நிலம் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படும்

இன்று விழுப்புரத்தில் நடைபெறுகின்ற இந்த இனிய நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு உங்களையெல்லாம் சந்திக்கின்ற நல்ல வாய்ப்பைப் பெற்றமைக்காக நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். நேற்று விழுப்புரம் வரவேண்டும் என்று எண்ணி திட்டமிட்டபோது நான் நினைத்துக்கொண்டேன். விழுப்புரத்திலே இந்த நிகழ்ச்சிக்கு எப்படி மக்கள் திரள்வார்கள், எந்த வகையிலே தங்களுடைய ஆதரவைத் தெரிவிப்பார்கள் என்றெல்லாம் காலையிலே இந்த மாவட்டத்தின் எல்லையிலே நுழைவதற்கு முன்பிருந்து, நுழைந்த பிறகும் இதுவரையில், விழுப்புரத்திலே நடைபெறுவது ஒரு அரசு விழாதானா அல்லது அன்றொரு நாள் தம்பி பொன்முடி இங்கு நடத்திக் காட்டிய அந்த மாநாடு மீண்டும் நடைபெறுகிறதா ? ஒரு வேளை,



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள் அறிவிப்பு! (17.12.2006)

அதுவே நீண்டு கொண்டே போகிறதா ? என்ற அளவிற்கு ஒரு மாபெரும் நிகழ்ச்சியை மாநாடு போன்ற இந்தக் கூட்டத்திலே நான் காணுகின்றேன்.

இது இந்த ஒருநாள் நிகழ்ச்சிக்காக அல்ல, தொடர்ந்து ஒரு ஆறு மாத காலமாக நடைபெற்று வருகின்ற உங்களால் பொறுப்பில் உட்கார வைக்கப் பட்டிருக்கின்ற என்னைப் போன்றவர்கள் ஆற்றுகின்ற பணிக்கு அந்தப் பணியின் காரணமாக விளைந்துள்ள சாதனைகளுக்கு அந்த சாதனைகளை நுகருகின்ற பொதுமக்களுடைய அன்புக்கு, நன்றிக்கு அடையாள மாகத்தான் இந்த நிகழ்ச்சி அமைந்திருக்கின்றது என்று நான் சொல்ல விரும்புகின்றேன்.

''ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்'' என்று எங்கள் தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் எங்களுக்குக் கற்றுத்தந்தார். அந்தப் பயிற்சியில் பல பகுதிகள் உண்டு, அந்தப் பயிற்சிக்கு நாங்கள் பல பாடங்கள் படித்ததுண்டு. அந்தப் பாடங்களுக்கெல்லாம் ஆரம்பப் பாடமாக அடிச்சுவடிப் பாடமாக அமைந்த பாடம் ஒன்று உண்டு. அதுதான் தந்தை பெரியார் அவர்கள் வகுத்துத் தந்த பகுத்தறிவுப் பாடம்.

இன்றைக்குக் காணுகின்ற இந்த எழுச்சிக் கோலமும், இந்த முற்போக்குச் சிந்தனையும், அந்த சிந்தனையின் விளைவால் நடைபெறுகின்ற செய்லபாடுகளும் பெரியாருடைய அருளால் நமக்குக் கிடைத்தது. அவருடைய அறிவுத் தெளிவால் நமக்குக் கிடைத்தது. அதனால்தான் உழவர்களுக்கு, ஏழை உழவர்களுக்கு, நிலமில்லாத ஏழை உழவர்களுக்கு நிலம் தர வேண்டும் என்ற எண்ணம் – நம்முடைய பா.ம.க. நாடாளுமன்ற உறுப்பினர் தனராஜ் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, பாரதியார் அவர்களுக்கு காணி நிலம் வேண்டும் என்று பாடுவதற்கு தோன்றுவதற்கு முன்பே பெரியாருக்கு ஏற்பட்டது. பெரியாருடைய சிந்தனைதான், பாரதியாருடைய பாடலாக ஒலித்தது. தந்தை பெரியார் அவர்கள் உழவர்களுக்காக மாத்திரம் சிந்திக்கவில்லை. அவர் எல்லா மக்களுக்காகவும் சிந்தித்தார். தாழ்த்தப்பட்ட மக்களுக்காக, நலிந்தவர் களுக்காக, பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக, இளைஞர்களுக்காக, வாலிபர்களுக்காக, வயோதிகர்களுக்காக, படித்தவர் களுக்காக, பாமரர்களுக்காக, பட்டினக்கரையிலே வாழுபவர்களுக்காக எல்லோருக்குமாக சிந்தித்தார். செயல்பட்டார்.

ஏறத்தாழ 95 ஆண்டு காலம் வாழ்ந்த அவரது வாழ்க்கையை மக்களுக்காக, வரப்போரத்தில் வாடிக் கொண்டிருக்கிற உழவனுக்காக, அடிமைகளாக வீடுகளிலே அடைபட்டுக் கிடக்கின்ற மகளிருக்காக, அதாவது பெண்களுக்காக, நாய் நடமாடலாம், நரி நடமாடலாம், கழுகு, காக்கை, குருவிகள் எல்லாம் பறக்கலாம். இவைகள் எல்லாம் தத்தித் தத்தி நடை போடலாம். ஆனால் அங்கே மனிதன் நடமாட முடியாது என்று சுயமரியாதை உரிமை மறுக்கப்பட்டு வாடிக்கிடந்த மனிதர்களுக்காக பெரியார் குரல் கொடுத்தார். அவர் உருவாக்கிய நிலத்திலே விளைந்த நாற்றுக்கள் தான் நாங்கள்.

இன்றைக்கு கதிர் குலுங்கி காட்சியளிக்கிறோம் என்றாலும்கூட நாங்கள் அவர் நாற்றங்காலில் விளைந்த நாற்றுக்கள், அந்த நாற்றுக்கள் நடத்துகின்ற நாட்டாட்சிதான் இன்றைய தினம் நடைபெறுகின்ற ஆட்சி. அதனால், எப்படி ஒரு பக்தன் , எப்படி ஒரு ஆத்திகன், எப்படி ஒரு ஆத்திகவாதி, எப்படி ஒரு கடவுள்பால் அன்பு கொண்டவன், தான் தொடங்குகின்ற, தான் நடத்துகின்ற எந்தவொரு காரியமானாலும் தனக்கு இஷ்ட தேவதையை வணங்கிவிட்டு ஆரம்பிக்கிறானோ, அதைப்போல நான் என்னைப் பொறுத்தவரையில் என்னுடைய இஷ்ட தேவதையாக கருதுவது தந்தை பெரியார். அதனால்தான் இந்தத் திட்டத்தை நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு நிலம் தருகின்ற இந்தத் திட்டத்தை செப்டம்பர் திங்கள் 17ஆம் தேதி தொடங்கினோம். செப்டம்பர் 15 ஆம் தேதி அறிஞர் அண்ணா பிறந்தநாள். செப்டம்பர் 17 ஆம் தேதி தந்தை பெரியார் பிறந்தநாள், பெரியார் பிறந்த நாளில் இந்தத் திட்டத்தை தொடங்கியதற்குக் காரணம்; அவர் ஏழை எளியவர்களுக்காக, விவசாயிகளுக்காக, பாட்டாளி மக்களுக்காக தன்னை ஒப்படைத்து தொண்டாற்றியவர்.

அதனால்தான் அவருடைய பிறந்த நாளில் செப்டம்பர் 17இல் இந்தத் திட்டத்தை தமிழகத்திலே முதன் முதலாக நான் திருவள்ளூரிலே தொடங்கினேன். நம்முடைய அமைச்சர் பெருமக்களெல்லாம் பல்வேறு மாவட்டங்களில் இந்தத் திட்டத்தை தொடங்கி வைத்தார்கள் செப்டம்பர் 17 அன்று.

இன்றைக்கு டிசம்பர் 17. இந்த 17ஆம் தேதி, ஒவ்வொரு மாதமும் அல்ல, மூன்று மாதத்திற்கு ஒரு முறை இந்த நிலம் வழங்குகின்ற திட்டம் – ஏழை, எளிய நிலமற்ற விவசாயிகளுக்கு நிலம் வழங்குகிற இந்தத்





திட்டம் மூன்று மாதத்திற்கு ஒருமுறை, தொடங்கி நடத்தப் படும் என்பதை விழுப்புரத்திலே நடைபெறுகின்ற இந்த நிகழ்ச்சியிலே நான் பிரகடனப் படுத்துகின்றேன்.

விழுப்புரத்தை ஏன் இரண்டாவது கட்டத்திற்கு முதலமைச்சர் மு. கருணாநிதி தேர்ந்தெடுத்தார் என்று இங்கே உரையாற்றியவர்கள் எல்லாம் ஒரு ஐயப்பாட்டை வரவேற்கின்ற மனப் பான்மையோடு எழுப்பினார்கள். எனக்கும் விழுப்புரத்திற்கும் இன்று நேற்றல்ல தொடர்பு, பொன்முடி இங்கே தலையெடுத்த பிறகு ஏற்பட்ட தொடர்பு அல்ல. பொன்முடி தலைமுடி வெளியே தெரியாமல் தாயின் வயிற்றுக்குள்ளே இருந்தபோதே, விழுப்புரத்திலே எனக்குத் தொடர்பு உண்டு, பழக்கம் உண்டு. சண்முகம் உடையார் என்றாலும், டாக்டர் தியாகராஜன் என்றாலும், இப்படி விழுப்புரத்திலே இயக்கத்தை வளர்த்தவர் களையெல்லாம் நான் அந்தக் காலத்திலே அறிந்தவன். அவர்களோடு பழகியவன். அவர்களுடைய பக்க பலத்தோடு, துணையோடு இங்கே கொள்கை விளக்க நாடகங்களை நடத்தியவன். அப்படி நடத்தி ஏராளமான நஷ்டத்திற்கு ஆளானவன். அவ்வளவு ஆதரவு அன்றைக்கு நம்முடைய கொள்கைகளுக்கு விழுப்புரத்திலே இருந்தது.

அந்த விழுப்புரத்தை இன்றைக்கு நான் பார்க்கும் போது, அந்த விழுப்புரமா ? என்று எண்ணுகின்றேன். இருந்தாலும், அப்படி இருந்து இப்படி வளர்ந்திருக்கின்ற இந்த விழுப்புரத்திற்கு, இன்னும் மேலும் மேலும் வலிமையை, ஒளியை அமைக்க வேண்டும், தர வேண்டும் என்ற எண்ணம் எனக்கு இருப்பதற்குக் காரணம் ; என்னை வளர்த்த இடங்களிலே ஒன்று விழுப்புரம் என்பதால் அந்த நன்றியை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

தமிழ்நாட்டில் விழுப்புரம் மாத்திரமல்ல; நான் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சொந்தக்காரன். இப்பொழுது தமிழகத்திற்கே சொந்தக்காரனாக இருக்கலாம். அது வேறு விஷயம். ஏனென்றால் விழுப்புரத்தை மாத்திரம் தனித்துப் பேசி நாளைக்கு நான் தஞ்சாவூருக்குச் செல்ல வேண்டாமா ? திருச்சிக்கு செல்ல வேண்டாமா ? ஈரோடு கோவை இங்கெல்லாம் போய் நான் யாரையும் சந்திக்க வேண்டாமா ? ஆனால் ஒவ்வொரு மாவட்டத்திலும் எனக்கு இந்தத் தொடர்பு உண்டு.

தஞ்சை மாவட்டத்தில் எங்கோ ஒரு குக்கிராமத்தில் திருக்குவளையில் பிறந்தேன். அதனால் தஞ்சை தொடர்பு. பிறகு தஞ்சையிலே நடைபெற்ற நங்கவரம் விவசாயப் போராட்டத்திலே ஈடுபட்டேன். தஞ்சை தரணியிலே நடைபெற்ற எஸ்.எம்.டி. பஸ் போராட்டத்திலே தொழிலாளர்களுக்காகப் பாடுபட்டேன்.

கரூருக்கும் திருச்சிக்கும் இடையே உள்ள நங்க வரத்தில் ''நாடுபாதி, நங்கவரம் பாதி'' என்று புகழப்பட்ட, பெருமைப்பட்டுக் கொண்ட நங்கவரம் ஜமீன்தாரை எதிர்த்து ''கையேறு வாரம், நாட்டேறு வாரம்'' என்ற பிரச்சினையில் நங்கவரத்தில் உள்ள விவசாயத் தொழிலாளர்களுக்காக கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்களோடு, கல்யாணசுந்தரம் அவர்களோடு கைகோர்த்துக் கொண்டு போராடி கவுண்டம்பட்டி முத்து என்ற ஒரு தளகர்த்தரை அங்கே உருவாக்குவதற்கு காரணமாக இருந்த அந்தப் போரட்டத்தில் குதித்தேன்.

நங்கவரம் போராட்டம் நடத்தப்பட்ட அந்த குளித்தலையிலேதான் முதன் முதலாக எனக்கு அரசியல் பிரவேசம்! சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டேன். பிறகு தஞ்சாவூரில் தேர்ந்தெடுக்கப்பட்டேன். அதற்கு பிறகு சென்னையிலே சைதாப்பேட்டையிலே போட்டியிட்டேன். சைதாப் பேட்டையிலே போட்டியிட்ட பொழுதுதான்; தம்பி பொன்முடி இங்கே ஒன்றைக் குறிப்பிட்டார். நல்ல இராகு காலத்தில் இருந்து இந்த நிகழ்ச்சியை ஆரம்பித்து வைக்கிறார் என்று யாரோ பேசுவார்கள், எழுதுவார்கள், இதெல்லாம் உருப்படுமா என்றெல்லாம் சொன்னார். சில பேர் சாபம் கொடுப்பார்கள் என்றெல்லாம் சொன்னார்.

நான் அவருக்கு மாத்திரம் அல்ல, உங்களுக்கும் சொல்வேன். 1967–ஆம் ஆண்டு தேர்தலில் அண்ணா அவர்கள் தென் சென்னை நாடாளுமன்றத்

தொகுதியில் போட்டியிட்டார்கள். நான் தென் சென்னையில் சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்டேன். அன்று நான் என்னுடைய வேட்பு மனுவை தாக்கல் செய்தநேரம் – சரியான கொழுத்த இராகு காலத்திலே தான் தாக்கல் செய்தேன். பாருங்கள், அந்த இராகுகாலத்தின் சிறப்பு அப்பொழுதும் வெற்றி பெற்றேன் ; பொதுப்பணித்துறை அமைச்சரானேன். பிறகு முதலமைச்சரானேன். அந்த இராகுகாலம் இன்றைக்கு முதலமைச்சராகிற வரையில் கொண்டு வந்து இங்கே உட்கார வைத்திருக்கின்றது.

எல்லாம் ஆண்டவன் உருவாக்கியது என்று சொல்லுகின்றோம். பகவத்கீதையில் கிருஷ்ணன் என்ன சொல்லுகின்றார் ? "மாதங்களில் மார்கழி நான்தான்" என்று சொல்லுகிறார். "எல்லாமே நான்தான்" என்று சொல்லுகிறார். "பூக்களிலே இந்த பூ நான்தான்" "மரங்களில் இந்த மரம் நான்தான், எல்லாமே நான்தான்" என்று ஆண்டவன் சொல்லுகிறார். நாள்களிலே மட்டும் அவர் ஏன் வேறுபடுகின்றார் ? எல்லா நாளும் அவர் நாள்தான். இதில் என்ன இராகுகாலம், பகல்காலம் ? காலம் பார்த்து நடத்தப்பட்ட நிகழ்ச்சிகளெல்லாம் உருப்பட்டு விட்டதா ? காலம் பார்க்காமல் நடைபெறுகின்ற நிகழ்ச்சிகள்தான் உருப்படாமல் போய்விட்டதா ? உங்கள் அனுபவத்திலே கணக்குப் போட்டுப் பாருங்கள். நான் இதற்குமேல் உங்களை ஆழமாக சிந்திக்க சொல்லவில்லை. உங்கள் அனுபவத்திலே பாருங்கள்.

அந்தக் காலத்திலே தந்தை பெரியார் சொல்வார். உலகத்திலேயே பெரிய புரோகிதர், பெரிய மகரிஷி வசிஷ்டர். அந்த வசிஷ்டர் பார்த்த நாளிலேதான் ராமனுக்கு பட்டாபிஷேகத்திற்கு நாள் குறித்தார்கள். ஆனால் அந்த நாளில்தான் ராமன் பட்டாபிஷேகம் செய்துகொள்ள முடியாமல் வனவாசம் சென்றான். வசிஷ்டர் பார்த்த நாளுக்கே அந்த கதியென்றால் மற்றவர்கள் பார்க்கின்ற நாள் என்னவாகும் என்று பெரியார் கேட்பார். அந்தச் சிந்தனை இந்த நேரத்திலே தேவைதானா ? என்று நீங்கள் கேட்பீர்களேயானால் தேவைதான். வருங்கால இளைஞர்களுக்கு புதுயுகத்தை படைக்கப்போகின்ற இளைஞர்களுக்கு இந்தச் சிந்தனைகள் தேவை. அந்தச் சிந்தனைதான் ஒரு சமுதாயத்தை உயர்த்தும், விழிப்புறச் செய்யும்.

இன்றைய தினம் வானவெளியில் சென்று நம்முடைய விஞ்ஞானிகள் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்கள் எப்படியெல்லாம் அங்கே நடமாடுகிறார்கள், ஆராய்ந்தார்கள் என்பதை படமெடுத்துக் காட்டு கின்றார்கள். தொலைக்காட்சியிலே காட்டுகின்றார்கள், நாம் காண்கின்றோம். இவைகளெல்லாம் அந்தக் காலத்திலே, புராணக் காலத்திலே, இதிகாச காலத்திலே நடைபெற்றதுண்டா ? அதைப்பற்றி சிந்தித்ததாவது உண்டா ? இன்றைக்கு அந்த சிந்தனைச் செல்வம் பெருகி ஓடுகின்ற இந்தக் காலத்தில் அதைப் பற்றிக்கொண்டு மேலும் மேலும் நாம் நம்மை உயர்த்திக் கொள்ள வேண்டாமா ? அப்படி உயர்த்திக் கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் தந்தை பெரியார், "இனி வரும் உலகம்" என்று ஒரு புத்தகமே எழுதினார். அந்த "இனி வரும் உலகம்" என்று ஒரு புத்தகத்தில் அதிசயங்கள் நடைபெறும் என்று அந்தக் காலத்திலேயே ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு அவர் எழுதினார். ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு அவர் எழுதிய புத்தகத்தில் இன்றைக்கு உலகத்திலே நிகழ்கின்ற விஞ்ஞான அதிசயங்கள் எல்லாம் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. அப்படிப்பட்ட தீர்க்கதரிசி பெரியார் என்ற காரணத்தினால்தான் அவருடைய பிறந்த நாளை இன்றைக்குப் போற்றி அந்த நாளில் இந்த விழா மூன்று மாதத்திற்கு ஒரு முறை நடைபெற வேண்டும் என்று நான் நாள் குறித்திருக்கிறேன். அது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அப்படி நடைபெறுகின்ற அந்த நிகழ்ச்சிகளிலே ஒன்றுதான் இந்த நிகழ்ச்சி.

நான் நம்முடைய அதிகாரிகளை அழைத்துப் பேசினேன், மாவட்ட ஆட்சித் தலைவரை அழைத்துப் பேசினேன். வருவாய்த்துறைச் செயலாளரை அழைத்துப் பேசினேன். நான் கேட்பேன் ; இன்றைய தினம் ஏழைகளாக இருக்கின்ற நிலமற்ற விவசாயிகள் இங்கே உங்கள் கண் முன்னால் வந்து போனார்களே, 15, 20 பேர் ; இவர்களை எல்லாம் பார்த்தீர்கள். இவர்களுக்கு இந்த நிலத்தை ஒப்படைக்க நிலத்தை உரிமையாக்க, அரசுக்கு ஆகியுள்ள செலவு எவ்வளவு என்று கேட்டேன். அவர்கள் கணக்கிட்டுச் சொன்னார்கள், திருவள்ளூரிலே நீங்கள் தலைமை வகித்து தொடங்கி வைத்த அந்த விழா மாநிலம் முழுவதும் நடைபெற்ற அந்த விழா, அந்த விழாவிலே ஏழை உழவர்களுக்கு தரப்பட்ட நிலங்களுக்காக செலவழிக்கப்பட்டது ஏறத்தாழ 2 கோடி ரூபாய். இன்றைக்கு தமிழகம் முழுவதும் பல மாவட்டங்களில் இந்த விழா இங்கே நடைபெறுவதைப்போல நடைபெறுகின்ற எல்லா இடத்திலும் விழாக்களுக்காக அல்ல அவர்களுக்குத் தரப்படுகின்ற நிலங்களுக்காக செலவழிக்கப்பட்டிருப்பது 3 கோடி ரூபாய். ஆக இந்த இரண்டு கட்டத்திலும் அரசுக்கு ஆகியிருக்கின்ற செலவு 5 கோடி ரூபாய் என்று சொல்லியிருக்கின்றார்கள்.

இந்த 5 கோடி ரூபாயை அரசாங்கத்தினுடைய கருவூலத்திலே இருந்து எடுத்து நாம் செலவழிக்கிறோம் என்றால், ஏதோ எங்களுடைய கைப்பணம் அல்ல, பொன்முடியினுடைய கைப்பணம் அல்ல, வேறு யாருடைய



கைப்பணமும் அல்ல, உங்கள் பணம் முறையாக, நேர்மையாக, உங்களுக்குத் திரும்ப வருகின்றது என்று அர்த்தம். எனக்கு வந்ததா என்று யாரும் கேட்கக் கூடாது. உங்களுக்காக என்பதிலேதான் அந்த ஏழை உழவனும் அடங்கியிருக்கிறான். அந்த ஏழை விவசாயியும் நிலமற்ற விவசாயியும் அடங்கியிருக்கிறான். அவனுக்குச் செல்லுகின்றது. இப்படி வருகின்ற பணம் அரசு கஜானாவிற்கு வந்த பணம், இன்னொரு கஜானாவிற்கு போவதற்குப் பதிலாக அது போய்ச் சேர வேண்டிய கஜானா கதியற்றவர்களின் வீடுகள்தான். கண்ணீரும் கம்பலையுமாக இருக்கின்ற ஏழை விவசாயிகளின் இல்லம்தான், நெசவாளர்களுடைய இல்லம்தான், உழவர்களுடைய நிலம்தான்; பரிதவிக்கின்ற பாட்டாளிகளின் வீடுதான் என்று அந்தத் திசையிலே இந்த வாய்க்கால் வகைப்படுத்தி வெட்டி விடப்படுகின்றது. இதற்கு முன்பு இருந்த ஆட்சியிலே என்ன நடந்தது என்று நான் சொல்ல விரும்பவில்லை.

ஏனென்றால் தம்பி பொன்முடி இங்கே வேகமாகப் பேசிவிட்டார். இங்கே உரையாற்றிய நண்பர்கள் எல்லோருமே அதைப்பற்றி பேசி விட்டார்கள். என்னைப் பொறுத்தவரை அதை பேச விரும்பவில்லை. ஏனென்றால் ஒவ்வொரு நாளும் பத்திரிகை படிக்கின்ற நீங்கள் பத்திரிகையிலே வருகின்ற செய்திகளைப் பார்த்து தி.மு.கழக ஆட்சி என்னென்ன செய்கின்றது ? தோழமைக் கட்சிகளின் ஆதரவோடு – காங்கிரஸ் கட்சியின் ஆதரவோடு, பாட்டாளி மக்கள் கட்சியின் ஆதரவோடு, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆதரவோடு, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் ஆதரவோடு விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் ஆதரவோடு, முஸ்லீம் லீக் கட்சியின் ஆதரவோடு மற்றும் வெளியிலே இருந்து ஆதரவு தெரிவிக்கின்ற உழவர் உழைப்பாளர் கட்சி, திராவிடர் கழகம் போன்ற கட்சிகளின் ஆதரவோடு இந்த ஆட்சி மக்களுக்கு என்னென்ன நன்மைகள் செய்கிறது என்பதை நீங்கள் பார்க்கிறீர்கள் சிந்திக்கிறீர்கள்.

இதைப் பற்றி வருகின்ற விமர்சனங்களையும் நீங்கள் பார்க்கின்றீர்கள். இதற்காக நடத்தப்படுகின்ற கண்டனங்களையும் நீங்கள் பார்க்கின்றீர்கள். காட்டப்படுகின்ற எதிர்ப்புகளையும் பார்க்கின்றீர்கள். வெளியிடப்படுகின்ற எரிச்சல்களையும் நீங்கள் காணுகின்றீர்கள். ஆகவே தீர்ப்பளிக்கின்றவர்களாக நீங்கள் இருக்கும் பொழுது நான் இந்த அரசு விழாவை அந்தக் காரியத்துக்காக பயன்படுத்திக் கொள்ள விரும்பவில்லை. அரசு விழாக்களை அரசு விழாக்களாகவே நடத்த வேண்டுமென்று இன்று நேற்றல்ல; நான் ஐந்தாவது முறையாக அரசுப் பொறுப்பிலே இருக்கிற இந்த காலகட்டத்திலும், எந்த ஒரு வேளையிலும் அரசு மேடையிலே நான் இதை கட்சிப் பிரச்சாரத்திற்கு, இன்னொரு கட்சியைதாக்கிப் பேசுவதற்கு, இன்னொரு தலைவரை கிண்டலடித்துப் பேசுவதற்கு நான் இதுவரையிலே அதற்குப் பொறுப்பாக இருந்ததில்லை, இனியும் இருக்கப்போவதில்லை. இப்படியே வாழ்ந்து விட்டேன். இப்படியே அரசியலை நடத்தி விட்டேன். இப்படியே அது நடந்து முடிய வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

ஆனால் பொறுப்பு உங்களுக்கு இருக்கின்றது. இரண்டு முறையையும், இரண்டு பகுதியையும் சீர்தூக்கிப் பார்த்து எது நல்லது, எது கெட்டது, எது சரி, எது தவறு என்று தீர்மானிக்க வேண்டிய பெரும் பொறுப்பு; உங்களுக்கு இருக்கின்றது. அதுவும் குறிப்பாக வளர்கின்ற இளைஞர் சமுதாயத்திற்கு இருக்கின்றது. மிகப் பொறுப்பு; மிகவும் பிற்படுத்தப்பட்டுக் கிடக்கின்ற மக்களுக்கு இருக்கிறது. இன்றைக்கு பின்தங்கிய மக்களுக்காக மத்திய அரசு வரையில் சென்று வாதாடி அதிலே ஒரு பெரும் வெற்றியையும் பெற்றிருக்கின்றவர்கள் நாம் என்றால் எவ்வளவு பூரிப்பு நமக்கு இருக்கிறது.

நேற்றைக்கு முன்தினம் 27 சதவிகித இடஒதுக்கீடு டெல்லி நாடாளுமன்றத்திலே விவாதிக்கப்படுகின்ற நேரத்தில் மருத்துவர் அய்யா ராமதாசு அவர்கள் சென்னைக்கு என்னுடன் தொலைபேசியிலே பேசினார்கள். நாடாளுமன்றத்தில் தீர்மானத்தை விவாதித்துக் கொண்டிருக்கிறார்கள். நான் எங்கள் கட்சிக்காரர்களுக்கெல்லாம் சொல்லிவிட்டேன். இந்த தீர்மானத்தை எப்படியும் கொண்டு வரவேண்டும். யார் தடுத்தாலும் விடக்கூடாது என்று என்னிடத்திலே சொன்னார். நானும் நேற்றைக்கே அவர்களிடத்திலே சொல்லிவிட்டேன். மீண்டும் இன்றைக்கு சொல்லுகிறேன் என்று அங்கே தி.மு.கழகத்தினுடைய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கெல்லாம் சொல்லி இந்தத் தீர்மானத்தை ஒருமனதாக நம்முடைய தி.மு.கழகம், பாட்டாளி மக்கள் கட்சி மற்றும் காங்கிரஸ் கட்சியில் உள்ளவர்கள், இடதுசாரிகள் எல்லோரும் ஆதரித்து அது நடந்தேறியிருக்கிறது.

இன்னும் நம்முடைய பரத்வாஜ் அவர்கள் சொன்னதாக நினைவு எனக்கு. இன்னும் சில குறைகள் இருந்தாலும்கூட குறைகள் இருக்கத்தான் செய்யும். சட்டை போடும்பொழுது பொத்தானை போட்டுக் கொள்ளும் போதுகூட ஒரு பொத்தானின் காஜா சரியாக

இருப்பதில்லை. கொஞ்சம் அழுத்தித்தான் போட வேண்டி இருக்கிறது. அதனால் சட்டையை வேண்டாம் என்று தூக்கி எறிந்துவிட முடியாது. முதலில் சட்டையைப் போட்டுக் கொள்வோம், பிறகு பொத்தானை சரிபார்த்துக் கொள்ளலாம் என்பது போல, சரிபார்க்க வேண்டியவைகளை பிறகு சரிபார்த்துக் கொள்வோம். அடியெடுத்து வைப்போம்.



ஏறத்தாழ ஒரு ஐம்பது அறுபது ஆண்டு காலம் நீதிக்கட்சிக் காலத்தில் இருந்து – அதற்கு முன்பே என்றுகூட சொல்லலாம். திராவிட இயக்கத்தை நடேசனார் உருவாக்கிய அந்தக் காலத்தில் இருந்து இங்கே இருக்கின்ற ஏழை எளிய மக்கள் உங்களுக்கு புரியும்படி சொல்லவேண்டுமானால் – நம்மை போன்ற சூத்திர மக்கள், அந்த சூத்திர மக்களுக்கு, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு படிக்கக் கூடாது என்று தடை. தப்பித் தவறி படித்துத் தேறி விட்டாலும் உத்தியோகங்களுக்குச் செல்ல அவர்களுக்கு உரிமை கிடையாது என்ற நிலை. எத்தனை சதவிகிதம் பேர் நீங்கள் மேல் அமைப்புகளில் பதவிகளைப் பெறலாம் என்ற ஒரு நிலை. இவைகளையெல்லாம் மீறி இந்த ஐம்பது அல்லது அறுபது ஆண்டுகள் மெல்ல மெல்ல அல்லவா நாம் வளர்ந்திருக்கின்றோம்.

நாம் சிங்கத்தைப் போல் சீறி வரவில்லை, புலியைப் போல் பாய்ந்து வரவில்லை, மன்னிக்க வேண்டும். ஆமையைப் போலத்தான் மெதுவாக வந்தோம். ஆனால் மெதுவாக வந்தாலும் இன்றைக்கு உறுதியாக நிற்கின்றோம். ஆமையினுடைய ஓடு எவ்வளவு உறுதியானதோ அதைப் போன்றது நம்முடைய கொள்கை உறுதி. அப்படி இந்த ஐம்பதாண்டு காலம் நாம் நடத்திய இந்தப் பயணத்தில் இன்றைக்குக் கிடைத்திருக்கின்ற வெற்றிதான் இடஒதுக்கீட்டிலே நாடாளுமன்றத்திலே நிறைவேறியிருக்கின்ற தீர்மானமாகும். இந்தத் தீர்மானத்திற்கு ஆதரவு அளித்த அத்தனை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், அத்தனை கட்சிகளுக்கும் நாம் கடமைப்பட்டிருக்கின்றோம். என்றாலும்கூட விதை விதைத்தவர்கள், வேலியிட்டுப் பாதுகாத்தவர்கள், தண்ணீர் ஊற்றி வளர்த்தவர்கள் என்கின்ற அந்த உரிமை நமக்கெல்லாம் இருக்கின்ற காரணத்தால் நாம் இதை பட்டுப்போக விடமாட்டோம். அப்படிப்பட்ட ஒரு உறுதியும் வைராக்கியமும் என்றென்றைக்கும் நமக்கு உண்டு என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஏன் இதைச் சொல்லுகிறேன் என்று சொன்னால், எதையும் நினைத்த மாத்திரத்தில் உடனே மறுநாளே செய்து முடித்து விடமுடியாது. காரணம் இந்தியா சின்னஞ்சிறிய ஒரு நாடல்ல, இந்தியா ஒரு கண்டம். துணைக் கண்டம், இதைக் கண்டம் என்று சொன்னால் இன்னொரு கண்டத்துக்காரன் சந்தேகப்படுவான் என்பதற்காக துணைக் கண்டம் என்று சொல்லுகிறோம். இது கண்டம்தான் கண்டம் வராமல் பாதுகாக்க வேண்டும்.

அப்படிப்பட்ட கண்டம் இது. இந்தக் கண்டத்திற்கு பக்கத்து நாட்டுக்காரர்களால் கண்டம் வந்து விடக்கூடாது என்பதற்காக இந்தக் கண்டத்தை கட்டிக் காக்க வேண்டிய பெரும் பொறுப்பு நமக்கு இருப்பதால் எதையும் சிந்தித்து, ஆலோசித்து ஒரு முறைக்கு இருமுறை கலந்து பேசி முடிவுகளை எடுக்க வேண்டியவர்களாக நாம் இருக்கின்றோம். அப்படித்தான் இலங்கைப் பிரச்சினையிலே கூட! இங்கே நாம் மகிழ்ச்சியுடன் உட்கார்ந்திருக்கிறோம். பத்திரிகைகளில், வானொலியில், தொலைக்காட்சிகளில் செய்தி வருகிறது. கும்பல் கும்பலாக, கொள்ளை கொள்ளையாக நம்முடைய தமிழ் மக்கள் இலங்கையிலே செத்துக் கொண்டிருக்கிறார்கள். குழந்தை குட்டிகளோடு எங்கே போய் அடைக்கலம் புகலாம் ? எங்கே போய் நம்முடைய உயிரை காப்பாற்றிக் கொள்ளலாம் ? எந்த நாட்டிற்கு போனால் நம்மை அக்கறையோடு ஏற்றுக்கொள்வார்கள் ?



என்று முட்டி முட்டிப் பார்த்து கடைசியாக தமிழகத்திற்கு வந்து சேர்ந்து இதுவரையிலே 5,000 பேர், 6,000 பேர், ஏன் பத்தாயிரம் பேரை தாண்டிவிட்டது என்ற அளவிற்கு அகதிகள் வந்திருக்கிறார்கள்.

இங்கே வாழ்ந்த தமிழன் பாண்டியனுடைய பரம்பரை, சோழனுடைய பரம்பரை, சேரனுடைய பரம்பரை தொன்று தொட்டு இலக்கியம் படைத்தவன், தொன்றுத்தொட்டு கலாச்சாரத்தை வளர்த்தவன், பண்பாட்டைப் போற்றியவன், மொழிக்காக எதையும் தியாகம் செய்யத் தயாராக இருந்தவன், இருக்கிறவன், இருக்கப் போகிறவன் – அப்படிப்பட்ட தமிழினம் பக்கத்திலே சிங்கள வெறியர்களால் வேட்டையாடப்படுகின்ற அந்தக் காட்சியை, செய்தியை, காணவும், கேட்கவும் நாம் இருக்க வேண்டுமா என்று கூட தோன்றுகிறது சில நேரங்களில். அந்தச் சூழ்நிலையிலேதான் நமக்கு ஆறுதலாக, தொடர்ந்து நடந்தவைகள் நடந்தவைகளாக இருக்கட்டும், இனி நடப்பவைகள் நல்லவைகளாக இருக்கட்டும். நாதியற்றுச் சாகிறானே தமிழன் இலங்கையிலே, அந்தத் தமிழனை காப்பாற்ற இனி நடப்பவைகள் நல்லவைகளாக இருக்கட்டும் என்ற அந்த எண்ணத்தோடுதான் நான் டெல்லிக்குச் சென்று அங்கே எனக்கு வேறு வேலைகள் இருந்தாலும்கூட அந்த வேலைகளையெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு, திருமதி சோனியா காந்தி அவர்களை அவருடைய பிறந்தநாள் விழாவிலே சந்தித்து அது பிறந்த நாளாயிற்றே என்றுகூட நான் கவலைப்படாமல் இலங்கைப் பிரச்சினையை அவரிடத்திலே பேசி அவர்களும், தாய் உள்ளத்தோடு, எத்தனை துயரங்கள் அவருக்கு இருந்தாலும் – எத்தனை கடந்த கால நினைவுகள் அவரை வாட்டி வதைத்தாலும், அவைகளையெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு மனிதநேய உணர்வோடு அவர் எனக்கு எழுதியிருக்கின்ற கடிதம்; இலங்கையிலே வாழ்கின்ற தமிழர்களுக்கு ஒரு அற்புதமான – அபாயத்தில் இருந்து அவர்களை காப்பாற்றுகின்ற ஒளிவிளக்காக அமைந்திருப்பதையும் நீங்கள் காணுகின்றீர்கள் என்றால் இத்தனை காரியங்களையும் சாதிக்க வேண்டிய ஒரு கட்டாயம், செய்து தீர வேண்டிய நிலை நமக்கு இருக்கின்றது.

அதையும் கவனித்துக் கொண்டுதான் இங்கே வாழ்கின்ற தமிழர்களையும், நம்முடைய ஆட்சிக்கு உட்பட்டிருப்பவர்களையும், நம்முடைய ஆட்சியில் இன்னும் பல சாதனைகளை செய்வார்கள் என்று எதிர்பார்த்து வாழ்த்திக் கொண்டிருப்பவர்களையும், காப்பாற்ற வேண்டிய, பாதுகாக்கவேண்டிய, அவர்களுக்காக தொடர்ந்து ஆற்ற வேண்டிய அந்த பெரும் தொண்டும் நம்முடைய தலையிலே சுமத்தப்பட்டிருக்கின்றது. இவைகளையெல்லாம் நான் ஒருவன் தனியாக நின்று அல்ல; தம்பி பொன்முடியை போன்றவர்களை துணையாக வைத்துக் கொண்டு, மாத்திரமல்ல, எல்லோரையும் துணையாக வைத்துக் கொண்டு, இங்கே வீற்றிருக்கின்றீர்களே, உங்கள் அத்தனை பேரையும் துணையாக வைத்துக்கொண்டு உங்களைப்போல் தமிழகம் முழுவதும் பரவிக்கிடக்கின்ற இந்த தமிழ்ச் சாதியை துணையாக வைத்துக் கொண்டு, ஏழை எளிய மக்களை, பாட்டாளி மக்களை, உழவர் பெருங்குடிமக்களை, அருமைத் தாய்மார்களை, இளைஞர்களை, சகோதரர்களை, இவர்களையெல்லாம் துணையாக வைத்துக் கொண்டுதான் இந்தப் பெரும் பணியை நாம் நிறைவேற்றி முடிக்க வேண்டியிருக்கிறது.

இதற்கு இடையே செய்கின்ற சாதனைகளிலே ஒன்று இன்றைய நிகழ்ச்சி. அவ்வளவுதான் என்னென்ன சாதனைகள் இங்கே நடைபெற்றிருக்கின்றது என்பதை தொகுப்புரை வழங்கிய அதிகாரி அம்மையார் ஒருவர் உங்களுக்குத் தெரிவித்தார். ஒவ்வொருவரும் பேச வரும்போது இடையிலே நாம் ஆற்றிய சாதனைகளையும், அரசு ஆற்றிய சாதனைகளையும் குறிப்பிட்டார்.

**வாரம் இரண்டு முட்டை வழங்கியது,**

**ஒரு கிலோ அரிசி 2 ரூபாய்க்கு கொடுத்தது,**

**ஏழாயிரம் கோடி ரூபாய் விவசாயிகள் கடனை ரத்து செய்தது,**

**இன்றைக்கும் வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகளை இலவசமாக ஏழை, எளியவர்களுக்கு இல்லாதவர்களுக்குத் தருவது,**

**நாளை எரிவாயு அடுப்புக்களை ஏழை எளியவர்களுக்கு அந்த வீட்டுத் தாய்மார்களுக்குத் தர இருப்பது,**

அதை வழங்குவதற்கான ஏற்பாடுகளை செய்து முடித்திருப்பது அவைகளைப் பற்றியெல்லாம் இங்கே எடுத்துச் சொன்னார்கள்.

இப்படி நல்ல காரியங்களைச் செய்யும்போது, அதைப்பற்றி பேசாமல் யாரும் இருக்கமாட்டோம். ஏனென்றால், ஒரு ஊரில் எல்லோரும் நல்லவர்களாக இருக்க முடியாது – ஒருவர், இருவர் வெவ்வேறு

மாதிரிதான் இருப்பார்கள். நாம் அதை எதிர்பார்க்காமல் காரியங்களைச் செய்ய வேண்டும். சின்ன வயதில் படித்த கதை ஞாபகத்தில் இருக்கும்.

ஒருவன் ஒரு மாட்டுக் கன்றுக்குட்டியைத் தூக்கி தோளில் போட்டுக் கொண்டு நடந்தான். அப்பொழுது, பக்கத்தில் போனவன் கேட்டான், "எங்கே போகிறாய் ?" என்று,

"இந்த மாட்டுக் கன்றுக்குட்டியை சந்தையில் விற்கப் போகிறேன். அதனால்தான் கன்றுக் குட்டியை தோளில் போட்டுக் கொண்டு போகிறேன்" என்றான்.

"பைத்தியக்காரா, அதை ஏன் தோளில் போட்டுக் கொண்டு போகிறாய் அதை கீழே விட்டால் பின்னால் நடந்து வராதா ?" என்று கேட்டான்.

"சரி" என்று மாட்டுக் கன்றுக்குட்டியை கீழே நடக்க விட்டான்.

மற்றொருவன் "ஏன் அதை நடக்கவிட்டுப் போகிறாய் ? என்று கேட்டான். மற்றொருவன் "கொம்பில் கட்டி தூக்கிச் செல்லக்கூடாது ?" என்று கேட்டதுடன் , நானும் வருகிறேன் தூக்கிச் செல்வோம் என்றான். அதன்படி இருவரும் கொம்பில் கட்டி தூக்கிச் சென்றனர். அப்படி போய்க்கொண்டே இருக்கும் பொழுது, மற்றொருவன் பார்த்தான். "இவ்வளவு" முட்டாள்தனமாக யாராவது கன்றுக் குட்டியை கொம்பில் கட்டி தூக்கிக் கொண்டு போகின்றார்களே, அது உயிரோடு இருக்கிறதா ? செத்துவிட்டதா ? செத்துப் போனால் தான் இப்படி தூக்கிக் கொண்டு போவார்கள் என்று சொன்னான்.

"அப்படியா சொல்கிறாய்!" என்றான். இப்படியே பேசிக் கொண்டிருக்கும்பொழுது கன்றுக்குட்டி ஒரு துள்ளுத்துள்ளி ஆற்றில் விழுந்துவிட்டது. தேடிப் பார்த்தான் கிடைக்கவில்லை. ஊரார் பேச்சைக் கேட்டு கெட்டுப் போனான். அதேமாதிரி நாம் செய்கின்ற காரியங்களையெல்லாம், குறை சொல்வதற்கென்றே சிலர் இருப்பார்கள். அவர்களெல்லாம் கன்றுகுட்டி மேல் உள்ள கருணையால் சொல்லவில்லை. கன்றுகுட்டிமேல் இருக்கின்ற அன்பால் சொல்லவில்லை. அந்தக் கன்றுக் குட்டி தொலையாதா ? அவன் முட்டாள்தனம் பண்ண மாட்டானா என்று.

ஆனால், நான் ஒன்றை சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நாங்கள் முட்டாள்களாக ஆகமாட்டோம். நாங்கள் பெரியாரால் வளர்க்கப்பட்ட பகுத்தறிவுவாதிகள். அண்ணாவால் வளர்க்கப்பட்ட அறிவுக் கொழுந்து விடுகின்ற தம்பிமார்கள். ஆகவே, நாங்கள் ஈடுபட்டு நடத்துகின்ற இந்த ஆட்சியில் இப்படிப்பட்ட புலம்பல்களுக்கு, இப்படிப்பட்ட பொல்லாதாருடைய வாக்குகளுக்கு, விமர்சனங்களுக்கு நாங்கள் பலியாக மாட்டோம். நீங்கள் பேசுவதை பேசிக்கொண்டிருங்கள். அதில் ஏதாவது எங்களுக்குப் பயன்படுமேயானால் அதை எடுத்துக் கொண்டு, எங்களைத் திருத்திக்கொள்ள தயாராக இருக்கிறோம். பயன்படாதவைகளை ஒதுக்கித் தள்ளுவோம். கவலைப்படமாட்டோம் என்று கூறிவிட்டு நம்முடைய வழியில் நாம் செல்லுவோம்.

ஒருவன் சாலையில் நடந்துபோகிறான் என்றால், என்னென்னவோ சொற்களைக் கேட்கிறோம். அதுக்கெல்லாம் கவலைப்பட்டு, யார் குரைப்பது என்று பார்த்து நாம் கல்லை எடுத்து வீசினால், அது மீண்டும் அதிகமாக குரைக்குமே தவிர, குரைப்பதை நிறுத்தி விடாது, நாம் நம்முடைய பாதை – நம்முடைய பயணம், புனிதமான பயணம். தெளிவான பயணம் என்ற முறையிலே நாம் செல்வோம்.

அப்படி அந்தப் பயணத்தை நாம் மேற்கொண்ட காரணத்தினால்தான் ஒரு காலத்திலே நம்மைச் சேர்ந்தவர்கள் ஒருவர்கூட சட்டமன்றம், ஊராட்சி மன்றம், ஆட்சிமன்றங்களுக்கெல்லாம்கூட வரமுடியாத அளவிற்கு மக்களுடைய ஆதரவு குறைந்துவிட்ட காலத்திலே இருந்து, இன்றைக்குப் பார்க்கிறோம். மேடையிலே காணுகின்றீர்கள். அமைச்சராக வீற்றிருக்கின்ற பொன்முடியையும், வேங்கடபதியையும், இருவரும் இருபக்கத்திலும், அமர்ந்திருக்கின்ற காட்சியையும் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களாக நம்முடைய அருமைத் தோழர்கள் – தோழமைக் கட்சியைச் சேர்ந்தவர்கள் அமர்ந்திருக்கின்ற காட்சியையும், எதிரே கூட எதிர்காலத்திலே வரப் போகின்ற எம்.எல்.ஏ.க்கள், எம்.பி.க்களை நான் காணுகின்றேன் என்றால், இதற்கெல்லாம் காரணம் பணம் அல்ல; இதற்கெல்லாம் காரணம் நம்முடைய ஆள்மிரட்டும் காரியங்கள் அல்ல; இதற்கெல்லாம் காரணம் தேர்தல் வியூகங்கள் அல்ல, நம்முடைய உள்ளத்திலே கொண்டிருக்கின்ற தூய்மை, பொதுமக்களை காப்பாற்ற வேண்டும் என்று பெருக்கெடுக்கின்ற தாய்மை. ஆம் நான் வெளியிடுவது வாய்மை. நம்புங்கள் ! வணக்கம்! ✶





# பல்லாயிரக்கணக்கானோர் பயன்பெறும் வகையில் வருமுன் காப்போம் திட்டம் விரிவுபடுத்தப்படும்

பூவிருந்தவல்லியில்

நடைபெற்ற

**"வருமுன் காப்போம்"**

திட்டத் தொடக்க விழாவில்

மாண்புமிகு

தமிழக முதலமைச்சர்

**கலைஞர்**

**மு.கருணாநிதி**

அவர்கள்

ஆற்றிய உரை

(30.12.2006)

பூவிருந்தவல்லியில் மிகச் சிறப்பாக நடைபெறுகின்ற "வருமுன் காப்போம்" திட்டத்தினுடைய தொடக்க விழா நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உங்கள் அனைவரையும் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

இங்கே குழுமியிருக்கின்ற மக்கள் கூட்டத்தைப் பார்க்கும்பொழுது கழக அரசினுடைய திட்டங்களுக்கு தமிழக மக்களுடைய அன்பும், ஆதரவும், வரவேற்பும் எந்த அளவிற்கு இருக்கிறது என்பதை என்னால் உணர முடிகிறது. பெரும்பாலும் அரசு விழாக்கள் என்றால், அதிகாரிகள் சிலர், காவல் துறையினர் சிலர், வேண்டியவர்கள் சிலர், வேண்டாதவர்கள் பலர் என்ற முறையில் சிறு கூட்டந்தான் அரசு விழா என்கிற பெயரில் நடைபெறும்.

ஆனால், பூவிருந்தவல்லியிலே மாநாடு நடைபெறுவது போல இங்கே நீங்கள் குழுமியிருக்கின்ற காட்சிகளைப் பார்க்கும்பொழுது, அருமை நண்பர் சுதர்சனம் அவர்கள் இங்கே விளக்கிக்காட்டியதைப் போல் நாள்தோறும் வளர்பிறைபோல் இந்த அரசுக்கு ஆதரவு வளர்ந்து கொண்டே வருகிறது. இந்த ஆதரவு மேலும் பெருகும் என்ற நம்பிக்கையை நாங்கள் பெறுகின்றோம்.

வருமுன் காப்போம் திட்டம் கடந்த காலத்தில் தி.மு.கழக ஆட்சி நடைபெற்றபோது, அறிமுகப்படுத்தப்பட்டு, பல்லாயிரக்கணக்கான மக்கள்,

இலட்சக்கணக்கான மக்கள் பயன் பெற்ற ஒரு திட்டமாகும். நோய் நொடி இல்லாது வாழ, நோய் வந்தபிறகு அதற்கு மருந்து தருவது, மருத்துவர் களைத் தேடுவது என்றில்லாமல், நோய் வருவதற்கு முன்பே தங்களை எப்படி காப்பாற்றிக்கொள்வது, தங்களை சுற்றி இருப்பவர்களை எப்படி காப்பாற்றிக் கொள்வது, தங்கள் குடும்பத்தாரை, ஊரிலே உள்ளவர்களை நோயிலே இருந்து எப்படி பாதுகாப்பது என்பதற்கான வழிமுறைகளைச் சொல்லுகின்ற வகையில் இந்தத் திட்டம் தயாரிக்கப் பட்டு, பல்லாயிரக்கணக்கான மக்கள், இலட்சக்கணக்கான மக்கள் பயன்பெற்றிருக்கின்றார்கள்.



ஆனால், கடந்த காலத்திலே கழக ஆட்சியிலே தொடங்கப்பட்டு, வெற்றிகரமாக நடைபெற்ற பல திட்டங்களை, இடையிலே வந்தவர்கள், எப்படி ரத்து செய்துவிட்டார்களோ, அதைப்போலத்தான் இந்தத் திட்டம் கிடப்பிலே போடப்பட்டது, ரத்து செய்யப்பட்டது.

உங்களுக்குத் தெரியும் மறந்திருக்கமாட்டீர்கள், உழவர் சந்தை என்ற ஒரு புது திட்டத்தை, தமிழகத்தில், நூற்றுக்கும் மேற்பட்ட இடங்களில், தொடங்கி வைத்து, அதிலே ஏழை உழவர்கள், கிராமப்புறத்திலே வாழுகின்ற உழவர்கள், விவசாயப் பெருங்குடி மக்கள், தாங்கள் விளைவித்த பொருட்களைக் கொண்டுவந்து அந்தச் சந்தையிலே வைத்து, அதை மலிவான விலையிலே விற்பதற்கும், நுகர்வோரும் அதற்கு நியாயமான விலையைக் கொடுத்து வாங்குவதற்குமாக அந்த உழவர் சந்தைத் திட்டம் நூற்றுக்கு மேற்பட்ட இடங்களிலே செயல்படுத்தப்பட்டது. நீங்கள் அறிவீர்கள். ஆனால், அது இடைக்காலத்திலே நிறுத்தப்பட்டது.

அதைப்போல, சமத்துவபுரங்கள். தந்தை பெரியார் அவர்களின் பெயரால் சாதி, மத, பேதமற்ற சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்கின்ற அடிப்படைக் கொள்கையோடு, அதற்கு வசதியாக, வாய்ப்பாக, இந்த சமத்துவபுரங்கள் விளங்கட்டும் என்று எல்லா சமுதாயத்து மக்களும் ஒரே இடத்திலே குடியிருக்க, அங்கே இருக்கின்ற கிணறுகளைப் பயன்படுத்திக்கொள்ள, பள்ளிக்கூடங்களை பொதுவாகப் பயன்படுத்திக்கொள்ள, ஏன் இடுகாடு, சுடுகாட்டைப் பொதுவாகப் பயன்படுத்திக் கொள்ள அதன் வாயிலாக சமத்துவம், சமதர்மம், இவை நிலைபெற, வளர அந்தத் திட்டத்தை கிட்டத்தட்ட 108 இடங்களில் அதனை ஆரம்பித்து, அதற்கான கட்டடங்கள் கட்டப்பட்டு, நிர்மாணிக்கப்பட்ட அந்த வீடுகளெல்லாம் அந்தக் காலனிகளெல்லாம் கடந்த ஐந்தாண்டு காலத்திலே அவைகள் செயல்படாத நிலைக்கு ஆளாக்கப்பட்டு, இப்பொழுது மீண்டும் உங்களுடைய அன்பால், ஆதரவால் நீங்கள் அளித்த வாக்குகளால் இந்த ஆட்சி மீண்டும் வந்த காரணத்தால், பெரியார் நினைவு சமத்துவபுரங்கள், ஆங்காங்கு செயல்படத் துவங்கியிருக்கின்றன என்பதை நீங்கள் அறிவீர்கள்.

அதைப்போலத்தான் சமூக சேவகியாக விளங்கிய மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் அவர்களுடைய பெயரால் ஒரு புதுத்திட்டம், பெண்களுக்கான திட்டம். குறிப்பாக ஏழை – எளிய பெண்களுக்கான திட்டம். ஏழை – எளிய பெண்கள், படித்துவிட்டு வீட்டிலே இருக்கின்ற பெண்கள், திருமணமாகாமல் இருக்கின்ற பெண்கள், அவர்கள் பத்தாவது வரையிலே படித்திருந்தார்களேயானால், எட்டாவது வரையிலே படித்திருப்பார்களேயானால், அவர்களுடைய திருமணத்திற்கு பத்தாயிரம் ரூபாய் தருவது என்ற ஒரு திட்டத்தை கடந்த காலத்திலே தி.மு.கழக ஆட்சியில் தொடங்கி நடைமுறைப் படுத்தினோம். அப்படி நடைமுறைப்படுத்தியதில் இலட்சக்கணக்கான திருமணங்கள் நடைபெற்று, அந்த ஏழை எளிய பெண்கள் வாழ்விலே ஒளிபெற்றார்கள். அந்தக் குடும்பங்களில் விளக்கேற்றி வைக்கின்ற, அந்தத் திருப்பணியை கழக ஆட்சி அப்பொழுது ஏற்றுக் கொண்டது. ஆனால், கடந்த ஐந்தாண்டு காலத்தில் அந்தத் திருமண உதவித் திட்டமே ரத்து செய்யப்பட்டது.

மீண்டும் இப்போது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்த பிறகு, தோழமைக் கட்சிகளின் ஆதரவோடு அந்தக் கட்சிகளுக்கு இன்றைய ஆட்சிப் பொறுப்பிலே இருக்கின்ற எங்களுக்கு நீங்கள் அளித்த ஆதரவின் காரணமாக



ஏற்கெனவே திருமண உதவித் திட்டமாக பத்தாயிரம் ரூபாய் அளிக்கப்பட்டதென்றால், இப்போது பதினைந்தாயிரம் ரூபாய் ஏழையெளிய வீட்டுப் பெண்களின் திருமணங்களுக்குத் தருவதென்று திட்டம் அறிவித்து, அவ்வாறு பல்லாயிரக்கணக்கான திருமணங்கள் நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

இதையெல்லாம் நான் சொல்வதற்குக் காரணம் இருள், ஒளி என்ற இரண்டையும் நாம் பார்க்கின்றோம். ஆகவே ஒளி எது, இருள் எது என்பதைப் புரிந்து கொள்கின்ற வகையில் ஆட்சிகள் நாட்டில் நடைபெறுகின்றன. ஒளி மிகுந்த ஆட்சியாக இன்றைக்கு இருக்கின்ற ஆட்சி, உங்களால் உருவாக்கப்பட்ட ஆட்சியாக இருக்கின்ற காரணத்தால் இந்தத் திட்டம் கூட இடைக் காலத்திலே நிறுத்தப்பட்டு, வருமுன் காப்போம் திட்டம் தேவையில்லை என்று வாரி வீசப்பட்டு, மறுபடியும் ஆட்சிப் பொறுப்புக்கு நாங்கள் வந்த பிறகு, அந்தத் திட்டத்தை இன்றைக்குத் தொடங்கியிருக்கிறோம்.

தி.மு.க. ஆட்சிப் பொறுப்பிலே இருந்தால், இங்கே தம்பி துரைமுருகன் குறிப்பிட்டதைப்போல, சுதர்சனம் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, மற்ற நண்பர்கள் எல்லாம் இங்கே எடுத்துக்காட்டியதைப் போல நல்ல காரியங்கள் நாட்டில் நடைபெறும், மக்களுக்காக நிறைவேற்றப்படும், அதற்கு மக்கள் ஒத்துழைக்க வேண்டும், மக்களுடைய அதரவு தொடர்ந்து இருக்க வேண்டும், அப்படி இருந்தால் நல்ல காரியங்களுக்குப் பஞ்சம் இல்லை, நாட்டில் நடைபெற்றுக் கொண்டே இருக்கும். அதற்கு அடையாளந்தான், பூவிருந்தவல்லியில் இன்று நடைபெறுகின்ற இந்த விழா என்பதை நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

முன்கூட்டியே சில எச்சரிக்கைகளோடு, ஜாக்கிரதை உணர்வோடு நாம் நடந்து கொண்டால் இங்கே முதலில் திட்ட விளக்க உரையாற்றிய சுப்புராஜ் அவர்கள் எடுத்துக்காட்டியதைப்போல், பெரும் பெரும் நோய்களையெல்லாம் இன்னும் கூடிய விரைவிலேயே தடுத்திருக்க முடியும், வெள்ளைக்காரன் காலத்திலேயிருந்து, இந்தியாவில் கொடிய நோய்கள், தொத்து வியாதிகள் இவைகள் எல்லாம் இருந்தன. ஆனால் அவைகளையெல்லாம் ஒழிப்பதற்கு பல காலம் தேவைப்பட்டது, பல முயற்சிகள் தேவைப்பட்டது. நான் நேரடியாக அனுபவத்திலே உணர்ந்தவன். கோயம்புத்தூர், சேலம் போன்ற இடங்களில் ஒரு கொடிய வியாதி, காலராவை விட பயங்கரமான ஒன்று அங்கெல்லாம் இருக்கும். கால் வீங்கும், ஏன் கால் வீங்குகிறது என்று கேட்டால், எலியிலிருந்து ஒரு பூச்சி –எலி செத்த பிறகு அங்கிருந்து புறப்பட்டு, அந்தப் பூச்சி கடிக்கின்ற காரணத்தால், அந்தக் கால் வீங்குகிறது, அப்படி வீங்கிய கால் இரண்டு மூன்று நாளில் காலராவாக மாறி அந்த மனிதனையே கொன்று விடுகிறது என்ற நோய், கோவை, சேலம் மாவட்டங்களிலே சில பகுதிகளில் பயங்கரமாக இருந்த காலத்தில் நான் அந்த வட்டாரத்தில் வசித்திருக்கிறேன். அந்த வியாதிக்குப் பெயர் பிளேக் நோய். ஆனால் நம்முடைய மக்கள் என்ன செய்தார்கள் ? அந்த நோயை விரட்டுவதற்கு, வீழ்த்துவதற்கு, அந்த நோயிலிருந்து நம்மைக் காப்பாற்றுவதற்கு நமக்குத் தெரிந்த ஒரே மார்க்கம், அம்மை நோயா, அப்படியானால் மாரியம்மனுக்கு வேண்டிக் கொள்வோம் என்பதைப்போல, இந்தப் பிளேக் நோய்க்கு யார் காரணம் என்று கண்டுபிடித்து, அதற்கொரு மாரியம்மனை உருவாக்கினார்கள். பிளேக் மாரியம்மன் என்று அந்த மாரியம்மனுக்கே பெயர் வைத்தார்கள். இன்றைக்கும் கோவையில் பிளேக் மாரியம்மனுடைய பழைய கோவில் இருக்கிறது. அந்த பிளேக் மாரியம்மன் கோவில் இருக்கிற இடத்தில் நான் கோவையில் வாழ்ந்த போது, பல முறை பொதுக் கூட்டங்களில் பேசியிருக்கிறேன். அந்த பிளேக் மாரியம்மனுக்கு வேண்டிக் கொண்டால்தான், பிளேக் நோய் வந்தாலும் அவர்கள் காப்பாற்றப்படுவார்கள் என்று ஒரு ஐதீகம், ஒரு நம்பிக்கை அந்த வட்டாரத்திலே இருந்தது.

நான் பார்த்திருக்கிறேன், வெளியிலே கடைத்தெருவுக்குச் செல்லும் போது, அல்லது நான் வசித்த பகுதியிலிருந்து வேறு இடத்திற்கு கோவையிலே செல்லும்போது வழியெல்லாம் பிணங்களைத் தூக்கிக் கொண்டு போவார்கள். என்ன என்று கேட்டால், பிளேக்கிலே செத்து விட்டார்கள் என்று சொல்வார்கள். ஒரு நாளைக்கு 100 பேராவது செத்துக் கொண்டிருந்தார்கள். அப்படிப்பட்ட கொடுமையான பிளேக் நோய் கோவை மாவட்டத்தையே கலக்கிக் கொண்டிருந்தது. அந்த நோயை ஒழித்தே தீருவது என்று, வெள்ளைக்காரன் ஆட்சி இருந்த அந்தக் காலத்திலேயே சூளுரைத்துக் கொண்டு பாடுபட்ட காரணத்தால், இப்போது அந்த நோயே இல்லை. நோய் இல்லை, ஆனால் பிளேக் மாரியம்மன் கோவில் கோயம்புத்தூரிலே இருக்கின்றது.

என்ன காரணம் ? நம்மிடத்திலே இருக்கின்ற மூட நம்பிக்கைகள்தான் காரணம். மூடநம்பிக்கைகளின் காரணமாகத்தான் வருமுன் காத்துக் கொள்ள நமக்குத் தெரியவில்லை. இது போன்ற தொத்து நோய்களை , இது போன்ற பயங்கர நோய்களையெல்லாம் விரட்டுவதற்கு நாம் இன்னமும் மூட நம்பிக்கையில் இருக்கின்ற காரணத்தால்தான் அந்தத் துணிச்சலைப் பெறவில்லை. மருந்துகளால், இது போன்ற சிகிச்சைகளால், சுகாதார வசதிகளால் அந்த வாய்ப்புகளைப் பெருக்கிக் கொள்வதால், நோய் நொடியிலிருந்து நம்மைக் காப்பற்றிக் கொள்ள முடியும், அதுதான் வருமுன் காப்போம். நாம் தூய்மையாக இருந்தால், சுத்தமாக இருந்தால், நாம் நம்முடைய சுற்றுப்புறங்களை, நம்முடைய புறத்தை, நல்ல வகையிலே ஒழுங்குபடுத்தி வைத்திருந்தால் வருமுன் காப்போம் என்பதற்கு அடையாளமாக நாம் வாழ்ந்து






வருகின்றோம் என்று சொல்ல முடியும். இவைகளையெல்லாம் எடுத்துக்காட்டுவதுதான் நோய் வந்த பிறகு சிகிச்சை அளிப்பது மாத்திரமல்ல, நோய் வராமலே தடுப்பதற்கு ஏற்ற வழி வகைகளைத் தேடுவதுதான் வருமுன் காப்போம் என்பதாகும்.

இப்படித்தான் அம்மை, காலரா போன்றவைகள் எல்லாம் கூட ஒரு காலத்தில் தொடர் நோய்களாக இருந்தது உண்டு. அந்த நோய்கள் எல்லாம் இப்போது இல்லை. அம்மையும் காலராவும் வந்தால் ஒரு ஊரையே அழித்து விட்டுப் போகும். அதையெல்லாம் இப்போது இல்லாமல் செய்திருக்கிறோம் என்றால், அந்த அம்மைக்கும் ஒரு கடவுள் உண்டு, காலராவுக்கும் ஒரு கடவுள் உண்டு. அம்மைக்குக் கடவுள் மாரியம்மன், காலராவுக்கு கடவுள் காளியம்மன் என்று பழியை மாரியம்மன் மீதும், காளியம்மன் மீதும் போட்டு மனிதர்கள் செத்துக் கொண்டிருந்தார்கள். அதையெல்லாம் இன்றைக்கு துரத்தியடித்து, அந்த வியாதிகள் எல்லாம் வராத வழியை உண்டாக்கியிருப்பது விஞ்ஞானம். அந்த விஞ்ஞானம் நல்லதற்கும் பயன்படும், கெட்டதற்கும் பயன்படும். ஆனால் நல்லதற்குத்தான் அதிகமாகப் பயன்படுகிறது என்ற காரணத்தால் அதை நாம் பயன்படுத்திக் கொள்ளத் தவறக் கூடாது. அந்த விஞ்ஞானத்தின் சாதனையாக கிடைத்துள்ள அரும் மருந்து, அந்த மருந்துகளையெல்லாம் நாம் பயன்படுத்தினால் அவைகளே நோய்களைத் தடுக்கக் கூடியவைகளாகப் பயன்படுகின்றன.

குழந்தைப் பருவத்திலேயே போலியோ தாக்காமல் இருப்பதற்காக குழந்தைகள் பிறந்து, அந்தக் குழந்தைகள் சிசுக்களாக இருக்கும்போதே, அவைகளுக்கு ஊற்றுகின்ற அந்த மருந்து அதனுடைய வாயிலே ஆண்டுதோறும் நாம் அதற்கொரு நிகழ்ச்சியே வைத்து, அன்றைக்கு நம்முடைய மருத்துவர்கள் எல்லாம் அரசின் சார்பாக தங்களுடைய பணியை நல்ல முறையிலே செவ்வனே ஆற்றி, அந்தக் குழந்தைகளுக்கெல்லாம் தடுப்பு மருந்து அன்றைக்குப் போடுகின்ற காரணத்தால் போலியோ நோய் வராமல் இருக்கின்றது. போலியோ யார் யாரை என்னென்ன பாடு படுத்துகிறது? எத்தனை குழந்தைகளின் வளர்ச்சியைத் தடுக்கிறது.?

நேற்றைக்குக் கூட எனக்கொரு கடிதம் வந்தது. அந்தக் கடிதத்தில் ஒரு பெண்ணின் அழகான படம். ஆனால் அந்தப் பெண்ணைப் பற்றிய குறிப்பு என்னவென்றால், உட்கார்ந்திருந்த நிலையில் அந்தப் பெண்ணின் பெற்றோர் எழுதியிருக்கிறார்கள் – இந்தப் பெண் எவ்வளவு அழகாக இருக்கிறாள், பார்த்தீர்களா? அவள் என்ன படித்திருக்கிறாள் தெரியுமா? எம்.ஏ. வரையில் படித்திருக்கிறாள், ஆனால் அவளால் எழுத முடியாது. அவளின் கை இரண்டும் முடமாகிவிட்டது. கால் விரலால்தான் எழுதுகிறாள், எனவே அருள் கூர்ந்து அவளுக்கு உங்கள் அரசில் ஏதாவதொரு வேலை கொடுங்கள் என்று அந்தக் கடிதத்திலே எழுதி புகைப்படத்தை வைத்திருக்கிறார்கள். என்ன காரணம் என்று விசாரித்தால், இளமையிலே வந்த போலியோ நோய், அந்தப் பெண்ணை அந்தப் பாடுபடுத்தி, காலால் எழுதுகின்ற அளவுக்கு ஒரு நிலையை ஏற்படுத்தியிருக்கின்றது. அவர்களையெல்லாம் காப்பாற்ற வேண்டிய பெரும் பொறுப்பு தனிப்பட்ட யாராலும் முடியாது. ஒரு பெரிய நிறுவனம் அல்லது ஓர் அரசாங்கம்தான் அந்தப் பொறுப்பை தனித்தனியாக எடுத்துக் கொள்ள வேண்டும். அப்படிப்பட்ட பொறுப்பை தனித்தனியாக எடுத்துக் கொள்வதைவிட ஒரு சமுதாய அளவிலே அந்தப் பொறுப்பை எடுத்துக் கொள்கின்ற சங்கல்பம் செய்து கொண்டுதான் இன்றைக்கு இந்த அரசு பாடுபட்டுக் கொண்டிருக்கின்றது. தொடர்ந்து பாடுபடுவோம் என்பதை



நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதிலே ஒரு பகுதியாகத்தான் இந்த வருமுன் காப்போம் என்ற திட்டத்தை இங்கே தொடங்கி வைக்கின்றோம். இந்த ஆண்டு இந்தத் திட்டம் பூவிருந்தவல்லியிலே 100 பேருக்கு திட்டத்தின் பயன் வழங்கப்படுகின்றது என்றாலுங்கூட, பல்லாயிரக்கணக்கானவர்கள் இந்த ஓராண்டு காலத்தில் பயன்பெறுகின்ற அளவிற்கு இந்தத் திட்டம் விரிவுப் படுத்தப்படும், இந்தத் திட்டத்தை மிகுந்த பொறுப்போடும், அக்கறையோடும், ஆர்வத்தோடும் நிறைவேற்றுவதற்கு இன்றைக்குப் பணியாற்றிக் கொண்டிருக்கின்ற நம்முடைய மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தம்பி கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்களை நான் பாராட்டி, அவருடைய அதிகாரிகள் அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துகளைச் சொல்லி, உங்களுடைய முயற்சி வெல்க வெல்க என்று கூறி, நான் வந்து வாழ்த்திய காரணத்தால், நான் வந்து இதைத் தொடங்கி வைத்த காரணத்தால் என்னுடைய கைராசியாக, நிறைய பேர் நோயாளிகளாக வர வேண்டுமென்று அர்த்தமல்ல, யாருக்கு நோய் வந்தாலும் அது நீங்க வேண்டும், அதுதான் என்னுடைய கைராசி, டாக்டர்களுடைய, அமைச்சர்களுடைய கைராசி, இந்த ஆட்சியின் கைராசியாக இருக்கும் என்று கூறி, ஏன் கைராசி என்று சொல்கிறேன் என்றால், "கை" க்கும் எங்களுக்கும் இப்போது உறவு அல்லவா, ஆகவே கைராசி என்று குறிப்பிட்டு விடைபெறுகிறேன். ❖

## மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் மாநில அளவில் விவசாய மேம்பாட்டுக்குழு அமைப்பு

வேளாண்மையில் எதிர்கொள்ளப்படும் பல்வேறு பிரச்சினைகள் குறித்து ஆய்வு செய்து உடனடி நிவாரண நடவடிக்கைகளை அரசுக்குப் பரிந்துரை செய்யவும், விவசாயிகள் உற்பத்தியை மேம்படுத்திடவும், விளை பொருள்களுக்கு உரிய நியாய விலை கிடைக்க விலை நிர்ணயம் செய்யவும், மாநில அளவில் ஒரு விவசாய மேம்பாட்டுக்குழு அமைக்கப்படும் எனத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையில் கூறப்பட்டிருந்தது. அதன்படி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தலைமையில், வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களைத் துணைத் தலைவராகக் கொண்ட, விவசாய மேம்பாட்டுக் குழுவினை அமைத்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் 24.12.2006 அன்று அறிவித்துள்ளார்.

இந்தக் குழுவில், விவசாயச் சார்பாளர்களில் வேளாண்மைப் பிரிவில் மூவரும், தோட்டக்கலைப் பிரிவில் மூவரும், கால்நடை பராமரிப்பில் ஒருவரும், மீன்வளத்துறைச் சார்ந்து ஒருவரும், பால்வளத்துறைச் சார்ந்து ஒருவரும், வேளாண் விற்பனைப் பிரிவில் இருந்து இருவரும், வேளாண்மை, தோட்டக்கலை, கால்நடை மருத்துவ அறிவியல், நுண்ணீர்ப் பாசனம் ஆகிய துறைகள் ஒவ்வொன்றிலும் இருந்து ஒரு வல்லுநர் வீதம் நால்வரும் ஆக மொத்தம் 15 பேர் உறுப்பினர்களாகச் செயல்படுவர்.

வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் வேளாண்மைத்துறைச் செயலாளர் இக்குழுவின் கூட்டுநராகவும் செயல்படுவார். இவர்கள் அல்லாமல், வேளாண்மை, கால்நடை மருத்துவப் பல்கலைக் கழகங்களின் துணைவேந்தர்கள், நிதித்துறை, கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறைச் செயலாளர்கள் உட்பட 16 அலுவல் சார் உறுப்பினர்கள், சிறப்பு அழைப்பாளர்களாகவும் இக்குழுவில் இடம் பெறுவார்கள்.

இந்தக் குழுவுடன் வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் சிதம்பரம் தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. கே.எஸ். அழகிரி அவர்களைத் துணைத் தலைவராகவும், வேளாண்துறைச் செயலாளர், வேளாண்துறை இயக்குநர், கால்நடை பராமரிப்புத்துறை இயக்குநர், வேளாண்மைப் பல்கலைக்கழகத் துணை வேந்தர் ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்ட சிறப்புக் குழு ஒன்றையும் அமைத்துள்ளதாக 24.12.2006 அன்று, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவித்துள்ளார். ★



# சென்னை மாநகரக் காவல்துறை இந்தியக் காவல்துறையின் முன்னோடி

**சென்னை மாநகரக் காவல்துறையின் 150ஆவது ஆண்டு**
நிறைவு விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
கலைஞர் **மு. கருணாநிதி** அவர்கள் ஆற்றிய உரை (4.1.2007)

**செ**ன்னை மாநகரத்தினுடைய காவல் துறையின் 150ஆவது ஆண்டு நிறைவு விழாவின் தொடக்க நிகழ்ச்சி நடைபெறுகின்ற இந்த நேரத்தில் உங்களையெல்லாம் சந்திப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சியும் மன நிறைவும் கொள்கின்றேன். சென்னை மாநகரக் காவல்துறை இந்தியக் காவல்துறையின் முன்னோடியாகும். 1856ஆம் ஆண்டில்தான் முறையான சட்டங்களும் விதிமுறைகளும் வகுக்கப்பட்டு சென்னை மாநகரத்தின் காவல்துறை ஏற்படுத்தப்பட்டது. காவல் ஆணையாளர் என்ற பதவியும் உருவாக்கப்பட்டது. அவற்றைத் தொடர்ந்து 25.4.1856 அன்று லெப்டினல் கர்னல் ஜே.சி. போல்டர்ஸன் என்பவர் சென்னை மாநகரின் முதல் காவல் ஆணையாளராகப் பொறுப்பேற்றார்.

சென்னை மாநகரக் காவல்துறை தற்போது 12 காவல் மாவட்டங்களையும், 3 காவல் மண்டலங்களையும் கொண்டதாக அமைந்துள்ளது. இவற்றோடு சென்னை மாநகரின் போக்குவரத்துப் பிரிவு மூன்றாக பிரிக்கப்பட்டு, அவை ஒரு காவல் இணை ஆணையாளரின் கீழ் இயங்கி வருகிறது. அவர்களை அடுத்து துணை ஆணையாளர்கள் செயல்பட்டு வருகிறார்கள்.

சென்னை மாநகரக் காவல்துறை தனது நிருவாகத்தின் கீழ் 894 சதுர கிலோமீட்டர் நிலப்பரப்பில் வாழுகின்ற ஏறத்தாழ 1 கோடி மக்களுக்குத் தொண்டு செய்யும் பெரும் பொறுப்பை ஏற்றுள்ளது.

இந்தப் பொறுப்பினை நிறைவேற்றுவதற்காக சென்னை மாநகரக் காவல்துறையில்

1 காவல் ஆணையாளர், 1 கூடுதல் ஆணையாளர், 4 காவல் இணை ஆணை யாளர்கள், 21 காவல் துணை ஆணையர்கள், 92 காவல் உதவி ஆணையாளர்கள், 377 காவல் ஆய்வாளர்கள், 1,445 உதவி ஆய்வாளர்கள், 2,207 தலைமைக் காவலர்கள், 13 ஆயிரத்து 375 காவலர்கள் ஆகியோர் பணியாற்றுகின்றனர்.

தொடர்ச்சி 43ஆம் பக்கம்





சென்னைக்கு வருகைதந்த மேதகு இந்தியக் குடியரசுத்தலைவர் திரு. ஆ.ப.ஜெ. அப்துல்கலாம் அவர்களை,
மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்
சென்னை விமான நிலையத்தில் வரவேற்றார்கள். உடன் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள்
திரு. ஆற்காடு நா. வீராசாமி மற்றும் திரு. துரைமுருகன் ஆகியோர் உள்ளனர் (5-1-2007).



சென்னைக்கு வருகைதந்த மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. மன்மோகன்சிங் அவர்களை,
மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் சென்னை விமான நிலையத்தில் வரவேற்றார்கள்.
உடன் மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. ஆ. ராசா அவர்கள் உள்ளார் (2-1-2007).



[illegible]



[illegible] கலைவாணர் அரங்கில் [illegible] வழங்கினார். [illegible] திரிபாதி, இ.ஆ.ப. ஆகியோர் உள்ளனர் [illegible]





மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள், தோஹாவில் நடைபெற்ற 15ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டிகளில், தடகளப்பிரிவில் 800 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் வெள்ளிப்பதக்கம் வென்ற தமிழகத்தைச் சேர்ந்த வீராங்கனை சாந்திக்கு ரூ.15 இலட்சம் ஊக்கத்தொகையை வழங்கினார்கள். உடன் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் டாக்டர் க.பொன்முடி, திரு.டி.பி.எம்.மொய்தீன்கான் ஆகியோர் உள்ளனர் (18-12-2006).



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்,
சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்ற விழாவில்
தமிழக அரசின் நிதியுதவி பெற்ற 'பெரியார்' திரைப்பட ஒலிநாடா மற்றும் குறுந்தகட்டை வெளியிட்டார் (23-12-2006)



கௌதம புத்தர் மகா பரிநிர்வாணம் அடைந்த 2550ஆம் ஆண்டு நிறைவையொட்டி தமிழகத்தில் விழா கொண்டாடுவது குறித்து, தமிழக அரசால் அமைக்கப்பட்ட குழுவின் கூட்டம், மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் தலைமையில் சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் குழு உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்(29-12-2006).



மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டையில் தாமிரபரணி கூட்டுக்குடிநீர்த் திட்டத்தைத் தொடங்கிவைத்து, விருதுநகர் நகராட்சி பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டினார். உடன் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், திரு.கேஆர்.பெரியகருப்பன் மற்றும் திரு.தங்கம் தென்னரசு ஆகியோர் உள்ளனர் (24-12-2006).



........38ஆம் பக்கத்தின் தொடர்ச்சி





1973 ஆம் ஆண்டு காவல்துறையில் முதன் முதலாக பெண்களை நியமனம் செய்யும் திட்டத்தை தமிழகத்தில் நடைமுறைக்கு கொண்டுவந்தது அப்போதைய இந்த அரசுதான் என்பதைப் பெருமிதத்துடன் சுட்டிக்காட்டிட விரும்புகிறேன்.



150ஆவது ஆண்டினைக் கொண்டாடும் மாநகரக் காவல்துறையில், 92ஆவது மாநகரக் காவல் ஆணையாளராக ஒரு பெண்மணி பொறுப்பேற்றுக் கடமைகள் ஆற்றி வருவது பெருமைக்குரியதாகும். திருமதி. லத்திகா சரண் அவர்களைத்தான் குறிப்பிடுகின்றேன்.

இந்த அரசு இப்போது பொறுப்பேற்ற பிறகு மாத்திரம் என்னென்ன சலுகைகளை வழங்கியிருக்கிறது என்பது பற்றி குறிப்பு மாத்திரம் காட்ட விரும்புகிறேன்.



★ 1.3.1995 மற்றும் 1.11.1995 ஆகிய தேதிகளில் நியமனம் செய்யப்பட்ட 2,207 இரண்டாம் நிலைக் காவலர்கள் முதல் நிலைக் காவலர்களாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளனர்.

★ காவல்துறை மானியக் கோரிக்கையின் போது அறிவித்தவாறு காவலர்கள் முதல் ஆய்வாளர்கள் வரை இடர்ப்படி (Risk Allowance) ரூ.60 என்பது ரூ.120 ஆகவும், காவல்துறை துணை கண்காணிப் பாளர்கள் / காவல்துறை கூடுதல் கண்காணிப்பாளர் ஆகியோருக்கு 70 ரூபாய் என்ற இடர்ப்படி 140 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

★ பணி மூப்பு மற்றும் பணிப் பதிவேடுகளை ஆதாரமாகக்கொண்டு இதர பணிகளுக்குப் பதவி உயர்வுகள் அளிப்பதைப் போன்று,





கௌதம புத்தர் மகா பரிநிர்வாணம் அடைந்த 2550ஆம் ஆண்டு நிறைவையொட்டி, தமிழகத்தில் விழா கொண்டாடுவது கு. தமிழக அரசால் அமைக்கப்பட்ட குழுவின் கூட்டம். மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் தலைை சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் குழு உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்(29-12-2006).



மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டையில் தாமிரபரணி கூட்டுக்குடிநீர்த் திட்டத்தைத் தொடங்கிவைத்து, விருதுநகர் நகராட்சி பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டினார். உடன் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், திரு.கேஆர்.பெரியகருப்பன் மற்றும் திரு.தங்கம் தென்னரசு ஆகியோர் உள்ளனர் (24-12-2006).



.......38ஆம் பக்கத்தின் தொடர்ச்சி





1973 ஆம் ஆண்டு காவல்துறையில் முதன் முதலாக பெண்களை நியமனம் செய்யும் திட்டத்தை தமிழகத்தில் நடைமுறைக்கு கொண்டுவந்தது அப்போதைய இந்த அரசுதான் என்பதைப் பெருமிதத்துடன் சுட்டிக்காட்டிட விரும்புகிறேன்.



150ஆவது ஆண்டினைக் கொண்டாடும் மாநகரக் காவல்துறையில், 92ஆவது மாநகரக் காவல் ஆணையாளராக ஒரு பெண்மணி பொறுப்பேற்றுக் கடமைகள் ஆற்றி வருவது பெருமைக்குரியதாகும். திருமதி. லத்திகா சரண் அவர்களைத்தான் குறிப்பிடுகின்றேன்.

இந்த அரசு இப்போது பொறுப்பேற்ற பிறகு மாத்திரம் என்னென்ன சலுகைகளை வழங்கியிருக்கிறது என்பது பற்றி குறிப்பு மாத்திரம் காட்ட விரும்புகிறேன்.



- ★ 1.3.1995 மற்றும் 1.11.1995 ஆகிய தேதிகளில் நியமனம் செய்யப்பட்ட 2,207 இரண்டாம் நிலைக் காவலர்கள் முதல் நிலைக் காவலர்களாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளனர்.
- ★ காவல்துறை மானியக் கோரிக்கையின் போது அறிவித்தவாறு காவலர்கள் முதல் ஆய்வாளர்கள் வரை இடர்ப்படி (Risk Allowance) ரூ.60 என்பது ரூ.120 ஆகவும், காவல்துறை துணை கண்காணிப்பாளர்கள் / காவல்துறை கூடுதல் கண்காணிப்பாளர் ஆகியோருக்கு 70 ரூபாய் என்ற இடர்ப்படி 140 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.
- ★ பணி மூப்பு மற்றும் பணிப் பதிவேடுகளை ஆதாரமாகக்கொண்டு இதர பணிகளுக்குப் பதவி உயர்வுகள் அளிப்பதைப் போன்று,



இவர்களுக்கும் பதவி உயர்வு அளிக்க வேண்டும் என்ற கோரிக்கை தலைமைக் காவலர்களிடையே நீண்ட பல காலமாக இருந்து வந்தது. அந்தக் கோரிக்கை மிகுந்த பரிவோடு ஏற்கப்பட்டு, இனி தலைமைக் காவலர் பதவியில் இருந்து உதவி ஆய்வாளராக பதவி உயர்வு பெறுவதற்கு நடைமுறையில் இருந்த தேர்வு முறை 1.11.2006 அன்று இந்த அரசினால் ரத்து செய்யப்பட்டுள்ளது.

★ தலைமைக் காவலர் ஒருவர் காவல் நிலைய உதவி ஆய்வாளராகப் பதவி உயர்வு பெற வயது உச்சவரம்பு 53 என்றும், தலைமைக்காவலர் ஒருவர் ஆயுதப் படையில் இருந்து உதவி ஆய்வாளராகப் பதவி உயர்வு பெற வயது உச்சவரம்பு 55 என்றும், உதவி ஆய்வாளர் பதவியில் இருந்து காவல் நிலைய ஆய்வாளராகப் பதவி உயர்வு பெற வயது உச்சவரம்பு 55 என்றும் இருந்தன. இந்த வயது வரம்பினை இந்த அரசு 1.11.2006 அன்று முதல் ரத்து செய்துள்ளது. அதன் காரணமாக 450 காவல்துறை அதிகாரிகள் மற்றும் சார்நிலைக் காவல் பணியாளர்கள் உடனடியாகப் பயனடைந்தனர்.

★ சென்னை மாநகரில் பொதுமக்களிடம் இருந்து உதவி கோரி வரும் அழைப்புகளுக்கு உடனுக்குடன் சென்று உதவுவதற்காக இந்தியாவிலேயே முதன்முறையாக, அதிநவீன தகவல் தொழில்நுட்ப சாதனங்கள் பொருத்தப்பட்ட 'விங்ஸ் பேட்ரோல்' (Wings Patrol) எனப்படும் 100 ஹூண்டாய் கார்கள், ரோந்து வாகனங்களாக சென்னை மாநகரக் காவல்துறைக்கு வழங்கப்பட்டுள்ளன. ஹூண்டாய் கார் நிறுவனம் நல்லெண்ண அடிப்படையில் நன்கொடையாக வழங்கிய இந்த 100 கார்களைப் பயன்படுத்தி பொதுமக்களிடம் இருந்து நவம்பர் மாதத்தில் வந்த 285 அழைப்புகள் மீதும், டிசம்பர் மாதத்தில் வந்த 326 அழைப்புகள் மீதும் உடனுக்குடன் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

★ குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதில் சென்னை மாநகரத்தினுடைய அண்மைக் காலச் சாதனைகளை மாத்திரம் சொல்ல வேண்டுமேயானால், கடந்த மாதம் புனித தோமையார் தேவாலயத்தில் பாதிரியார் கொலை செய்யப்பட்ட 24 மணி நேரத்தில் குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டனர். அதேபோல கடந்த வாரத்தில் சாலிகிராமத்தில் அரவிந்த் என்ற மாணவனைக் கடத்திக் கொலை செய்த குற்றவாளிகள் 48 மணி நேரத்தில் கண்டுபிடிக்கப் பட்டார்கள். அந்த அரிய காரியத்தை, அவர்களைக் கண்டுபிடித்த காரியத்தைச் செய்த இணை ஆணையாளர் துரைராஜ் அவர்களையும், அவருடன் இணைந்து அந்தப் பணியிலே ஈடுபட்ட குழுவினரையும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன் என்பதை மாத்திரமல்ல, அவர்களுக்கு தக்க பரிசினை இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு காவல் துறையின் சார்பாக வழங்கப்படும் என்பதையும் இப்போது நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

★ சென்னை மாநகரக் காவல் துறையின் 150 ஆவது ஆண்டு நிறைவு விழா நிகழ்வதையொட்டி, மாநகரக் காவல் பணியில் 25.4.2006 முதல் 24.4.2007 வரையுள்ள காலத்தில், ஆறு மாத காலத்திற்கு மேல் பணியாற்றிடும் 15 ஆயிரம் காவல் துறை அதிகாரிகள் மற்றும் காவல் பணியாளர்களுக்குப் பதக்கம் (மெடல்) வழங்கிச் சிறப்பிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

★ மற்றும் சென்னை மாநகர காவல் துறையின் 150 ஆவது ஆண்டு நிறைவு விழாவின் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த நிகழ்வினையொட்டி, சென்னை மாநகரக் காவல் துறையில் பணியாற்றும் காவலர் முதல் கூடுதல் துணை ஆணையாளர் வரையுள்ள 14,973 காவல் பணியாளர்களுக்கு 'கைபட்டை' (Arm Patch) அணிவிக்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

'ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூல்மறப்பர்
காவலன் காவான் எனின்'

என்று திருக்குறளிலே வள்ளுவரே காவலரைப் பற்றிக் கூறியிருக்கிறார். காவலர் என்பது நாடாளும் மன்னரை மாத்திரமல்ல, நாடாளும் மன்னருக்கு உதவியாக இருந்து ஒவ்வொரு அணு அசைவிலும் உற்றுக் கவனித்து ஒழுங்கான, நல்ல, அமைதியான நாட்டை உருவாக்குவதற்குப் பாடுபடுகின்ற காவலனை, திருக்குறளே புகழ்ந்திருக்கின்றது. அவன் சரியாகப் பணியாற்றாவிட்டால் ஆ பயன் குன்றும், அறுதொழிலோர் நூல் மறப்பர், காவலன் காவான் எனின் என்று வள்ளுவர் குறிப்பிட்டிருக்கிறார். அதை மறக்காமல் நம்முடைய காவலர்களும் பணியாற்றுகின்றார்கள், பணியாற்ற வேண்டும் என்பதை நான் எடுத்துச் சொல்லி, இந்த 150 ஆவது ஆண்டு நிறைவு விழாவிலே அருமைக் காவல் துறை நண்பர்கள் அனைவருக்கும் என்னுடைய இதயமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன், பாராட்டுகளை வழங்குகின்றேன். அவர்களுடைய பணி சிறக்க என்னுடைய வாழ்த்துகளைக் கூறுகின்றேன்.

◈ ◈ ◈





# இன்றைய இளைஞர்கள் நல்ல பண்புகளுக்கு எடுத்துக்காட்டுகளாய் இருந்திடல் வேண்டும்

மதுரை காமராசர் பல்கலைக்கழக 40 ஆவது பட்டமளிப்பு விழாவில்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **கலைஞர்** அவர்களின் பட்டமளிப்பு விழாச் சிறப்புரை
(15.12.2006)

மேதகு தமிழக ஆளுநரும், மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் வேந்தருமான திரு. சுர்ஜித் சிங் பர்னாலா அவர்களே!

பல்கலைக்கழகத்தின் இணை வேந்தரும், உயர் கல்வித் துறை அமைச்சருமான தம்பி பொன்முடி அவர்களே !

துணை வேந்தர் பேராசிரியர் மருதமுத்து அவர்களே !

பட்டமளிப்பு விழா உரையாற்ற வருகை தந்துள்ள என்.டி.பி.சி. நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநரான திரு. சங்கரலிங்கம் அவர்களே,

ஆட்சிக் குழு உறுப்பினர்களே,

பேராசிரியப் பெருமக்களே !

பட்டம் பெறும் மாணவ நண்பர்களே!

வணக்கம்.



மதுரை – காமராசர் பல்கலைக்கழகம் எனக்கு வழங்கும் இலக்கியத்திற்கான டாக்டர் பட்டத்தைப் பெற்றுக் கொண்டு, பட்டமளிப்பு விழாச் சிறப்புரை நிகழ்த்தும் அரிய வாய்ப்புக் கிட்டியுள்ளமைக்கு மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த வாய்ப்பினை எனக்கு வழங்கிய மதுரை – காமராசர் பல்கலைக்கழகத்தின் ஆட்சிமன்றக் குழுவிற்கு என் அகம் கனிந்து நன்றி செலுத்துகிறேன்.

பெருந்தலைவர் காமராசர் அவர்கள் தமிழ்க்குலம் விழிப்புற்றுத் திகழவும் இளைய சமுதாயத்தினர் கல்விக்கண் திறந்திட தெருவெங்கும் பள்ளிகள் தொடங்கி புரிந்த சாதனைகளைப் போற்றி, அவர் வாழும் காலத்திலேயே, சென்னை மாநகராட்சியின் மூலம், சென்னை மாநகரில் அவருக்குச் சிலை அமைத்தோம்! பின்னர் சென்னை கிண்டியில் அவருக்கு நினைவகம் அமைத்தோம்! சென்னை விமான நிலையத்தின் உள்நாட்டு முனையத்திற்கு அவரது திருப்பெயரைச் சூட்டச் செய்தோம்! குமரிமுனையில் மணிமண்டபம் அமைத்தோம்! அவர் பிறந்த திருநாளைக் கல்வி வளர்ச்சி நாளாக அறிவித்துக் கொண்டாடியதுடன், அந்நாளை என்றும் கொண்டாடும் வண்ணம் தனிச் சட்டம் வகுத்து நிறைவேற்றியுள்ளோம்! இந்தப் பெருமைகளுக் கெல்லாம் உரிய திருமகனார் பெருந்தலைவர் காமராசர் அவர்களின் பெயரால் அமைந்துள்ள இப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவிலே கலந்து கொண்டு உங்களையெல்லாம் வாழ்த்துவதில் மெத்தவும் பெருமிதம் எய்துகிறேன்.

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் முதல் பட்டமளிப்பு விழாவில், **7.9.1967** அன்று அந்நாளைய தமிழக முதலமைச்சர், தமிழ்ச் சமுதாயத்தின் இதய நாடியாய் என்றும் திகழும் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆற்றிய உரையில்,

"எந்நாடாயினும், இடரிலும் இழிவிலும் படாமல், இருளகன்று, ஏற்றம் பெற்று இருந்திட வேண்டுமெனில், அந்நாட்டினில் தொடர் தொடராய், அறிவாளர் தோன்றிய வண்ணம் இருந்திடல் வேண்டும். நன்று இது, தீது இது, நமதிது, பிறர் தந்ததிது, மரபு இது, மருள் இது என்பதனை ஆய்ந்தறிந்து கூறுவதற்கும் அவ்வழி நடந்து மக்கள் மாண்பினைப் பெற்றிடச் செய்வதற்கும், ஆற்றல் மிக்க அறிவுப்படை எழுந்தபடி இருந்திட வேண்டும். அதற்கான பயிற்சிக் கூடம் வேறெதுவாய் இருந்திட முடியும் ? இஃதே அப்பயிற்சிக் கூடம்! பல்கலைக்கழகம்! நாடு பல்வளமும் பெற்றிடும் நற்கலையைக் கற்றிட அமைந்துள்ள நக்கீரக் கோட்டம்" என்று இப்பல்கலைக் கழகத்தின் பெருமையைக் குறிப்பிடுகிறார்.

"சிறு வயலில் அறுத்த நெல்லைச் சேர்த்து வைத்துச் சிறுகச் சிறுக ஆக்கி யானைக்குப் படைத்தால் கூட அந்த நெல் பல நாள்களுக்குப் பயன்படும்; நூறு வேலி நிலமாயினும், அங்கு விளைந்த நெல்லை உண்டு களித்துவா என யானையைச் செலுத்தினால், அதன் வாயில் புகுவதை விடக் காலில் மிதிபட்டு நெல்லும் வீணாகும்; நிலமும் பாழாகும். அதுபோல அறிவார்ந்த அரசன் நாட்டு மக்களிடம் உரிய முறையில் வரி வசூல்



செய்தால் அதுபெருகி அந்நாட்டிற்குப் பயன்படும்; நெறியறியா மாந்தர் துணையோடு அரசன் வரி வசூல் செய்வானேல் அந்த நாடு யானை புகுந்த நிலம் போலக் கெடும்; அழியும்" என்று புலவர் பிசிராந்தையார் பாண்டியன் அறிவுடைநம்பிக்கு அறிவு கொளுத்திய திருநகர் இம்மாமதுரை.

"புகழ் வரும் எனில் உயிரையும் கொடுப்பர்; பழிவரும் எனில் உலகமே பரிசாய்க் கிடைப்பினும் அதனைப் பெற விரும்பாத –தன்னலம் நோக்காத – பொதுநலம் பேணும் சான்றோர் இருப்பதால்தான் இந்த உலகம் நிலைபெற்றுள்ளது" எனப் பொதுநலத் தொண்டாற்றுவதை வலியுறுத்திப் பாடிய கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி என்னும் அரசன் கோலோச்சிய திருநகரம் இந்த மாமதுரை.

'உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே
பிறப்பு ஓர் அன்ன உடன்வயிற் றுள்ளும்
சிறப்பின் பாலால் தாயும் மனம் திரியும்
ஒரு குடிப் பிறந்த பல்லோருள்ளும்
மூத்தோன் வருக என்னாது அவருள்
அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும்
வேற்றுமை தெரிந்த நாற்பால் உள்ளும்
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே'

என்று பாடிக் கல்வியின் சிறப்பை மட்டுமல்ல; அந்த நாளில் இந்த மண்ணில் நிலவிய சமூக நீதியையும் இந்த காசினிக்கு உணர்த்திய ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியப் பாண்டியன் ஆண்ட திருநகரம் இந்த மாமதுரை.

'மாடுகட்டிப் போரடித்தால் மாளாது செந்நெலென
ஆனைகட்டிப் போரடித்த அழகான தென்மதுரை'

என வளம் கொழித்துச் செழித்த திருநகரம் மாமதுரை.

"நெற்றிக்கண் திறப்பினும் குற்றம் குற்றமே"

என்ற நக்கீரனைப் போல்,

'தேரா மன்னா! என் கணவன் கள்வன் அல்லன்; ஆராயாமல் என் கணவனைக் கள்வன் எனக் கூறிக் கொன்ற நீயே கள்வன்' என்று கூறி, நீதி தவறிய நெடுஞ்செழியப் பாண்டியனைச் சிந்தை கலங்கச் செய்து, நீதியை நிலைக் கண்ணாடியாய் நிறுத்திக் காட்டிய சோழர் குல மடந்தை கண்ணகி வழக்காடி வென்ற மாநகர் இந்த மதுரை மாநகர்!

'ஆராயாமல் அவசரத்தில் அறிவிழந்து கோவலனைக் கொன்றேனே! யானோ அரசன் ? அல்ல! யானே கள்வன்!' எனத் தன் செய்கைக்குத் தானே நாணி, தலைகவிழ்ந்து பதைபதைத்துத் துடிதுடித்து உயிர் கொடுத்து நீதிகாத்தானே உத்தமன் பாண்டியன் நெடுஞ்செழியன்! அவன் ஆண்ட திருநகரம் இந்த மாமதுரை!

இத்தகைய பெருமைகளை எல்லாம் குவித்துள்ள மாமதுரை மண்ணில் அமைந்துள்ள, மதுரை – காமராசர் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெறும் என் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புகளை எல்லாம் இன்று நாவினிக்க, நெஞ்சினிக்க வாழ்த்துகிறேன்! நீவிர் வாழ்க பல்லாண்டு!

**1964–66** ஆம் ஆண்டு தேசிய கல்விக் குழுவினர், 'எவருக்கும் கட்டுப்படாமல், இழுப்பார் பக்கம் சாய்ந்து விடாமல், சிந்தித்து உண்மை அறிந்து அறிந்ததனை விளக்கமுடன் எடுத்துரைத்து, ஆளடிமையாகாமல் அச்சமற்று நிற்போரை அளிப்பதற்கே பல்கலைக்கழகம்' – என்றனர்.

"ஆய்ந்தறிதல் வேண்டும், அதற்கேற்ற அஞ்சாமை வேண்டும். இன்றேல், சிந்தனையைச் சிறையிலிட்டுக் கொடுமையைக் கோலோச்சச் செய்வதற்கு உடந்தையானோர் ஆகிவிடுவோம் என்றுரைக்கின்றார் – எச்சரித்திருக்கின்றார்" பெர்ட்ரண்ட் ரசல் எனும் பெருமகனார்.

எனவே, பல்கலைக்கழகப் பட்டம் பெற்றுள்ள நீவிர் – சிந்தனைச் செல்வராகி, அஞ்சாமை என்னும் உடையணிந்து, உண்மையைக் கவசமாக்கி, அறிவு எனும் ஆயுதம் ஏந்தி சாமானியர்களின் முன்னேற்றம் காண உழைத்திட வேண்டுகிறேன்.

நம்நாடு கல்வித் துறையில் வியத்தகு முன்னேற்றங்களைக் கண்டு வருகிறது. சமூகத்தில் செல்வமும், செல்வாக்கும் பெற்றிருந்த ஒரு சிலரின் – வசதியும் வளமையும் படைத்திருந்த உயர்குடி மக்கள் ஒரு சிலரின் – தனி உரிமையாகக் கல்வியிருந்த காலம் மாறி, இன்று சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள சாமான்யர்களும், தலைமுறை தலைமுறையாக அறிவாலயத்தில் நுழைய அருகதை அற்றவர்களாய் இருந்தவர்களும் கல்வி பயிலும் உரிமையும், வசதியும் பெற்று ஒளிவிளக்குகளாய் மின்னிடும் காட்சி காணுகிறோம். தகுதி, திறமை என்பவை எந்த ஒரு பிரிவினருக்கும் ஏகபோகமானவையல்ல; உரிய வாய்ப்பும் வசதியும் அளித்தால் உயர்வடையும் தகுதியுள்ள மாணவர்கள் சமூகத்தின் எல்லா மட்டங்களிலும் பரவலாகக் காணப்படுகின்றனர் எனும் உண்மை உணர்ந்து அவ்வழி செயல்படும் காலம் இது.

தந்தை பெரியார் அவர்கள் காண விரும்பிய சமத்துவச் சமுதாயம் மலர்ந்து வரும் காலம் இது என்பதையும் இவ்வேளையில் குறிப்பிட விரும்புகிறேன். அதேவேளையில், நீதிக்கட்சி காலத்தில் அரும்பி, இன்று

மலர்ந்து மணம் பரப்பிவரும் சமூகநீதிக் கொள்கைக்குக் குழிதோண்டிட கழுகுக் கூட்டம் காலம் நோக்கிக் காத்திருக்கும் கொடுமைகளையும் சுட்டிக்காட்டி இளைஞர் கூட்டம் விழிப்புடன் இருந்தாலன்றி எதிர்காலத் தலைமுறைகளுக்கு நாம் கேடிழைத்தவர் ஆவோம் என்பதையும் நினைவுபடுத்திட விரும்புகிறேன்.

'பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே'

என நன்னூல் இலக்கணம் நவில்வது போல, இன்று பழைய கொள்கைகளும் கோட்பாடுகளும் தங்கள் செல்வாக்கை இழந்து விட்டன. ஆனால் அவற்றின் இடத்தில் புதிய குறிக்கோள்களும், இலட்சியங்களும் இன்னும் நிலைநிறுத்தப்படவில்லை. இன்று சமூகத்தில் நமக்கு ஏற்பட்டுள்ள பல சோதனைகளையும் சாதனைகளாக மாற்றும் அறைகூவலை ஏற்று, முடைநாற்றம் வீசும் மூடப்பழக்கங்களை அறவே அகற்றி, காலத்தோடு ஒட்டிய நெறிமுறைகளை– வாழ்க்கைப் பண்புகளை வகுத்துக் கொள்ள வேண்டிய நிலையில் உள்ளோம். புதுமை வேகத்துடனும், புரட்சிக் கருத்துடனும், பொங்கிவரும் இலட்சியத்துடிப்புடனும் பொதுநல நோக்குடனும் நாட்டு முன்னேற்றத்திற்காக உழைப்பதில் பங்குகொள்ள வேண்டியவர்கள், இன்று பட்டம் பெறும் நீங்களும் உங்களைப் போன்ற இளைஞர் சமுதாயமும்தான் என்பதனை உணர்த்திட விரும்புகிறேன்.

வாலிபம் ஒரு வசந்தம்; மிக வசீகரமானதும் கூட! ஆனால் அதில் உள்ள ஒரு குறை என்னவென்றால், ஒவ்வொரு நாளும் – ஒவ்வொரு மணித்துளியும் – ஒவ்வொரு நொடியும் வாலிபத்தை வயோதிகம் வாகை சூடிக் கொண்டே இருக்கிறது. இளமை சிரஞ்சீவியாக இருக்க வேண்டுமெனில், அது உடலை விடுத்து உள்ளத்தை அடைக்கலம் புகுந்திட வேண்டும். 'வயதில் அறிவில் முதியோராய் வாய்மைப் போருக்கு என்றும் இளையோராய்' நீவிர் அனைவரும் உங்கள் சிந்தனையோட்டத்தின் திசையைத் திருப்பிட வேண்டும்.

"Tell me what are the prevailing sentiments that occupy the minds of your youngmen, and I will tell you what is to be the character of the next generation" –

– என்று எட்மண்ட் பர்க் என்னும் ஆங்கில அறிஞர் அழகாகச் சொன்னார்.

"இன்றைய இளைஞர்களின் மனங்களில் நிரம்பியுள்ள உணர்வுகள் என்னவென்று எனக்குத் தெரிவியுங்கள். அடுத்த தலைமுறையின் குணாம்சம் எப்படியிருக்கும் என்பதை நான் எடுத்துரைக்கிறேன்" என்று அவர் சொன்னதற்கேற்ப அடுத்த தலைமுறையை உருவாக்கிடும் இன்றைய இளைஞர்கள் நல்ல பண்புகளுக்கு நானிலம் போற்றிடும் எடுத்துக் காட்டுகளாய் இருந்திடல் வேண்டும் என விரும்புகிறேன்.

ஏட்டுக் கல்வி வளரும் தருவுக்கு வாகான உரமென்பேன். அதற்காக உரம் மட்டுமே மரம் என இயம்பிடல் தவறன்றோ! கொடி பற்றும் கிளையும் கொழுந்தும் பழுப்புமாக இலையும், காய்கனிக் குலையும் கொண்டு, களைத்தோருக்கு நிழலும் அளிப்பதன்றோ நன்மரமாகும்! கல்வியின் பயனும் அங்ஙனம் இருந்திடல் வேண்டும். பள்ளி முதல் பல்கலைக்கழகம் வரை பயின்றாலும், பிறர்க்கு நம்மைப் பயன்படுத்தும் கல்வி பெறாவிட்டால் நாட்டுக்கு ஏது நன்மை ? ஏட்டறிவு மட்டும் போதாது. உலகியல் அறிவையும் வளப்படுத்திக் கொள்ள வேண்டும். ஏட்டறிவுடன் இந்த உலகியல் அறிவையும் இணைத்துக்கொண்டு வாழ்வதுடன் சமுதாயத்திற்கும் ஒல்லும் வகையிலெல்லாம் உழைத்திட நீவிர் முன் வர வேண்டும்.

பல்கலைக்கழகப் பட்டம் எனும் தகுதியோடு பொதுவுலகுக்குத் தொண்டாற்ற வரும் உங்களை இருகரம் நீட்டி வரவேற்கிறேன். உங்கள் கல்விப் பயன் உலகுக்குச் சொந்தமாகட்டும். அதனால் சமுதாய வாழ்வு வசந்தமாகட்டும்.

"ஆள்வினையும் ஆன்ற அறிவும் எனவிரண்டின்
நீள்வினையால் நீளும் குடி"

"ஆழ்ந்த அறிவும், விடாமுயற்சியும் கொண்டு
ஒருவன் அயராது பாடுபட்டால் அவனைச்
சேர்ந்துள்ள குடிமக்களின் பெருமை உயரும்".

என அய்யன் திருவள்ளுவர் பாடிய திருக்குறளையும், அதன் அரும்பொருளையும் நினைவுபடுத்தி, தமிழகம், தமிழ் மக்கள், தமிழ்மொழி ஆகியவற்றின் பெருமைகள் உயர அயராது பாடுபட வேண்டுகிறேன்.

உங்கள் உழைப்பால் சாமானியன் உயர– சமத்துவ நெறி எங்கும் நிலை பெற தமிழகம் வளம்பெற வாழ்த்துகிறேன்;

அன்பின் வெளிச்சம் இருளைத் துடைக்கட்டும்! அறிவுப் புதுவெள்ளம் தடையை உடைக்கட்டும்! உங்கள் பேராற்றல் சரிதம் படைக்கட்டும்! உலகுக்கு உங்கள் திறமை கிடைக்கட்டும்!

– என உங்கள் அனைவரையும் மீண்டும் வாழ்த்திப் பாராட்டி இந்த அரிய வாய்ப்பினை எனக்கு வழங்கிய அனைவருக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன்.

வணக்கம்.



# அறிந்து கொள்வோம் அரசாணையை

**சுருக்கம்**

கூட்டுறவு – கூட்டுறவு வங்கிகளில் வழங்கப்படும் பண்ணைசாராக் கடன்களுக்கான (Non Farm Sector) வட்டி விகிதத்தை 18 சதவிகிதத்திலிருந்து 12 சதவிகிதமாகக் குறைத்து – ஆணை வெளியிடப்படுகிறது.

**கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (சிசி1)துறை**

அரசாணை (நிலை) எண். 327 நாள்: 27.12.2006

**படிக்க :**

1. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கடித எண். 103635/2004 மவகொ3 நாள். 25.7.2006.
2. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கடித எண் 103635/2004 மவகொ3 நாள். 2.9.2006.
3. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கடித எண் 103635/2004 மவகொ3 நாள். 26.10.2006 மற்றும் 24.11.2006

.......

**ஆணை:–**

2.8.2006 அன்று சட்டப்பேரவையில் "கூட்டுறவுத் துறை" குறித்த மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள், பல்வேறு அறிவிப்புகளுடன் கீழ்க்காணும் அறிவிப்பையும் வெளியிட்டார்கள்:–

"மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கூட்டுறவுச் சங்கங்களில் விவசாயிகள் பெற்ற விவசாயக் கடன் அனைத்தும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ள நிலையில், பண்ணைசாராக் கடன் பெற்றுள்ளவர்களின் கடன் சுமையைக் குறைக்கும் வண்ணம் மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் பண்ணைசாராக் கடன் பெற்று தற்போது நிலுவையிலுள்ள கடன்களுக்கான வட்டி விகிதம் 18 சதவிகிதத்திலிருந்து 12 சதவிகிதமாகக் குறைக்கப்படும். தவணை தவறிய கடன்தாரர்களுக்கு 31.12.2006க்குள் தவணை தவறிய தொகையை திருப்பிச் செலுத்தும் பட்சத்தில் மேற்கண்ட வட்டிக் குறைப்புடன், அபராத வட்டி 3 சதவிகிதம் முழுவதுமாக தள்ளுபடி செய்யப்படும்."

2. மேற்கண்ட அறிவிப்பின் அடிப்படையில், தமிழ்நாடு மாநிலத் தலைமை கூட்டுறவு வங்கி, மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி ஆகிய வங்கிகளில் பண்ணைசாராக் கடன் பெற்றவர்களின் சுமையைக் குறைக்கும் வகையில் வட்டி குறைப்பு மற்றும் அபராத வட்டி தள்ளுபடி ஆகிய சலுகைகளை அளிக்க கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளார்.

3. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கருத்துருவை அரசு கவனமாக ஆய்வு செய்து, கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது:–

(அ) அரசாணை வெளியிடப்படும் நாளில் தவணை தவறிய அனைத்து பண்ணைசாரக் கடன்களுக்கும் 31.3.2001 லிருந்து வட்டி விகிதம் 12 சதவிகிதமாகக் குறைத்து கணக்கிடப்பட்டு அபராத வட்டி தள்ளுபடி செய்யப்படும். இச்சலுகைத் தொகை கடன்தாரர் வங்கிக்கு செலுத்தவேண்டிய தவணை தவறிய நிலுவைத் தொகைக்கு மட்டுமே நேர் செய்யப்படும்.

(ஆ) மேற்படி வட்டி குறைப்புத் திட்டத்தில் பயன்பெற விரும்பும் கடன்தாரர்கள், தாங்கள் செலுத்த வேண்டிய தவணை தவறிய கடன் தொகையில் குறைந்தபட்சம் 25 சதவிகிதத்தை 31.3.2007க்குள் செலுத்தி வங்கியுடன் ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டு, எஞ்சிய 75 சதவிகித தவணை தவறிய கடன்பாக்கித் தொகையை 30.6.2007க்குள்ளும் முழுமையாகச் செலுத்தி கடன்களை நேர் செய்து கொள்ள வேண்டும்.

(இ) அரசாணை வெளியிடப்படும் நாளிலிருந்து, கூட்டுறவு வங்கிகளில் நிலுவையிலுள்ள மற்றும் புதிதாக வழங்கப்படும் பண்ணைசாராக் கடன்களுக்கான வட்டி விகிதம் 12 சதவிகிதமாகவும், அபராத வட்டி 1.5 சதவிகிதமாகவும் இருக்கும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

சு.மச்சேந்திரநாதன்
அரசுச் செயலாளர்



# வடசென்னையில் ரூ.217 கோடி மதிப்பீட்டில் வளர்ச்சிப் பணிகள்

**சென்னை** மாநகராட்சி சார்பில் 15.12.2006 அன்று இராயபுரத்தில் நடைபெற்ற மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவி வழங்கும் விழாவில் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கி விழாப் பேருரை ஆற்றுகையில், "இந்த விழாவில் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டத்தில் 503 பயனாளிகளுக்கு ரூ.75.45 இலட்சமும், பெண்குழந்தை பாதுகாப்புத் திட்டத்தில் 120 பயனாளிகளுக்கு ரூ. 36 இலட்சமும், கலப்புத் திருமண நிதியுதவித் திட்டத்தில் 22 பயனாளிகளுக்கு ரூ.4.40 இலட்சமும், அன்னை தெரசா ஆதரவற்ற பெண்கள் திருமண நிதியுதவித் திட்டத்தில் 2 பயனாளிகளுக்கு ரூ. 20 ஆயிரமும், ஈ.வெ.ரா. மணி

**மாண்புமிகு**
**ஊரக வளர்ச்சி**
**மற்றும்**
**உள்ளாட்சித்துறை**
**அமைச்சர்**
**திரு.மு.க. ஸ்டாலின்**
**அவர்கள்**
**அறிவிப்பு**



அம்மையார் நினைவு ஏழை விதவை மகள் திருமண நிதியுதவித் திட்டத்தில் ஒருவருக்கு ரூ. 10 ஆயிரம் என 648 பயனாளிகளுக்கு ரூபாய் ஒரு கோடியே 16 இலட்சத்து 15 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது.

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண நிதியுதவி வழங்கும் திட்டம் 1989ஆம் ஆண்டு முதல்வர் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்டது. ஏழை எளிய பெண்கள் துன்பத்திற்கு ஆளாகாமல், உரிய காலத்தில் திருமணம் முடிக்க இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் வழங்காத வகையில் உருவான திட்டம். 1989ஆம் ஆண்டு இந்தத் திட்டத்தின் மூலம் பயனாளிக்கு ரூ.5,000 வழங்கப்பட்டது.

1991ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்திற்குப் பின்னர் 1996ஆம் ஆண்டு வரை எவருக்கும் இந்தத் திட்டத்தின் கீழ் நிதியுதவி வழங்கப்படவில்லை. பின்பு 1996ஆம் ஆண்டு கலைஞர் அவர்கள் முதலமைச்சர் ஆனவுடன் இந்தத் திட்டத்தின் கீழ் பயனாளிக்கு ரூ.10 ஆயிரம் என உயர்த்தி வழங்கினார்.

அதன் பின்பு 2001ஆம் ஆண்டு முதல் 2006ஆம் ஆண்டு வரை இந்தத் திட்டத்தின் கீழ் எவருக்கும் நிதி வழங்கப்படவில்லை. தலைவர் கலைஞர் அவர்கள் மீண்டும் 2006ஆம் ஆண்டு முதலமைச்சர் ஆன பிறகு தேர்தல் அறிக்கையில் அறிவித்தப்படி ரூ. 15 ஆயிரம் என உயர்த்தி வழங்கினார்.

மேயர் அவர்களை வடசென்னை பகுதியில் வாரத்திற்கு 2 அல்லது 3 முறை பார்வையிட்டு மக்கள் பணி ஆற்ற வேண்டும் என அறிவுறுத்தினேன். வடசென்னையில் கூட்டுதிட்ட அபிவிருத்திப் பணிகளின் கீழ் உட்புறச் சாலைகள், பேருந்து வழிச்சாலைகள், நடைபாதை பணிகள், மழைநீர் வடிகால்கள், பாலங்கள், கட்டடங்கள், திடக்கழிவு மேலாண்மை, சுடுகாடுகளில் எரிவாயு எரியூட்டகம் அமைத்தல், தெருவிளக்குகள், பூங்கா மற்றும் விளையாட்டுத் திடல்கள் என 1,349 பணிகள் ரூ. 217.14 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப் படவுள்ளது. வில்லிவாக்கம் மற்றும் மணியக்கார சத்திர சாலை ஆகிய இரயில்வே சந்திப்புகளில் வாகன சுரங்கப்பாதைகள் அமைக்கப்படும். கத்திவாக்கம் காக்ரேன் பேசின் சாலை சந்திப்பில் மேம்பாலம், கொருக்குப்பேட்டை இரயில்வே சந்திப்பில் சுரங்கப்பாதை, இரங்கராஜபுரம் சந்திப்பில் மேம்பாலம் ஆகிய 5 பணிகள் நடப்பாண்டில் 40 கோடியே 6 இலட்சம் ரூபாய் திட்ட மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

நான் மேயராக இருந்தபோது 10 பாலங்களுக்கு அடிக்கல் நாட்டப்பட்டு 9 பாலங்கள் குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக முடிக்கப்பட்டு, திட்ட மதிப்பீட்டை காட்டிலும் 30 கோடி மிச்சப்பட்டது. பெரம்பூர் மேம்பாலம் மண் பரிசோதனையினால் சிறிது காலம் தேவைப்பட்டதால் பணியில் சிறு தடங்கல் ஏற்பட்டது. பின்னர் 2001 ஆட்சி மாற்றத்தில் பெரம்பூர் பாலப்பணி தொடராமல் கிடப்பில் போடப்பட்டது. அப்பொழுதே தொடங்கியிருந்தால் எட்டு, ஒன்பது மாதங்களில் பணி முடித்திருக்கலாம். மீண்டும் 2006ஆம் ஆண்டு கலைஞர் அவர்கள் முதலமைச்சராக பொறுப்பேற்றதும் இந்தப் பணி தொடங்கப்பட்டுள்ளது. தற்பொழுது கூடுதலாக ரூபாய் 8 கோடி செலவாகும். தென் சென்னைக்கு நிகராக வடசென்னையை மேம்படுத்தும் பணி தொடர்ந்து நடைபெறும். அதற்கு நான் உறுதுணையாக நிற்பேன்," என்றார்.

இந்நிகழ்ச்சிக்கு மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் டாக்டர் திருமதி பூங்கோதை ஆலடி அருணா அவர்கள் முன்னிலை வகித்தார். வணக்கத்திற்குரிய சென்னை மாநகராட்சி மேயர் திரு. மா. சுப்பிரமணியன் தலைமையுரையாற்றினார். மாமன்ற ஆளுங்கட்சித் தலைவர் திரு. ந. இராமலிங்கம், எதிர்க்கட்சித் தலைவர் திரு. சைதை பி. ரவி, நிலைக்குழுத் தலைவர் திரு. அ. மணிவேலன், மண்டல வார்டு குழுத் தலைவர் திரு. வி. சண்முகசுந்தரம், வார்டு உறுப்பினர் திரு. இரா. ஸ்ரீதர் ஆகியோர் வாழ்த்துரையாற்றினார். ஆணையாளர் திரு. ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., வரவேற்புரை ஆற்றினார். கூடுதல் ஆணையர் (சுகாதாரம்) டாக்டர் க. மணிவாசன் இ.ஆ.ப., நன்றி கூறினார். சமூகநலத்துறை இயக்குநர் திரு.தங்கவேலு, இ.ஆ.ப., நிலைக்குழுத் தலைவர்கள் திரு.சுரேஷ்குமார், திருமதி. மீனாட்சி வெங்கட்ராமன், கே. ஜானகி, இராதா சம்பந்தம், வார்டு குழுத் தலைவர்கள் திரு. மா. நெடுமாறன், திரு. ஜே. சீனிவாசன், திரு.கா. தனசேகரன், திரு.மா.பா. அன்புத்துரை முன்னாள் அமைச்சர் திருமதி சற்குண பாண்டியன் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

**எஸ். செல்வராஜ்,**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**சென்னை மாநகராட்சி.**

228653



# செம்மொழி தமிழுக்கென உரிய திட்ட வரைவுகளை தயார் செய்ய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் குழு அமைப்பு

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் 29.11.2006 அன்று புதுடெல்லியில் மாண்புமிகு மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. அர்ஜூன்சிங் அவர்களை சந்தித்து, செம்மொழி தமிழுக்கென தனியே ஒரு நிறுவனத்தை சென்னையில் உருவாக்கிட மத்திய அரசு முன் வர வேண்டுமென்று கேட்டுக்கொண்டதற்கிணங்க, 11ஆம் ஐந்தாண்டுத் திட்டக் கருத்துருக்களில் சென்னையில் செம்மொழி தமிழ் நிறுவனத்தை ஏற்படுத்திட தேவையான திட்டம் தயாரிக்கப்பட்டு இணைக்கப்படும் என்று மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. அர்ஜூன்சிங் அவர்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களுக்கு கடிதம் அனுப்பினார்.

செம்மொழி தமிழுக்கென சென்னையில் அமையவுள்ள மத்திய அரசின் நிறுவனத்திற்கான உரிய திட்ட வரைவுகளைத் தயார் செய்து மத்திய அரசுக்கு அனுப்பிடவும்; தொடர்ந்து சென்னையில் அமையவுள்ள மத்திய அரசு நிறுவனத்தை நிருவாகம் செய்திடவும், பின்வரும் இரண்டு குழுக்களை அமைக்கலாம் என்ற பரிந்துரை தமிழக அரசினால் மத்திய அரசின் மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அந்த இரண்டு குழுக்களின் விவரம் வருமாறு :–

**தலைவர் :**

முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி

**துணைத் தலைவர்கள் :**

1. முனைவர் வி.ஐ. சுப்பிரமணியன்
2. முனைவர் வா. செ. குழந்தைசாமி

**ஐம்பெருங் குழு :**

1. முனைவர் அவ்வை து. நடராஜன், 2. மணவை திரு. முஸ்தபா, 3. கவிஞர் திரு. வைரமுத்து, 4. முனைவர் பி.பி. ராஜராஜேஸ்வரி, 5. கவிஞர் திருமதி. கனிமொழி

**எண்பேராயம் :** 1. முனைவர் மா. நன்னன், 2. கவிக்கோ திரு. அப்துல் ரகுமான், 3. முனைவர் சிலம்பொலி செல்லப்பன், 4. கவிஞர் திரு. வாலி, 5. கவிஞர் திரு. கா. வேழவேந்தன், 6. பேராசிரியர் சாலமன் பாப்பையா, 7. திரு. டி. ரவிக்குமார், எம்.எல்.ஏ., 8. பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன்

தமிழக அரசின் இந்தப் பரிந்துரையை மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் ஏற்றுக்கொண்டு அதற்கான ஆணையினை 13.12.2006 அன்று பிறப்பித்துள்ளார். ★





# பிப்ரவரி 15 முதல் இரண்டாவது கட்டமாக இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் விநியோகம்

இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குவது குறித்து அமைக்கப்பட்ட சட்டமன்றக் கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய குழுவின் ஏழாவது கூட்டம் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் தலைமையில் 27.12.2006 அன்று மாலை 5.00 மணியளவில் தலைமைச் செயலகத்தில் கூடியது. இதில் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின், சட்டமன்றக் கட்சிகளின் தலைவர்கள் திரு.டி. சுதர்சனம் (காங்கிரஸ்), திரு. கோ. க. மணி (பா.ம.க.) திரு. சி. கோவிந்தசாமி, (இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்), திரு. வை.சிவ புண்ணியம், (இந்திய கம்யூனிஸ்ட் கட்சி), திரு. எச். அப்துல் பாசித், (இந்திய யூனியன் முஸ்லிம் லீக் சட்டமன்ற உறுப்பினர்), மற்றும் தலைமைச் செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் வருமாறு:–

### இலவச வண்ணத் தொலைகாட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டம் குறித்த குழு கூட்டத்தின் முடிவுகள்

- குழுவின் ஆறாவது கூட்டத்தில் ஏர்விஷன் இண்டியா பிரைவேட் லிமிடெட் நிறுவனம் உற்பத்தித் திறனை மூன்று மாதக் காலத்திற்குள் அதிகரிக்கும் பட்சத்தில் கூடுதலாக மூன்று இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளுக்கான கொள்முதல் உத்தரவை வழங்க முடிவெடுத்ததையொட்டி, தொழில்நுட்பக் குழுவின் ஆய்வறிக்கையின் அடிப்படையில் இந்த நிறுவனத்திடமிருந்து மேலும் கூடுதலாக மூன்று இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளைக் கொள்முதல் செய்ய முடிவெடுக்கப்பட்டது.
- இரண்டாவது கட்டமாக கொள்முதல் செய்யப்படும் 25 இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை 234 சட்டப்பேரவை தொகுதிகளுக்கும் தொகுதி ஒன்றுக்கு பத்தாயிரம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வீதம் வழங்குவதென முடிவெடுக்கப்பட்டது.
- தமிழக அரசின் ஊரக வளர்ச்சித்துறை மேற்கொண்ட ஆய்வின் அடிப்படையில் அனைத்துக் குடியிருப்புகளிலும் மின்சாரம் மற்றும் கேபிள் வசதி பெற்ற 6,813 கிராமப் பஞ்சாயத்துக்களிலும் மேற்கூறிய வசதிபடைத்த நகர்புறப் பகுதிகளிலும் முதற்கட்டமாக வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை வழங்குவதென முடிவெடுக்கப்பட்டது. மீதமுள்ள கிராமப் பஞ்சாயத்துகளில் இந்த வசதிகள் இல்லாத குடியிருப்புகளில் மின்சாரம் மற்றும் கேபிள் டிவி வசதி கிடைக்கப்பெற்றவுடன், அடுத்தடுத்த கட்டங்களில் வழங்கப்படும்.
- இந்த ஊராட்சிகளிலும், நகர்ப்புறப் பகுதிகளிலும் உள்ள மக்கள்தொகை எண்ணிக்கையை ஏறுமுகமாக வரிசைப்படுத்தி குறைந்த எண்ணிக்கையுள்ள ஊராட்சிகள்/வார்டுகளை முதலில் தேர்தெடுத்து வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்படலாம் என்று முடிவெடுக்கப்பட்டது. தொடர்ந்து அதே வரிசைப்படி வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்படலாம்.
- வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளைப் பெறுவோர், வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி இல்லாத ரேஷன் கார்டு வைத்துள்ள குடும்பத் தலைவர்/குடும்பத் தலைவியாக இருக்க வேண்டும். இவர்களை ஏற்கெனவே அரசினால் ஆங்காங்கு அமைக்கப்பட்டுள்ள ஊராட்சி/ வார்டு குழு தேர்ந்தெடுக்கும். அந்தக் குழுவின் முடிவே இறுதியானது.
- 2007 ஜனவரி 15ஆம் தேதிக்குள் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்படவுள்ள ஊராட்சிகள்/வார்டுகள் இறுதி செய்யப்படும். ஜனவரி 31ஆம் தேதிக்குள் அந்தப் பகுதிகளிலே பயனாளிகளின் பட்டியல் குழுவினால் இறுதி செய்யப்படும். வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் பிப்ரவரி 15 முதல் விநியோகிக்கப்படும். ★

# வரலாற்று நாயகன் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ்



**1897**–ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 23–ஆம் நாள் கல்கத்தாவில் ஜானகிநாத் – பிரபாவதி தம்பதிகளுக்கு 9ஆவது குழந்தையாகப் பிறந்தவர் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ். நாட்டின் விடுதலைக்காகவே தன்னை அர்ப்பணித்துக் கொள்ள தீர்மானித்த சுபாஷ், தான் கற்ற ஐ.சி.எஸ் பட்டத்தை துச்சமெனக் கருதித் தூக்கி எறிந்தார்.

தேசபந்து சி. ஆர். தாஸை தன்னுடைய குருவாக ஏற்றுக் கொண்டவர் சுபாஷ். அவர் கல்கத்தாவில் தொடங்கிய தேசியக் கல்லூரியின் தலைமைப் பேராசிரியராக சுபாஷ் நியமிக்கப்பட்டார். வங்க மாகாண காங்கிரஸ் கமிட்டி பிரச்சாரக் குழுத் தலைவராகவும், தொண்டர் படைத் தலைவராகவும் சுபாஷ் பணியாற்றியுள்ளார். இளவரசர் வேல்ஸ் இந்தியா வந்தபோது காங்கிரஸ் கட்சி வேலை நிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்தது. அதை ஏற்று போராட்டத்தில் ஈடுபட்ட சுபாஷ் 1921 ஆம் ஆண்டு டிசம்பர் 10 ஆம் நாள் கைது செய்யப்பட்டார்.

சி.ஆர்.தாஸ் கல்கத்தா நகர்மன்றத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது, அவர் சுபாஷை ஆணையாளராக நியமித்தார். தான் நடத்திய "பங்களா சுதா" மற்றும் 'பார்வர்டு' ஆகிய இரண்டு பத்திரிகைகளின் நிருவாகப் பொறுப்பை சுபாஷிடம் ஒப்படைத்தார். கல்கத்தா நகரைத் திறம்பட நிருவாகித்த சுபாஷ், ஆரம்பப் பள்ளிகளில் இலவசக் கல்வி, இலவச பசும்பால், இலவச மருத்துவம் ஆகியவற்றை வழங்கினார். ஆனால் வங்காளத்தின் பயங்கர சதிகாரர்களுக்கு சுபாஷ் தான் தலைவர் என்று குற்றம்சாட்டி அரசு அவரைக் கைது செய்தது. இதனை நாடே கண்டித்தது.

வங்காள மாநில சட்டமன்றத்திற்கு சிறையில் இருந்தபடியே போட்டியிட்டு வெற்றி பெற்றார். சிறையில் அவருக்குக் காசநோய் ஏற்பட்டதால் அவரை ஆங்கிலேய அரசு நிபந்தனையின்றி விடுதலை செய்தது.

காங்கிரஸ் கட்சியின் தலைவர் பதவிக்கு 1939 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் சுபாஷ் போட்டியிட்டார். தேர்தலில் சுபாஷ் மாபெரும் வெற்றி பெற்றார். ஆனால் காந்திக்கும் நேதாஜிக்கும் இருந்த கருத்து வேறுபாடுகள் நீங்கவில்லை. வேறுவழியின்றி சுபாஷ் தன் தலைவர் பதவியை ராஜினாமா செய்தார்.

பின்னர், பார்வர்டு பிளாக் என்ற கட்சியைத் தொடங்கினார். அடுத்து வந்த இடைத்தேர்தலில் டெல்லியில் போட்டியிட்டு வெற்றி பெற்று டெல்லி சட்டமன்ற உறுப்பினரானார்.

ரஷ்யா வருமாறு அவருக்கு வந்த அழைப்பை ஏற்று, 40 நாட்கள் தாடி மீசை வளர்த்துக் கொண்டு ஜியாவுதின் என்ற பெயரில் முஸ்லீம் வேடம் பூண்டு 1941 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 15ஆம் நாள்



கல்கத்தாவை விட்டு வெளியேறினார். இரயில் மூலம் பெஷாவர் சென்றடைந்தார். அங்கிருந்து ஒரு பத்தான் வேடமணிந்து ரெஹ்மத்கான் என்பவரின் உதவியுடன் ஆப்கானிஸ்தான் பயணம் ஆனார். மார்ச் 18ஆம் நாள் காரண்டைன் என்ற பெயரில் மாஸ்கோ சென்று அங்கிருந்து பெர்லின் சென்றார்.

அங்கு இட்லரைச் சந்தித்தார். சுபாஷ் சந்திரபோஸின் ஆளுமையால் கவரப்பட்ட இட்லர், அவருக்கு 'பியூரார்' என்ற பட்டத்தையும் 'எக்ஸலென்ஸி' என்ற விருதினையும் வழங்கி கௌரவித்தார். இந்தியாவின் விடுதலைக்கு தாம் துணைபுரிவதாக இட்லர் அவரிடம் உறுதியளித்தார். அங்கு சுபாஷ், இட்லரின் தளபதிகளிடமிருந்து நவீனப் போர் ஆயுதங்கள், போர் முறைகள், போர் தந்திரங்கள் ஆகியவைகளைக் கற்றுக்கொண்டார். இரண்டாம் உலகப்போரில், இங்கிலாந்து படையில் சேர்ந்து போரிட்ட 4,000 இந்திய வீரர்களை இட்லர் கைது செய்திருந்தார். அவர்களை தன்னிடம் ஒப்படைக்குமாறு சுபாஷ் இட்லரைக் கேட்டுக்கொண்டார். சுபாஷ் வேண்டுகோளை ஏற்று இட்லர் அந்த கைதிகளை சுபாஷிடம் ஒப்படைத்தார். அவர்களைக் கொண்டு சுபாஷ் இந்திய தேசிய ராணுவத்தை (INA) ஆரம்பித்தார். (இக்கால கட்டத்தில் ஜெர்மனியில் இருந்துக் கொண்டு உலகெங்கும் இந்திய விடுதலைக்கு ஆதரவு திரட்டி வந்த செண்பகராமனை, சுபாஷ் தன்னுடைய குருவாக ஏற்றுக்கொண்டார். (செண்பகராமன்தான் முதன் முதலில் 'ஜெய்ஹிந்த்' முழக்கத்தை வழங்கியவர்).

1943 – ஆம் ஆண்டு பிப்ரவரி 8–ஆம் நாள் ஜெர்மனியை விட்டுப் புறப்பட்ட சுபாஷ் சந்திரபோஸ் 1943 ஜூன் 13–ஆம் நாள் டோக்கியோ சென்றடைந்தார். ஜப்பான் பிரதமர், இங்கிலாந்தைத் தோற்கடித்ததும், இந்தியாவிற்குச் சுதந்திரம் தருவதாக ஜப்பான் பாராளுமன்றத்தில் அறிவித்தார். சிங்கப்பூருக்கு சுபாஷ் சந்திரபோஸ் வந்தவுடன் ராஷ் பிகாரி போஸ் அவரிடம் அனைத்துப் பொறுப்புகளையும் ஒப்படைத்தார். 5,000 இந்தியர்கள் முன்னிலையில் இந்திய தேசிய இராணுவத்தின் (INA) தலைமைப் பொறுப்பை சுபாஷ் ஏற்றுக்கொண்டார். அப்போதுதான் இவருக்கு நேதாஜி (சுப்ரீம் லீடர்) என்ற பட்டம் வழங்கப்பட்டது. அடுத்த நாள் இந்திய தேசிய இராணுவத்தைப் பார்வையிட்ட சுபாஷ், "டெல்லி சலோ" (டெல்லியை நோக்கிச் செல்) என்ற முழக்கத்தைக் கொடுத்தார். ஜூலை 6ஆம் நாள் இந்திய தேசியப்படையின் அணிவகுப்பைப் பார்வையிட வருமாறு சுபாஷ் விடுத்த அழைப்பை ஏற்று ஜப்பான் பிரதமர் தோஜோ வருகை தந்து அணிவகுப்பைப் பார்வையிட்டார்.

இந்திய தேசிய இராணுவம் நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. காந்தி அணி, நேரு அணி, ஆசாத் அணி, தாஸ் அணி என நான்கணிகளாகப் பிரிக்கப்பட்டன. பெண்களுக்கென தனி அணி (ஜான்சி ராணி)



*சென்னை கடற்கரையில்*
*மாண்புமிகு தமிழக முதலமைச்சர்*
**கலைஞர் மு. கருணாநிதி** *அவர்களால்*
*15.12.1997 அன்று திறந்துவைக்கப்பட்ட நேதாஜி சிலை.*

அமைக்கப்பட்டு அதற்கு தமிழ்நாட்டைச் சேர்ந்த டாக்டர் லட்சுமி சுவாமிநாதன் தலைவராக நியமிக்கப்பட்டார்.

## ஆசாத் இந்த் சர்க்கார்

1943ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 21ஆம் நாள் நேதாஜி, இந்திய சுதந்திர அரசாங்கத்தை (ஆசாத் இந்த் சர்க்கார்) அமைத்து, இந்த் சர்க்காரின் பிரதமரானார். 1943 நவம்பர் 6 –ஆம் நாள் அந்தமான் நிக்கோபார் தீவுகளை, நேதாஜியின் ஆசாத் இந்த் அரசாங்கத்திடம் ஒப்படைப்பதாக ஜப்பானிய பிரதமர் தோ ஜோ அறிவித்தார். இவ்வாறாக சுதந்திர இந்தியாவின் முதல் நிலப்பகுதியை நேதாஜி வென்றார்.

நேதாஜியும் இந்திய அரசு அதிகாரிகளுடன் அந்தமான் தீவுக்குச் சென்று 1943 ஆம் ஆண்டு டிசம்பர்

திங்கள் 31ஆம் நாள் இந்தியாவின் மூவர்ணக் கொடியை ஏற்றிவைத்தார். தாகூர் இயற்றிய தேசிய கீதத்தைப் பாடி தேசியக் கொடிக்கு வீரவணக்கம் செலுத்தினார். ரங்கூன் நண்பர் ஒருவர் வழங்கிய ரூபாய் 50 இலட்சத்தை மூலதனமாகக் கொண்டு சுபாஷ், ஆசாத் இந்த் வங்கியைத் தொடங்கினார்.

**இங்கிலாந்துப் படைகளை வென்ற ஐ.என்.ஏ.**

1944–ஆம் ஆண்டு பிப்ரவரி 4–ஆம் நாள் சுபாஷ் பிரிகேட்டின் முதல் படைவரிசை, ரங்கூனை விட்டுப் புறப்பட்டு காலான் ஆற்றங்கரையில் உள்ள கயுக்டவ் என்ற இடத்தை அடைந்தது. இங்கு இங்கிலாந்து இராணுவத்தை சேர்ந்த புகழ்பெற்ற நீக்ரோ வீரர்களைத் தோற்கடித்தனர். அதையடுத்து பலேட்வா, டேல்ட்மியிலிருந்து 40 மைல் தூரத்திலிருந்த இந்திய எல்லையைக் கண்டனர். அங்கு மௌடக் என்னுமிடத்தில் இருந்து இங்கிலாந்துப் படைகளை இரவோடு இரவாக (மே 1944) விரட்டியடித்தனர். ஆங்கிலேயர்கள் ஏராளமாகக் குவித்திருந்த ஆயுதங்களையும், உணவுப் பொருட்களையும் அப்படியே போட்டுவிட்டுத் தலைதெறிக்க ஓடிவிட்டனர்.

வெற்றிக்களிப்பில் இந்திய தேசிய இராணுவம் இந்தியாவிற்குள் காலெடுத்து வைத்தது. படைவீரர்கள் மண்ணில் நெடுஞ்சாண் கிடையாக விழுந்து தாய்நாட்டு மண்ணை முத்தமிட்டு மகிழ்ந்தனர். இந்திய தேசியத் கொடியை ஏற்றி வைத்து ஆசாத் இந்த் சர்க்காரின் தேசிய கீதத்தை உணர்ச்சி மயமாகப் பாடினார்.

இந்திய தேசிய இராணுவ வீரர்களின் உடல், பொருள், உயிர்த்தியாகம் வீண் போகவில்லை. விடுதலைப் போராட்டத்தில் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் என்ற மாவீரனுக்கு என்றுமே உயர்ந்த மரியாதை உண்டு. நேதாஜி சுபாஷ் சந்திரபோஸைக் குறிப்பிடாமல் யாரும் இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றை எழுதிவிட முடியாது என்பது உண்மை. இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் மகாத்மா காந்திக்கு அடுத்த நிலையில் வைத்து போற்றிப் புகழத்தக்கவர் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் ஆவார்.

**ந. இளங்கோ,**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்**

* * *

## அரசு மனைகளில் பத்தாண்டுகளுக்கு மேல் குடியிருப்போருக்கு இடம் சொந்தம்

*அரசுக்குத் தேவைப்படாத புறம்போக்கு நிலங்களில் வீடுகளைக் கட்டிக் குடியிருந்து வருபவர்களுக்கு வீட்டுமனை ஒப்படை செய்வது பற்றிப் பரிசீலித்துப் பரிந்துரை செய்ய 5.2.2000 அன்று ஒரு குழு அமைக்கப்பட்டு, அக்குழு வழங்கிய பரிந்துரைகளின், அடிப்படையில், நீர்வழிப் புறம்போக்கு நிலங்கள், மேய்ச்சல், மந்தைவெளி, மயானம், பாட்டை என வகைப்பாடு செய்யப்பட்ட அரசு நிலங்கள் தற்போது அத்தகைய உபயோகத்தில் இல்லாமல் நத்தமாக இருந்து அதில் 10 ஆண்டுகளுக்கு மேலாக வீடுகளைக் கட்டிக் குடியிருப்பவர்களுக்கு அந்த நிலங்கள் அரசின் உபயோகத்திற்குத் தேவையில்லையெனில், அத்தகைய குடியிருப்புகளைப் பட்டா வழங்கி முறைப்படுத்தலாமென 27.3.2000 அன்று அப்போதிருந்த திமுக அரசினால் ஆணையிடப்பட்டது. அந்தச் சிறப்புத் திட்டத்தின் கீழ் அப்போது 31.3.2001 வரை 1 இலட்சத்து 95 ஆயிரத்து 957 வீடுகளுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் அளிக்கப்பட்டன.*

*தற்போது அதேபோல, 10 ஆண்டுகளுக்கும் மேலாக வீடுகளைக் கட்டிக் குடியிருந்து வருபவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கக்கோரி சட்டமன்ற உறுப்பினர்கள் மூலமாகவும், சட்டமன்றப் பேரவை வினாக்கள் மூலமாகவும், தனியார்களிடமிருந்தும் அதிக அளவில் கோரிக்கைகள் வருவதைக் கவனத்தில் கொண்டு; சட்டப்பேரவையில் அண்மையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செய்த அறிவிப்பினையொட்டி, 10 ஆண்டுகளுக்கு மேலாக வீடுகள் கட்டிக் குடியிருந்து வருபவர்களின் ஆக்கிரமணங்கள் குறித்து விரிவாக ஆய்வு செய்து, அரசுக்கு அந்த இடங்கள் தேவையில்லையெனில் அவற்றை வரன்முறைப்படுத்தி, அவர்களுக்கு 2007 ஜனவரித் திங்கள் முதல் 6 மாத காலங்களுக்குள் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் அறிவித்துள்ளார்.* ●





# செம்மொழி

**முனைவர் மணவை முஸ்தபா**

தமிழ் 'செம்மொழி' என எண்பிப்பதற்கான மொழியியற் கோட்பாடுகளையன்னியில், சில சிறப்பம்சங்கள் இந்திய மொழிகளிலேயே 'தமிழுக்கு' மட்டுமே உள்ளன என்பதை இந்த நேரத்தில் நாம் நினைவிற் கொள்ள வேண்டும்.

**பன்னாட்டு மொழி – தமிழ்**

இந்திய மொழிகளிலேயே 'பன்னாட்டு மொழி' என்ற தகுதிப்பாடு தமிழுக்கு மட்டுமே கிடைத்துள்ள மிகப்பெரும் பெருமையாகும். இந்தி உட்பட மற்றைய மொழிகளெல்லாம் இந்திய மொழிகள் எனும் மகுடத்தைத் தாங்கும் அதே வேளையில், தமிழ் மொழி மட்டுமே இந்தியப் பன்னாட்டு மொழி (Indian International language) எனும் சிறப்புத் தகுதிப்பாட்டினைப் பெற்றுள்ளதென்பது இங்கு கவனித்தற்குரிய ஒன்றாகும்.

**செம்மொழி – தகுதிப்பாடுகள்**

ஒரு மொழி சிறந்த மொழியாகவும் உயர்ந்த மொழியாகவும் இருக்கலாம். அதிகமான எண்ணிக்கையினரால் பேசவும் எழுதவும் பயன்படுத்தப்பட்டு வரலாம். அது ஒரு சிறப்புமிகு மொழியாகக் கருதப்படுமேயன்றி 'செம்மொழி'யாகக் கருதப்படாது.

செம்மொழியாக உலகினரால் அங்கீகரிக்கப் பட வேண்டுமெனில் அதற்கு மொழியியல் அடிப்படையில் பதினொரு (11) தகுதிப்பாடுகள் இருக்க வேண்டுமென மொழியியலாளர்கள் வரையறை செய்துள்ளனர். இத்தகைய பதினொரு தகுதிப்பாடுகளும் உள்ள மொழிகள் மட்டுமே செம்மொழிகளாக அங்கீகரிக்கத்தக்க தகுதிப்பாடுடைய மொழிகளாகும். உலகிலுள்ள செம்மொழிகளில் தமிழ் ஒன்று மட்டுமே இத்தகுதிப்பாடுகள் அனைத்தும் கொண்ட ஒரே மொழி என்பது நமக்கே தெரியாத மாபெரும் மொழியியல் உண்மையாகும்.

**செம்மொழிக்குரிய 11 தகுதிப்பாடுகள்**

செம்மொழித் தகுதிக்கு மொழியியலார் வகுத்துத் தந்துள்ள பதினொரு தகுதிப் பாடுகளாவன :

1. தொன்மை (Antiquity) 2. தனித்தன்மை (Individuality) 3. பொதுமைப் பண்பு (Common character) 4. நடுவு நிலைமை (Neutrality),5. தாய்மைத் தன்மை (Parental Kinship), 6. பண்பாடு, கலை, பட்டறிவு வெளிப்பாடு,

7. பிறமொழித் தாக்கமிலா தனித்தன்மை 8. இலக்கிய வளம் (Literary prowess), 9. உயர் சிந்தனை (Noble Ideas and ideals), 10. கலை, இலக்கியத் தனித்தன்மை வெளிப்பாடு – பங்களிப்பு, 11. மொழிக் கோட்பாடுகள் (Linguistic Principles)

மேற்கண்ட பதினொரு தகுதிப்பாடுகளையுடைய மொழியே செம்மொழியாக ஏற்கப்படும் என்பது மொழியியலார் வகுத்தமைத்துள்ள அளவு கோளுக்கு ஓரளவு உட்பட்டு வருவனவாகவே லத்தீன், ஹீப்ரு, கிரீக் முதலான மேலை நாட்டுச் செம்மொழிகளும் சம்ஸ்கிருதம், பாரசீகம், அரபி போன்ற ஆசிய மொழிகளும் அமைந்துள்ளன. இப்போது செம்மொழியாக வழக்கில் இருந்துவரும் மொழிகளில் அனைத்துத் தகுதிப்பாடுகளும் ஒருங்கே அமையப் பெற்ற செம்மொழியாக எதுவுமே இல்லை என்பதுதான் உண்மை.

இனி, இத்தகுதிப்பாடுகள் என்ன என்பதை ஆராய்வோம் :

**தொன்மை (Antiquity)**

கடல் பிளவுகள் (Rift) ஏற்படும் முன் ஒரே நிலப்பகுதியாக இணைந்திருந்த குமரிக்கண்டப் பகுதியில்தான் தமிழர்கள் வாழ்ந்திருந்தார்கள். அவர்கள் தமிழைப் பேசுவதோடு, தமிழை வளர்த்து வளப்படுத்த இரண்டு தமிழ்ச் சங்கங்களையும் அப்பகுதியில் உருவாக்கி தமிழை வளர்த்தார்கள் என்பது *'இறையனார் களவியலுரை'* போன்ற நூற்கள் தரும் தகவலாகும். இப்பகுதியில் தமிழ் பேசும் நாற்பத்தொன்பது நாடுகள் இருந்ததாகவும், இங்கு இருவேறு காலக்கட்டங்களில் முதல் தமிழ்ச் சங்கமும் இரண்டாம் (இடைச்சங்கம்) தமிழ்ச் சங்கமும் இருந்ததாகவும் கருதப்படுகிறது. கடற் பிளவு ஏற்பட்டபோது, நிலப் பகுதிகள் பல்வேறு திசைகளை நோக்கி நகர, மூலத் தமிழ்ப் பகுதி குறுகலாயிற்று. அத்துடன் மலைகளும் ஆறுகளும், சமநிலப் பெருவெளிகளும் காலப் போக்கில் திடீர் திடீரென கடலுள் மூழ்க தமிழர்கள் எஞ்சிய இந்திய நிலப்பகுதியில் மட்டும் வாழ்வாராயினர். இந்நிகழ்வைப் பதிவு செய்ய விழைந்த சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோவடிகள்,

"பஃறுளியாற்றுடன் பன்மலை அடுக்கத்துக்
குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள"

என வருந்திப் பாடுவாராயினார்.

**தொன்மை இலக்கணம்**
**'தொல்காப்பியம்'**

தமிழ் இலக்கண நூல்களில் மிகத் தொன்மையான இலக்கண நூலாக அமைந்திருப்பது தொல்காப்பியர் எழுதிய தொல்காப்பிய இலக்கண நூலாகும். இஃது சுமார் 2,600 ஆண்டுகட்கு முன்பு இயற்றப்பட்டிருக்கலாம் என இலக்கண வரலாற்றாசிரியர்கள் கணித்துக் கூறியுள்ளனர். இவ்வளவு பழமையுடை இலக்கண நூல் வேறு எந்த இந்திய மொழிகளில் சம்ஸ்கிருதம் உட்பட இருப்பதாகத் தெரியவில்லை. உலக மொழிகளிலாவது இருக்கிறதா என்பது ஆய்வுக்குரிய ஒன்றாகும்.

உலக மொழி இலக்கண நூல்களில் காணக் கிடைக்காத ஒரு தனிப்பெரும் சிறப்பு 'தொல்காப்பிய' இலக்கண நூலில் காணக்கிடக்கிறது. அதுதான் மொழிக்கு இலக்கணம் வகுத்ததோடமையாது, மனித வாழ்வுக்கும் இலக்கணம் வகுத்த நூலாக விளங்குவது அதன் தனிச் சிறப்பாகும்.

**தனித்தன்மை (INDIVIDUALITY)**

பழமையைப் போலவே மொழி, இலக்கிய, இலக்கணத் தனித்தன்மைகளும் செம்மொழிக் குரிய தனிப்பெரும் அம்சமாகக் கருதப்படுகிறது.

உலக மொழிகளில் எந்தவொரு மொழியும் இயல், இசை, நாடகமென முப்பெரும் பகுப்பாகக் பகுக்கப்பட்டு, பின் அவை அனைத்தும் ஒன்றிணைக்கப்பட்டு ஒரே மொழியாக அமைந்திருப்பதாக கூற முடியவில்லை. ஒரே மொழியாயமைந்து, அதுவே, இயலுக்கும் இசைக்கும் நாடகத்துக்கும் பயன்படும் மொழியாக அமைந்து இருக்கலாமே தவிர, முப்பெரும் பிரிவுகளாகப் பிரிந்து, அவை ஒன்றி, மொழி என்ற நிலையில் எந்தவொரு மொழியும் அமைந்திருக்க வில்லை என்றே கூறலாம்.



அந்த வகையில் தமிழ்மொழி மட்டுமே உலகில் இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என முத்தமிழாக வளர்ந்து, வளம் பெற்று வந்துள்ளது. இதனைச் செந்தமிழ்க் காப்பியமான சிலப்பதிகாரப் பதிகம்,

"இயலிசை நாடகப் பொருட்தொடர் நிலைச் செய்யுள்"

என்று கூறி உறுதிப்படுத்துகிறது.

**பழமைக்குப் பழமை – புதுமைக்குப் புதுமை**

இரண்டாயிரம் ஆண்டுகட்கு மேற்பட்ட வரலாற்றையுடைய ஒரு மொழி, இன்றும் வலுவோடும் வனப்போடும் பழமைக்குப் பழமையாய், புதுமைக்குப் புதுமையாய் விளங்குகிறதென்றால் அதில் முதல்நிலை பெறும் மொழி தமிழாக, தமிழ் இலக்கியமாகத்தான் இருக்கமுடியும் என்பது மொழியியல் வரலாற்று அறிஞர்களின் ஒருமித்த கருத்தாகும்.

**அனைவரும் ஏற்கும் பொதுமைப்பண்பு**
**(COMMON CHARACTER)**

சங்கத் தமிழ் இலக்கியங்களின் தனித் தன்மைகளில் ஒன்று, தனி மனித வாழ்வியல் பிரச்சினைகளைக்கூட, சமுதாயக் கண்ணோட்டத்தில் அலசி ஆராய்வதாகும். இதனால், இலக்கிய நிகழ்வுகளின் சாயல் தத்தமது வாழ்வில் பிரதிபலிப்பதாகக் கருதும் ஒவ்வொரு தமிழனும் அவ்விலக்கியப் படைப்புத் தன்னைச் சார்ந்ததாகவே எண்ணி மகிழ்கிறான். இதனால் ஒரு குறிப்பிட்ட சாரார் அல்லது பகுதியினர் என்ற பேச்சுக்கே இடமில்லாமற் போகிறது. அனைத்துத் தரப்பினரும் தங்களைச் சார்ந்த இலக்கியப் படைப்பாக அமைவதன் மூலம் 'அனைவரும் ஏற்கும் பொதுமைப் பண்பு'டைய படைப்புகளாக உலகு முன் காட்சியளிக்கின்றன.

இதற்கு ஏற்றதொரு எடுத்துக்காட்டாக திருவள்ளுவர் படைத்தளித்த திருக்குறள் அறநூலைக் கூறலாம்.

திருக்குறளுக்கு 'உலகப் பொதுமறை' என்ற மற்றொரு பெயரும் உண்டு. நாடு, மொழி, இனம், சமயம் அனைத்தும் கடந்த நிலையில் மனித குல நலன்களை மட்டும் கருத்திற் கொண்டு படைக்கப்பட்ட நீதிக்களஞ்சியம் திருக்குறள். வள்ளுவரின் பொதுமைப் பண்பை போற்ற முனைந்த தமிழ்ப் புலவர் ஒருவர்.

"சமயக் கணக்கர் மதிவழி கூறாது
உலகியல் கூறி பொருளிதுவென்ற"

குறள் எனப் போற்றியிருப்பது தமிழ்ப் படைப்பான வள்ளுவத்தின் பொதுமைப் பண்பைப் போற்றுவதாய் உள்ளது.

அனைத்து வேறுபாட்டுணர்வுக்கு அப்பாற்பட்ட நிலையில் திருக்குறளை இன்றைக்கு 'உலகின் எழுத்தோவியம்' என்ற அளவில் அணுகுகின்றனர். ஆல்பர்ட் ஸ்வைட்சர், ஏரியல் போன்ற மேனாட்டறிஞர்கள் திருக்குறளை 'உலக மக்களின் ஒரே மறை நூல்' என்று கூறி வியக்கிறார்கள் என்றால் அதற்கு அடிப்படைக் காரணம், அனைத்து வேறுபாட்டுணர்வுகட்கும் அப்பாற்பட்ட நிலையில் மனிதகுலத்தை மட்டும் மனதிற் கொண்டு நடு நிலைமையில் நெறி வகுத்துச் சொல்வதுதான்.

**தாய்மைத் தன்மை**
**(PARENTAL KINSHIP)**

'ஒரு மொழி செம்மொழியாக இருக்க வேண்டுமென்றால் அது பல மொழிகளின் உருவாக்கத்துக்குத் தாயாக இருந்திருக்க வேண்டும்' என்பது மற்றொரு அடிப்படை அம்சமாகும்.

வடபுலத்தின் மலைவாழ் மக்களால் பேசப்படும் பிராகுயி மொழி முதல் இந்தியாவின் தென்கோடி கேரளம் வரை சுமார் 42 மொழிகளுக்கு இன்றும் தாயாகத் திகழும் சிறப்புமிகு தகுதி தமிழுக்கு உண்டு என்பது கால்டுவெல் போன்ற மொழியியல் வல்லுநர்களின் ஆய்வு முடிவாகும்.

தமிழுக்கும் பிறமொழிகளுக்கும் உள்ள உறவை, குறிப்பாக தமிழுக்கும் இந்திய மொழிகளுக்கும் அதிலும் குறிப்பாக தமிழுக்கும் திராவிட

மொழிகளுக்குமுள்ள தொடர்பை மொழியியல் அடிப்படையில் நீண்ட காலம் ஆய்வு செய்த கால்டுவெல் பெருமகனார், தன் ஆய்வுகளை *‘திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்’* (Comparative study of Dravidian Languages) எனும் பெயரில் அரிய மொழியியல் ஆய்வு நூலொன்றை எழுதியுள்ளார். அதில் இந்திய மொழிகளில் குறிப்பாக கன்னடம், தெலுங்கு, மலையாள மொழிகளோடு தமிழுக்குள்ள உறவுகளையும் இம்மூன்று மொழிகளுக்கும் தமிழ் எவ்வாறு தாயாக அமைந்துள்ளது என்பதையும் அசைக்க முடியாத ஆதாரங்களோடு நிறுவிக்காட்டி உள்ளார்.

உலகின் புகழ் பெற்ற மொழியியல் ஆய்வாளராகவும் அறிவியல் அடிப்படையிலான மொழியியல் துறையின் தந்தையாகவும் போற்றப்படும் டாக்டர் எமினோ அவர்கள் ‘உலக மொழிகளிலே எல்லா மொழிகளுக்கும் தாயாக விளங்கும் பெருமை தமிழ் மொழிக்கு மட்டுமே உரிய தனிப்பெரும் சிறப்பாகும்’ எனக் கூறியிருப்பது தமிழின் தாய்மைத் தன்மைக்குக் கிடைத்த மிகப்பெரும் சிறப்பாகும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

**பண்பாடு, கலை பட்டறிவு வெளிப்பாடு**

தான் எழுதப்பட்ட காலம் எதுவோ, அக்காலத்தின் போக்கை முழுமையாக உணர்த்தும் இலக்கியமே தலைசிறந்த இலக்கியமாகத் திறனாய்வாளர்களால் அங்கீகரிக்கப்படும். அவ்வாறே, தன் காலத்தைத் திறம்பட கதைக் கருவின் மூலமோ பாத்திரங்கள் வாயிலாகவோ முழுமையாகச் சித்தரிக்கும் ஆசிரியனே ‘தலைசிறந்த எழுத்தாளர்’ எனும் தகுதிப்பாட்டினைப் பெறவியலும்.

வாழ்க்கை நிகழ்வுகளிலிருந்து உருவாக்கப்படும் இலக்கியமே வாழக் கற்றுத்தரும் ஆசானாகவும் அமைய வேண்டும்.

**காலக் கண்ணாடி**

இந்தக் கருதுகோள்களின் அடிப்படையில் ஆராயும்போது சங்க இலக்கியம், சமுதாய வாழ்வின் திறந்த புத்தகம் என்றே கூறலாம். சங்கப் படைப்புகளில் கவைக்குதவாத கற்பனைகள் ஏதுமில்லாமலும் வாழ்க்கைப் போக்குகளை பகட்டில்லாமலும், உள்ளது, உள்ளவாறே சித்தரிக்கும் காலக்கண்ணாடிகளாக விளங்குகின்றன எனலாம். சுருங்கச் சொன்னால் சங்கப் படைப்புகளில் வெளிப்படுத்தப்படும் அக, புற வாழ்வு நிகழ்வுகள் அனைத்துமே முழுக்க முழுக்க பட்டறிவின் வெளிப்பாடுகளாகவே விளங்குவதை அறிந்திடலாம்.

**பிறமொழித் தாக்கமிலா தனித்தன்மை**

ஒரு மொழி செம்மொழியாவதற்கான தகுதிப் பாடுகளில் ஏழாவதாகக் குறிப்பிடப்படும் அம்சம் ‘பிறமொழித் தாக்கமிலா தனித்தன்மை’ யாகும்.

சமுதாயக் கட்டமைப்பில் ஒரு மொழிபேசும் மக்கள் மற்ற மொழிபேசும் மக்களோடு கலந்து உறவாடுவது தவிர்க்கவியலா ஒன்றாகும். இதனால் மனித உறவு மட்டுமன்றி மொழி உறவுகளும் ஏற்படுவது இயற்கையே. இந்த மொழி உறவு வெவ்வேறு மொழிபேசும் மக்களின் இணைப்பையும் பிணைப்பையும் பொறுத்து அமைவதாகும்.

இவ்வாறு உருவாகும் மொழிக்கலப்பு சில சமயம் சில மொழிகளுக்கு ஆக்கமாகவும் மற்றும் சில மொழிகளுக்குப் பாதகமாகவும் அமைய நேரிடும். ஏனெனில், சில மொழிகளில் சொற்பெருக்கம் குறைவாக இருக்கும். புது மொழிச் சொற்கள் அக் குறையை நிறைவு செய்யும் வகையில் வந்தமைவதால் அந்த மொழிக்கு அது பயனாயமைகிறது. அதே சமயம் நன்கு வளர்ந்து சொற்பெருக்கத்தோடு வளமாக இயங்கி வரும் மொழியில் புதிய மொழிச் சொற்கள் வந்து கலக்கும்போது, அம்மொழியிலுள்ள பல பழைய, பொருள் பொதிந்த சொற்களின் பயன்பாடு குறைய அச்சொற்கள் இறப்பைத் துணைக் கொண்டு வழக்கிழந்து செத்து மறைகின்றன. இதனால் இருக்கும் சொல் வளத்தை இழந்து நிற்க நேர்கிறது. இவ்வாறு ஏற்படும் மொழிக் கலப்புகள் இயல்பாக ஏற்படுவதும் உண்டு. சில சமயம் வேண்டுமென்றே திட்டமிட்டு சமயப் போர்வை, ஆட்சிப் போர்வை



போன்றவைகளின் துணையோடு வாழைப்பழத்தில் ஊசியை ஏற்றுவதுபோல் சொற்களைக் கலந்து கலப்பட மொழியாக்கி, தனித்தியங்க இயலாவண்ணம் ஆக்கப்படுவதும் உண்டு. உலக மொழிகளின் வரலாற்றில் இத்தகைய நிகழ்வுகள் ஏராளம் உண்டு.

அத்தகு நிலையிலும் கூட, பிற மொழிச் சொற்களின் ஒட்டும் உறவும் இல்லாது, தனக்கென்று உள்ள மூலச் சொற்களைக் கொண்டே தனித்துத் திறம்பட இயங்கவல்ல அம்சம் செம்மொழிக்குரிய தகுதிப்பாடுகளில் ஒன்றாகும். இவ்வகையில் வேறு எந்த மொழிச் சொல்லின் உதவி இம்மியும் தேவைப்படா நிலையில் எத்தகைய உணர்வையும் கருத்தையும் பிசிறில்லாமல் வெளிப்படுத்தும் ஆற்றல் தமிழுக்கு உண்டு என்பதை டாக்டர் எமினோ, கிரியர்ஸன், கால்டுவெல், பாவாணர் போன்ற மொழியியல் வல்லுநர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

நாளும் விரைந்து வளர்ந்து வரும் அறிவியல் துறையின் வளர்ச்சிக்கு ஈடுகொடுக்கும் வகையில் தமிழில் பெரும் எண்ணிக்கையில் கலைச் சொற்களை உருவாக்க இயலுமா எனப் பலரும் எண்ணுகின்றனர். இதற்கு மொழியியல் துறையின் தந்தையாகப் போற்றப்படும் டாக்டர் எமினோ அவர்கள், ‘உலகத்து மொழிகளிலேயே மிக அதிகமான வேர்ச் சொற்களையுடைய மொழியாகத் தமிழ் திகழ்கிறது’ எனக் கூறியுள்ளதே தக்க பதிலாகும்.

**இலக்கிய வளம் (LITERARY PROWESS)**

உலகத்து மொழிகளில் எந்த மொழியில் மிக அதிகமான இலக்கியப் படைப்புகள் உருவாக்கப்பட்டு உள்ளதோ, அந்த மொழி ‘செம்மொழி’ யாகக் கருதப்படுவதற்கு, அதுவொரு அடிப்படைத் தகுதியாகக் கருதப்படும். இந்த அளவுகோலின் அடிப்படையில் பார்க்கும்போது, ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் உலக மொழிகளில் எதுவெல்லாம் அதிக அளவில் இலக்கிய வளமிகு படைப்புகளைப் பெற்றுள்ளதென்பதைக் கணக்கிட்டறியலாம். இதற்கு லத்தீன், கிரீக், ஹீப்ரு போன்ற மொழிகள் உச்சச் செழிப்போடு இருந்த காலக்கட்டத்தையே கணக்கில் எடுத்துக்கொள்ளலாம். அந்தக் கால கட்டம் தமிழைப் பொருத்தவரை சங்க காலமாகவும் சமஸ்கிருதத்தைப் பொருத்தவரை வேதகாலமாகவும் அமைந்துள்ளதைக் காணலாம்.

சங்க கால இலக்கியப் படைப்புகளின் செழுமையை மிகச்சிறப்பாகப் பிறமொழி இலக்கியங்களோடு ஒப்பீட்டடிப்படையில் ஆய்ந்தவர்கள் செக்நாட்டு மொழியியல் அறிஞரும் ஆழ்ந்த தமிழ்ப் புலமையாளருமான கமில் சுவலபில் என்பவராவார். இவர் சங்க இலக்கியங்களை சிறப்பாக ஆய்ந்து, அவை **26,350** வரிகளில் அமைந்திருப்பதாகக் கணக்கிட்டுள்ளார். இதே காலக்கட்டத்தில் லத்தீன், ஹீப்ரு, கிரேக்க மொழிகளிலோ அல்லது சீன, சமஸ்கிருத மொழிகளிலோ இந்த அளவு எண்ணிக்கையில் இலக்கியப் படைப்புகள் இயற்றப்படவில்லை என்பது அவர்தம் ஆய்வு முடிவாகும்.

எண்ணிக்கையில் மட்டுமல்ல, இலக்கியத் தரத்திலும் மிக உயர்ந்த நிலையை சங்க இலக்கியங்கள் பெறுவதாகக் கூறுகிறார். அதோடு, ஒட்டு மொத்த மனிதகுல மேன்மையை மையமாகக் கொண்டு எழுந்த இலக்கியப் படைப்புகள் அவை என்பது அவர் கருத்து. அக்காலகட்டத்தில் உருவாக்கப்பட்ட இலக்கியப் படைப்புகள் பலவும் அரச குலச் சார்புடைய மேன்மக்களைப் பற்றிப் பேசும்போது, சங்க இலக்கியங்கள் சாதாரண குடிமக்களின் சமுதாய வாழ்க்கை பற்றி அலசி ஆராயும் வகைகளில் இலக்கியப் படைப்புகள் உருவான விந்தையைப் போற்றி மகிழ்கிறார். இன்னும் சொல்லப் போனால் சாதாரண குடிமகன், குடிமகளான கோவலன் – கண்ணகி வாழ்வைச் சித்தரிக்கும் உலகின் முதல் குடிமக்கள் காப்பியமாக சிலப்பதிகாரம் அமைந்த அதேசமயம், அதே குடும்பத் தொடர்புடைய இலக்கியப் படைப்பாக, மாதவியின் மகள் மணிமேகலையைக் காப்பியத் தலைவியாகக் கொண்டு உருவாகி நிலை பெற்ற மணிமேகலைக் காப்பியத்தின் தனித்தன்மை, தனித்துவ மிக்கதாகும். ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தில் ஒரே குடும்பத் தொடர்புடைய இரட்டைக் காப்பியங்கள் உலக மொழிகளிலேயே தமிழில் மட்டுமே உருவாக்கப்

பட்டுள்ளன என்பது உலக இலக்கியப் படைப்புலக வரலாற்றில் காணும் சிறப்புமிகு செய்தியாகும்.

**உயர் சிந்தனை**
**(NOBLE IDEAS AND IDEALS)**

ஒரு மொழி 'செம்மொழி' எனும் தகுதிப் பாட்டினைப் பெறவேண்டுமெனில் அவை பெற்றிருக்க வேண்டிய சிறப்பம்சங்களில் ஒன்று 'உயர் சிந்தனை' வளத்தையுடைய மொழியாக அமைந்திருத்தல் அவசியமாகும். அவ்வுயர் சிந்தனை தனி மனிதனை மட்டுமல்லாது ஒட்டுமொத்த மனித சமுதாயத்தையே வழி நடத்துவதாக இருத்தல் வேண்டும். இக்கோட்பாட்டின் அடிப்படையில் தமிழர் சிந்தனைகளை ஆயும்போது, அதில் இடம்பெற்றுள்ள உயர் சிந்தனைகள், கருத்துணர்வுகள் கடந்த கால மக்களின் நல்வாழ்வுக்கு மட்டுமல்ல, நிகழ்கால மக்களுக்கும் ஏன் – எதிர்கால மக்களுக்கும் என்றென்றுமாகப் பின்பற்றியொழுகி, வாழ்வில் வழி காட்டும் ஒளி விளக்குகளாக அவ்வுயர் சிந்தனைகள் அமைந்துள்ளன. அவற்றுள் முடிமணியாய்த் திகழ்வன 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்ற கோட்பாடும், 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற வாழ்வியல் நெறியுமாகும்.

உயர்சிந்தனையின் முத்தாய்ப்பான இவ்விரு வாழ்வியல் கோட்பாடுகள் சங்ககாலத் தமிழனின் உயிர் மூச்சுக் கொள்கைகளாகும். உலகெங்கும் வாழும் அத்தனை மக்களையும் தன் உறவினர்களாகப் பாவித்து மகிழ்ந்த தமிழன் அவர்கள் வாழும் ஊர்களையெல்லாம் தன் ஊர்களாகவே பாவிக்கும் விரிமனம் கொண்ட உயர் சிந்தனையாளர்களாக வாழ்ந்தனர் என்பதையே இம்முழக்கம் வெளிப்படுத்துகிறது.

**கலை, இலக்கியத் தனித்தன்மை**
**வெளிப்பாடு – பங்களிப்பு**

தமிழ் 'செம்மொழி' என்பதற்கான தகுதிப் பாடுகளில் குறிப்பிடத்தக்க ஒன்று 'கலை இலக்கியத் தனித்தன்மை வெளிப்பாடு – பங்களிப்பு' என்பதாகும். இதற்கு எத்தனையோ எடுத்துக்காட்டுகள் தமிழ் இலக்கியங்களில் உண்டென்றாலும் ஒன்றை மட்டும் இங்குச் சுட்டிக்காட்டலாம்.

உலகப் பெருமொழிகளில் எத்தனையோ இலக்கியங்கள் உள்ளன. அவை புதினம், சிறுகதை, நாடகம், திறனாய்வு எனப் பல்வேறு வகையினவாகவும் உள்ளன. தமிழிலும் அவ்வாறே பலவகை இலக்கிய வடிவங்கள் உள்ளன.

ஆனால், மொழிகளில் பலவகைகள் இருப்பதாகத் தெரியவில்லை. அதிகமாகப் போனால் ஒவ்வொரு மொழியையும் எழுத்து வழக்குமொழி, பேச்சு வழக்குமொழி என இருவகையினவாகப் பிரிப்பர். இஃது எல்லா மொழிகளுக்கும் உண்டான அடிப்படைப் பொதுத் தன்மையாகும்.

ஆனால், உலகில் வேறு எந்த மொழியிலும் இல்லாத ஒரு தனித்தன்மை தமிழுக்கு மட்டுமே வாய்க்கப்பெற்றதாக உள்ளது. அதுதான் 'முத்தமிழ்' என்ற தனிப்பெரும் சிறப்பு.

உலகிலுள்ள மொழிகள் அனைத்தையும் ஒரு மொழி என்ற அளவில் மட்டுமே அணுகுகின்றனர்; ஆய்கின்றனர். ஒரு மொழியின் இலக்கிய வடிவங்களைப் பல்வேறு வகையினவாகக் காண்பது உலகியல் நடைமுறை. ஆனால் தமிழ் மொழியை மட்டும் இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத் தமிழ் என மூவகையாகக் காணும் போக்கு, தமிழ் மொழிக்கு மட்டுமே உரிய தனித்தன்மையாகும்.

சாதாரணமாக, தமிழ்மொழியில் பேசும்போது வல்லின, மெல்லின, இடையினச் சொற்களைக் கலந்து, உணர்வோட்டமாகப் பேசும்போது, இம் மூவின சொல்லோசை கலந்து வரும் பேச்சில் ஒரு இசைத் தன்மை இயல்பாக மேலோங்கி நிற்கும். கேட்பவர்களை இசைபோல் ஈர்க்கும் தன்மை தமிழ்ப் பேச்சுக்கு உண்டு என்பதை நாமெல்லாம் மிக நன்றாக உணர்ந்திருக்கிறோம். அதே போன்று, தமிழில் பேசும்போது சொல்ல வந்த கருத்தையும் உணர்வையும் முழுமையாக வெளிப்படுத்த விழைகிறோம். அப்போது, பேச்சொலிக்கேற்ப கை, கால்களை அசைத்து, முகபாவங்களோடு சொல்ல



விழையும் கருத்துக்கும் உணர்வுக்குமேற்ப, மெய்ப்பாடு தோன்ற வெளிப்படுத்துகிறோம். இவ்வாறு நாடகத்தில் நடிப்பது போன்ற நிலையில் இருந்து கொண்டு பேசுகிறோம். இதனாலேயே தமிழ் நாடகப் பாங்குடையதாகக் கருதப்படுகிறது. அதனாலேயே தமிழ், நாடகத் தமிழாகவும் போற்றப்படுகிறது.

இவைகளையன்னியில் தமிழ் இயற்றமிழ் வகையாகவும் கணிக்கப்படுகிறது. இயற்றப்படும் இலக்கியங்கள் அனைத்துமே இயற்றமிழாக அழைக்கப்படினும், இசைத்தமிழ் சார்ந்த படைப்புகள் இசைத் தமிழ் சார்ந்த வகையினவாகவும் நாடகத்துறை சார்ந்த படைப்புகள் நாடகத்தமிழ் சார்ந்த வகையினவாகவும் கருதப்படுகின்றன. இப்படி முத்துறைகளும் ஒரே இலக்கியப்படைப்பில் இணைந்த நிலையில் உருவாக்கப்பட்ட காப்பியமே தமிழில் முதன் முதலாக உருவாக்கப்பட்ட சிலப்பதிகாரம். இதனைச் சிலப்பதிகாரப் பாயிரத்திலேயே ஆசிரியர் இளங்கோவடிகள்,

"இயலிசை நாடகப் பொருட்தொடர்
நிலைச் செய்யுள்"

எனக் கூறியிருப்பதிலிருந்தே மூன்று தமிழும் ஒன்றிணைந்த நிலையில் உருவாக்கப்பட்ட முழுமுதற் காப்பியம் சிலப்பதிகாரம். எனவே அது 'முத்தமிழ்க் காப்பியம்' எனச் சிறப்பித்து அழைக்கப்படுகிறது.

**மொழிக்கோட்பாடுகள்**
**(LINGUISTIC PRINCIPLES)**

செம்மொழிக்குரிய மிக முக்கியத் தகுதிப்பாடுகளில் ஒன்றாக அமைந்திருப்பது மொழிக் கோட்பாடுகள் பற்றிய இலக்கண வரம்புகளோடு கூடிய கொள்கை வரையறை களாகும்.

சாதாரணமாக 'மொழிநூல்' (Philology) அடிப்படையில் மொழியியல் கோட்பாடுகளை வகுக்கும் முறையே பல்வேறு மொழியியல் அறிஞர்களுக்கிடையே இருந்து வந்தது. இதற்கான விதிமுறைகள் உலக மொழிகளில் அவ்வம் மொழிக்கென அவரவர் அளவில் வகுத்துச் செயல்படுத்தி வந்த மொழிக் கோட்பாடுகளாகும்.

இந்த அளவுகோலைக் கொண்டே பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை மொழி ஆராய்ச்சிகள் நடைபெற்று வந்தன. திராவிட ஒப்பிலக்கண ஆய்வு நூல் எழுதிய கால்டுவெல் போன்றவர்கள் இந்த அடிப்படையில் மொழியாய்வு செய்தவர்களேயாவர்.

ஆனால், இருபதாம் நூற்றாண்டில் அறிவியல் வீச்சுக்கேற்ப அதன் அடிப்படையில் மொழியியல் கொள்கை கோட்பாடுகளை வகுக்கும் மனப்போக்கு மொழி ஆய்வாளர்களிடையே ஏற்பட்டது. அதற்கிணங்க மொழி நூலில் வேண்டிய மாற்ற திருத்தங்களை ஏற்படுத்தி, நீக்குவன நீக்கி, ஏற்பன ஏற்று புதிய மொழியியல் கோட்பாடுகள் இன்று உருவாக்கப்பட்டுள்ளன. இதை இன்றைக்கு 'மொழியியல்' (Linguistics) என அழைக்கின்றனர்.

இதன் அடிப்படையிலேயே மொழியியல் வல்லுநராகவும் 'மொழியியல் தந்தை' எனப் போற்றப்படும் டாக்டர் எமினோ அவர்கள் தொல்காப்பிய இலக்கண நூலை ஆய்வு செய்து வியந்துபோனார். காரணம், இன்று மொழியியல் கோட்பாடுகளாக வகுக்கப்பட்டுள்ள பல கோட்பாட்டுக் கொள்கைகளுக்கு விளக்கமாக தொல்காப்பியம் அமைந்திருப்பதுதான்.

அதிலும் குறிப்பாக, 'தொல்காப்பிய எழுத்ததி காரத்தில் சொல் பிறப்பியலில் எழுத்துக்கள் எப்படி பிறக்கின்றன. எழுத்துக்களின் உச்சரிப்பு ஒலிகள் துல்லியமாகவும் பொருளுள்ளதாகவும் அமைய அவ்வெழுத்தை எவ்வகையில் உச்சரிக்க வேண்டுமெனத் தொல்காப்பியர் வகுத்துக் கூறியுள்ள வழிமுறைகள் முழுக்க முழுக்க அறிவியல் பூர்வமாக அமைந்துள்ளது' என போற்றிப் பாராட்டி மகிழ்கிறார் டாக்டர் எமினோ அவர்கள். இந்த வகையிலும் சிறந்த மொழிக் கோட்பாடுகளை வகுத்து மொழித்திறம் பேணிவரும் மொழி தமிழ் என்பது நிலை பெறுகிறது.

இதுவும் தமிழ் 'செம்மொழி' என்பதற்கு எல்லா வகையிலும் அசைக்க முடியாத ஆதாரமாக அமைந்துள்ளதெனலாம்.

– ("செம்மொழி – உள்ளும் புறமும்"
என்ற நூலிலிருந்து)

* * *




# கவின்மிகு தமிழகக் கலைகள்

தமிழர்களின் வாழ்வோடு இணைந்தது இசையும் கலையும். கலைகள் தமிழர்களால் போற்றி வளர்க்கப் பட்டன. அப்படிப்பட்ட தமிழ்நாட்டின் கலைகள் பற்றிய சில குறிப்புகள்:

**நாதசுரம்**

சீர்மிகுந்த விழாக்களைச் செந்தமிழ் மக்கள் நாதசுர இசையோடுதான் நடத்துவார்கள். மகிழ்ச்சியான நிகழ்ச்சிகளை இந்த மங்கள இசையுடன் தொடங்குவது நம் முன்னோரின் நடைமுறை.

‘நெடுங்குழல்’ என்றும் பெருவங்கியம் என்றும் போற்றப்படும் நாதசுரம் அமுத இசை வளர்க்கும் துளைக் கருவி. நாதசுரம் நீண்ட குழலுடன் சீவாளி இணைத்து வாசிக்கும்போது இசைவெள்ளம் பூம்புனல் வெள்ளமாகப் பொங்கிப் பெருகும். நாயன இசைக் கலையில் தமிழ்ப் பெருமக்கள் பேராற்றல் மிக்கவர்களாக விளங்கி வருகிறார்கள்.



**பரத நாட்டியம்**

தமிழகத்துக்கே உரிய தன்னிகரற்ற இந்த ஆடற்கலை, தமிழகத்தின் எல்லைகளைத் தாண்டியும் பல்வேறு வடிவங்களை எடுத்து விளக்குகிறது.



கால்கள் ஜதிபோட, கை விரல்கள் பொருள் குறிக்க, கண்கள் உணர்ச்சிகளைக் கொப்பளிக்க, முகம் பலவிதமான மெய்ப்பாடுகளைப் புலப்படுத்தும் இந்த ஆடற்கலை, அழகுக் கலைகளில் அரிய கலையாகும். சிலப்பதிகாரத்தில் பரதத்தைப் பற்றிய சீரிய குறிப்புகள் சிறப்பாகக் காணப்படுகின்றன.

**கோலாட்டம்**

கருத்துகள் சிலவற்றை இசை வடிவில் அமைத்து ஆண், பெண் இருபாலரும் கையில் ஒன்று அல்லது ஒன்றரை அடி அளவுள்ள குச்சிகளை வைத்துக்கொண்டு, பாடல்களின் சந்தத்திற்கு ஏற்றபடி குச்சிகளால் தாளம் தட்டுவது போல் ஆடிப்பாடுவது கோலாட்டம். இந்த ஆட்டம் உடலுக்கு நல்ல வலுவையும், உள்ளத்திற்குத் தெம்பையும் நல்குவது.

கோலாட்டம் சில மாறுதல்களுடன் பிற மாநிலங்களிலும் திகழ்ந்தாலும் தமிழகத்துக் கோலாட்டம் தனிச் சிறப்புடையது.

**கும்மி**

கருத்துகளை இசையுடன் கூடிய பாடலாக அமைத்து, பெண்கள் கைகளைக் கொட்டிக்கொண்டு பாடிப்

பரவிடுவது கும்மி. இது பெரும்பாலும் பெண்கள் மட்டுமே ஆடும் ஆடலாகும்.



உடலுக்கும், உள்ளத்துக்கும் நல்ல பயிற்சி நல்குவது; கருத்துக்களை கவின்மிகு இசைக்கூட்டி, கேட்போர் நெஞ்சை ஈர்த்திட வைக்கும் திறனுடையது.

பக்தி, ஞானம் போன்றவற்றின் அடிப்படையில் அமையும் கும்மிப் பாடல்களும் உண்டு. கும்மி, மக்கள் மனம் கவரும் மகத்தான நாட்டுப்புறக் கலையாகும்.

**நாட்டுப்புறப் பாடல்கள்**

கிராமப் பகுதிகளில் சிந்தனை வளமும், கற்பனை நயமும் கொண்டு ஒருவர், தாம் சொல்லவரும் கருத்துக்களைச் சுவையாகவும், நெஞ்சில் பதியும் வண்ணமும் எளிய பாடல்களாக அமைத்து, தம் சொந்த இசையில் பாடும் பாடல்களே நாட்டுப்புறப் பாடல்களாகும். இதில் கடந்த கால நிகழ்ச்சிகளைப் பற்றிய குறிப்புகளும், விவரங்களும் இருக்கும். நிகழ்காலத்து நிலைமை விளக்கங்களும் இருக்கும். எதிர்காலத்தில் எய்திட வேண்டிய இலக்கும், எழுச்சி நிறை கருத்துகளும்



இருக்கும். நாட்டுப்புறப் பாடல்களில் வாழ்க்கை நெறிகள் பலவும் வளமாக விரவிக் கிடக்கும்.

ஏட்டில் எழுதாத கவிதைகள் இந்த நாட்டுப்புறப் பாடல்கள், பெரும்பாலும் இவற்றைப் பாடிய பெருமக்களின் பெயர் தெரியாது.

காடுமேடுகளில் வேலை செய்யும் ஏழை எளிய மக்களின் உள்ளத்து உணர்வுகளின் அற்புதமான வெளிப்பாடே நாட்டுப்புறப் பாடல்கள்.

**ஒயிலாட்டம்**

தமிழகத்தின் தென் மாவட்டங்களில் இந்தக் கிராமியக் கலை சிறப்புற்று விளங்குகிறது. கிராமங்களில் நடைபெறும் திருவிழாக்களில் இந்தக் கிராமிய நிகழ்ச்சி இடம் பெறும். தற்போது கோவில் திருவிழா தவிர, பொது நிகழ்ச்சிகளிலும் இடம்பெறக்கூடிய முக்கியக் கிராமிய நிகழ்ச்சியாக இது உள்ளது. ஒரு குழுவில் சுமார் 25 பேர் இடம் பெறுவர். நையாண்டி மேளம் என்று அழைக்கப்படும் வாத்தியக் கருவிகளின் இசைக்கு ஏற்ப இவர்களின் நடனம் இருக்கும். கரங்களில் துணியைப் பிடித்து உயர்த்தி



ஒய்யாரமாகத் தாளத்தின் வேகத்திற்கு ஏற்ப இவர்கள் ஆடுவது பார்க்க ரம்மியமாக இருக்கும்.

**சேவையாட்டம்**

தர்மபுரி மாவட்டத்திற்கு உரிய தனிக்கலை சேவையாட்டம் ஆகும். ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரத்தில் ஆய்ச்சியர் குரவைப் பகுதியில் சேவையாட்டத்தைப் பற்றிய சிறப்பான செய்தி உள்ளது. மாதரி என்ற பெண் தீக்காயமுற்று துன்பத்தால் தவிக்கும்போது, இடையர்கள் அப்பெண்ணின் துன்பத்தைப் போக்க, கடவுளை வணங்கிக் கையில் கோலோடு ஆடிய ஆட்டமே இந்தச் சேவையாட்டம்.

அருந்தமிழ் வளர்த்திட்ட ஔவைக்கு நெல்லிக்கனி அளித்த வள்ளல் அதியமான் ஆண்ட அன்றைய தகடூர்ப்



பகுதியாகிய இன்றைய தர்மபுரி மாவட்டத்தில் மட்டுமே இந்த ஆட்டம் ஆடப்பட்டு வருகிறது.

இந்த ஆட்டத்தில் பயன்படுத்தப்படும் கோல், தீப்பந்து முதலான கருவிகள் புனிதக் கருவிகளாகக் கருதப்பட்டுக் கோவிலில் வைத்துப் பாதுகாக்கப்படுகிறது.

**கள்ளழகர் ஆட்டம்**

தமிழ்நாட்டில் கோவில் நகரம் என்று அழைக்கப்படும் மதுரை மாநகரில் ஒவ்வோர் ஆண்டும் சித்திரைத் திருவிழாவில் கிராம மக்களே வேடம்பூண்டு இந்த ஆட்டத்தை ஆடுவார்கள்.

'கள்ளழகர்' தனது தங்கை அருள்மிகு மீனாட்சியின் திருமண நிகழ்ச்சியில் பங்கேற்க அழகர் மலையிலிருந்து மதுரை நோக்கி வரும்போது மக்கள் இலட்சக்கணக்கில் கூடி வரவேற்பார்கள். தெய்வத்திடம் தங்களது வேண்டுதலை நிறைவேற்ற, இந்த ஆட்டத்தில் ஆடைகளை கள்ளழகர்போல் அணிந்து ஆடி வருவார்கள். கள்ளழகர் மீது தண்ணீர் பீய்ச்சி அடித்து, தங்கள் அன்பை வெளிப்படுத்துவார்கள். அப்போது அவர்கள் ஆடிவரும் பாங்கு மெய்சிலிர்க்க வைக்கும். இந்த ஆட்டத்திற்கும் கிராமிய இசைக்கருவியான நையாண்டி மேளம்தான் பயன்படுத்தப்படுகிறது.

**கரகாட்டம்**

கரகம் என்பது, பூரண கும்பம் போன்ற வடிவுடைய அமைப்பு. இதைப் பல்வேறு விதங்களில் அலங்கரித்து வைத்து, தலையில் வைத்துக்கொண்டு ஆடிடுவதாகும். பல்வேறு மெய்ப்பாடுகளைக் காட்டி ஆடும்போது, பக்க வாத்தியங்கள் பலவும் கேட்போரைப் பரவசமூட்டும்



வகையில் அமைந்திருக்கும். அப்படியெல்லாம் ஆடும்போது கூட, தலையில் வைத்திட்ட அந்தக் கரகம் விழுந்து விடாமல் ஆடிட வேண்டும். நளினமான நாட்டுப்புறக் கலையான கரகம் தமிழகத்தில் கோவில் திருவிழாக்களிலும், பிற சமூக விழாக்களிலும், சிறப்பிடம் பெறுகிறது.

**கவின்மிகு காவடி ஆட்டம்**

காவடி என்பது வளைந்த அரை வடிவமுடைய, சற்றொப்ப, நாணேற்றிய வில்லின் அமைப்புடையது. அதன்



நீளம், ஒரு சராசரி மனிதனுடைய தோள் அளவைவிடச் சற்று அதிகமாக இருக்கும். அதன் விட்ட வடிவு இரண்டடி அளவுக்கு இருக்கும். அதை மயில் இறகு மற்றும் சில கண்ணுக்கழகான பொருள்கள் பலவற்றை வைத்து அலங்கரித்திடுவர்.

அதில் தமது வழிபாட்டுக்குரிய தெய்வங்களின் சிறு சிலைகள் அல்லது படங்கள் வைக்கப்பட்டிருப்பதும் உண்டு. பொதுவாகத் தன் வழிபாட்டுக்குரிய தெய்வங்களின் மீதான பாட்டுகள் அமைத்து இசை கூட்டிப் பாடுவார்கள்.

இதனைப் பாடிடும்போது, செவிக்கினிய இசைக் கருவிகளின் இசையும் சேர்த்துக் கொள்ளப்படும்.

**காளையாட்டம்**

காளை வீரத்திற்கும் வலிவுக்குமான அடையாளச் சின்னம். ஒரு வீரனின் நடையைக் காளையின் நடைக்கு

ஒப்பிடுவது நம் இயல்பு. மயிலின் சாயலைப் பெண்ணுக்கு ஒப்பிடுவது போல ஆணின் செம்மாந்த தோற்றத்துக்குக் காளையை ஒப்பிடுவது தமிழர் மரபு.

காளை போன்ற வேடம் கட்டி இசைக் கேற்ப ஆண்கள் நடனம் ஆடுவார்கள். இதைத்தான் காளை ஆட்டம் என்கிறோம். இதற்குத் துணையாக அமையும் இசை வாத்தியம் நையாண்டி மேளம். தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களில் – குறிப்பாக நாட்டுப்புறக் கோயில் திருவிழாக்களில் காளை ஆட்டம் ஆடப்படுகிறது.

### பொய்க்கால் குதிரை

பயணம் மேற்கொள்ளுவதற்கான விலங்குகளின் காலமைப்புகளில் வித்தியாசமான வடிவங்கள் கொண்டவை ஒட்டகம், குதிரை ஆகியவற்றின் குளம்புகள், பிளவு இல்லாத குளம்புகள், அந்தக் கால் நுனி அமைப்புடைய கட்டையை, மனிதன் தன் பாதங்களில்



கட்டிக்கொண்டு நடப்பதே கடினம். நிலைமை அப்படியிருக்க, அதை மனிதனின் பாதங்களில் கட்டிக் கொண்டு பொய்க்கால் கொண்ட குதிரையாக மனிதன், ஆடாத ஆட்டமெல்லாம் ஆடுவதைக் கண்டால் நாம் ஆச்சரியத்திலாழ்ந்து விடுவோம். கட்டைகளைப் பாதங்களில் கட்டிக்கொண்டு ஆடும் மனிதன், குதிரையின் உடலமைப்பை, பொம்மையால் செய்து, தன் இடுப்பில் கட்டிக்கொண்டு ஆடுவது கவின்மிகு காட்சியாயிருக்கும்.

தவில், உறுமி, நையாண்டி, மேளங்கள் முழங்க அவற்றோடு நாயன இசையொலியுஞ் சேர்ந்து கிளர்வூட்டும் இசைக்கு, அந்தக் குதிரை வடிவத்தைத் தாங்கிய மனிதர்கள் ஆடுவது அனைவரையும் மகிழவைக்கும் வியப்புக்குரிய கலை நிகழ்ச்சியாகும். ஆணும் பெண்ணும் இந்த ஆட்டத்தை ஆடுவர். தமிழகத்தில் நிகழ்வுறும் திருவிழாக்கள் சிறக்க, இந்தப் பொய்க்கால் குதிரை ஆட்டமும் ஒரு தவிர்க்க முடியாத அங்கமாகிவிட்டது.

### மயிலாட்டம்

மயிலாட்டம் தமிழகத்தின் தென் மாவட்டக் கிராமங்களில் கோயில் திருவிழாக்களிலும் மற்ற நிகழ்ச்சிகளிலும் இடம்பெறும் நாட்டுப்புறக் கலையாகும்.



இந்த ஆட்டம் ஆண்களும் பெண்களும் மயில்வேடம் அணிந்து இசைக் கருவிகளுக்கேற்ப நளினமாக ஆடப்படுவதாகும். பரத நாட்டியக் கலைஞர்களும் மயிலாட்டம் ஆடுவது தற்போது வழக்கமாகி வருகிறது.

### புலியாட்டம்

புலி வேடம் புனைந்து வண்ணங்களால் உடம்பில் வரிகளை வரைந்துகொண்டு, ஆடப்படும் புலியாட்டம், கிராமங்களில் மக்கள் மனம் கவர்ந்த ஆட்டம் ஆகும்.

கூட்டமாய் வரும் இந்தப் புலிகள் பாயும் புலிகள் அல்ல; வெறும் பாய்ச்சல் காட்டும் புலிகள். பதுங்குவது போலவும், பாய்வது போலவும் இவை பாவனை காட்டும். கிராமங்களில் மாரியம்மன் திருவிழாக் காலங்களில் புலியாட்டம்





நடைபெறும். இதற்குரிய இசைக் கருவிகள் தாரை மற்றும் தப்பட்டை ஆகும்.

### வீர விளையாட்டுக்கள்

தமிழ்நாட்டில் உடல்திறம் காட்டி விளையாடும் வகையைச் சேர்ந்தவை இந்த வீர விளையாட்டுகள். இதில் குச்சி விளையாட்டு, கத்திச் சண்டை, சுருள் கத்திச் சண்டை போன்றவையுண்டு.

இந்த விளையாட்டுகளுக்கு, பரத நாட்டியக் கலைபோன்று, முறையான நெறிமுறைகளும் பயிற்சியும் உண்டு. அவற்றை முறையாக இரு தரப்பினரும் பயிற்சி பெற்று, அதன்பின்னர் விளையாடத் தொடங்கினால், அவற்றைப் பார்ப்பதற்கும் அழகாயிருக்கும். மனிதனுக்குத் தக்க தற்காப்பாகவும் உதவிடும்.

### கொம்பு முழக்கம்

பண்டைத் தமிழகத்தின் வீரத்தின் வெளிப்பாட்டை அறிவிக்கும் சின்னமாக இது விளங்கியது. தற்போது கிராமங்களில் நடைபெறும் கோவில் திருவிழாக்கள் குடமுழக்கு விழாக்கள், கதிர் அறுப்பு, மஞ்சு விரட்டு, ஊர்வலங்கள் போன்றவற்றில் இது இடம் பெறுகிறது.

மூச்சை உள்ளிழுத்து ஒருவித இசையுடன் இந்த ஒலி எழுப்பப்படுகிறது. அறிவிப்புத் தரும் எழுச்சிக் கருவியாக இது விளங்குகிறது.

### தாரை, தப்பட்டை

தமிழ்நாட்டின் ஒவ்வொரு கிராமங்களிலும் ஊடுருவி உள்ள இசை ஆட்டம் இது. கிராமங்களில் நடைபெறும் திருவிழாக்கள், ஊர்வலங்கள், ஒவ்வொரு இல்லத்திலும் நடைபெறும் எல்லா விசேடங்களுக்கும் இந்த ஆட்டம் பயன்படுத்தப்படுகிறது. ஒரு குழுவில் 15 பேர் இருப்பார்கள்.

கேட்கக்கேட்க இசையில் தங்களையே மெய்மறந்து ஒன்றிடச் செய்யும் சக்தி பெற்றது இந்த ஆட்டம். வயது வேறுபாடின்றி அனைவரும் இந்த இசைக்கு மயங்குவார்கள்.

### நையாண்டி மேளம்

தென் மாவட்டங்களில், அதிகம் விரும்பப்படுகின்ற நாட்டுப்புற இசை நையாண்டி மேளமாகும். கோவில் திருவிழாக்களில் நையாண்டி மேளத்தை நாம் நிச்சயம் கேட்கலாம். நற்காரியங்கள், ஊர்வலம் போன்றவற்றிலும் இவை இடம் பெறும்.

இசை நிகழ்ச்சிகள் பொதுவாக மகிழ்ச்சியூட்டும். ஆனால் நையாண்டி மேளம் கேட்பவர்க்கு ஒரு விதமான களிப்பை உண்டாக்கும்.

நையாண்டி மேளத்தில், தமுக்கு தவில், நாதசுரம், பம்பை, உறுமி, தாளம் ஆகிய அறுவகை இசைக்கருவிகள் இடம் பெறுகின்றன.

★ ★ ★

## ரூ.128 கோடியில் 7,320 புதிய குடியிருப்புகள்

நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தல் பிரச்சாரத்தின் போது 30 ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்டு முழுமையாகப் பழுதடைந்த நிலையில் உள்ள சென்னை குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகளை இடித்துவிட்டு அதே இடத்தில் புதிதாகக் குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கப்படும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவித்ததற்கிணங்க மெரினா நொச்சிக்குப்பம் முதல் சீனிவாசபுரம் வரையில் உள்ள முழுமையாகப் பழுதடைந்த 2,862 குடிசைமாற்று வாரிய அடுக்குமாடிக் குடியிருப்புகளை இடித்துவிட்டு அதே இடத்தில் புதிதாக 2,862 குடியிருப்புகளும்; சுனாமியால் பாதிக்கப்பட்ட 4,458 குடும்பங்களுக்குப் புதிதாக 4,458 அடுக்குமாடிக் குடியிருப்புகளும் ஆக மொத்தம் 7,320 குடியிருப்புகளை 128 கோடி ரூபாய் செலவில் கட்டித் தர மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் 14.12.2006 அன்று அனுமதியளித்துள்ளார்.

## சமூக நீதி காத்த சான்றோர் - 2



# திருவள்ளுவர்

**சா**தி, மதம், இனம், மொழி, நாடு போன்ற அனைத்துப் பாகுபாடுகளையும் கடந்து உலகளாவிய பார்வை கொண்ட மாபெரும் சமுதாயச் சிந்தனையாளரான திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள், பைபிளுக்கு அடுத்தபடியாக உலகிலேயே அதிக மொழிகளில் (130) மொழிபெயர்க்கப்பட்ட நூலாகும்.

உலகப் பொதுமறையாகத் திகழ்கின்ற திருக்குறளில் சாதி உணர்வுகள் இம்மி அளவும் இல்லாமல், சாதியச் சார்புகளில் இருந்து முற்றிலும் விலகி, சிந்தனைகளை வழங்கிய காரணத்தால் திருக்குறள், இந்தியப் பொதுமறை மட்டுமின்றி உலகப் பொதுமறை நூலாகவும் திகழ்கின்றது.

உலகை ஒரு குடையின் கீழ் கொண்டு வர முயலும் தன்மை கொண்டது திருக்குறள், மூதறிஞர் வ.சுப.மாணிக்கம் கூறியது போல, "திருக்குறள் தழுவிய வாழ்வு சமணம் சாராது ; புத்தத்திற்குப் போகாது ; மாவலியத்தில் மாயாது; சிவனியத்தில் சேராது; கிருஸ்துவத்தில் கிளராது; இசுலாத்தில் இயையாது; ஆனால், எல்லாச் சமயத்தையும் சார்ந்து நல்லன எல்லாவற்றையும் தன்னுட்கொண்டு, வேற்றுமை விலக்கித் தமிழினத்தை வாழவைக்கும் தன்மை கொண்டது;" 'எண்குணத்தான்', "மலர்மிசை ஏகினான்", 'பகவன்', 'ஐந்தவித்தான்' போன்ற பெயர்கள் அனைத்தும் சமயச் சார்பு காட்டாதவை என்பது உண்மை.

திருக்குறளைப் பற்றி பேசுகையில் வீரமாமுனிவர், "இருளிராவிடத்து விளங்கிய ஒரு மீன் போலவும் பாலைச் சுரத்து அரிது அலர்ந்த பதுமம் போலவும், மெய்யாஞ்சுருதி விளிக்காது இருளே மொய்த்த நாட்டின் கண்ணும் கடவுள் ஏற்றிய ஞானத் திருவிளக்கு எறிப்பத் தெளிந்துணர்ந்து எங்கும் ஒரு விளக்கென நின்றுயர்ந்த திருவள்ளுவர்" என்று குறிப்பிட்டுள்ளார்.

சங்ககாலத் தமிழகத்தில் சாதிப் பிரிவுகள் என்பதே கிடையாது. சாதி என்னும் சொல் கூட தமிழ்ச் சொல்லே அல்ல. இடைபட்ட காலத்தில் சாதி என்னும் நச்சு விதை மக்களிடையே தூவப்பட்டு, மெதுவாகப் பரவத்தொடங்கி பின்னர் அசுரபலம் பெற்று பிரம்மாண்டமாக வளர்ந்தோங்கி விட்டது. சமூக நீதி கேலிக்குரியதாகிவிட்டது – கேள்விக்குறியாகி விட்டது.

திருக்குறளில் 'சாதி' என்ற வார்த்தையே பயன்படுத்தப்படவில்லை. தான் எந்த 'சாதி' என்பதை திருவள்ளுவர் மறைமுகமாகவோ வெளிப்படையாகவோ கூறவே இல்லை. பிற 'சாதி'களைத் தாழ்த்திப் பேசும் பேச்சுக்கே திருக்குறளில் இடம் இல்லை. திருக்குறளில் வர்ணாசரமம் கிடையாது. பிறப்பால் யாரும் உயர்ந்தவர்–தாழ்ந்தவர் இல்லை. படிப்பினாலும் ஒழுக்கத்தாலும் மட்டுமே ஒருவனுடைய உயர்வு – தாழ்வு தீர்மானிக்கப்படுகிறது என்னும் கருத்தை திருக்குறளில் பல இடங்களில் வள்ளுவர் வலியுறுத்திக் கூறுகிறார்.



"மேற் பிறந்தாராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்துங்
கற்றா ரனைத்திலர் பாடு" (குறள் . 409)

கற்றவர் என்ற பெருமை உயர்ந்தவர் – தாழ்ந்தவர் என்ற வேறுபாட்டைப் போக்கிடும் ( திருக்குறள் – கலைஞர் உரை) என்றார்.

"மறப்பினும் ஒத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்" (குறள். 134)

"பார்ப்பனன் ஒருவன் கற்றதை மறந்து விட்டால் மீண்டும் படித்துக்கொள்ள முடியும். ஆனால் பிறப்புக்குச் சிறப்பு சேர்க்கும் ஒழுக்கத்திலிருந்து அவன் தவறினால் இழிமகனே ஆவான்." (திருக்குறள் – கலைஞர் உரை) எனவே உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்பது அவனது ஒழுக்கத்தின் அடிப்படையிலே தீர்மானிக்கப்படும். – பிறப்பினால் அல்ல.



"அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டு ஒழுகலான்" (குறள். 30)

என்று வள்ளுவர் கூறுகையில், 'அந்தணர்' என்ற வார்த்தை சாதியப் பொருளில் பயன்படுத்தப் படவில்லை.

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வொ
செய் தொழில் வேற்றுமையான்" (குறள். 972)

என்றார். அதாவது பிறப்பினால் அனைவரும் சமம். செய்யும் தொழிலில் காட்டுகிற திறமையில் மட்டுமே வேறுபாடு காணமுடியும் என்றார்.

"ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்." (குறள். 133)

அதாவது ஒழுக்கம் உடையவராக வாழ்வதுதான் உயர்ந்த குடிபிறப்புக்கு எடுத்துக்காட்டாகும். ஒழுக்கம் தவறுகிறவர்கள் யாவாராயினும் அவர்கள் இழிந்த குடியில் பிறந்தவர்களாகவே கருதப்படுவர்.

"மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர் கீழிருந்தும்
கீழல்லார் கீழல் லவர்" (குறள். 973)

பண்பு இல்லாதவர்கள் உயர்ந்த பதவியில் இருந்தாலும் உயர்ந்தோர் அல்லர்; இழிவான காரியங்களில் ஈடுபடாதவர்கள் தாழ்ந்த நிலையில் இருந்தாலும் உயர்ந்தோரேயாவார்கள்.

"சாதிக்கு ஒரு நீதி" என்பதை எதிர்த்தவர் வள்ளுவர். ஒழுக்கம் உள்ளவனும் படித்தவனுமே உயர்ந்தவன் என்றார். ஒன்றே உலகம் என்னும் கொள்கை வழி நின்ற வள்ளுவர். மனித ஒருமைப்பாட்டையும் மனிதநேயத்தையும் வலியுறுத்துகிறார். மனித குல ஒருமைப்பாட்டுக்கு மனித நேயமே அடிப்படை என்பதையே

"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்றும் உரியர் பிறர்க்கு" (குறள். 72)

என்று குறிப்பிட்டார்.

வள்ளுவரின் கருத்துக்கள் குறுகிய எல்லைப் பாகுபாடுகளை கடந்து, இந்தியப் பண்பாட்டின் அடித்தளமாகவும், மனித சமுதாய கலாச்சாரத்தின் இலக்கணமாகவும் திகழ்கிறது. காலங்களை கடந்து அமரத்துவம் பெற்று விளங்குகிறது.

சாதியப் பாகுபாடுகளை வள்ளுவர் அங்கீகரிக்கவில்லை. வள்ளுவர், சாதியம் அனைத்தையும் அடித்து நொறுக்கிவிட்டு, தான் வாழ்ந்த காலத்தை வென்று, சமூக நீதி காத்த சான்றோன். வான் உள்ளளவும், வையம் உள்ளளவும் தமிழ் உள்ளளவும் வள்ளுவன் புகழ் நிலைத்திருக்கும்.

★ ★ ★

# சான்றோர் போற்றும் திருக்குறள்



## எங்கள் குறள்

மனித சமுதாயத்திற்கே நல்வழி காட்டி,
நன்னெறியூட்டி, நற்பண்புகளையும்
ஒழுக்கங்களையும் கற்பிக்கும் வகையில்
எழுதப்பட்ட நூல்தான் திருக்குறள்.
எனவேதான் எல்லா மக்களும், எல்லா
மதத்தவரும் ‘எங்கள் குறள்’ –
‘எங்கள் மதத்தை ஒப்புக் கொள்ளும் குறள்’
என்றெல்லாம் அதைப் போற்றி
வருகிறார்கள்.

– தந்தை பெரியார்

## வாழ்க்கை நெறிக் கோட்பாடு

மானுடப் பண்பியல்புகளுக்கு ஓர் உறைவிடமாய் – வாழ்க்கை வழி, நெறிமுறைகளுக்கான வழிகாட்டியாய் – அமைந்துள்ளது நமது திருக்குறள். “காலக் கூறுக்கு ஏற்ற இலக்கியம் திருக்குறள் அன்றி உலகினில் வேறு ஏது ?” என்றும் நாம் கேட்டிடலாம், எவரைப் பார்த்தும். உலகெங்கணும் பறை சாற்றிடலாம்; அஞ்சிடத் தேவையில்லை.

‘வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு’ – நமது நாடு. எதனால் இப்படிக் கூறினார் பாரதியார் ? அந்த வள்ளுவர், திருக்குறள் என்ற பொய்யாமொழியினை – வாழ்க்கை நெறிக் கோட்பாட்டு மறைதனைத் தீட்டியதால்தான்.

– பேரறிஞர் அண்ணா

## நவில்தோறும் நயம் பெருகும் நூல்

திருக்குறள் ஓதற்கெளிதாய், சிந்தைக்கும் செவிக்கும் இன்பம் பயப்பதாய், நவில்தோறும் நயம் பெருகும் நூலாய் விளங்குகின்றது. ஏனைய பழந்தமிழ் நூல்களில் காணப்படுகின்ற கடுந்தமிழ்ப் பதங்களும், பத்துப்பாட்டு முதலிய நூல்களிலுள்ள இறுக்கமும் மயக்கமும் திருக்குறளில் இல்லை. நூல் முழுமையும் திருந்திய செப்பமும் செம்மையும் வாய்ந்து விளங்குகின்றது. நூலின்கண் அமைந்து விளங்கும் இயல்களும், அதிகாரங்களும் ஒன்றற்கொன்று இயைபுடையனவாய்ப் பல தொடர்களால் அமைந்த அருமணி வடம்போல் விளங்குகின்றன.

– ரா.பி. சேதுப்பிள்ளை



## எல்லா யுகத்திற்கும் உரியவன்

வள்ளுவப் பெருந்தகை – அவனே அறிஞன். அவனே தமிழை அறிந்தோன் என்று தமிழ்ப் பெருமக்கள் இரண்டாயிரம் ஆண்டுகளாக ஏற்றிப் போற்றி வருகின்ற ஈடு இணையற்ற பேராசான். வள்ளுவப் பெருந்தகையை நினைக்கும் பொழுது ஆங்கில நல்லிசைப் புலவனான பென் ஜான்சன், ஷேக்ஸ்பியரைப் பற்றி கூறிய ஒரு கருத்து என் நினைவிற்கு வருகிறது – “அவன் ஒரு யுகத்திற்கு மட்டுமல்ல. அவன் எல்லா யுகத்திற்கும் எல்லாக் காலத்திற்கும் உரியவன்” என்று.

– ப. ஜீவானந்தம்

## உண்மைகள்

திருவள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் வாழ்ந்தவர்; அவர், இன்றுள்ள வாழ்க்கையை எவ்வாறு விளக்கமுடியும் என்று வினவலாம். காலம் மாறினும் உண்மைகள் மாறுவதில்லை. காலத்தால் வரும் மாற்றங்கள் உடையின் மாறுதல்களைப் போன்றவை. அடிப்படை உண்மைகள் உயிர் போன்றவை. திருவள்ளுவர், வாழ்க்கையின் அடிப்படையாகவும் பொதுவாகவும் உள்ள உண்மைகளைக் கண்டு எழுதியுள்ளமையால் பல்வேறு காலத்தவரும் அவற்றைப் போற்றி தத்தம் காலத்திற்கு ஏற்றவாறு அவற்றை உணர்கின்றனர்.

– மு. வரதராசனார்

## இன்பத்தின் நிலைக்களன்

திருக்குறள் ஒரு வாழ்வியல் நூல்; நல்வாழ்வு வாழ்ந்து நல்லின்பம் துய்ப்பது எப்படி என்பதை எடுத்துக்காட்டுவது. வள்ளுவர் கூறும் வழியில் மாநில மக்கள் ஒழுகுவார்களேயானால், இவ்வுலகு இன்பத்தின் நிலைக்களனாய் இனிது விளங்கும்.

– சி. இலக்குவனார்.

## வாழ்வின்பம்

திருவள்ளுவர் தம் நூலின் விளக்கத்துக்குப் பிற்கால உரைகளை எதிர்பார்த்தோ கட்டுரைகளை எதிர்பார்த்தோ எழுதவில்லை. தம் நூல் தானே விளங்கும், விளங்க வேண்டும் என்ற வெளிப்படை நடையிற்றான் யாத்துள்ளார். மூலக்குறள்களைப் பன்முறை படிக்கப் படிக்க வள்ளுவர் நெஞ்சுக்கும் நம் நெஞ்சுக்கும் உணர்ச்சித் தொடர்பு நெருங்குவதை உணர்கின்றோம்; குறட்சொற்கள் உயிர் நடைபெற்று நம் உள்ளத்தில் பாய்வதை உணர்கின்றோம்; உரைகள், விளக்கங்கள் என்னும் தீண்டாமைகளைக் கடந்து குறள்வடிவாக இருக்கும் திருவள்ளுவரின் நெஞ்சத்தினை நம் செயல் நெஞ்சத்தால் தீண்டுகிறோம். மக்கள் மெய்தீண்டல் உடற்கின்பம் என்பதுபோல மூலக்குறளைத் தீண்டல் வாழ்வின்பம் ஆகும்.

– வ.சுப. மாணிக்கம்

## வாழ்வுக்குப் பத்து உடைமைகள்

உடலுக்குச் சில உடைமைகளை அணிவது போல உள்ளத்திற்கும் சில உடைமைகளை அணிந்து வாழ்வதே குறள் காட்டும் வாழ்வு ஆகும். அவை அன்புடைமை, அறிவுடைமை, அருளுடைமை, அடக்கமுடைமை, ஆள்வினையுடைமை, ஒழுக்கமுடைமை, ஊக்கமுடைமை, நாணமுடைமை, பொறையுடைமை, பண்புடைமை என்பன. இப்பத்து உடைமைகளையும் பத்துத் தலைப்புகளில் நூறு குறள்களாக்கி மக்களாகப் பிறந்த ஒவ்வொருவரும் இவற்றைத் தம் உள்ளத்தில் அணிந்து வாழ்ந்தாக வேண்டும் எனக் குறள் நல்வாழ்வுக்கு வழி காட்டுகிறது.

## பத்து கட்டளைகள்

பொய்யைச் சொல்லாதே! புலாலை உண்ணாதே! கள்ளைக் குடியாதே! களவை நினையாதே! காமங்கொள்ளாதே! கொலையைச் செய்யாதே! சூதை விரும்பாதே! புறங்கூறாதே! பொறாமையடையாதே! பேராசை கொள்ளாதே! என்ற பத்துக் கட்டளைகளும் நல்வாழ்வு வாழக் குறள் இடும் கட்டளைகளாகும்.

– கி.ஆ.பெ. விசுவநாதம்

---

## வாழ்க்கைக் கலை

வாழ்க்கை மிகவும் சுவையுடைய ஒன்று. வாழ்வது என்பதும் ஒரு கலையே. மனிதன் முறையாக வாழக் கற்றுக்கொள்ள வேண்டும். அந்த முறையான வாழ்க்கையை – வாழ்வாங்கு வாழும் வாழ்க்கையைக் கற்றுக் கொடுப்பதே சமயநெறியின் விழுமிய பயன். வாழ்க்கைக் கலையில் கைவந்தவர் திருவள்ளுவர். அவர், இந்த வையகத்து மக்களெல்லாம் வாழ்வாங்கு வாழ்ந்து வளமுறவே திருக்குறளைச் செய்தார்.

– குன்றக்குடி அடிகளார்

---

## உலகப் பொதுமறை

மனிதனுக்கு மட்டுமே ஆறறிவு உண்டு; அதன் பயனாக அவரவரும் சிந்திக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்; எந்தக் காரியமானாலும் சரி; ஒருமுறைக்கு இருமுறை சிந்தித்து, அதன் பிறகே செயலில் இறங்கவேண்டும். செயலைத் தொடங்கிவிட்டு, பிறகு அதைப்பற்றிச் சிந்திப்பது அறிவுடைமை ஆகாது. இதை நான் சொல்லவில்லை; வள்ளுவப் பெருந்தகையே கூறியிருக்கிறார். இதனால்தான் திருக்குறள் உலகப் பொதுமறை.

– திருக்குறளார் வீ. முனுசாமி

– தொகுப்பு : தி.பெசா





# தாயையும் சேயையும் காக்கும் தமிழக அரசு

தமிழக அரசின் மருத்துவத் துறையின் மூலம், வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள கர்ப்பிணிப் பெண்கள் 7–ஆவது மாதம் முதல் குழந்தை பிறந்த 3 மாதங்கள் என 6 மாதங்களுக்கு தலா ரூ.1,000 வீதம் ரூ.6,000 நிதியுதவி வழங்கும் திட்டம், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது.

கடலூர் மாவட்டத்தில் 28.11.2006 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவுப்படி இத்திட்டம், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர். கே. பன்னீர்செல்வம் அவர்களால் குறிஞ்சிப்பாடி, விருத்தாசலம், கீரப்பாளையம், காட்டுமன்னார்கோயில் ஆகிய பகுதிகளில் உள்ள கர்ப்பிணிப் பெண்கள் 2,615 பேருக்கு ரூ.55 இலட்சம் மதிப்பில் நிதியுதவி வழங்கும் துவக்க விழா நிகழ்ச்சி குறிஞ்சிப்பாடி ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்தில் நடைபெற்றது.

இத்திட்டம் பற்றி பயனாளிகளிடம் கருத்து கேட்டபோது, குறிஞ்சிப்பாடிக்கு அருகில் உள்ள அயன்குறிஞ்சிப்பாடியைச் சேர்ந்த திருமதி மாலதி (வயது 24) கணவர் பழனிவேல் (29) அவர்கள் தெரிவித்ததாவது :

“எனக்கு குழந்தை பிறந்து 16 நாட்கள் ஆகிறது. என் கணவரும் நானும் கூலி வேலை செய்து வருகிறோம். அதன் மூலம் கிடைக்கும் வருவாயில் குடும்பத்தை நடத்தி வருகிறோம். கடந்த 5 மாதங்களாக நான் வேலைக்கும் செல்ல முடியாமல் வீட்டுப் பணிகளை மட்டுமே கவனித்துக்கொள்ள முடிந்தது. அதனால் என் கணவரின் வருமானத்தை மட்டுமே நம்பி இருந்தோம். அதிலும் தினமும்

அவருக்கு வேலை கிடைப்பதில்லை. நானும் இனி குறைந்தது 3 அல்லது 4 மாதங்களுக்கு குழந்தையை வைத்துக் கொண்டு எந்த வேலைக்கும் செல்ல முடியாத நிலை உள்ளது. கணவரின் குறைந்த வருவாயில் குழந்தையை பராமரிப்பதற்கு உரிய செலவை எதிர்நோக்கி மிகவும் கஷ்டப்பட்டேன். இந்த சூழ்நிலையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தனது தேர்தல் வாக்குறுதியில் கர்ப்பிணிப் பெண்களுக்கு 6 மாத காலத்திற்கு மாதம் ரூ.1,000 வீதம் நிதியுதவி வழங்கும் திட்டம் நடைமுறைக்கு வருவதால், அத்திட்டத்தில் பயன்பெறும் பயனாளிகள் சுகாதாரத் துறை மூலம் கணக்கெடுத்து வருவதாகவும், அதில் உங்களுக்கும் பணம் கிடைக்கும் என்றும் என்னிடம் தெரிவித்தார்கள். இதனை என்னால் நம்பமுடியாமல் இருந்த சமயத்தில், இத்திட்டத்தில் பயன்பெறுவோர் பட்டியலில் எனது பெயர் இருப்பதாகவும், அதற்கான உதவித் தொகை, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்கள் குறிஞ்சிப்பாடியில் 28.11.06 அன்று நடைபெறும் விழாவில் எனக்கு வழங்கப்படும் என்றும், விழாவிற்கு குடும்பத்துடன் வந்து தொகையை பெற்றுக் கொள்ளலாம் என தகவல் தரப்பட்டது.

எனினும் தொகை கைக்கு வந்தால்தான் நிச்சயம் என நினைத்துக் கொண்டு 15 நாள் கைக்குழந்தையுடன் விழாவிற்கு சென்றபோது என் போன்ற பலர் வந்திருந்ததை பார்த்தேன். பின்னர் விழாவில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்னை மேடைக்கு அழைத்து உதவித் தொகைக்கான காசோலையை வழங்கினார். அப்போதுதான் எனக்கு புத்துயிர் பெற்றதைப் போன்ற உணர்வு ஏற்பட்டது. மாதம் ரூ.1,000 வீதம் அரசே வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள கர்ப்பிணிப் பெண்களுக்கு தருவதால் என் போன்றவர்களுக்கு கணவரின் வருமானத்தை எதிர்பார்க்காமல் குழந்தையை பராமரிக்க மிகவும் உதவியாக இருக்கும். என் கவலை தீர்ந்தது. மிக அருமையான இந்த திட்டத்தை அறிவித்து என் போன்ற ஏழை பெண்கள் வாழ்க்கையை தரம் உயர்த்தி உதவித் தொகை வழங்கிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியை எப்போதும் செலுத்துவேன் என்றார்.

குறிஞ்சிப்பாடி, ரெட்டியார் காலனியைச் சேர்ந்த திருமதி மகாலட்சுமி (24) கணவர் பெயர் மோகன்ராஜ் (33) அவர்கள் தெரிவித்ததாவது:

எனக்கு திருமணமாகி 5 மாதங்கள் கர்ப்பமாக இருந்தபோது, குழந்தை பிறப்பதற்கும், ஆஸ்பத்திரி செலவுகள் மற்றும் பராமரிப்பு செலவுகளுக்கும் தேவையான பணத்திற்கு என்ன செய்வது என்று நினைத்த நேரத்தில், என் கணவர் சிறிய கடை நடத்தி, அதிலும் எதிர்பார்த்த வருமானம் இல்லாமல் இருந்ததாலும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள கர்ப்பிணிப் பெண்களுக்கு மாதந்தோறும் ரூ.1,000 வீதம் 6 மாதங்களுக்கு ரூ.6,000 வழங்க உள்ளார் என்றும், அத்திட்டம் மூலம் நமக்கும் பயன்கிடைக்கும் என பத்திரிக்கைகளில் வந்த செய்தியை என் கணவர் தெரிவித்தார். என் தாய் தந்தையரும் வசதி இல்லாமல் இருப்பதால் மாதம் ரூ.1,000 வீதம் 6 மாதங்களுக்கு கிடைத்தால் யாரையும் கஷ்டப்படுத்தாமல் பிரசவ செலவு மற்றும் குழந்தை பராமரிப்பு செலவுகளை தாமே பார்த்துக் கொள்ளலாம் என கூறினேன்.

குறிஞ்சிப்பாடியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களால் மாதந்தோறும் ரூ.1,000 வீதம் ரூ.6,000 எனக்கு கிடைப்பதற்கு என் பெயரை குறித்துக் கொண்டு என்னை 28.11.2006 அன்று வரச் சொன்னார்கள். கர்ப்பிணிப் பெண்களுக்கான உதவித் தொகையை நான் பெற்ற போது எனக்கு இருந்த கஷ்டங்கள் எல்லாம் நீங்கி நிம்மதியும் சந்தோஷமும் ஏற்பட்டுள்ளது. ஒவ்வொரு மாதமும் சராசரியாக ரூ.1,000 என பெறுவதால் 6 மாதங்களுக்கு எனக்கு பராமரிப்பு செலவுகளுக்கு எந்தவித சிரமமும் ஏற்படாது. என் தாய் தந்தையருக்கும் நான் ஒரு பாரமாக இருக்க வேண்டிய நிலை தவிர்க்கப்படுகிறது. இந்த நல்ல திட்டத்தின் மூலம் என் போன்று வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள இதன் மூலம் பயனடைந்துள்ள கர்ப்பிணிப் பெண்கள், என்றைக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சரையும், இந்த அரசையும் மறக்க மாட்டார்கள் என தெரிவித்தார்.

இத்திட்டத்திற்கு தமிழகம் முழுவதும் ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதில், கடலூர் மாவட்டத்திற்கு மட்டும் நடப்பாண்டிற்கு ரூ.3.84 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. முதல் கட்டமாக 2,615 கர்ப்பிணிப் பெண்களுக்கு ரூ.55 இலட்சம் செலவிடப் பட்டுள்ளது. இம்மாவட்டத்தில் உள்ள 58 அரசு மருத்துவமனை மையங்களிலும், மருத்துவ மனைகளிலும் இத்திட்டம் தொடர்பாக கர்ப்பிணிப் பெண்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்துவதுடன் அவர்களைப் பற்றிய கணக்காய்வும் மருத்துவத் துறையால் எடுக்கப்பட்டு வருகிறது. இம்மாவட்ட மக்களிடையே இத்திட்டத்திற்கு பெரும் வரவேற்பும், பாராட்டும் ஏற்படுத்தியுள்ளது.

— **எம்.ஆர். லிங்கம்,**
*செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்*
*கடலூர் மாவட்டம்.*



# பூச்சிகொல்லி மருந்து இல்லாமல் இயற்கை முறையில் காய்கறிகள் சாகுபடி

## *திண்டுக்கல் மாவட்ட விவசாயிகளின் சாதனை*

பெருகிவரும் மக்கள் தொகையின் அடிப்படையில் மக்களுக்கு அதிக அளவில் உணவுப் பொருட்கள் மற்றும் காய்கறிகள் தேவைப்பட்டது. இதனால் தேவை அதிகமாகி விளைச்சல் செய்ய வேண்டி யுள்ளது. இந்நிலையில் பூச்சி கொல்லி மருந்து இல்லாமல் இயற்கை முறையில் காய் கறிகள் சாகுபடி செய்து திண்டுக்கல் மாவட்ட விவசாயிகள் சாதனை புரிந்துள்ளார்கள்.

பண்டைய காலத்தில் விவசாயம்தான் முக்கிய இடத்தில் இருந்தது. மாடு பூட்டி, ஏர் உழுது, பசுந்தாள் உரம் போட்டு நெல், கம்பு, சோளம் என 20 வகையான உணவு தானியங்கள் பயிரிடப்பட்டு, விளைவிக்கப் பட்ட உணவு வகைகளை உரம், உலக்கை மூலம் கையால் குத்தி, கைகுத்தல் அரிசியை, மண்பானையில் வேக வைத்து சாப்பிட்டு அதற்கேற்ப விளை நிலங்களில் உடல் உழைப்பும் செய்து வந்ததால் நோய் நொடியில்லாமல் வாழ்ந்தனர். பின்னர் மக்கள் தொகை பெருக்கத்தின் விளைவாக விவசாய உற்பத்தியை பல மடங்கு பெருக்க வேண்டிய நிலை வந்த போது "பசுமை புரட்சி" திட்டம் கொண்டுவரப்பட்டு ரசாயன உரங்களும், பயிர்களை தாக்கும் பூச்சிகளை அழிக்க பூச்சி கொல்லிகளும் கண்டுபிடித்து பயன்படுத்தியதன் விளைவாக நிலங்கள் மாறியது, இதன் மூலம் விளைவிக்கப்படும் அரிசி, காய், கனிகளின் தன்மை மாறியது.

மேலும் 20 வகையான உணவு தானியங்கள் பயிரிடுவது குறைக்கப்பட்டு முழுக்க முழுக்க நெல் பயிர் மட்டுமே உணவுக்கான பயிராக மாறியது. அதே நேரத்தில் நச்சு தன்மை வாய்ந்த வேதி உரங்கள், பூச்சி கொல்லிகள் மூலம் நிலத்தடி நீரும் நச்சு [illegible] மாறிவிட்டது. [illegible] பயன்படுத்தியதால் மனித உடல் பல்வேறு வகையான நோய்களை சந்திக்க வேண்டியிருந்தது. நோய்களை தீர்க்க இயற்கையான மூலிகை செடிகளில் இருந்து எடுக்கப்பட்ட சித்த மருந்துகளை உதறிவிட்டு அலோபதி மருந்தான வேதி பொருட்கள் மூலம் உற்பத்தி செய்த மருந்துகளை வாங்கி நோய்களை தீர்த்து மனித உடலை வேதி பொருட்களுக்கு அடிமையாக்கியதோடு, ஆயுட்காலத்தையும் குறைக்க முக்கிய காரணமாக அமைந்தது. இப்படியாக இயற்கையோடு இணைந்து வாழ்ந்து, இயற்கை

உணவு சுத்தமான குடிநீரை பயன்படுத்தி வந்த மனிதன் வளர்ச்சியின் பெயரால் வந்த செயற்கை உணவுக்கு மாறியதன் விளைவுதான் மனிதனின் குறைந்த ஆயுட் காலத்திற்கு வழிவகுத்தது.

இந்த சூழலில்தான் தற்போது ஒரு சில விவசாயிகள் தங்களது பாரம்பரிய இயற்கை விவசாயத்திற்கு மாறி வருகின்றனர். குறிப்பாக திண்டுக்கல் மாவட்டத்தில், நிலக்கோட்டை தாலுகா, பள்ளப்பட்டி பகுதியில் கிருஷ்ணசாமி மற்றும் வேலுச்சாமி ஆகியோர் தங்களது தோட்டங்களை வேதி உரம், பூச்சி கொல்லிகள் பயன்படுத்தாமல் முழுக்க, முழுக்க இயற்கையாகவே காய்கறிகள், உணவு வகைகளை சாகுபடி செய்து வருகிறார்கள். இந்த விவசாயிகளுக்கு காந்தி கிராம பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண்மை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை ஆலோசனையும் வழங்கிவருகிறது. இயற்கை விவசாயத்திற்கு மாறியுள்ள கிருஷ்ணசாமி மற்றும் வேலுச்சாமி கூறியதாவது:

வேதி உரங்களால் பாழ்பட்டுபோன எங்களது நிலத்தை மீண்டும் இயற்கை முறையில் பயிரிட எண்ணி, சத்தியமங்கலத்தில் உள்ள தமிழர் உழவர் தொழில்நுட்பக் கழகத்தில் பயிற்சி பெற்றோம். அதனைத் தொடர்ந்து எங்களது நிலத்தை சீரமைக்க 20 வகையான தானியங்களை ஒட்டுமொத்தமாக பயிரிட்டு வளர்த்தோம். நன்றாக வளர்ந்தபின் அதனை மாடு பூட்டி உழவு செய்தோம். இதன் பயனாக வேதி பொருட்களால் பாலான நிலம் ஓரளவு இயற்கைக்கு மாறியது. அதன்பின் வாழை, பூ வகைகள், முருங்கை, கத்தரிக்காய், தக்காளி, வெண்டைக்காய் உள்ளிட்ட காய்கறிகள் பயிரிட்டு எவ்விதமான வேதி உரம் பூச்சி கொல்லி மருந்துகள் தெளிக்காமல் அதிக அளவில் காய்கறிகளை உற்பத்தி செய்து வருகிறோம் என பெருமையுடன் கூறினர்.

**– டி.எஸ். சுப்பிரமணியம்,**
*செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,*
*திண்டுக்கல் மாவட்டம்.*

## ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில்

## பதிவு மூப்பு மற்றும் வகுப்புவாரி பட்டியல் அடிப்படையில் நேரடி நியமனம்

**ஊ**ரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் காலியாக உள்ள பணியிடங்களில் 50 விழுக்காடு இடங்களை வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலம் நேரடி நியமனம் செய்திட 19.10.2006 அன்று அரசாணை வெளியிடப்பட்டது. இந்த ஆணையின்படி 204 பணி மேற்பார்வையாளர் (Overseer) பணியிடங்களும், 27 இளநிலை வரைவாளர் (Junior Draughting Officer) பணியிடங்களும், 328 இரண்டாம் நிலை சாலை ஆய்வாளர் (Road Inspector Grade-II) பணியிடங்களும் நிரப்பப்பட வேண்டும்.

இந்த நியமனங்களில் ஒவ்வொரு பதவிக்கும் ஒரு காலியிடத்திற்கு ஒருவர் வீதம் வேலைவாய்ப்பு அலுவலகங்களிலிருந்து பதிவு மூப்பு மற்றும் வகுப்புவாரி பட்டியல் (Employment seniority - com - roster) பெற்று, வேலைவாய்ப்புப் பதிவு முன்னுரிமை அடிப்படையில் மட்டுமே விதிகளின்படி நியமனம் செய்யப்பட வேண்டுமென்றும், இந்தப் பணியாளர்களை நியமனம் செய்வதில், கடலூர் மாவட்டத்தில் 6 பணி மேற்பார்வையாளர் பணியிடங்களும், ஒரு இளநிலை வரைவாளர் பணியிடமும் ஏற்கெனவே நிரப்பப் பட்டுள்ளதாகவும், மற்ற மாவட்டங்களில் நியமனங்களைச் செய்வதற்குரிய நடைமுறைகள் தொடங்கப் பட்டிருப்பதாகவும் தெரியவருவதால், கடலூர் மாவட்டத்தைத் தவிர மற்ற மாவட்டங்களில் இந்த வகை நியமனங்களுக்காக இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் அனைத்தையும் ரத்து செய்து விட்டுத் தற்போது அறிவிக்கப்பட்டுள்ள முறைப்படி பதிவு மூப்பு மற்றும் வகுப்புவாரி பட்டியல் அடிப்படையில் மட்டுமே நியமனங்களை செய்வதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சியர்களுக்கு தெரிவித்துள்ளதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்.



# கோ-ஆப்டெக்சின்

# பொற்றாமரை சேலைகள் - ஆயத்த ஆடைகள்

**கோ**-ஆப்டெக்ஸ் தலைமை அலுவலகத்தில் 12.12.2006 அன்று மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் திரு.என்கேகே.பி. ராஜா அவர்கள் செய்தியாளர்களிடம் கூறியதாவது:–

தலைமுறைகளை நினைவுகூறும் வகையில் தலைமுறை தலைமுறையாய் பழங்காலந்தொட்டு கைத்தறி கலை நுட்பங்களை உள்ளடக்கி கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் அரசு, தனியார் நிறுவனத்திடமிருந்து பல்வேறு வடிவமைப்புகள் பெறப்பட்டு பட்டுசேலைகள் தயார் செய்யப்பட்டு விற்பனைக்கு அறிமுகப்படுத்தப்பட்டு வருகிறது.





### பொற்றாமரை சேலைகள்

மாறிவரும் வாடிக்கையாளர்களின் இரசனைக் கேற்பவும், மாறிவரும் பருவ காலங்களின் தேவைக்கேற்பவும் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் புதிய வடிவமைப்புகளில், புதிய வண்ணங்களில், பட்டு மற்றும் பருத்தி சேலைகள், சுடிதார் போன்ற பல்வேறு இரகங்களை அறிமுகப்படுத்தி வருகிறது. தற்சமயம், தை மாத முகூர்த்த காலத்திற்கேற்ப, இந்தியாவின் தலைசிறந்த வடிவமைப்பாளர்களைக் கொண்டு புதிய வடிவமைப்புகள் மற்றும் வண்ண கலவைகள் பட்டில் உற்பத்தி செய்யப்பட்டு "பொற்றாமரை சேலைகள்" என்ற பெயரில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த பட்டுச் சேலைகளின் விலை ரூ.2,100 முதல் ரூ.18,000 வரை ஆகும். இந்த அறிமுகம் தற்சமயம் சென்னை நகரில் தில்லையாடி வள்ளியம்மை பட்டு மாளிகையில் மட்டும் செய்யப்படுகிறது. வருங்காலங்களில் படிப்படியாக மற்ற கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களிலும் அறிமுகப்படுத்தப்படும்.

### ஆயத்த ஆடைகள்

ஆடவர்களுக்கான ரெடிமெட் சட்டைகள் சோதனை முறையில் விற்பனை மேற்கொள்ளப்பட்டது. வாடிக்கையாளர்களிடையே இது அமோக வரவேற்பினை ஏற்படுத்தியதைத் தொடர்ந்து, இந்த ரெடிமேட் சட்டைகள் மேலும் அதிக அளவில் பல்வேறு வடிவமைப்புகளுடன் தற்போது பொங்கல் திருநாளையொட்டி பண்டிகை கால விற்பனைக்கு வெளியிடப்பட்டுள்ளது. "கோ–ஆப்டெக்ஸ் சட்டைகள்" என பெயரிடப்பட்டுள்ள இந்த சட்டை ரூ.200 முதல் ரூ.215 வரையிலான விலையில் விற்பனை செய்யப்படும், இவ்வாறு அவர் தெரிவித்தார். அப்போது தமிழக அரசின் கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை செயலர் திரு.சி.பி.சிங், இ.ஆ.ப., கைத்தறி மற்றும் துணிநூல் துறை இயக்குநர் திரு.எம்.மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் தனி அலுவலர் மற்றும் மேலாண்மை இயக்குநர், திருமதி எம்.பி.நிர்மலா, இ.ஆ.ப., முதன்மை பொது மேலாளர், திரு.வெ. குணசேகரன் ஆகியோரும் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் மற்றும் கைத்தறித்துறை உயர் அலுவலர்கள் பங்கேற்றனர்.





**மா**ண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் 30.12.2006 அன்று, சென்னையில் 33ஆவது இந்திய சுற்றுலா – தொழில் பொருட்காட்சி 2007ஐ குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார். உடன் மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. என். சுரேஷ்ராஜன், வணக்கத்திற்குரிய சென்னை மாநகர மேயர் திரு. மா. சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர் திரு. செ.குப்புசாமி, செய்தி மற்றும் சுற்றுலாத்துறை செயலர் திரு. வெ.இறையன்பு, இ.ஆ.ப., சுற்றுலாத்துறை ஆணையர் திரு. சான்வத்ராம் இ.ஆ.ப., ஆகியோர் உள்ளனர்.

# கௌதம புத்தர் மகாபரி நிர்வாணம் அடைந்து 2,550 ஆண்டுகள் நிறைவையொட்டி தமிழகத்தில் விழா

13.5.2006 அன்று புதுடெல்லியில், புத்தபிரான் அவர்களின் 2550ஆம் ஆண்டு நிறைவு நாள் விழா பாரதப் பிரதமர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டதாகவும், இவ்விழாவை நாடு முழுவதும் ஓராண்டு காலம் நடத்துவதற்காக பாரதப் பிரதமர் அவர்களின் தலைமையில், தேசிய அளவில் ஒரு தேசியக் குழுவும் (National Committee) ஒரு நிறைவேற்றுதல் குழுவும் (Implementation Committee) ஏற்படுத்தப் பட்டுள்ளதாகவும், இதன் அடிப்படையில் சில மாநிலங்களில் சிறப்புக் குழுக்களை ஏற்படுத்தியுள்ள தாகவும் எனவே இம்மாநிலத்தை பொறுத்தவரை அதுபோன்ற சிறப்புக் குழு ஒன்றை ஏற்படுத்தப் படுவதனால் மாண்புமிகு முதலமைச்சர் தலைமையில் ஒரு குழுவை ஏற்படுத்தவும், மைய அரசின் சுற்றுலா மற்றும் பண்பாட்டுத்துறை அமைச்சர் கோரியுள்ளார்.

மைய அரசின் சுற்றுலா மற்றும் பண்பாட்டுத்துறை அமைச்சகம் கோரிக்கையினை ஏற்று கௌதமபுத்தர், மகா பரி நிர்வாணம் அடைந்து 2550 ஆண்டுகள் நிறைவு பெற்றதையொட்டி தமிழ்நாடு அரசு சார்பாக தமிழ் மாநிலத்தில் ஆண்டு முழுவதும் விழாக்களை நடத்த அரசு முடிவு செய்துள்ளது. அதற்கிணங்க விழா நிகழ்ச்சிகள் குறித்த ஏற்பாடுகள் செய்வதற்கு உரிய ஆலோசனைகளை வழங்குவதற்காக மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தலைமையில் கீழ்க்கண்ட உறுப்பினர்களை கொண்ட குழுவினை அமைத்து அரசு ஆணையிட்டுள்ளது.

மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர், மாண்புமிகு உயர் கல்வித்துறை அமைச்சர், மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர், தலைமைச்செயலாளர், செய்தி மற்றும் சுற்றுலாத்துறைச் செயலாளர், உயர்கல்வித்துறைச் செயலாளர், பள்ளிக் கல்வித்துறைச் செயலாளர், செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், நீதியரசர் பி.ஆர். கோகுல கிருஷ்ணன், முனைவர் அவ்வை நடராசன், திரு. பெரியார்தாசன், கவிக்கோ அப்துல் ரகுமான், டாக்டர் எஸ்.என். கந்தசாமி–தஞ்சாவூர், திரு. நல்லி குப்புசாமி, திரு.சேயோன், இயக்குநர் கோவை வானொலி நிலையம், திரு. சம்பத் – வழக்கறிஞர், திரு.தமிழருவி மணியன், திருமதி. அன்புக் கொடி, திரு. சுதர்சனம் – சட்டமன்ற உறுப்பினர், திரு. கோ.க. மணி – சட்டமன்ற உறுப்பினர், திரு. ஆர். நல்லகண்ணு, திரு. கி. வீரமணி – ஆசிரியர் விடுதலை நாளிதழ், திருமதி அருள்மொழி – வழக்கறிஞர் ஆகியோர் கொண்ட குழு முதல் நிலைக் குழுவாகக் கருதப்படும். ✶





தமிழரசு
R.N.I. No.21446/70-Regn.No.TN/ARD/48/06-08
TN/PMG(CCR)WPP-518/06-08









# தமிழரசு

பிப்ரவரி 2007
விலை ரூ.10/-

செய்தி மக்கள்தொடர்புத் துறையின் வெளியீடு














# தமிழரசு

செய்தி-மக்கள்தொடர்புத் துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2038

தை - மாசி / பிப்ரவரி 2007

மலர் : 38 இதழ் : 8



**ஆசிரியர் குழு**

ஆசிரியர் மற்றும் வெளியிடுபவர் :

**சி.கோசலராமன், இ.ஆ.ப.,**
இயக்குநர், செய்தி-மக்கள்தொடர்புத் துறை

நிருவாக ஆசிரியர்

கே.ட்டி. புகழேந்தி
துணை இயக்குநர் (வெளியீடுகள்)

பொறுப்பாசிரியர்கள்

ந. இளங்கோ
எஸ்.பி.எழிலழகன்
கி. சாந்தி

உதவி ஆசிரியர்கள்

ஆ. ராஜா
க. இராஜராஜேஸ்வரி
ஜ. இந்திராணி
இரா. சுரேஷ்
வீ.இரா. நவநீதகிருஷ்ணகுமார்

நிருபர்கள்

கோ. சண்முகம்
மாய குமரேசன்

இதழ் உதவியாளர்

தி.பெரியார் சாக்ரடீசு

புகைப்படக்காரர்

வி.ராதாகிருஷ்ணன்

கணினி வடிவமைப்பு

பி.ஏ. ஜாயிஸ் பெரியநாயகம்
அ. மதன்



சென்னை - தமிழரசு அச்சகத்தில்
அச்சிடப்பட்டது.

தமிழரசு அலுவலகம்,
ஓமந்தூரார் அரசினர் தோட்டம்,
அண்ணாசாலை, சென்னை-600 002.
தொலைபேசி : 25368926/25364906
தொலைநகல் : 25364906
மின் அஞ்சல் : tamilarasu2@hotmail.com
இணையதளம் : www.tn.gov.in


31/07

## இந்த இதழில்...


- 58ஆவது இந்தியக் குடியரசு தின விழா ..... 2
- இந்திய அரசியல் சட்டம் காலத்தின் தேவைக்கேற்ப புதியதாக இயற்றப்படவேண்டும் - தமிழக சட்டப்பேரவையில் மேதகு தமிழக ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரை ..... 9
- திறமையான நிருவாகத்தால் அரசின் நிதிநிலை சமன்பாடு சீராக உள்ளது - தமிழக சட்டப்பேரவையில் மேதகு ஆளுநர் அவர்களின் உரையின் மீது நடந்த விவாதத்திற்கு பதிலளித்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை ..... 22
- தமிழகத்திற்கு 2007-2008ஆம் ஆண்டிற்கு ரூ.14 ஆயிரம் கோடி நிதிஒதுக்கீடு ..... 37
- சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு அரசின் சார்பில் இந்த ஆண்டில் 32,668 வீடுகள் கட்டி முடிக்கப்படும் - மாண்புமிகு முதலமைச்சர் அறிவிப்பு ..... 49
- தமிழகத்திலுள்ள ஏழை எளிய தாய்மார்களுக்காக தமிழக அரசு எண்ணற்ற சாதனைகளை செய்து வருகிறது - மாண்புமிகு முதலமைச்சர் ..... 54
- புத்தர் விழா ..... 77




கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்

தன்னைவிட அறிவில் மூத்த பெருந்தகையாளரின் முன்னே வணங்கி நிற்கும் பண்பு இல்லாவிடில் என்னதான் ஒருவர் கற்றிருந்தாலும் அதனால் என்ன பயன்? ஒன்றுமில்லை. *குறள் : 2*

கலைஞர் திருக்குறள் உரையிலிருந்து...

முதலாம் பக்க அட்டை : 58ஆவது இந்தியக் குடியரசு தினவிழா (26-1-2007)

இரண்டாம் பக்க அட்டை : சட்டப்பேரவையில் மேதகு ஆளுநர் உரை (20-1-2007)

நான்காம் பக்க அட்டை : மேல்நிலைப் பள்ளி மாணவ, மாணவியருக்கு இலவச மிதிவண்டிகள் வழங்கும் விழா (19-1-2007)



# 58ஆவது இந்தியக் குடியரசு தினவிழா

## மேதகு ஆளுநர் திரு. சுர்ஜித்சிங் பர்னாலா அவர்கள் தேசியக் கொடியை ஏற்றிவைத்து வீரவணக்கம் செலுத்தினார்! மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் விருதுகள் வழங்கினார்!

இந்தியாவின் 58ஆவது குடியரசு தினவிழா 26.1.2007 அன்று சென்னை காமராசர் சாலையில் உள்ள காந்தி சிலையருகில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. காலை 7.50 மணியளவில் வருகை தந்த மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களும் அதையடுத்து வந்த மேதகு ஆளுநர் திரு. சுர்ஜித்சிங் பர்னாலா அவர்களும் கடற்கரைச் சாலையில் பல்லாயிரக்கணக்கில் கூடியிருந்த மக்களுக்கு தங்களது அன்பான குடியரசு தின வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டனர்.

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களை தலைமைச் செயலாளர் திரு. எல்.கே.திரிபாதி, இ.ஆ.ப., அவர்கள், பூங்கொத்து வழங்கி மேடைக்கு அழைத்து சென்றார். பின்னர் முப்படைகளின் தலைவர்கள் – காவல்துறை உயர் அதிகாரிகள் ஆகியோரை மேதகு ஆளுநர் திரு. சுர்ஜித்சிங் பர்னாலா அவர்களுக்கு தலைமைச் செயலாளர் அவர்கள் அறிமுகம் செய்து வைத்தார்.

அடுத்து கடலோரக் காவல்படை ஹெலிகாப்டர், வானிலிருந்து மலர்களைத் தூவ, சரியாக 8.00 மணிக்கு மேதகு ஆளுநர் திரு. சுர்ஜித்சிங் பர்னாலா அவர்கள் தேசியக் கொடியை ஏற்றி வைத்து வீரவணக்கம் செலுத்தினார்.

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வீரதீர செயல்கள் புரிந்தவர்களுக்கு அண்ணா பதக்கங்கள், ஜீவன் ரக்ஷா விருது, கோட்டை அமீர் விருது, மத நல்லிணக்க பதக்கம், காந்தியடிகள் காவல் பதக்கங்கள் ஆகியவற்றை வழங்கி சிறப்பித்தார்.சிவகங்கை மாவட்டம் – மானசேரி கிராமத்தைச் சேர்ந்த து. கண்ணன், காஞ்சிபுரம் மாவட்டம் – ஒக்கியம் துரைப்பாக்கம் கண்ணகி நகரைச் சேர்ந்த மறைந்த ஆர்.நரேந்திரன் ஆகியோரின் சேவைகளைப் பாராட்டி அண்ணா பதக்கங்களை முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வழங்கினார். ஜீவன் ரக்ஷா பதக்கத்தை கன்னியாகுமரி மாவட்டம் கல்குளம் தாலுகா கடியப்பட்டணம் கிராமத்தைச் சேர்ந்த செல்வன் மரியலியோ சாஜனுக்கும் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வழங்கி சிறப்பித்தார். கோட்டை அமீர் மத நல்லிணக்க பதக்கத்தை மறைந்த







அபுபக்கர் என்ற வின்செண்ட் அபுபக்கரின் சேவையைப் பாராட்டி அவரது துணைவியாரிடம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார். கள்ளச்சாராயத்தை ஒழிக்க சீரிய பணியாற்றிய திருச்சி நகரம் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு துணை கண்காணிப்பாளர் திரு. ஆர். முருகேசன், வேலூர் மாவட்டம் கே.வி. குப்பம், உதவி ஆய்வாளர் திருமதி. அ. சரஸ்வதி, திருச்சி நகர மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு தலைமை காவலர் திரு. ஏ. பால்ராஜ் ஆகியோருக்கு காந்தியடிகள் காவல் பதக்கங்களை மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வழங்கி சிறப்பித்தார்.

இதனைத் தொடர்ந்து பள்ளி – கல்லூரி மாணவிகள் பங்கேற்ற கண்கவர் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. முதலாவதாக வெலிங்டன் சீமாட்டி மகளிர் மேனிலைப்பள்ளி மாணவிகள் பங்கேற்ற கரகாட்டமும், நுங்கம்பாக்கம் மாநகராட்சி மகளிர் மேனிலைப்பள்ளி மாணவிகள் பங்கேற்ற கிராமிய நடனமும், சில்ரன்ஸ் கார்டன் மகளிர் மேனிலைப்பள்ளி மாணவிகள் பங்கேற்ற கோலாட்டமும், அண்ணாநகர் எஸ்.பி.ஓ.ஏ. மெட்ரிகுலேசன் மேனிலைப்பள்ளி மாணவிகள் பங்கேற்ற மோகினி ஆட்டமும் நடைபெற்றன. காயிதே மில்லத் பெண்கள் கல்லூரி மாணவிகள் பெண்களின் வீரத்தை விளக்கும் வண்ணம் தமிழ் பண்பாட்டுச் சின்னமாம் கண்ணகி, வீரமங்கை ஜான்சிராணி, முன்னாள் பிரதமர் இந்திராகாந்தி ஆகியோர் வேடமணிந்து நடனம் ஆடினர். எத்திராஜ் பெண்கள் கல்லூரி மாணவிகள் பங்கேற்ற மானுட சமுத்திரம் எனும் கலை நிகழ்ச்சியும், எம்.ஓ.பி. வைஷ்ணவா பெண்கள் கல்லூரி மாணவிகள் பங்கேற்ற “கரத்தின் வரங்கள்” எனும் நடன நிகழ்ச்சியும் நடைபெற்றன. பின்னர் தென்னகப் பண்பாட்டு மையத்தின் சார்பில் தஞ்சை குந்தவை நாச்சியார் பெண்கள் கல்லூரி மாணவிகளின் ஒயிலாட்டமும், அரியானா, ராஜஸ்தான் போன்ற மாநிலங்களின் முக்கிய கலை நிகழ்ச்சியான பல்வேறு இசைக் கருவிகளை இசைக்கும் உமர் நடனமும், செய்தித்துறை சார்பில் சிலம்பாட்டம் மற்றும் பொய்க்கால் குதிரை, ஒயிலாட்டம் போன்ற நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

கலை நிகழ்ச்சிகளில் பங்கேற்ற அணிகளில் முதல் மூன்று இடங்களைப்பெற்ற அணிகளுக்கு மேதகு ஆளுநர் திரு. சுர்ஜித்சிங் பர்னாலா அவர்கள் பரிசுகளை வழங்கினார். கலை நிகழ்ச்சிகள் (பள்ளி அளவில்) பிரிவில் முதல் பரிசு மயிலாப்பூர் சில்ரன்ஸ் கார்டன் மகளிர் மேல்நிலைப்பள்ளிக்கும், இரண்டாம் பரிசு நுங்கம்பாக்கம் மகளிர் மேல்நிலைப்பள்ளிக்கும், மூன்றாம் பரிசு அண்ணாநகர் எஸ்.பி.ஓ.ஏ. மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப் பள்ளிக்கும் வழங்கப்பட்டன. கல்லூரி அளவில், முதல் பரிசு காயிதேமில்லத் அரசினர் பெண்கள் கல்லூரிக்கும், இரண்டாம் பரிசு எம்.ஓ.பி. வைஷ்ணவா பெண்கள் கல்லூரிக்கும் வழங்கப்பட்டன.

இதைத் தொடர்ந்து தமிழக அரசின் சார்பில் பல்வேறு துறைகளின் சாதனைகளை விளக்கும் அலங்கார ஊர்திகளின் அணிவகுப்பும் நடைபெற்றது.

செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் நாதஸ்வர மங்கள இசையுடன் செய்தித்துறை ஆற்றிவரும் சாதனைகளை விளக்கும் அலங்கார ஊர்தியும், தமிழகத்தில் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் முதல்வராக பொறுப்பேற்றபின் பெருகி வரும் தொழிற்சாலைகள், அன்னிய முதலீடுகளை ஈர்க்கும் தொழிற் கூடங்கள், தொழில்துறை ஆகியவற்றின் சாதனைகளை விளக்கும் தொழிற்துறை அலங்கார ஊர்தியும், தமிழகம் அமைதிப் பூங்காவாக திகழ்கிறது என்பதை விளக்கிடும் வண்ணம் காவல்துறை ஆற்றிவரும் பணிகளை விளக்கும் அலங்கார ஊர்தியும், வேளாண்துறையில் வளம் கொழிக்கும் வேளாண்துறையின் சாதனை குறித்த அலங்கார ஊர்தியும்,

மாண்புமிகு ஊரக மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்றவுடன் ஊரக வளர்ச்சித்துறை மூலம் கிராமங்கள் முன்னேற்றம், மகளிர் சுயஉதவிக் குழு மூலம் கிராம அபிவிருத்தி திட்டம், அனைத்து வசதிகளும் கொண்ட அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் போன்றவைகளை விளக்கும் ஊரக வளர்ச்சித் துறையின் அலங்கார ஊர்தியும், கூட்டுறவுத் துறையின் அலங்கார ஊர்தியும், மக்கள் நலம் பேணும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் அலங்கார ஊர்தியும், தேசிய ஒருமைப்பாட்டையும் பன்னாட்டு நட்புறவையும் வளர்க்கின்ற சுற்றுலா துறையின் கலைநயம் மிகுந்த அலங்கார ஊர்தியும், வனத்துறையின் அலங்கார ஊர்தியும், தோட்டக் கலையின் அலங்கார ஊர்தியும், மின்சாரத் துறையின் வளர்ச்சிப் பணிகள் குறித்த அலங்கார ஊர்தியும், சமூக நலத்துறையின் மூலம் தாய்மார்களுக்கு ஆற்றி வரும் சீரிய பணிகளை விளக்கும் சமூக நலத்துறையின் அலங்கார ஊர்தியும், அஞ்சல் துறையின் சாதனைகளை விளக்கும் அஞ்சல்துறை அலங்கார ஊர்தியும், ஆதிதிராவிடர் நலத்துறையின் செயல்பாடுகளை விளக்கும் அலங்கார ஊர்தியும், சென்னை மாநகர மக்களின் குடிநீர் தேவையை போக்க, மாண்புமிகு ஊரக மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களின் சீரிய பணிகளை விளக்கும் குடிநீர் மற்றும் வடிக்கால் வாரியத்துறையின் அலங்கார ஊர்தியும், முதலமைச்சர் கலைஞர் அவர்களின் அரசு மீனவர்களுக்கு ஆற்றிவரும் அரும் பெரும் சாதனைகளையும் சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு வழங்கிய நலத்திட்ட உதவிகளையும் விளக்கிடும் மீன்வளத் துறையின் அலங்கார ஊர்தியும், மகளிர் நல மேம்பாடு மற்றும் கைத்தறித்துறையின் அலங்கார ஊர்தியும், தீயணைப்புத் துறையின் தீரமிகு பணிகளை விளக்கிடும் அலங்கார ஊர்தியும் அணிவகுத்து வந்து பார்வையாளர் களின் கவனத்தை ஈர்த்தது.



குடியரசு நாள் விழா அலங்கார ஊர்திகள் அணிவகுப்பில் முதல் பரிசு பெற்ற ஊரக வளர்ச்சி துறைக்கு மேதகு ஆளுநர் அவர்கள், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் பரிசினை வழங்க, ஊரக வளர்ச்சித்துறை செயலாளர் திரு. அசோக் வர்தன் ஷெட்டி, இ.ஆ.ப., அவர்கள் பெற்றுக் கொண்டார். உடன் மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு, ஊரக வளர்ச்சி இயக்குநர் திரு.ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., ஆகியோர் உள்ளனர்.

முதல் பரிசு ஊரக வளர்ச்சித்துறை அலங்கார ஊர்திக்கும், இரண்டாம் பரிசு செய்தி மக்கள் தொடர்புத்துறை அலங்கார ஊர்திக்கும், மூன்றாம் பரிசு தொழில்துறை, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறை, தோட்டக்கலைத் துறை ஆகிய துறைகள் தேர்வு செய்யப்பட்டன.

பின்னர் இந்திய விமானப் படையின் ஆறு அதிவேக வானூர்திகளின் கண்கவர் அணிவகுப்பும் நடைபெற்றது. இவ்விழாவில் முப்படைகளின் தென்னக தலைமை அதிகாரிகள், மத்திய – மாநில அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், அனைத்துக் கட்சிகளின் தலைவர்கள், அரசுத்துறை அதிகாரிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், செய்தியாளர்கள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர். நாட்டுப்பண் ஒலிக்க விழா இனிதே நிறைவடைந்தது.

– ஆசிரியர் குழு, தமிழரசு

★ ★ ★



குடியரசு நாள் விழா அலங்கார ஊர்திகள் அணிவகுப்பில் இரண்டாவது பரிசு பெற்ற செய்தி மக்கள் தொடர்புத் துறைக்கு மேதகு ஆளுநர் அவர்கள், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் பரிசினை வழங்க, தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை செயலாளர் திரு. து. ராசேந்திரன், இ.ஆ.ப., அவர்கள் பெற்றுக் கொண்டார். உடன் மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள், மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு. சி.கோசலராமன், இ.ஆ.ப., ஆகியோர் உள்ளனர்.





# பேரறிஞர் அண்ணாவின் கால் மலரில் காணிக்கையாக!

– கலைஞரின் கவிதாஞ்சலி

9.2.1969 அன்று சென்னை வானொலியில்...

எம் அண்ணா... இதய மன்னா...
படைக்கஞ்சாத் தம்பியர் உண்டென்று
பகர்ந்தாயே,
எமை விடுத்துப் பெரும்பயணம் ஏன்
தொடர்ந்தாய்... ?
உன் கண்ணொளியின் கதகதப்பில்
வளர்ந்தோமே!
எம் கண்ணெல்லாம் குளமாக ஏன்
மாற்றிவிட்டாய் ?
நிழல் நீ தான் என்றிருந்தோம்; நீ கடல்
நிலத்துக்குள் நிழல் தேடப் போய்விட்டாய்;
நியாயந்தானா ?
கடலடியில் இருக்கின்ற முத்தெல்லாம்
முத்தல்ல;
நான் தானடா நன்முத்து எனச் சொல்லிக்
கடற்கரையில் உறங்குதியோ ?
நாத இசை கொட்டுகின்ற
நாவை ஏன் சுருட்டிக் கொண்டாய் ?
விரல் அசைத்து எழுத்துலகில்
வித்தைகளைச் செய்தாயே; அந்த
விரலை ஏன் மடக்கிக் கொண்டாய் ?
கண் மூடிக் கொண்டு நீ சிந்திக்கும்
பேரழகைப் பார்த்துள்ளேன்... இன்று
மண் மூடிக் கொண்டுன்னைப் பார்க்காமல்
தடுப்பதென்ன கொடுமை!
கொடுமைக்கு முடிவு கண்டாய் ; எமைக்
கொடுமைக்கு ஆளாக்கி ஏன் சென்றாய் ?
எதையும் தாங்கும் இதயம் வேண்டுமென்றாய்

இதையும் தாங்க ஏதண்ணா எமக்கிதயம் ?
கடற்கரையில் காற்று
வாங்கியது போதுமண்ணா!
எழுந்து வா எம்மண்ணா!
வரமாட்டாய் ; வரமாட்டாய்;
இயற்கையின் சதி எமக்குத் தெரியும்
அண்ணா...நீ
இருக்குமிடந் தேடி யான் வரும் வரையில்
இரவலாக உன் இதயத்தைத்
தந்திடண்ணா...
நான் வரும்போது கையோடு கொணர்ந்து
அஃதை
உன் கால் மலரில் வைப்பேன் அண்ணா...



கிராமங்களுக்கான அனைத்துத் தேவைகளையும் நிறைவு செய்திடும்

# அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்

நீண்ட நேரம் என்னுடைய குரல் வளத்தோடு பேச முடியாத சூழ்நிலையில், இந்த நிகழ்ச்சிக்கு எப்படியும் வந்தே தீரவேண்டும் என்ற உறுதியோடு பிற்பகல் சென்னையில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியை முடித்துவிட்டு இங்கே வந்திருக்கின்றோம். வருகிற வழியெல்லாம் காரில் சொல்லிக் கொண்டே வந்தேன் . என் குரல் சரியாக இல்லை. இரண்டு வார்த்தைகூட பேச முடியாத அளவிற்கு தொண்டை பாதிக்கப்பட்டிருக்கிறது. கடந்த ஒரு மாத காலமாக ஒவ்வொரு நாளும் கூட்டங்களில், நிகழ்ச்சிகளில் பேசிப் பேசி, வலியெடுத்துப்போன தொண்டை, பேசுவதற்கு இன்றைக்கு நிச்சயமாக வழி இருக்காது என்று சொல்லிக் கொண்டே வந்தேன்.

பலதரப்பட்ட மக்கள் வந்து குழுமியிருக்கின்ற இந்த இடத்தில் உங்களையெல்லாம் நான் கைஜாடை காட்டி விட்டு, ஒரு நொடியிலே விடைபெற்றுச் சென்று ஏமாற்ற விரும்பவில்லை.

அதனால்தான் என் தொண்டை என்னதான் புண்ணாக இருந்தாலும்கூட அந்தப் புண் அதிகமாக ஆனாலும்கூட பரவாயில்லை, சில கருத்துக்களை உங்களுடைய இதயத்திலே பதிய வைப்பது என்கின்ற முடிவோடு ஒன்றிரண்டு செய்திகளை மாத்திரம் சொல்ல விரும்புகிறேன்.

உள்ளாட்சித்துறை அமைச்சர் தம்பி ஸ்டாலின், செய்தி உங்களுக்கு அனுப்பி இருப்பதைப்போல அல்லது மலரில் எழுதியிருப்பதைப்போல கிராமங்கள் முன்னேற்றம் அடைந்தால்தான் நகரங்கள் உருப்படும். இதை எப்படி நான் சொல்ல வேண்டுமென்றால் இன்றைக்கு நகரங்கள், கிராமங்கள் என்று பேசிப்பார்த்தால் நகரங்கள் வசதிகள் பெற்ற இடங்களாகவும் வசதிகள் பல கொண்ட இடங்களாகவும் இருப்பதை காண்கின்றோம். அதே நேரத்தில் சிற்றூர், பேரூர், குக்கிராமங்கள் எனப்படுகின்ற மொத்தமாக சொல்ல வேண்டுமேயானால், கிராமங்கள் எல்லாம் முன்னேறாத காரணத்தினால்தான் நகரங்களும் பாழாகின்றன.

முன்னேற வேண்டும் என்று கருதுகின்ற கிராமத்து இளைஞர்கள் பிழைப்பைத் தேடி நகர்ப்புறத்திற்கு வருகின்ற வாலிபர்கள் ஏதாவது தொழில் நடத்தி குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டும் என்று கருதுகின்ற கிராமத்து குடும்பத் தலைவர், இவர்கள் எல்லாம் நகர்ப்புறத்திலே குடியேறி நகரங்கள் நெருக்கடிக்கு



இங்கே வந்து இந்த பந்தலையும், பந்தலில் செய்யப்பட்டிருக்கின்ற அலங்காரங்களையும், இங்கே காட்டப்படுகின்ற எழுச்சியையும், நாங்கள் வரும்போது இங்கே நடைபெற்றுக் கொண்டு இருந்த இசை நிகழ்ச்சியையும், அந்த இசை நிகழ்ச்சியிலே பாடப்பட்ட பாடல் வரிகளையும் கண்டு, கேட்டு, உங்களோடு ஒருவனாக அமர்ந்து இவைகளையெல்லாம் நான் ரசித்த பொழுது, தம்பி துரைமுருகனிடத்திலே அடிக்கடி சொன்னேன், நண்பர் வீராசாமி இடத்திலும் சொன்னேன், எனக்குப் பதிலாக நீங்களே சொல்லிவிடுங்கள். இன்றைக்கு முதலமைச்சரால் பேச இயலாது. நீண்ட நேரம் நீங்களே பேசுங்கள் என்று சொன்னேன். ஆனால் அவர்களும் அதற்காக வருந்தினார்கள். இருந்தாலும் இவ்வளவு பெரிய ஏற்பாடு கிராமப்புறங்களில் இருந்து பல்லாயிரக்கணக்கான மக்கள் சாரை சாரையாக சாமான்ய மக்கள், விவசாயப் பெருங்குடி மக்கள், வணிகர்கள் என்று

ஆளாகி அதன் காரணமாக நகரங்கள் கெட்டு கிராமங்களுக்கு வருகின்ற சூழ்நிலை நம்முடைய நாட்டிலே உருவாகியிருக்கிறது.

வெளிநாடுகளுக்குச் சென்று ஒரு கிராமத்தைப் பார்த்தால் அங்கே நகரத்திற்கும், கிராமத்திற்கும் வித்தியாசம் தெரியாத அளவிற்கு, கிராமங்களிலே அழகான வீதிகள், தெருக்கள், கடைகள், உணவு விடுதிகள், தங்குமிடங்கள், இரயிலடிகள், பேருந்து நிலையங்கள், சாலைகள் இத்தனையும் நகரத்திற்கு நிகராக கிராமங்களில் இருக்கிறது. அதனால் கிராமத்து மக்கள் நகரத்திற்குச் செல்ல வேண்டும், அங்கே குடியேற வேண்டும் என்ற ஆசையால் தூண்டப்படுவதில்லை. அதனால் நகரங்களில் நெருக்கடி ஏற்படுவதில்லை. கிராமங்களே நகரத்தைப் போல உருவாகும்பொழுது, கிராம மக்களுக்கு நகர வாழ்க்கை தேவையில்லாமல் போய்விடுகிறது.



அதனால்தான் கிராமங்களையெல்லாம் இதுபோன்ற ஒரு திட்டத்தால் – அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்கின்ற திட்டத்தால் கிராமங்களையெல்லாம் முன்னேற்ற வேண்டும்; அவர்களுடைய தேவைகளையெல்லாம் நிறைவு செய்ய வேண்டும்; சாலையா, தண்ணீரா, மருத்துவமனையா, பள்ளிக் கூடமா, கல்லூரியா என்று என்னென்ன கிராமங்களிலே வரவேண்டும் என்று கருதுகிறோமோ, அவைகளையெல்லாம் கொண்டு வர இது போன்ற தொகுப்புத் திட்டங்கள் தேவை.

நான் உங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். பல பேருக்கு அது மறந்து போய் இருக்கும். அறிஞர் அண்ணா அவர்களுடைய மறைவிற்குப் பிறகு, நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு, ஒவ்வொரு மாவட்டத்திலும் கிராமத்து மக்களை இணைக்கின்ற பகுதிகளி லெல்லாம் கல்லூரிகளை உருவாக்கினேன். அப்படி கிராமங்களை இணைக்கின்ற கல்லூரிகள் உருவாக்கப்பட்ட காரணத்தினால்தான் மாணவர்கள் – பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மாணவர்கள் பக்கத்திலே உள்ள கல்லூரிகளுக்குச் சென்று படிக்க வசதி வாய்ப்புகள் எல்லாம் ஏற்பட்டது. இதை நாம் மறந்து விடக்கூடாது. அப்படி கல்லூரிகள் பல ஏற்பட்டு இன்றைக்கு அவைகள் எல்லாம் பல்கலைக் கழகங்களுடன் இணைக்கப் பட்டிருக்கின்ற காட்சியைக் காண்கிறோம்.

பெருந்தலைவர் காமராஜர், பிள்ளைகள் படிக்காமல் மாடு மேய்க்கக்கூடாது என்பதற்காக, கிராமப்புறங்களிலே பள்ளிக் கூடங்களை தொடங்கச் சொன்னார். அந்த அடையாளத்தை சரித்திரத்திலே பதிய வைக்கத்தான், காமராஜர் பிறந்தநாளை “கல்வி வளர்ச்சி நாள்” என்று இந்த ஆட்சி கொண்டாடுகின்றது. சட்டமே அதற்காக செய்யப் பட்டிருக்கிறது. அப்படி கிராமப் புறங்களிலே பள்ளிக்கூடங்கள் உருவாகி அந்த பள்ளிக்கூடங்களில் படிக்கின்றவர் களெல்லாம் ஒரு கல்லூரிக்குச் செல்ல கிராமங்கள் சூழ்ந்த பகுதியிலேயே கல்லூரிகள் அமைத்து அப்படி உருவான கல்லூரிகளிலே இருந்து வெளி கிளம்புகின்ற மாணவர்களுக்கு பல்கலைக் கழகங்கள் அமைத்து இன்றைக்கு தமிழ்நாடு, கல்வியிலே சிறந்த மாநிலங்களிலே ஒன்றாக விளங்குகின்றது. என்றால், நாம் கிராமத்தைச் சேர்ந்த பகுதிகளிலே கல்லூரிகளை அமைந்திருப்பது தான் காரணம்.

இதுபோதாது, இன்னும் நிறைய அமைய வேண்டும், உருவாக்க வேண்டும். அந்த முயற்சிகளை இந்த அரசு நிச்சயமாகத் தொடங்கும், தொடரும் என்ற உறுதியை இந்த நிகழ்ச்சியிலே நான் இங்கே எடுத்துக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். இன்னும் நிறைய பல்கலைக் கழகங்கள் மாநிலத்திலே உருவாக வேண்டும். பல்கலைக்கழகங்கள் உருவாக அடிப்படை வேர்களாக கல்லூரிகள், இன்னும் நிறைய உருவாக வேண்டும். அந்த கல்விக் கூடங்கள், மருத்துவமனைகள் இவைகள் எல்லாம் இணைந்த இடங்களாக கிராமங்கள் இருந்தாக வேண்டும். கிராமங்கள் ஒரு நாட்டின் முதுகெலும்பு மறந்து விடக்கூடாது. உள்ளாட்சித்துறை அமைச்சருக்கு முதுகெலும்பிலே ஏற்பட்டிருக்கின்ற சிறு காயத்தால் அவர் இப்போது நிமிர்ந்து உட்கார முடியவில்லை. இன்னும் கொஞ்ச நாளைக்கு படுக்கையிலே இருக்க வேண்டும். அதுபோல கிராமங்களுக்கு இந்த முதுகெலும்புகளுக்கு சிறு ஊனம் ஏற்பட்டால், காயம் ஏற்பட்டால் நகரங்கள் நகராது, நாடு நகராது. எனவே நாடு நகர, நகரங்கள் நகர, முதுகெலும்பாக இருக்கின்ற கிராமப்புறங்கள் சீர் பெற வேண்டும் வசதி பெற வேண்டும் நலம் பெற வேண்டும்.

அப்படி நலன் பெறுகின்ற இந்தத் திட்டத்தைத்தான் அறிஞர் அண்ணா அவர்களின் பெயரால் அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்று நாம் உருவாக்கியிருக்கின்றோம். இது இடைக்காலத்திலே கடந்த கால ஆட்சியிலே இந்தத் திட்டத்திற்கு விடை கொடுத்து அனுப்பி விட்டார்கள். அவர்கள் விடை கொடுத்த திட்டத்தை நல்ல திட்டங்களை யெல்லாம் நாம் மீண்டும் கொண்டு வருகின்றோம். மீண்டும் இவைகள் எல்லாம் வருவதற்கு காரணம் மீண்டும் நீங்கள் எங்களை கொண்டு வந்து உட்கார வைத்திருப்பதுதான். உங்களால் தான் இதுபோன்ற திட்டங்கள் இப்போது நிறைவேறுகின்றன. நீங்கள் மீண்டும் தவறை இழைத்திருப்பீர் களேயானால் தவறு தொடர்ந்து கொண்டே போயிருக்கும் தமிழ்நாடு வீழ்ந்து கொண்டே போயிருக்கும்.

தமிழ்நாட்டை வீழ்ச்சியில் இருந்து காப்பாற்றிய பெருமை எங்களுக்கு அல்ல, எங்களையெல்லாம் ஆதரித்து, எங்களுக்கு வாக்களித்து எங்களை இந்தப் பொறுப்பிலே உட்காரவைத்த உங்களுக்குதான் அந்தப் பெருமை. அந்தப் பெருமைக்குரிய உங்களை யெல்லாம் சந்திப்பதிலே மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன், நீங்கள் எவ்வளவு உற்சாகமாக இருக்கின்றீர்கள், எந்த அளவிற்கு நீங்கள் ஆர்வத்துடன் இருக்கின்றீர்கள் என்பதற்கு இந்தப் பந்தல் – இந்தப் பந்தலிலே காணப்படுகின்ற எழுச்சி, மகிழ்ச்சி, இவ்வளவு அலங்காரங்கள், இவ்வளவு ஏற்பாடுகள் இவைகளுக்கெல்லாம் காரணமான அரசு அதிகாரிகள், மாவட்டத்திலே சட்டமன்ற உறுப்பினராக இருந்து பணியாற்றுகின்ற தம்பி காந்தியும், அவர்களையெல்லாம் ஊக்கப்படுத்தி உற்சாகப்படுத்தி அவர்களுடைய உழைப்பை எல்லாம் பயன் படுத்தி இந்த அருமையான உற்சாகமான விழாவை நடத்திய தம்பி துரைமுருகன் நன்றிக்குரியவர்கள். அவரால் நன்றி சொல்லப்பட்ட பலபேருக்கும் நான் வாழ்த்துக்களையும், பாராட்டுக் களையும் தெரிவித்து, இந்த அளவாவது உங்களோடு உரையாட முடிந்ததே என்ற களிப்போடு விடைபெற்றுக் கொள்கிறேன்.

–21.01.2007 அன்று அரக்கோணத்தில்
நடைபெற்ற அனைத்துக் கிராம
அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் தொடக்க
விழாவில் மாண்புமிகு
தமிழக முதலமைச்சர்
கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்
ஆற்றிய உரை.

# பிற்படுத்தப்பட்ட–மிகப் பிற்படுத்தப்பட்ட – தாழ்த்தப்பட்ட – இதர வகுப்பினரைச் சேர்ந்த 4 இலட்சத்து 84 ஆயிரம் பள்ளி மாணவ – மாணவியர்க்கு ரூ.102 கோடியே 82 இலட்சம் மதிப்பில் இலவச மிதிவண்டிகள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
கலைஞர் **மு.கருணாநிதி** அவர்கள் வழங்கினார்



**செ**ன்னை, தலைமைச் செயலகத்தில் 19.01.2007 அன்று, பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப் பட்ட, தாழ்த்தப்பட்ட மற்றும் இதர வகுப்பினரைச் சேர்ந்த பள்ளி மாணவ–மாணவியர்க்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர். மு. கருணாநிதி அவர்கள் இலவச மிதிவண்டிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியின் போது, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :

பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த 95,062 மாணவர்களுக்கும், 1,17,199 மாணவிகளுக்குமாக மொத்தம் 2 இலட்சத்து 12 ஆயிரத்து 261 பேருக்கு மிதிவண்டிகள் வழங்கப்படுகின்றன. இதற்கான மொத்த மதிப்பீடு 45 கோடியே 21 இலட்சம் ரூபாயாகும்.

மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சேர்ந்த 66,006 மாணவர்களுக்கும், 68,752 மாணவிகளுக்குமாக மொத்தம் 1 இலட்சத்து 34 ஆயிரத்து 758 பேருக்கு, 28 கோடியே 57 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான மிதிவண்டிகள் வழங்கப் படுகின்றன.

எனவே பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த 1 இலட்சத்து 61 ஆயிரத்து 68 மாணவர்களுக்கும், 1 இலட்சத்து 85 ஆயிரத்து 951 மாணவிகளுக்குமாக சேர்த்து மொத்தம் 3 இலட்சத்து 47 ஆயிரத்து 19 பேருக்கு, 73 கோடியே 78 இலட்சம் ரூபாய் செலவில் மிதிவண்டிகள் வழங்கப்படுகின்றன.

தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த 58,815 மாணவர்களுக்கும், 65,609 மாணவிகளுக்குமாகச் சேர்த்து 1 இலட்சத்து 24 ஆயிரத்து 424 பேருக்கு, 26 கோடியே 37 இலட்சம் ரூபாய் செலவில் மிதிவண்டிகள் வழங்கப்படவுள்ளன.

இதர வகுப்பினர் என்ற தலைப்பில் 5,118 மாணவர் களுக்கும், 7,496 மாணவிகளுக்குமாகச் சேர்த்து 12 ஆயிரத்து 614 பேருக்கு, 2 கோடியே 67 இலட்சம் செலவில் மிதிவண்டிகள் வழங்கப்படுகின்றன.

2006–2007 ஆம் ஆண்டில் மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் ஒட்டு மொத்தமாக 2,25,001 மாணவர்களுக்கும், 2,59,056 மாணவிகளுக்கும் சேர்த்து 4 இலட்சத்து 84 ஆயிரத்து 57 பேருக்கு, 102 கோடியே 82 இலட்சம் ரூபாய் செலவில் மிதிவண்டிகள் வழங்கப்படுகின்றன.

இவ்வாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர், திரு. இரா.ஆவுடையப்பன் அவர்கள், மாண்புமிகு அமைச்சர் திரு. ஆற்காடு நா. வீராசாமி, டாக்டர் க. பொன்முடி, திரு.எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம், திருமதி ஆ. தமிழரசி மற்றும் தலைமைச் செயலாளர் திரு.எல்.கே.திரிபாதி,இ.ஆ.ப., ஆகியோர் கலந்துகொண்டனர். ■





# இந்திய அரசியல் சட்டம் காலத்தின் தேவைக்கேற்ப புதியதாக இயற்றப்பட வேண்டும்

மேதகு தமிழக ஆளுநர் திரு. சுர்ஜித்சிங் பர்னாலா அவர்கள் தமிழக சட்டப்பேரவையில் ஆற்றிய உரை (20.1.2007)

**மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பினர்களே,**

**வணக்கம்.**

13ஆவது சட்டப்பேரவையின் நான்காவது கூட்டத் தொடரில், உங்கள் அனைவருக்கும் எனது அன்பான புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்து, இந்த 2007ஆம் ஆண்டிலும் தமிழக அரசின் சிறப்புமிக்க திட்டங்களால் மாநிலத்தின் பொருளாதாரம் மேம்பட்டு, மக்களின் வாழ்க்கைத் தரம் உயரும் என்ற நம்பிக்கையோடு இவ்வுரையைத் தொடங்குகின்றேன்.

2. தமிழ்நாட்டு மக்களின் எதிர்பார்ப்புகளை உள்ளடக்கிய திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையே இந்த அரசின் முதல் நிதிநிலை அறிக்கையாக அமையப்பெற்று, பதவியேற்ற எட்டு மாதங்களுக்குள்ளாகவே, "சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம்" என்ற இந்த அரசின் உறுதிமொழி மெய்ப்பிக்கப்பட்டுள்ளதை அனைவரும் அறிவீர்.

3. நீண்ட இடைவெளிக்குப் பிறகு, 1996ஆம் ஆண்டு, உள்ளாட்சி அமைப்புகளுக்கு முதல் முறையாகத் தேர்தல் நடத்தி இந்த அமைப்புகளில் மகளிருக்கு 33 சதவிகித இட ஒதுக்கீட்டையும் இந்த அரசு அளித்தது. அந்த உள்ளாட்சித் தேர்தலிலும், அடுத்து 2001ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலிலும், பாப்பாபட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம் மற்றும் கொட்டக்கச்சியேந்தல் ஆகிய ஊராட்சிகளில் தாழ்த்தப்பட்டோருக்குப் பல ஆண்டுகளாக மறுக்கப்பட்ட உரிமைகளை, இப்போது 2006ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில் மீட்டெடுத்து, அனைத்து சமூகத்தினரும் ஒருங்கிணைந்து முன்னேற்றப் பாதையில் பீடுநடை போட வழிவகுத்த இந்த அரசின் சாதனை, ஜனநாயக வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியதாகும். இது ஜனநாயகத்துக்கு மட்டுமன்றி, சமூக நீதிக்கான போராட்டத்திற்கு அனைத்துக் கட்சிகள் கொடுத்த குரலுக்கும் கிடைத்த வெற்றியாகும்.

4. அறிஞர் அண்ணா வகுத்தளித்த மாநில சுயாட்சிக் கொள்கையை முழு முதற் கொள்கையாக மனத்தில் பதித்து செயல்பட்டு வரும் இந்த அரசு, உறவுக்குக் கை கொடுத்து, உரிமைக்குக் குரல் கொடுத்து நமது மாநிலத்திற்கு மத்திய அரசிடமிருந்து பெறப்பட வேண்டிய நன்மைகளையும் உரிமைகளையும் பெறுவதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும்.

5. "இந்திய அரசியல் சட்டம் உயர்ந்தோரால் உருவாக்கப்பட்டது. ஆனால் இந்திய அரசியல் சட்டம் பற்றிய மறுசிந்தனை – மறுஆய்வு –மறுமதிப்பீடு செய்வதற்கான நேரம் வந்துவிட்டது. (Stalwarts of this country sat and devised our Constitution. But the time has come for rethinking, reappraisal and revaluation)" என்று 40 ஆண்டுகளுக்கு முன்பே மாநிலங்களவையில் அறிஞர் அண்ணா தமது முதல் உரையிலேயே தெளிவுபடுத்தினார். இந்திய அரசியல் சட்டம் திருத்தப்பட்டு புதியதாக எழுதப்பட வேண்டும் என்று பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்களும், சட்ட விற்பன்னர்களும் கருத்துத் தெரிவித்து வருகிறார்கள். விடுதலை வேட்கை பெருகி, அந்நியர் ஆதிக்கத்தினின்றும் விடுபட்டு, சுதந்திரம் பெற்ற சூழலில் அரசியல் மாமேதை அண்ணல் அம்பேத்கர் போன்ற சரித்திரம் படைத்த சான்றோர்களால், நமது இந்திய அரசியல் சட்டம் உருவாக்கப்பட்டதெனினும்; அதில், அவ்வப்போது அரும்பிய தவிர்க்க முடியாத தேவைகளையொட்டி, இதுவரை ஏறத்தாழ 100 முறை திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. மனித இனப் பரிணாம வளர்ச்சியில் மாற்றமென்பது மாற்றிட இயலாதது. பல்வேறு நாடுகளில், பலமுறை அரசியல் சட்டங்கள் புதியதாக எழுதப்பட்டுள்ளன. கடந்த 50 ஆண்டுகளில், இந்தியத் திருநாட்டின் அரசியல், சமூக, பொருளாதாரப் பரிமாணங்களும், உழைக்கும் வர்க்கத்தின் தேவைகளும் முற்றிலுமாக மாறிவிட்டன. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியின மக்கள் தாம் போராடிப் பெற்றிடும் சமூக நீதியைப் பேணிக் காப்பதற்கும், மேலும் சிறுபான்மையினர் உரிமை மற்றும் பெண்ணுரிமை உள்ளிட்ட சமூகநீதியை உறுதி செய்வதற்கும், கம்பி மீது நடப்பதைப் போன்ற நிலைக்கு ஆளாகியிருக்கிறார்கள். உண்மையான கூட்டாட்சித் தத்துவம் நிலைபெறுவதற்கேற்பவும், தட்டுத் தடங்கலின்றி சமூக நீதிச் சக்கரம் சுழலவும், மாநிலங்களுக்கு அதிகாரப்பரவல், மத்திய அரசு மற்றும் மாநில அரசுகளுக்கான அதிகாரப் பட்டியல்களின் மறுபரிசீலனை ஆகியவற்றிற்கான அவசியம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. எனவே, இவை போன்ற பல்வேறு காரணங்களின் அடிப்படையில் இந்திய ஒற்றுமை, ஒருமைப்பாடு, இறையாண்மை ஆகியவற்றைப் பாதுகாக்கும் வகையில் இந்திய அரசியல் சட்டம் காலத்தின் தேவைக்கேற்ப புதியதாக இயற்றப்பட வேண்டும் என்று மத்திய அரசை இந்த அரசு வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

நமது அரசியலமைப்பில் மக்களுக்குத் தேவையான நற்பணிகளை (Services) ஆற்றும் பொறுப்பு மாநில அரசுகளுக்கே இருந்தாலும், வரி விதிப்பு அதிகாரம் பெருமளவு மத்திய அரசிற்கே உள்ளது. இந்த வகையில், நாட்டின் பொருளாதாரத்தில் நற்பணிகளின் பங்கு தொடர்ந்து அதிகரித்து வருவதையும், தற்போது மைய அரசால் விதிக்கப்படும் நற்பணி வரி (Service Tax) மூலம் கிடைக்கப்பெறும் வருவாய் மிக விரைவாகப் பெருகி வருவதையும் நாம் அனைவரும் அறிவோம். மக்களுக்கான அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றும் பெரும் பொறுப்பு மக்களுக்கு நெருக்கமாக உள்ள மாநில அரசுகளுக்கே உள்ளது என்பதைக் கருத்தில் கொண்டு, நற்பணி வரி (Service Tax) விதிக்கும் அதிகாரத்தை மாநில அரசுகளுக்கே அளிக்க வேண்டும் என்று தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார். இதற்குத்

> **"மக்களுக்கான அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றும் பெரும் பொறுப்பு மக்களுக்கு நெருக்கமாக உள்ள மாநில அரசுகளுக்கே உள்ளது என்பதைக் கருத்தில் கொண்டு, நற்பணி வரி (Service Tax) விதிக்கும் அதிகாரத்தை மாநில அரசுகளுக்கே அளிக்க வேண்டும்" என்று தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்**

தேவையான அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்தை மைய அரசு மேற்கொள்ள வேண்டும் என்று இவ்வரசு வலியுறுத்துகிறது.

7. அண்டை மாநிலங்களிடையே சுமூகமான உறவு நிலவுவதற்கான இந்த அரசின் அணுகுமுறையின் படியும், உச்ச நீதிமன்றம் தெரிவித்த கருத்தின் அடிப்படையிலும், முல்லைப் பெரியாறு பிரச்சினை குறித்து கேரள அரசுடன் தமிழ்நாடு அரசு பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டும் எந்தவித முன்னேற்றமும் ஏற்படாத காரணத்தினால், உச்ச நீதிமன்றத்தை அணுகுவதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலைக்கு இந்த அரசு தள்ளப்பட்டுள்ளது. தென் மாவட்ட விவசாயிகளின் முக்கிய வாழ்வாதாரம் பற்றியதான இந்தப் பிரச்சினையில், அவர்களின் உரிமைகளை முழுமையாகக் காத்திடத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் இந்த அரசு எடுத்துள்ளது.

8. தமிழகத்தின் கோரிக்கையை ஏற்று சமூக நீதிக் காவலர் திரு.வி.பி.சிங் அவர்கள் பாரதப் பிரதமராக இருந்தபோது அமைக்கப்பட்ட காவிரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பினை எதிர்பார்த்து, கடந்த 16 ஆண்டுகளாக தமிழ்நாட்டின் விவசாயப் பெருமக்கள் காத்திருக்கும் நிலையில், அந்த இறுதித் தீர்ப்பு வரும் பிப்ரவரி 5ஆம் நாள்

வழங்கப்படவுள்ளது. இத்தீர்ப்பு, தமிழக விவசாயிகளுக்கு வாழ்வளிக்கும் நல்ல தீர்ப்பாக அமையும் என்று எதிர்பார்க்கிறோம்.

. பதினொன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலம் வரும் 2007ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் தொடங்கவுள்ளது. 9.12.2006 அன்று நடந்த தேசிய வளர்ச்சிக் குழுவின் பதினொன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் திட்ட அணுகுமுறை விவாதத்தில் அனைத்துப் பிரிவினரின் வாழ்க்கைத் தரமும் உயரும் வகையிலான வளர்ச்சியைக் குறிக்கோளாகக் கொண்டு இத்திட்டத்தைச் செயல்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

10. ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ரூபாய் 25,000 கோடியாக இருந்த திட்ட ஒதுக்கீடு, பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ரூபாய் 40,000 கோடியாக 60 சதவிகித அளவிற்கு உயர்த்தப்பட்டது. இந்தப் பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட ஒதுக்கீட்டை 100 சதவிகிதம் உயர்த்தி, பதினொன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், ரூபாய் 80,000 கோடி அளவிற்கு அறுதியிட்டு, திட்டப் பணிகளை செயல்படுத்த இந்த அரசு உறுதி பூண்டுள்ளது. பதினொன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மாநிலப் பொருளாதாரத்தைச் சராசரியாக ஆண்டொன்றுக்கு 9 சதவிகிதம் அளவிற்கு வளர்ச்சி அடையச் செய்வதே இந்த அரசின் குறிக்கோளாகும்.

“ பதினொன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மாநிலப் பொருளாதாரத்தைச் சராசரியாக ஆண்டொன்றுக்கு 9 சதவிகிதம் அளவிற்கு வளர்ச்சி அடையச் செய்வதே இந்த அரசின் குறிக்கோளாகும். ”

11. ஓர் ஒப்பீட்டுப் புள்ளி விவரத்தின்படி; இந்த அரசு பதவியேற்ற காலந்தொட்டு குற்றங்கள், சட்டம் ஒழுங்குப் பிரச்சினைகள் ஆகியன வெகுவாகக் குறைந்துள்ளன. காவல்துறையை வலுப்படுத்த ஏற்கெனவே இரண்டு முறை போலீஸ் கமிஷன்கள் அமைத்ததுபோல், தற்போது மூன்றாவது போலீஸ் கமிஷனையும் அமைத்துள்ளோம். சட்டம் ஒழுங்கைச் சீர்குலைக்க முனையும் தீயசக்திகள் எதுவாயினும் அவற்றை அடக்கி ஒடுக்கவும், அதே நேரத்தில் மக்களின் தோழனாகத் திகழவும் உரிய பணித்திறன்மிக்கதாகக் காவல்துறை விளங்கிட ஆவன செய்யப்படும்.

12. தொடர்ந்து இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளின் சுமார் 7,000 கோடி ரூபாய் கூட்டுறவுக் கடன்களை ரத்து செய்து உழவர்களின் வாழ்வில் ஒளியேற்றி, வேளாண்துறையில் ஏற்பட்டுள்ள தேக்கத்தை முழுமையாக அகற்றிடத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறோம். இதன் விளைவாக, கடந்த சில ஆண்டுகளில் 2006ஆம் ஆண்டில்தான், முதல் முறையாகக் குறுவை பயிரும், பெரும் சாதனையாகச் சம்பாப் பயிரும் சாகுபடி செய்யப்பட்டுள்ளது என்பது மிகுந்த மகிழ்ச்சியை அளிப்பதாகும்.

13. 56 சதவிகித மக்கள் வேளாண்துறையைச் சார்ந்துள்ள சூழ்நிலையில், வரும் ஆண்டுகளில் வேளாண்மைத் துறை குறைந்தபட்சம் 4 சதவிகித வளர்ச்சியை எட்டுவதை இலக்காகக் கொண்டு செயல்படுவோம். விவசாயத்தை நம்பியுள்ள குடும்பங்களில் உள்ள இளைஞர்கள், தொழில் துறை மற்றும் நற்பணித் துறை (Service Sector) ஆகியவற்றில் இன்று காணப்படும் உயர் வளர்ச்சியின் பயன்களை அடைய உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வோம்.

14. நிலையான வேளாண் வளர்ச்சியை உறுதி செய்து, கிராமப்புற ஏழை எளியவர்க்கு தொடர்ந்து வேலைவாய்ப்புகளை உருவாக்க, வேளாண் தொழிலுக்கு இன்றியமையாத் தேவையான நீர் ஆதாரங்கள் மேம்படுத்தப்பட வேண்டும். நமது நாட்டில், ஒரு பக்கம் வாட்டும் வறட்சியும் மறுபக்கம் வெள்ளப் பெருக்கினால் கடும் சேதமும் ஏற்பட்டு வருவதையும், அதே நேரத்தில், ஆண்டுதோறும் பெருமளவு நீர் யாருக்கும் பயன்படாமல் கடலில் கலந்து, சிறிதளவே கழனிக்குப் பயன்படும் நிலையையும் நாம் காண்கிறோம். இச்சூழலில், தமிழ்நாடு போன்ற நீர்ப் பற்றாக்குறை உள்ள மாநிலங்களின் வேளாண் வளர்ச்சிக்குத் தலையாயத் தேவையான தேசிய நதி நீர் இணைப்புத் திட்டத்தை விரைந்து செயல்படுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 9.12.2006 அன்று நடந்த தேசிய வளர்ச்சிக் குழு கூட்டத்தில் வேண்டுகோள் விடுத்துள்ளார். இத்திட்டத்தை உடனடியாகச் செயல்படுத்தவும், 11-ஆவது ஐந்தாண்டுத் திட்டத்தில் உரிய நிதி ஒதுக்கீடு செய்யவும் மத்திய அரசை இந்த அரசு தொடர்ந்து வலியுறுத்தும்.

“ தமிழ்நாடு போன்ற நீர்ப் பற்றாக்குறை உள்ள மாநிலங்களின் வேளாண் வளர்ச்சிக்குத் தலையாயத் தேவையான தேசிய [illegible] ”

15. பாசன வேளாண்மையை நவீனப்படுத்தவும் மற்றும் நீர்வள ஆதாரங்கள் மேலாண்மையைச் செயல்படுத்தவும் உலக வங்கியின் நிதியுதவி குறித்த பேச்சுவார்த்தைகள் 2006ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முடிவுற்றுள்ளன. இந்தத் திட்டத்திற்கான உலக வங்கியின் ஒப்புதல் விரைவில் எதிர்பார்க்கப்படுகிறது. 2007-2008ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படும் இத்திட்டத்தின்கீழ், நீர்ப்பாசன வசதிகள் மேம்படுத்தப்பட்டு 6 இலட்சம் எக்டேர் விவசாய நிலங்கள் பயனடையும். பொதுப்பணித் துறை, வேளாண்மைத் துறை, கால்நடைத் துறை, மீன்வளத் துறை போன்றவை ஒருங்கிணைந்து செயலாற்றி, விவசாயிகளின் வருவாயைப் பெருக்கும் வகையில் இந்தப் பல்நோக்குத் திட்டம் செயல்படுத்தப்படும்.

16. விவசாயிகளின் வாழ்க்கைத் தரம் உயர வேண்டும் என்றால் அவர்களின் வருவாய் உயர வேண்டும். இந்த நோக்கத்தோடு, தோட்டப் பயிர்கள் போன்ற அதிக வருவாய் ஈட்டக்கூடிய பயிர்களை விளைவித்தல் மற்றும் வேளாண்மை சார்ந்த கால்நடை மற்றும் மீன் வளர்த்தல் ஆகியவற்றின் மூலம், வேளாண் பெருமக்களின் வருவாயைப் பெருக்கும் வகையில் அரசின் திட்டங்கள் செயல்படுத்தப்படும். நீரைச் சிக்கனமாக பயன்படுத்தும் நோக்குடன் துல்லிய நீர்ப்பாசன முறைகளுக்கு (Micro Irrigation) ஊக்கம் அளிக்கப்படும்.

17. நிலமற்ற விவசாயக் குடும்பங்களுக்குத் தரிசு நிலத்தைப் பண்படுத்தி இலவசமாக வழங்கும் திட்டத்தின் முதல் இரண்டு கட்டங்களில், ஐம்பதாயிரம் ஏக்கர் நிலங்கள் பண்படுத்தப்பட்டு, ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு வழங்கப் பட்டுள்ளன. நிலமற்ற ஏழை விவசாயிகளின் சமூகப் பொருளாதார வாழ்வில் ஒரு மௌனப் புரட்சியை ஏற்படுத்தக் கூடிய இத்திட்டம், தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

18. கடந்த தி.மு. கழக ஆட்சிக் காலத்தில், பத்து ஆண்டுகளுக்கு மேலாக அரசுப் புறம்போக்கு நிலங்களில் வீடுகளைக் கட்டிக் குடியிருக்கும் ஏழை எளியவர்களுக்குப் பட்டா வழங்க 2000 ஆம் ஆண்டில் ஒரு புரட்சிகரமான திட்டம் அறிவிக்கப்பட்டு, 31.3.2001 வரை சுமார் இரண்டு இலட்சம் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டன. அதன் பின்னர் முனைப்புடன் செயல்படுத்தப் படாமல் இருந்த இத்திட்டத்தை மீண்டும் செயல்படுத்தி தகுதியுள்ளவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கக் கோரும்



கோரிக்கைகளைப் பரிசீலித்து, அவ்வாறு வீடுகள் கட்டிக் குடியிருப்பவர்களுக்கு, 2007 சனவரித் திங்கள் முதல் ஆறு மாத காலத்திற்குள் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க இந்த அரசு ஆணையிட்டுள்ளது.

19. 2000ஆம் ஆண்டில், இந்த அரசால் தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர் நல வாரியம் ஏற்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்ட, தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத்திட்டம் இடையில் நிறுத்தப்பட்டு, தற்போது இந்த அரசால் மேம்படுத்தி அறிமுகப்படுத்தப்பட்டு, இத்திட்டத்திற்கான தனிச் சட்டமும் இயற்றப் பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ், தகுதியுள்ள 66 இலட்சம் விவசாயக் குடும்பங்கள் கண்டறியப் பட்டுள்ளன. அவர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன. பல்வேறு நலத்திட்ட உதவிகள் தொடர்ந்து அவர்களுக்கு அளிக்கப்படும்.

20. அத்தியாவசியப் பொருள்களில் மூலப் பொருளான அரிசியை, இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத குறைந்த விலையில், பொது விநியோகத் திட்டத்தின் மூலமாக, கிலோ ஒன்றுக்கு ரூபாய் 2 என்ற விலையில் வழங்கி, இந்த அரசு ஏழை எளியோரின் பசிப்பிணி போக்கியுள்ளது.

21. தமிழ்நாட்டில் அனைத்துக் குழந்தைகளுக்கும் தொடக்கக் கல்வி கிடைக்க வாய்ப்பு வழங்கப் பட்டுள்ளதோடு மட்டுமன்றி, ஆசிரியர் காலிப் பணியிடங்கள் காலமுறை ஊதியத்தில் நிரப்பப் பட்டு, பள்ளிக் கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப் பட்டு கல்வியின் தரமும் உயர்த்தப்பட்டுள்ளது. இனி வரும் ஆண்டுகளில், அனைவருக்கும் உயர்நிலைக் கல்வி கிடைக்கச் செய்யும் உன்னத இலக்கை அடையத் தேவையான திட்டங்களை வகுத்துச் செயல்படுத்துவோம்.

22. நல்ல திட்டங்கள் தொடர்ந்து நடத்தப்பட வேண்டும் என்ற இந்த அரசின் கொள்கையின்படி பள்ளி மாணவ மாணவியருக்கு இலவச மிதிவண்டி வழங்கும் திட்டத்தை இந்த அரசு தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் இந்தக் கல்வியாண்டில், ரூபாய் 103 கோடி மதிப்பீட்டில், சுமார் 4,84,000 மாணவ மாணவியருக்கு இலவச மிதிவண்டிகள் வழங்கப் பட்டு வருகின்றன.



23. முதலமைச்சர் கலைஞர் கடந்தமுறை ஆட்சியில் இருந்தபோதுதான், 1999-2000ஆம் கல்வியாண்டில் அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளிகளிலும் கணினிக் கல்வி அறிமுகப்படுத்தப் பட்டது. கணினிக் கல்வியின் தரத்தை மேலும் உயர்த்தும் வகையில், 2007-2008 ஆம் கல்வியாண்டில் அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளிகளிலும் கணினி ஆய்வகம் அமையப்பெற ஆவன செய்யப்படும். இதுமட்டுமன்றி, உயர்நிலைக் கல்வியில் இடையில் நின்று போனவர்கள் (drop-outs) மற்றும் உயர்கல்வி தொடர இயலாதோர் வேலைவாய்ப்புகளுக்குத் தேவையான தகுதிகளைப் பெறும் வகையில் அவர்களுக்குத் திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் (skill development programmes) செயல் படுத்தப்படும்.

24. 'வருமுன் காப்போம்' திட்டத்தை மீண்டும் செயல்படுத்தி, மக்களிடையே நோய்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், ஆரம்ப நிலையிலேயே நோய்களைக் கண்டறிந்து குணப்படுத்தவும் இந்த அரசு வழிவகை செய்துள்ளது. குழந்தைகள் மற்றும் பேறுகாலத் தாய்மார்கள் இறப்பு விகிதங்களைக் குறைக்க தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறோம். டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டம் இந்நாட்டிற்கே முன்னோடித் திட்டமாகத் திகழ்ந்து தாய்மார்கள் மற்றும் குழந்தைகள் நலனைப் பாதுகாப்பதில் ஒரு பெரும்பங்கு வகிக்கிறது. ரூபாய் 6,000 வீதம் நிதியுதவி வழங்கப்படும் இந்தத் திட்டத்தின் கீழ், இந்த ஆண்டில் இதுவரை 1,75,532 கர்ப்பிணித் தாய்மார்கள் பயனடைந்துள்ளனர்.

25. தொழில் வளர்ச்சியில் தமிழகத்தை முன்னணி மாநிலமாக முன்நிறுத்துவதோடு, வேலைவாய்ப்பு களை உருவாக்கக்கூடிய தொழில்களுக்கு மேலும் ஊக்கம் அளிக்கப்படும். அதிக வேலைவாய்ப்புகளை உருவாக்கும் சிறுதொழில் மற்றும் வேளாண் சார்ந்த தொழில்களுக்கு முன்னுரிமை அளிக்கப் படும். மேலும், மாநிலத்தின் முக்கிய ஏற்றுமதித் தொழில்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளும் செய்து தரப்படும்.

26. தொழில் முனைவோர் எளிதில் அணுகக்கூடிய மற்றும் வெளிப்படையான இந்த அரசின் செயல் பாட்டின் விளைவாக, தொழில் முனைவோர் அனைவரையும் ஈர்க்கும் முதன்மை மாநிலமாகத் தமிழகம் மாறியுள்ளது. சுமார் 50,000 பேர்களுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் வேலைவாய்ப்பை அளிக்கக்கூடிய, ரூபாய் 2,700 கோடி மதிப்பீட்டிலான ஆறு பெரும் தொழில் திட்டங்களுக்கான ஒப்பந்தங்கள் கையெழுத்திடப் பட்டுள்ளன. டெல் கம்ப்யூட்டர் மற்றும் சாம்சங் போன்ற இத்தகைய பெரும் நிறுவனங்கள் தமிழ்நாட்டில் தங்களின் தொழிற்சாலைகளை நிறுவ முன்வந்துள்ளதானது, இந்த அரசின் தொழில் கொள்கைக்குக் கிடைத்த மாபெரும் வெற்றியாகும். தொழிற்சாலைகள் நிறுவப்படும் பகுதிகளில் வசிக்கும் இளைஞர்களுக்கு அதிக வேலைவாய்ப்புகள் கிடைக்கும் வகையில் இந்த அரசின் தொழில் கொள்கை தொடரும்.

27. மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் தமிழ்நாட்டைச் சேர்ந்த மாண்புமிகு மத்திய அமைச்சர்களின் முயற்சிகளின் பயனாக தேசிய வாகனப் பரிசோதனை, ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிக் கட்டமைப்புத் திட்டத்தை (NATRIP) சென்னையை அடுத்துள்ள ஒரகடத்தில் அமைக்க மத்திய அரசு இசைவளித்தது. இது தொடர்பாக விரைவான நடவடிக்கை எடுக்கப்பட்டு, 303 ஏக்கர் நிலம் மாநில அரசால் ஒதுக்கப்பட்டு, ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் தலைவரான திருமதி சோனியா காந்தி அவர்கள் கலந்துகொண்டு, மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களால் இத்திட்டம் கடந்த நவம்பர் திங்கள் 4ஆம் நாள் தொடங்கி வைக்கப்பட்டது என்பது நம் அனைவருக்கும் மிகுந்த மகிழ்ச்சியளிப்பதாகும்.

28. வணிகர்கள் மற்றும் உற்பத்தியாளர்களுடன் கலந்து பேசி, தமிழக அரசு மதிப்புக் கூட்டுவரியை 1.1.2007 முதல் நடைமுறைப்படுத்தியுள்ளது. இதன் விளைவாக, பொருட்களின் விலை குறைந்து வருகிறது. தமிழ்நாட்டில் இந்த வரி அறிமுகப் படுத்தப்பட்டதால், மாநிலத்தின் உற்பத்தியாளர் களுடைய உற்பத்திப் பொருள்கள், தேசிய அளவில் மட்டுமன்றி சர்வதேச சந்தையிலும் போட்டியிடக் கூடிய திறன் பெறும்.

29. தேர்தல் அறிக்கையில் அறிவிக்கப்பட்டவாறு தொடங்கப்பட்டுள்ள இலவச வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டத்தின்கீழ்,




இரண்டாவது கட்டமாக 25 இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் பிப்ரவரி 15 முதல் வழங்கப்படும். வரும் நிதியாண்டுகளிலும் இந்தத் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு, வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் இல்லாத அனைத்துக் குடும்பங்களுக்கும் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்படும். சட்டமன்றக் கட்சிகளின் பிரதிநிதிகள் குழுவின் ஒப்புதல் பெற்று, ரூபாய் 685 கோடி மதிப்புள்ள 25 இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை ஒளிவுமறைவற்ற முறையில் (Transparent) சர்வதேச ஒப்பந்தப்புள்ளி மூலம் கொள்முதல் செய்துள்ளது அனைவரின் பாராட்டையும் பெற்றுள்ளது.

30. ஏழை எளிய, நடுத்தரக் குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் பயன்பெற, சமையல் எரிவாயு இணைப்பு இல்லாத குடும்பங்களுக்கு இலவசமாக எரிவாயு அடுப்பும் சமையல் எரிவாயு இணைப்பும் வழங்கப்படும் என இந்த அரசு அறிவித்து, பொங்கல் திருநாளையொட்டி, சனவரித் திங்கள் 14ஆம் நாள் முதல் செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் இந்த நிதியாண்டில், ரூபாய் 60 கோடி செலவில், 3 இலட்சம் குடும்பங்களுக்கு இலவச எரிவாயு அடுப்பும், இலவச எரிவாயு இணைப்பும் வழங்கி, அதற்கான வைப்புத் தொகையையும் அரசே செலுத்தும். வரும் ஆண்டுகளிலும் இந்தத் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

31. மக்களின் தொடர்ந்து உயர்ந்து வரும் வாழ்க்கைத் தரத்திற்கு ஏற்ப அதிகரித்து வரும் மின்சக்தித் தேவையைக் கருத்தில்கொண்டு புதிய மின்சக்தி உற்பத்தி நிலையங்கள் பல அமைக்க இவ்வரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. மேலும், மாநிலம் முழுவதும் மின் கட்டணம் செலுத்தும் முறை கணினிமயமாக்கப்படும்.

32. சென்னை மாநகரின் அடிப்படை வசதிகளை நிறைவேற்றுவதில் இந்த அரசு தொலைநோக்குப் பார்வையுடன் திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறது. சென்னை மாநகரின் குடிநீர் பிரச்சினைக்கு நீண்டகாலத் தீர்வாக, கடல் நீரைக் குடிநீராக்கும் இரு திட்டங்களை இவ்வரசு மேற்கொண்டுள்ளது. எதிர்காலப் போக்குவரத்துத் தேவைகளைக் கருத்தில் கொண்டு மெட்ரோ இரயில் திட்டத்தை செயல்படுத்த விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. மேலும் உலக வங்கி உதவியுடனான தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்-III மற்றும் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் சென்னை மாநகருக்குத் தேவையான சாலைகள் மற்றும் மேம்பாலப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



33. இந்த அரசு எடுத்த முயற்சிகளின் பயனாக, தமிழ்நாட்டில் தேசிய கிராமப்புற வேலைவாய்ப்பு உறுதித்திட்டம் ஆறு மாவட்டங்களில் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தை மாநிலத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்துமாறு மத்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளோம்.

34. படித்து வேலையின்றி இருக்கும் இளைஞர்களின் துயர் துடைக்கும் வகையில், வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து காத்திருப் போருக்கு, மாதமொன்றுக்கு ரூபாய் 300 வரையில் உதவித்தொகையாக வழங்கும் திட்டம், 11.11.2006 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் துவக்கிவைக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து நடைபெறும் இத்திட்டத்தின் கீழ் இதுவரை 2.50 இலட்சம் வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் பயனடைந்துள்ளனர் என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

35. இந்த அரசு பதவியேற்றவுடன், கடந்த ஐந்தாண்டுகளில் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு அரசுப் பணிகளில் வேலைவாய்ப்புகள் கிடைக்காதிருந்த நிலையை அகற்றும் வண்ணம், அரசுப் பணியில் சேருவதற்கான வயது உச்சவரம்பை ஐந்து ஆண்டுகள் தளர்த்தி, மாநில அரசிலுள்ள பல்வேறு பணிகளிலுள்ள காலியிடங்களை, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், ஆசிரியர் தேர்வு வாரியம், சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் மற்றும் வேலைவாய்ப்பு அலுவலகங்கள் ஆகியவற்றின் மூலம் விரைந்து நிரப்பிட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

36. ஏழை மகளிருக்கும் ஆடவருக்கும் இலவச சேலை வேட்டிகள் வழங்கும் திட்டத்தின் கீழ், பொங்கலையொட்டி, 1.64 கோடி சேலைகளும் 1.64 கோடி வேட்டிகளும் ரூபாய் 256 கோடி மதிப்பீட்டில் வழங்கப்பட்டு வருகின்றன. சுமார் 50,000 நெசவாளர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதோடு 3.28 கோடி ஏழை மக்களுக்கு இத்திட்டம் ஆண்டுதோறும் பயன்தரும்.

37. அமைப்புசாராத் தொழிலாளர்களுக்குச் சமூகப் பாதுகாப்பை உறுதிசெய்யும் வகையில் கடந்த தி.மு. கழக ஆட்சியில் அமைக்கப்பட்டு, பின்னர் கலைக்கப்பட்ட பல்வேறு நல வாரியங்கள் தற்போது மீண்டும் அமைக்கப்பட்டு, அவர்களுக்கான சமூகப் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது, இந்த அரசின் பெரும் சாதனையாகும். மேலும், அண்மையில் கிராமக் கோயில் பூசாரிகளுக்கெனத் தனி நலவாரியம் அமைத்துள்ள இந்த அரசு, எந்தவிதச் சமூகப் பாதுகாப்புமின்றி இருக்கும் வீட்டுப் பணியாளர்களுக்கும் (Domestic workers) தனி நலவாரியம் அமைத்திட முடிவு செய்துள்ளது என்பதைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். 11 நலவாரியங்கள் செயல்படத் தொடங்கி, இந்த ஆண்டில் இதுவரை 84,116 அமைப்புசாராத் தொழிலாளர்களுக்கு சுமார் ரூபாய் 19.77 கோடி மதிப்பிலான பல்வேறு நல உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

38. ஊனமுற்றோருக்கு மாதந்தோறும் வழங்கப்படும் உதவித் தொகையை ரூபாய் 200லிருந்து ரூபாய் 400ஆக இருமடங்கு உயர்த்தி வழங்கியதோடு மட்டுமன்றி, ஊனமுற்றோரைத் திருமணம் செய்ய முன்வருபவர்களுக்கு அளிக்கப்படும் திருமண உதவித் தொகையையும் ரூபாய் 10,000லிருந்து ரூபாய் 20,000 ஆக இருமடங்காக உயர்த்தியுள்ளோம். சுயமாக வாழத் தேவையான கல்வி வாய்ப்புகளும், வேலைவாய்ப்புகளும் ஊனமுற்றோருக்குக் கிடைத்திட ஆவன செய்வோம். ஊனமுற்றோருக்கு முழுமையான சமூகப் பாதுகாப்பை அளிக்கும் வகையில் அவர்களுக்கெனத் தனி நலவாரியம் ஒன்று அமைக்கப்படும்.

39. நாள்தோறும் இயற்கையோடு போராடி வாழ்க்கைப் பயணம் நடத்தும் மீனவர்களின் நலனில் மிகுந்த அக்கறை கொண்டுள்ள இந்த அரசு, அவர்களுக்குத் தேவையான சமூகப் பாதுகாப்பை வழங்கும் வகையில், விவசாயத் தொழிலாளர்கள் நலன் காக்க அமைக்கப்பட்டுள்ள நலவாரியம் போன்றே, தனி மீனவர் நல வாரியம் அமைத்து, அதைப்போன்றே அனைத்து உதவிகளையும் வழங்கும்.



③

40. 1989ஆம் ஆண்டு இந்த அரசால் தருமபுரி மாவட்டத்தில் தொடங்கப்பட்ட மகளிர் சுயஉதவிக் குழு இயக்கம், இன்று மாநில அளவில் மகத்தான ஒரு சக்தியாக உருவெடுத்துள்ளது குறித்து இந்த அரசு பெருமிதம் கொள்கிறது. மகளிர் சுயஉதவிக் குழுக்கள் தொடர்ந்து சிறப்பாகச் செயல்பட முழு ஆதரவையும் ஊக்கத்தையும் இந்த அரசு அளிக்கும். வெறும் சிக்கனச் சேமிப்பு அமைப்புகளாக மட்டுமன்றி, வருவாய் ஈட்டும் பொருளாதார நடவடிக்கைகளை (Economic activities) மேற்கொண்டு, அவர்தம் குடும்பங்களிலும் ஒட்டுமொத்தச் சமுதாயத்திலும் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில் மகளிர் சுயஉதவிக் குழு இயக்கம் மேலும் வலுப்பெற அரசு ஆவன செய்யும்.

> “அண்மையில் கிராமக் கோயில் பூசாரிகளுக்கெனத் தனி நலவாரியம் அமைத்துள்ள இந்த அரசு, எந்தவிதச் சமூகப் பாதுகாப்புமின்றி (Domestic Workers) இருக்கும் வீட்டுப் பணியாளர்களுக்கும் தனி நலவாரியம் அமைத்திட முடிவு செய்துள்ளது என்பதைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். 11 நலவாரியங்கள் செயல்படத் தொடங்கி, இந்த ஆண்டில் இதுவரை 84,116 அமைப்புசாராத் தொழிலாளர்களுக்கு ரூபாய் 18.77 கோடி மதிப்பிலான பல்வேறு நலஉதவிகள் வழங்கப்பட்டுள்ளன.”

41. வேலை வாய்ப்பில்லாத இளைஞர்களுக்குத் தகுந்த வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தி அவர்களது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த, 10,000 இளைஞர் சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்படும் என்று இந்த அரசு அறிவித்துள்ளது. இதன்படி, 3,500 இளைஞர் சுய உதவிக் குழுக்கள் இதுவரை அமைக்கப் பட்டுள்ளன. இந்த இளைஞர்களுக்குத் தகுந்த வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தும் வண்ணம், தொழில் நிறுவனங்களுடன் இணைந்து தொழிற்பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

42. ஏழை எளியோர், ஊனமுற்றோர் போன்ற சமுதாயத்தின் மிகவும் பின் தங்கிய பிரிவினரின் முன்னேற்றத்திற்கு 'வாழ்ந்து காட்டுவோம்' திட்டத்தின் மூலம் இவ்வரசு வழிவகை செய்யும். தற்போது முதல் கட்டமாக பதினைந்து மாவட்டங்களில் தொடங்கப்பட்டு, பதினைந்து ஒன்றியங்களில் செயல்படுத்தப்பட்டுவரும் ரூபாய் 717 கோடி மதிப்பீட்டிலான இந்த 'வாழ்ந்து காட்டுவோம்' திட்டம், அடுத்த பன்னிரெண்டு மாதங்களில் 70 ஒன்றியங்களில் செயல் படுத்தப்படும்.

43. ஒரு நூறு ஆண்டுகளுக்கும் மேலாக உலகத் தமிழர்களும் பரிதிமாற் கலைஞர் (சூரியநாராயண சாஸ்திரி) போன்ற தமிழறிஞர்களும் கண்டுவந்த கனவை நனவாக்கிடும் வண்ணம், தமிழைச் செம்மொழி என அறிவித்திடச் செய்து, சென்னையில் செம்மொழித் தமிழுக்கெனத் தனியே மத்திய அரசின் நிறுவனமொன்றை உருவாக்கிட வேண்டும் எனும் கோரிக்கையை வெற்றிபெறச் செய்தும், பள்ளிகளில் தமிழைக் கட்டாயப் பாடமாக்கிடச் சட்டமியற்றியும், அறிவியல் தமிழ் மன்றம் அமைத்தும், சென்னை உயர்நீதி மன்றத்தின் அனைத்து நடவடிக்கைகளிலும் தமிழை வழக்கு மொழியாக்கியும், அன்னைத் தமிழை அனைத்து நிலைகளிலும் அரியணையேற்றுவதில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞரும் அவரது தலைமையிலான இந்த அரசும் அயராது முயன்று வருவது கண்டு தமிழ்கூறு நல்லுலகம் அகம் மிக மகிழ்ந்து பாராட்டி வருகிறது.

44. அண்மைக் காலத்தில் இலங்கையில் வாழும் தமிழர்கள் தங்கள் உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்பு இன்றி, சந்தித்து வரும் சொல்லொணாத் துயர் குறித்து இந்த அரசு ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது. மத்திய அரசின் வழிகாட்டியாகத் திகழும் திருமதி சோனியா காந்தி அம்மையார் அவர்களுக்கும் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இது பற்றி எழுதியுள்ள கடிதங்கள், அக்கடிதங் களுக்கு அவர்கள் அளித்த பதில்கள் இலங்கைத் தமிழர்களுக்கு ஆறுதல் அளிப்பதாகவும் நம்பிக்கை ஊட்டுவதாகவும் இருக்கும் வேளையில், பல ஆண்டுகளாக நிலவி வரும் இலங்கைத் தமிழர்களின் இந்த வாழ்வாதாரப் பிரச்சினைக்கு வழிகாண இந்திய அரசு விரும்புகின்ற வகையில் பேச்சுவார்த்தைகள் மூலமாக அமைதியான அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்று இந்த அரசு வலியுறுத்துகிறது.

## தமிழ்நாடு விவசாய - விவசாயத் தொழிலாளர் நலவாரியத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் நியமனம்

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையில் அறிவிக்கப்பட்டதற்கேற்ப முந்தைய அரசினால் கலைக்கப்பட்ட தமிழ்நாடு விவசாய–விவசாயத் தொழிலாளர் நல வாரியத்தை மீண்டும் அமைத்து அதற்குப் பாதுகாப்பு வழங்கும் வகையில் சட்டம் இயற்றப்பட்டது. அதன்படி அந்த வாரியத்திற்கு தலைவர் மற்றும் உறுப்பினர்களை பின்வருமாறு நியமித்து மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 16.1.2007 அன்று அறிவித்தார்.

தலைவர் – திரு. ஐ. பெரியசாமி, வருவாய்த்துறை அமைச்சர்

**அலுவல்சாரா உறுப்பினர்கள் :**

திரு. கே.பி.இராமலிங்கம், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர், திரு. பூதலூர் கலியமூர்த்தி, திரு. கீழானூர் ராஜேந்திரன், திரு. இல.க. சடகோபன், திரு. கே. பாலகிருஷ்ணன், திரு. வே. துரைமாணிக்கம், திரு. எஸ். செல்லமுத்து, திரு. பொன். குமார்.

**அலுவல் சார்ந்த உறுப்பினர்கள்:**

செயலாளர், வருவாய்த்துறை, செயலாளர், நிதித்துறை, செயலாளர், வேளாண்மைத்துறை, வருவாய் நிருவாக ஆணையர், தலைவர் (ம) மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், சர்க்கரைத்துறை ஆணையர், வேளாண் விற்பனை மற்றும் சந்தைக் குழு ஆணையர், நிலச் சீர்திருத்த ஆணையர்.

45. 1989ஆம் ஆண்டு பெண்களுக்குச் சமச் சொத்துரிமை அளிக்கும் சட்டத்தை இயற்றியும் 1996ஆம் ஆண்டில் முதன் முதலாக பெண்களுக்கு உள்ளாட்சி அமைப்புகளில் 33 சதவிகித இட ஒதுக்கீட்டை வழங்கியும் பெண்ணுரிமை காத்தது இந்த அரசுதான் என்பதை நீங்கள் அறிவீர்கள். இந்த முற்போக்குப் பயணத்தின் இலக்கான, நாடாளுமன்றம் மற்றும் சட்டப்பேரவைகளில் மகளிருக்கு 33 சதவிகித இட ஒதுக்கீடு குறித்த சட்ட முன்வடிவு இன்னும் நிறைவேற்றப்படாத நிலையில் உள்ளது. தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே எடுத்துரைத்தவாறு, திருமதி சோனியா காந்தி அவர்கள் ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் தலைவராக இருந்திடும் இந்தக் கால கட்டத்திலேயே இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டால் அது மிகப் பொருத்தமான நிகழ்வாக அமையும் என்பதைக் கருத்தில்கொண்டு, இதுகுறித்து விரைந்து முடிவெடுத்து பெண்ணுரிமையினை நிலைநாட்ட வழிவகுக்கும்படி இந்த அரசு மத்திய அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

46. சமூக நீதியை நிலை நாட்டுவதில் நீண்ட நெடுங்காலப் பாரம்பரியம் கொண்ட இந்த அரசு, இக்கொள்கையை அனைத்துத் துறைகளிலும் முழுமையாகச் செயல்படுத்தத் தொடர்ந்து பாடுபடும். இந்த அரசு பதவியேற்றவுடன், சிறுபான்மையினர் கல்வி நிறுவனங்கள் அல்லாத அரசு நிதியுதவி பெறாத அனைத்துத் தனியார் சுயநிதிக் கல்வி நிறுவனங்களில், தாழ்த்தப் பட்டோர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் ஆகியோருக்குக் கட்டாய இடஒதுக்கீடு வழங்கும் சட்டத்தை இயற்றியது. மேலும், மத்திய அரசின் உயர்கல்வி நிறுவனங்களில் இதர பிற்படுத்தப் பட்டவர்களுக்கு இடஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்பது குறித்து, தொடர்ந்து மேற்கொண்ட முயற்சிகளின் பயனாக, இதற்கான சட்டம் மத்திய அரசால் நிறைவேற்றப்பட்டது, சமூக நீதிக்கான போராட்டத்திற்குக் கிடைத்த மற்றுமொரு மகத்தான வெற்றியாகும். தனியார் நிறுவனங்களிலும் இடஒதுக்கீட்டு முறை பின்பற்றப்படத் தேவையான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும் என்று இந்த அரசு வலியுறுத்துகிறது.

47. இவ்வரசு பொறுப்பேற்ற பின்னர், தந்தை பெரியார் அவர்களின் நெஞ்சிலுள்ள முள்ளை அகற்றி அவரது கனவினை நனவாக்கும் வகையில், இந்துக்களில் தகுதி பெற்ற அனைத்துச் சாதியினரும் இந்து சமயத் திருக்கோயில்களில் அர்ச்சகர் ஆகலாம் என்ற சமத்துவக் கொள்கையை நிலைநாட்டும் ஆணையை வெளியிட்டது. இதனை நடைமுறைக்குக் கொண்டு வருவது தொடர்பாக ஆலோசனைகள் வழங்குவதற்காக நீதியரசர் ஏ.கே.இராசன் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட உயர்நிலைக்குழு தனது பரிந்துரைகளை அரசுக்கு வழங்கியது. இவ்வறிக்கையை ஆய்வு செய்து, உயர்நிலைக் குழுவின் பரிந்துரைகள் அனைத்தையும் ஏற்று அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

48. சிறுபான்மையினர் நலம் காத்து, மத நல்லிணக்கம் பேண கட்டாய மதமாற்றத் தடைச் சட்டம் நீக்கம், முன்னறிவிப்பின்றி அரசு அலுவலர்களை பணி நீக்கம் செய்ய வகை செய்த டெஸ்மா சட்டம் ரத்து, பெருந்தலைவர் காமராசர் அவர்களின் பிறந்தநாளை 'கல்வி வளர்ச்சி நாள்' ஆக காலமெல்லாம் இம்மாநிலம் கொண்டாடிப் போற்றிடுவதற்கான தனிச்சட்டம், தொழிற்கல்விப் பட்டப்படிப்புகளுக்கான நுழைவுத் தேர்வை நீக்கி, கிராமப்புற மாணவர்களின் நலன் காப்பதற்கான சட்ட முன்வடிவு என பதவியேற்ற முதல் எட்டு மாதங்களிலேயே, சமத்துவமும் சமநீதியும் தழைத்திட, பார்போற்றும் பல சட்டங்களை இயற்றி இந்த அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை நாடும் ஏடும் பாராட்டுகின்றன.

49. மனிதக் கழிவை மனிதனே எடுத்துச் சுமக்கும் கொடுமையை அறவே அகற்றி, இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ளோர் அனைவருக்கும் மறுவாழ்வு அளிக்க இந்த அரசு உறுதி பூண்டுள்ளது. இந்தத் தொழிலில் ஈடுபட்டு வருவதாகக் கண்டறியப் பட்டுள்ளவர்கள் வருவாய் ஈட்டக்கூடிய மாற்றுத் தொழில்களை மேற்கொள்ள ரூ.58.45 கோடி மதிப்பீட்டில் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

50. மத நல்லிணக்கச் சமுதாயம் காண விரும்பும் இந்த மதச்சார்பற்ற அரசு, மத நல்லிணக்கத்தைப் பேணிப் பாதுகாக்க உறுதி பூண்டுள்ளது. சிறுபான்மையினர் நலனில் மிகுந்த அக்கறை கொண்டுள்ள இந்த அரசு, பாரதப் பிரதமரின் பதினைந்து அம்சத் திட்டத்திலும், நீதியரசர் இராஜேந்தர் சச்சார் குழுவின் பரிந்துரைகளிலும் குறிப்பிடப்பட்டுள்ள சிறுபான்மையினர் முன்னேற்றத்திற்கான பிரதிநிதித்துவம் குறித்து ஆய்ந்து, அவர்களின் சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

51. திரையுலகுக்குப் பல சலுகைகளை அறிவித்ததோடு மட்டுமன்றி, திரைப்படங்களைக் காணவருவோர் பயன்பெறும் வகையில் திரையரங்குகளின் கட்டணத் தொகையை இந்த அரசு குறைத்துள்ளது. இந்தக் கட்டணக் குறைப்பு பொதுமக்கள் மீண்டும் திரையரங்குகளுக்குச் சென்று திரைப்படங்களைக் கண்டுகளிக்க வகை செய்ததோடு, திரைப்படத் தொழிலுக்கும் புத்துயிர் அளித்துள்ளது.

52. *நெற்றி வியர்வை நிலத்தில் விழப் பாடுபடும் உழவர்;*
*பட்ட கடன் பல கோடி முழுவதையும் தீர்த்து;*
*பசி தீர்க்கும் உணவுக்கும் அரிசி விலை அக்கணமே குறைத்து–*
*வாரம் இரு முட்டை சிறார்க்கு எனும் திட்டத்தை அளித்து,*
*யாரும் எதிர்பாரா பற்பல சாதனைகள் படைத்து*
*நாளும் நானிலச் செய்திகளை அறிந்திட வே நம்மவர்*
*வாழும் குடில்களிலும் வண்ணத் தொலைக்காட்சி அமைத்து,*
*கையகலத் தரிசு நிலமெனினும் கண்டிப்பாய் ஏழை உழவர்க்கே அளித்து,*
*காணி நிலம் வேண்டும் என்ற பாரதியின் கனவு பலித்திட வைத்து*
*களிப்பிலாடும் மயிலாய் கானம் பாடும் குயிலாய் மகிழ்ந்திட*
*கல்விக்கூடப் பிள்ளைகட்குக் கட்டணச் சுமை இறக்கி,*
*மூதாட்டி பெயரால் இருந்த முத்தான திருமணத் திட்டம்–*
*அதற்கும் உயிர் கொடுத்து ஐயாயிர ரூபாய் சேர்த்து*
*பரிவுடனே ஏழைப் பெண் மணவிழாவுக்கு பதினைந்தாயிரம் தந்து,*
*படித்து விட்டு வேலையின்றி காத்திருக்கும் இளைஞர்க்கு;*
*பணி கிடைக்கும் வரையில் திங்கள்தோறும் பண உதவி புரிந்து*
*கருவுற்ற பாவையர்க்குக் கருணைத் தொகை ஆறாயிரம்;*
*கலந்தாய்வு முறையினிலே இடமாற்றம் ஆசிரியர்க்கு!*
*முதியோர் உதவித் தொகை மேலும் அதிகரிப்பு,*
*முதற்கட்டமாக மூன்று இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு;*
*அடுக்களையில் தாய்மார்கள் அகமகிழ*
*எரிவாயு இணைப்புடனே இலவச அடுப்பு;*
*உதவாதினி உழவர் சந்தை என உதறியதை–*
*உடனடியாக புதுப்பித்து உழவர், நுகர்வோரை வாழ்வித்து,*
*ஊதியம், உழைப்போர்க்கு உயர்த்தி, ஊக்கப்படுத்தி*
*போதிய பயன்களனைத்தும் மழையெனப் பொழிந்துள்ள இந்த அரசு,*
*ஆண்டு கொண்டிருந்தால் மட்டும் போதுமென்றெண்ணாமல்*
*யாண்டும் நமது பணி நாட்டாட்சியில் மட்டுமன்றி,*
*நாடு, நகரம், பேரூர், சிற்றூர் – காடு மேடு கடந்து – பட்டி தொட்டி எங்கணும்*

மக்கள் தொண்டே மகேசன் தொண்டு எனத் தொடர்ந்து நடக்கும் எனும் உறுதியோடு, இந்தச் சிறப்புறு திட்டங்கள் செம்மையாய் நிறைவேற ஆதரவளித்தும், ஒத்துழைத்தும் இடித்துரைக்கும் கருத்துக்களை எடுத்துரைத்தும், மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் தலைமையிலான இந்த ஆட்சிக்கு கரம் கொடுத்து உரம் அளிக்கும் அவையில் உள்ளோர்க்கும் அருமைத் தமிழ்நாட்டின் அனைத்துப் பிரிவு மக்களுக்கும் நன்றி கூறி இவ்வுரையை நிறைவு செய்கிறேன்.

**வணக்கம்**

**ஜெய்ஹிந்த்**

* * *

# மாணவ – மாணவிகளுக்கு தண்டனை வழங்கும் கல்வி விதி பிரிவு 51 நீக்கம்

**பள்ளிகளில் முறைகேடாக நடக்கும் மாணவ மாணவிகளுக்குத் தண்டனை வழங்க வகை செய்திடும் தமிழ்நாடு கல்வி விதிகளில் உள்ள பிரிவு 51 என்பது நீக்கப்படுகிறது. என அரசு அறிவிக்கிறது.**

தமிழ்நாடு கல்வி விதிகளில் விதி 51 என்பது பள்ளிகளில், வேண்டுமென்றே பொய் கூறுவது, ஆபாசமான வார்த்தைகளைப் பயன்படுத்துவது போன்றவைகளை நடைமுறையாகக் கொண்டுள்ள மாணவர்களுக்கு உடல்ரீதியாகத் தண்டனை வழங்குவதை அனுமதிக்கிறது.

அண்மைக்காலத்தில், சில பள்ளிகளில் மாணவர்களுக்குக் கடுமையான தண்டனைகள் வழங்கப்படுவதாகப் பெற்றோர், பொதுமக்கள், தொண்டு நிறுவனங்கள் ஆகியவைகள் மூலம் அரசுக்குப் புகார்கள் வந்துள்ளன. ஊடகங்களிலும் இத்தகைய சம்பவங்கள் எடுத்துரைக்கப் படுகின்றன. இத்தகைய தண்டனைகள் காரணமாக உணர்ச்சி வயப்படும் மாணவ மாணவிகளில் சிலர் தற்கொலை செய்து கொள்ளும் அளவுக்கு வந்து விடுகின்றனர். இத்தகைய போக்குகள் முதலமைச்சர் கலைஞர் அவர்களின் கவனத்திற்கு வந்ததைத் தொடர்ந்தும், பள்ளிக் கல்வித்துறையின் ஓய்வு பெற்ற முன்னாள் இயக்குநர் திரு.அ.முத்துகிருஷ்ணன் அவர்களைத் தலைவராகவும், பத்ம சேஷாத்திரி குழும கல்வி நிறுவனங்களின் இயக்குநர் திருமதி. ஒய்.ஜி. பார்த்தசாரதி அவர்களைத் துணைத் தலைவராகவும் கொண்ட உயர்நிலைக் குழு வழங்கியுள்ள பரிந்துரைகளின் அடிப்படையிலும்,



# திறமையான நிருவாகத்தால் அரசின் நிதிநிலைச் சமன்பாடு சீராக உள்ளது

*மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையின்*
*மீதான விவாதத்திற்கு சட்டப்பேரவையில்*
*மாண்புமிகு தமிழக முதலமைச்சர்*
***கலைஞர் மு.கருணாநிதி** அவர்கள்*
*ஆற்றிய பதிலுரை (27.01.2007)*

கடந்த ஐந்து நாட்களாக இந்த மாமன்றத்தில் இதுவரையிலே ஆளுநர் உரையின் மீது 37 பேர் உரையாற்றி 38ஆவது நபராக நான் என்னுடைய கருத்துக்களை எடுத்து வைக்க விரும்புகின்றேன்.

ஆளுநர் உரையிலே காங்கிரஸ் கட்சியின் சார்பாக முதல் குரல் எழுப்பிய அருமை நண்பர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் – எப்பொழுதுமே அவருடைய உரை இனிப்பாக இருக்கும், கேட்பதற்கும் ரசிப்பதற்கும். அந்த இனிப்பு சில நேரங்களில் கற்கண்டை மெல்லுவதைப்போல இருக்கும். அதாவது கொஞ்சம் கரடுமுரடாகவும் இருக்கும். ஆனால் இனிப்பாக இருக்கும். அந்த வகையில் அவர்களுடைய உரையை அன்றைக்கு ஆற்றி இந்த அரசுக்கு தரவேண்டிய முன்னறிவிப்புகளை எச்சரிக்கைகளை எடுத்துரைத்திருக்கிறார்கள். அதற்கு நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கடல்மடை திறந்தாற்போல நம்முடைய கழக உறுப்பினர்களுடைய சார்பில் ஆளுநர் உரையைத் தொடங்கி வைத்துப் பேசிய கருப்பசாமி பாண்டியன் அவர்கள் பல கோரிக்கைகளை எடுத்து வைத்து அவருடைய உரையை நிகழ்த்தி இருக்கின்றார்.

இன்றைக்கு பாட்டாளி மக்கள் கட்சியினுடைய சார்பில் உரையாற்றிய அந்தக் கட்சியினுடைய சட்டமன்றத்தினுடைய தலைவர் திரு. ஜி. கே. மணி அவர்களும், காங்கிரஸ் கட்சியினுடைய சார்பில் உரையாற்றிய நம்முடைய சுதர்சனம் அவர்களும் இந்த அரசுக்குத் தேவையான அறிவுரைகளையெல்லாம் அனுபவரீதியாக எடுத்து வைத்திருக்கிறார்கள். இந்த அரசுக்கு எந்த ஆபத்தும் வந்து



விடக்கூடாது என்பதில் காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்ற தலைவர் சுதர்சனம் அவர்கள் காட்டிய அக்கறை – இப்பொழுது அமைதியாக இருக்கிற தமிழகத்தில் அமளிகளை உருவாக்குவதற்காக ஏதேதோ செய்திகளை சிலர் வெளியிடுவது பற்றியதாகும்.

அந்தச் செய்திகளின் மூலமாக தமிழகத்திலே மீண்டும் இலங்கையினுடைய தீவிரவாதிகள் படையெடுத்திருக்கிறார்களோ என்கின்ற அச்சத்தை உருவாக்க, பீதியைக் கிளப்ப பெருமுயற்சி நடைபெறுகிறது என்றெல்லாம் இங்கே எடுத்துக்காட்டினார்கள்.

முக்கியமாக, இலங்கைப் பிரச்சினையைப் பற்றி நான் பேசும்போது, இலங்கையைச் சேர்ந்த தமிழ் அகதி சிவா என்கின்ற சிவகரன் தமிழகத்திலே மண்டபம் முகாமை விட்டு வெளியே வந்து சென்னை, திருச்சி மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களிலே தங்கியிருந்தார். அவர் நடவடிக்கைகளை கண்காணித்ததில் அவர் மேலும் சிலரோடு சேர்ந்து கடத்தல் நடவடிக்கையில் ஈடுபட்டதாக தெரியவந்தது.

23.1.2007 அன்று இந்த சிவகரன் தன் கூட்டாளிகள் 7 பேரோடு (5 இலங்கைத் தமிழர்கள் மற்றும் தமிழ்நாட்டைச் சேர்ந்த 3 பேர்) சென்னை பெரியமேட்டில் ஒரு லாரியில் சந்தேகத்திற்கு இடமான பொருள்களை ஏற்றிக் கொண்டிருக்கும்போது க்யூ பிரிவு போலீசார் சோதனை செய்ததில் ஒரு மினி லாரியில் 8 மில்லி மீட்டர் விட்டம் கொண்ட 2,000 கிலோ எடையுள்ள இரும்பு குண்டுகள் 40 சாக்கு மூட்டைகளில் வைத்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. மேலும் 5 இலட்சம் ரூபாய் ரொக்கம் பணம், மினி லாரி, ஒரு டாடா இண்டிகா கார் மற்றும் 3 செல்போன்கள் இவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டது என்றும் செய்தி தரப்பட்டிருக்கிறது.

விசாரணையில் மேற்படி இரும்பு குண்டுகள் மும்பையிலிருந்து லாரி சர்வீஸ் மூலமாகத் தருவிக்கப்பட்டது என்று தெரிவித்தார்கள். மேலும் நடந்த விசாரணையில் 60 சாக்கு மூட்டைகளில் இரும்பு குண்டுகள் இலங்கைக்குக் கடத்தப்படுவதற்காக தூத்துக்குடியிலே வசிக்கும் பிரபாகரன் என்கிற வேலுச்சாமி என்பவர் ஏற்பாடு செய்த வீட்டில் இருப்பதாக கிடைத்த தகவல்படி அவர் அடையாளம் காட்டிய டேவிஸ்புரம் என்ற இடத்தில் உள்ள வாடகை வீட்டை சோதனை செய்ததில் தலா 50 கிலோ எடை கொண்ட 60 சாக்கு மூட்டைகளில் இரும்பு குண்டுகள் கைப்பற்றப்பட்டு எதிரி பிரபாகரன் என்கிற வேலுச்சாமி 24.1.2007 அன்று கைது செய்யப்பட்டுள்ளார். இது தொடர்பாக வழக்குப் பதிவு செய்யப்பட்டு, கைது செய்யப்பட்ட 9 எதிரிகளும் நீதிமன்ற காவலுக்கு அனுப்பப்பட்டு சென்னை மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்கள். க்யூ பிரிவு போலீசார் மராட்டிய மாநிலத்திற்கும், புலன் விசாரணைக்காக சென்றிருக்கிறார்கள்.

இந்தச் செய்தியைத்தான் நம்முடைய சுதர்சனம் அவர்கள் பேசும்போது, இந்த அபாயத்தை மேலும் வளர விடக்கூடாது; அரசு எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று தனக்கே உரிய பாச உணர்வோடு இங்கே சுட்டிக் காட்டியிருக்கின்றார்.

நான் அவருக்கும், இந்த மாமன்றத்திலே இருக்கின்ற எல்லா தோழமைக் கட்சிகளுடைய உறுப்பினர்களுக்கும் சொல்லிக் கொள்வேன், திராவிட முன்னேற்றக் கழக அரசு இதுபோன்ற வன்முறைகளை நிச்சயமாக அனுமதிக்காது என்பதை நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இலங்கைப் பிரச்சினையிலே ஒரு சுமுகமான முடிவு காண வேண்டும் என்று எல்லோரும் எண்ணுகிற நேரத்தில் நடந்தவைகள் நடந்தவைகளாக இருக்கட்டும், நடப்பவைகள் நல்லவைகளாக இருக்கட்டும் என்கிற அளவிற்கு பலர் இன்றைக்கு சிந்திக்கின்ற இந்த கால கட்டத்தில் இது போன்ற செய்திகள் பின்னடைவைத்தான் அவர்களுக்கு ஏற்படுத்தும் என்பதை நான் இங்கே சுட்டிக் காட்டாமல் இருக்க முடியாது.

சில தகவல்கள் இங்கே கூறப்பட்டன. அதில் குறிப்பாக நம்முடைய சுதர்சனம் அவர்கள் சொன்னார்கள், எனக்கே அதிர்ச்சியாக இருந்தது. வேறு மாநிலங்களிலே சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கெல்லாம் அதிக தொகை வழங்கப்படுகிறது; ஆனால் இங்கே 500 ரூபாய் தான் வழங்கப்படுகிறது என்று சொன்னார்கள். அவருக்கு யாரோ ஒரு சுதந்திரப் போராட்ட வீரர் சுதந்திரமாக ஒரு தவறான கருத்தை சொல்லியிருப்பார் என்று கருதுகின்றேன்.

மாநில அரசின் ஒய்வூதியம் பெறுகின்ற விடுதலைப் போராட்ட வீரர்களுடைய எண்ணிக்கை 1,112. அவர்களுக்கு தரப்படுகின்ற ஒய்வூதியம் 3,000 ரூபாய். அஃதன்னியில் மருத்துவப்படி 15 ரூபாய் தரப்படுகின்றது. அந்த ஒய்வூதியம் பெறுகின்ற விடுதலைப் போராட்ட வீரர்கள் இறந்துவிட்டால் அவர்களுடைய வாரிசுதாரர்களுக்கு அவர்களுடைய எண்ணிக்கை 2,114 அவர்களுக்கு 1,500 ரூபாய் தரப்படுகிறது. 500 ரூபாய் அல்ல. தயவுசெய்து அவர்கள் திருத்திக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன். இன்னும் கொஞ்சம் அதிகம் வேண்டுமென்றால் பட்ஜெட் நேரத்திலே நம்முடைய நிதியமைச்சர் அதுபற்றி கவனிப்பார் என்று நான் தெரிவித்துக் கொள்கின்றேன். இப்போது உள்ள நிலைமையை நான் அவருக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொரு தவறான தகவல், நம்முடைய ஜி.கே. மணி அவர்கள் பேசும்போது சொன்னார், கூட்டுறவு அமைப்புகளில் பணியாற்றும்

பணியாளர்களுக்கு போனஸ் வழங்கப்படவில்லை என்று குறிப்பிட்டார். கூட்டுறவு அமைப்புகளிலே பணியாற்றுகின்ற அலுவலர்களுக்கு உரிய போனஸ் அல்லது பொங்கல் பரிசு வழங்கப்பட்டு இருக்கிறது என்பதை நான் அவருக்கு தெரிவித்துக் கொள்கின்றேன். அவர் இப்போது இல்லாத காரணத்தால் இதுபற்றி கேட்டு வேல்முருகன் அவரிடத்திலே சொல்ல வேண்டும் என்று நான் வேண்டி கேட்டுக்கொள்கின்றேன்.

இப்படி சில தகவல்கள் திருத்தப்பட வேண்டியவைகளாக இங்கே சொல்லப்பட்டாலும் கூட அந்தத் தகவல்களிலே உண்மையிருக்குமானால் அவைகளை நிச்சயமாக கவனித்து இந்த அரசு ஏற்ற நடவடிக்கைகளை எடுக்கும் என்று இங்கே நான் குறிப்பிட விரும்புகின்றேன்.

இன்னொன்றும் குறிப்பிட்டார், மறைமலை அடிகளாரை நாம் மறந்துவிட்டதைப் போல நம்முடைய ஜி.கே. மணி அவர்கள் இங்கே சொன்னார்கள். இல்லை. மறைமலை அடிகளாருடைய புத்தகங்களை எல்லாம் இந்த அரசு பெற்று அதற்கான ஒரு உரிய தொகையை, நல்ல தொகையை ஏற்கெனவே வழங்கி இருக்கிறோம்.

1997ஆம் ஆண்டு கழக அரசு இருந்தபோது மறைமலை அடிகளுடைய நூல்களை நாட்டுடைமையாக்கி அவரது மரபுரிமையாளர்களுக்கு 30 இலட்சம் ரூபாய் வழங்கியிருக்கின்றது. தற்பொழுது மறைமலை அடிகளுடைய பெயர்த்தி சுந்தரத்தம்மையார் வைத்திருக்கும் நூல்களைப் பெற்றுக் கொண்டு 1 இலட்சம் ரூபாயும், அவருடைய மருத்துவச் செலவிற்கு 50 ஆயிரம் ரூபாயும் வழங்கியதோடு, சுந்தரத்தம்மையாரின் மகள் கலைச்செல்விக்கு அரசுப்பணியும் வழங்கியிருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மறைமலை அடிகள் நினைவைப் போற்றி இந்த அரசு அவரது நினைவாக அஞ்சல் தலை வெளியிட, ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார், நிச்சயமாக ஆவன செய்யப்படும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.




**ப**ள்ளிக் கல்வித்துறையில் மேல்நிலைப் பள்ளிகளில் 11 மற்றும் 12ஆம் வகுப்பு மாணவர்களுக்கு கணினிக் கல்வி முதற்கட்டமாக 1999–2000ஆம் கல்வி ஆண்டு முதல் 666 அரசு மேல்நிலைப்பள்ளிகளிலும், இரண்டாம் கட்டமாக 2000–2001 கல்வியாண்டில் 531 அரசு மேல்நிலைப் பள்ளிகளிலும் தமிழ்நாடு மின்னணுவியல் நிறுவனத்தால் நியமிக்கப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் மூலம் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்ட கணினி ஆசிரியர்களால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அனைத்து அரசு/ நகராட்சி/ மாநகராட்சி மேல்நிலைப் பள்ளிகளிலும் கணினிக் கல்வித் திட்டத்தை சீரிய முறையில் செயல்படுத்தும் வண்ணம் தற்போதுள்ள 1,880 அரசு/ நகராட்சி/ மாநகராட்சி மேல்நிலைப் பள்ளிகளிலும் பள்ளி ஒன்றுக்கு ஒரு கணினி பயிற்றுநர் வீதம் 1,880 கணினி பயிற்றுநர் பணியிடங்கள் தோற்றுவித்து ஆணையிடப்பட்டுள்ளது. மேலும் கணினிக் கல்வித் திட்டத்தை செயல்படுத்த ஏதுவாக தமிழ்நாடு மின்னணுவியல் நிறுவனம் மூலம் 118 கோடியே 15 இலட்சத்து 31 ஆயிரம் ரூபாய் செலவில் கணினி மற்றும் கணினி சார்ந்த பொருள்கள் வாங்கவும், பள்ளிகளில் அவற்றை நிறுவும் பொறுப்பை இந்நிறுவனத்திற்கே வழங்கவும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இதன் மூலம் வரும் கல்வியாண்டு முதல் ஊரக மற்றும் நகர்ப்புறங்களிலுள்ள அரசு/ நகராட்சி/ மாநகராட்சி மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் பெரிதும் பயனடைவர்.

★ ★ ★



**ஒகேனக்கல் திட்டம்**

ஜி.கே. மணி அவர்கள் மிக முக்கியமான ஒகேனக்கல் திட்டத்தைப் பற்றி இங்கே எடுத்துச் சொன்னார். ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு நிறுவனத்தின் நிதியுதவி அதற்காகக் கோரப்பட்டுள்ளது. இந்த வாரம்தான் ஜப்பான் நாட்டு நிபுணர்கள் தருமபுரி மாவட்டம் சென்று திட்ட ஆய்வை மேற்கொண்டுள்ளார்கள். மைய அரசு இந்தத் திட்டத்திற்கு ஜப்பான் நாட்டு நிதியுதவியைப் பெற மிகுந்த முன்னுரிமை அளித்து ஜப்பான் அரசிற்குத் தெரிவித்துள்ளது. ஜப்பான் அரசிற்குத் தெரிவித்துள்ள இந்தச் செய்தி, ஜப்பான் நாட்டு நிதியுதவி கிடைக்க வாய்ப்புகளை அதிகமாக்கி இருக்கிறது. எனினும், ஜப்பான் நிதியுதவி ஏதேனும் ஒரு காரணத்தால் கிடைக்காவிட்டால் அரசு வேறு நிதி ஆதாரம் பெற்று இத்திட்டத்தை நிச்சயமாக நிறைவேற்றும் என்பதை திரு.மணி அவர்களுக்கு நான் இங்கே உறுதியாக தெரிவித்துக் கொள்கின்றேன்.

அவர்கள் கேட்டுக் கொண்டபடி, மக்கள் தொகை கணக்கெடுப்புத் திட்டத்தில் பணியாற்றிய தற்காலிகப் பணியாளர்களுக்கு உச்சநீதிமன்றத் தீர்ப்பின்படி அரசுப் பணி வழங்கப்பட்டு வருகிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். அவர்களுக்குப் பணி கொடுக்காமல் இல்லை; பணி வழங்கப்பட்டு வருகிறது.

*“நம்முடைய ஊராட்சி, நகராட்சி மன்றத் தேர்தல்கள் நடந்ததைப் பற்றியும், பாப்பாபட்டி, கீரிப்பட்டி போன்ற இடங்களில் ஆதிதிராவிட மக்கள் பெற இருந்த உரிமை கடந்த காலத்திலே பெறமுடியாமல் போய் இப்பொழுது இந்த ஆட்சியில் இங்கே வீற்றிருக்கின்ற எல்லா கட்சியினுடைய தலைவர்களுடைய ஒத்துழைப்போடு அங்கே தேர்தல் நடைபெற்று, அந்தத் தேர்தலிலே வெற்றி பெற்றவர்கள் இப்பொழுது அங்கே அந்த கிராம ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.”*

நம்முடைய ஊராட்சி, நகராட்சி மன்றத் தேர்தல்கள் நடந்ததைப் பற்றியும், பாப்பாபட்டி, கீரிப்பட்டி போன்ற இடங்களில் ஆதிதிராவிட மக்கள் பெற இருந்த உரிமை கடந்த காலத்திலே பெறமுடியாமல் போய் இப்பொழுது இந்த ஆட்சியில் இங்கே வீற்றிருக்கின்ற எல்லா கட்சியினுடைய தலைவர்களுடைய ஒத்துழைப்போடு அங்கே தேர்தல் நடைபெற்று, அந்தத் தேர்தலிலே வெற்றி பெற்றவர்கள் இப்பொழுது அங்கே அந்த கிராம ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

அது மாத்திரமல்ல, ஆதிதிராவிட மக்களுக்காக இந்த அரசு எடுத்த முயற்சி அதோடு மாத்திரம் நிற்கவில்லை, உங்களுக்கு ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

தேனி மாவட்டத்தில், தேனி மாவட்ட கவுன்சிலுக்கு தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர் ஒரு ஆதிதிராவிடர். தனித்தொகுதி அது. தேர்தல் நடந்தது. தி.மு.க 6 பேராக இருந்தார்கள். 4 பேர் அ.தி.மு.க. தி.மு. கழகத்தின் சார்பில் 6 பேர் வெற்றி பெற்றிருந்த போதிலும், அதிலே ஒருவர் கூட தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர் இல்லை. ஆனால் அ.தி.மு.க. சார்பில் வெற்றி பெற்ற 4 பேரில் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர் வாக்களிக்காவிட்டால் அங்கே தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய ஒரு ஆதிதிராவிட தோழர் தேர்ந்தெடுக்கப்பட முடியாது. இந்த நிலைமையிலே தேர்தல் ஒத்திவைக்கப்பட்டது.

இந்தச் செய்தி பத்திரிகையிலே வந்த பிறகு, நண்பர் திருமாவளவன் அவர்கள் என்னைச் சந்தித்து, நானும் அவரும் இதுபற்றி பேசினோம். நான் அவரிடத்திலே சொன்னேன், யாரும் கவலைப்பட வேண்டாம். ஒரு ஆதிதிராவிடர் மாவட்ட கவுன்சிலுக்கு தலைவராக வருவதை நாம் யாரும் இந்தச் சூழலில் நிறுத்திவிடக் கூடாது. எனவே தி.மு.க தனது ஓட்டுக்களை அவருக்கு போடத் தயாராக இருக்கிறது என்று சொல்லி அ.தி.மு.க.வைச் சேர்ந்த ஆதிதிராவிட தோழருக்கு தி.மு.க.வுடைய 6 ஓட்டுக்களைப் போட்டு அவர் இன்றைக்கு தேனி மாவட்டத்தினுடைய பஞ்சாயத்து குழுத் தலைவராக ஆகியிருக்கிறார் என்பதையும் நான் இங்கே தெரிவிக்க விரும்புகின்றேன்.

அரியலூர் மாவட்டத்தைப் பற்றி மணி அவர்கள் சொன்னார்கள், மாவட்டத்தை பிரித்ததற்காக மகிழ்ச்சி தெரிவித்தார்கள். ஆனால் இன்னும் அதிகாரிகள் வேலையைத் தொடங்கவில்லை என்றார்கள். மணி அவர்களுக்குத் தெரியாததல்ல, இப்பொழுது தேர்தல் ஆணையத்தின் சார்பாக தொகுதிகள் பிரித்துக் கொண்டிருக்கிற காரணத்தால் அது பூரணத்துவம் பெற்ற பிறகுதான், அந்தப் பணிகள் நடக்க முடியும். அது விரைவிலே முடிந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## சென்னையில்
## 20 முக்கியச் சாலை சந்திப்புகளில்
## உள்சுற்று இணைப்புத் தொலைக்காட்சி
## மூலம் கண்காணிப்பு

சென்னையில் மாநகரச் சாலைகளில் போக்குவரத்து விதிகள் முறையாகக் கடைப்பிடிக்கப்படுகின்றனவா என்பதைக் கண்காணித்திட முக்கியச் சாலை சந்திப்புகளாக உள்ள 1) போர் நினைவுச் சின்னம், 2) தலைமைச் செயலக வெளிப்புறவாயில், 3) கத்திப்பாரா சந்திப்பு, 4) வள்ளுவர் கோட்டம் சந்திப்பு, 5) அண்ணா சிலை சந்திப்பு, 6) வீல்ஸ் இந்தியா கம்பெனி சந்திப்பு, 7) பெரியார் சிலை சந்திப்பு, 8) வேளச்சேரி விஜயநகர் பேருந்து நிலைய சந்திப்பு, 9) மத்திய கைலாஷ் சந்திப்பு, 10) ஹால்டா சந்திப்பு, 11) ராஜ்பவன் முதன்மை வாயில் சந்திப்பு, 12) எஸ். ஆர்.பி.டூல்ஸ் கம்பெனி சந்திப்பு, 13) எஸ்.ஐ.ஈ.டி.. கல்லூரி – செனடாப் சாலை சந்திப்பு, 14) 100 அடி சாலை – வடபழனி சாலை சந்திப்பு, 15) போரூர் சந்திப்பு, 16) அசோக் பில்லர் சந்திப்பு, 17) அண்ணாநகர் ரவுண்டானா சந்திப்பு, 18. எஸ்.என்.செட்டி சாலை – சுங்கச்சாவடி சந்திப்பு, 19) விமான நிலையச் சாலை சந்திப்பு, 20) கிரீன்வேஸ் சாலை சந்திப்பு ஆகிய இடங்களில் 2 கோடியே ஒரு இலட்சம் ரூபாய் செலவில் உள்சுற்று இணைப்புத் தொலைக்காட்சிப் பெட்டிகள் அமைக்கப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் 2.2.2007 அன்று அறிவித்துள்ளார்.

ஏப்ரல் மாதத்திற்குள் அது முடிந்துவிடும். முடிந்தபிறகு அரியலூர் மாவட்டம் செயல்படத் தொடங்கும் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கின்றேன்.

பிற மாநிலங்களிலே உள்ள பள்ளிகளில் தமிழ்ப் பாடம் படிக்கும் மாணவர்களுக்குப் பாடநூலும், தமிழ்வழிக் கல்வி படிக்கும் மாணவர்களுக்கு சம்மந்தப்பட்ட பாடநூல்களும், தமிழ்நாடு பாடநூல் கழகம் மூலம் இலவசமாக வழங்கப்படுகிறது. அவர்களுக்கு கிடைக்கவில்லையே என்ற கவலை மணி அவர்களுக்குத் தேவையில்லை. இப்பொழுது வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதிலே ஏதாவது தயக்கமோ, சுணக்கமோ இருந்தால், தெரிவித்தால் உடனடியாக சம்மந்தப்பட்ட அமைச்சர் நடவடிக்கை எடுப்பார் என்றும் நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் இங்கே கட்டிக்காட்டியதைப்போல எதிர்க்கட்சியின் சார்பாக இங்கே யாரும் கடந்த 5, 6 நாட்களாக அவையிலே நடவடிக்கையிலே கலந்து கொள்வதில்லை, வந்து கையெழுத்துப் போட்டுவிட்டு வாங்க வேண்டியதை வாங்கிக் கொண்டு போய் விடுகிறார்கள். நான் வாங்க வேண்டியது என்று சொல்வது, இன்றைக்கு என்னென்ன குறிப்புகள் அவையிலே வைக்கப்படுகின்றன, உறுப்பினர்களுக்கு தரப்படுகிறது என்ற முறையிலே வாங்கிக் கொண்டு போகிறார்கள் என்று சொன்னேன். தவறாக யாரும் கருதிக் கொண்டு சிரித்தால் அந்த சிரிப்புக்கு நான் பொறுப்பாளி அல்ல.

இந்த 8 மாத காலத்தில், இந்த அரசு மக்களுக்கு எதுவும் செய்யவில்லை. அதையெல்லாம் தொகுத்துத்தான் எதுவும் செய்யாத சர்க்கார் இது, செய்யாததையெல்லாம் தொகுத்துத்தான் இந்த அவையிலே ஆளுநர் உரை என்ற பெயரால் வெளியிட்டு இருக்கிறார்கள். இதை குப்பைத் தொட்டியிலே தான் போட வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசியிருக்கின்றார். அறிக்கை வெளியிட்டிருக்கின்றார். பேசியிருந்தால் கூட பேசவில்லை என்று மறுத்து விடலாம். அறிக்கையே அச்சடித்து வெளியிடப்பட்டிருக்கிறது. நான் குப்பைத் தொட்டியை இழிவாகக் கருதவில்லை.

நான் 15 ஆண்டுகளுக்கு முன்பு 'குப்பைத் தொட்டி' என்றே ஒரு சிறுகதை எழுதி அந்தக் கதையை ஆங்கிலத்தில், மலையாளத்தில், தெலுங்கில், இந்தியில் இல்லஸ்ட்ரிடேட் வீக்லி வரையிலே மொழிபெயர்க்கப்பட்டு இந்தியா முழுவதும் பரவிய கதை 'குப்பைத்தொட்டி' என்ற அந்தக் கதை. ஒரு வேளை அந்தக் குப்பைத் தொட்டியிலே இதைப் போடவேண்டும் என்றார்களோ என்னவோ எனக்குத் தெரியாது. நான் அதற்காகக் கவலைப்படுவதில்லை. ஆனால் எனக்குள்ள ஒரே ஒரு வருத்தம். இந்த ஆளுநர் உரையில் என்னுடைய வாசகங்கள் மாத்திரம் அல்ல, அறிஞர் அண்ணா அவர்களுடைய வாசகம் இந்திய அரசியல் சட்டத்தை மாற்ற வேண்டும், திருத்த வேண்டும், புதிய சிந்தனை வேண்டும் என்றெல்லாம் 40 ஆண்டுகளுக்கு முன்பு மாநிலங்களவையிலே அண்ணா பேசியதை இதிலே தொகுத்திருக்கிறோம். அதையும் சேர்த்து குப்பைத்தொட்டியிலே போடுங்கள் என்று அண்ணா பெயரை கட்சிக்கு வைத்துக் கொண்டிருக்கிறவர்கள் சொன்னார்களே என்பதை எண்ணும்போது எனக்கு



வேதனையாக இருக்கின்றது. இதை நான் மக்களுடைய தீர்ப்புக்கு விட்டுவிடுகின்றேன்; நான் மனதைக் குழப்பிக் கொள்ள விரும்பவில்லை.

எட்டு மாத காலத்திலே தி.மு.க. ஆட்சியில் எதுவும் செய்யவில்லையா? என்னென்ன செய்யப்பட்டிருக்கிறது என்பதை நீங்களெல்லாம் சொல்லியிருக்கின்றீர்கள். இருந்தாலும்கூட, நானும் பேசி பதிலுரையிலே குறிப்பிட்டு, அவற்றையெல்லாம் பதிய வைக்க வேண்டும் என்று விரும்புவது இயற்கைதான்.

7,000 கோடி ரூபாய் கூட்டுறவுக் கடன் அறவே தள்ளுபடி செய்யப்பட்டது. பயன் பெற்றவர்கள் 22 இலட்சத்து 30 ஆயிரத்து 111 பேர்.

நடப்பாண்டு பயிர்க்கடன் வட்டி விகிதம் 7 விழுக்காடாகக் குறைப்பு. அதனால் பயன்பெற்றோர் 4 இலட்சத்து 22 ஆயிரத்து 872 பேர்.

நடப்பாண்டில் விவசாயக் கடன்களுக்கு ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கீடு. இந்த ஆண்டு புதிதாக விவசாயக் கடன் பெற்றவர்கள் 4 இலட்சத்து 22 ஆயிரத்து 872 பேர். வழங்கப்பட்ட கடன் தொகை 818 கோடி ரூபாய்.

### விவசாயிகளுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் சமூகப் பாதுகாப்பு

விவசாயிகளுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல உதவிச் சட்டம், 22.2.2007 அன்று தஞ்சை மாவட்டத்திலே தொடங்க இருக்கிறது. நான் சென்று தொடங்கி வைக்க இருக்கின்றேன். இந்தத் திட்டம் ஏதோ அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் ஒரு கோடி பேருக்குமேல் வழங்கப்பட்டது என்றும், இப்போது 66 இலட்சம் பேர்களுக்குத்தான் என்று சொல்கிறார்கள் என்றும் அறிக்கை விடுகிறார்கள். உண்மை அதுவல்ல. இந்த 70 இலட்சம் பேர் என்பது 72 இலட்சம் குடும்பங்கள். 72 இலட்சம் குடும்பங்கள் என்றால், 2 கோடியே 25 இலட்சம் பேர் பயன் பெறுவார்கள் என்ற கணக்கு அவர்களுக்குத் தெரியவில்லை என்றால் நான் குடும்பம் என்ற கணக்கைச் சொல்கிறேன். அவர்கள் குடும்பத்தை விட்டுவிட்டு தனி நபர் என்ற கணக்கை சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அது ஒரு கோடியே 99 இலட்சம். 72 இலட்சம் குடும்பங்கள் இந்த வாரியத்தால் தொழிலாளர் குடும்பங்களுக்குப் பயன் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நிலமற்ற விவசாயத் தொழிலாளர் குடும்பங்களுக்கு இலவச நிலம் வழங்கும் திட்டம், இதனால் பயன் பெற்றோர் சுமார் 50 ஆயிரம் பேர். சுமார் 50 ஆயிரம் ஏக்கர் இரண்டு கட்டங்களில் தந்திருக்கிறோம். ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு அமைச்சர் சென்று இந்த நிலத்தை விநியோகித்தது, உங்களுக்கு நினைவிருக்கும் என்று கருதுகிறேன். எவ்வளவு நிலம் இருக்கிறது. நாங்கள் வைத்திருக்கிற நிலம் இவ்வளவுதான் என்றெல்லாம் சொன்னபோது கூட அது எவ்வளவு இருந்தாலும் பரவாயில்லை, கையகல நிலமாக இருந்தாலும், அது ஏழை விவசாயிகளுக்குத்தான் வழங்கப்படும் என்று இதே மாமன்றத்தில் நான் சொல்லி, அப்படித்தான் இன்றைக்கு அது வழங்கப்பட்டு வருகிறது.



தரமான அரிசி, கிலோ இரண்டு ரூபாய். இதனால் பயன் அடைவோர் ஒரு கோடியே 79 இலட்சம் குடும்பத்தினர். இது பற்றி நேற்று கூட ஒரு அறிக்கை பார்த்தேன். நாம் கொடுக்கிற அரிசியை மாடுகளுக்குப் போடுகிறார்களாம். அந்த மாடுகள் செத்து விடுகின்றனவாம். எவ்வளவு வேடிக்கையான, வேதனையான அறிக்கை இது என்பதை – அது யார் வெளியிடுகின்ற அறிக்கை – யாரோ ஏனோதானாக்கள் வெளியிட்ட அறிக்கை அல்ல.

750 கோடியில் இலவச வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டி வழங்கும் திட்டம். இதன் மூலம் 25 இலட்சத்து 30 ஆயிரம் குடும்பத்தினர் பயன் பெறுகிறார்கள். இது மிகப் பெரிய திட்டம், பிரமாண்டமான திட்டம். இதை மிகுந்த ஜாக்கிரதையாக, ஒளிவு மறைவின்றி எந்த விதமான ஊழலுக்கும், புகாருக்கும் இடமின்றி வழங்க வேண்டுமென்பதற்காக சட்ட மன்றத்திலே உள்ள கட்சிகளின் தலைவர்களையெல்லாம் பங்கு பெறச் செய்து குழு அமைத்து, அந்தக் குழுவின் ஆலோசனைப்படிதான் யாரிடத்திலே வாங்கலாம், எந்தக் கம்பெனியிலே இந்தத் தொலைக்காட்சிகளை வாங்கலாம், அவற்றை யார் யாருக்கு வழங்கலாம், எந்த முறையிலே வழங்கலாம் என்று இவை அத்தனையையும் சிந்தித்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

### அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்

நேற்று கூட இங்கே ஒரு விவாதம் நடந்தது. நாங்கள் கிராமங்களில் இந்த அனைத்துக்

கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை சட்டமன்ற உறுப்பினர்களைக் கலந்து கொண்டு செய்ய வேண்டும், அதை ஏற்கெனவே உள்ளாட்சித்துறை அமைச்சர் ஒத்துக் கொண்டிருக்கிறார் என்றெல்லாம் விவாதம் நடந்தது. ஆனால் அப்போது எண்ணிக் கொண்டேன். சட்டமன்ற உறுப்பினர்களை ஒரு குழுவிலே போட்டால், எல்லோரும் வருகிறார்களா, பார்த்தோமே, அனுபவத்தில், எல்லோருமே வந்தால் பரவாயில்லை, வருவதில்லை. எல்லோரும் அதிலே அங்கம் வகிப்பதில்லை, இடம் பெறுவதில்லை. குறை சொல்வதற்கு வேண்டுமானால் அவர்கள் இருப்பார்களே தவிர, சேர்ந்து ஒத்துழைத்து மக்களுக்குப் போய்ச் சேருகின்ற காரியம் தானே, அரசோடு ஒத்துழைப்போம் என்று எண்ணுகின்றவர்கள் யார் இருக்கிறார்கள்? யாருமே இல்லை என்று சொல்லவில்லை. எதிர்க்கட்சியிலே யாருமே இல்லை. அதையெல்லாம் சிந்தித்துப் பார்த்து அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தைக் கூட எப்படி செயல்படுத்தலாம் என்பதை அமர்ந்து பேசுங்கள். ஆனால் நான் கருதுவது, "நெல்லுக்கு இறைத்த நீர் வாய்க்கால் வழியோடி, புல்லுக்கும் புசியக் கூடாது" நெல்லுக்கு நேராகவே செல்ல வேண்டும், அப்படிப்பட்ட முறையிலே போய்ச் சேர நீங்கள் ஒரு ஆலோசனை சொல்லுங்கள், நானே முன் நின்று அந்தக் கூட்டத்தை நடத்துகிறேன். அந்தக் கூட்டத்திலே நீங்கள் எடுக்கின்ற முடிவின்படி அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை கிராமங்களிலே நிறைவேற்றுவதற்குத் தயாராக இருக்கிறோம் என்பதை நான் சுட்டிக் காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

ஏனென்றால் நேற்றைக்கு இந்தப் பிரச்சினை வந்தபோது உள்ளாட்சித்துறை அமைச்சர் இங்கே இல்லை. அவர் சொன்னதாகச் சொல்லப்பட்டது. ஆனால் இந்தப் பிரச்சினைக்கு அதிக ஆதரவு, அங்கே இருப்பதைவிட, இங்கே அதிகமாக இருக்கிறது. அதனால்தான் சொல்கிறேன், அதிகாரிகளும் அதிலே ஈடுபடலாம், அதே நேரத்தில் மக்கள் பிரதிநிதிகளும் ஈடுபடலாம், இரண்டு பேரும் ஈடுபட்டால்தான் இவர் தவறு செய்தால் அவர் கண்டுபிடிக்கலாம், அவர் தவறு செய்தால் இவர் கண்டுபிடிக்கலாம். இரண்டு பேரும் தவறு செய்தால் அதை நான் கண்டுபிடிக்கலாம் எனவே அந்தத் திட்டம் மிக உயர்ந்த திட்டம், சிறந்த திட்டம், பெரிய திட்டம், மக்களிடையே போய்ச் சேர வேண்டிய திட்டம், அதை நாம் ஒழுங்காக நிறைவேற்ற வேண்டும், அதற்கு நீங்கள் எல்லாம் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பொங்கல் முதல், நடப்பாண்டில், இலவச எல்.பி.ஜி. இணைப்பு மற்றும் எரிவாயு அடுப்பு (பயனடைவோர் 3 இலட்சம் குடும்பம்) இப்படி நம்முடைய திட்டங்கள் பலவற்றை இடையிலே வந்த ஆட்சி ஒழித்து விட்டது என்றாலும், அவைகளையெல்லம் இன்று மீண்டும் செயல்படுத்துகின்ற ஆட்சியாக இந்த ஆட்சி இருக்கிறது என்பதை இங்கே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுனாமி வந்தது, சுனாமி வந்து இரண்டாண்டு காலமாகிறது. 2004ஆம் ஆண்டு டிசம்பர் 24ஆம் தேதி சுனாமி வந்தபோது, எனக்கே என்னுடைய வாழ்வுக்கே சுனாமி வந்ததைப் போல நான் சுருண்டு படுத்துவிட்டேன். அப்படிப்பட்ட சுகவீனம் எனக்கேற்பட்டது. நான் மருத்துவமனையிலே இருந்ததைப் பார்க்க அன்பிற்கும் பாசத்திற்கும் உரிய திருமதி. சோனியா காந்தி அவர்கள் நேரடியாக மருத்துவமனைக்கே வந்து உடல் நலம் விசாரித்தார்கள். அப்போது கூட ஒரு கோடி ரூபாயை தி.மு.கழக அறக்கட்டளையிலிருந்து அவர்களிடம் நான் வழங்கி அதை சுனாமி நிதியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டேன்.

சுனாமி நிவாரணப் பணிகளுக்காக மத்திய அரசிடமிருந்து ராஜீவ் காந்தி மறுவாழ்வுத் திட்டத்தின் கீழ் இவ்வாறு பெயர் வைக்க வேண்டுமென்று சொன்னதே அப்போது நான் தான்.

**சுனாமி பாதித்த பகுதிகளில் வீடுகள்**

டெல்லியிலே நடைபெற்ற ஒரு கூட்டத்தில், அந்தத் திட்டத்திற்கு, ராஜீவ் காந்தி மறுவாழ்வுத் திட்டம் என்று பெயர் வைக்க வேண்டுமென்று நான் கேட்டு, அது ஏற்கப்பட்டது.அன்றைக்கு அதற்கு 2,347 கோடி ரூபாய்; பன்னாட்டு உதவிகள் மூலமாக 2,550 கோடி; மொத்தம் ரூபாய் 4,897 கோடி ஒதுக்கப்பட்டது. ஒதுக்கப் பட்ட இந்தப் பணத்தில் உடனடி நிவாரணத் திற்காக ஓரளவுத்தொகை வழங்கப்பட்டதே அல்லாமல், நிரந்தர நிவாரணங்களுக்காகச் செலவிடப்படவில்லை, அதற்காகச் சென்ற கோப்புகள் எல்லாம் கையெழுத்துப் போடப் படாமலே தூங்கிக் கொண்டிருந்தன. நாம் ஆட்சிக்கு வந்தபிறகுதான், அந்தக் கோப்புகளையெல்லாம் தட்டியெழுப்பி, வேலை பார்க்க வைத்தோம்.

அது மாத்திரமல்ல; 2004 டிசம்பரில் சுனாமிப் பேரலைகள் வீசியது என்றால் அதற்குப்பிறகு, பல மாதங்களுக்குப்பிறகு, – பதினேழு மாதங்களுக்குப்பிறகு, நாம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவுடன், உடனடியாக, பாதிக்கப்பட்ட கடலோர மாவட்டங்களுடைய ஆட்சித் தலைவர்களுடைய கூட்டத்தை நாமக்கல் கவிஞர் மாளிகையிலே கூட்டினேன். கூட்டத்தைக்கூட்டி, என்ன வேலை நடைபெற்றிருக்கிறது என்று கேட்டால், அவர்கள் என்ன சொன்னார்கள் என்றால், 'பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் நிரந்தரமான வேலைகள் எதுவும் நடைபெறவில்லை என்று சொன்னார்கள்.



## மாநில - மாவட்டச் சாலைகள் இருவழித் தடச்சாலைகளாக மேம்பாடு

283 இடங்களில் மாநில, மாவட்டச் சாலைகள் ரூ.232.66 கோடி செலவில் 911 கி.மீ. நீளத்திற்கு இரு வழித்தட சாலைகளாக மேம்படுத்தப்படுமென்று மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவித்துள்ளார்.

நெடுஞ்சாலை துறைக்கான மானியக் கோரிக்கை மீது நடைபெற்ற விவாதத்தின்போது, மாநில நெடுஞ்சாலை மற்றும் மாவட்ட முக்கியச் சாலையில் உள்ள ஒருவழித் தடங்கள் அனைத்தும் படிப்படியாக இருவழித் தடங்களாக தரம் உயர்த்தி நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், மூன்று ஆண்டுகளுக்குப் பின் மாநில நெடுஞ் சாலைகளில் ஒரு வழித் தடங்களே இருக்காது என்றும் அறிவிக்கப்பட்டது. அந்த அறிவிப்பினைப் படிப்படியாக நிறைவேற்றும் வகையில், தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலும் உள்ள 439 கி.மீ. நீளமுடைய 153 மாநிலச் சாலைகளும், 472 .கி.மீ. நீளமுள்ள 130 மாவட்ட முக்கியச் சாலைகளும், 229 கோடியே 51 இலட்ச ரூபாய் செலவில் இருவழித் தடங்களாக மேம்படுத்தப்படும் என்றும், திட்டக்குடி பேரூராட்சி சாலையில் வெள்ளாற்றின் குறுக்கே 3 கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவில் உயர்மட்ட பாலம் ஒன்று கட்டப்படும் என்றும், ஆக மொத்தம் 232 கோடியே 66 இலட்ச ரூபாய் செலவில் இப்பணிகள் அனைத்தும் நிறைவேற்றப்படும் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 2.2.2007 அன்று அறிவித்துள்ளார். *

எப்பொழுது? பதினேழு மாதங்கள் கழித்துச் சொல்கிறார்கள். தற்காலிக உதவிகள், வேலைகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஆயிரம், இரண்டாயிரம், 500, 800 என்று தற்காலிக உதவி, உடனடி உதவி செய்யப்பட்டதே அல்லாமல், அவர்களுக்கு நிரந்தர வீடுகள் கட்டுகின்ற இந்தப்பணி தொடங்கப்படவும் இல்லை; நிறைவு செய்யப்படவும் இல்லை.

54 ஆயிரம் வீடுகள் கட்டப்பட வேண்டுமென்று ஏற்கெனவே நிர்ணயிக்கப்பட்ட இலக்குக்கு மாறாக, தொண்டு நிறுவனங்கள் மூலம் கட்டப்பட்ட வீடுகள் 8,406 அதுவும் அரசின் சார்பாக அல்ல. 54 ஆயிரம் வீடுகள் கட்டுவதாக இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, தொண்டு நிறுவனங்கள் மூலம் 8,408 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன. இந்தப்பணி, என்னுடைய ஆய்வுக் கூட்டத்திற்குப்பிறகு, 18,828 வீடுகள் கட்டுகின்ற அளவிற்குத் தீவிரப்படுத்தப்பட்டது. மேலும், இந்த நிதியாண்டின் இறுதிக்குள், 32,668 வீடுகள் கட்டி முடிக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். சில தொண்டு நிறுவனங்கள் கட்டுவதாக வாக்களித்து கட்ட இயலாத 3,000 வீடுகளையும் 63 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தற்போது அரசே கட்ட ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுனாமி பாதிக்கப்பட்ட நாகப்பட்டினம் பகுதியில், மாதா அமிர்தானந்தமயி அவர்களின் அறக்கட்டளையின் சார்பில் கட்டப்பட்டுள்ள சுமார் 400 வீடுகளை, வரும் 31ஆம் தேதி நானே சென்று திறந்து வைக்க இருக்கிறேன் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். மாதா அமிர்தானந்தமயி அவர்களைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். அவர்கள் இப்படிப்பட்ட நல்ல காரியங்களை, ஏழையெளியோருக்கு, நலிந்தோருக்கு, பாதிக்கப்பட்டோருக்கு செய்கின்ற அருள் உள்ளம் படைத்தவர்கள்; மீனவச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், அப்படிப்பட்ட மிகமிகப் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தில் பிறந்து இன்றைக்கு கேரள மாநிலத்தில் மிகப் பிரம்மாண்டமான மருத்துவமனை, கல்லூரி இவற்றையெல்லாம் நடத்துகின்ற அளவிற்கு உயர்ந்தவர்கள். அவர்கள் என்னை அழைத்திருக்கின்றார்கள். நான் நாகைக்குச் சென்று, இந்த 400 வீடுகளை, 31ஆம் தேதி அன்று திறந்து வைப்பதற்காக இருக்கின்றேன்.

24.6.2006 அன்று இந்த அரசு நடத்திய மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டத்தில், நான் முன்பு சொன்னேனே, அந்தக் கூட்டத்தில், விடுபட்ட மீனவர்களுக்கு வலைகள், படகுகள் வழங்குதல் மற்றும் ஏற்கெனவே உதவி அளிக்கப்பட்ட மீனவர்களுக்கு கூடுதல் வலைகள், ஐஸ் பெட்டிகள், பாதுகாப்புக் கவச உடைகள், சைக்கிள்கள் போன்றவை வழங்க 110 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும், கல்விக் கட்டணச் சலுகைகள் கூடுதலாக ஓராண்டுகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

### ராஜீவ் காந்தி சுனாமி மறுவாழ்வுத் திட்டம்

மத்திய அமைச்சர்களுடைய அதிகார மளிக்கப்பட்ட குழு இத்திட்டத்தை ஏற்றுக்கொண்டுள்ள நிலையில், முதற்கட்டமாக நாகை, கடலூர், கன்னியாகுமரி, தூத்துக்குடி, நெல்லை, திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், புதுக்கோட்டை, இராமநாதபுரம் மற்றும் தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் அனைத்து இயற்கைச் சீற்றங்களையும் தாங்கக்கூடிய 325 சதுர அடி பரப்பளவு கொண்ட நிரந்தர வீடுகள் தலா 2 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய் செலவிலே கட்டப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன். அடிப்படை வசதிகளுக்காக ஒரு வீட்டுக்கு சுமார் 40,000 ரூபாயும், 10 ஆண்டுகள் காப்பீடு செய்ய 1,000 ரூபாயும் ஒப்புதல் அளிக்கப்பட்டு, ராஜீவ் காந்தி சுனாமி மறுவாழ்வுத் திட்டத்தின்கீழ் ரூபாய் 550 கோடி மதிப்பீட்டில் 22,000 வீடுகள் கட்டப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நண்பர் பீட்டர் அல்போன்ஸ், தமிழ்மொழிக்கு பேரகராதி தொகுப்பும், அறிவியல் கலைச் சொற்களும், கலைக் களஞ்சியம் புதிதாக உருவாக்கும் பணி மேற்கொள்ள வேண்டுமென்ற கோரிக்கையை விடுத்தார்.

1974ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியில் அகர முதலித் திட்டம் மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்களைத் தலைவராகக் கொண்டு தொடங்கப்பட்டது. அத்திட்டத்தின் கீழ் இதுவரை 18 தொகுதிகள் வெளியிடப் பட்டுள்ளன. ஆறு தொகுதிகள் அச்சில் உள்ளன. எஞ்சிய ஏழு தொகுதிகள் தயாரிப்பில் உள்ளன. அச்சில் உள்ளதையும், தயாரிப்பில் உள்ளதையும் இந்த அரசு விரைவுபடுத்தி வெளியிடும் என்பதை பீட்டர் அல்போன்ஸ் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். கழக ஆட்சி அமையும் போதெல்லாம் அகர முதலித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு விரைவுபடுத்தப்படுவதும், அதற்குப் பிறகு பெரும் தொய்வும், தளர்ச்சியும் ஏற்படுவதும், அது மீண்டும் புத்துயிர் பெறுவதுமான நிலை தொடர்ந்து நிகழ்ந்து கொண்டிருக்கின்றது. அதையொட்டி, தமிழ் அறிவியல் களஞ்சியத்தின் 18 தொகுதிகள் தயாரிக்கப்பட்டுவிட்டது. 17,18,19 மற்றும் 20 தொகுதிகள் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. 2008ஆம் ஆண்டுக்குள் இவற்றைத் தயாரித்திட நடவடிக்கைகள் முனைப்போடு மேற்கொள்ளப்படும்.

### தமிழ்ப் பேரகராதி

மேலும், தமிழக அரசால், அறிவியல் தமிழ் மன்றம் அமைக்கப்பட்டுள்ளதை அனைவரும் அறிவீர்கள். தமிழ் மொழியில் புதிய அறிவியல் சொற்களும், கலைச் சொற்களும் கொண்ட அறிவியல் கலைச்சொல் அகராதி தயாரிக்கும் பணி விரைவாக நடைபெற இந்த மன்றம் ஆவன செய்யும். தமிழ்ப் பேரகராதி திருத்தப் பணி தற்போது சென்னைப் பல்கலைக்கழகம் தமிழ் மொழித் துறையில் நடைபெற்று வருகிறது. முந்தைய பேரகராதியைவிட மும்மடங்கு பெரிதாக, சுமார் ஐந்து இலட்சம் சொற்களோடு இந்த அகராதி வெளியிடப்படும் என்பதை பெருமகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

> "*அரசுக் கல்லூரிகளில் உள்ள 1,062 விரிவுரையாளர் காலிப்பணியிடங்களை நிரப்பும் பொழுது, 522 பின்னடைவுப் பணியிடங்கள், தனி நியமனம் (Special Recruitment) மூலம் மூன்று கட்டங்களாக நிரப்பப்படும் என்ற உறுதியை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.*"

கருப்பசாமி பாண்டியன் அவர்கள் பேசும்பொழுது சொன்னார்கள், அவருடைய மாவட்டத்தில் குலவணிகர்புரம் பகுதியில் அமைந்துள்ள இரயில்வே கதவு எண். 4 வாகன அலகு 1,13,547 ஆக இருக்கிறது. இது குறைந்தபட்ச அளவான 1,00,000 –ஐ விட அதிகமாக இருப்பதால், கடவுக்குப் பதிலாக இரயில்வே மேம்பாலம் கட்டுகின்ற தகுதியைப் பெறுகிறது. ஆனால், இச்சாலை தேசிய நெடுஞ்சாலை 7–இல் வருவதால் தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திடம் இசைவு பெற்று இரயில்வே மேம்பாலம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

### தகவல் தொழில்நுட்பப் பூங்கா

கருப்பசாமி பாண்டியன் அவர்களும், நன்மாறன் அவர்களும் தகவல் தொழில்நுட்பப் பூங்காவைப்பற்றி இங்கே எடுத்துரைத்தார்கள். அவர்கள் பேசும்போது, சென்னைக்கு அடுத்தப்படியாக, கோயம்புத்தூர், மதுரை, திருச்சி, சேலம், நெல்லை ஆகிய இரண்டாம் நிலை நகரங்களில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்தார்கள். நெல்லை ஆகிய இரண்டாம் நிலை நகரங்களில் தகவல் தொழில்நுட்பப்



பூங்கா அமைக்க அரசு முனைப்போடு செயல்பட்டு வருகிறது. அதன் அடிப்படையில் கோவை, மதுரை மற்றும் திருச்சி ஆகிய நகரங்களில் அமைக்கப்படவுள்ள தொழில்நுட்பப் பூங்கா தொடர்பாகத் தேவையான நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. சேலம் மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் நிலம் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டம், கிண்ணிமங்கலம் கிராமத்தில் 39 ஏக்கர் நிலமும், மதுரை மாவட்டம், மதுரை வடக்கு வட்டம் இலந்தைக்குளம் கிராமத்தில் 21.77 ஏக்கர் நிலமும், தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்க கையகப்படுத்தப் பட்டுள்ளது.

மேலும், காமராஜ் பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான 200 ஏக்கர் நிலம் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்க எல்காட் நிறுவனத்திற்கு உரிமை மாற்றம் செய்வது தொடர்பான கருத்துரு அரசின் பரிசீலனையிலே உள்ளது.

### விவசாய நிலங்களை அரசு தொடாது

இதையெல்லாம் சொல்வதற்குக் காரணம், நிலம் எடுப்பது என்பது இப்போது பெரிய பிரச்சினையாக ஆகியிருக்கிறது. சில நேரங்களிலே, இதிலே அரசியலும் குறுக்கிடுகின்ற காரணத்தால், நிலம் எடுப்பு நினைத்தப்படி நடக்க முடியவில்லை. நினைத்தபடியெல்லாம் நிலத்தை எடுக்க வேண்டுமென்று நான் கருதுபவன் அல்ல. எல்லோரும் நினைக்கிறபடி, ஏழையெளியவர்கள், குடிசைவாழ் மக்கள், நம்முடைய பல்வேறு கட்சிகளின் தலைவர்கள், கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்கள், பாட்டாளி மக்கள் கட்சியினுடைய தலைவர்கள் தோழர்கள், இவர்கள் எல்லாம் கருதுகிற இடத்தில்தான் நிலத்தை எடுக்க வேண்டுமென்று கருதுகிறோம். பயிர் செய்யப்படுகிற நிலங்களை நிச்சயமாக இந்த அரசு தொடாது என்ற உறுதியை நான் அளிக்கின்றேன். அதே நேரத்தில், தொழில்கள் வளர வேண்டும் என்று விரும்புகிறபோது, கொஞ்சம் விட்டுக் கொடுக்க வேண்டும். ஒரு 'அரை ஏக்கர் ஒரு ஏக்கர்தான் அதைச் சாக்கிட்டு, அரை ஏக்கர் நிலம், அய்யய்யோ போச்சே' என்று சொன்னால், எதுவுமே ஆரம்பிக்க முடியாது. நாடும் வளம் பெற வேண்டுமென்று கருதுகின்றோம், தொழில் களும் வளர வேண்டுமென்று கருதுகின்றோம், வேலைவாய்ப்பும் பெருக வேண்டுமென்று கருதுகிறோம், இவ்வளவுக்குப் பிறகு, நாம் தொழிற்சாலைகளே உருவாகக் கூடாது என்று எண்ணினால், தடையாக இருந்தால், என்ன ஆகும் என்பதை தயவுசெய்து எண்ணிப் பார்க்க வேண்டும். இப்போது மேற்கு வங்கத்திலே என்னவாயிற்று ? தொழிற்சாலை அமைக்க அவர்கள் எடுத்த முயற்சிக்கு ஏற்பட்ட இடையூறுகள் எல்லாம் உங்களுக்குத் தெரியும். அதற்காக இந்தியா முழுவதும் கொந்தளித்ததும் உங்களுக்குத் தெரியும். ஆகவே, அப்படிப்பட்ட கொந்தளிப்புகளும், குழப்பங்களும் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டிய கடமை நமக்கு எல்லாம் இருக்கின்றது. ஏழை எளியவர்களை, உங்களுக்கு இடமில்லை என்று துரத்திவிட்டு, நாம் அங்கே பங்களா கட்டிக்கொள்வதோ, ஆலை அமைத்துக்கொள்வதோ, இந்த அரசினுடைய கொள்கையாக நிச்சயம் இருக்காது என்பதை மீண்டும் மீண்டும் நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திரு.மணி அவர்களும், திரு.வேல்முருகன் அவர்களும் பேசும் பொழுது, இந்தக் கள்ள லாட்டரிச்சீட்டு விற்பனை முற்றிலும் அகற்றப்பட வேண்டும் என்று கோரிக்கை வைத்தார்கள். இந்தக் கள்ள லாட்டரிச் சீட்டுகள் விற்பனைக்கு எதிராக முதலில் 1,308 வழக்குகள் போடப்பட்டன. இதெல்லாம் 2006–க்கு முன்பே மே மாதத்திற்கு முன்பே 2006–இல் வழக்குகள் போடப்பட்டன. 2006க்குப் பிறகு, அப்பொழுதும் 1,800 வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன. ஆக, தொடர்ந்து இந்தக் கள்ள லாட்டரிச் சீட்டுகள் விற்பனைமீது நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது. ஆனால், தமிழ்நாட்டிலே அனுமதிக்கப்பட்டுள்ளதா என்றால், இல்லை. வேறு மாநிலங்களிலேயிருந்து இங்கே வந்து விற்பனை செய்து கொண்டிருக்கிறார்கள். அதை அடக்குவதற்கு முடக்குவதற்கு, அப்படி நடைபெறுகின்ற காரியங்களைத் தண்டிப்பதற்கு நிச்சயமாக, தீவிரமாக இந்த அரசு முயற்சிகளை மேற்கொள்ளும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு.வேல்முருகன் அவர்களுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தி, பண்ருட்டி தொகுதியிலே,

> *சுமார் 918 கி.மீ. நீளத்தில் 280 சாலை மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ள கூடுதலாக ரூ.230.17 கோடி ஒதுக்கவும் இந்த அரசு முடிவு செய்துள்ளது. இதில் 433 கி.மீ. நீள மாநில நெடுஞ்சாலைகளும், 485 கி.மீ. நீள மாவட்ட சாலைகளும் மேம்படுத்தப்படும்.*

தனி நீதிமன்ற வளாக தேவையென்று அவர் தெரிவித்திருக்கின்றார். இதற்காக ரூ.223 கோடி செலவில், பண்ருட்டியில் தனி நீதிமன்ற வளாகம் அமைக்க ஒப்புதல் அளிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**சமத்துவப் பொங்கல்**

அவர் இங்கே கலாச்சாரத்தைப் பற்றி மிகக் கவலையோடு குறிப்பிட்டார். புதிய கலாச்சாரத்தை உருவாக்குபவர்களாக நாம் இருக்க வேண்டியிருக்கிறது என்ற கொள்கையை நம்முடைய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய உறுப்பினர் பாலபாரதி அவர்கள் பேசும்போது எடுத்துரைத்தார்கள். கலாச்சாரத்தைப் பற்றிப் பேசுகிற நேரத்தில், பேசுவதே பெண்களை இழிவுபடுத்துகின்ற கலாச்சாரமாக இருக்கிறது என்று நாம் அந்த முறைகளை கண்டித்துப் பேசும்பொழுதே பின் விளைவுகளை ஏற்படுத்தி விடக்கூடாது. அதனால் பாலபாரதி அவர்களுக்கு அவ்வளவு கோபம் என்று கருதுகின்றேன். அவர்கள் தன்னுடைய பேச்சை ஒரு வகையாகத் திருப்பிச் சொன்னார்கள். கலாச்சார நடவடிக்கை என்று பார்த்தால், இன்றைக்கு பொங்கல் நாளை சமத்துவப் பொங்கலாக இந்த அரசாங்கம் அறிவித்திருப்பதே ஒரு புதிய கலாச்சாரத்தை உருவாக்குவதற்காகத்தான் என்று அவர்கள் குறிப்பிட்டார்கள்.

நம்முடைய ரவிக்குமார் அவர்களும், செல்வப் பெருந்தகை அவர்களும், அரசுக் கல்லூரிகளில், விரிவுரையாளர் பணியிடங்களில் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கான பின்னடைவு (Backlog) பணியிடங்கள் நிரப்பப்பட வேண்டுமென்று கோரிக்கை வைத்தார்கள். விரிவுரையாளர் பின்னடைவுப் பணியிடங்கள், அரசுக் கல்லூரிகளில் உள்ள 1,062 விரிவுரையாளர் காலிப்பணியிடங்களை நிரப்பும் பொழுது, 522 பின்னடைவுப் பணியிடங்கள், தனி நியமனம் (Special Recruitment) மூலம் மூன்று கட்டங்களாக நிரப்பப்படும் என்ற உறுதியை நான் தெரிவித்துக் கொள்கிறேன். கைதட்டி விட்டீர்கள். மூன்று கட்டங்கள் என்பது திருப்தியளிக்காது என்று கருதினேன். திருப்தியளிக்காவிட்டால் இன்னும் அதைப்பற்றி யோசிப்பேன்.

**கயிறு குழுமம் அமைக்க ஒப்புதல்**

பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே உரையாற்றிய எதிரொலி மணியன் அவர்கள் பெரணமல்லூர் காவல் நிலையம், வடவணக்கம்பாடி காவல் நிலையம் ஆகியவற்றிற்குக் கட்டடம் மற்றும் காவலர் குடியிருப்புகள் கட்டித்தர வேண்டுமென்று கோரிக்கை வைத்துள்ளார். திருவண்ணாமலை மாவட்டம், வடவணக்கம்பாடி காவல் நிலையம் ஏற்கெனவே புதிய கட்டடத்தில் இயங்கி வருகிறது. பெரணமல்லூர் காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம், காவல் துறையை நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், இந்த இரண்டு காவல் நிலையங்களைச் சேர்ந்த பணியாளர்களுக்குக் குடியிருப்புகள், "ஆண்டுதோறும் 3,000 காவலர் குடியிருப்புகள் கட்டும் திட்டத்தின்" கீழ் வரும் நிதியாண்டில் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. அ. தமிழரசு அவர்கள் பேசும்போது, ஓமலூர் தொகுதியில் அரசு கயிறு தொழிற்சாலை நிறுவவேண்டுமென்று கோரிக்கை வைத்தார். சேலம் மாவட்டம், தாரமங்கலம், ஓமலூர் பகுதியை உள்ளடக்கிய பகுதிகளில் உள்ள கயிறு திரிக்கும் தொழிலாளர்களுக்காக, மத்திய அரசின் பாரம்பரியமிக்க தொழில்களைப் புத்துயிரூட்டும் நிதித்திட்டத்தின் கீழ், ரூ.117 இலட்சம் மதிப்பீட்டில் கயிறு குழுமம் அமைக்க ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இத்திட்டத்தை நடப்பு நிதியாண்டில் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தலைவாசல் தொகுதி, திரு.கே. சின்னதுரை அவர்கள், தனது தொகுதியில் கங்கவல்லி தாலுக்கா அலுவலகம், சொந்தக் கட்டடம் இன்றி இயங்கி வருவதால், தாலுக்கா அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டப்பட வேண்டுமென்று கோரிக்கை வைத்தார். வரும் நிதியாண்டில் கங்கவல்லி தாலுகா அலுவலகத்தில் புதிய வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் கட்ட ஆவன செய்யப்படும்.

**அரசு மருத்துவமனைகள் மேம்பாடு**

விவாதத்தின்போது பேசிய பல உறுப்பினர்கள் தமது தொகுதிகளிலுள்ள அரசு மருத்துவமனைகளில் வசதிகள் மேம்படுத்தப்பட வேண்டுமென்றும், போதிய மருத்துவர்கள் பணியமர்த்தப்பட வேண்டுமென்றும் கோரிக்கை விடுத்தார்கள்.

மாண்புமிகு உறுப்பினர்கள் கோரியவாறு இத்திட்டத்திற்கு திருவாரூர் மாவட்டம், குடவாசல் அரசு மருத்துவமனையில் ரூபாய் 95 இலட்சம் செலவிலும், சேலம் மாவட்டம், எடப்பாடி அரசு மருத்துவமனையில் 25 இலட்சம் ரூபாய் செலவிலும், திருச்சி மாவட்டம், லால்குடி அரசு மருத்துவமனையில் 40 இலட்சம் ரூபாய் செலவிலும், நாமக்கல் மாவட்டம், வேலூர் அரசு மருத்துவமனையில் 65 இலட்சம் ரூபாய் செலவிலும், கோவை மாவட்டம், வால்பாறை அரசு மருத்துவமனையில் 10 இலட்சம் ரூபாய் செலவிலும், விழுப்புரம் மாவட்டம், செஞ்சி அரசு



மருத்துவமனையில் 85 இலட்சம் ரூபாய் செலவிலும், காஞ்சி மாவட்டம் திருப்பெரும்புதூர் அரசு மருத்துவமனையில் 85 இலட்சம் ரூபாய் செலவிலும் கட்டட பராமரிப்புப் பணிகள், புதிய கட்டடங்கள் கட்டுதல், வார்டுகள் அமைத்தல், கழிப்பிட வசதி போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

திருப்பூர் சாயப்பட்டறைபற்றி – நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத் தேர்தல் அறிக்கைதான் கதாநாயகன் என்று மரியாதைக்குரிய திரு. சிதம்பரம் அவர்கள் சொன்னார்கள் – அது மாதிரி திருப்பூர் சாயப்பட்டறைதான் இன்றைய சட்டப் பேரவையிலே கதாநாயகனாக ஒரு ஐந்து ஆறு நாட்களாகப் பேசப்படுகின்ற ஒன்று. அந்தக் கழிவுகளை அகற்றுவது பற்றி திரு. சிவபுண்ணியம் அவர்கள் பேசினார். சி.பி.எம். சார்பாக திரு. கோவிந்தசாமி அவர்கள் பேசினார்கள். காங்கிரஸ் கட்சி சார்பாக ஞானசேகரன் அவர்கள் முழங்கினார்கள். பாட்டாளி மக்கள் கட்சி சார்பாக ஜி.கே.மணி அவர்கள் பேசியிருக்கிறார்கள். திரு. விடியல் சேகரும் அதைப்பற்றி பேசினார். இடையிலே புகுந்து நான் பதில் சொல்ல வேண்டுமென்று சொன்னார்கள். இன்றைக்கே பதில் சொல்வதற்கு இவ்வளவு கஷ்டப்படுகிறேன். நேற்று எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பேன் என்பது உங்களுக்குத் தெரியும், பேசியிருந்தால். பதில் சொல்லாமல் உட்கார்ந்திருந்தேன்.

அதைப்பற்றி அதிகாரிகளுடன் கலந்து பேசினேன். குழாய்களின் மூலமாக சுத்திகரிக்கப்பட்ட கழிவுகளைக் கொண்டுபோய் கடலில் விடுவது என்றால், மற்ற மாநிலங்களுக்கு அது வசதி, இப்போது குஜராத் என்றால் கடலே இருக்கிறது. அருகிலேயே கடல் இருக்கிறது. அதேமாதிரி, மராட்டியத்திலே கடல் இருக்கிறது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் திருப்பூர் தொழிற்சாலைக்கும், கடலுக்கும் வெகுதூரம் இருக்கிறது. அதனால் நீளமாகத்தான் அந்தக் குழாய்களை அமைக்க முடியும் அதற்கு எவ்வளவு தூரத்திற்கு இந்தக் குழாய், எந்தக் கடலில் கொண்டுவிடுவது, நாகப்பட்டினமா அல்லது வேறு இடமா, எந்த இடத்திலே கடலில் கொண்டு அந்தக் குழாய்களை விட்டு கழிவுகளைக் கடலில் கலக்க வைக்கிறது என்று பார்த்தால் அதற்கு சுமார் உத்தேசமாக 700 கோடி ரூபாய் அளவிற்கு செலவாகுமென்று அந்த 700 கோடி ரூபாய் தமிழக அரசு சார்பில் 15 சதவிகிதமும், அது சுமார் 100 கோடி ரூபாயாகும். 15 சதவிகிதமென்றால், மத்திய அரசின் சார்பில் 25 சதவிகிதம் என்றால் 175 கோடி ரூபாய் ஆகும். மீதத் தொகையை சாயப்பட்டறைகளும் செலவிட்டு, அவர்கள் சார்பிலேயே ஒரு நிறுவனத்தை ஏற்படுத்தி அதன் மூலம் நிறைவேறுவது பற்றி பரிசீலிக்கலாம் என்று கருதுகிறேன். அதுபற்றி அவர்களை அழைத்துப் பேசி, நீதிமன்றத்திலே இருக்கின்ற வழக்குகளுக்குத் தொல்லைவராமல் அதை நிறைவேற்றுவதற்கு இந்த அரசு எல்லா விதமான முயற்சிகளையும் மேற்கொள்ளும் என்பதையும் தற்பொழுது நீதிமன்றத்தினுடைய பிரச்சினைகள் முடிந்துவிடும் என்றும் நான் கருதுகிறேன். இரண்டு, மூன்று அறிவிப்புகளை வெளியிட விரும்புகின்றேன்.

**சாலை மேம்பாட்டுப் பணிகள்**

மாநில நெடுஞ்சாலைகளையும், பிற நெடுஞ்சாலைகளையும் மேம்படுத்த சிறப்புத் திட்டத்தின்கீழ் மாநில அரசின் நிதி ஆதாரத்திலிருந்து ரூ.722.40 கோடி ஒதுக்கீடு செய்து பல்வேறு சாலை மேம்பாட்டுப் பணிகளுக்கு ஒப்புதல் அளித்திருக்கின்றோம். இதில், 1078.5 கி.மீ. நீள மாநில நெடுஞ்சாலைகள், 1390 கி.மீ. நீள மாவட்ட முக்கிய சாலைகள் மற்றும் 1354.5 கி.மீ. நீள மாவட்ட இதர சாலைகள் மேம்பாட்டுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. தவிர 50 பாலப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதனைத் தொடர்ந்து, பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்களும் பல முக்கியச் சாலைகளை மேம்படுத்தி நிதி ஒதுக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளார்கள். அதனை ஏற்று, சுமார் 918 கி.மீ. நீளத்தில் 280 சாலை மேம்பட்டுப் பணிகளை மேற்கொள்ள கூடுதலாக ரூ.230.17 கோடி ஒதுக்கவும் இந்த அரசு முடிவு செய்துள்ளது. இதில் 433 கி.மீ. நீள மாநில நெடுஞ்சாலைகளும், 485 கி.மீ. நீள மாவட்ட சாலைகளும் மேம்படுத்தப்படும்.

முக்கிய அறிவிப்பு – தமிழ்நாட்டில் உள்ள 63 உப வடிநிலங்களில் அமைந்துள்ள ஏரிகள், குளங்கள், கால்வாய்கள், மதகுகள் ஆகியவற்றைச் செப்பனிட்டு நீர் மேலாண்மை செய்து விவசாயிகளுடைய வருவாயைப் பெருக்கும் நோக்கத்துடன் ஒரு ஒருங்கிணைந்த நீர்வள நிலவளத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதை உறுப்பினர்கள் அனைவரும் அறிவீர்கள்.

இத்திட்டத்திற்கான ஒப்புதலை ஜனவரி 23ஆம் தேதி உலக வங்கி அளித்துவிட்டது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ.2,547 கோடியாகும். அதாவது, 566 மில்லியன் டாலர். இத்திட்டத்திற்கான உடன்படிக்கை விரைவில் டெல்லியில் கையெழுத்தாகவுள்ளது. இத்திட்டம் இந்தியாவிலேயே ஒரு முன்னோடித் திட்டமாக அமைந்து தமிழக விவசாயப் பெருமக்களின் வாழ்வாதாரத்தை மேன்மையடையச் செய்யும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

வேலைவாய்ப்பு அலுவலகங்களில், பதிவு செய்து காத்திருப்போர்களில் பலர் பல்வேறு காரணங்களினாலும் மற்றும் முந்தைய அரசால் விதிக்கப்பட்ட வேலை நியமனத் தடையின் காரணமாகவும், தங்களது பதிவுகளைப் புதுப்பிக்கத் தவறியுள்ளார்கள். இவர்களுக்கு உதவும் வகையில், வயது வரம்பை இந்த அரசு ஐந்தாண்டுகள் தளர்த்தியதோடு, 2004 மற்றும் 2005 ஆம் ஆண்டுகளில் பதிவினைப் புதுப்பிக்காதவர்களுக்கு, மீண்டும் வாய்ப்பளித்து சிறப்புச் சலுகையும் வழங்கியுள்ளது.

இதேபோன்று 2001, 2002 மற்றும் 2003 ஆம் ஆண்டுகளில் வேலைவாய்ப்பு அலுவலகங் களில், பதிவினைப் புதுப்பிக்காதவர்களும் புதுப்பித்துக் கொள்ள, சிறப்புச் சலுகை வழங்கி இந்த அரசு ஆணையிடுகிறது. இதனால், இவர்கள் அரசு வேலைவாய்ப்பைப் பெறவும், வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு அளிக்கப்படும் மாதாந்திர நிதி உதவித் திட்டத்தின்கீழ் பயன் பெறவும் முடியும்.

**ப.ஜீவானந்தம் நூற்றாண்டு விழா**

தமிழகத்தினுடைய நிதிநிலையைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்களுக்குச் சொல்ல வேண்டும். இதற்கிடையில், 1955 ஆம் ஆண்டு 29.9.1955 ஆம் ஆண்டு இதே சட்டப் பேரவையில் " நான் தமிழன், என்னுடைய மொழியே இந்த ராஜ்யத்தில் ஆட்சி மொழியாக இருக்க வேண்டும். கல்விக் கூடங்களிலும், ஆட்சி மன்றத்திலும், நியாய மன்றத்திலும், நிருவாகத் துறையிலும், தமிழ் மொழியே இயங்க வேண்டும். உயர் நீதிமன்றத்திலும் தமிழ்தான் வழக்கு மொழியாக இருக்க வேண்டும். கல்வியில் தமிழே போதனா மொழியாக இருக்க வேண்டும்" என்று பேசியவர் அண்ணன் ப.ஜீவானந்தம் அவர்கள் ஆவார்கள். அவரது நூற்றாண்டுதான் இது. அவரது நூற்றாண்டை தமிழக அரசின் சார்பில் 21.8.2007 அன்று சிறப்பான முறையில் கொண்டாடப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் சொன்ன இந்தத் திட்டங்களைப்போல, மேலும் இந்த அரசு, செலவழிக்க வேண்டிய அரசுக்கு திட்டங்களால் இழப்புதான் ஏற்படும். செலவு என்றாலே இழப்புதான்.

அடுத்து மதிப்புக் கூட்டுவரி – அதனால் இழப்பு ஏற்படும் என்று சொல்லப்படுகிறது, உண்மைதான். ஆனால் ஏற்படுகின்ற இழப்பு எப்படி ஏற்படுகின்றது, எதனால் ஏற்படுகின்றது என்பதைச் சிந்தித்தால், அந்த இழப்பு ஏற்றுக் கொள்ளக் கூடிய இழப்புதான். மதிப்புக் கூட்டுவரி முறைக்கு முன்னர் இருந்த பொது விற்பனை வரி முறையின் கீழ், 1,4,8,10,12,16,20, சதவிகிதம் என அதிகபட்சம் 20 சதவிகிதம் வரை பல்வேறு விகிதங்களில் பொருள்களின் மீது வரி விதிக்கப்பட்டு வந்தது.

**மதிப்புக் கூட்டுவரி**

இப்போது மதிப்புக் கூட்டுவரிச் சட்டத்தின் கீழ் 1,4,12.5 சதவிகிதம் என்ற மூன்று வரி விகிதங்களில் மட்டுமே வரி விதிக்கப்பட்டுள்ளது. முன்புபோல் பல பிரிவுகளில் வரி விதிக்கப்படுவது கிடையாது. இதில் அதிகபட்சமே 12.5 சதவிகிதம்தான். 20 சதவிகிதம் என்ற அளவிற்குக் கிடையாது என்கிறபோது அரசுக்கு வருமானம் குறைவாகத்தான் இருக்கும். அதனால் வருவாய் இழப்புதான் ஏற்படும் என்றால் ஆமாம், நஷ்டம்தான், அந்த நஷ்டத்தை வணிகர்களுக்காக, மக்களுக்காக இந்த அரசு ஏற்றுக் கொள்கிறது. அதுதான் மதிப்புக்கூட்டு வரியின் தத்துவம்.

மதிப்புக் கூட்டு வரிச் சட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளதால், முந்தைய விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்ட கூடுதல் விற்பனை வரி (Additional Sales Tax) உபரி வரி (Surcharge), மறு விற்பனை வரி, (Resale Tax) ஆகியன நீக்கப்பட்டுள்ளன.

எனவே மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் கீழ் பல்வேறு பண்டங்களுக்கு விதிக்கப்படும் சராசரி வரி விகிதம் குறைந்துள்ளது.

மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் கீழ் அரசுக்கு வர வேண்டிய வருவாய் மேற்கூறிய காரணங்களால் குறையும். இந்த இழப்பை மக்களுக்காக அரசே ஏற்றுக் கொள்கிறது.

இந்த இழப்பில் 75 விழுக்காட்டினை மைய அரசு தமிழகத்திற்கு இழப்பீடாக வழங்கும். ஏன் மைய அரசு வழங்குகின்றது ? எதற்காக வழங்க வேண்டும் ? என்ற கேள்வி எழும். மைய அரசு இந்தியா முழுமையும் ஒரே சீரான வரி விதிப்பு இருக்க வேண்டும் என்று கருதுகிறது. ஆகவே இதை அமல்படுத்துகின்ற மாநிலங்களுக்கு ஏற்படுகின்ற இழப்பீட்டைச் சமாளிக்க மைய அரசு இந்தப் பாரத்தை ஓரளவு தாங்குகிறது.

திருப்பூர் பனியன்களுக்கு வரி வேண்டாம் என்று சொன்னீர்கள். தி.மு.கழக ஆட்சியில் அதை எடுத்தோம். இப்போது என்ன நிலையோ ? மீண்டும் அவர்கள் ஆட்சியில் போட்டிருப்பார்கள் என்று கருதுகிறேன். (போட்டதாக பீட்டர் அல்போன்ஸ் தெரிவிக்கிறார்) போடாமல் இருந்தால்தான் ஆச்சரியம். அதே போல சமையல் எண்ணெய்க்கு வரி இல்லை என்று



# 14 தமிழ்ச் சான்றோரின் நூல்கள் அரசுடைமை

மாண்புமிகு
தமிழக முதலமைச்சர்
கலைஞர் மு.கருணாநிதி
அவர்கள் அறிவிப்பு

தமிழுக்கு பெருந்தொண்டாற்றிச் சிறப்புமிக்க நூல்களைப் படைத்துள்ள தமிழ்ச் சான்றோர்களின் நினைவைப் போற்றும் வகையிலும் அவர்களின் படைப்புகள் பெருமளவில் மக்களைச் சென்றடையும் நோக்கிலும் அவர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு அவர்தம் மரபுரிமையினருக்குப் பரிவுத் தொகைகள் அரசால் அளிக்கப்பட்டு வருகின்றன. அவ்வகையில் மாயூரம் வேதநாயகம் பிள்ளை, சக்தி வை. கோவிந்தன், தெ.பொ. மீனாட்சி சுந்தரனார், த.நா. குமாரசாமி, கா.சு. பிள்ளை, புலவர் குலாம் காதிறு நாவலர், வை. சதாசிவப் பண்டாரத்தார், டாக்டர் சி. இலக்குவனார், மகாவித்வான் தண்டபாணி தேசிகர், தி.ஜ. ரங்கநாதன் (தி.ஜ.ர.), நாரண துரைக்கண்ணன், டாக்டர் மா. இராசமாணிக்கனார், டாக்டர் வ.சுப. மாணிக்கம், புலவர் கா.கோவிந்தன் ஆகிய பதினான்கு தமிழ்ச் சான்றோர்களின் நூல்களை அரசுடைமையாக்கி அவர்கள் ஒவ்வொருவர் குடும்பத்தாருக்கும் தலா ஆறு இலட்சம் ரூபாய் வீதம் பரிவுத் தொகை வழங்கிட அனுமதித்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் 11.2.2007 அன்று அறிவித்துள்ளார்.

சொன்னோம். அதற்கு என்ன காரணம், மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்பதற்காக அத்தியாவசிய பொருட்களுக் கெல்லாம் வரியில்லை என்று சொன்னோம். அப்படி வரியில்லை என்று சொன்னபோது, அதனால் யாருக்கு இலாபம் என்றால் மக்களுக்குத்தான் இலாபம்.

அதைப்போல இந்த மதிப்புக் கூட்டு வரியினால் வருவாய் குறைந்தால், அது மக்களுக்கு இலாபமாகப் போய்ச் சேருகிறது. மக்களுக்குத் தான் பயன் அளிக்கிறது, ஆகவே வரியைக் குறைக்க, சீராக ஆக்க, இந்திய அரசு எடுக்கின்ற அந்த முயற்சிக்கு ஆதரவாகத்தான் நாம் இந்த மதிப்புக் கூட்டுவரியை இன்றைக்கு ஏற்றுக் கொண்டிருக்கின்றோம்.

2007–2008ஆம் நிதியாண்டில் மதிப்புக் கூட்டு வரியை செயல்படுத்துவதால் ரூ. 2,700 கோடி இழப்பு ஏற்படும் என்றும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

பீட்டர் அல்போன்ஸ் இங்கே ஆதங்கமே பட்டார். அய்யா இதோடு நிறுத்துங்கள், இதற்கு மேல் வேண்டாம், எவ்வளவு சாதனைகள் ? அடுப்பு கொடுக்கிறீர்கள், தொலைக்காட்சிப் பெட்டிகளைக் கொடுக்கிறீர்கள், நிலம் கொடுக்கிறீர்கள், முட்டை கொடுக்கிறீர்கள், எல்லாவற்றையும் கொடுக்கிறீர்கள், இதற்கு மேல் கொடுக்க ஒன்றும் கிடையாது என்றார். ஏன் சொன்னார் என்றால், அவருக்கும் சுதர்சனம் போன்றவர்களுக்கும், ஜி.கே. மணி போன்றவர்களுக்கும் பயம் – ஆனால் கம்யூனிஸ்ட் நண்பர்கள் இன்னும் கூட கொடுக்க வேண்டுமென்பார்கள், இரண்டு ஏக்கர் நிலம் கொடுத்தால் மூன்று ஏக்கர் கொடு என்பார்கள்.

**ஒட்டுமொத்த வருவாய் உயர்வு**

ஆனால் வேறு சிலர் இப்போதே இந்த அரசு திவாலாகப் போகிறது என்று ரொம்ப (?) வருத்தப்படுகிறார்கள். நான் சொல்கிறேன், ஆங்கிலத்தையும் தமிழையும் சேர்த்துச் சொல்கிறேன் The Wall – தி வால் ஆக போகிறதென்றால் வால் மாதிரி, இந்த அரசின் நிதிநிலைமை அனுமார் வால் மாதிரி நீளப் போகிறதே தவிர குறையப் போவதில்லை. அனுமார் வால் நீண்டதால்தான் ராவணனுக்கு நேராக வாலையே சுற்றிச் சுற்றி அதன்மேலே ஏறி அனுமார் உட்கார முடிந்தது, இராமாயணக் கதையில். அதனால் "தி வால்" ஆனால் எங்களுக்கு இலாபமே தவிர, அதனால் ஒன்றும் நஷ்டம் கிடையாது. திவால் ஆவதற்கு எந்த வழியும் கிடையாது. திருத்த வரவு செலவுத் திட்டத்தில் ரூபாய் 38,732 கோடி என மதிப்பிடப்பட்ட மாநிலத்தின் வருவாய் வரவுகளில் இந்த நிதியாண்டின் முதல் ஒன்பது மாதங்களிலேயே ரூபாய் 24,548 கோடி

அரசால் பெறப்பட்டுள்ளது. இந்த அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டங்கள், நிருவாகச் செலவினங்கள் மற்றும் மூலதனப்பணிகள் ஆகியவற்றிற்காக ரூபாய் 23,594 கோடி இதுவரை செலவிடப் பட்டுள்ளது. குறிப்பாக,அரசின் ஒட்டுமொத்த வருவாய் கடந்த ஆண்டின் இதே காலத்தோடு ஒப்பிடும்போது நடப்பாண்டில் சுமார் 20 சதவிகித அளவிற்கு உயர்ந்துள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

செலவினங்களைப் பொறுத்தவரையில், இந்த அரசு அறிவித்துள்ள நலத் திட்டங்களுக்கும் அனைத்து திட்டப் பணிகளுக்கும், திருத்த வரவு செலவுத் திட்டத்தில் உரிய ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக, பொது விநியோகத் திட்டத்தின் கீழ் கிலோ ஒன்றுக்கு ரூ.2 என்ற விலையில் அரிசி வழங்கும் திட்டத்திற்கு உணவு மானியமாக ரூபாய் 1,950 கோடி, வண்ணத்தொலைக்காட்சி வழங்கும் திட்டத்தின் முதல் கட்டத்திற்கு ரூபாய் ஒன்பது கோடி மற்றும் இரண்டாம் கட்டத்திற்கு ரூ. 750 கோடி, இலவச அடுப்பு மற்றும் எரிவாயு இணைப்பு வழங்கும் திட்டத்திற்கு ரூபாய் 60 கோடி, விவசாயக் கூட்டுறவுக் கடன் இரத்து செய்ததற்கு கூட்டுறவு நிறுவனங்களுக்காக இந்த ஆண்டிற்கு மட்டும் ரூபாய் 1,435 கோடி, டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு உதவித் திட்டத்திற்கு ரூபாய் 100 கோடி, மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்திற்கு ரூபாய் 60 கோடி மற்றும் அரசு அலுவலர்களுக்கு பொங்கல் பரிசு வழங்க ரூபாய் 250 கோடி என அனைத்துத் திட்டங்களுக்கும், நல உதவிகளுக்கும் தேவையான நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன. நிதி இல்லை என்று சொல்லி அரசு அலுவலர்களைப் பட்டினி போடவில்லை, எதிர்த்துக் கேட்டவர்களை சிறையிலும் போடவில்லை.

இத்தகைய பெரும் திட்டங்கள் அனைத்திற்கும் போதுமான ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ள போதிலும் தமிழ்நாடு நிதிநிருவாகப் பொறுப்புடைமைச் சட்டத்தில் வரையறுக்கப் பட்டுள்ள இலக்கின்படியே, அரசின் நிதிப்பற்றாக்குறை மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் (GSDP - Gross State Domestic Product) 3 சதவிகிதத்திற்கு குறைவாகவே இருக்குமாறு உறுதி செய்யப்பட்டுள்ளது. எனவே, செலவுப் பொறுப்புகள் அதிகரித்துள்ள போதிலும், இந்த அரசின் திறமையான நிதி நிருவாகத்தால் அரசின் நிதிநிலைச் சமன்பாடு சீராகவே உள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு தெளிவுபடுத்துகிறேன். ஆனால் தவறான பிரச்சாரம் திவாலாகிவிட்டது, தொலைக் காட்சிப் பெட்டிகள் எல்லாம் ஓட்டையாகிப் போய் விட்டது, எரிவாயு அடுப்பெல்லாம் எரியவே இல்லை, அரிசியை மாடு தின்கிறது (அவர்கள் தின்றால் நான் என்ன செய்வது) என்றெல்லாம் சொல்கிறார்கள்.

எதற்கெடுத்தாலும் முதலமைச்சர் ராஜினாமா செய்ய வேண்டும், உள்ளாட்சித் துறை அமைச்சர் ராஜினாமா செய்ய வேண்டும், இந்த அரசைக் கலைக்க வேண்டும் என்றெல்லாம் உண்மையான ஜனநாயகவாதிகள் யாரும் எண்ணிப்பார்க்க முடியாத கோஷங்களை யெல்லாம் எழுப்பிக் கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு நாளும் அதே பணி இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. நான் அதைப் பற்றி பேசவில்லை. பேசாததற்குக் காரணம், நான் நானாகவே இருக்க விரும்புகிறேன், நான் அவர்களாக இருக்க விரும்பவில்லை. என்னென்ன பேசி விட்டு இங்கேயிருந்து செல்கிறார்கள் என்பது எல்லாம் உங்கள் காதுகளிலே விழாமல் இல்லை. நான் இவைகளை விட அதிகமான கசப்பான, காழ்ப்பான வார்த்தைகளையெல்லாம் கேட்டுக் கேட்டு பழகியவன். "வாழ்க வசவாளர்கள்" என்று சொன்ன அண்ணாவின் தம்பி நான் என்ற காரணத்தினால், அதைப்பற்றியெல்லாம் நான் கவலைப்படவில்லை.

ஒன்றை மாத்திரம் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். ஒரு போரில் இரண்டு தரப்பு வீரர்களும் ஓரிடத்தில் சந்தித்துக் கொண்டார்கள். அப்போது ஒரு வீரன், மற்றவனிடம் சொல்கிறான். "என்னப்பா, எங்கள் வீரர்களுக்கு எல்லோருக்கும் மார்பில் காயம் இருக்கிறதே தவிர, முதுகிலே யாருக்கும் காயம் இல்லையே" என்கிறான். அதாவது அவர்கள் புறமுதுகு காட்ட மாட்டார்களாம் என்பதைச் சொல்வதற்காக அவ்வாறு சொன்னான். உடனே மற்றொரு வீரன் அவனிடம் சொன்னானாம். "எங்கள் தளபதி இருக்கிறாரே, அவர் புறமுதுகிட்டு ஓடுகிறவர்களை தாக்குபவர் இல்லை, அதனால்தான் உங்கள் முதுகிலே காயம் படவில்லை" என்று சொன்னானாம்.

எனவே முதுகிலே காயம் படாததற்கு ஓடுகிறவர்களைத் தாக்காததுதான் காரணம் என்பதை மாத்திரம் இங்கே சொல்லி நாங்கள் ஓடுகிறவர்களைத் துரத்திப் பழக்கப்பட்டவர்கள் அல்ல, துரத்தவும் மாட்டோம் என்று சொல்லி என்னுரையை நிறைவு செய்கிறேன்.

* * *





# தமிழகத்திற்கு 2007-2008ஆம் ஆண்டிற்கு ரூ.14 ஆயிரம் கோடி நிதிஒதுக்கீடு

புதுடெல்லியில், 5-2-2007 அன்று, மத்திய திட்டக்குழு ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கலந்துகொண்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள், தமிழகத் திட்டங்களுக்கு, வரும் நிதியாண்டில் அதிக நிதி ஒதுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். அப்போது, தமிழக அரசு செயல்படுத்தி வரும் பல்வேறு சமூகநலத் திட்டங்களை மத்தியத் திட்டக் குழுவின் துணைத்தலைவர் திரு. மான்டேக் சிங் அலுவாலியா பாராட்டினார். குறிப்பாக சமூக வளர்ச்சியில் தமிழகம் இந்தியாவிற்கே முன்னோடி மாநிலமாகத் திகழ்வதாகவும், திட்டப் பணிகளை முறையாக நிறைவேற்றுவதில் சிறப்பாகச் செயல்படும் மாநிலமாக தமிழ்நாடு விளங்குவதாகவும் செய்தியாளர்களிடம் திரு. மான்டேக் சிங் அவர்கள் தெரிவித்தார்.

2005-2006 ஆம் ஆண்டில் ரூ.9,100 கோடி ஆகவும், 2006-2007ஆம் ஆண்டில் ரூ.12,500 கோடி ஆகவும் நிர்ணயிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீடு, 5.2.2007 அன்று நடைபெற்ற கலந்தாலோசனைக்குப் பின்னர் 2007-2008ஆம் ஆண்டில் ரூ.14,000 கோடி ஆக உயர்த்தப்பட்டது.

திட்ட ஒதுக்கீடு 14 ஆயிரம் கோடி என்பதற்கு மத்திய திட்டக் குழு ஒப்புதல் அளித்திருப்பது குறித்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் செய்தியாளர்கள் கருத்துக் கேட்ட போது, "எங்கள் கோரிக்கையை முழு அளவில் ஏற்றுக் கொண்ட மத்திய திட்டக் குழுவின் துணைத் தலைவர் அவர்களுக்கும், திட்டக் குழு உறுப்பினர்களுக்கும் தமிழ்நாடு அரசு சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்வதாக கூறியதோடு, 14 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு வரும் 2007-2008 ஆம் ஆண்டுக்கு திட்ட ஒதுக்கீடு அனுமதிக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது, மகிழத்தக்கது" என்றும் தெரிவித்தார்.

செய்தியாளர் எதற்கு முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது என்று கேட்டதற்கு "தமிழக மக்களுக்கு முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது" என்று மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கூறினார்.



# 2007-2008ஆம் ஆண்டிலேயே தென்தீபகற்ப நதிகள் இணைப்புத் திட்டத்தை தொடங்க வேண்டும்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்

**கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள்

புதுடெல்லியில், மத்திய திட்டக்குழு கூட்டத்தில்

ஆற்றிய உரை. (5.02.2007)

மத்திய திட்டக் குழுவின் துணைத் தலைவர், உறுப்பினர்கள் மற்றும் உயரதிகாரிகளே!

வணக்கம்.

தமிழ்நாட்டின், 2007–2008ஆம் ஆண்டு திட்டத்திற்கான ஒதுக்கீட்டினை முடிவு செய்வதற்காக இங்கே வந்துள்ளது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது.

தமிழ்நாட்டின், சுனாமி புனரமைப்புத் திட்டத்தினை மறுசீரமைப்பதற்கு முழு உதவியளித்த மத்திய திட்டக் குழுவின் துணைத்தலைவர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். சுனாமி புனரமைப்புத் திட்டத்தினை மறுசீரமைத்ததால், ராஜீவ் காந்தி தொகுப்பின் கீழ் 22,000 வீடுகள் கட்டுவதற்கான பணிகளைத் தமிழக அரசால் எடுத்துக் கொள்ள முடிந்தது.

பத்தாவது திட்டத்திற்கு ஒப்பளிக்கப்பட்ட ரூ.40,000 கோடிக்கு மாறாக, நாங்கள் பதினோராவது திட்டத்திற்கு மகத்தான திட்ட ஒதுக்கீடாக ரூ.80,000 கோடியினை கோரியுள்ளோம். துரித வளர்ச்சி, சமுத்துவம் மற்றும் சமூக நீதியை மையமாகக் கொண்டு தொடர்ந்து எங்களது நடவடிக்கைகள் அமைந்திடும். இருக்கின்ற நிதி ஆதாரங்களைக் கருத்திற் கொண்டு, 2007–2008ஆம் ஆண்டிற்கான திட்ட ஒதுக்கீட்டை ரூ.13,500 கோடி என நிர்ணயித்துள்ளோம். எனினும், மேற்கூறிய தொகையை, மத்திய அரசின் கூடுதல் நிதியுதவியின் மூலம் அதிகரித்து, பதினோராவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு ஒரு வலுவான தொடக்கத்தை ஏற்படுத்திட இயலும் எனக் கருதுகிறேன். ஆகையால், தமிழ்நாட்டிற்கு பெரிய அளவிலான திட்ட ஒதுக்கீட்டை வழங்குவதற்கு, மத்திய திட்டக்குழு, மத்திய நிதியுதவியினை கூடுதலாக உயர்த்தித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

வேளாண்மைக்கு முன்னுரிமை

பதினோராவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வேளாண் துறைக்குப் புத்துயிர் அளிப்பதே தமிழ்நாட்டின் தலையாய முன்னுரிமையாகும். தமிழ்நாடு, நீர்ப் பற்றாக்குறையுள்ள ஓர் மாநிலமாகும். வேளாண் துறையை முன்னேற்றுவதற்கு நாங்கள் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்த போதிலும், நீர்வளத்தைப் பெருக்குவதே எங்கள் முக்கியப் பொறுப்பாக அமைந்துள்ளது. தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில், என்னுடைய உரையில், நதிகளை இணைப்பதின் உடனடி அவசியத்தை வலியுறுத்தியிருந்தேன். தென்தீபகற்ப நதிகளை இணைப்பதின் சாத்தியக் கூறுகளை, மத்திய அரசின் தேசிய நீர்வள மேம்பாட்டு நிறுவனம் ஏற்கெனவே உறுதிப்படுத்தியுள்ளது. மைய அரசின் குறைந்தபட்ச பொதுத் திட்டத்தில் வாக்களித்தவாறு இத்திட்டத்தைச் செயற்படுத்துவதற்குரிய தருணம் வந்து விட்டது. பதினோராவது ஐந்தாண்டுத் திட்டத்தில் போதிய அளவு மத்திய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 2007–2008ஆம் ஆண்டிலேயே இத்திட்டத்தினைத் தொடங்குமாறு, மத்திய திட்டக் குழுவினைக் கேட்டுக்கொள்கிறேன். வேளாண் துறைக்குப் புத்துயிர் அளிப்பதற்கும், எதிர்கால சந்ததியினர் கோடிக்கணக்கானோர் பயனடைவதற்கும், மத்திய திட்டக் குழுவால் செயல்படுத்தப்படவிருக்கும் இத்திட்டம் ஒரு முக்கியப் பங்களிப்பாக அமையும்.



தமிழக அரசு, ஏழை மக்களுக்காக இலவச சமையல் எரிவாயு இணைப்பு மற்றும் இலவச சமையல் அடுப்பு வழங்கும் திட்டத்தினைத் தொடங்கியுள்ளது. விறகினைப் பயன்படுத்தி சமைக்கும் போது ஏழைப் பெண்களின் உடல்நலம் பாதிக்கப்படுகிறது. இது சுற்றுச்சூழலை மாசுபடுத்துவதுடன், மரங்களின் எண்ணிக்கையைக் குறைத்து, காற்று மாசுபடுவதையும் அதிகரிக்கின்றது. இத்திட்டம், மகளிர் நலன், அவர்களது சுகாதாரம், சுற்றுச் சூழலை பேணிக் காத்தல் மற்றும் காடு வளர்த்தல் ஆகிய மூன்று முக்கியத் தேவைகளை ஒரே நேரத்தில் நிறைவு செய்கிறது. வறுமையை ஒழிப்பதற்கு உகந்த இந்தத் திட்டம் பல்வேறு பயன்களையும் நல்கிடும். இத்திட்டம், மத்திய அரசின் ஒத்துழைப்பையும் உதவியையும் பெறுவதற்கு ஏற்றது. தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில், ஊரக மின்வசதி, குடிநீர் வழங்கல், சாலைகள், போன்ற துறைகளில் தமிழ்நாடு முன்னேறியுள்ளதால், பாரத் நிர்மாண் திட்டத்தின் கீழ் எந்தவித நிதியுதவியும் பெறவில்லை என்பதனை நான் ஏற்கெனவே தெரிவித்துள்ளேன். எனவே, பாரத் நிர்மாண் திட்டத்தின் கீழ், இலவச சமையல் எரிவாயு இணைப்பு மற்றும் இலவச சமையல் அடுப்பு வழங்கும் திட்டத்தினைச் சேர்த்து தமிழ்நாட்டிற்கு நிதியுதவி வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இத்திட்டத்திற்கு, கூடுதலாக மத்திய நிதியுதவியினை வழங்குவதற்கு ஏற்ற கருத்தினை திட்டக் குழு உருவாக்கிட வேண்டும்.

இந்த அரசு பொறுப்பேற்றவுடன், தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிக்கும் திட்டத்தினைச்

சிறந்த முறையில் செயற்படுத்திடத் தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. நாங்கள் கிராம ஊதிய வீதத்தை திருத்தம் செய்து அறிமுகப் படுத்தியதன் மூலம், ஏழைப் பெண்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் பெறுவதை உறுதி செய்துள்ளோம். இத்திட்டம் சிறந்த முறையில் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தை, தமிழ்நாட்டில் உள்ள மற்ற அனைத்து மாவட்டங் களுக்கும் நீட்டிக்குமாறு, மத்திய திட்டக்குழுவைக் கேட்டுக்கொள்கிறேன்.

பின்தங்கிய பகுதிகளுக்கான வளர்ச்சி நிதி (BRGF) திட்டம் தற்போது, தமிழ்நாட்டில் ஆறு மாவட்டங்களில் நடைபெறுகிறது. பின்தங்கிய மற்றும் மிகவும் வளர்ச்சியடையாத பகுதியான ஒருங்கிணைந்த தருமபுரி மாவட்டத்தை இந்தத் திட்டத்தின் கீழ் சேர்ப்பது அவசியமாகும். எனவே, தருமபுரி பகுதியினை பின்தங்கிய பகுதிகளுக்கான வளர்ச்சி நிதியின் கீழ் உடனடியாக சேர்த்து உதவிடுமாறு மத்திய திட்டக் குழுவினை கேட்டுக் கொள்கிறேன்.

இந்த அரசு, செம்மொழி தமிழுக்கு என மத்திய அரசின் நிறுவனம் ஒன்றினை உருவாக்கிட தீவிர முயற்சி எடுத்து வருகிறது. இந்நிறுவனத்தை சென்னையில் நிறுவிட, மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சர் அவர்கள் கொள்கை அளவிலான ஒப்புதலை வழங்கியுள்ளார். இதற்காக, 2007–2008ஆம் ஆண்டில், கூடுதல் மத்திய நிதியுதவியினை வழங்குமாறு மத்திய திட்டக் குழுவை கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு, தொடக்கக் கல்வியில் துரித வளர்ச்சியடைந்துள்ளது. இப்போது, இடைநிலைக் கல்வி அனைவருக்கும் கிடைப்பதற்கு முக்கிய கவனம் செலுத்துகிறோம். தமிழ்நாட்டின் உயர்நிலைக் கல்வியின் வளர்ச்சிக்கு நிதியுதவி வழங்குவதற்கு ஏதுவாக சர்வ சிக்ஷா அபியான் திட்டத்தினை விரிவுபடுத்திட வேண்டுமென்று மத்திய திட்டக் குழுவினை கேட்டுக்கொள்கிறேன்.

கிராம வீட்டு வசதிக்குப் பெருமளவில் மத்திய நிதியுதவி தேவைப்படுகிறது. இந்திரா வீட்டு வசதித் திட்டத்தின் கீழ், ஒவ்வோராண்டும் 61 ஆயிரம் வீடுகள் மட்டுமே கட்டப்பட்டு வருகின்றன. நிரந்தர வீடுகள் அதிக அளவில் தேவைப்படும் கிராம மக்களுக்கு, இந்த எண்ணிக்கை மிகக் குறைவானதே. எனவே, இந்திரா வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் மத்திய நிதியுதவியினைப் பெருமளவில் அதிகரித்துத் தரும்படி மத்திய திட்டக் குழுவை கேட்டுக் கொள்கிறேன்.

ஏழை எளிய மக்களுக்கு சமூகப் பாதுகாப்பு வழங்குவதில் தமிழ்நாடு முன்னோடியாக விளங்குகிறது. தேசிய சமூக உதவித் திட்டம், குறைந்த அளவிலேயே பயன்தருகிறது. ஊனமுற்றோர், கைம்பெண்கள், ஆதரவற்ற பெண்கள் மற்றும் நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள் ஆகியோர் பயனடையும் வகையில் தேசிய சமூக உதவித் திட்டத்தினை விரிவுபடுத்திட வேண்டுமென மத்திய திட்டக் குழுவினை கேட்டுக் கொள்கிறேன்.

திட்டச் செயல்முறையைப் பற்றி ஒரு சில கருத்துகளை எடுத்துரைத்து எனது உரையை நிறைவு செய்திட விரும்புகிறேன். தற்போது, தனித்தனி நெறிமுறைகள் மற்றும் விதிமுறைகளைக் கொண்ட, மத்திய அரசு பொறுப்பேற்கும் ஏராளமான திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. இது, திட்டம் மற்றும் வளர்ச்சி செயல்முறையை மட்டுப்படுத்துகிறது; கடினமாக்குகிறது மற்றும் நிருவாகச் செலவை அதிகரிக்கிறது. மத்திய அரசு பொறுப்பேற்கும் ஏராளமான திட்டங்கள் அனைத்தையும் ஒருங்கிணைத்து, மாநிலங்களின் தேவைகளுக்கேற்ப, இத்திட்டங்களை இணக்கமும் நெகிழ்ச்சித் தன்மையும் உடையதாக்கிடுமாறு மத்திய திட்டக் குழுவினை வலியுறுத்துகிறேன். தேசிய வளர்ச்சிக் குழுவில் ஏற்கெனவே நான் தெரிவித்துள்ளவாறு திட்ட ஆய்வு முறையையும் மற்றும் மாநிலத் திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கும் முறையையும் எளிதாக்கிட வேண்டும் என விரும்புகிறேன். தற்போதுள்ள நடைமுறை, எளிதில் கையாள முடியாத, மிகவும் பழமையான காலத்திற்கொவ்வாததாகவே உள்ளது.

உங்களிடமிருந்து முழுமையான உதவியையும், நிறைவான ஒத்துழைப்பையும் நான் எதிர்பார்க்கிறேன். ■



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள், அவரது இல்லத்தில், போலியோ நோய் ஒழிப்புத் திட்டம் சொட்டு மருந்து சிறப்பு முகாமினைத் தொடங்கி வைத்து போலியோ சொட்டு மருந்தினை ஒரு குழந்தைக்குக் கொடுத்தார்கள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், வணக்கத்திற்குரிய சென்னை மாநகர மேயர் திரு.மா.சுப்பிரமணியன் மற்றும் தலைமைச் செயலாளர் திரு.எல்.கே.திரிபாதி, இ.ஆ.ப., ஆகியோர் உடன் உள்ளனர்.(7.01.2007)



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள், சென்னையில் நடைபெற்ற "50ஆவது அகில இந்திய காவல் பணித் திறனாய்வுப் போட்டி-2006" நிறைவு விழாவில், சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு, காவலர்களின் அணிவகுப்பு மரியாதையினை ஏற்றுக்கொண்டு, வெற்றிபெற்ற வீரர் மற்றும் வீராங்கனைகளுக்குப் பரிசுகளை வழங்கினார்கள். (18.01.2007)




தேசத் தந்தை மகாத்மா காந்தியடிகளின் 60ஆவது நினைவு நாளையொட்டி,
சென்னை காமராஜர் சாலையில் அமைந்துள்ள அவரது சிலைக்கு
மேதகு தமிழக ஆளுநர் திரு.சுர்ஜித் சிங் பர்னாலா,
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின்
ஆகியோர் அஞ்சலி செலுத்தினார்கள்.(30.01.2007)



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்,
திருவாரூரில் நவீனப்படுத்தப்பட்ட பொதுப்பணித்துறை திட்ட இல்லத்தினையும்,
மின்தூக்கி அமைத்தல் பணியையும் திறந்துவைத்தார்கள்.
உடன், மாண்புமிகு மத்திய இரயில்வேதுறை இணை அமைச்சர் திரு.ஆர்.வேலு,
மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் திரு.ஆற்காடு நா.வீராசாமி,
மாண்புமிகு பொதுப்பணி மற்றும் சட்டத்துறை அமைச்சர் திரு.துரைமுருகன்,
மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் டாக்டர் க.பொன்முடி,
மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு.உ. மதிவாணன் ஆகியோர் உள்ளனர்.(12.01.2007)





மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
கலைஞர் மு. கருணாநிதி அவர்களை, அவரது இல்லத்தில்,
சத்ய சாயிபாபா அவர்கள் சந்தித்துப் பேசினார் (20.01.2007)



மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள்,
தமிழ்நாடு கைவினைப் பொருட்கள் மேம்பாட்டுக் கழகத்தால் நடத்தப்படும்
கைவினைப் பொருட்கள் கண்காட்சியினைத் துவக்கி வைத்து,கண்காட்சிப் பொருட்களை பார்வையிட்டார்.
உடன் கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை செயலாளர்
திரு.விஸ்வநாத் ஷெகோன்கர்,இ.ஆ.ப., மற்றும் தமிழ்நாடு கைவினைப் பொருட்கள்
மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்
திரு.கே.ஏ. மாத்யூ, இ.ஆ.ப., ஆகியோர் உள்ளனர்.(11.01.2007)



அய்யன் திருவள்ளுவர் திருநாளையொட்டி வள்ளுவர் கோட்டத்தில் உள்ள
திருவள்ளுவர் திருவுருவச்சிலைக்கு மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன்,
மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் திரு.ஆற்காடு நா. வீராசாமி,
மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி
ஆகியோர் மாலை அணிவித்தனர். (16.01.2007)



முன்னாள் முதலமைச்சர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் 91ஆவது பிறந்தநாளை முன்னிட்டு,
மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் திரு.ஆற்காடு நா. வீராசாமி,
மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி,
வணக்கத்திற்குரிய சென்னை மாநகர மேயர் திரு.மா.சுப்பிரமணியன் ஆகியோர்,
டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழக வளாகத்திலுள்ள
டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் சிலை அருகே, அன்னாரது திருவுருவப் படத்திற்கு
மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்கள் (17.01.2007)



# உண்மையை உரைத்துப் போராடிய இரத்தினவேல் தேவர்



திருச்சி மாவட்டத்தில் மறைந்த பெரியவர் பெரும் தியாகி இரத்தினவேல் தேவர் சிலை திறப்பு விழாவில் அரசின் சார்பில் நடைபெறுகின்ற புதிய கட்டடங்களுடைய திறப்பு விழாவிலும், வளர்ச்சித் திட்ட பணிகளுக்கான அடிக்கல் நாட்டு விழாவிலும் நலத்திட்ட உதவிகள் வழங்குகின்ற விழாவிலும் திருச்சி மாநகர காவல்துறையின் வசதிக்காகவும் செயற்கைக்கோள் உதவியுடன் கூடிய ரோந்து வாகனப் பணிகளைத் துவக்கி வைக்கின்ற நிகழ்ச்சியிலும் போக்குவரத்து விதிகளை அமல்படுத்த கையக கணினிகள் மற்றும் வானலை சுழற் கேமராக்கள் மூன்று கோடி ரூபாய் செலவில் பொருத்தப்படுவதைத் தொடங்கி வைக்கின்ற நிகழ்ச்சியிலும் கலந்து கொண்டமைக்காக நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

மாண்புமிகு
தமிழக முதலமைச்சர்
**கலைஞர் மு. கருணாநிதி**
அவர்கள் பெருமிதம்

இங்கே தாமதமாக; ஆனால், நாமெல்லாம் இன்று மகிழத்தக்க விதத்தில் திருச்சியிலே தேவர் பெருமகனாருடைய சிலையைத் திறந்து வைத்திருக்கின்றோம். இந்தச் சிலை இங்கே திறக்கப்பட வேண்டும் என்று ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக திருச்சி நகரத்து மக்களுக்கு ஆவல் எழுந்தபோதிலும், அந்த ஆவலைத் தீர்த்து வைக்கின்ற பணியை நம்முடைய கோபால்ஜி போன்றவர்கள் தொடங்கி, கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு அந்தப் பணிக்கான தொடக்க முயற்சிகளெல்லாம் மேற்கொள்ளப் பட்டு, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அந்தச் சிலை வைப்பதற்கு ஒப்புதல் தந்து, திறந்து வைப்பதற்கு சம்மதம் வழங்கி எல்லாம் நடந்த பிறகு ஒரு விரும்பத்தகாத காரணத்தால், தமிழகத்திலே அமைதி நிலை நாட்ட வேண்டும் என்ற எண்ணத்தால், அது

ஒத்தி வைக்கப்பட்டு, அதன் பிறகு வந்த ஆட்சியில் இந்தச் சிலை வைப்பதற்கான கோப்பு உருவாக்கப்பட்டு, அந்தக் கோப்பு நகராமலேயே இருந்து விட்ட காரணத்தால், சிலை திறப்பு விழாவும் நடக்காமலேயே ஆகிவிட்டது.

அதன்பிறகு, இந்தச் சிலையை இங்கே அமைக்க வேண்டும் – அதைத் திறந்து வைக்க வேண்டும் என்பதை தம்பி நேருவிடத்திலே சிலை அமைப்புக் குழுவினர் மற்றும் நண்பர்கள் திருச்சி மேயர் போன்றவர்கள் எடுத்துச் சொல்லி உள்ளாட்சித்துறை அமைச்சராகப் பொறுப்பேற்ற தம்பி ஸ்டாலின் என்னிடத்திலே அதை எடுத்துக்கூறி நான் உடனடியாக அந்தக் கோப்பு எங்கே இருக்கிறது என்பதை தேடிக் கண்டுபிடிக்கச் சொல்லி ஏறத்தாழ இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட தேங்கிக் கிடந்த கோப்புகளுக்கிடையே இருந்த அந்தக் கோப்பைத் தேடிப்பிடித்து "அப்பாடா; இரத்தினவேல் தேவரைக் கண்டுபிடித்து விட்டோம்!" என்று அவருடைய சிலை அமைக்கின்ற அந்தப் பணியினை உடனடியாக நிறைவேற்ற தொடர்புடைய அதிகாரிகளுக்கும், தொடர்புடைய துறைகளுக்கும் ஆணை பிறப்பித்து அந்த ஆணை இன்றைய தினம் நிறைவேறுகின்ற மகிழ்ச்சிகரமான காட்சியை நாம் இங்கே கண்டு கொண்டிருக்கின்றோம்.

**கதராடையில் காட்சி தந்த உத்தமர்**

தேவர் அவர்கள் என்று சொன்னால், தமிழகத்திலே இரண்டு பேருடைய பெயர்தான் எல்லோருக்கும் நினைவுக்கு வரும். ஒன்று – பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், இன்னொன்று – இன்று திறந்து வைக்கப்பட்டிருக்கின்ற சிலையாக காட்சி தருகின்ற பி.ஆர். தேவர் – இரத்தினவேல் தேவர். இந்த இரண்டு தேவர்களுடைய பெயர்தான் நினைவுக்கு வரும்.

முத்துராமலிங்கத் தேவர் அவர்களுடைய புகழுக்கு ஏற்ப, அவருடைய கீர்த்திக்கு ஏற்ப அவரைப் பற்றி பரவியிருக்கின்ற வீரப்பிரதாபங்களுக்கேற்ப கட்டு மஸ்தான தேகம் படைத்தவர் – திருச்சி தேவரைப் பற்றி அவருடைய வீரத்தைப் பற்றி அவருடைய செயல்பாடுகளைப் பற்றி நாடு பேசினாலும், அவரை நேரில் பார்த்தால் இவரா ? என்று ஆச்சரியப்படத்தோன்றும். எலும்பு உருவம் – ஆனால் இரும்பு இதயம் கொண்ட ஒருவர் உண்டென்றால், அது திருச்சி இரத்தினவேல் தேவர்தான். அப்படிப்பட்ட இரத்தினவேல் அவர்கள் முதலில் நீதிக்கட்சியினுடைய கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு பின்னர் 1924ஆம் ஆண்டு – எனக்கு நன்றாக நினைவிருக்கக் கூடிய ஆண்டு, நான் பிறந்த ஆண்டு – அவர் காங்கிரஸ் இயக்கத்திலே தன்னை இணைத்துக் கொண்டு, அதுவும் சாதாரணமாக அல்ல, இங்கே வந்த ஒரு காங்கிரஸ் தலைவரிடத்திலே கையெழுத்துப் போட்டு உறுப்பினராகச் சேர்ந்தல்ல – வடக்கே சென்று காந்தியடிகளுடைய ஆசிரமத்திலே தன்னை காங்கிரஸ்காரராக இணைத்துக் கொண்டு வந்தவர்.

அப்படிச் செல்லும்போது வெளிநாட்டு உடைகளை அணிந்து கொண்டு சென்ற அவரைப் பார்த்த காந்தியடிகள் காங்கிரசிலே சேர வருவதாகச் சொல்கிறீர்கள் – அதற்கான உடை இல்லையே இது, என்று கேட்ட பிறகு அன்றைக்கு அந்த உடைகளைத் தூக்கியெறிந்துவிட்டு கதராடை புனைந்தவர்தான், கடைசி வரையிலே அந்தக் கதராடையிலே காட்சி தந்த உறுதி படைத்த ஒரு உத்தமர் இரத்தினவேல் தேவர் அவர்களாவார்கள்.

அவர் எவ்வளவு பிடிவாத குணம் கொண்டவர் – அதே நேரத்தில் எவ்வளவு சாகச குணம் உள்ளவர் – எந்த அளவிற்கு அவர் இளம் வயதிலேயே அந்த குணங்களையெல்லாம் பெற்றிருந்தார் என்பதை அவருடைய இளமைக்கால வரலாறு விளக்குகிறது. அவர் சென்னையிலே கிறித்தவக் கல்லூரியிலே படித்துக் கொண்டிருந்தபோது, அப்போது – இப்போது இருப்பதைப்போல கிரிக்கெட் பந்தயங்கள் அடிக்கடி சென்னையில் நடப்பதுண்டு. இரத்தினவேல் தேவர் மாணவப் பருவத்தில் கிரிக்கெட் விளையாட்டில் மிகுந்த ஆர்வம் படைத்தவர்.

இப்பொழுது சென்னையில் அமைந்திருக்கின்ற சேப்பாக்கம் மைதானத்தில் கிரிக்கெட் பந்தயம் நடைபெறப் போகிறது என்ற செய்தி விளம்பரப்படுத்தப்பட்டதும் அந்தக் கல்லூரியிலே படிக்கின்ற மாணவர்கள் எல்லோருமல்ல – ஒரு பகுதியினர் அந்தப் பந்தயத்தைக் காண வேண்டும் என்பதற்காக – மாணவர்களைப் பற்றி நான் சொல்ல வேண்டியதில்லை உங்களுக்கு – நானும் மாணவனாக இருந்தவன்தான் – பந்தயத்திற்குச் செல்லவேண்டும் என்று கடிதம் எழுதினால் விடுப்பு தர வேண்டுமென்று கேட்டால், லீவு லெட்டர் எழுதினால் கிடைக்காது என்பதற்காக வயிற்று வலி என்றும் தலைவலி என்றும் பாட்டி இறந்து விட்டார் என்றும் அண்ணன் இறந்துவிட்டார் என்றும் சில மாணவர்களுக்கு பலமுறை பாட்டி இறப்பார்கள் இப்படியெல்லாம் லீவு லெட்டர் எழுதி விட்டு, கிரிக்கெட் மைதானத்திற்கு மாணவர்கள் சென்றார்கள்.

அதிலே அவர்களை எல்லாம்விட கிரிக்கெட்டில் அதிக ஆர்வம் உடைய இரத்தினவேல் தேவர் அவர்கள் அப்படிக் கடிதம் எழுதாமல், "நான் இன்றைக்கு கிரிக்கெட் விளையாட்டைப் பார்க்கப் போகிறேன் – ஆகவே எனக்கு லீவு வேண்டும்" என்று கடிதம் எழுதி, கல்லூரி முதல்வருக்கு எழுதி அனுப்பிவிட்டு கிரிக்கெட்





மைதானத்திற்குச் சென்றார். மறுநாள் வந்தால், அவரை உள்ளே அனுமதிக்காமல், உனக்கு ஒரு அணா அபராதம் என்று விதித்து – அந்த லீவை அனுமதிக்க முடியாது என்று சொல்லி விட்டார்கள் கல்லூரி நிருவாகத்தினர். அதற்காக ஒரு அணா அபராதம் கட்டினாரா என்றால், இல்லை. அவர் ஒன்றும் வறுமையிலே உழலுகின்ற குடும்பத்தைச் சேர்ந்தவர் அல்ல. ஒரு அணா கிடைக்காதவர் அல்ல. ஒரு அணா கிடைத்தாலும்கூட ஏன் நாம் ஒரு உண்மையைச் சொல்லி லீவு கேட்டபோது, அதற்கு அபராதம் கட்ட வேண்டும் என்ற பிடிவாத குணம் காரணமாக ஒரு அணா கட்ட முடியாது என்றார். ஒவ்வொரு நாளும் இந்த ஒரு அணா அபராதமாக ஒரு அணா வீதம் சேர்ந்து ஒரு மாத காலத்திலே முப்பது அணாக்களுக்குமேல் அது ஆகிவிட்டது. கடைசியாக அவரை அழைத்து விசாரித்தபோது இன்னென்னார் வயிற்று வலி என்றும், தலைவலி என்றும், பாட்டி செத்து விட்டார் என்றும், பொய்க் கடிதங்களை காரணங்களாகச் சொல்லி அவர்கள் லீவு கேட்டார்கள். பொய்யர்களுக்கு நீங்கள் கிரிக்கெட் பார்க்க அனுமதி கொடுத்திருக்கிறீர்கள். நான் உண்மையைச் சொல்லி கிரிக்கெட் பார்க்க என்று லீவு கேட்டால் உண்மையானவனுக்கு லீவு கொடுக்க மறுத்து விட்டீர்கள். அதனால்தான் அந்த ஒரு அணா அபராதத்தை நான் கட்ட மறுத்தேன் என்று சொன்னவுடன், அத்தனை ஆசிரியர்களும் அவருடைய வாய்மையைப் பாராட்டி, அவரை அந்த அபராதமே கட்ட வேண்டாம் என்று சொல்லி, கல்லூரியில் அனுமதித்தார்கள் என்பது அவருடைய இளமைக்கால வரலாற்றிலே ஒரு எழுச்சிமிக்க செய்தியாகும்.

இதனை நான் சொல்லுவதற்குக் காரணம், அப்பொழுதே உண்மையை உரைத்து, வாய்மைக்கு வாய்ப்பளித்து, வாய்மையின்படி நடந்து, தவறு இழைக்காமல், தண்டனை வந்தாலும் பரவாயில்லை என்று தைரியமாகப் போரிட்ட அந்த போராட்டக் குணம் இளமைக் காலத்திலே தேவர் அவர்களுக்கு இருந்தது என்பதற்கு இது ஒரு அடையாளமாகும்.

அப்படிப்பட்ட தேவருடைய சிலையைத்தான் இங்கே நாம் திறந்து வைத்திருக்கிறோம். இந்த நல்ல நாளில் அவருடைய புகழைப் பேசுகிற நாளில் தமிழக மக்கள் அன்றைக்கு இந்தியா விடுதலை பெறவேண்டும், சுதந்திரம் பெறவேண்டும் என்று எதற்காக அவர்களெல்லாம் போரிட்டார்களோ, பாடுபட்டார்களோ அது நிறைவேறி இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு இடையிடையே ஏற்பட்ட பல சங்கடங்களால் காலதாமதங்களால் கவலையற்ற தன்மைகளால் முந்தைய ஆள வந்தவர்களுடைய அலட்சியத்தால் மத்தியிலும் சரி, மாநிலத்திலும் சரி, மொத்த இந்தியாவின் மக்கள் கவனிக்கப்படாமல் குறிப்பாக ஏழை எளியவர்கள், நடுத்தர மக்கள், நலிந்த பிரிவினர், பிற்படுத்தப்பட்ட மக்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள், ஆதிதிராவிட மக்கள், தொழிலாளத் தோழர்கள் இவர்களெல்லாம் கவனிக்கப்படாமல் அவர்கள் வேதனையிலே, இத்தனை ஆண்டுகாலம், பல ஆண்டுகாலம், வாடிட நேரிட்டது.

எதற்காக சுதந்திரம் பெற்றார்களோ, அந்த சுதந்திரத்தினுடைய சுகத்தை யாரும் சரியாக நூற்றுக்கு நூறு அனுபவிக்க முடியவில்லை. ஆனால் யார் அனுபவித்தார்கள் என்றால் நான் நேற்றைக்கு ஒரு புள்ளி விவரத்தை எடுத்து படித்துப்பார்த்தேன். இந்தியாவில் ஒரு இலட்சத்து 17 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு வருமான வரி கட்டாதவர்கள் இன்றைக்கு இருக்கிறார்கள் என்பதால் அந்த அளவிற்கு வருமான வரிப் பணம் அரசுக்கு வராமலே இன்றைக்கு ஏமாற்றப்பட்டிருக்கிறது. கோடிக்கணக்கான ஏழை எளிய மக்கள் விவசாயப் பெருங்குடி மக்கள், குடிசையிலே வாழ்வோர், ஒழுங்காக வரி செலுத்துவோர், இவர்களெல்லாம் ஆளப்படுகிறார்கள். இப்படி ஆளப்படுகின்ற மக்களுக்கு அவர்களுடைய தேவைகளை வழங்க, நிறைவு செய்ய, ஒரு அரசு தன்னுடைய பொருளாதாரத்தை நிதி ஆதாரத்தை வளமாக வைத்துக் கொள்ள வேண்டும்.

இல்லாதவர்கள் இடத்திலே இருந்து சுரண்டுவதற்குப் பதிலாக இருப்பவர்களிடம் இருந்து எடுத்து இல்லாதவர்களுக்கு கொடுக்க வேண்டும், அதுதான் இறைவனுடைய தத்துவம், இறைவன் என்பது ஒரு உருவம் அல்ல, இறைவன் என்றால் அதற்கு நாலுகால், நாலுகை, எட்டுத்தலை அதுதான் இறைவன் என்பது அல்ல. இறைவன் என்பது ஏழையின் சிரிப்புத்தான் இறைவன் என்றார் அண்ணா. அந்த ஏழையின் சிரிப்பைக் காண ஏழு அடுக்கு மாளிகையிலே வாழுகிறானே அவன் உதவ வேண்டும். அவனையும் இந்த ஏழையையும் சமநிலைக்குக் கொண்டு வரவேண்டும். அதைத்தான் நான் 'பராசக்தி' படத்திலேகூட கடைசிக் காட்சியிலே சொன்னேன். மாளிகைகளெல்லாம் மண் மேடுகளாக ஆக வேண்டும் என்று சொல்லவில்லை, மண்மேடு, மாளிகை உயரத்திற்கு உயர வேண்டும். இரண்டும் சமமாக வேண்டும் ஏழையும், பணக்காரனும் சமமாக வேண்டும். அந்த சமத்துவத்தைத்தான் நாடு காணவேண்டும் என்று சொன்னேன். அப்படிப்பட்ட சமத்துவத்தைக் காண வேண்டுமேயானால்.

"சிற்றூரும் வரப்பெடுத்த வயலும்
ஆறு தேக்கிய நல் வாய்க்காலும்
நெற்சேர உழுதுழுது பயன் விளைக்கும்
நிறையுழைப்புத் தோள்கள்"

பூரிக்க வேண்டுமேயானால், பாட்டாளி பரவசம் அடைய வேண்டுமேயானால், ஏழை வீட்டில் விளக்கெரிய வேண்டுமேயானால், ஏழைத்தாய் தன்னுடைய மகனுக்கு ஆடம்பரமாக இல்லாவிட்டாலும், சுமாராகவாவது, ஒரு திருமணத்தை நடத்தி வைக்க வேண்டுமேயானால், அவர் கஷ்டப்படாமல், கண்ணீர் மல்காமல் அந்தக் காரியத்தை நடத்த அவர்களுக்கு சமநிலை – தமிழகத்திலே மாத்திரமல்ல, குமரிமுனையில் இருந்து இமயமலை வரையிலே உள்ள இந்திய பிரதேசத்தில், இந்திய மண்ணில் ஏற்பட்டாக வேண்டும்.

அந்தச் சமநிலை ஏற்பட முடியாமல் பணத்தை சுருட்டி வைத்திருப்பவன் கருப்புப் பணம் வாங்குகின்றவன், கள்ள மார்க்கெட் நடத்துகின்றவன் இவர்களெல்லாம் குவித்து வைத்திருக்கின்ற பணம், அரசுக்குச் செலுத்தாமல் வீட்டிலே ஒளித்து வைத்திருக்கின்ற பணம், புதைத்து வைத்திருக்கின்ற பணம், நான் சொன்ன கணக்கின்படி ஒரு இலட்சத்து 17 ஆயிரம் கோடி ரூபாய். இந்த ஒரு இலட்சத்து 17 ஆயிரம் கோடி ரூபாயை இந்திய அரசு கொஞ்சம் தீவிரமாக, கொஞ்சம் வேகமாக, விறுவிறுப்பாக, விரைவாக, தோண்டி எடுக்கிற, வெளியில் கொண்டு வருகின்ற அந்த முயற்சிகளை மேற்கொள்ளுமேயானால் இந்தியா மற்ற நாடுகளைப்போல குறைவான மக்கள்தொகை கொண்ட நாடு அல்ல, இது நூறு கோடியை இன்றைக்கு எட்டிக் கொண்டிருக்கிறது. கிரிக்கெட்டிலே கேள்விப்படுகிறோமே, பார்க்கிறோமே, செஞ்சுரி அடித்தார் டெண்டுல்கர், செஞ்சுரி அடித்தார் கங்குலி என்றெல்லாம் படிக்கிறோமே, கேள்விப் படுகிறோமே, இந்தியா மக்கள் தொகையில் இப்பொழுது செஞ்சுரி அடித்து அதையும் தாண்டி ரன் ஓடிக் கொண்டிருக்கிறது.

ஆகவே இவ்வளவு பெரிய நாட்டிலே உள்ள மக்கள், கோடிக்கணக்கான மக்கள் வாழ ஒரு இலட்சத்து 17 ஆயிரம் கோடி முடங்கிக் கிடக்கிறதே அது வெளியிலே கொண்டு வரவேண்டும். அதையெல்லாம் முடக்கி விட்டு மக்களைப்பார்த்து நான்தான் புனிதன், புத்தன் நான்தான் மக்களுக்காக என்னை அர்ப்பணித்துக் கொண்டவன், நான்தான் சமதர்ம சஞ்சீவி, என்னால் எதுவும் முடியும், என்னை கொஞ்சம் ஆளவிட்டுப் பாருங்கள். நான் என்ன செய்கிறேன் பாருங்கள், என்றெல்லாம் கருப்புப் பணத்தை ஒளித்து வைத்திருப்பவர்கள் சொல்லிக் கொண்டிருக்கின்ற பித்தலாட்டக்காரர்கள் இன்றைக்கு நாட்டிலே தோன்றி இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் பாடம் போதிக்க இரத்தினவேலு தேவருக்கு இருந்த நெஞ்சுரம் உங்களுக்குத் தேவை, தமிழ்நாட்டு மக்களுக்குத் தேவை, அந்த நெஞ்சுரத்தைப் பயன்படுத்தி போலிகளை அடையாளம் காணுங்கள், மக்களை ஏமாற்றுகின்ற மதோன் மத்தர்களை மக்களுக்கு காட்டிக் கொடுங்கள். நாடு வாழ, நலிவு தீர, இரத்தினவேலு தேவர் சிலைக்கு நேராக சபதம் எடுத்துக் கொள்ளுங்கள், சூளுரையுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

– திருச்சிராப்பள்ளியில்
28.01.2007 அன்று நடைபெற்ற
இரத்தினவேல் தேவர் சிலை திறப்பு விழாவில்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள்
ஆற்றிய உரை.

* * *



# சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு அரசின் சார்பில் இந்த ஆண்டில் மேலும் 32,668 வீடுகள் கட்டி முடிக்கப்படும்

## மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் அறிவிப்பு



இன்று ஒரு மகிழ்ச்சிகரமான நாள். மகிழ்ச்சி அன்பு காட்டுவதிலும் ஏற்படும். ஆறுதல் கூறுவதிலும் ஏற்படும். அப்படி ஆறுதல் கூறுகின்ற பொறுப்பை ஏற்று; இழப்பவர்களுக்கு ஈடுசெய்யக் கூடிய வாய்ப்பை உருவாக்கி, அந்த வாய்ப்பே தானாக மாறி அவர்களுக்கு–வாடுகின்றவர்களுக்கு வீடுகளை வழங்க வந்துள்ள அம்மா அவர்களை உங்களோடு சேர்ந்து நானும் வருக வருக என்று வாழ்த்திப் பாராட்டி மகிழ்கின்றேன்.

அம்மா அவர்கள் கேரள மாநிலத்திலே கொல்லம் மாவட்டத்தில் இருக்கும் பரையக்கடவு என்னும் கடலோர மீனவ கிராமத்திலே உதித்தவர்கள். கடலோரத்தில் என்ன உதிக்கும் ? பொதுவாக முத்து

உதிக்கும். அதனால்தான் முத்தாக அவர்கள் நமக்கெல்லாம் கிடைத்திருக்கிறார்கள். அந்த முத்து, நன்முத்தாக அருள் முத்தாக ஏழைக்கு இரங்குகின்ற முத்தாக, நோய் வாய்ப்பட்டோருக்கெல்லாம் இரக்கம் காட்டுகின்ற முத்தாக, குழந்தைகளை பேணிப் பாதுகாக்கின்ற முத்தாக, குடிசைகளை வாழ்விக்கின்ற முத்தாகத் தன்னை ஆக்கிக் கொண்டு, தொண்டுள்ளதோடு பணியாற்றி வருகிறார்கள்.

இவர் ஆற்றி வருகின்ற பணிகளால் கேரளம், தமிழகம் உள்ளிட்ட இந்திய மாநிலங்களிலும், அயல்நாடுகளிலும் அன்பர்கள் ஆயிரக்கணக்கில், இலட்சக்கணக்கில் பரவி உள்ளனர். அவர்கள் அளித்து வரும் நன்கொடைகள் மூலமாக மனிதாபிமான உணர்வுகளின் அடிப்படையில் பாராட்டத்தக்க வகையிலே அம்மையார் தொண்டு புரிந்து வருகிறார்கள்.

கேரளாவில் ஆதரவற்ற குழந்தைகள் இல்லம் – முதியோர் இல்லம், உயர்தர இலவச மருத்துவமனை முதலியவற்றை நடத்தி வருகிறார். அமெரிக்காவில் கத்ரினா சூறாவளியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிட கிளிண்டன், புஷ் பவுன்டேஷன்களுக்கு ஒரு மில்லியன் டாலர் நிதி வழங்கியுள்ளார்கள் என்பதைக் கேட்டு நான் மிகுந்த மகிழ்ச்சிடைகிறேன்.

குஜராத் பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட கட்ச் மாவட்டத்தில் மூன்று கிராமங்களை பதினைந்து கோடி ரூபாய் செலவில் புதுப்பித்து, வீடுகளும், சமுதாயக் கூடங்களும், பள்ளிகளும் கட்டியுள்ளார்கள். காஷ்மீர் பூகம்ப நிவாரணத்திற்கு 50 இலட்சம் ரூபாய் செலவில் உதவிகள் வழங்கியுள்ளார். விதவைப் பெண்களின் முன்னேற்றத்திற்காக கேரளா – தமிழகம் உள்ளிட்ட பல மாநிலங்களிலும் பல உதவிகளைச் செய்து வருகிறார்கள். ஆண்டுதோறும் ஏழை எளியோர்களுக்கு பத்தாயிரம் வீடுகள் கட்டும் திட்டம் ஒன்றையும் செயல்படுத்தத் தொடங்கியுள்ளார். மனிதாபிமான உணர்வுகளை சமுதாயத்தில் வளர்ப்பதில் மாதா அவர்கள் ஆற்றிவரும் பணிகள் என்றும் பாராட்டுதற்குரியவை.

தமிழகத்தில் ஏற்பட்ட சுனாமி கொடுமைக்கு வருந்தி நாகப்பட்டினம் உட்பட பல பகுதிகளிலும் 80 கோடி ரூபாய் மதிப்பில் இலவசமாக வீடுகளும் மீன்பிடிப் படகுகள் போன்ற பிற சாதனங்களும் அம்மையார் அவர்களால், வழங்கப்பட்டிருக்கின்றன. தமிழகத்திலே சுனாமியால் ஏற்பட்ட பாதிப்புகளையும் அந்த பாதிப்புகளுக்கு ஆட்பட்ட மக்களுக்கு ஆறுதல் வழங்க, அரசின் சார்பில் அளிக்கப்பட்ட நிவாரணங்களையும் பல தொண்டு நிறுவனங்களின் சார்பாக அளிக்கப்பட்ட நிவாரணங்களையும் நீங்களெல்லாம் மிக நன்றாக அறிவீர்கள்.

**2004ஆம் ஆண்டு 26.12.2004 அன்று சுனாமி பேரலை சீற்றத்தால், தமிழகத்தில் 13 கடலோர மாவட்டங்கள் பாதிக்கப்பட்டன.**

**238** கிராமங்கள் **418** குடியிருப்புகள் அழிந்தன.

**7,995** மனித உயிர்கள் பறிக்கப்பட்டன.

**223** குழந்தைகள் பெற்றோர்களை இழந்து ஆதரவற்றவராயினர்.

**1,495** குழந்தைகள் பெற்றோரில் தாயை அல்லது தந்தையை இழந்தனர்.

**846** பேர் காணாமலே போயினர்.

**3,504** பேர் பலத்த காயமடைந்துள்ளனர்.

**45,892** வீடுகள் முற்றிலும் அழிந்தன.

**11,662** வீடுகள் பெரும்பகுதி சேதமடைந்தன.

ஏறத்தாழ ஐந்து இலட்சம் பேர் குடியிருப்புகளை விட்டு வெளியேறினர்.







**10** இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் கடுமையான பாதிப்புக்கு ஆளாகினர்.

**16,000** கால்நடைகள் அழிந்தன.

**42,178** மீன்பிடிப் படகுகள் முழுவதும் சேதமடைந்தன.

**8,900** மீன்பிடிப் படகுகள் ஓரளவு சேதமடைந்தன.

**3 இலட்சம் மீனவக் குடும்பங்கள் தொழில் வாய்ப்புகளை இழந்தன. 4,250 கோடி ரூபாய் அளவுக்கு இழப்பு ஏற்பட்டது.**

**14** சிறு துறைமுகங்கள் மீன் இறங்கு தளங்கள் பாதிக்கப்பட்டன.

சுனாமி தாக்குதலால் சுருண்டு கிடந்த மக்களை அன்றைய அரசு, கடந்த காலத்து அரசு உடனடி உதவிகள் செய்து, அவர்களுக்கு உதவி புரிந்தது என்றாலும், நிலையான நிரந்தரமான, அமைதியான வாழக்கூடிய சூழ்நிலையை அவர்கள் உருவாக்கவில்லை. ஒருவேளை அதற்கிடையே தேர்தல் வந்து, அந்தத் தேர்தல் பணிகளிலே ஈடுபட்ட காரணத்தால், அன்றைய அரசு அந்தப் பணிகளைத் தொடர முடியவில்லை. 24.12.2004 சுனாமி பேரலையால் தமிழகம் பெரிதும் பாதித்தது.

## அரசின் முயற்சியால் கட்டி முடிக்கப்பட்ட வீடுகள்

சுனாமி நிவாரணப் பணிகளுக்காக மத்திய அரசிடமிருந்து ராஜீவ் காந்தி மறுவாழ்வு திட்டத்தின்கீழ், ரூபாய் 2,347 கோடி பன்னாட்டு உதவிகளின் மூலமாக 2,550 கோடி ரூபாயும் ஆக மொத்தம் 4,897 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டது. அப்படிப் பெறப்பட்ட நிதியை தற்காலிக அவசர நிவாரணத்திற்குத்தான் அன்றைய அரசு பயன்படுத்த முடிந்ததே தவிர, நிலையான, நிரந்தரமான காரியங்களுக்கு பயன்படுத்தவில்லை. காரணம், அந்த 4,897 கோடி ரூபாய் அடங்கிய அந்தக் கோப்புகள் எல்லாம் கூட சுனாமி களைப்பில் தூங்கிக் கொண்டிருந்தன. அந்தக் கோப்புகள் செயல்படவில்லை.

எனவே அதற்குப் பிறகு ஆட்சிக்கு நாங்கள் வந்தோம். 17 மாதங்கள் அவர்கள் ஆட்சியிலே இருந்த பிறகு, ஆட்சிக்கு வந்த நாங்கள்,

பாதிக்கப்பட்ட மாவட்டங்களின் ஆட்சித் தலைவர்களையெல்லாம் அழைத்து ஆய்வு நடத்தி என்னென்ன பாதிப்புகள், யார் யாருக்கு எந்தெந்த வகையிலே ஏற்பட்டிருக்கிறது என்பதையெல்லாம் கண்டுபிடித்து சுனாமி மறுவாழ்வு சீரமைப்புப் பணிகள் குறித்து நடத்திய ஆய்வின் பயனாக எல்லா மாவட்டங்களிலும் அதிகாரிகள் முடுக்கி விடப்பட்டார்கள். 31.12.2006 வரை நாங்கள் எடுத்த முயற்சிகளின் காரணமாக 18,828 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் இந்த நிதியாண்டின் இறுதிக்குள் அந்த ஆய்வில் நாங்கள் எடுத்த முடிவின்படி 32,668 வீடுகள் கட்டி முடிக்கப்படும் என்பதை நான் அம்மையார் அவர்களுக்கும், உங்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

## அழகான வீடுகள்

தொண்டு நிறுவனங்கள் கட்டுவதாக உறுதியளித்து இன்னும் கட்டப்பட இயலாத 3,000 வீடுகளை கட்டிமுடிக்க 63 கோடி ரூபாய் செலவாகும் என்று மதிப்பீடு செய்யப்பட்டு,அரசின் சார்பிலேயே அதனைச் செய்ய ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டிருக்கின்றன என்பதையும் நான் இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அம்மா அவர்களுடைய அறக்கட்டளையின் சார்பாக கட்டப்பட்டுள்ள வீடுகள் இன்றைக்கு திறந்து வைக்கப்பட்டுள்ளன. அந்த வீடுகளை முதலில் நான் தொலைவில் இருந்து பார்த்தபோதே நான் மகிழ்ந்து போனேன், பூரித்துப் போனேன். இவ்வளவு அழகான வீடுகள், நமக்கொன்று கொடுத்தால் கூட நன்றாக இருக்கும் போலிருக்கிறதே என்று எண்ணுகின்ற அளவிற்கு அவ்வளவு அழகான வீடுகள் இங்கே கட்டப்பட்டுள்ளன. அப்படி பார்த்தபோது எனக்கேற்பட்ட பரவசத்தால், எனக்கேற்பட்ட ஆர்வத்தால் காரை அந்த இடத்திற்கே விடச் சொல்லி, அந்த வீடுகளைப் பார்த்து விட்டு, அதிலே ஒரு வீட்டின் உள்ளேயே சென்று நாங்கள் பார்த்தோம். மிக அழகாக, அதே நேரத்தில் வசதியாக, வாழ்வதற்கேற்றதாக அந்த வீடுகள் அமைந்துள்ளன. அந்த வீடுகளிலே மீனவ மக்கள், பாதிக்கப்பட்ட மக்கள், ஏழையெளிய மக்கள் வாழப்போகிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்கும்போது நான் மிகுந்த நம்பிக்கை கொண்ட பூரிப்பும், மகிழ்ச்சியும் அடைகிறேன்.

## ஏழைகளுக்கு இலவச வீடுகள்

சுனாமியால் பாதிக்கப்பட்ட இத்தகைய வீடுகளை கண்டறிய விரிவான கணக்கெடுப்புப் பணிகளை மேற்கொள்ள தேவைப்படும் நிலங்களைக் கையகப்படுத்த 30 கோடியே 12 இலட்சம் ரூபாய் அரசின் சார்பில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு வீடுகளைக் கட்டுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு என்னதான் அரசு திட்டங்களைத் தீட்டினாலும், ஏன் நம்முடைய அம்மையார் அவர்களின் மடத்தின் சார்பிலே கூட திட்டங்களைத் தீட்டினாலும் அடுத்த வரிசையில் இருக்கின்ற அதிகாரிகளின் ஒத்துழைப்பு, அவர்களின் வேகம் இருந்தால்தான் இவைகள் விரைவில் முடிவடைய முடியும். நான் அரசின் சார்பில் அதிகாரிகளைக் கேட்டுக்கொள்வேன். விரைவில் இந்த வீடுகள் எல்லாம் கட்டி முடிக்கப்பட வேண்டும்.

இது தவிர, ராஜீவ் காந்தி சுனாமி மறுவாழ்வுத் திட்டத்தின் கீழ், 550 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 22,000 வீடுகள் கட்ட தற்போது ஒரு திட்டம் தீட்டப்பட்டுள்ளது. நான் டெல்லிக்குச் சென்றபோது இந்தத் திட்டத்தை வகுத்துக் கொண்டிருந்தார்கள். அப்போது நான்தான் இந்தத் திட்டத்திற்கு "ராஜீவ் காந்தி சுனாமி மறுவாழ்வுத் திட்டம்" என்று பெயர் வைக்கலாம் என்று சொன்னேன். அது ஏற்றுக் கொள்ளப்பட்டு இந்தத் திட்டம் தீட்டப்பட்டு, விரைவில் இது நடைமுறைக்கு வரவிருக்கிறது என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அது மாத்திரமல்ல, இங்கே மாதா அமிர்தானந்தமயி மடத்தின் சார்பாக அதன்



அறங்காவலர் என்னிடம் ஒரு கடிதம் கொடுத்திருக்கிறார். அந்தக் கடிதத்தில், மாதா அமிர்தானந்தமயி மடம் ஏழைகளுக்காக "அமிர்த குடீரம்" என்ற பெயரில் இலவச வீடுகளைக் கட்டிக் கொடுத்து வருகிறது. 220 சதுர அடி பரப்பில் ஒரு சிறிய அறை, தனிச் சமையல் அறை, குளியல் அறை மற்றும் கழிவறை வசதிகளுடன் இந்த வீடுகள் கட்டப்படுகின்றன. மாண்புமிகு முதல்வர் அவர்கள் விரும்பினால் தமிழ்நாட்டில் இலவசமாக மனை வழங்கும் பகுதிகளில், மாதா அமிர்தானந்தமயி மடம் இதைப் போல 500 வீடுகள் கட்டிக் கொடுக்க "தாயாராக" உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறது" என்று எழுதிக் கொடுத்திருக்கிறார்கள்.

நான் தமிழில் எது வந்தாலும் அதைப் படிக்கும்போது "ப்ரூப்" பார்க்கும் வழக்கம், அதாவது எழுத்துப் பிழை இருக்கிறதா என்று பார்ப்பது வழக்கம். பிழை கூட நாம் போற்றத்தக்க வகையில் இந்தக் கடிதத்தில் அமைந்திருக்கிறது. அதாவது "இதைப் போல 500 வீடுகள் கட்டிக் கொடுக்க தயாராக உள்ளது" என்பதற்குப் பதிலாக "தாயாராக உள்ளது" என்று எழுதியிருக்கிறார்கள். ஏன் என்றால், இது மாதா மடம் அல்லவா? அதனால் "தாயாராக" உள்ளது என்று எழுதியிருக்கிறார்கள். அம்மா, நீங்கள் தாயாராகவே இருந்து, தமிழ்நாட்டு மக்களுக்கு – தமிழ்நாட்டு மக்களும் கேரளத்து மக்களைப் போன்றவர்கள்தான் – எப்படி ஐரோப்பா கண்டத்தில் இருக்கின்ற மக்களையெல்லாம் உங்களின் மக்களாகக் கருதுகிறீர்களோ, அதைப்போல இங்கே உள்ள மக்களையும், உங்கள் மக்களாகவே கருதி, இந்த 500 வீடுகள் அல்ல, இதை நாங்கள் மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்கிறோம் – தொடர் முயற்சியாக ஒரு அரசே எல்லா காரியங்களையும் மக்களுக்காக செய்து விட முடியாது.

அரசு மக்களிடத்தில் வரி வாங்குகிறது, அந்த வரியை மக்களுக்கே திருப்பித் தருகிறது. அதைப்போலத்தான் தங்களுக்கும் மக்கள் காணிக்கை அளிக்கிறார்கள். அந்தக் காணிக்கையை நீங்கள் மக்களுக்கே திருப்பி அளிக்கிறீர்கள். அதைத்தான் ஏழை மக்களுக்கு – அவர்களின் சிரிப்பைக் காண்பதற்கு நீங்கள் செலவழிக்கிறீர்கள். உங்கள் சிரிப்பே கவர்ச்சிகரமானது, அதைப்போல ஏழை மக்களை நீங்கள் சிரிக்க வைத்தால், அந்தச் சிரிப்போடு இணைந்து உலகமே கவர்ச்சிகரமாக இருக்கக்கூடிய அளவிற்கு உங்கள் சிரிப்பு அமைந்திருக்கின்றது. "ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்" என்றார் எங்களை ஆளாக்கிய அண்ணா, அண்ணாவை உருவாக்கிய பெரியார். அவர்கள் இருவரும் சேர்த்த அந்த இலட்சியங்களை உங்களிடம் எடுத்துச் சொல்லி, நீங்கள் வழங்குகின்ற இந்த வீடுகளை மகிழ்ச்சியோடு, நன்றியோடு பெற்றுக்கொள்கிறோம்.

விதவைகள், ஊனமுற்றோருக்கு 50 ஆயிரம் பேருக்கு மாதா மாதம் ரூபாய் 150 வீதம் உதவித் தொகை வழங்கி வருவதாகவும், அந்தத் திட்டத்தின் கீழ் நாகப்பட்டினம் மாவட்டத்திலும் உதவி வழங்க அதனைத் தொடங்கி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கின்றீர்கள்.

அது போலவே சுயதொழில் தொடங்கும் திட்டத்தின் கீழ் ஏழைகளுக்கு இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டத்தையும் தொடங்கி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள். அதனைத் தொடங்கி வைப்பதில் எனக்கென்ன ஆட்சேபணை? அவற்றைத் தொடங்கிவைத்து அனைவருக்கும் நன்றி கூறி, அம்மையார் அவர்களுக்கும் நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன்.

*31-1-2007 அன்று நாகப்பட்டினத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்காக மாதா அமிர்தானந்தமயி மடம் சார்பில் கட்டப்பட்ட வீடுகளை திறந்துவைத்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை.*

# தமிழகத்திலுள்ள ஏழை எளிய தாய்மார்களுக்காக தமிழக அரசு எண்ணற்ற சாதனைகளை செய்து வருகிறது

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்**

நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இந்த நல்ல நிகழ்ச்சியில் நம்முடைய மத்திய பெட்ரோலியத் துறையின் அமைச்சர் அவர்கள் கலந்துகொண்டு தமிழக அரசு மக்களுக்காக ஆற்றுகின்ற இந்தப் பணிக்கு தங்களுடைய ஒத்துழைப்பு என்றைக்கும் இருக்கும் என்ற நம்பிக்கையை வழங்கியமைக்காக நான் என்னுடைய நன்றியை உங்கள் சார்பாக அவருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாம் பொறுப்பேற்று ஓராண்டு முடிவதற்குள்ளாக பல வாக்குறுதிகளை நிறைவேற்றியிருக்கிறோம். கடந்த சட்டமன்றத் தேர்தலில் தோழமைக் கட்சிகளோடு இணைந்து திராவிட முன்னேற்றக் கழகம் அரசு அமைப்பதற்கு முன்பு, ஆற்றிய தேர்தல் பணிகளினூடே நாம் வெளியிட்ட தேர்தல் அறிக்கை மிக முக்கியமாக மக்களைக் கவர்ந்த ஒன்றாகும். கவர்வதற்காக அல்ல, மக்களுடைய கவலைகளைத் தீர்ப்பதற்காக, கஷ்டங்களைப் போக்குவதற்காக, அவர்களுடைய தலையிலே ஏற்றப்பட்டிருக்கின்ற கனமான சுமைகளைக் குறைப்பதற்காக அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் அந்த





வாக்குறுதிகள் அளிக்கப்பட்ட போது, தேர்தல் நேரமாக இருந்த காரணத்தால் நாமும் பிறரும் வாக்காளர்களைச் சந்திக்கின்ற அந்த வாய்ப்பில் மக்களைச் சந்தித்த அந்தக் காலக் கட்டத்தில் நம்மைப் பற்றி என்ன தவறான பிரச்சாரம் நடைபெற்றது என்பதையெல்லாம் நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள். வாக்குறுதிகள் காற்றிலே பறந்து விடும் என்றுதான் உங்களுக்குச் சொல்லப்பட்டது. ஆனால் அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் அவர்கள் சொன்னபடி காற்றிலே பறந்தது உண்மை, ஆனால் பறந்த வாக்குறுதிகள், பறந்து வந்து உங்களுடைய இல்லங்களிலே ஒட்டிக் கொண்டிருக்கின்றது, உள்ளங்களிலே ஒட்டிக் கொண்டிருக்கிறது என்பதை கண்கூடாகக் காண்கிறீர்கள்.

அந்த நிகழ்ச்சிகளிலே ஒன்றுதான் இன்றைக்கு இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற நிகழ்ச்சியாகும். பதவியேற்ற முதல் நாள் பெருமக்கள் எல்லாம் குழுமியிருந்த மேடையில், அதே நாளில், அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றிய வரலாற்றை உருவாக்கிய ஆட்சி, இந்த ஆட்சிதான் என்பதை நீங்கள் அறிவீர்கள். பதவியேற்ற மேடையிலேயே 7,000 கோடி ரூபாய் விவசாயிகளுடைய கூட்டுறவு கடன்கள் ரத்து என்று அறிவிக்கப்பட்டதும், அரிசி கிலோ இரண்டு ரூபாய்க்குக் கொடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டதும், ஏழையெளிய இளஞ்சிறார்க்கு பள்ளிகளில் பரிமாறப்படும் சத்துணவோடு நிறுத்தப்பட்டிருந்த முட்டைகள், இனிமேல் வாரம் இரண்டு முட்டைகளாக வழங்கப்படும் என்று அறிவித்த இந்த மூன்று வாக்குறுதிகளும் நாங்கள் பதவியேற்ற முதல் நாளே நிறைவேற்றப்பட்டதை யாரும் மறந்திருக்க முடியாது.

தொடர்ந்து மாதந்தோறும், வாரந்தோறும் ஏன் நாள்தோறும் கூட சாதனைகள் இன்றைக்கு இந்த அரசின் சார்பில் ஆற்றப்படுகின்றன. நீங்கள் தெரிந்திருக்கிறீர்கள். ஆனால் இது சிலருக்கு சோதனைகளாக இருக்கின்றது. நம்முடைய சாதனைகள் சோதனைகளாக இருப்பதால், வேதனைகளை அறிக்கைகளாக விட்டுக் கொண்டிருக்கின்றார்கள். நான் அதற்காகக் கவலைப்படவில்லை. அவர்கள் வேதனைப்பட, வேதனைப்பட நான் உள்ளபடியே மகிழ்ச்சியடைகிறேன், ஏனென்றால் பிறர் வேதனையைக் கண்டு மகிழ்ச்சி அடைகின்ற அந்தக் குறுகலான மனம் எனக்கில்லை. அவர்கள் வேதனை அடைகின்ற அளவிற்கு நாம் சாதனை செய்கின்றோமே என்கின்ற அந்த மகிழ்ச்சிதான் எனக்கு. அந்த மகிழ்ச்சி எனக்கு ஏற்படுத்த காரணமாக இருந்தவர்கள்தான், என் எதிரே இங்கே அமர்ந்திருக்கிறீர்கள். தமிழகம் முழுவதும் நிறைந்திருக்கின்றீர்கள். நம்முடைய மத்திய அமைச்சர் இங்கே சொன்னார்கள். அண்மையிலே அவர் டெல்லியிலே என்னைச் சந்தித்தபோது, தமிழ்நாட்டில் இன்னும் பல முன்னேற்றங்களை, நலத் திட்டங்களைக் கொண்டுவர வேண்டுமென்பதிலே நான் எவ்வளவு அக்கறை உடையவனாக இருக்கிறேன் என்பதை அவர்கள் இங்கே எடுத்துச் சொல்லி, அதற்கெல்லாம் நிச்சயமாக மத்திய அரசு உதவுமென்று குறிப்பிட்டார்கள். நேற்றைக்குக் கூட நான் என்னுடைய சொந்த ஊருக்குச் சென்றிருந்தேன். அங்கே புதிய ரெயில் பாதை ஒன்று தொடங்கப்பட்ட நிகழ்ச்சி. அந்த நிகழ்ச்சியிலே பேசும்போது கூடச் சொன்னேன். அதைப்பற்றி நம்முடைய நண்பர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் இன்று காலையிலே அமைச்சரிடத்திலே குறிப்பிட்டார். அகல ரெயில் பாதை தொடக்க விழா – இந்த ரெயில் பாதை தொடக்க விழாவைக் குறிப்பிட்டு நான் சொல்கிறேன் – மத்திய அரசும், மாநில அரசும் இந்த ரெயில் பாதையிலே இருக்கின்ற இரண்டு தண்டவாளங்களைப்போல இருந்தால், ஒழுங்காக இருந்தால், ரெயில் ஒழுங்காகச் செல்லும். அப்படித்தான் இந்த நாட்டை; இரண்டு தண்டவாளங்களாக இருந்து பரிபாலிப்போம், நடத்துவோம், நன்மைகளைக் குவிப்போம் என்று சொன்னேன். அதைப்போல இந்த தண்டவாளங்கள் நம்முடைய அமைச்சர் முரளி தியோரா குறிப்பிட்டதைப் போல் மத்திய அரசு, மாநில அரசின் தேவைகளை உணர்ந்து, மாநில அரசின் கோரிக்கைகளுக்கு, நியாயமான கோரிக்கைகளுக்கு செவிசாய்க்க வேண்டும், நாங்கள் கேட்டுக் கொண்டேதான் இருப்போம், ஊத ஊதத் தான் நெருப்பு பற்றும். ஏனென்றால் இது அடுப்பு வழங்குகின்ற விழாவாக இருப்பதால் நான் சொல்கிறேன். ஆனால் ஊதாமலே நெருப்பு பற்ற வேண்டும் என்பதற்காகத்தான் இந்த அடுப்பைத் தருகிறோம். இதை நம்முடைய மாண்புமிகு மத்திய அமைச்சர் அவர்கள் புரிந்து கொண்டு, அடுப்பின் தேவை எங்களுக்கு இருக்கின்றது. நெருப்பின் தேவையும் எங்களுக்கு இருக்கின்றது. சமையலில் அவசியமும் எங்களுக்கு இருக்கின்றது.



அதெல்லாம் நடைபெற வேண்டுமேயானால், அவர்கள் ஊதிக் கஷ்டப்படாமலே, அப்படி ஊதுகின்ற காரணத்தால் உடல் நலத்தைக் கெடுத்துக் கொள்ளாமலே எப்படி ஒரு பெண்மணியினுடைய ஆசைகள், அடுக்களையிலே நிறைவேற வேண்டுமோ, அதைப்போல எங்களுடைய ஆவலும் நிறைவேறுவதற்கு மத்தியிலே இருக்கின்ற அரசு ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த அரசு, நான் முதலிலே குறிப்பிட்டதைப் போல், வாக்குறுதிகளை நிறைவேற்றிய அந்த வரிசையிலேதான் பள்ளிக் குழந்தைகளுக்கு வாரம் இரண்டு முட்டைகள் மாத்திரமல்ல, வாடுகின்ற உழவர்கள், நிலமற்ற உழவர்களுக்கெல்லாம் நிலம் வழங்கப்படும் என்று சொன்னோம். என்ன சொன்னார்கள் எதிர்க்கட்சிக்காரர்கள்? நிலமே கிடையாது, எப்படி வழங்கப் போகிறார்கள் என்றார்கள்? இப்படி சொன்னவர்கள், இன்றைக்கு வெட்கப்படுகின்ற அளவிற்கு நாங்கள் மாவட்டந்தோறும் நிலங்களை வழங்கி வருகிறோம்.

இந்த ஆண்டு கூட இதுவரையிலே மூன்று மாதங்களுக்கு ஒரு முறை இரண்டு ஊர்களிலே நானே நிலத்தை வழங்கியிருக்கிறேன். நம்முடைய தமிழக அமைச்சர் பெருமக்கள் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சென்று அங்கே நிலங்களை வழங்கியிருக்கிறார்கள். இதுவரை பல்லாயிரக்கணக்கானவர்கள், ஏழை நிலமற்ற விவசாயிகள் பயனடைந்திருக்கிறார்கள். நிலத்தை எப்படித் தருவாய், யாருக்குத் தருவாய் என்று கேட்டபோது, சட்டசபையிலே சொன்னேன். கையகல நிலம் இருந்தாலும், அதை ஒரு ஏழை உழவனுக்குத்தான் தருவேன் என்று குறிப்பிட்டேன். அப்படித்தான் இன்றைக்கு நிலமற்ற ஏழை உழவர்களுக்கு நிலத்தை வழங்கி வருகிறோம்.

இதையெல்லாம் விட முக்கியமாக வேலைவாய்ப்பு – ஒரு நாட்டில் அபரிமிதமாக இருக்க வேண்டும். ஆனால் இந்தியாவைப் பொறுத்தவரையில் அதிலே நாம் மகிழ்ச்சிகரமாக இல்லை. இந்தியா என்றால் தமிழ்நாடும் இணைந்ததுதான், எல்லா மாநிலங்களும் இணைந்ததுதான். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் இலட்சக்கணக்கான வாலிபர்கள் படித்து விட்டு பட்டம் பெற்று, வேலையில்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் வேலை கிடைக்கின்ற வரையில், அவர்களுக்குப் படிப்படியாக 150 ரூபாய் என்றும், 200 ரூபாய் என்றும், 300 ரூபாய் என்றும் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை வழங்கப்படும் என்று சொல்லி அந்தத் தொகை அவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது, அதுவும் உங்களுக்குத் தெரியும்.

இன்றைக்குக் கூடப் பத்திரிகைகளிலே பார்த்தேன். ஏதோ விவசாயிகளுக்கு ஒரு திட்டம் கடந்த கால ஆட்சியிலே வைத்திருந்ததாகவும், அதை நாம் வேரோடு சாய்த்து விட்டதாகவும் ஒரு செய்தியைச் சொல்கிறார்கள். இல்லை, விவசாயிகளுக்காக ஒரு திட்டத்தை



அறிவித்ததே நான் தான் கடந்த காலத்தில். அந்தத் திட்டத்தை செம்மையாக நிறைவேற்றியதும் நாம் தான். அந்தத் திட்டம்தான் இப்போது மேலும் வலுப்பெற்று, மேலும் விரிவாக ஆக்கப்பட்டு, அந்தத் திட்டத்தின்படி நான் தாய்மார்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன். இன்றைக்கு இந்த அடுப்பு கொடுக்கிறோம், அதிலே உங்களுக்கு அக மகிழ்ச்சிதான். ஆனால் தாய்மார்களுக்கு அந்தத் திட்டத்தின்படி கொடுக்கப்பட்ட தொகையை விட கருவுற்ற தாய்மார்களுக்கு, அவர்கள் காலத்திலே இரண்டாயிரம் ரூபாய் தரப்பட்டதென்றால், ரூபாய் வீதம் ஆறாயிரம் ரூபாய் தருகிறோம் என்பதை நம்முடைய மத்திய அமைச்சர் மூலமாக மத்தியிலே உள்ளவர்களுக்கு தகவல் அனுப்ப விரும்புகிறேன்.

இதையெல்லாம் எண்ணிப் பார்த்து எங்களுக்கு வழங்குகின்ற திட்டத்தொகை, உதவித்தொகை இவைகளை மத்திய அரசு அதிகமாக வழங்க வேண்டும், நாங்கள் கேட்கும்போதெல்லாம் கொடுக்க வேண்டும், பணமாகக் கொடுக்காவிட்டாலும் திட்டங்களாகக் கொடுக்க வேண்டும், அந்தத் திட்டங்கள் தமிழகத்தை



இப்போது மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வீதம் ஆறு மாதங்களுக்கு ஆறாயிரம் ரூபாய் ஒரு கர்ப்பஸ்திரிக்குத் தரப்படுகின்ற ஒரே மாநிலம் இந்தியாவிலே, ஏன் உலகத்திலேயே தமிழ்நாடுதான். அதற்காக கருவுறுவதற்கு யாரும் கவலைப்படத் தேவையில்லை. கவலைப்பட வேண்டாம் என்பதால், கருவுற்றுக் கொண்டே இருக்கவும் கூடாது. ஏனென்றால் குடும்ப நலத் திட்டத்தையும் மறந்து விடக் கூடாது. ஒரு நாட்டின் முன்னேற்றம் மக்கள் தொகையில் இருக்கிறது, அதையும் மறந்து விடக் கூடாது. காதலுக்கு வழி வைத்து, கருப்பாதை சாத்த, கதவொன்று கண்டறிவோம், அதில் என்ன குற்றம் என்றான் பாரதிதாசன். அந்தப் பாட்டையும் மறந்து விடாமல் குடும்ப நலத் திட்டத்தைக் காப்பாற்ற வேண்டும், அதே நேரத்திலே கருவுற்று விட்டால், அவள் ஏழைத் தாயாக இருந்தால், வேலை செய்து பிழைக்கின்ற பெண்ணாக இருந்தால், அந்தப் பெண், அந்தக் கருவைச் சுமந்து, அந்தக் குழந்தையை பிறக்கின்ற வரையிலே கிட்டத்தட்ட ஆறு மாதங்களுக்கு, முதலிலே மூன்று மாதம், குழந்தை பிறந்த பிறகு, குழந்தையை வளர்க்க மூன்று மாதம் என்று இந்த ஆறு மாதமும், மாதம் ஆயிரம் மேலும் மேலும் வளர்க்க, முன்னேற்றப் பயன்படக் கூடிய திட்டங்களாக இருக்க வேண்டுமென்பதற்காகத்தான் இதையெல்லாம் சொல்கிறேன்.

இந்தியாவிலே இருக்கின்ற எந்த மாநிலத்தையும் நான் ஆணவத்தோடு பேசவில்லை, அல்லது எங்களுக்கு யாரும் ஈடு அல்ல, இணை அல்ல என்கின்ற இறுமாப்போடு பேசவில்லை. நாங்கள் ஆற்றியிருக்கின்ற பணிக்கு எங்களுக்கு ஏற்படுகின்ற பெருமிதம், நாங்கள் மாத்திரம் தனியாக இருந்து ஆற்றிவிடவில்லை. நான் தொடக்கத்திலே சொன்னதைப்போல மத்திய அரசின் உதவியோடு, மத்திய அரசின் தோழமையோடு ஆற்றியிருக்கிறோம் என்கிறார்களே, இன்றைக்கு சேது சமுத்திரத் திட்டம் வந்திருக்கிறதென்றால், அந்தத் திட்டத்தை நாங்களே கொண்டு வந்து விடவில்லை. அந்தத் திட்டத்திற்கு அனுமதியளித்து அந்தத் திட்டம் வருவதற்கு உதவியளித்து, அந்தத் திட்டம் இங்கே வர ஒப்புதல் அளித்த மத்திய அரசு, பிரதமர் மன்மோகன் சிங், அங்கே அந்த அரசுக்கு வழிகாட்டியாக இருக்கின்ற நம்முடைய அன்பிற்குரிய திருமதி சோனியா காந்தி

இவர்கள் எல்லாம் தருகின்ற ஒத்துழைப்பு தான் இன்றைக்கு தமிழகத்திலே சேது சமுத்திரத் திட்டம் வரவும், நூறாண்டு காலக் கனவு தமிழை செம்மொழியாக ஆக்க வேண்டும் என்ற கனவு. கனவு கண்டவர் சாதாரணமானவர் அல்ல. சூரிய நாராயண சாஸ்திரி என்ற பரிதிமாற்கலைஞர் கண்ட கனவு. அந்தக் கனவு பலிக்குமா என்பது கேள்விக் குறியாக இருந்து தமிழ் செம்மொழி என்று ஆனது மாத்திரமல்ல, செம்மொழிக்காக ஆக்கப்பட்ட குழுவிற்கு இடம் இது வரையிலே மைசூர் தான் தலைநகரம் என்றிருந்தது, அதை மாற்றி சென்னைக்கே கொடுங்கள் என்று கேட்டு, அந்தத் தலைநகரம், செம்மொழி தலைநகரமும் சென்னைக்குக் கிடைத்திருக்கிறது என்றால் அது வடக்கே மத்தியில் இருக்கின்ற நம்முடைய மத்திய அமைச்சர் பெருமக்கள், காங்கிரஸ் கட்சியின் தலைவியார், காங்கிரஸ் கட்சியின் அமைச்சர்கள் காட்டிய அன்பால், பாசத்தால் தான் இவைகளையெல்லாம் நான் பெற முடிகிறது.

அப்படிப்பட்ட நாம் இன்று அவர்களுடைய உதவியோடு செய்து வருகின்ற இந்தப் பணிகள் எல்லாம் தமிழகத்திலே உள்ள ஏழையெளியவர்களுக்கு, பாட்டாளி மக்களுக்கு, சாதாரண சாமான்ய மக்களுக்கு, குறிப்பாக தாய்மார்களுக்கு உதவிட வேண்டுமென்பதற்காகத்தான். ஒன்று சொல்கிறேன். கர்ப்பஸ்த்ரீகளுக்கு ஆறாயிரம் ரூபாய் தருகிறோம் என்று சொன்னேன். அடுப்புத் தருகிறோம் என்று சொன்னேன், அது மாத்திரமல்ல, நிலம் தருகிறோம் அல்லவா, ஏழை உழவர்களுக்கு, அப்படித் தரப்படுகின்ற நிலம் கூட யார் பெயரால் பதிவு செய்யப்படுகிறதென்றால், அந்த விவசாயிகளின் மனைவியின் பெயரால்தான். ஆகவே தான் பெண்கள் இடத்தில், தாய்மார்களிடத்தில், அவர்களுடைய உரிமையில் எந்த அளவிற்கு அக்கறை கொண்ட ஆட்சி இங்கே நடைபெறுகின்ற ஆட்சி என்பதற்காக இதைச் சொல்கிறேன்.

இன்றைக்குத் தரப்படுவது ஒரு அடுப்பு. இதை நான் ஒரு பெரிய வள்ளல் தன்மையாகக் கருதவில்லை. ஆனால் இதைப் பெறுகின்ற ஏழையெளிய தாய்மார்களுக்கு இது பெரும் சீதனமாகத்தான் இருக்கும் என்பதை நான் நன்றாக அறிவேன். அது மாத்திரமல்ல. இதற்கான முன் தொகை, டெபாசிட், அதைக் கூட அரசு தான் தருகிறது. இந்த அடுப்பைப் பயன்படுத்துகின்றவர்களை நான் ஒன்று மட்டும் வேண்டிக் கேட்டுக் கொள்வேன். மிக எச்சரிக்கையாக, ஜாக்கிரதையாக இதைப் பயன்படுத்த வேண்டும். எப்படியும் பயன்படுத்தலாம் என்று பயன்படுத்தக் கூடாது. ஏனென்றால், நம்முடைய தமிழகத்தில் எல்லா வீடுகளும் மாடி வீடுகள் அல்ல. மண் குடிசைகளும் உண்டு. ஓலைக் குடிசைகளும் உண்டு. அப்படிப்பட்ட ஓலை வேய்ந்த வீடுகளில், இந்த அடுப்புக்கள் அமைக்கப்படும்போது, ஓலைக் கூரைக்கும், அடுப்பு எரிகின்ற இடத்திற்கும் மிக அதிகமான இடைவெளி இருக்க வேண்டும். அப்படி இல்லாவிட்டால் தீ தாவக் கூடும். ஒரு பொறி பறந்தால், அதன் காரணமாக என்ன விளைவுகள் ஏற்படும் என்பதை நீங்கள் அறிவீர்கள். அதற்கு இடம் தராமல் பாதுகாப்பாகப் பார்த்துக் கொள்ள வேண்டும். ஒரு பொறி பறந்தால், அந்த இல்லம் மாத்திரம் நாசமாகி விடாது. அதைக் கேள்விப்பட்டால் என்னுடைய உள்ளமும் ரத்தக் கண்ணீர் வடிக்கும் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். நல்ல காரியத்திற்காகத் தந்தோமே, இப்படி ஆகிவிட்டதே என்ற அந்தக் கவலை எனக்கேற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று ஒவ்வொரு இல்லத்தரசியையும் ஜாக்கிரதையாக இதைக் கையாளுங்கள் என்று கேட்டுக் கொண்டு, இந்த இனிய நிகழ்ச்சியிலே கலந்து கொண்ட உங்கள் அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துக்களை, நன்றியைத் தெரிவித்து இந்த விழாவிலே கலந்து கொண்ட நம்முடைய மத்திய அமைச்சர்கள் இருவருக்கும், மாநில அமைச்சர்களுக்கும் மற்றும் அதிகாரிகளுக்கும், நண்பர்களுக்கும், மற்றக் கட்சிகளைச் சேர்ந்த தோழர்களுக்கும் நன்றியினைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

*சென்னையில் நடைபெற்ற இலவச எரிவாயு இணைப்பு மற்றும் எரிவாயு அடுப்பு வழங்கும் விழாவில் மாண்புமிகு முதலமைச்சர்*
**கலைஞர் மு. கருணாநிதி** *அவர்கள் ஆற்றிய உரை. (14.1.2007)*





# இயல், இசை நாடகம் என்கிற முத்தமிழை வளர்ப்போம்

கடந்த மூன்று நான்கு நாட்களாக பாராட்டு மழையிலேயே நனைந்து கொண்டிருக்கின்ற நான் இன்றைக்கும் அந்த மழை தொடருகின்ற நிலையில் பாராட்டுகளைப் பெறுகின்ற வகையில் இந்த மாமன்றத்திலே உங்களையெல்லாம் சந்திக்கின்ற நல்ல வாய்ப்பைப் பெற்றிருக்கின்றேன். முத்தமிழ்ப் பேரவை 31ஆம் ஆண்டு விழாவினை நடத்துகின்றது. இதுவே ஒரு பெரிய வியப்புக்குரிய செய்தி. தமிழின் பெயரால் ஒரு பேரவை அமைந்து, அது 31 ஆண்டு காலம், தமிழ்நாட்டிலே வாழ்ந்து கொண்டிருக்கின்றது, விழா நடத்துகின்ற அளவிற்கு ஏற்றம் பெற்றிருக்கிறது என்றால், அதுவே வியப்புக்குரிய செய்திதான். ஏனென்றால் இந்தப் பேரவையை நிறுவியவர்கள், நிகழ்ச்சிகளை நடத்தியவர்கள், இந்தப் பேரவையின் குறிக்கோளை நிறைவேற்ற வேண்டுமென்று விரும்பியவர்கள், விரும்பியவற்றை செயல்படுத்தியவர்கள் எல்லாம் இந்த 31 ஆண்டு காலமாக இந்த மாமன்றத்திலே என் கண் எதிரிலே அமர்ந்து அதுதான்

சென்னை, முத்தமிழ்ப் பேரவையின் 31ஆம் ஆண்டு இசை விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை [24.1.2007]




நடைபெற்ற நிகழ்ச்சிகளையெல்லாம் ரசித்து, சுவைத்து, வாழ்த்தி, பாராட்டி இன்று நினைவிலே வாழ்பவர்களாக பல பேர் ஆகியிருக்கிறார்கள்.

அன்றைய தினம் நான் சந்தித்தவர்கள், என் பார்வையிலே பட்டவர்கள், இந்த மேடைக்கு வந்து வாழ்த்தியவர்கள் எல்லாம் யார் என்பதை எண்ணிப் பார்த்தால், திருவாடுதுரையார், திருவெண்காட்டார், நீடாமங்கலத்தார் என்றெல்லாம் ஊர் பெயர்களைச் சொல்லி, அதன் மூலமாக விளம்பரம் ஆனவர்கள், புகழ் பெற்றவர்கள். அப்படிப்பட்ட மேதைகள் இருந்து நடத்திய விழாக்களை நான் நன்றாக அறிவேன். அந்த மேதைகளே கலந்துகொண்டு கலை நிகழ்ச்சிகளை வழங்கியதையும், இசை நிகழ்ச்சிகளை வழங்கியதையும், நாட்டிய நடன நிகழ்ச்சிகளை வழங்கியதையும் கண்ணாரக் கண்டு மகிழ்ந்தவன் நான். அவர்கள் எல்லாம் இன்றைக்கு நம்மிடையே இல்லாவிட்டாலும்கூட, அவர்கள் வழங்கிய இசைச் செல்வம், கலைச் செல்வம், கவிதைச் செல்வம், நாட்டியச் செல்வம், நாயனச் செல்வம், தவில் செல்வம் போன்ற இத்தனை இசைச் செல்வங்களும் நம்மிடையே இருக்கின்றன என்றால் இந்த முத்தமிழுக்கு, இயல், இசை, நாடகத்திற்கு என்றைக்குமே அழிவில்லை என்ற உறுதியை என்னால் பெற முடிகிறது. அதனால் தான் 31ஆம் ஆண்டு விழாவை இங்கே நடத்த முடிகிறது.

தமிழின் பெயரால், தமிழர்களின் பெயரால் எந்தவொரு அமைப்பை உருவாக்கினாலும், அதன் ஆயுட்காலம் குறைவாகத்தான் இருக்கும் என்பது நாம் கண்ட வரலாற்று நிகழ்ச்சி. ஆனால் அதற்கெல்லாம் முற்றிலும் விதி விலக்காக, மாற்றாக, இந்த மாமன்றம் 30 ஆண்டுகளைக் கடந்து 31ஆம் ஆண்டில் அடியெடுத்து வைத்திருக்கிறதென்றால், இதற்காகப் பாடுபட்ட உழைத்த இன்னமும் உழைத்துக் கொண்டிருக்கின்ற அனைவருக்கும் நான் என்னுடைய வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விழாவில் நீண்ட நாளாக நிறைவேறாமல் இருந்த ஒரு நிகழ்ச்சி இன்றைக்கு நிறைவேறியிருக்கின்றது.



அதுதான் நம்முடைய தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளாருக்கு "இயல் செல்வம்" விருது வழங்கப்பட்டிருப்பதாகும். அவர் இந்த மேடையில் விருது பெற்று உரை நிகழ்த்துகின்ற நேரத்தில் நான் எண்ணிக் கொண்டேன். என்னுடைய வயது உங்களுக்குத் தெரியும். என்னுடைய அரசியல் வாழ்வு எப்போது தொடங்கியது என்பதும் உங்களுக்குத் தெரியும். என்னுடைய இலக்கிய நுழைவு எப்போது என்பதும் உங்களுக்குத் தெரியும். எனவே இத்தனை ஆண்டுக்காலம் நான் வாழ்ந்து கொண்டிருக்கின்ற காரணத்தால், எனக்குத் தனி பெருமை, தலைமுறைகளைச் சந்திக்கின்ற, தலைமுறைகளை வாழ்த்துகின்ற, தலைமுறைகளால் பாராட்டப்படுகின்ற அந்தப் பேற்றினை நான் பெற்றிருக்கின்றேன். அந்தப் பேறுகளிலே ஒன்றுதான் நம்முடைய குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அவர்கள் இங்கே என்னைப் பாராட்டிய பேறாகும்.

தமிழகத்திலே ஆன்மீகத்திற்கு ஒரு புதுப்பொலிவை, ஒரு தனி வலிவை, ஒரு தனி கீர்த்தியை உருவாக்கிக் காட்டியவர் பெரிய குன்றக்குடி அடிகளார் அவர்களாகும். அவரும் நானும் சந்தித்த நிகழ்ச்சியே ஒரு விசித்திரமான வேடிக்கையான நிகழ்ச்சி. திராவிட இயக்கத்தினுடைய தாக்கம் வெகு வேகமாக தமிழகத்தில் பரவிக் கொண்டிருந்த காலத்தில் பெரியாரும், அண்ணாவும், புரட்சிகரமான கொள்கைகளை மக்கள் மத்தியிலே எடுத்து வைத்த அந்தக் காலத்தில் எங்களைச் சுற்றிலும் நான்கு பக்கமும் வேடர் சூழ நடுவிலே சிக்கிய மான் போல என்பாரே பாரதிதாசன், அதுபோல நாங்கள் எதிர்ப்புகளுக்கு ஆளாகிய நேரத்தில், நம்முடைய பொள்ளாச்சி மகாலிங்கம் போன்றவர்கள் எல்லாம், எங்களுடைய கருத்துக்களை ஏற்காமல் எதிர்த்துக் கொண்டிருந்த அந்தக் காலக் கட்டத்தில், குன்றக்குடி அடிகளாரும் எங்களுடைய சமுதாயக் கருத்துக்களை விமர்சிக்கின்ற மேடைகளிலே தோன்றினார் என்பதும், அவரை எப்படிச் சந்திப்பது என்பதைப் பற்றி நாங்கள் சிந்தித்தோம் என்பதும் பழைய வரலாறு.

ஒரு நாள் நான் மயிலாடுதுறையில் பயணியர் தங்கும் விடுதியில் தங்கியிருக்கிறேன். பக்கத்து அறையில் குன்றக்குடி அடிகளார் பெரியவர் தங்கியிருக்கிறார். இதிலே எங்களுக்குள் யார் யாரைப் போய்ச் சந்திப்பது என்ற ஒரு ஐயப்பாடு. நான் போய்ச் சந்திப்பதாகச் சொன்னால் ஒரு வேளை ஏற்றுக் கொள்வாரோ இல்லையோ, சம்மதிப்பாரோ இல்லையோ என்று நான் என்னுடைய அறையிலே இருக்கிறேன். நண்பர் கருணானந்தம் அவர்கள் தந்தை பெரியாரிடத்தில் மாணவர்களாக இருந்தவர்களில் ஒருவர். அவர் செய்த ஏற்பாட்டின்படி நானும், குன்றக்குடி அடிகளார் அவர்களும் அந்த விடுதியில் சந்தித்து அரை மணி நேரத்திற்கு மேலாகப் பேசிக் கொண்டிருந்தோம். ஒருவரையொருவர் சந்தித்த பிறகுதான் திராவிட இயக்கக் கொள்கைகளுக்கும், பெரியாரின் கொள்கைகளுக்கும், அண்ணாவின் இலட்சியங்களுக்கும் அடிகளார் மக்களிடம் சென்று சொல்கின்ற தத்துவங்களுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை நானும் உணர்ந்து கொள்ள முடிந்தது. அவரும் உணர்ந்து கொள்ள முடிந்தது. நாங்கள் இருவரும் ஒன்றாக முடிந்தது. அதுதான் மயிலாடுதுறையில் உள்ள அந்தப் பயணியர் விடுதி எனக்குத் தந்த பேறு.

அவரிடம் நான் கொண்ட அன்பு, அவர் என்னிடம் கொண்ட அன்பு சிறிதும் மாறாமல் பழகி வந்தோம். பல போராட்டங்கள் தமிழகத்திலே நடைபெற்றன. மொழிக்காக நடைபெற்ற ஒரு போராட்டத்தில் அடிகளார் அவர்களும் கலந்து கொண்டு, அதன் காரணமாக எத்தகைய இன்னல்களுக்கெல்லாம் ஆளானார் என்பது அனைவருக்கும் தெரியும்.

அவ்வழியிலேயே இங்கு வந்துள்ள நம்முடைய இளம் அடிகளார் அவர்கள் எப்படி இருப்பாரோ என்று நாங்கள் கருதிய நேரத்தில், அவர் தன்னுடைய வாழ்க்கையின் மூலம், தன்னுடைய கருத்துக்களை எடுத்துத் தருகின்ற செயலின் மூலம் நானும் அப்படித்தான் இருக்கிறேன் என்று தன்னை அடையாளம் காட்டிக் கொண்டிருக்கிறார். இது வழி வழி

தமிழை வளர்க்கவும், தமிழர்களுடைய பண்பாடு, கலாச்சாரம், தமிழர்களுடைய மரபு இவைகளை வளர்க்கவும் பயன்படக் கூடிய ஒன்று.

அவர் இங்கே என்னை வாழ்த்தும்போது சொன்னார் – நான் நீண்ட காலம் இருந்து நாட்டிற்கு, மொழிக்கு என்னென்ன நன்மைகளையெல்லாம் செய்ய வேண்டுமென்றார். நீங்கள் எல்லாம் இருந்தால், இன்னும் கூட ஒரு பத்து, இருபதாண்டு காலம் ஆயுள் எனக்கு நீண்டு அவைகளையெல்லாம் செய்யக் கூடிய வாய்ப்பு எனக்கு ஏற்படும். இந்த நம்பிக்கை எனக்கு இருக்கின்றது. எத்தனையோ பேர் நான் நூறாண்டு காலம் வாழப் போகிறேன் என்றெல்லாம் சொன்னார்கள். அவர்கள் தங்களை நம்பிச் சொன்னார்கள், நான் உங்களையெல்லாம் நம்பிச் சொல்கிறேன். எனவே இதில் எந்தவிதமான தவறும் இருக்க முடியாது.

ராஜரத்னா விருது இங்கே வழங்கப்பட்டது. இந்த ராஜரத்னா விருது வழங்குவதற்கு ஒரு சிறிய நிகழ்ச்சியே உண்டு. இங்கே நம்முடைய இசைச் செல்வம் விருதுபெற்ற கீதாராஜசேகர் அவர்கள் சி. சுப்பிரமணியம் அவர்களின் பெயரை நினைவு படுத்தினார். சி. சுப்பிரமணியம் அவர்கள் நம்முடைய அருட்செல்வர் பொள்ளாச்சி மகாலிங்கம் அவர்களுக்கு மிக மிக நெருங்கிய உறவினர். இருவரும் கோவை மாவட்டத்தில் சக்கரவர்த்திகளாக இருந்தவர்கள். ஆனால் இந்தச் சக்கரவர்த்திகளை சாதாரண சாமான்யமான நாங்கள் ஒரு தேர்தலில் எங்களைப் போலவே ஆக்கி விட்டோம். எங்களைப் போல ஆக்கி விட்டோம் என்றால் செல்வ நிலையிலே அல்ல, குடும்ப நிலையிலே அல்ல, உள்ள நிலையிலே அப்படி ஆக்கி விட்டோம்.

பொள்ளாச்சி மகாலிங்கம் அவர்கள் செல்வச் சீமான் மாத்திரமல்ல, அருட்செல்வர். வடலூர் வள்ளலாருடைய புகழைப் பரப்புகின்றவர். இவரைப் போலவே சி. சுப்பிரமணியம் அவர்கள் தமிழகக் காங்கிரஸ் கட்சியிலே மாத்திரமல்ல, அகில இந்திய காங்கிரஸ் கட்சியிலே பெரும் பொறுப்புகளிலே இருந்தவர். பெருந்தலைவர் காமராஜருக்கு உற்ற தொண்டராக, தோழராக, துணைவராக இருந்தவர். அப்படிப்பட்ட சி. சுப்பிரமணியம் தமிழகச் சட்டப் பேரவையிலே நிதியமைச்சராக இருந்தபோது, 57 ஆம் ஆண்டு அறிஞர் அண்ணாவும், நானும், பேராசிரியர் அன்பழகனாரும் சட்டமன்றத்திற்குள் நுழைந்தோம். அன்றைக்கு நுழைந்த நாங்கள், இன்றைக்கும் அங்கேதான் நான் இருக்கிறேன். எத்தனை ஆண்டுகள் என்ற கணக்கை நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள். ஏனென்றால் நான் கணக்கிலே கொஞ்சம் "வீக்". சென்ற ஆண்டு நம்முடைய வரவு செலவுத்திட்டம் 35,000 கோடி ரூபாய்க்கு மேல் என்றெல்லாம் சொல்லப் பட்டது. இதிலேதான் நாம் திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றோம்.

ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். 57 ஆம் ஆண்டு அண்ணாவும், நாங்களும் சட்டசபையிலே அடியெடுத்து வைத்த போது, நிதியமைச்சர்






*“ அவர் (குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்) இங்கே என்னை வாழ்த்தும்போது சொன்னார் – நான் நீண்ட காலம் இருந்து நாட்டிற்கு, மொழிக்கு என்னென்ன நன்மைகளையெல்லாம் செய்ய வேண்டுமென்றார். நீங்கள் எல்லாம் இருந்தால், இன்னும் கூட ஒரு பத்து, இருபதாண்டு காலம் ஆயுள் எனக்கு நீண்டு அவைகளையெல்லாம் செய்யக் கூடிய வாய்ப்பு எனக்கு ஏற்படும். இந்த நம்பிக்கை எனக்கு இருக்கின்றது. எத்தனையோ பேர் நான் நூறாண்டு காலம் வாழப் போகிறேன் என்றெல்லாம் சொன்னார்கள். அவர்கள் தங்களை நம்பிச் சொன்னார்கள், நான் உங்களையெல்லாம் நம்பிச் சொல்கிறேன். எனவே இதில் எந்தவிதமான தவறும் இருக்க முடியாது. ”*

சி. சுப்பிரமணியம் அவர்கள் பட்ஜெட் உரையைப் படித்தார். என்ன படித்தார் தெரியுமா, "நான் இன்றைக்கு கிரிக்கெட்டில் செஞ்சுரி அடிப்பதைப் போல, இந்தப் பட்ஜெட்டில் அடிக்கப் போகிறேன் என்றார். செஞ்சுரி என்றால் 100 சதம் அடித்தல். இந்த ஆண்டு பட்ஜெட்டில் 3 கோடி ரூபாய் குறைகிறது, அது குறையாமல் இருந்தால், பட்ஜெட் 100 கோடி ரூபாய் பட்ஜெட்டாக இருக்குமென்று குறிப்பிட்டார். 1957 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசின் பட்ஜெட் 100 கோடி ரூபாய், இன்றைக்கு 35 ஆயிரம் கோடி ரூபாய். அடுத்த ஆண்டு இது மேலும் அதிகமாகும். இது பட்ஜெட் உயர்ந்ததா ? பணமதிப்பு குறைந்ததா ? என்ற இந்தக் கேள்விக்கெல்லாம் இடமில்லை என்றாலுங்கூட இன்றையதினம் உலகத்தின் பொருளாதாரம், இந்தியாவின் பொருளாதாரம் இவைகளையெல்லாம் எண்ணிப்பார்த்து கிடைக்கின்ற அந்தப் பொருளாதாரத்தை வைத்துக் கொண்டு மக்களுடைய திட்டங்களைத் திட்ட அந்த 100 கோடி ரூபாய் அன்றைக்கு இருந்த ஆட்சிக்கு போதுமானதாக இருந்தது. காரணம் பணத்தின் மதிப்பைப் பொறுத்து அந்த 100 கோடி ரூபாய் போதுமானதாக இருந்தது. அப்போது சி.எஸ். அவர்கள் நிதியமைச்சராக இருந்து திறம்பட பரிபாலித்தார்.

அதற்குப் பிறகு எத்தனையோ மாறுதல்கள். இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இங்கே தலைமையுரை ஆற்றிய நம்முடைய பொள்ளாச்சி மகாலிங்கம் அவர்கள் சொன்னதைப்போல், தமிழுக்கு, தமிழர்களுக்கு உயர்வு தருகின்ற ஆட்சியாக இந்த ஆட்சி இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றதென்றால், இது தமிழர்களால் நடத்தப்படுகின்ற ஆட்சி என்ற காரணம்தானே தவிர, வேறு ஒன்றும் அல்ல.

"தமிழாய்ந்த தமிழன் தான் தமிழகத்தின் முதலமைச்சராய் இருத்தல் வேண்டும்" என்ற புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் சொன்னாரே, அந்த வரிகளை மறந்து விடவில்லை, நாங்களும் மறந்து விடவில்லை, தேர்தல் நேரத்தில் வாக்களிக்கும் தமிழர்களும் மறந்து விடாத காரணத்தினால் தமிழாய்ந்த தமிழன் இந்தத் தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பிலே இருக்கின்ற வாய்ப்பு ஏற்பட்டிருக்கின்றது. இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி இந்த ஒரு விழாவிலே இயல் செல்வம், ராஜரத்னா, இசைச் செல்வம், நாட்டியச் செல்வம், தவில் செல்வம், மிருதங்கச் செல்வம் போன்ற இந்தச் செல்வங்களை மாத்திரமல்ல, என்றைக்கும் வற்றாத செல்வத்தை, பகுத்தறிவுச் செல்வத்தை, தன்மானச் செல்வத்தை தமிழர்களுக்கு அளிக்க இந்த ஆட்சி தொடர்ந்து நீடிப்பதற்கு நீங்கள்தான் துணையாக இருக்க முடியும். அப்படி துணையாக இருந்திடுக என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஒருமுறை இந்த ஆட்சி ஒட்டை விழுந்த ஆட்சி என்று தி.மு.க. ஆட்சியைப் பற்றிச் சொன்னார்கள்.

அப்போது அண்ணா திருவாரூர் கூட்டத்தில் சொன்னார். திருவாரூர் தான் சங்கீத விஷயங்களை உதாரணமாகச் சொல்வதற்கேற்ற ஊர். ஏனென்றால் எந்த ஒரு வித்வானும் திருவாரூரில் வந்து நிகழ்ச்சி நடத்தி புகழ் பெற்றால்தான், அவன் தமிழ்நாட்டிலே புகழ்பெற முடியுமென்ற அளவிற்கு திருவாரூர் அத்தகைய ரசிகத் தன்மை வாய்ந்த ஊர். அங்கேதான் அண்ணா சொன்னார், "ஆமாம், இது ஓட்டைகள் நிறைந்த ஆட்சிதான் என்று சொல்லி விட்டு, ஆனால் இந்த ஓட்டைகள் எல்லாம் ஏனோதானோவென்று விழுந்த ஓட்டைகள் அல்ல. நாதஸ்வரத்திலே இருக்கின்ற ஓட்டைகளைப் போன்றது, புல்லாங்குழலிலே இருக்கின்ற ஓட்டைகளைப் போன்றது, எந்தத் துவாரத்தை அடைத்தால் என்ன நாதம் வரும் என்று எனக்குத் தெரியும். ஆகவே எத்தனை ஓட்டைகள் இருந்தாலும் இருக்கட்டும், அந்த ஓட்டைகளை அடைக்க எனக்குத் தெரியும்" என்று அண்ணா சொன்னார்.

அண்ணாவின் தம்பிகளாகிய நாங்கள் இன்றைக்கு இந்த ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிறோம். அடைக்க வேண்டிய ஓட்டைகளை அடைத்து, நடத்த வேண்டிய வேட்டைகளையும் நடத்தி வெற்றிகரமாக இயல், இசை, நாடகம் என்கிற இந்த முத்தமிழை வளர்ப்போம், வாழ்த்துவோம் என்று இங்கே வீற்றிருக்கின்ற கலைஞர்கள் சார்பாக நான் உறுதியெடுத்துக் கொண்டு சூளுரைத்து இந்தப் பேரவை மேலும் பல ஆண்டு விழாக்களைக் கொண்டாடுகின்ற அளவிற்கு வாழ வேண்டுமென்று வாழ்த்தி இந்த அளவோடு விடைபெறுகிறேன்.

★ ★ ★

## நூலகங்களுக்கு தரமான நூல்களைத் தெரிவுசெய்ய நூல் தேர்வுக்குழு அமைப்பு

பொது நூலகத்துறையில் தரமான நூல்களைத் தெரிவு செய்து, நூலகங்களுக்கு வழங்க, நூல் தேர்வுக்குழு அமைக்கப்படுகிறது. இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்டதும், பொது நூலகத்துறை மேம்பாட்டிற்கு பல சிறப்பான காரியங்களைச் செய்துள்ளது. அதன் தொடர்ச்சியாக புதிதாக நூல் தேர்வுக்குழு பின்வருமாறு அமைத்து அரசு ஆணையிடுகிறது:

1. பொது நூலக இயக்குநர் — தலைவர்
2. தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் — உறுப்பினர்
3. கன்னிமாரா பொது நூலக இயக்குநர் — உறுப்பினர்
4. பேராசிரியர் க. பாலகிருட்டிணன் — உறுப்பினர்
5. கவிக்கொண்டல் மா. செங்குட்டுவன் — உறுப்பினர்
6. கவிஞர் இளையபாரதி — உறுப்பினர்
7. பேராசிரியர் ஆ. இரா. வேங்கடாசலபதி — உறுப்பினர்
8. கல்லூரிக் கல்வி முன்னாள் இயக்குநர் திரு. விக்டர் — உறுப்பினர்
9. காயிதேமில்லத் கல்லூரி முன்னாள் முதல்வர் பேராசிரியை அன்புக்கொடி — உறுப்பினர்
10. மாநிலக் கல்லூரி பேராசிரியர் எஸ். ஏ. அப்துல் சலாம் — உறுப்பினர்
11. பச்சையப்பன் கல்லூரி பேராசிரியர் டாக்டர் தருமன் — உறுப்பினர்
12. பேராசிரியர் பி. எஸ். பாலசுப்பிரமணியன் — உறுப்பினர்
13. மாநிலக் கல்லூரி பேராசிரியை எஸ்.மேரி வெண்ணிலா — உறுப்பினர்
14. நந்தனம் அரசினர் கலைக் கல்லூரி பேராசிரியர் வெங்கட்ராமன் — உறுப்பினர்
15. முனைவர் சேலம் பி. கே. பழனிசாமி — உறுப்பினர்
16. முனைவர் கா. செல்லப்பன் — உறுப்பினர்
17. வழக்கறிஞர் வி. ஆர். எஸ். சம்பத் — உறுப்பினர்
18. கவிஞர் சல்மா — உறுப்பினர்
19. பொது நூலக உதவி இயக்குநர் — உறுப்பினர் மற்றும் செயலாளர்





# வேளாங்கண்ணி – நாகூர் – எட்டுக்குடியை இணைக்கின்ற இரயில் பாதை விரைவில் அமைக்க வேண்டும்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வேண்டுகோள் (12.01.2007)**

இன்றைய தினம் திருவாரூரில் நடைபெறுகின்ற இந்த மகத்தான விழாவில் உங்களையெல்லாம் சந்திப்பதிலும், தஞ்சை–திருவாரூர் இடையே புதியதாக அமைக்கப்பட்டுள்ள அகல இரயில் பாதையை தொடங்கி வைப்பதிலும், நான் மிகுந்த மகிழ்ச்சியும், பெருமையும் கொள்கிறேன்.

திருவாரூரை பொறுத்தவரையில் 1861 ஆம் ஆண்டிலேயிருந்து இங்கே இரயில் போக்குவரத்து நடந்து கொண்டிருந்தது. 55 கிலோமீட்டர் நீளமுள்ள இந்த இரயில் பாதை 1861ஆம் ஆண்டு தொடங்கப் பட்டதிலிருந்து அகல இரயில் பாதையாகவே இருந்தது. ஆனால் அந்த அகல இரயில் பாதை, இடையே மீட்டர்கேஜ் பாதையாக மாற்றப்பட்டது.

முதலில் இதேபோல் அகல இரயில் பாதை அமைக்கப்பட்டு இடையிலே ஏற்பட்ட கோளாறுகள் — எப்பொழுதும் இடையில்தான் கோளாறு ஏற்படும். உங்களுக்குத் தெரியும், நல்ல காரியங்கள் கெடும். அப்படி கெட்ட வரிசையில் ஒன்றாக இரண்டாம் உலகப் போரின் போது போர்க்காலத் தேவை என்று கூறப்பட்டு அந்த அகல இரயில் பாதை

மீட்டர்கேஜ் பாதையாக மாற்றப்பட்டு இருந்தது. அதை இப்பொழுது நாங்கள் வந்து மீண்டும் அகல இரயில் பாதையாக ஆக்குகிறோம். இப்படித்தான் இடையில் கெட்டதையெல்லாம் நாங்கள் வந்து மீண்டும் திருத்த வேண்டிய கடமை, அவசியம் இருக்கின்றது என்பதை நீங்கள் அறிவீர்கள். அதுதான் இன்றைக்கு நானும் நம்முடைய நண்பர் வேலு அவர்களும் இங்கே வந்து ஆற்றிக் கொண்டிருக்கிறோம் என்பதை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும்.



இன்றைக்கு இந்தியாவில் இருக்கின்ற மத்திய அரசு சார்புடைய பல துறைகளில் மேம்பாடு, சீர், சிறப்பு, ஏற்றம், முன்னேற்றம் எல்லாம் இருந்தபொழுதிலும் மக்களுக்கு மிக அவசியமாகத் தேவைப்படுகின்ற போக்குவரத்தில் முதல் இடத்தைப் பெற்று விளங்குகின்ற ஒரு துறையாக இரயில்வே துறை விளங்குகின்றது என்றால் அதை நான் பாராட்டாமல் இருக்க முடியாது.

அப்படிப் பாராட்டும் பொழுது நான் கொஞ்சம் உரிமை எடுத்துக் கொண்டு பாராட்ட வேண்டியவனாக இருக்கின்றேன்.

ஒன்று; நான் ஏற்றுக் கொண்டிருக்கின்ற பிற்படுத்தப்பட்டோர் நலக் கொள்கைக்கு என்றைக்கும் ஆதரவாக இருக்கின்ற நம்முடைய லல்லு அவர்கள் மத்திய இரயில்வே துறை அமைச்சராக இருப்பதும், என்னோடு இன்று நேற்றல்ல, நான் முன்பு முதலமைச்சராக இருந்தபோதெல்லாம், என்னுடைய அரசாங்கத்திலே பல இடங்களில், கலக்டராக இருந்து, பல பணிகளை பொதுப்பணிகளை ஆற்றி, சில மாவட்டங்களிலே சரியாக இல்லையென்றால், அந்த மாவட்டத்திற்கு யாரை ஆட்சித் தலைவராக நியமிக்கலாம் என்று நான் எண்ணிப் பார்க்கும்போதெல்லாம், வேலுதான் சரியான ஆள் என்று அவரை மாவட்ட ஆட்சித் தலைவராக நான் ஆக்கிய, கணித்த காலமெல்லாம் உண்டு.

ஆனால், வேலு அவர்களைப் பொறுத்தவரையில் முதலமைச்சராக இருக்கின்ற கருணாநிதி அல்லவா, நம்மை இந்தப் பொறுப்புக்கு நியமித்திருக்கிறார் என்று அதற்காக நியாயத்தை, நீதியை விட்டுக் கொடுப்பதில்லை, கடமையை விட்டுக் கொடுப்பதில்லை. ஆனால் என்னுடைய ஜாதகம் என்னவென்றால், நான் யாரை பரிந்துரை செய்கின்றேனோ, யாரை நியமிக்கின்றேனோ, அவர்கள்தான் எனக்கு எதிராகச் செயல்படுவார்கள். ஆனால், நம்முடைய வேலு அவர்கள் எனக்காக அல்ல, நாட்டிற்காக, கடமைக்காக, சமுதாயத்திற்காக நல்லவைகளையே செய்ய வேண்டும் என்று கருதுகின்ற ஒரு நல்லவர். எனவே இன்றைக்கு இரயில்வே இலாகா நம்முடைய மத்திய அமைச்சர் அவர்களுடைய கையிலே இருந்தாலும் கூட, அது பூரண பொலிவு பெறுவதற்கு மிக முக்கிய காரணமாக துணையாக இருப்பவர் நம்முடைய நண்பர் வேலு என்பதை அறியும் போது, நானும் மகிழ்ச்சியடைகின்றேன். என்னைப் போலவே டாக்டர் இராமதாஸ் அவர்களும் மகிழ்ச்சியடைவார்கள் என்று நான் நம்புகிறேன்.

ஏனென்றால், பா.ம.க. இயக்கத்தில் தன்னை ஒப்படைத்துக் கொண்டு டாக்டர் இராமதாஸ் அவர்களுடைய தலைமையில் இயங்குகின்ற ஒரு நண்பர் அவர். அவர் இன்றைக்கு தமிழகத்திலே ஆற்றியிருக்கின்ற பணிகள், ஒன்றல்ல, இரண்டல்ல. இந்தப் பெரும் பணிகளிலே ஒன்றுதான் இன்று தஞ்சை – திருவாரூர் இரு நகரங்களுக்கிடையிலே ஒரு இரயில் போக்குவரத்து மீட்டர் கேஜ் ஆக இருந்ததை மாற்றி, பிராட் கேஜ் அகல இரயில் பாதையாக ஆக்கியிருப்பது என்று சொன்னால் அது மிகையாகாது.

நான் அவரிடத்தில் மேலும் கேட்டுக் கொண்டிருக்கிறேன். நம்முடைய பழனிமாணிக்கம் போன்றவர்களும், விஜயன் போன்றவர்களும், திருவாரூர் அமைச்சர் மதிவாணன் போன்றவர்களும் மற்றவர்களும் பல கோரிக்கைகளை இங்கே அவரிடத்திலே வைத்தார்கள். நான் பக்கத்திலே இருப்பதால் சிபாரிசு செய்வேன் என்ற நம்பிக்கையோடு தந்திருக்கலாம். ஆனால் வேலு அவர்கள் என்னைப் பார்த்து "நீங்கள் இதற்கு எல்லாம் உதவி செய்ய வேண்டும்" என்று என்னைக் கேட்டார். அவர் மின்சாரத்தைப் பற்றி பேசினார். அப்பொழுது நம்முடைய





வீராசாமி அருகில் இருந்து கேரளத்தில் மின்சாரம் கொடுக்கிறார்கள் என்றால் அங்கே 60 காசுதான். இங்கே மூன்று ரூபாய், அங்கே கேரளத்திலே புனல் மின்சாரம் அவ்வளவு சுலபமாக அவர்களுக்கு கிடைக்கிறது. நமக்கு அனல் மின்சாரம் பெறுவது என்றால் மூன்று ரூபாய் ஆகின்றது. அதையும் யோசிக்க வேண்டியிருக்கின்றது என்று சொன்னார். நான் வேலு அவர்களுக்கு சொல்லிக் கொள்வேன்; மின்மயமாக ஆக வேண்டும் என்பது மாத்திரமல்ல. தமிழர்களுடைய வாழ்வு, எதிர்காலம் பொன்மயமாக ஆக வேண்டும். அதற்கு என்னென்ன செய்ய வேண்டுமோ அதையெல்லாம் நாம் இருவரும் சேர்ந்து செய்வோம்.

மத்திய அரசும் மாநில அரசும் மத்திய அரசிலே இருக்கின்ற வேலு போன்ற அமைச்சர்களும் மாநில அரசிலே இருக்கின்ற எங்களைப் போன்றவர்களும் இரயிலின் இரண்டு தண்டவாளம் போல் இருக்க வேண்டும். ஒரு தண்டவாளம் வளைந்தால் இரயில் ஓடாது. இரண்டு தண்டவாளம் அமைந்திருந்தால்தான் இரயில் ஓடும். அப்படி நாம் இரண்டு தண்டவாளங்களாக இருப்போம். நாம் இரண்டு பேரும் தண்டவாளங்களாகவே இருப்பது பல பேருக்குக்கூட பிடிக்காது, இருந்தாலும், நாம் தண்டவாளங்களாக இருந்தால்தான் இரயிலையும் நகர்த்த முடியும்; இரயில் நகர்ந்தால்தான் மக்கள் பலன் அடைய முடியும். பொதுமக்கள் அடைகின்ற அந்தப் பெரும் பயனுக்காக மத்திய மாநில அரசுகள் ஒன்றோடு ஒன்று மோதிக்கொள்ளாமல் ஒன்றோடு ஒன்று அனுகுமுறையிலே அனுசரித்துச் சென்று இரண்டு அரசுகளும் நல்ல காரியங்களை ஆற்றிட வேண்டும்.

உதாரணமாக மத்திய மாநில அரசுகளுக்கிடையே இன்றைக்கு இருக்கின்ற உறவின் காரணமாகத்தான் இந்த திருவாரூர் பாதை மாத்திரமல்ல, தஞ்சை பாதை மாத்திரமல்ல. இன்னும் எத்தனையோ பாதைகள் சேலம் இரயில்வே கோட்டம் இன்றைக்கு கிடைத்திருக்கின்றது என்றால், சேலத்திலே பல ஆண்டுகாலமாக தம்பி வீரபாண்டி ஆறுமுகம் எடுத்த முயற்சி பலிக்காமல் போய், இப்பொழுது அதற்கான அனுமதி கிடைத்திருக்கின்றது. அதற்கான பச்சைக் கொடி அங்கே காட்டப்பட்டிருக்கின்றது. அதுமாத்திரமல்ல; எத்தனையோ திட்டங்களை மத்திய அரசோடு மாநில அரசும் இன்றைக்குத் தந்திருக்கின்றது என்ற கணக்கை நாம் மறந்துவிடக்கூடாது.

சேது சமுத்திரத் திட்டம் நம்முடைய கனவல்லவா, கடந்த நூறாண்டு, இருநூறு ஆண்டு காலமாக கண்ட கனவு, சேது சமுத்திரத்திட்டம். அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டால் எத்தனையோ மைல் தூர கடல் பயணத்தை குறைக்க முடியும் என்பதும், எவ்வளவு பொருளாதார இலாபம் அதனால் கிடைக்கும் என்பதும், நம்முடைய நாட்டிலே கிடைக்கின்ற பொருள்களை எந்த அளவிற்கு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யலாம் என்பதும், அதைப்போல வெளிநாடுகளிலிருந்து எவ்வளவு பொருள்களை இங்கே இறக்குமதி செய்யலாம் என்பதும் எந்த அளவிற்கு வாணிபம் செழிக்கும், கொழிக்கும் என்பதும், கணக்கிட்டுப் பார்த்து அன்றைக்கு

ஏ. இராமசாமி முதலியார் காலத்தில் இருந்து அவரையொத்தவர்கள் மிகுந்த பாடுபட்டும் பயன்தராத அந்த திட்டம் இன்றைக்கு அனுமதிக்கப்பட்டு நம்முடைய தம்பி பாலு அவர்களுடைய முயற்சியினால் வேகமாக வளர்ந்து வருகின்றது என்றால், சேது சமுத்திரத் திட்டம் சாதாரணமானதல்ல, இரண்டாயிரம், மூவாயிரம் கோடி அளவிற்கு தீட்டப்பட்டுள்ள மாபெரும் திட்டம் அது.

அதுமாத்திரமல்ல; ஓரகடத்தில் வாகனங்களை ஆய்வு செய்து, வாகனங்களை சீர்செய்கின்ற அந்த ஒரு தொழிற்சாலை இரண்டாயிரம் கோடி ரூபாயில், மத்திய அரசு மாநில அரசோடு இருக்கின்ற இணக்கத்தின் காரணமாக மத்திய அரசால் நமக்காகத் தரப்பட்டிருக்கின்ற ஒரு மாபெரும் திட்டம்.

அது மாத்திரமல்ல, இவைகளுக்கெல்லாம் மேலாக இப்படிப்பட்ட விசாலமான ஒரு ஆழமான துறைமுகம் வேறு எங்கும் இல்லை என்று சொல்லுகின்ற அளவிற்கு அமைந்த குளச்சல் துறைமுகம் அந்த குளச்சல் துறைமுகத்தை நாம் விரிவாக்கி பெரியதாக்கி, அதை பயன்படுத்திக்கொள்ள ஆரம்பித்தால், தமிழகத்தினுடைய செழிப்பு இன்னும் பல மடங்கு வளர்வதற்கு வழி வகை இருக்கின்றது என்பதால் அந்தக் குளச்சல் துறைமுகத் திட்டத்திற்கும் மத்திய அரசு சம்மதித்திருக்கின்றது.

இவைகளிலெல்லாம் சிலவற்றைத்தான் சொன்னேன். இன்னும் உணர்ச்சிமயமாக சொல்ல வேண்டுமேயானால் நூறாண்டு காலமாக சூரிய நாராயண சாஸ்திரி என்கின்ற பரிதிமாற் கலைஞர் பாடுபட்டும் கிடைக்காத ஒன்று தமிழுக்கு செம்மொழி என்ற அந்தஸ்து வேண்டும் என்ற அந்த வேண்டுகோள், கேட்பாரற்று கிடந்து இங்கே திராவிட முன்னேற்ற கழக ஆட்சியில் மத்தியில் திருமதி சோனியாகாந்தி அவர்களுடைய வழிகாட்டுதலோடு நடைபெறுகின்ற மன்மோகன்சிங் அவர்களுடைய ஆட்சியும் வந்தப் பிறகுதான் நாம் அவர்களிடம் வேண்டுகோள் விடுத்து இன்றைக்கு தமிழ் செம்மொழி என்று அறிவிக்கப்பட்டு அதற்குக்கூட மைசூரில்தான் குழு என்று இருந்ததை நான் சென்று அர்ஜூன் சிங் அவர்களிடம் வாதாடி அங்கே இருக்கின்ற மைசூர் குழுவை அகற்றி தமிழகத்திலே சென்னையிலேயே அந்தக் குழு இனிமேல் நடைபெறலாம் என்கின்ற அளவிற்கு செம்மொழிக் குழு தமிழகத்திற்கு இன்றைக்கு கிடைத்திருக்கின்றது.

இதையெல்லாம் சொல்வதற்குக் காரணம் மத்திய மாநில அரசுகள் பிணக்கு இல்லாமல் உறவுக்கு கை கொடுத்து, அதே நேரத்தில் உரிமைக்கு குரல் கொடுத்து இரண்டு அரசுகளும் பாடுபட்டால், பணியாற்றினால் பலன் உண்டு என்பதற்கு நான் எடுத்துக்காட்டிய இவைகளெல்லாம் சான்றுகளாகும்.

எனவே இந்த அருமையான தொடக்க விழாவில் நாம் மகிழத்தக்க அளவிற்கு நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய இந்த தொடக்க விழாவில் நம்முடைய வேலு அவர்கள் சொன்னார்களே, நான் அவர்களுக்கு வைத்த கோரிக்கைகளை யெல்லாம் சொன்னார். நான் அவரிடத்திலே வைத்த கோரிக்கை கொஞ்சம் சுயநலம் கொண்டதுதான். திருக்குவளைக்கு இரயில் வேண்டும் என்று சொன்னேன். திருவாரூர் வரைக்கும் வந்த இரயில் திருக்குவளைக்கும் வேண்டும் என்ற சொன்னேன். அது சுயநலம் மாத்திரமல்ல, அதில் மிகப் பிரம்மாண்டமான ஒரு பொது நலமும் இருக்கின்றது. ஒரு பொது கொள்கையும் இருக்கின்றது இப்பொழுது அவரே இங்கே சொன்னார். நாகூர் வேளாங்கண்ணி இரண்டையும் இணைக்கின்ற ஒரு இரயில் பாதை என்று சொன்னார்.

இதை பார்க்க வேண்டும்; நாகூர் இஸ்லாமியர்களுடைய இடம், அவர்களுக்கு முக்கியமான இடம் வேளாங்கண்ணி கிறித்துவர்களுக்குரிய இடம். எட்டுக்குடி என்ற ஊர் இருக்கின்றது. அது இந்துக்களுக்குரிய,

மேவும் எட்டுக்குடி வாழும்
சிங்காரவேலனே வா! வா!

– என்று காவடி எடுத்துக் கொண்டு பாடுவார்களே அந்த எட்டுக்குடி அது இந்துக்களுக்கு உரியது. எனவே வேளாங்கண்ணி, நாகூர், எட்டுக்குடி இந்த மூன்றையும் இணைக்கின்ற இரயில்பாதை வருமேயானால் இந்தியாவினுடைய மத நல்லிணக்கத்திற்கேகூட அது ஒரு நல்ல அடையாளமாக இருக்கும் என்பதை நான் அவருக்கு தெவித்துக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

எனவே அந்த மத நல்லிணக்க அடையாளமாக அந்தப் பாதையை விரைவிலே அமைப்பதற்கு அவர் முயற்சிக்க வேண்டும். அந்த முயற்சிக்கு என்னென்ன உதவிகள் செய்ய வேண்டுமோ, எப்படியெல்லாம் நாங்கள் துணை நிற்க வேண்டுமோ, அப்படியெல்லாம் துணை இருக்கத் தயாராக நாங்கள் இருக்கின்றோம் என்று கூறி நம்முடைய வேலு அவர்களுடைய முயற்சிகள் மேலும் மேலும் வெற்றிகரமாக அமைந்திட வேண்டுமென்று வாழ்த்துக்களைச் சொல்லி இந்த இனிய விழாவிலே திருவாரூர் மக்களாகிய உங்களையெல்லாம் சந்திக்கின்ற நல்ல வாய்ப்பை தந்தமைக்காக மகிழ்ச்சி தெரிவித்து இந்த அளவில் விடைபெறுகிறேன்.

★ ★ ★





# நாடு வாழ, நலிவு தீர துணை நிற்போர் அனைவருக்கும் நன்றி தெரிவிப்போம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள்

அருள்மிகு சத்திய சாயிபாபா அவர்களுக்கு தமிழகத்தில் ஒரு நன்றி தெரிவிக்கின்ற விழா நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. பாராட்டுகின்ற விழாவாகவும் சேர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இந்த இரண்டையும் விட முக்கியமாக சிலருக்கு ஒரு எதிர்பார்ப்பு விழாவாகவும் நடைபெற்றுக் கொண்டிருக் கின்றது.

இங்கே நம்முடைய வேணு சீனிவாசன் அவர்கள் வரவேற்புரையாற்றும்போது அன்புக்கும் பாசத்துக்கும் உரிய அருள்மிகு சத்திய சாயிபாபா அவர்கள் ஆற்றி வருகின்ற அரும்பணிகளைப்பற்றியெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் ஆற்றுகின்ற பணி என்ன என்பதை சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், இங்கே ஆங்கிலத்திலே எழுதப்பட்டிருக்கின்ற பொன்மொழியிலேயே அது அடங்கியிருக்கின்றது. "Service to Man is Service to God" என்று இங்கே எழுதப்பட்டுள்ளது. அந்த பொன் மொழிக்கு மதிப்பளிக்கின்றவன் என்ற முறையில் நான் இந்த விழாவிலே கலந்து கொண்டிருக்கின்றேன்.

பலபேருக்கு ஆச்சரியமாக இருக்கக்கூடும், என்ன இந்த இரண்டு பேரும் ஒரு விழாவிலே கலந்து கொள்கிறார்கள் என்று! இது ஒன்றும் ஆச்சரியத்திற் குரியதல்ல. காவேரியும் கொள்ளிடமும் ஒன்றாகப் போகிறதே, அது எப்படி ஆச்சரியத்திற்குரிய தில்லையோ, அதற்கு காவேரி என்று பெயர் தனியாக இருக்கலாம், மற்றொன்றுக்கு கொள்ளிடம் என்ற பெயர் தனியாக இருக்கலாம். ஆனால் இரண்டிலும் ஓடுவது தண்ணீர்தான், அந்த இரண்டு தண்ணீரும் பாய்வது கழனிக்குத்தான், அந்தக் கழனியிலே விளைவது கதிர்தான், அந்தக் கதிரிலே கிடைப்பது நெல்தான், அந்த நெல்லுக்குள் இருப்பது அரிசிதான், அந்த அரிசிதான் எல்லோருக்குமே உணவு. அதைப்போலத்தான் காவேரியும், கொள்ளிடமும் போல இங்கே நாங்கள் இருவரும் அமர்ந்திருக்கிறோம் என்பதை நீங்கள் மறந்து விடக்கூடாது.

காவேரியைப் பற்றி நான் இங்கே சொல்லும்போது, நம்முடைய கர்நாடக முதலமைச்சர் மாண்புமிகு குமாரசாமி அவர்கள் பேசியது எனக்கு நினைவுக்கு வந்தது. தென்னகத்தைப் பொறுத்தவரையில் அதை ஒரு தீபகற்பம் என்று சொன்னாலும், தமிழகத்தைப் பொறுத்தவரை தண்ணீர்ப் பிரச்சினையில் ஒரு பக்கத்தில் ஆந்திரா, ஆந்திராவின் தயவு இல்லாவிட்டால் தமிழகத்திற்கு தண்ணீர் இல்லை. இன்னொரு பக்கம் கர்நாடகா, கர்நாடகாவின் தயவு இல்லாவிட்டால் தமிழகத்திற்கு தண்ணீர் இல்லை. இன்னொரு பக்கம் கேரளா, அவர்களின் தயவு இல்லாவிட்டால் தமிழகத்திற்கு தண்ணீர் இல்லை. இப்படி நான்கு பக்கமும் வேடர் சூழ்ந்திட நடுவில் சிக்கிய மான் போல், தமிழகத்தை சுற்றிலும் தண்ணீர் உள்ள மாநிலங்கள். ஆனால் தமிழகம் கண்ணீர் வடிக்கும் மாநிலமாக இன்றைக்கு இருக்கின்றது. இந்தக் கண்ணீரைத் துடைக்கத்தான் அரசு எடுக்கின்ற முயற்சிகளுக்கு, அருந்துணையாக அருள்மிகு சாயிபாபா அவர்களும் விளங்குகிறார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பலபேருக்குச் சந்தேகம் பிரச்சாரம் கூடச் செய்வார்கள். இவன் கடவுளை ஏற்றுக்கொள்ளாதவன். இவன் சாயிபாபாவோடு அமர்ந்து இந்தக் கூட்டத்திலே பாராட்டுகிறான் என்று நாளைக்குப் பேசுவார்கள். கடவுளை ஏற்றுக் கொள்வதும், ஏற்றுக் கொள்ளாததும் பற்றி அந்தத் தத்துவத்தை சில பேர் உணராமல் பேசுகிறார்கள். கடவுளை நான் ஏற்றுக்கொள்கிறேனா என்பது பிரச்சினை அல்ல. கடவுள் என்னை ஏற்றுக் கொள்கின்ற அளவிற்கு நான் நடக்கிறேனா இல்லையா என்பதுதான் பிரச்சினை. நான் நடந்து கொண்டால், கடவுள் இருந்தாலும் இல்லாவிட்டாலும் நம்மை மக்கள் ஏற்றுக்கொள்வர். கடவுள் நம்மை ஏற்றுக்கொள்கின்ற அளவிற்கு நாம் நடந்து கொள்கிறோமா இல்லையா என்ற கேள்விக்கு நமது செயல்களே பதிலளிக்க வேண்டும்.

இங்கே வேணு சீனிவாசன் பேசும்போது சொன்னார். எத்தனை இலவச உதவிகள்? எத்தனை பேருக்கு சிகிச்சை? எத்தனை பேருக்கு அறுவை சிகிச்சைகள்? இவற்றையெல்லாம் இலவசமாகவே சாயிபாபா அவர்கள் செய்து உயிர் கொடுத்திருக்கிறார்; பல பேருக்கு; எவ்வளவு பேருக்கு சாயிபாபா கல்வி தானம் செய்திருக்கிறார் என்றெல்லாம் சொன்னார். அங்கேயும்

## புதிய தமிழ்ச் சொற்கள்

***24.11.2006 அன்று நடைபெற்ற 41ஆவது சொல்வங்கிக் கூட்டத்தில் உருவாக்கப்பட்ட புதிய தமிழ்ச்சொற்கள்***

| வ.எண். | ஆங்கிலம் | தமிழ் |
|---|---|---|
| 1. | Client | கிளைமை |
| 2. | Painstaking | கவனப்பாடு |
| 3. | Quarry | அகழ்வெளி |
| 4. | Quartz | வன்படிகம் |
| 5. | Casino | ஆடவை |
| 6. | Casserole | வெதுகலன் |
| 7. | Voting rate | வாக்களி நிலவரம் |
| 8. | Incitement | வெறியுந்துகை |
| 9. | Yoghurt | இன்தயிர் |
| 10. | Humbug | பசப்பு |
| 11. | Touch Free | கைபடா |
| 12. | Lassi | குடிதயிர் |

– தமிழ் வளர்ச்சித் துறை



இலவசம், இங்கேயும் இலவசம்தான். ஆனால் இங்கே சொல்கிறார்கள், இலவசம் அதிகமாகக் கொடுத்தால், திவாலாகி விடும் என்று. திவாலாக மாட்டோம், எடுக்க எடுக்க அன்பு குறையாது, அன்பு குறையவில்லை என்றால், ஆஸ்தியும் குறையாது. அந்த நம்பிக்கையோடு தான் நம்முடைய அருள்மிகு சாயிபாபா அவர்கள் தன்னுடைய பணியை ஆற்றிக் கொண்டிருக்கிறார். அதைத்தான் அவர் "ஆண்டவன் பணி" என்று கருதுகிறார். இதைத்தான் நானும் "ஆளுகிறவன் பணி" என்று கருதிக் கொண்டிருக்கிறேன்.

ஆண்டவன் பணிக்கும் ஆளுகிறவன் பணிக்கும் ஏறத்தாழ இருக்கின்ற ஒற்றுமையில் இல்லாதவர் களுக்கு இலவசமாக வழங்குவதில் தவறில்லை. இல்லாதவர்களுக்கு உதவி செய்வதில் எந்தத் தவறும் இல்லை. எந்தக் குற்றமும் இல்லை. அவர்களுக்குத் தெரியும், இன்று நேற்றல்ல, தம்பி துரைமுருகன் இங்கே எடுத்துக்காட்டியதைப்போல, தயாநிதிமாறன் சொன்னதைப்போல் நேற்று அவரோடு உரையாடிய போதும், நானும் அவரை அவருக்குத் தெரியாமல் பல ஆண்டு காலமாகக் கவனித்துக் கொண்டிருக்கிறேன், அவரும் என்னை, எனக்குத் தெரியாமல் கவனித்துக் கொண்டிருக்கிறார், பல ஆண்டுகாலமாக. அதனால்தான் அவர் கேட்டார், இந்தத் துண்டைத் பார்த்துக் கேட்டார், இந்த மஞ்சள் துண்டை நீங்களும் ஏழெட்டு ஆண்டுகளாக அணிந்திருக்கிறீர்கள், யார் யாரோ என்னென்னவோ சொல்கிறார்கள், அதைப் பற்றிக் கவலைப்படாமல் விடாப்பிடியாக போட்டிருக்கிறீர்கள் என்று சொன்னார்.

நான் அப்போது சொன்னேன், புத்தருடைய அங்கவஸ்திரமே மஞ்சள் துண்டுதான் என்று சொன்னேன், சிரித்துக் கொண்டார். பிறகு அவரிடம் சொன்னேன் என்னை நீங்கள்தொடர்ந்து பல ஆண்டுகளாகக் கவனித்துக் கொண்டிருக்கிறீர்கள் போலிருக்கிறதே என்றேன். ஆமாம் என்று சொன்னார். நான் ஒன்றை சொல்ல விரும்புகிறேன். நாட்டில் வேடதாரிகள் பலர் உண்டு. அந்த வேடதாரிகளை ஒரு பகுதியாகவும் இப்படிப்பட்ட நல்ல உள்ளம் படைத்த துறவுக் கோலம் பூண்டவர்களை ஒரு பகுதியாகவும் பிரித்துப் பார்க்க நான் தவறியதே இல்லை. மக்களுடைய கஷ்டங்களைப் போக்க வேண்டுமென்று கருதுகின்றவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் துறவிகளை விட மேலானவர்கள். இன்னும் சொல்லப் போனால், ஆண்டவனுக்கே ஒப்பானவர்கள் அவர்கள் என்று சொன்னால் அதை யாரும் மறுக்க முடியாது.

அப்படிப்பட்ட நிலையிலே இன்றைக்கு சென்னை மாநகரின் தேவைகளை, கடந்த காலத்தில் ஏற்பட்ட நிலைமைகளை எண்ணிப் பார்த்து, தன்னால் என்ன செய்ய முடியுமோ அதைச் செய்ய, அவர்கள் முன் வந்து ஏற்கெனவே 1983ஆம் ஆண்டு என்னுடைய அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களும், என்னுடைய அருமை நண்பர் என்.டி.ஆர். அவர்களும் இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் அடிக்கல் நாட்ட, தொடங்கிய தெலுங்கு கங்கை திட்டம், இடையிலே கிடப்பிலே போடப்பட்டு 1996ஆம் ஆண்டு ஓரளவு நிறைவேறி,



பிறகு சிக்கல்களுக்கு, பிரச்சினைகளுக்கு ஆட்பட்டு, கடந்த ஐந்தாண்டுகாலமாக சரிவர இயங்கவில்லை. அதனை சரிவர இயங்க வைத்து, அந்தக் கட்டுமானங்களையெல்லாம் செம்மைப்படுத்தி, மேம்படுத்தி மேலும் சென்னைக்கு தண்ணீர் தாராளமாகக் கிடைக்க உதவிகளைச் செய்வேன் என்று அவர்கள் வாக்களித்திருக்கிறார்கள். அந்த வாக்கை எப்படி வகைப்படுத்துவது, நிறை வேற்றுவது என்பதைப் பற்றி யோசித்து அவர்களிடத்திலே விவாதித்து, நல்ல முடிவை அவர்கள் விரைவிலே அறிவிக்கலாம்.

துரைமுருகனும், தயாநிதிமாறனும் பேசும் போது கூவம் பற்றி சொன்னார்கள். அது உங்களுடைய கனவல்லவா என்றார்கள். கனவுதான், ஆனால் அந்தக் கனவு நிறைவேறவில்லை. அது நிறைவேறுவதற்கு உங்களுடைய பங்கும் இருக்கட்டும் என்று சொன்னேன். அதற்கு செலவு துரைமுருகன் சொன்ன ஆயிரம் கோடி ரூபாயை அவரிடம் நான் கேட்கவில்லை. அவர் கொடுத்தால் பெற்றுக்கொள்ள ஆட்சேபணை இல்லை. ஆனால் ஆயிரம் கோடி ரூபாய் ஆகாது குறைவாகத்தான் ஆகும். அதிலே ஒரு பங்கை அவர்கள் ஏற்றுக் கொண்டு, கூவம் நதி எப்படி உலகத்திலே உள்ள பல்வேறு நாடுகளுடைய தலைநகரங்களில் எல்லாம், அந்தத் தலைநகரத்திற்குள் ஓடுகின்ற ஆறு அந்த நகரங்களையே அழகுபடுத்துகிறதோ, அதைப்போல சென்னையை அழகுபடுத்துகின்ற ஆறாக கூவம் ஆக வேண்டுமென்ற கருத்தை, ஆசையை அவரிடம் கூறியிருக்கிறேன்.

துறவிகளுக்கு நேராக ஆசைபடக்கூடாது. இந்த ஆசை சுயநல ஆசை அல்ல. மக்களுக்காக ஏற்படுகின்ற ஆசை. "ஆகாரத்திற்காக அழுக்கைச் சாப்பிட்டு, தடாகத்து நீரைச் சுத்தப்படுத்துகிறதே மீன்" என்ற உரையாடலை எழுதியவன் அல்லவா நான், எனவே தான் தடாகம் சுத்தமாக வேண்டும். சென்னை எழில் நிறைந்த நகரமாக வேண்டும். தமிழகத்தின் தலைநகரம் என்கிற சிறப்பு அதற்கு இருக்க வேண்டும். அந்தச் சிறப்பை ஏற்படுத்தவும், தமிழ்நாட்டு மக்களுடைய ஏழ்மையைப் போக்கவும் இந்த அரசு எடுத்து கொள்கின்ற முயற்சிகளுக்கு பாபா போன்றவர்கள் தங்களுடைய பங்களிப்பைச் செய்யத் தயாராக இருக்கும்போது நான் இன்னமும் தைரியமாக பல சாதனைகளை மக்களுக்குச் செய்யத் தயாராக இருக்கிறேன் என்பதை எடுத்துக்கூறி, அந்த தைரியத்தை, துணிவை, அந்த நம்பிக்கையை ஏற்படுத்தும் விதமாக இந்த விழா அமைந்திருக்கிறது என்பதை எடுத்துக்கூறி, இந்த விழாவில் உங்கள் அனைவருக்கும் என் வாழ்த்துக்களைக்கூறி என்னுடைய நன்றியை, பாராட்டுகளை அவர்களுக்குத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

**சென்னை மக்கள் அமைப்பின் சார்பில்**
**சத்திய சாயிபாபா அவர்களுக்கு**
**சென்னையில் நடைபெற்ற**
**நன்றி பாராட்டு விழாவில்**
**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள்**
**தலைமையேற்று ஆற்றிய உரை**
**(21.01.2007)**

## தமிழ்நாடு மகளிர் ஆணையத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் நியமனம்

**த**மிழ்நாடு மகளிர் ஆணையத்தின் தலைவராக கோவை பாரதியார் பல்கலைக் கழகத்தின் முன்னாள் பதிவாளரும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் உறுப்பினருமான முனைவர் திருமதி. கு.ம. இராமாத்தாள் அவர்களையும், உறுப்பினர்களாக சட்டப் பேரவை உறுப்பினர்கள் திருமதி பி. கமலாம்பாள், திருமதி கே. காயத்ரிதேவி திருமதி. குட்சியா காந்தி, இ.ஆ.ப., திருமதி. வி. வனிதா, இ.கா.ப. இராணிமேரி கல்லூரி முதல்வர் இகுயின் பின்டோ, வழக்கறிஞர் திருமதி. சி. சங்கமித்ரா, திருமதி. ஆர். ஆலிஸ் மனோகரி அலுவல் சார்பான உறுப்பினராக சமூக நலத்துறை செயலாளரையும், உறுப்பினர் – செயலாளராக சமூக நலத்துறை இயக்குநரையும் நியமனம் செய்து, மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 16.1.2007 அன்று ஆணையிட்டுள்ளார்.



# மக்களுக்குப் பணியாற்றுவதுதான் மகேசன் பணி

இராமநாதபுரம்
கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு
அடிக்கல் நாட்டி
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
**கலைஞர் மு.கருணாநிதி** அவர்கள்
ஆற்றிய உரை
(30.01.2007)





**நே**ரம் அதிகமாகி விட்டது என்பதை நான் உணர்வதைப் போல நீங்களும் உணர்ந்திருக்கிறீர்கள் என்பதை நான் நன்றாக அறிவேன். கடந்த ஒரு மாத காலத்திற்கு மேலாக பல்வேறு நிகழ்ச்சிகளில் நாள்தோறும் கலந்துகொள்ளும் நிலை ஏற்பட்டு, கிட்டத்தட்ட அமைச்சர் தம்பி தங்கவேலனைப் போலவே என்னுடைய குரலும் கட்டியிருப்பதை நீங்கள் இங்கே காணுகிறீர்கள். இருந்தாலும் கூட, ஒரு சில கருத்துக்களை நீங்கள் கொண்டிருக்கின்ற மகிழ்ச்சியோடு பங்கிட்டுக் கொள்ள நான் விரும்புகிறேன்.

ஆனால், இந்த ஒரு மாத காலத்திலே நான் கலந்து கொண்ட நிகழ்ச்சிகள் அனைத்துக்கும் சிகரம் வைத்ததைப் போன்ற நிகழ்ச்சி இன்றைய நிகழ்ச்சி என்று சொன்னால் அது மிகையாகாது. தம்பி தங்கவேலனை, இங்குள்ள அரசு அதிகாரிகளை, இங்கே இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர் திட்ட அடிக்கல் நாட்டு விழா நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யுங்கள் என்று சொன்னால், அவர்கள் ஒரு மாநில மாநாட்டிற்கே ஏற்பாடு செய்திருக்கிறார்கள் என்பதை இங்கே வந்த பிறகுதான் என்னால் புரிந்து கொள்ள முடிந்தது.

ஆனால் ஒன்று, தங்கவேலன் இங்கே குறிப்பிட்டதைப்போல, நான் வருகிற நேரத்தில் எல்லாம், பல்வேறு நிகழ்ச்சிகளுக்கான ஏற்பாடுகள் எல்லாம் பாழாகிவிடுகின்ற அளவிற்கு ஒவ்வொரு முறையும் மழை வந்து, கூட்டம் கலைந்து, பெற வேண்டிய கழக நிதியையும் நான் முழுமையாகப் பெற முடியாமல் பல நிதியளிப்பு விழாக்கள் நடந்ததையெல்லாம் நானும் மறக்கவில்லை, தம்பி தங்கவேலனும் மறந்திருக்க மாட்டார். ஆனால் இன்றைய தினம் அவரும் நானும் ஏகோபித்து மகிழத்தக்க அளவிற்கு, இங்கே குழுமியிருக்கின்ற பல்லாயிரக்கணக்கான மக்களாகிய நீங்களும் மகிழத்தக்க அளவிற்கு மழை கருணை காட்டியிருக்கின்றது.

நேற்றைக்கு முன்தினம் பத்திரிகைகளிலே பார்த்தபோது, இந்த வட்டாரத்திலே பெரும் மழை, இடி, மின்னல் என்றெல்லாம் செய்திகள் வந்தபோது, வழக்கமான நிலைதான் இப்போதும் போலும் என்று நான் கவலைப்பட்டுக் கொண்டிருந்தேன். ஆனால் அந்தக் கவலை நீங்குகின்ற அளவிற்கு, இந்தக் கடும் வெயிலிலே கூட பல்லாயிரக்கணக்கிலே நீங்கள் இங்கே குழுமியிருக்கிறீர்கள், மகிழ்ச்சி வெள்ளத்திலே ஆழ்ந்திருக்கிறீர்கள், நான் அந்த மகிழ்ச்சியிலே

உங்களோடு சேர்ந்து திளைக்கிறேன். ஏனென்றால் நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் ஹசப் அலி பேசும்போது குறிப்பிட்டார்கள். அதைத்தான் தம்பி தங்கவேலனும் அவருடைய உரையிலே சுட்டிக் காட்டினார்.

நான் முதன்முதலாக அறிஞர் அண்ணா அவர்களுடைய மறைவுக்குப் பிறகு பொறுப்பேற்று நீலகிரியிலே நடைபெற்ற மலர்க்கண்காட்சியைத் திறந்து வைக்கச் சென்றபோது, அந்த மலர்க் கூட்டத்தைப் பார்த்துவிட்டு, அந்த எழிலை நோக்கி விட்டு, அங்கிருந்த உற்சாகத்தைக் கண்டுவிட்டு, அப்போது நான் சொன்னேன். நான் நீலகிரியைப் பார்த்து, இந்தச் செழிப்பைப் பார்த்து, இந்த மலர் வனத்தைப் பார்த்து மகிழ்ச்சியடைகின்ற அதே நேரத்தில் வறண்டு கிடக்கின்ற இராமநாதபுரம் மாவட்டத்தையும் எண்ணிக் கவலைப் படுகிறேன் என்று சொன்னேன்.

அந்தக் கவலை தி.மு.கழக ஆட்சியில் படிப்படியாக நீங்கி வருகிறது. இந்த ஒரு நாளில் மாத்திரமல்ல, கடந்த காலத்திலே கூட பல கட்டங்களில், பல நேரங்களில் ஆட்சியின் ஆலோசனைகளின் பேரில், அதிகாரிகளின் கருத்துக்களின் அடிப்படையில் இந்த வட்டாரத்திலே உள்ள விவசாயப் பெருங்குடி மக்கள், மக்கள் பிரதிநிதிகள் அத்தனை பேருடைய கருத்துக்களையும் விவாதித்து, யோசித்து எடுத்த முடிவுகளின் படி தண்ணீர் தேவையைச் சரிசெய்ய என்னென்ன முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமோ, அந்த முயற்சிகள் எல்லாம் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன. அவர்கள் குறிப்பிட்ட ஏரிகள், குளங்கள், வாய்க்கால்கள் இவைகள் எல்லாம் தூர்வாரப்பட்டும் அங்கே தண்ணீர் தேங்குவதற்கு, போதுமான தண்ணீர் கிடைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டும், இவ்வளவும் படிப்படியாகச் செய்துங்கூட, இன்னும் பற்றாக்குறை இராமநாதபுரம் மாவட்டத்திலே இருப்பதை நான் உணருகின்றேன். அந்தப் பற்றாக்குறை இன்றைய ஒரு நிகழ்ச்சியால் நிச்சயமாக நிறைவேறிவிடும், அது முழுமை பெற்றுவிடும் என்று சொல்லமாட்டேன். தமிழகத்திலே இராமநாதபுரம் மாவட்டம் மாத்திரமல்ல, நான் நேற்றைக்கு முன்தினம் சட்டப்பேரவையிலே பேசும்போது கூட குறிப்பிட்டிருக்கிறேன். கிருஷ்ணகிரி, தருமபுரி மாவட்டங்களில் ஒகேனக்கல் திட்டம் என்ற ஒரு திட்டம் நிறைவேறினால்தான் அந்த மாவட்டங்களில் உள்ள குடிதண்ணீர் பற்றாக்குறை நீங்கும் என்பதை எடுத்துச் சொல்லி, அதற்கு ஜப்பான் நாட்டோடு இன்றைக்குத் தொடர்பு கொண்டு பேசிக் கொண்டிருக்கின்றோம். ஜப்பான் நாடு அதற்கான உதவியைச் செய்வதாகக் கூறியிருக்கிறது. அந்த உதவி கிடைக்காவிட்டால் நாமே அதற்கான பணத்தைத் திரட்டி, ஒகேனக்கல் திட்டத்தை நிறைவேற்றுவோம் என்று சொன்னேன் என்றால், தருமபுரி கிருஷ்ணகிரி போன்ற வறண்ட மாவட்டம்தான் இந்த இராமநாதபுரம் மாவட்டமும். எனவே இந்த ஒரு நாள் திட்டத்தில் எல்லாம் நீங்கிவிடும், எல்லோருக்கும் மகிழ்ச்சி வெள்ளம் பெருகிவிடும் என்று கருதி நான் என்னை ஏமாற்றிக் கொள்ளத் தயாராக இல்லை, உங்களையும் ஏமாற்ற விரும்பவில்லை.

நம்முடைய நண்பர் சட்டமன்ற உறுப்பினர் கே.ஆர். ராமசாமி அவர்கள் இங்கே எடுத்துக் காட்டியதைப் போலவும் மற்றும் காங்கிரஸ் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னதைப் போலவும் இன்னும் பல தேவைகள் இந்த மாவட்டத்திற்கு இருக்கின்றன. அந்தத் தேவைகளை எல்லாம் நிறைவு செய்ய உங்களுடைய அன்பும், ஆதரவும் என்றென்றும் தேவை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.



இந்தத் திட்டத்திற்கு தி.மு.க மீண்டும் ஆட்சிப் பொறுப்புக்கு 2006ஆம் ஆண்டு மே திங்கள் 13ஆம் நாள் வந்தது என்றால், ஐந்தாவது மாதத்தில் வந்தோம் என்றால், அடுத்த இரண்டு மாதங்களுக்குப் பிறகு நிதிநிலை அறிக்கை வெளியிடப்பட்டது. அந்த நிதிநிலை அறிக்கையில் இந்த தண்ணீர் திட்டத்தைச் சேர்க்க வேண்டுமென்று தம்பி தங்கவேலன் அவர்கள் என்னை வலியுறுத்தினார். அவருடைய வற்புறுத்தலுக்குத் துணையாக இருந்து நம்முடைய உள்ளாட்சித்துறை அமைச்சர் தம்பி மு.க. ஸ்டாலின், இங்கே தம்பி துரைமுருகன் எடுத்துக் காட்டியதைப்போல இதை எப்படியும் நிறைவேற்றியே தீர வேண்டுமென்று அவரும் வலியுறுத்தி, அதற்கான தொகை 616 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த 616 கோடி ரூபாய் தொகையில் நிறைவேறவிருக்கின்ற இந்தத் திட்டம் திருச்சி மாவட்டத்திலிருந்து குழாய் மூலமாகத் தண்ணீர் கொண்டு வரப்படவிருக்கின்றது. அந்தக் குழாய் ஏறத்தாழ 840 கிலோ மீட்டர் நீளம் உடையது. அந்தக் குழாய் புதுக்கோட்டை மாவட்டத்தில் விராலிமலை, ஆலவயல், பொன்னமராவதி வழியாகவும், சிவகங்கை மாவட்டத்தில்



திருப்பத்தூர், காளையார்கோவில், இளையான்குடி வழியாகவும், இராமநாதபுரம் மாவட்டத்தில் பரமக்குடிக்கு எடுத்துவரப்பட்டு, பாரமக்குடியிலிருந்து இராமநாதபுரம், இராமேஸ்வரத்திற்கு ஒரு வழியாகவும், பரமக்குடியிலிருந்து முதுகுளத்தூர் வழியாக சாயல்குடிக்கு மற்றொரு வழியாகவும் தண்ணீர் கொண்டு செல்லப்பட்டு இராமநாதபுரத்தின் பெரும்பாலான பகுதிகளுக்குக் குடிநீர் வழங்கப்படவிருக்கின்றது.

இந்தத் திட்டம் முடிவடைந்தபின் நாள் ஒன்றுக்கு, ஊரகப் பகுதிகளில் நபர் ஒருவருக்கு 40 லிட்டர் வீதமும், பேரூராட்சிப் பகுதிகளில் ஒரு நபருக்கு 70 லிட்டர் வீதமும், நகராட்சிப் பகுதிகளில் ஒரு நபருக்கு 90 லிட்டர் வீதமும் குடிதண்ணீர் கிடைக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த இராமநாதபுரம், சிவகங்கை, புதுக்கோட்டை ஆகிய இந்த மூன்று மாவட்டங்களிலும், இந்தத் திட்டத்தினால் பயன்படக்கூடிய மக்கள் ஏறத்தாழ 20 இலட்சம் பேர். இதற்காக ஆகின்ற செலவு 616 கோடி ரூபாய் என்பதையும் சொன்னேன். இந்தத் திட்டம், மூன்றாண்டு காலத்திற்குள்ளே முடிவடையும் என்று இங்கே அதிகாரிகள் எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். நான் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். மூன்றாண்டு என்று ஒரு குறியீடு வைத்தாலுங்கூட, இரண்டு ஆண்டுக் காலத்திலே இந்தத் திட்டத்தை முடித்தால் அதற்காக உங்களுக்காக ஒரு சிறப்புப் பரிசு நான் தரத் தயாராக இருக்கிறேன் என்பதையும் அதிகாரிகளுக்கும், இந்தத் துறையின் அமைச்சருக்கும் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இதுபோன்ற திட்டங்கள், மக்களுடைய திட்டங்கள், இங்கே பல திட்டங்களைப் பேசிய ஒவ்வொரு அமைச்சரும் எடுத்துச் சொன்னார்கள். தொகுப்புரையாற்றிய அம்மையார் கூட ஒவ்வொருவரையும் இங்கே பேசுவதற்கு அழைப்பதற்கு முன்பு என்னென்ன திட்டங்கள் இந்த எட்டு மாத காலத்தில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியால் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்பதைத் தொகுத்துச் சொன்னார்கள். இவைகளையும் பார்த்து மகிழ்ச்சி அடைகிறோம். அதே நேரத்தில் இந்தத் திட்டத்தினால் என்ன பயன் என்று கேட்பவர்களையும் பார்த்து ஆச்சரியமடைகிறோம். கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். எந்த நல்ல காரியத்தைச் செய்தாலும், அந்த நல்ல காரியத்தைப் பாராட்டுவதற்கு பல பேரும், இடித்துரைப்பதற்கு சில பேரும் இருக்கத்தான் செய்வார்கள். அப்படி இடித்துரைப்பவர்கள், அதைக் கேலி செய்பவர்கள், கிண்டல் செய்பவர்கள், நீ கொடுத்த அரிசியை நாங்கள் மாட்டுக்குத்தான் போடுகிறோம் என்று சொல்பவர்கள், அதைச் சாப்பிட்டு மாடுகள் எல்லாம் செத்துப் போகின்றன என்று சொல்பவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். நான் அதைப்பற்றியெல்லாம் கவலைப்படவில்லை. நான் போகின்ற வழி நல்ல வழி என்று எனக்குத் தெரிந்தால், அந்த வழி மக்களுக்குப் பயன்படுகின்ற வழி என்று நான் உணர்ந்தால், அந்த மக்களுக்கு பணியாற்றுவதுதான் மகேசன் பணி என்ற அந்த உணர்வோடு தொடர்ந்து அந்தப் பணியை நடத்திக் கொண்டிருக்கின்றேன். யார் என்ன சொன்னாலும், தெருவிலே போகின்ற ஒருவனைப் பார்த்து யார் யாரோ சத்தம் போடுவார்கள், பைத்தியக்காரன் கூட சத்தம் போடுவான், சிறு குழந்தைகள் கூட கல்லெடுத்து எறிவார்கள், நல்லவர்களாக இருந்தால், பாவம் சிறு குழந்தை என்று மன்னித்து விட்டுச் சென்று விடலாம். பைத்தியக்காரர்களாக இருந்தால், பாவம் பைத்தியம், அவன் மீது குற்றம் இல்லை என்று சொல்லி விட்டுச் சென்று விடலாம். கயவர்களாக இருந்தால், திரும்பிப் பார்த்து விட்டு என்னைப்போல இன்னொருவன் மக்களுக்கு நன்மை செய்ய வந்தால் அவனையும் கல்லெடுத்து அடி, அவன் உனக்குத் திரும்ப பரிசு தருவான் என்று சொல்லி விட்டுப் போவார்கள்.

*"இந்த 616 கோடி ரூபாய் தொகையில் நிறைவேறவிருக்கின்ற இந்தத் திட்டம் திருச்சி மாவட்டத்திலிருந்து குழாய் மூலமாகத் தண்ணீர் கொண்டு வரப்படவிருக்கின்றது. அந்தக் குழாய் ஏறத்தாழ 840 கிலோ மீட்டர் நீளம் உடையது. அந்தக் குழாய் புதுக்கோட்டை மாவட்டத்தில் விராலிமலை, ஆலவயல், பொன்னமராவதி வழியாகவும், சிவகங்கை மாவட்டத்தில் திருப்பத்தூர், காளையார்கோவில், இளையான்குடி வழியாகவும், இராமநாதபுரம் மாவட்டத்தில் பரமக்குடிக்கு எடுத்து வரப்பட்டு, பாரமக்குடியிலிருந்து இராமநாதபுரம், இராமேஸ்வரத்திற்கு ஒரு வழியாகவும், பரமக்குடியிலிருந்து முதுகுளத்தூர் வழியாக சாயல்குடிக்கு மற்றொரு வழியாகவும் தண்ணீர் கொண்டு செல்லப்பட்டு இராமநாதபுரத்தின் பெரும்பாலான பகுதிகளுக்குக் குடிநீர் வழங்கப்படவிருக்கின்றது."*

கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் சொல்லுவார். அவர் காரிலே பயணம் செய்த போது ஒரு பையன் ஒரு கல்லை எடுத்து காரை அடித்தான். காரிலிருந்து என்.எஸ்.கே. இறங்கினார். அந்தப் பையனை அருகே அழைத்தார். இந்தா ஐந்து ரூபாய் என்று அவனுக்குக் கொடுத்தார். பக்கத்திலே இருந்தவர், என்னய்யா, பைத்தியமாக இருக்கிறீர், அவன் கல் எடுத்து எறிகிறான், அவனுக்கு ஐந்து ரூபாய் கொடுக்கிறீர்களே என்று கேட்டார். அதற்கு என்.எஸ்.கே. அவர்கள், "இப்படிக் கொடுத்தால்தான், அவன் அடுத்து

வருகின்ற காரிலும் பத்து ரூபாய் கிடைக்கும் என்று நினைத்து கல்லெடுத்து அடிப்பான், அப்போது அந்தக் காரிலே வருகிறவன் அந்தச் சிறுவனைப் பார்த்துக் கொள்வான் என்று சொல்வார். அது மாதிரி கல்லெடுத்து அடிப்பவர்களுக்கு ஐந்து ரூபாய் கொடுத்தாலும், நாம் அவர்களைத் திரும்பி அடிக்காவிட்டாலும், இன்னொருவன் அடிக்கக்காத்துக் கொண்டிருப்பான். அதைப்போல நம்முடைய திட்டங்களை பரிகசிப்பவர்கள், நம்முடைய திட்டங்களைக் குறை கூறுபவர்கள், நம்முடைய அரசை வீழ்த்த வேண்டுமென்று கருதுகிறவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை கல்லெடுத்து அடிப்பவர்களைப் போல நினைத்து அவர்களுக்கு நீங்கள் ஐந்து ரூபாய் கொடுத்து விட்டு போங்கள், பின்னால் வருகிறவர்கள் பார்த்துக் கொள்வார்கள் என்று மாத்திரம் உங்களுக்குச் சொல்லி, அப்படி வருகிறவர்கள் வேறு யாருமல்ல, நீங்கள்தான் தமிழ்நாட்டுப் பொதுமக்கள்தான், தமிழ்நாட்டு மக்கள்தான் என்ற அந்த மன உறுதியோடு இந்த நல்ல விழாவிலே கலந்துகொண்டதற்காக பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

* * *

# செய்தித்துறை அலுவலகங்களுக்கு வாகனங்கள்



சென்னை இராஜாஜி மண்டபத்தில் 18.1.2007 அன்று மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள், தஞ்சாவூர், திருவாரூர், விருதுநகர், பெரம்பலூர் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கு 'டெம்போ ஜுடோ' ஈப்புகளையும் தலைமைச் செயலகம், மதுரை, கோவை மாவட்ட செய்தித்துறை அலுவலங்களின் உபயோகத்திற்கு 'பஜாஜ்' மோட்டார் சைக்கிள்களையும் வழங்கினார்கள்.

இவ்விழாவில், தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை செயலாளர் திரு. து. இராசேந்திரன், இ.ஆ.ப, செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு. சி.கோசலராமன், இ.ஆ.ப., இணை இயக்குநர் (மக்கள் தொடர்பு) திரு.கா. சம்சுதீன், துணை இயக்குநர் (செய்தி) திரு.த.இளங்கோவன் ஆகியோர் பங்கேற்றனர்.

மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் திரு. துரை ராஜ்குமார், (விருதுநகர்), திரு. க. குமாரவேலு, (தஞ்சாவூர்), திரு. பேரின்பநாயகம் (திருவாரூர்), திரு.டி.மருதபிள்ளை (பெரம்பலூர்) ஆகியோர் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து ஈப்புகளுக்குரிய பதிவுச் சான்றிதழ், காப்பீட்டுச் சான்றிதழ் ஆகியவைகளைப் பெற்றுக் கொண்டார்கள். ஓட்டுநர்கள், ஈப்புகளுக்குரிய சாவிகளைப் பெற்றுக் கொண்டார்கள்.

மதுரை மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு. எஸ்.எஸ். சரவணன் தலைமைச் செயலக செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு. தி. அம்பலவாணன், கோயம்புத்தூர் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.கே. கண்ணதாசன் ஆகியோர் மோட்டார் சைக்கிள்களுக்குரிய சான்றிதழ்களைப் பெற்றுக்கொண்டனர். ஓட்டுநர்கள் வாகன சாவிகளைப் பெற்றுக் கொண்டார்கள்.

* * *



# புத்த நெறிகளைப் பரப்ப தமிழக அரசு நடவடிக்கை எடுக்கும்

## புத்தர் மகாபரிநிர்வாணம் அடைந்த 2550ஆம் ஆண்டு நிறைவு தொடக்கவிழாவில் மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் உரை

புத்தர், மகாபரிநிர்வாணம் அடைந்து 2,550 ஆம் ஆண்டு நிறைவடைந்ததின் துவக்க விழா, தமிழக அரசின் சார்பில் கலைவாணர் அரங்கில் 1.2.2007 அன்று சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. விழாவிற்கு வருகை புரிந்தவர்களை வரவேற்று மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் பேசுகையில் "புத்தபிரான் மகாபரிநிர்வாணம் அடைந்த 2550ஆம் ஆண்டு நிறைவு விழாவை சிறப்பாக நாடெங்கும் கொண்டாட மைய அரசு முடிவெடுத்துள்ளது. அதன் தொடர்ச்சியாக, தமிழக அரசு புத்தர் மகாபரிநிர்வாணம் அடைந்த 2550ஆம் ஆண்டின் நிறைவு விழாவினை சிறப்பாகக் கொண்டாடி வருகிறது. இந்த ஆண்டு முழுவதும் புத்தர் விழாக்களை கொண்டாட, நம்முடைய மக்கள்நல அரசு, மாண்புமிகு நிதியமைச்சர் இனமானப் பேராசிரியர் அவர்களின் தலைமையில், சான்றோர்கள் அடங்கிய குழு ஒன்றை அமைத்து, இன்றைக்கு தொடக்க விழா நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்திய அரசின் சுற்றுலாத்துறை இணை இயக்குநர் அவர்கள், தமிழகத்தில் மட்டும்தான் வெகுசிறப்பாக புத்தருக்கு விழா எடுக்கப்படுகிறது என்று தெரிவித்திருக்கிறார் என்பதையும் இங்கே சுட்டிக்காட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

சடங்கு சம்பிராதயங்களையும், மூடப்பழக்க வழக்கங்களையும் குழிதோண்டிப் புதைத்திட்ட பகுத்தறிவு சிந்தனையாளர் புத்தர், தான் வாழ்ந்த காலத்தையும் வென்று வாழ்ந்த மாமேதையாவார். மனித சமுதாயத்தை உய்விக்கவந்த உத்தமர். புத்தர் போதித்த தம்மத்தில் பிரார்த்தனைக்கோ, புனிதயாத்திரைக்கோ, சடங்குகளுக்கோ, பூசைக்கோ, தொழுகைக்கோ, உயிர் பலிகளுக்கோ இடமேயில்லை. ஒழுக்கமே தம்மத்தின் உயிர் நாடியாகும். புத்தநெறியில் சாதிக்கு இடமேயில்லை. "புத்தர்

[illegible]

[illegible]

# புத்தரின் தத்துவம் உலகிற்கே ஒளிதரும் ஞானசூரியன்!





இவ்விழாவிற்கென மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அனுப்பிய வாழ்த்துச் செய்தி.

இன்று (1.2.2007) முழுமதி நாள். "திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்" என்று நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் முழுநிலவை வாழ்த்துகிறது. பூம்புகாரில் இந்திர விழா நடந்தது சித்திரை முழுமதி நாளில்தான். நிறைமதியாளரான புத்தரின் வாழ்க்கையில் முழுமதிக்குப் பெரும் பங்குண்டு. சித்தார்த்தராகப் பிறந்தது, ஞானம் பெற்றுப் புத்தரானது, மண்ணுலகிலிருந்து மறைந்தது ஆகிய புத்தர் வாழ்க்கையின் முக்கிய நிகழ்ச்சிகள் யாவும் முழுமதி நாளிலே நிகழ்ந்து உள்ளன. ஒரு முழுமதி நாளில் புத்தர் விழாவைத் தமிழ்நாடு அரசு கொண்டாடத் தொடங்கியிருக்கிறது. சித்தார்த்தர் சாதி, மத, மேடு பள்ளங்களைக் கடக்க புத்தராக மாற்றம் பெற வேண்டியிருந்தது. புத்த சங்கத்தில் சாதி வேறுபாடு பார்ப்பதில்லை. ஆறுகள் கடலில் கலந்தவுடன் தம் பெயர்களை இழப்பது போல் சங்கத்தில் சேர்ப்பவர்கள் சாதியையும் பெயரையும் இழந்து விடுவதாகப் புத்தர் கூறினார்.

"ஓடும் உதிரத்தில் – வடிந்து
ஒழுகும் கண்ணீரில்
தேடிப் பார்த்தாலும் – சாதி
தெரிவதுண்டோ ?"

என்று ஆசிய சோதியைக் கவிமணி வெளிப்படுத்துகிறார்.

யாரும் நாட்டை விட்டுப் போகச் சொல்லவில்லை. ஆனாலும், சித்தார்த்தர் அரண்மனையை விட்டு வெளியேறினார். மனைவியையும், மகனையும் பிரிந்து நடந்தார். உலக மக்களின் துன்பத்தைக் கண்டு கண்ணீர் விட்டார். துன்பத்திற்கான காரணத்தையும், போக்கும் வழி களையும் கண்டறிந்தார். தத்துவம் தான் குரு என்றார். நீங்களே தான் முயன்று விடுதலை தேடிக் கொள்ள வேண்டும் என்றார். சுகபோக வாழ்வு கூடாது என்று கூறுவது போலவே, கொடிய விரதங்களைக் கடை பிடிப்பதும் தேவையில்லை என்றார். நம்முடைய செயல்களிலிருந்து நாம் தப்பவே முடியாது என்றார். துன்பத்தை ஒழிக்கத் தூய வாழ்க்கை நடத்துங்கள் என்றார். புத்தர் எதையும் மறைவான தத்துவம் என்று கூறவில்லை. தாம் கூறும் கோட்பாடுகளும், விதிகளும் உலக முழுவதற்கும் சொந்தம் என்று கூறினார். மக்களை அறியாதவர் என்று எண்ணினாரேயன்றிக் கெட்டவர்கள் என்று ஒருபோதும் புத்தர் எண்ணவில்லை. தேவதத்தன் என்பவன் அவரை நீக்கிவிட்டு, தானே புத்த சங்கத்தின் தலைவனாகச் சதி செய்தான். ஆனால், புத்தர் அவனுக்கு முழு மன்னிப்பு அளித்தார். பெண்களும் புனித நிலை அடைய முடியும் என்றார். புத்தர், எல்லா மக்களும் எளிதில் கையாளக் கூடிய அறநெறியையே வகுத்தார். அன்பே இதயத்துக்கு விடுதலை அளிப்பது, அதுவே ஒளி என்றார். தாய் தம் உயிரையும் பொருட்படுத்தாமல் தன் குழந்தையைக் காப்பாற்றுவது போல் எல்லா உயிர்களிடத்தும் எல்லையற்ற அன்பு காட்டக் கற்பித்தார். புத்தர் எக்காலத்துக்கும் சொந்தமானவராக இருக்கிறார். ஆசிய சோதியாக மட்டுமின்றி உலகிற்கே ஒளி தரும் ஞானசூரியனாகப் புத்தரின் தத்துவம் திகழ்கிறது. அவரது வாழ்க்கையும், தத்துவமும் வையகம் பயனுற வாழ்வதற்கு வழி காட்டு கின்றன. புத்தரின் கொள்கைகளை வளரும் தலைமுறையும், வரும் தலைமுறையும் அறிந்திட அரசு, விழா எடுத்துக் கொண்டாடுகிறது. விழா சிறப்புற அமைந்திட வாழ்த்துகிறேன்.

⌘ ⌘ ⌘

பிறப்பின் அடிப்படையில் பேதம் கற்பிக்கும் வர்ணாஸ்ரம தர்மத்திற்கு எதிராக, 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்று அய்யன் திருவள்ளுவர் கூறியதைப்போல, புத்தரின் கொள்கைதான் நமக்கு படைக்கலனாக விளங்குகிறது. புத்தர் சொன்ன சொல் ஒவ்வொன்றும் மனிதநேயத்தை வலியுறுத்தும் தன்மை வாய்ந்ததாகும்". என்று குறிப்பிட்டார்.

விழாவிற்குத் தலைமை தாங்கிய மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் க.அன்பழகன் அவர்கள் விழாப்பேருரையாற்றுகையில்,






"புத்தர் வாழ்ந்த காலத்தில், அவர் பேசிய காலத்தைவிட பேசாமல் இருந்த காலம் அதிகம். மிகவும் ஆழமாக சிந்தித்ததால் மக்களை நல்வழிப் படுத்தும் கருத்துக்கள் தோன்றின. பௌத்தம் ஒரு மதமல்ல. அது மக்களை நல் வழிப்படுத்தும் நெறி.

இந்தியாவில் வைதீக அமைப்பு பலமாக இருந்ததால் புத்தர் கொள்கைகள் பரவ முடிய வில்லை. நம்மை சிந்திக்கச் செய்து மனிதனாக மாற்றும் நோக்கம் புத்தரின் கொள்கையில் உள்ளது. புத்தரின் கொள்கைகளுடன் வள்ளுவரின் சிந்தனைகள் ஒத்துள்ளன. சமுதாயத்தில் ஒடுக்கப் பட்ட மக்களை உய்விக்க வந்ததே பௌத்தம். அது மதமாக இருந்திருந்தால் நிலைத்திருக்கும். ஆனால், பௌத்தம் நெறியாக இருந்ததால், அது மற்ற மதங்களுடன் போட்டியிடாமல் ஒதுங்கிக் கொண்டது. எல்லோருக்கும் நன்மை செய் என்பது போன்ற ஒழுக்க நெறிகளை பௌத்தம் போதித்தது. அதனால், பௌத்தத்தை வைதீகம் எதிர்த்தது. 2,500 ஆண்டுகளுக்கு முன்பு நாட்டில் திராவிடக் கலாச்சாரம் பரவியிருந்தது. பௌத்தம், சங்கம் என்ற அமைப்பை உருவாக்கியது. மதத்தை அல்ல. ஆனால், வைதீகம் அமைப்பு ரீதியாக வலுவாக இருந்தது. ஏதாவது ஒரு வகையில் வர்ணாசிரம நம்பிக்கையை மக்கள் ஆதரிக்கும் வரை, வைதீகம் எதையும் வளரவோ, வாழவோ விடாது. இதனால்தான் பௌத்தம் நம் நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்டது.

காந்தியடிகளின் அகிம்சை தத்துவத்தில் புத்தர் கொள்கையின் சாயல் உள்ளது. மனிதத்தன்மையை நிறைவாகப்பெற புத்தரின் கொள்கையை, சிந்தனைகளை நாம் மனதில் கொள்ளவேண்டும். புத்தரின் நெறியை தமிழகம் முழுவதும் பரப்புவதற்காக அரசியல் கட்சிகளின் கருத்துகளை அறிந்து பல நிகழ்ச்சிகளை நடத்திட தொடர்ந்து நடவடிக்கை தமிழக அரசால் எடுக்கப்படும்" என்று மாண்புமிகு நிதித்துறை அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் பேசினார்.

விழாவில் மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி. ஆ. தமிழரசி ஆகியோர் பங்கேற்றனர். மாண்புமிகு நீதியரசர் திரு.பி.ஆர். கோகுலகிருஷ்ணன் அவர்கள் தொடக்கவுரையாற்றும்போது, "புத்தர் போதனைகளை ஆராய்ச்சிப் பாடமாக வைக்க வேண்டும். புத்தருக்கு சென்னையில் சிலையும் பெரிய மண்டபமும் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.

சட்டமன்ற உறுப்பினர் திரு.டி. சுதர்சனம் பேசும்போது, "புத்தரின் பொன்மொழிகளை குழந்தைகளுக்கும் எளிதாகப் புரியும் வகையில் 1 முதல் 5ஆம் வகுப்புகளில் பாடமாக வைக்க வேண்டும்" என்றார். சட்டமன்ற உறுப்பினர் திரு.கோ.க. மணி, "புத்தர் கொள்கைகளை பள்ளிக்கூடங்களில் தலையாய பாடமாகவும் ஆராய்ச்சிக் கல்வியாகவும் வைக்க வேண்டும்" என்று கூறினார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் திரு. இரா. நல்லக்கண்ணு, "அன்பைப் போதித்த புத்தரின் சீடர்களாக எண்ணிக் கொள்ளும் புத்த பிட்சுக்கள், இலங்கையில் போர் நிறுத்தத்தை விரும்பாமல் தமிழர்களுக்கு




புத்தர் மகாபரிநிர்வாணம் அடைந்து 2550ஆம் ஆண்டு நிறைவடைந்ததை, தமிழக அரசு இவ்வாண்டு முழுவதும் கொண்டாடத் தீர்மானித்துள்ளது. அதன் தொடர்ச்சியாக மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி அவர்களும், தமிழ்வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறைச் செயலாளர் திரு. து.இராசேந்திரன் இ.ஆ.ப., அவர்களும், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர், திரு. சி. கோசலராமன் இ.ஆ.ப., அவர்களும் வடஇந்தியாவில் புத்தகயா, நாலந்தா, இராஜ்கிர், சாரநாத், குஷி நகர் போன்ற புத்தரின் வாழ்க்கையில் தொடர்புடைய முக்கிய இடங்களை நேரில் பார்வையிட்டனர்.

எதிரான சண்டை தொடர வேண்டும் என்கிறார்கள்'' என வருத்தம் தெரிவித்தார்.

திராவிடர் கழகத் தலைவர் திரு. கி. வீரமணி பேசும்போது, "அறிவைத் தவிர வேறு எதையும் உரைகல்லாகக் கொள்ளாதே என்ற ஒரு மாபெரும் உண்மையை, அறிவார்ந்த கருத்தை எடுத்துரைத்த அன்றைய பகுத்தறிவாளர் புத்தர். இந்த மண்ணிலே 'புத்தம்' மீண்டும் புத்துயிர் பெற வேண்டும். 'புத்தம்' என்பது ஒரு மாமருந்து. அது ஒரு மதம் அல்ல. அது ஒரு நெறி. இன்றைக்கு மக்களுக்குத் தேவையான ஒன்று'' என்று குறிப்பிட்டார்.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சி பொதுச் செயலாளர் திரு. தொல் திருமாவளவன் பேசியபோது, "அம்பேத்கருக்கு மணிமண்டபம் அமைத்த இடத்துக்கு அருகே உள்ள நிலத்தை பவுத்தர்கள் கூடும் இடமாக அரசு ஏற்படுத்தித் தர வேண்டும்'' என்று கோரிக்கை வைத்தார்.

கவிக்கோ அப்துல்ரகுமான், "புத்தரின் கருத்துக்கள் கொண்ட 'ஜென்' தத்துவத்தின் அடிப்படைக் கூறுகள் தமிழகத்தில் இருந்தே சென்றிருக்கின்றன என்ற வரலாற்றுச் செய்தி நமக்கு பெருமை தரும் ஒன்றாகும்'' என்று குறிப்பிட்டார். பேராசிரியர் பெரியார்தாசன் பேசும்போது, "புத்தருக்கு சென்னையில் சிலையமைக்க வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார். வழக்குரைஞர் அ.அருள்மொழி, "2500 ஆண்டுகளுக்கு முன் தோன்றிய பகுத்தறிவாளரான புத்தர் தனிமனித ஒழுக்கத்தை வலியுறுத்தி பேசினார்'' என்று குறிப்பிட்டார்.

இந்திய தொல்லியல்துறை கண்காணிப்பாளர் திருமதி. சத்யபாமா, பேசும்போது "இந்தியாவில் தமிழகத்தில்தான் புத்தர் சிலைகள் அதிகம் கிடைக்கின்றன. அவை சிதிலமடையாமல் இருப்பதற்காக மேலும் பல நடவடிக்கைகளை எடுத்து அவற்றை சிறப்பாகப் பராமரிப்பதற்காக தமிழக அரசு முயற்சி மேற்கொள்ள வேண்டும்'' என்று கேட்டுக்கொண்டார்.

நிறைவாக தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை செயலாளர் திரு. து. இராசேந்திரன் இ.ஆ.ப., நன்றியுரையாற்றினார். நாட்டுப்பண் ஒலிக்க விழா இனிதே நிறைவடைந்தது.

நிகழ்ச்சித் தொகுப்பு : தி.பெ.சா.








தமிழரசு
R.N.I: No.21446/70-Regn.No.TN/ARD/48/06-0[illegible]
TN/PMG(CCR) WPP-518/06-08



# தமிழரசு

செய்தி மக்கள்தொடர்புத் துறையின் வெளியீடு

மார்ச் 2007
விலை ரூ.10/-








# தமிழரசு

செய்தி-மக்கள்தொடர்புத் துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2038
மாசி - பங்குனி / மார்ச் 2007
மலர் : 38 இதழ் : 9



**ஆசிரியர் குழு**

ஆசிரியர் மற்றும் வெளியிடுபவர் :

**சி.கோசலராமன், இ.ஆ.ப.,**
இயக்குநர், செய்தி-மக்கள்தொடர்புத் துறை

நிருவாக ஆசிரியர்

கே.ட்டி. புகழேந்தி
துணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மை பொறுப்பாசிரியர்

மு. ஸ்ரீநாகேஷ்
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்கள்

ந. இளங்கோ
எஸ்.பி.எழிலழகன்
கி. சாந்தி

உதவி ஆசிரியர்கள்

ஆ. ராஜா
க. இராஜராஜேஸ்வரி
ஜ. இந்திராணி
இரா. சுரேஷ்
வீ.இரா. நவநீதகிருஷ்ணகுமார்

நிருபர்கள்

கோ. சண்முகம்
மாய. குமரேசன்

[illegible]

தி.பெரியார் [illegible]

[illegible]

வி.ராதாகிருஷ்ணன்

[illegible]

பி.ச. [illegible]
அ. மதன்



சென்னை - தமிழரசு அச்சகத்தில்
அச்சிடப்பட்டது.



தமிழரசு அலுவலகம்,
ஓமந்தூரார் அரசினர் தோட்டம்,
அண்ணாசாலை, சென்னை-600 002.
தொலைபேசி : 25368926/25364906
தொலைநகல் : 25364906
மின் அஞ்சல் : tamilarasu@tn.gov.in
இணையதளம் : www.tn.gov.in


## இந்த இதழில்...


❋ மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மகளிர் தின வாழ்த்துச் செய்தி ........ 2

❋ நீதிமன்றத்திற்கு எல்லா வசதி வாய்ப்புகளும் ஏற்படுத்தித் தரப்படும் - மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ........ 20

❋ சாதி வேறுபாடுகளை அகற்றிட இடஒதுக்கீட்டு முறையை நடைமுறைப்படுத்தி வருகிறோம் - மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ........ 32

❋ தமிழர் பண்பாட்டைக் காக்கும் அமைப்புகளுக்கு தமிழ்ப் பெருமக்கள் ஆதரவு தரவேண்டும் - மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ........ 42

❋ சமூக நீதி காத்த சான்றோர் -
காந்தி ........ 46
பெரியார் ........ 49

❋ சிதறல்கள் - சிறுகதை ........ 52

❋ ரூபாய் 4 ஆயிரம் கோடியில் மோட்டார் வாகனத்திட்டம் ........ 59

❋ தமிழ்நாட்டை தொழில் வளமிக்க மாநிலமாக உருவாக்குவோம் - மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ........ 61




நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும் தடிந்தெழிலி
தான்நல்கா தாகி விடின். *குறள் : 17*

ஆவியான கடல்நீர் மேகமாகி அந்தக் கடலில் மழையாகப் பெய்தால்தான் கடல்கூட வற்றாமல் இருக்கும். மனித சமுதாயத்திலிருந்து புகழுடன் உயர்ந்தவர்களும் அந்தச் சமுதாயத்திற்கே பயன்பட்டால்தான் அந்தச் சமுதாயம் வாழும்.

**கலைஞர்** திருக்குறள் உரையிலிருந்து...

முதலாம் பக்க அட்டை : சென்னை சங்கமம் (20-02-2007)

இரண்டாம் பக்க அட்டை : தஞ்சாவூரில் நடைபெற்ற தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் - விவசாயிகள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத்திட்ட தொடக்க விழா (22-02-2007)

நான்காம் பக்க அட்டை : கோவை பாரதியார் பல்கலைக்கழக வெள்ளிவிழா(24-02-2007)



# மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உலக மகளிர் தின வாழ்த்துச் செய்தி

உலக மகளிர் நாள் விழா மார்ச்சுத் திங்கள் 8ஆம் நாள் நமது இந்தியத் திருநாடு உட்பட உலகெங்கும் எழுச்சியுடன் கொண்டாடப்படுகிறது.

தமிழகத்தைப் பொறுத்தவரை தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோர் ஏற்படுத்திய சமுதாய மேம்பாட்டு உணர்வுகளுக்கு உரமூட்டும் வகையில் இந்த அரசு மகளிர் மேம்பாட்டிற்காகப் பல்வேறு திட்டங்களை உருவாக்கி வரலாறு படைத்துள்ளது.

இந்தியாவிலேயே முதல் முறையாக அரசுப் பணிகளில் பெண்களுக்கு 30 விழுக்காடு இட ஒதுக்கீடு, பெண்களுக்குச் சம சொத்துரிமை வழங்கிடத் தனிச் சட்டம்; உள்ளாட்சி அமைப்புகளில் மகளிர்க்கு 33 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்கி ஏறத்தாழ 44,143 மகளிர் பல்வேறு பதவிகளில் அமர்ந்து ஜனநாயகக் கடமையாற்றிட வாய்ப்பளித்துள்ளமை ஆகியவற்றுடன் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டம், ஈ.வெ.ரா. நாகம்மையார் நினைவு மகளிர் இலவசப் பட்டப் படிப்புத் திட்டம், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு நிதியுதவித் திட்டம், அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமண நிதியுதவித் திட்டம், சிவகாமி அம்மையார் நினைவு பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம், சத்தியா அம்மையார் நினைவு குழந்தைகள் காப்பகங்கள் திட்டம், டாக்டர் சத்தியவாணிமுத்து அம்மையார் நினைவு இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டம் முதலிய பல சமூக நலத்திட்டங்களைச் செயல்படுத்திப் பெண்கள் முன்னேற்றத்திற்குத் தேவையான பல உதவிகளும், சலுகைகளும் தொடர்ந்து அளிக்கப்பட்டு வருகின்றன.

தாய்மார்கள் மனங்குளிர தரமான அரிசி கிலோ 2 ரூபாய்; மகளிர் மனம் மகிழ்ந்து பொது அறிவு பெற்றிட இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள்; மகளிர் நலன் கருதி எரிவாயு இணைப்புடன் கூடிய இலவச அடுப்புகள்; கர்ப்பிணிப் பெண்களுக்கு மாதம் 1,000 ரூபாய் வீதம் 6 மாதங்களுக்கு 6 ஆயிரம் ரூபாய் எனப் பல்வேறு புதிய திட்டங்களும் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளன.

1989ஆம் ஆண்டு மே திங்களில் திமுக அரசு தருமபுரியில் தொடங்கிய மகளிர் திட்டத்தின் மூலம் இன்று தமிழகத்தில் 3 இலட்சத்து 32 ஆயிரத்து 148 மகளிர் சுயஉதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டு அவைகளில் 53 இலட்சத்து 64 ஆயிரத்து 743 ஏழை மகளிர் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டு, ஏழை எளிய மகளிர் அனைவரும் தங்கள் வாழ்க்கையில் முன்னேற வலுவான அடித்தளங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தேர்தல் அறிக்கையில் தெரிவித்தபடி மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் பயிற்சிக்கான தினப்படி 45 ரூபாயாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

சிறந்த மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கும், கிராம ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கும் 'மணிமேகலை விருது' வழங்கிச் சிறப்பித்து ஊக்கமளிக்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்படுகிறது. நகர்ப்புற சுயஉதவிக் குழுக்களுக்குச் சுழல்நிதி தலா 10 ஆயிரம் ரூபாய் மானியமாக வழங்கிடவும், பஞ்சாயத்து அளவிலான சுயஉதவிக் குழுக்களின் கூட்டமைப்புகளை வலுப்படுத்திட 10 ஆயிரம் ரூபாய் ஆதார நிதியுதவி அளித்திடவும் வகை செய்யப்பட்டுள்ளது. மகளிர் சமுதாயம் எழுச்சி பெற தமிழக அரசு இப்படிப் பல்வேறு திட்டங்களை ஆற்றிவரும் வேளையில் கொண்டாடப்படும் உலக மகளிர் நாள் விழா சிறப்பாக நடைபெறவும், அரசின் பல்வேறு திட்டங்களின் மூலம் பயன்பெறும் வழிமுறைகளை மகளிர் சமுதாயம் அறிந்து, விழிப்புணர்வு பெற்று முன்னேறவும் என் உளமார்ந்த நல்வாழ்த்துகள் உரித்தாகுக.

★ ★ ★





# ஆணுக்குப் பெண் சமம் என்ற உரிமையை நிலைநாட்ட எங்களுடைய குரல் என்றும் ஒலிக்கும்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர்**

**கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்**

**டி.எம்.ஐ.**

**சர்வதேச மகளிர் தின விழாவில்**

**ஆற்றிய உரை (8.03.2007)**

உங்கள் அனைவரையும் இந்த இனிய மாலைப் பொழுதில் சந்திப்பதிலும், சில கருத்துக்களை இந்த விழாவிலே எடுத்துரைப்பதிலும் நான் மிகுந்த மகிழ்ச்சியும் பெருமையும் கொள்கின்றேன். பொதுவாக கிராமப்புறங்களில் பழமைவாதிகள் ஏன் படித்தறிந்த பண்டிதர்கள் கூட சொல்வதுண்டு. அவ்வையாரே பெண் பேச்சைக் கேட்கக் கூடாது என்று சொல்லியிருக்கிறார் என்று அதற்கு அவர்கள் காட்டுகின்ற அவ்வையின் பாடல் "தையல் சொல் கேளேல்" – தையல் என்றால் பெண், தையல் சொல் கேளேல் என்றால் தையலுடைய பேச்சைக் கேட்கக் கூடாதென்று பெண் புலவர் அவ்வையாரே சொல்லியிருக்கிறார் என்று சில பண்டித மணிகள் கூடச் சொல்ல நான் கேட்டிருக்கிறேன். ஆனால் அந்தப் பாலப் பருவத்திலேயே நான் அவர்களுக்கு அளித்த பதில் – தையல் சொல் கேளேல் என்பதை நீங்கள் நிதானித்து பொருள் கொள்ள வேண்டும் என்று சொல்வேன். தையல் என்றால் பெண், சொல் என்றால்



சொல்லை, கேள் – கேட்டு, ஏல் – ஏற்று நட தையல் சொல் கேள் ஏல் என்று தான் பொருள் கொள்ள வேண்டுமே அல்லாமல், கேட்காதே என்று இல்லை என்று நான் அப்போதே சொல்வேன்.

அதிலிருந்து இன்று உங்களுடைய விழாவிற்கு வந்ததற்காக அல்ல – இளம் பருவத்திலிருந்தே பெண்ணுரிமை, பெண்களுடைய அடிமைத்தனம் அகலுவதற்குப் பாடுபட்டு வருகிறவன், பணியாற்றி வருகிறவன், போராடி வருகிறவன் என்ற முறையில் இன்று உலகளவில் நடைபெறுகின்ற மகளிர் தின விழாவிலே இந்த மாபெரும் விழாவிலே கலந்துகொள்வதில் மிகுந்த பெருமையடைகிறேன்.

நான் நீண்ட நேரம் இங்கே உரையாற்ற வேண்டுமென்று கருதவில்லை. காரணம் பெண் அடிமைத்தனம் வீழ்வதற்கும், பெண்கள் உரிமைப் போரில் வெல்வதற்கும் நடைபெறுகின்ற கிளர்ச்சி, எழுச்சி – இவைகள் உலகத்திலே எங்கோ ஒரு பகுதியிலே மாத்திரமல்ல, அங்கிங்கெனாதபடி எங்கெங்கும் நிரம்பியிருக்கின்ற காலக் கட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

நாளைய தினம் கூட திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் மகளிர் அணியின் பேரணி ஒன்று நடைபெறுகிறது. எதற்காக என்றால், நாடாளுமன்றத்தில், சட்டமன்றத்தில் 33 சதவிகிதம் பெண்களுக்கு ஒதுக்கப்பட வேண்டும் என்ற அந்தச் சட்டம் அங்கே நிறைவேற்றப்பட வேண்டும் என்பதை மத்திய அரசுக்கு வலியுறுத்துவதற்காக நடைபெறுகிறது. கடந்த ஓராண்டு காலமாக தொடர்ந்து தமிழகத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது, இத்தகைய பேரணிகள். இந்த ஆண்டு நாம் நடத்துகின்ற இந்த உலக மகளிர் தின விழா, இதனுடைய வெற்றியாக, இதனுடைய விளைவாக விரைவில் நம்முடைய இந்தியப் பேரரசு, அந்தப் பேரரசை வழி நடத்துகின்ற திருமதி.சோனியா காந்தி அவர்கள், அவர்களுடைய தலைமையில் காங்கிரஸ் கட்சி இயங்குகின்ற இந்தக் காலக்கட்டத்திலேயே அந்த வெற்றிச் செய்தியை அகில உலகத்திற்கும் பெண்களுக்காக வழங்குவார் என்று நம்புகிறேன், எதிர்பார்க்கின்றேன்.

இங்கே நீங்கள் எழுப்புகின்ற கையொலியை அந்தத் தீர்மானமாக அவர்களுடைய காதுகளிலே ஒலிக்கும் என்று நான் எண்ணுகிறேன். ஒலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நான் பெண்களுடைய புகழை, பெண்களுடைய வீரத்தை, பெண்களுடைய தன்மான உரிமையை, பெண்களுடைய உரிமை முழக்கத்தை, பெண்களுடைய நாட்டுப்பற்றை இன்று நேற்றல்ல – நான் முதலிலேயே உங்களுக்குச் சொன்னேன் – 1945ஆம் ஆண்டு – இங்கே பேசப்பட்டதே தந்தை பெரியார் அவர்களைப் பற்றி – பெரியாரும், பாரதியாரும் எப்படியெல்லாம் பெண்களுக்காக குரல் கொடுத்தார்கள், முழங்கினார்கள் என்று – சான்றுகள் தேடி, குறிப்பாக சங்க இலக்கியத்திலிருந்து ஒரு கவிதையை எளிய நடையில் எழுதினேன். அந்த இலக்கிய செய்யுளை அப்படியே சொன்னால் யாருக்கும் புரியாது. சொல்லுகின்ற எனக்கே கூடப் புரியாது. அவ்வளவு கடினமான நடையில் அந்தப் பாடல் இயற்றப்பட்டிருக்கின்றது.

நரம்பெழுந் துலறிய நிரம்பா மென்தோள்
முளரி மருங்கின் முதியோள் சிறுவன்
படையழிந்து மாறினன் என்றுபலர் கூற
மண்டமர்க் குடைந்தன னாயின் உண்டவென்
முலையறுத் திடுவென் யானெனச் சினைஇக்
கொண்ட வாளொடு படுபிணம் பெயராச்
செங்களந் துழவுவோள் சிதைந்துவே றாகிய
படுமகன் கிடக்கை காணூஉ
ஈன்ற ஞான்றினும் பெரிதுவந் தனளே.

*– (காக்கைப் பாடினியார் நச்செள்ளையார்)*

இது சங்க இலக்கியம். புறநானூற்றில் காக்கைப் பாடினியார் நச்செள்ளையார் என்ற பெண் புலவர் பாடியது. இதை நான் 1945ஆம் ஆண்டு என்னுடைய 21ஆம் வயதிலேயே "குடியரசு" அலுவலகத்தில் எளிய நடையில் கவிதையாக எழுதினேன். அதை இந்தப் பெண்கள் நிறைந்த விழாவில் பெண்கள் உரிமை நாளில் நினைவூட்டுவது பொருத்தமாக இருக்குமென்று கருதுகிறேன். எளிய நடையில் அந்தக் கடினமான கவிதையை மொழி பெயர்த்தேன் என்று கூடச் சொல்லலாம்.

"குடிசைதான்! ஒரு புறத்தில்
கூரிய வேல் வாள்
வரிசையாய் அமைந்திருக்கும் – வையத்தைப்
பிடிப்பதற்கும் வெம்பகை முடிப்பதற்கும்
வடித்து வைத்த படைக்கலம் போல் மின்னும்; மிளிரும்
புலியின் குகையினிலே அழகில்லை –
புதுமையன்று!
கிலியும் மெய் சிலிர்ப்பும்
கீழிறங்கும் தன்மையும் தலைகாட்டா
மானத்தின் உறைவிடம் – மறவன் மாளிகை!

இல்லத்து வாயிலிலே
கிண்ணத்துச் சோற்றோடு
வெல்லத்தைச் சிறிது கலந்து
வயிற்றுக்குள் வழியனுப்பப்
பொக்கை வாய்தனைத் திறந்து
பிடியன்னம் எடுத்துப் போட்டாள்
பெருநரைக் கிழவி பொருத்தி,

ஓடி வந்தான் ஒரு வீரன்
"ஒரு சேதி பாட்டி!" என்றான்.
ஆடிவந்த சிறுமிபோல்
பெருமூச்சு வாங்குகின்றாய்
ஆண் மகனா நீ தம்பி?
மூச்சுக்கு மூச்சு இடைவேளை ஏற்படட்டும். பின்,
பேச்சுக்குத் தொடக்கம் செய் என்றாள் அந்தக்
கிண்டலுக்குப் பேர்போன
கிழட்டுச் தமிழச்சி!

வேடிக்கை நேரம் இதுவல்ல பாட்டி – உன்
வாடிக்கைக் கேலியை விட்டுவிடு.
'மடிந்தான் உன் மகன் களத்தில்'
என்றான் – மனம்
ஒடிந்து நிமிர்ந்தாள் தாய்க்கிழவி ஒருமுறை!

"தாயம் ஆடுகையில் காய்களை
வெட்டுவதுண்டு – களமும் அதுதான்.
காயம் மார்பிலா? முதுகிலா?
கழறுவாய்" என்றாள் – முதுகிலென்றான்.

கிழவி துடித்தனள்; இதயம் வெடித்தனள்;
வாளை எடுத்தனள்;
முழவு ஒலித்த திக்கை நோக்கி
முடுக்கினாள் வேகம்!

"கோழைக்குப் பால் கொடுத்தேன்
குப்புற வீழ்ந்து கிடக்கும்
மோழைக்குப் பெயர்
போர் வீரனாம்! முன்பொருநாள்
பாய்ந்துவந்த ஈட்டிக்குப்
பதில் சொல்ல மார்பைக் காட்டிச்
சாய்ந்து கிடந்தார் என் சாகாத கண்ணாளர்.
அவருக்குப் பிறந்தானா?
அடடா மானமெங்கே – குட்டிச்
சுவருக்கும் கீழாக வீழ்ந்து பட்டான்.
இமய வரம்பினிலே வீரம் சிரிக்கும் – இங்கு
வீணை நரம்பினிலே இசை துடிக்கும்.
அதுவும் மானம் மானமென்றே ஒலிக்கும்!
மதுவும் சுறாவும் உண்டு வாழும்
மானமற்ற வம்சமா நீ – ஏடா
மறத் தமிழ்க் குடியிலே மாசு தூவி விட்டாய்
மார்பு கொடுத்தேன்
மகனாய் வளர்த்தேன்
தின்று கொழுத்துத்
திமிர் பாய்ந்த தோள்களெங்கே?
தினவெடுக்கவில்லையா? அந்தோ!
வேலுக்கு வழி சொல்ல வகையற்ற
கோழையே – என் வீரப்
பாலுக்கு வழி சொல்வாய்!!
என்று கதறினாள்
எண்பதை நெருங்கிய ஏழைக் கிழவி.

சென்றங்குச் செரு முனையில்
சிதறிக் கிடந்த
செந்தமிழ்க் காளைகளைப்
புரட்டிப் பார்த்தாள் – அங்கு
நந்தமிழ் நாட்டைக் காக்க
ஓடிற்று ரத்த வெள்ளம்!
பிணக்குவியலிலே பெருமூச்சு
வாங்க நடந்தாள்!
மணப் பந்தலிலும் அந்த மகிழ்ச்சியில்லை – மகன்
பிறந்த போதும் மகிழ்ச்சிக்கு
எல்லையுண்டு – அவன்
இறந்து கிடந்தான் ஈட்டிக்கு மார்பு காட்டி!
இதைக் கண்டாள் – இதயங் குளிர்ந்தாள்!

"எதைக் கண்டாலும் இனிக் கவலை இல்லை
என் மகன் வீரனாய் இறந்தான்" என்றாள்.
அறுத்தெறிய இருந்தேன்
அவன் குடித்த மார்பை – அடடா!
கருத்தெரியப் பொய் சொன்ன கயவனெங்கே?
வாளிங்கே! அவன்நாக்கெங்கே?"

என்று மகளிரின் வீரத்திற்கு அன்றைக்கு எடுத்துக்காட்டாக விளங்கினார்கள் என்பதற்கு சங்க இலக்கியங்கள் இன்றைக்கும் சான்று பகருகின்றன.

ஒன்றல்ல, இரண்டல்ல – இப்படி பல பாடல்கள் புறநானூற்றில், அகநானூற்றில் காணக் கிடக்கின்றன. அத்தகைய பெரும் புகழ் இந்தக் காலத்தில் மறைக்கப்பட்டாலும், இன்றைக்கு பெண்களின் புகழ் மங்க வேண்டும் என்று ஆண் வர்க்கம் ஆதிக்கம் செலுத்த முயன்றாலும், அவைகளையெல்லாம் முகிலைக் கிழித்து வெளிக் கிளம்பும் முழுமதி போல அவைகளையெல்லாம் கிழித்தெறிந்து பெண்களின் சுதந்திரம், பெண்களின் உரிமை, பெண்களின் வீரம் கொடிகட்டிப் பறந்து கொண்டிருக்கின்றது. அத்தகைய எழுச்சியின்



சின்னத்தைத்தான் இங்கே நான் சென்னை மாநகரில் இந்த நேரு அரங்கத்திலே காணுகின்றேன்.

இங்கே நம்முடைய நண்பர்கள் சொன்னார்கள் – நீங்கள் எல்லாம் அணிந்திருக்கின்ற ஆடைகளின் வண்ணம் "ஊதா" நிறமாக இருக்கிறது என்று சொன்னார்கள். ஆம், கடல் வண்ணமாக இருக்கின்றது, கடலே இங்கே வந்து நுழைந்ததைப் போல இருப்பதற்குக் காரணம், மங்கையர் கடலே இந்த மாமன்றத்திலே குழுமியிருக்கின்ற காட்சியை நான் காணுகின்றேன். இந்த கடல் நிச்சயமாக, இதுவரை பெற்ற வெற்றிகளைப் போல இன்னும் பல வெற்றிகளைப் பெற்று ஆணுக்குப் பெண் சமம் தான் என்ற அந்த உரிமையை நிலைநாட்ட ஓங்கி ஒலிக்கும், அப்படி ஒலிக்கின்ற குரலுக்கு உறுதுணையாக எங்களுடைய குரல் என்றென்றும் ஒலிக்கும் – ஆண், பெண் என்பது இரண்டு பால் வேறுபாடே தவிர, உள்ளத்தால் ஒன்றுபட்ட உணர்வுதான் ஆணுக்கும், பெண்ணுக்கும். பாரதி கற்பைப் பற்றிச் சொல்லும்போது கூட, ஆணுக்கும் பெண்ணுக்கும் கற்பை பொதுவில் வைப்போம் என்றுதான் சொன்னான். இப்படி எல்லாவற்றிலும் ஆணுக்கும், பெண்ணுக்கும் பொதுவான ஒரு தன்மையை அந்தக் காலத்து புலவர்களும், இந்தக் காலத்துப் புலவர்களும் நிலைநாட்டியிருக்கின்றார்கள். அந்த வழியிலே இந்த மகளிர் மகத்தான வெற்றியை இந்த விழாவில் பெறுவார்கள், இந்த விழா அந்த வெற்றிப் பாதைக்கு உங்களையெல்லாம் அழைத்துச் செல்லும்.

நான் மீண்டும் சொல்லுகின்றேன் – இன்று நேரு அரங்கத்திலே நடைபெறுகின்ற இந்த விழா நிகழ்ச்சி நேருவினுடைய குடும்பத்திலே ஒளிவிளக்காக இன்றைக்குத் திகழ்கின்ற சோனியா காந்தி அவர்களின் உள்ளத்தைத் தொட்டு, அவர்கள் தலைமையேற்றிருக்கின்ற காங்கிரஸ் பேரியக்கத்தின் வழிகாட்டுதலோடு நடைபெறுகின்ற மன்மோகன் சிங் ஆட்சியிலே வீற்றிருப்பவர்களுக்கெல்லாம் மனதை மாற்றி அவர்களுடைய எண்ணம் நிறைவேற, ஈடேற பாராளுமன்றத்திலே நம்முடைய இந்தக் கொள்கை வெற்றிகரமாக நிறைவேறியது என்ற நிலையை உருவாக்கினால் இந்த விழாவிற்கு சிறப்பு, பெருமை என்பதை எடுத்துச் சொல்லி – இந்தப் பெருமைகளோடு ஒரு பெருமையாக என்னுடைய அருமை நண்பர் என்.டி.ராமராவ் அவர்களின் திருமகள் இந்த விழாவிலே வந்து தலைமையேற்று நடத்தி வைத்தது எனக்கு மிகுந்த மகிழ்ச்சி. ஏனென்றால் பழைய பல உணர்வுகளை என்னுடைய உள்ளத்திலே கிளறி விடுகின்ற, அலைபாய விடுகின்ற நிகழ்ச்சிகள் – அவர்களுடைய திருமகள் இந்த விழாவிற்கு தலைமையேற்கவும், அவருடைய இனிய நண்பனாக விளங்கிய நான் இதிலே வாழ்த்துரைக்கவுமான ஒரு சூழல் ஏற்பட்டதற்காக மகிழ்ந்து இந்த அருமையான வாய்ப்பை எனக்கேற்படுத்திக் கொடுத்த இந்த அமைப்புக்கும் குறிப்பாக என்னுடைய அருமை நண்பர் பீட்டர் அல்போன்ஸ் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன். ■





# மீஞ்சூரில் கடல்நீரைக் குடிநீராக்கும் தொழிற்சாலை

***மீஞ்சூரில் கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டத் தொழிற்சாலைக்கு அடிக்கல் நாட்டி 25.2.2007 அன்று மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் பேசியதாவது :-***

கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்தின் தொழிற்சாலை அடிக்கல் நாட்டு விழாவில் பங்கேற்று, திட்டத்தினைத் தொடங்கி வைப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

இந்த விழாவிற்கு சிறப்புற ஏற்பாடு செய்துள்ள அரசு அதிகாரிகளுக்கும், இந்நிறுவனங்களின் உயர் அதிகாரிகளுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை மாநகரில் 2001 முதல் 2004ஆம் ஆண்டு வரை குடிநீருக்கு கடும் வறட்சி ஏற்பட்டது. தண்ணீர் கிடைக்கப் பெறாமல் சென்னை மாநகர மக்கள் பல கொடுமைகளுக்கு ஆளானார்கள்.

பல பகுதிகளில் ஒரு நாள் விட்டு ஒருநாள் தண்ணீர் வழங்கப்பட்டது. பல பகுதிகளில் குடிநீரே கிடைக்கப் பெறாத சூழ்நிலை இருந்தது.

குழாய்கள் மூலம் குடிநீர் வழங்குவது நிறுத்தப்பட்டு லாரிகள் மூலம் மக்களுக்கு குடிநீர் விநியோகிக்கப்பட்டது. இந்த நிலை ஏன் வந்தது? தொடர்ந்து மழை பெய்திருந்தால் இந்த நிலை வந்திருக்காது. பருவமழை பொய்த்த காரணத்தாலும், மழையே இல்லாததாலும் இந்நிலை ஏற்பட்டது. இந்த நிலையிலிருந்து சென்னை மாநகர மக்களைக் காக்க நிரந்தரத் தீர்வு காணும் வகையில், கடல் நீரைக் குடிநீராக்கும் தொழிற்சாலை அமைக்க அரசு முயன்றது.

இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில், இதனைத் தி.மு.க அரசுதான் உருவாக்கியது என எங்களையும் ஏமாற்றிக் கொள்ள விரும்பவில்லை. உங்களையும் ஏமாற்ற விரும்பவில்லை. கடந்த கால அ.தி.மு.க ஆட்சி இத்திட்டத்தை உருவாக்கிய காரணத்தால், இன்று நமது கழக ஆட்சி அதனை ஒதுக்கி வைத்து விடவில்லை.

கடந்த கால ஆட்சியில் இதற்கான முயற்சியில் ஈடுபட்டது உண்மை. ஆனால் இதைச் செயற்படுத்த முழு முயற்சியில் அவர்கள் ஈடுபடவில்லை. கடந்த ஆட்சி கொண்டு வந்த திட்டம் என்பதால் இந்த அரசு அதனைப் புறக்கணிக்கவில்லை. தாகம் தீர்க்க நிரந்தரத் தீர்வாக அமையும் திட்டம் என்பதால் அதனை நிறைவேற்ற நமது ஆட்சி முனைப்போடு ஈடுபட்டது.

ஆனால் கடந்த கால அ.தி.மு.க அரசு என்ன செய்தது ? கலைஞர் அரசின் பல நல்ல திட்டங்களை எல்லாம் நிறுத்தி விட்டார்கள்.

தலைவர் கலைஞர் அவர்கள் தேர்தல் நேரத்தில் கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்தைக் கொண்டு வருவோம் என வாக்குறுதி வழங்கியிருந்தார். வாக்குறுதி வழங்கியபடி இந்தத் திட்டத்தை நிறைவேற்ற முயற்சி மேற்கொண்டு இன்று அடிக்கல் நாட்டுவிழா நடத்திக் கொண்டிருக்கிறோம்.

இந்தத் திட்டம், கலைஞர் ஆட்சியில் முதன் முதலில் நெல்லை மாவட்டத்தில் தொடங்கப்பட்டதாக மத்திய அமைச்சர் திரு. தயாநிதி மாறன் இங்கே குறிப்பிட்டார். அதில் ஒரு சிறு திருத்தம்; இந்தத் திட்டத்தை முதன் முதலில் இராமநாதபுரம் மாவட்டம் – நரிப்பையூரில்தான் முதல்வர் கலைஞர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

இன்று மாலையில் இந்த ஒப்பந்தம் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் முன்னிலையில் தலைமைச் செயலகத்தில் கையெழுத்தானபோது, திட்டத்தை நிறைவேற்றும் ஸ்பெயின் நிறுவன அதிகாரிகள்; இந்தத் திட்டத்தை நிறைவேற்றவுள்ள முறைகள் குறித்து விளக்கினார்கள். தங்கள் நாட்டில் கடல் நீரைக் குடிநீராக்கி விவசாயத்திற்குக் கூட வழங்குவதாகக் கூறினார்கள்.

மத்திய அமைச்சர் திரு. தயாநிதி மாறன் பேசும்போது இத்திட்டத்தை ஜூன் 3ஆம் தேதி தொடங்கி வைக்க வேண்டும் என்று குறிப்பிட்டார். அன்றுதான் நமது முதல்வர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளாகும்.

2008 ஜூன் மாதத்திற்குள் இப்பணியினை முடித்து விடுவதாக உறுதி கூறினார்கள். முதல்வர் கலைஞர் அவர்கள் இந்தத் தொழிற்சாலையைத் தமது பிறந்த நாளில் திறந்து வைக்கும் வாய்ப்பை உருவாக்கித் தரவேண்டும்.

அந்நாளில் இந்தத் திட்டத்தின் திறப்பு விழாவிற்கு முதல்வர் கலைஞர் அவர்களை நான் அழைத்து வருவேன் என்று உறுதி கூறுகிறேன். இந்தத் தொழிற்சாலைக்குத் தேவையான எல்லா தடையின்மைச் சான்றுகளையும் வழங்க ஏதுவாக, விதிகள் திருத்தப்பட்டு, மறு பேச்சுவார்த்தை நடத்த இந்த அரசு தீர்மானித்தது. அதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டது.

ஆயிரம் லிட்டர் ரூ.48.68க்கு பெற்றுக் கொள்வதென முதலில் வரைமுறைப்படுத்தப்பட்டிருந்தது. அதை நாங்கள் பேசி, ஆயிரம் லிட்டர் தண்ணீரை ரூ.48.66க்கு வாங்கிட, விலை குறைத்து வரையறுத்தோம்.

இதன்மூலம் சென்னைப் பெருநகர குடிநீர் வடிகால் வாரியத்துக்கு 1 கோடியே 80 இலட்சம் ரூபாய் சேமித்துத் தந்திருக்கிறோம். 100 எம்.எல்.டி குடிநீர் உருவாக்கிடும் இந்தத் திட்டத்தை மேலும் விரிவுபடுத்த அரசு முடிவு செய்துள்ளது.

ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு அமைந்து முதல் நிதிநிலை அறிக்கையினைத் தாக்கல் செய்தபோது, மத்திய நிதி அமைச்சர் திரு. ப. சிதம்பரம் அவர்கள் சென்னை மாநகருக்கு கடல் நீரைக் குடிநீராக்கி வழங்கிடும் திட்டத்திற்கு 1,000 கோடி ரூபாய் ஒதுக்குவதாக அறிவித்தார்.

கடந்த கால ஆட்சி அதனை முறையாகப் பயன் படுத்திக்கொள்ளவில்லை.

முதலமைச்சர் கலைஞர் அவர்கள், அந்தத் திட்டத்தையும் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்று கூறியுள்ளார்கள். இதற்காக தென் சென்னையில் மாமல்லபுரம் சாலைப் பகுதியில் இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

இங்கே உருவாகிற இந்தத் தொழிற்சாலை வட சென்னைக்கு குடிநீர் வழங்கும். தென் சென்னையில் உருவாகிய தொழிற்சாலை; தென் சென்னை தொகுதி மக்களுக்கு குடிநீர் வழங்கும். இதற்கான முயற்சியில் இந்த அரசு ஈடுபட்டுள்ளது.

இந்தத் திட்டத்தினை நிறைவேற்றிடப் பாடுபடும் நிறுவனத்துக்கும், அதிகாரிகளுக்கும் எனது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். ★





# உயர்கல்வி நிறுவனங்களில் இடஒதுக்கீடு



**மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கடிதம்**

**உயர்கல்வி நிறுவனங்களில் இடஒதுக்கீடு தொடர்பாக மாண்புமிகு பிரதமர் திரு.மன்மோகன் சிங் அவர்களுக்கும், மாண்புமிகு மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் எழுதியுள்ள கடிதத்தின் விவரம் வருமாறு :**

ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசால் அகில இந்திய மருத்துவ விஞ்ஞானக் கழகம் (AIIMS) மற்றும் இந்திய தொழில்நுட்பக் கழகம் (IIT) போன்ற உயர்கல்வி நிலையங்களில் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினைச் சார்ந்த மாணவர்களுக்கு 27 சதவீத இடஒதுக்கீடு செய்யப்பட்டது, மண்டல் கமிஷன் பரிந்துரைகளை அமலாக்குவது தொடங்கிய திலிருந்து துவங்கிய சமூக நீதிக்கான சிரமமான போராட்டப் பாதையில் மேலும் ஒரு மைல்கல்லாகும்.

இதுதொடர்பாக, அறிவிக்கப்பட்டுள்ள இட ஒதுக்கீடு கொள்கையில் ஒருசில குறைபாடுகளை நான் ஏற்கெனவே சுட்டிக்காட்டியிருக்கிறேன். இந்தக் குறைபாடுகள் விரைவில் களையப்படும் என்று நம்புகிறேன்.

இந்த முக்கியத்துவம் வாய்ந்த நடவடிக்கை சமுதாயத்திலுள்ள பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு பெரிதும் தேவைப்படுகிற உயர்கல்வி பெறுவதற்கான வாய்ப்புகளை வழங்கியுள்ள போதிலும், இந்த உயர்கல்வி நிலையங்களில் கிடைக்கும் குறைந்த இடங்களின் எண்ணிக்கையை கருத்தில் கொண்டால், ஓரளவு, நல்ல கல்வி பெற்ற குடும்பங்களைச் சேர்ந்த இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்களில் குறைந்த எண்ணிக்கையிலானவர்களுக்கு மட்டுமே பலன் அளிக்கலாம்.

இது தொடர்பாக, AIPMPD மற்றும் AIPGMEE போன்ற இளங்கலை பட்டப் படிப்பு மற்றும் முதுகலை பட்டப்படிப்பு போன்றவற்றிற்கான அகில இந்திய அளவிலான முக்கியமான நுழைவுத் தேர்வுகளுக்கு இடஒதுக்கீடு முறை விரிவாக்கப்படவில்லை என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பெரும் எண்ணிக்கையிலான மாநில அரசு மருத்துவக் கல்லூரிகளில் மத்திய ஒதுக்கீட்டின் கீழ் உள்ள இடங்கள் இந்தத் தேர்வுகள் மூலமாகத்தான் நிரப்பப்படுகின்றன.

மருத்துவக் கல்லூரிகளில் பெரும் எண்ணிக்கையிலான மத்திய ஒதுக்கீடு இடங்களுக்கு இந்தத் தேர்வுகள்தான் காரணமாக இருக்கின்றன என்பதையும், ஏராளமான இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினைச் சேர்ந்த மாணவர்கள் தொழில் கல்வி பயில விரும்புகிறார்கள் என்பதையும் கருத்தில் கொண்டு, இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான இடஒதுக்கீடு இந்தத் தேர்வுகளுக்கும் விரிவாக்கப்படுவது அவசியமாகிறது.

மேலும், சமீபத்தில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள அகில இந்திய முதுகலை பட்டப்படிப்பு மருத்துவ நுழைவுத் தேர்வில் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கு தனி இடஒதுக்கீட்டிற்கு வகை செய்யப்பட்டுள்ளதை நான் முழுமையாக வரவேற்கிறேன்.

ஆனால், தமிழ்நாட்டிலும் அகில இந்திய மருத்துவ விஞ்ஞானக் கழகத்திலும் வெற்றிகரமாகச் செயல் படுத்தப்பட்டு வருவதைப்போல, வரிசைக் கிரம முறை மூலமாக அளிக்கப்படும் தனித்தனி படிப்புகளுக்கு அமலாக்கப்பட்டால்தான் இந்த மாணவர்களுக்கு இடஒதுக்கீட்டின் உண்மையான பலன் கிடைக்கும் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும் இடஒதுக்கீடு விரிவாக்கப்படும்போது இதே கொள்கை கடைப்பிடிக்கப்பட வேண்டும். சமூகநீதி முழுமையாக நிலவுவதை உறுதிப்படுத்தவும், ஆயிரக்கணக்கான இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்களின் கனவுகள் நிறைவேறவும் இதில் தேவையான நடவடிக்கைகளை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். ●



## சட்ட வல்லுநர்களுடன் மற்றும் பொறியாளர்களுடன் கலந்தாலோசித்து தமிழகத்தின் நலனைப் பாதுகாக்கும் வகையில் பன்மாநில நதிநீர் தாவாச் சட்டத்தின்கீழ் காவிரி நடுவர் மன்றத்தின்முன் தமிழ்நாடு அரசு மனு தாக்கல் செய்ய முடிவு

### மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் தலைமையில் நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் தீர்மானம்







காவிரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பு குறித்து அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டம், மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில் 19.2.2006 அன்று, தலைமைச் செயலக அமைச்சரவைக் கூட்ட அரங்கில் நடைபெற்றது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உரையாற்றும்போது,

“உங்களையெல்லாம் இன்முகத்தோடும் நல் இதயத்தோடும் வருக வருகவென்று வரவேற்கின்றேன். நாம் இன்றைய தினம் கூடியிருக்கின்ற இந்த நேரம் மிக மிக முக்கியமான நேரம். முக்கியமான பிரச்சினை குறித்து விவாதித்து முடிவெடுப்பதற்காக அந்த முடிவை எப்படி செயல்படுத்துவது என்ற யோசனை எல்லோரிடமும் கேட்டறிந்து அதைத் தொகுத்து செயல்படுத்துவதற்காக கூடியிருக்கின்றோம்.

எனவே, இப்பொழுது அறிவிக்கப்பட்டுள்ள காவிரி நடுவர்மன்ற தீர்ப்பின் காரணமாக ஏற்பட்டுள்ள சாதக பாதகங்களை வருகை தந்துள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களும் தங்களுடைய கருத்துக்களை எடுத்துக் கூறினால், அது பற்றிய விளக்கங்களை அளிப்பதற்கு ஏதுவாக இருக்கும். எனவே தலைவர்கள் தங்களுடைய கருத்துக்களை முதலில் எடுத்துரைக்க வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

*இவ்வாறு தமது உரையில் குறிப்பிட்டார். அதைத் தொடர்ந்து கூட்டம் தொடங்கியது.*





இக்கூட்டத்தில் அனைத்துக் கட்சித் தலைவர்களும் கலந்துகொண்டு கருத்துரைகளை வழங்கினார்கள். காலை 10 மணிக்கு தொடங்கிய அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டம் பிற்பகல் 2.20 வரை தொடர்ந்து நடைபெற்றது. மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கட்சித் தலைவர்களின் கருத்துரைகளை உன்னிப்பாகக் கேட்டார். மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் திரு.ஆற்க்காடு நா.வீராசாமி, திரு.மு.க.ஸ்டாலின், திரு.வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. துரைமுருகன் ஆகியோரும் மற்றும் அரசு அதிகாரிகளும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டத்தில், ''தமிழகத்தின் நலனை பாதுகாக்கும் வகையில் பன்மாநில நதிநீர் தாவாச் சட்டத்தின் கீழ் காவிரி நடுவர் மன்றத்தின் முன் தமிழக அரசின் சார்பில் மனு தாக்கல் செய்வது'' என்று தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

**அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் வருமாறு :-**

காவிரி நடுவர் மன்றம் 5.2.2007 அன்று அளித்த இறுதி ஆணையில் உள்ள சாதக பாதகங்கள் விரிவாக விவாதிக்கப்பட்டது. விவாதத்திற்குபின், இந்த ஆணையின் மீது தேவையான விளக்கங்களையும், அதை முழுமையாக செயல்படுத்த தேவையான நடவடிக்கைகளையும் பட்டியலிட்டு, சட்ட வல்லுநர்களுடனும் மற்றும் பொறியாளர்களுடனும் கலந்தாலோசித்து, அவர்கள் வழங்கும் ஆலோசனைக்கேற்ப, தமிழக மக்களின் நலனைப் பாதுகாக்கும் வகையில் 1956ஆம் ஆண்டு பன்மாநில நதிநீர் தாவாச் சட்டப் பிரிவு 5(3)–இன் கீழ் ஒரு மனுவினை காவிரி நடுவர் மன்றத்தின் முன் தமிழ்நாடு அரசு தாக்கல் செய்ய வேண்டுமென அனைத்துக் கட்சித் தலைவர்களின் இந்தக் கூட்டம் முடிவு செய்கிறது.

இவ்வாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் பல்வேறு கட்சிகளின் தலைவர்கள், விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள் பங்கேற்று தங்களுடைய கட்சியின் நிலையை முன்னதாக எடுத்துரைத்தார்கள். இந்த ஆலோசனையில் பங்கேற்றோர் விவரம் வருமாறு :-



மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு.ஆற்காடு நா.வீராசாமி, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர், திரு.மு.க.ஸ்டாலின், மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. வீரபாண்டி எஸ்.ஆறுமுகம், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் ஆகியோரும் அனைத்துக் கட்சிகளின் சார்பாக பின்வரும் தலைவர்களும் கலந்துகொண்டனர்.

திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் க.அன்பழகன், இந்திய தேசிய காங்கிரஸ் சார்பில் திரு.எம்.கிருஷ்ணசாமி, திரு.டி.சுதர்சனம், பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் திரு.கோ.க.மணி, திரு.ஏ.கே. மூர்த்தி, அ.தி.மு.க. சார்பில் திரு.ஓ.பன்னீர் செல்வம், திரு.என். ஜோதி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் திரு.என்.வரதராஜன், திரு.டி.கே. ரங்கராஜன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் திரு.தா.பாண்டியன், திரு.துரைமாணிக்கம், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் (வைகோ) சார்பில் திரு.கே.எஸ்.இராதாகிருஷ்ணன், திரு.சி. இ.சத்யா, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் (செஞ்சி) சார்பில் திரு.எல்.கணேசன், திரு.செஞ்சி இராமச்சந்திரன், தேசிய முற்போக்கு திராவிடர் கழகம் சார்பில் திரு.பண்ருட்டி எஸ். இராமச்சந்திரன், திரு.கு.ப.கிருஷ்ணன், தமிழ்நாடு மாநில இந்திய யூனியன் முஸ்லீம் லீக் சார்பில் திரு.கே.எம்.காதர் மொய்தீன், திரு.எஸ்.ஏ. அப்துல் சையத் சத்தார், விடுதலை சிறுத்தைகள் சார்பில் திரு.தொல்.திருமாவளவன், திரு.செல்வப்பெருந்தகை, பாரதீய ஜனதா கட்சி சார்பில் திரு.இல.கணேசன், திரு.கே.வி.கண்ணன், திராவிடர் கழகம் சார்பில் திரு.கி.வீரமணி, திரு.சு.அறிவுக்கரசு, புரட்சி பாரதம் சார்பில் திரு.பூவை. ஜெகன்மூர்த்தி, திரு.சிவஞானம், தமிழக முஸ்லீம் முன்னேற்றக் கழகம் சார்பில் திரு.எம்.எச்.ஜவாஹிருல்லாஹ், திரு.எஸ். ஹைதர் அலி, எம்.ஜி.ஆர். கழகம் சார்பில் திரு. இராம. வீரப்பன், திரு.வி. ராஜ்குமார், அகில இந்திய பார்வர்டு பிளாக் சார்பில் திரு.பி.வி.கதிரவன், திரு.சேதுராம பாண்டியன், உழவர் உழைப்பாளர் கட்சி சார்பில் திரு.கு.செல்லமுத்து, திரு.எ.பி. திருநாவுக்கரசு, புதிய தமிழகம் சார்பில் டாக்டர் க. கிருஷ்ணசாமி, திரு.வி.கே.அய்யர், இந்திய சமூக நீதி இயக்கம் சார்பில் பேராயர் எஸ்றா சற்குணம், திரு.கா.சு.மரிய சூசை, காவிரி டெல்டா பாசன விவசாயிகள் சங்கம் சார்பில் மன்னார்குடி திரு.எஸ். ரங்கநாதன், தமிழ்நாடு மாநில விவசாயிகள் தொழிலாளர் கட்சி சார்பில் திரு.பொன்.குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அனைத்துக் கட்சித் தலைவர்கள் கருத்துரைக்குப்பின் தீர்மானத்தை முன் மொழிந்து மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

''அன்பார்ந்த அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கு நன்றியையும் வணக்கத்தையும் இவ்வளவு நேரம் அமர்ந்திருந்து அரிய பல கருத்துக்களை கூறியமைக்காக பாராட்டுக் களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த அனைத்துக் கட்சிக் கூட்டத்திலே ஒரு தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டியது மிக மிக முக்கியம் என்பதை நீங்கள் எல்லாம் உணர்வீர்கள். அந்தத் தீர்மானம் குறிப்பிட்டு கோடிட்டு காட்டப்படக் கூடியதாக அல்லாமல் இங்கே விவாதம் நடந்தபோது நீங்கள் எல்லாம் எடுத்துரைத்த பல்வேறு கருத்துக்களையும் அரசு செயலாளர்களும், அதிகாரிகளும், பொறியாளர்களும் குறித்து வைத்திருக்கின்றார்கள்.

அவைகளை எல்லாம் பயன்படுத்தி நாம் நடுவர் மன்றத்தை அணுகி எவ்வாறு அவர்களிடத்திலே விளக்கம் கேட்பது, அப்படி விளக்கம் கேட்க என்னென்ன பொருள்களை – இங்கே நீங்கள் வழங்கிய கருத்துக்களை பயன்படுத்துவது என்பதை சிந்தித்து இடையிலே கால அவகாசம் இருக்கின்ற காரணத்தால், அந்த அவகாசத்தையும் பயன்படுத்தி, நம்முடைய அரசின் சார்பில், உங்கள் அத்தனை பேருடைய சார்பில் தமிழ்நாட்டு மக்களின் சார்பில், விவசாயிகளின் சார்பில் நாம் காவிரி நடுவர் மன்றத்தோடு இயன்ற வரையிலே நம்முடைய வாதங்களை எடுத்துரைத்து, இன்னும் பல திருத்தங்கள் எங்களுக்குத் தேவை என்பதை வலியுறுத்தி, அதைப் பெறுவதற்காகப் போராடுகின்ற அதே நேரத்தில் இங்கே நம்முடைய நண்பர் ஜோதி அவர்கள் எடுத்துக் காட்டியதைப்போல உச்ச நீதிமன்றத்திற்கு செல்லக்கூடிய வாய்ப்பும் அதற்கான கால அவகாசம் கிடைக்குமேயானால் அதுவரையிலே சென்று – நம்முடைய உரிமைகளை நிலைநாட்ட நிச்சயம் நாம் பாடுபடுவோம் என்ற உறுதியை எடுத்துக் கொள்கின்ற வகையில் இந்த தீர்மானத்தை உங்களுடைய அன்பான ஒப்புதலுக்காக முன் மொழிகிறேன்''.

**மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் உரைக்குப் பின் தீர்மானத்தை அனைத்துக் கட்சித் தலைவர்கள் ஒருமனதாக நிறைவேற்றித் தந்தனர்.** ■

# மன வளர்ச்சி குன்றியவர்களுக்கு எவ்வளவு முடியுமோ அவ்வளவும் செய்வேன்





**தமிழ் மாநில**
**மனவளர்ச்சி குன்றியோர்**
**வாழ்வுரிமை மாநாட்டில்**
**மாண்புமிகு முதலமைச்சர்**
**கலைஞர் மு.கருணாநிதி**
**அவர்கள் உரை**
**(26.2.2007)**

மனவளர்ச்சி குன்றியோர் என உங்களை அடையாளம் காட்டிக் கொண்டு அதனால் இந்த மேடையிலே உள்ள எங்களை "மனத் தளர்ச்சி உற்றோராக" ஆக்கி உள்ள இந்த இரு நிலைக்கிடையில், இந்த மாநாட்டில் என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை எடுத்து வைக்க விரும்புகிறேன்.

கடந்த நான்கைந்து நாட்களுக்கு முன்பு என்பது எனக்கு நினைவு. நம்முடைய தோழர் என். வரதராசன் அவர்களையும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி





நண்பர்களையும் சந்தித்த போது – வேறொரு செய்தி குறித்து நாங்கள் உரை நிகழ்த்தி விட்டு – அந்த நேரத்தில் அவர்கள் இதுபோன்ற ஒரு மனவளர்ச்சிக் குன்றியோரின் வாழ்வுரிமை மாநாட்டினை நடத்த வேண்டும், வள்ளுவர் கோட்டத்திலே நடத்த விரும்புகிறோம், நீங்களும் கலந்துகொள்ள வேண்டுமென்று கேட்டவுடன் நான் அடுத்து ஆற்றிய செயல் – நாள் குறிப்பைப் பார்த்து, வருகிறேன் என்று அவர்களுக்கு நான் விடையளித்ததுதான்.

அதுமாத்திரமல்ல, வள்ளுவர் கோட்டம் அன்றைய தினம் வேறு அலுவல் இன்றி காலியாக இருக்கிறதா, அது இந்த நிகழ்ச்சிக்குக் கிடைக்குமா என்பதை அறிந்து சொல் என்று என்னுடைய செயலாளரிடம் கூறி, அவரும் அடுத்த நிமிடமே வள்ளுவர் கோட்டம் இந்த நாளில் தயாராக இருக்கிறது என்று குறிப்பிட்டவுடன் எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி. ஏன் என்றால் வள்ளுவர் கோட்டம் எந்தக் காலத்திலே யாரால் நிர்மாணிக்கப்பட்டது என்பதெல்லாம் உங்களுக்குத் தெரியும். இந்த வள்ளுவர் கோட்டத்திலே இடையிலே பல ஆண்டுகளுக்குப் பிறகு இன்றைக்குத்தான் முதன்முதலாக நுழைந்திருக்கிறேன்.

இதிலே வேடிக்கை என்னவென்றால் கலைவாணர் அரங்கம் நான் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது முற்றிலும் மாற்றியமைத்துப் பழுது பார்க்கப்பட்டு, புதுப்பிக்கப்பட்டு பெரிய அளவிலே கட்டப்பட்ட ஒரு அரங்கம். வள்ளுவர் கோட்டம், நானே முன் நின்று வெயிலிலே காய்ந்து, மழையிலே நனைந்து சிற்பிகளையெல்லாம் இந்த இடத்திலே திரட்டி என் கண்பார்வையிலேயே கட்டி முடிக்கப்பட்ட இடம். ஆனால் இந்த இரண்டு இடங்களுக்கும் நான் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தால்தான் இடம் கிடைக்கும், ஆட்சிப் பொறுப்பிலே இல்லாவிட்டால் இடம் கிடைக்காது. அப்படிப்பட்ட ஒரு ஜனநாயகம் தமிழகத்திலே நடைபெற்றுக் கொண்டிருந்தது. அதைப்பற்றிப் பேச இப்போது நேரம் இல்லை.

அது மன வளர்ச்சியைப் பொறுத்தது. உள்ளபடியே நான் உங்களை மன வளர்ச்சிக் குறைந்தவர்கள் என்று எண்ணவில்லை. யார் இந்த நாட்டிலே ஜனநாயகத்திற்கு எதிராக – பொது அறிவுக்குப் புறம்பாக – பகுத்தறிவுக்கு பகையாக–மக்கள் விரோதக் காரியங்களில் ஈடுபடுகிறவர்களாக இருக்கிறார்களோ அவர்களைவிட நீங்கள் ஒன்றும் மன வளர்ச்சிக் குன்றியவர்கள் என்று நான் கருதவில்லை. ஆனாலும் இப்படி உங்களைப் பெருமைப்படுத்தி விட்டு நான் வெறுமனே இந்த நிகழ்ச்சியிலிருந்து விடைபெற விரும்பவுமில்லை.

உடல் ஊனமுற்றோர்களுக்கு – மன வளர்ச்சிக் குன்றியோருக்கு – கண் ஒளி அற்றவர்களுக்கு பாடுபட வேண்டும், பணியாற்ற வேண்டும், உதவிட வேண்டுமென்ற நிலையை நான் பேரறிஞர் அண்ணா அவர்களுக்குப் பிறகு பொறுப்பேற்ற அந்த நாள் முதல் கையிலே எடுத்துக் கொண்டு தொடர்ந்து நிறைவேற்றி வருகிறேன்.

## தொழுநோய் இரவலர்கள் மறுவாழ்வு இல்லம்

1969ஆம் ஆண்டு நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு, 1971 ஆம் ஆண்டில் தொழுநோய் இரவலர்களுக்கு மறுவாழ்வு இல்லங்கள் அமைப்பது என்ற பணியினைத் தொடங்கினேன். அப்படி தொழுநோயாளிகளுக்கு மறுவாழ்வு இல்லங்கள் அமைக்கப்பட்டு, அந்த இல்லங்களில் அவர்களுக்கு சிகிச்சை, அவரவர்களும் தெரிந்த தொழிலை, கைத்தொழிலை அந்த இல்லத்திலேயே கற்றுக்கொள்ள, பயிற்சி பெற வாய்ப்பு இவைகள் எல்லாம் அளிக்கப்பட்டு, முதல் மறுவாழ்வு இல்லம் காஞ்சிபுரம் மாவட்டத்திலே பரனூரில் தொடங்கப்பட்டது.

இன்றைக்கும் நான் கார் போன்ற வாகனங்களில் அந்தச் சாலையிலே வெளியூர் செல்லும்போது, பரனூரிலே ஒரு கூட்டம் என்னுடைய வருகைக்காகக் காத்திருக்கும். அந்த இல்லத்திலே உள்ள பெரியவர்கள், வாலிபர்கள், தாய்மார்கள் கூட்டமாக வெளியே வந்து நின்று, என்னை வரவேற்று, ஒரு நிமிடம் உள்ளே வந்து விட்டுச் செல்லுங்கள் என்று உபசரிப்பார்கள். முடிந்தால் அன்றைக்கே சென்று வருவேன், இல்லாவிட்டால் இன்னொரு நாள் அதற்காகவே தனியாகச் சென்று வருவேன்.

இவ்வாறு தமிழகத்திலே உள்ள பத்து மாவட்டங்களில் இந்த இல்லங்கள் அப்போது அமைக்கப்பட்டு தொழுநோய் இரவலர்கள் மறுவாழ்வு இல்லம் என்ற பெயரால் 1971 ஆம் ஆண்டு முதல் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

அதனைத் தொடர்ந்து, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பர்கூரிலும்; சேலம் மாவட்டத்தில், தேவிபாக் குறிச்சியிலும்; திருவண்ணாமலை மாவட்டத்தில், மல்ல வாடியிலும்; தஞ்சை மாவட்டத்தில், மனை ஏறிப்பட்டியிலும்; புதுக்கோட்டை மாவட்டத்தில், புதுக்கோட்டையிலும்; தருமபுரி மாவட்டத்தில், செல்லியம் பட்டியிலும்; விழுப்புரம் மாவட்டத்தில், உளுந்தூர்பேட்டையிலும்; ஈரோடு மாவட்டத்தில், விண்ணப்பள்ளியிலும்; மதுரை மாவட்டத்தில், யா.புதுப்பட்டியிலும் என்று அரசு மறுவாழ்வு இல்லங்கள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன.

## ஊனமுற்றோர் நல்வாழ்வுத் திட்டம்

இதற்குப் பிறகு தான் 1972ஆம் ஆண்டில் கண்ணொளி வழங்கும் திட்டம் என்ற திட்டத்தைத் தொடங்கி, ஒவ்வொரு நகரத்திலும், நகரத்தைச் சுற்றியுள்ள கிராமப் பகுதிகளிலும் மாவட்டத் தலைநகரங்களிலும் மாவட்டத்திலே இருக்கின்ற வட்டத் தலைநகரங்களிலும், வட்டத்தைச் சுற்றியுள்ள குக்கிராமங்களிலும் கண்ணொளி முகாம்களை அமைத்து ஈவு இரக்கமுள்ள கண் மருத்துவர்களையெல்லாம் அங்கே கூட்டம் கூட்டமாக அனுப்பி வைத்து அவர்கள் அந்த வட்டாரத்திலே இருக்கின்ற கண் பார்வை இழந்தவர்கள், கண்ணொளி மங்கியவர்கள், கண்ணிலே கோளாறு ஏற்பட்டவர்கள் என்று அப்படிப்பட்டவர்களுக்கெல்லாம் சிகிச்சை அளிக்கின்ற ஒரு பிரமாண்டமான திட்டம் தமிழகம் முழுதும் 72 ஆம் ஆண்டிலிருந்து நடத்தப்பட்டது.

அதைத் தொடர்ந்து தான் 1974 ஆம் ஆண்டில் ஊனமுற்றோர் நல்வாழ்வுத் திட்டம் அரசின் சார்பில் அறிமுகப்படுத்தப்பட்டு அத்திட்டத்தின் மூலம் கைகால் ஊனமடைந்தவர்களுக்கு மூன்று சக்கர சைக்கிள்கள், சக்கர நாற்காலிகள், அலுமினிய தாங்கிகள் (Crutches) ஆகியவைகளும், பார்வையற்றவர்களுக்குக் கறுப்புக் கண்ணாடிகளும், ஊன்றுகோல்களும், செவித் திறன் குறையுடையோருக்கு காதுகேட்கும் கருவிகளும் இலவசமாக வழங்கப்படத் தொடங்கிற்று அதுவும் அரசின் சார்பிலேயே.

அதன் தொடர்ச்சியாகத் தான் கையால் இழுக்கின்ற – மனிதனை வைத்து மனிதனே இழுக்கின்ற கை ரிக்ஷாக்களை ஒழிக்கும் திட்டத்தையும் – உத்தமர் காந்தியடிகள் சொன்னார் – மனிதனை வைத்து மனிதன் இழுக்கும் கொடுமை இன்னமும் சுதந்திர இந்தியாவிலே இருக்கலாமா என்று கேட்டாரே, அந்தக் கேள்விக்குப் பதிலாக சென்னை, திருச்சி, மதுரை, கடலூர் போன்ற நகரங்களில் உள்ள ஆயிரக்கணக்கான கை ரிக்ஷாக்களை ஒழித்து விட்டு, அந்தக் கை ரிக்ஷாக்களுக்குப் பதிலாக அதை இழுத்தவர்களுக்கு இலவசமாக சைக்கிள் ரிக்ஷா கொடுக்கின்ற அந்தத் திட்டத்தையும் நான் பொறுப்பிலே இருந்த அந்தக் காலத்தில் நடத்தினேன் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

அதன் தொடர்ச்சியாக மன வளர்ச்சி குன்றியவர்களுக்கு பல நன்மைகள் – அவர்களுடைய தேவைகளை உணர்ந்து அவர்கள் அவ்வப்போது வைத்த கோரிக்கைகளின் அடிப்படையில் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

தாம்பரம் சானடோரியம் பகுதியில் அரசு சேவை இல்ல வளாகத்திலே மனவளர்ச்சி குன்றியோருக்கான அரசாங்க நிறுவனம் (Govt. Institute for the Mentally Retarded) ஒன்று இப்போதும் செயல்பட்டு வருகிறது. இதுதவிர, மனவளர்ச்சி குன்றியோருக்காக தமிழகத்தில் 108 தனியார் தொண்டு நிறுவனங்கள் சார்பில் சிறப்புப் பள்ளிகள் உள்ளன. இவைகளில், 18 தனியார் சிறப்புப் பள்ளிகளுக்கு உரிய ஆசிரியர் ஊதியத்தை தமிழக அரசு வழங்குகிறது.

இவைகள் எல்லாம் குறிப்புகள். இதை மாத்திரம் நான் மனவளர்ச்சி குன்றியவர்களுக்கு மன நிம்மதி அளிக்கக் கூடிய உதவி என்று கூறமாட்டேன். மனவளர்ச்சி





குன்றியோரின் பெற்றோருக்கு குறைந்த வட்டியில் கடன் வழங்கப்படுகிறது என்ற குறிப்பு இருந்தாலும் கூட, இவைகள் போதுமானவைகள் அல்ல என்ற காரணத்தினால்தான், நம்முடைய வரதராசன் அவர்கள் என்னை வள்ளுவர் கோட்டத்திற்கு வரவேண்டுமென்று அழைத்திருக்கிறார் என்று எனக்கு நன்றாகத் தெரியும்.

பாதிக்கப்பட்டவர்களை, கஷ்டப்படுகிறவர்களை வேறு வழியே இல்லாமல் திக்கற்று இருக்கின்றவர்களை காப்பாற்ற வேண்டும் என்கிற அந்த பொதுவான கொள்கை தான் எங்களுடைய தோழமைக் கட்சிகளின் கூட்டணி கொள்கை என்பதை நான் உங்களுக்குத் தெரியப்படுத்த விரும்புகிறேன். அவர் என்னை வேறு எதற்காகவும் அழைக்கவில்லை. என்னுடைய வீட்டிற்கு விருந்துக்கு வாருங்கள் என்று அழைக்கவில்லை. தேவைப்பட்டால் அழைப்பார், வசதிப்பட்டால் நானும் செல்வேன், அது வேறு விஷயம். ஆனால் அவர் இப்போது அழைத்தது உங்களுக்காக. உங்களைக் கண்டால் அரசின் சார்பாக ஏதாவது செய்ய முடியுமே, அவர்களுக்கு நாமும் உதவினோம் என்ற ஒரு நிலை ஏற்படுமே என்ற அந்த நல்ல உள்ளத்தோடுதான் என்னுடைய நண்பரும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளருமான தோழர் வரதராசன் அவர்கள் என்னை அழைத்தார்கள்.

யார் யார் இந்த நிகழ்ச்சிக்கு வருகிறார்கள் என்று கேட்டபோது, நம்முடைய ராம் அவர்கள் வருவதாகச் சொன்னார்கள். சமுதாயச் சீர்திருத்தத்தில் சமுதாயத்தில் இப்படிப்பட்ட முடமாகியிருக்கின்ற பிரிவுகளை கை தூக்கி விடுவதிலே ராம் அவர்களுக்கு ஆர்வம் உண்டு என்பதை நான் பல நிகழ்ச்சிகளிலே கண்டிருக்கின்றேன். அப்படிப்பட்ட நண்பரும் வருகின்ற காரணத்தால், அவர்களுக்கிடையே உங்களோடு கருத்துக்களை பரிமாறிக் கொள்கின்ற நல்ல வாய்ப்பு ஏற்படும் என்பதற்காகத்தான் இந்த நிகழ்ச்சியில் நான் உங்களைச் சந்திக்கும் வாய்ப்பினைப் பெற்றிருக்கின்றேன்.

## எனக்காக அல்ல, உங்களுக்காக

இங்கே என்னை முதலிலே வரவேற்று உரையாற்றிய நண்பர்கள் ஆறுகோடி தமிழர்களுக்கும் இன்றைக்கு தலைவராக, ஐந்தாவது முறை முதலமைச்சராக வந்திருப்பதை எல்லாம் பெருமையாகப் பேசினார்கள். நான் நானாக ஐந்தாவது முறை முதலமைச்சராக வந்து விடவில்லை. உங்களுடைய தயவால்தான் வந்திருக்கிறேன். நீங்கள்தான் என்னை உட்கார வைத்திருக்கிறீர்கள். என்னை நீங்கள் உட்கார வைத்திருப்பது, எனக்காக அல்ல, உங்களுக்காக என்று நான் கருதுகிறேன்.

உங்களுக்காக என்று சொன்னால் அது உங்களுடைய சுயநலத்திலே போய் முடிந்து விடும். உங்களுக்காக நீங்கள் என்னை உட்கார வைத்திருப்பதாக நான் உணர்ந்தால் தான் நீங்கள் என்னை உட்கார வைத்ததிலே அர்த்தம் உண்டு. இல்லாவிட்டால் அதற்கு அர்த்தம் இல்லை. எனவேதான் நீங்கள் என்னை அழைத்திருக்கிறீர்கள் என்றால், மறைமுகமாக அதற்கு அர்த்தம் என்னவென்றால், நீங்கள் வாய் திறந்து சொல்லாத பொருள் என்னவென்றால் உன்னை இந்த இடத்தில் உட்கார வைத்திருக்கிறோம், எங்களுடைய கஷ்டத்தைப் பார், உங்களை இந்த மாநாட்டிற்கு அழைத்தவர்கள் சொல்லக் கேள், எங்களுடைய கஷ்டத்தை நேரடியாகப் பார், உணரு, எங்களுடைய கஷ்டத்தைப் போக்க என்ன செய்யப் போகிறாய்? இந்தக் கேள்விகளை நீங்கள் வாயால் கேட்காவிட்டாலும், உங்களுடைய உருவங்கள் என்னைக் கேட்க வைத்திருக்கின்றன என்பதை நான் தெரிந்து கொண்டேன்.



③

சமுதாயத்திலே எல்லாமே செழிப்பாக இருக்கிறது, வளமாக இருக்கிறது என்று எண்ணுகிறவன் நல்ல கவிஞனாக நல்ல கவிதைகளைப் பாட முடியும். ஆனால் உங்களை உற்று நோக்கும்போது நீங்கள் ஒவ்வொருவரும் எவ்வளவு ரணமாக, புண்ணாக, இதயம் படைத்தவர்களாக இருக்கிறீர்கள் என்பதை நான் உணருகின்றேன். நான் உங்களைப் போல இருப்பதாக உங்களைப் பார்க்கும்போது உணருகின்றேன். அப்படி உணருகின்ற காரணத்தால்தான் உங்களுடைய கஷ்டத்தில், உங்களுடைய சிரமங்களில் பங்கேற்க வேண்டுமென்று விரும்புகிறேன். அப்படி பங்கேற்கின்ற பக்குவம் படைத்தவர்களால் தான் ஒரு நாட்டைப் பரிபாலிக்க முடியும். அப்படிப்பட்ட உள்ளம் படைத்தவர்களால் தான் ஒரு நாட்டினுடைய சேமநல அரசு என்பார்களே, அந்த அரசை உருவாக்க முடியும் என்பதை நான் உணராதவன் அல்ல.

**ஆச்சரியக் குறியும் – கேள்விக் குறியும்**

எங்களுடைய தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் அடிக்கடி சொல்வார்கள். "சாலையோரத்திலே வேலையற்றதுகள், வேலையற்றதுகளின் உள்ளத்திலே விபரீத எண்ணங்கள், அரசே அது தான் காலக்குறி" என்று சொல்வார்கள். அதற்கு என்ன பொருள்? வேலையற்று சாலையோரத்திலே காலை சுருட்டிக் கொண்டு படுத்திருக்கிறானே, அவனுடைய உள்ளத்திலே விபரீத எண்ணங்கள் ஏற்படும். அந்த விபரீத எண்ணங்கள் ஒரு நாட்டில் புரட்சியைத் தோற்றுவிக்கும். அந்தப் புரட்சி அந்த நாட்டின் மகுடத்தையே உருட்டி விடும், மகுடத்தையே மாற்றி அமைத்து விடும் என்ற இவ்வளவையும் உள்ளடக்கியதுதான் அந்த வரிகள்.

நான், "நாம்" என்கிற ஒரு திரைப்படத்திற்கு கதை வசனம் எழுதினேன். அந்தப் படத்தில் ஒரு புரட்சிக்காரன் வருவான். அவன் ஒரு ஜமீன்தாரிடத்திலே போரிடுவான். போரிடும்போது ஜமீன்தார் இவனைப் பார்த்து முறைப்பார், ஆத்திரப்படுவார், அட்டகாசமாகச் சிரிப்பார், விரட்டுங்கள் என்பார். ஆத்திரத்தால் விழிகளை அகல விரிப்பார். என்னடா ஆச்சரியப்படுகிறாய் என்று அவர் கேட்பார். ஜமீன்தார் அவர்களே, ஆச்சரியக்குறி தான், கேள்விக் குறியாக மாறும், மறந்து விடாதீர்கள், இன்னும் ஒன்றை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். ஆச்சரியக் குறிக்கும், கேள்விக் குறிக்கும் அதிக வித்தியாசம் இல்லை என்றும் சொல்வான்.

இவைகளையெல்லாம் சொல்லக் காரணம் உங்களுடைய உள்ளத்திலே இன்றைக்கு நீங்கள் தாங்கிக் கொண்டிருக்கின்ற வேதனை, கவலை, வருத்தம், வாட்டம் இவை அத்தனையும் பிரவாகம் எடுத்தால், பெருவெள்ளமாக மாறினால் என்ன ஆகும்? என்பதை உணருகின்ற ஒவ்வொரு அரசும் தன் உணர்வுகளை ஒடுக்கி வைத்துக் கொண்டு, தன்னுடைய சுகபோகங்களுக்காகத்தான் இந்தப் பதவியிலே இருக்கிறோம் என்று தவறாக எண்ணாமல், ஏழைபாழைகள், இல்லாத பெருமக்கள் கோடானு கோடி மக்கள் இந்த நாட்டில் ஒடேந்தி நிற்கிறார்கள், ஒடேந்தி பிழைக்கக் கூட முடியாமல் கண்ணற்ற கபோதிகளாக நிற்கிறார்கள், காதற்ற செவிடர்களாக இருக்கிறார்கள், நடமாட முடியாத நொண்டிகளாக நிற்கிறார்கள், கையற்ற முடமாக நிற்கிறார்கள்.

இவை அத்தனையும் இருந்தாலும் என்ன நடக்கிறது தனக்கு முன்னால் என்று தெரிந்து கொள்ள முடியாத மன நிலை குறைந்தவர்களாக இருக்கிறார்கள் என்ற இவைகளை எல்லாம் எண்ணிப் பார்க்கும்போது மனித சமுதாயத்திலே நாமும் அவர்களோடு சேர்ந்திருக்கிறோம் என்பதை எண்ணினால் தான் ஈவு, இரக்கம், பச்சாதாபம் இவைகள் எல்லாம் இதயத்திலே ஊறும். அப்படி ஊறுகின்ற நிலையிலே உங்களிடத்திலே நான் சொல்கிறேன். உங்களுடைய கோரிக்கைகள் இங்கே படிக்கப்பட்டது, நண்பர்களால் சொல்லப்பட்டது. நான் அவைகளை எல்லாம் உதாசீனப்படுத்துகிறவன் அல்ல.

இவ்வளவையும் கேட்டு விட்டு, உங்களையும் பார்த்து விட்டு, இந்தக் கோரிக்கைகளுக்காக பரிந்துரை செய்த நம்முடைய வரதராசன், ராம் ஆகியோருடைய பேச்சுக்களையும் கேட்டுவிட்டு, அதற்குப் பிறகும் முடிந்தால் பார்க்கிறேன் என்று சொல்லிவிட்டுப் போனால் யார் மன வளர்ச்சி அற்றவர்கள், நீங்களா? நானா? என்பது சந்தேகமாக ஆகிவிடும். ஆகவே மன வளர்ச்சி குன்றாத காரணத்தால், மன வளர்ச்சி குன்றியவர்களே, உங்களை என்னுடைய சகோதரர்களாக, உங்களை என் உடன் பிறப்புக்களாக கருதி என்னால் முடிந்ததை என்று சொல்லமாட்டேன், எவ்வளவு முடியுமோ அவ்வளவையும் உங்களுக்காகச் செய்வேன்.

இப்போது அறிவிக்காததற்கு காரணம் உண்டு. இன்னும் 25 நாட்களில் வரவு – செலவுத் திட்டம் படிக்கப் படவிருக்கிறது. இந்தக் கோரிக்கைகள் எல்லாம் வெற்றிகரமான விளைவாக, இவைகளை எல்லாம் நிறைவேற்றப்படும் என்ற செய்தியாக வரவிருக்கின்ற பட்ஜெட்டிலே படிக்கப்படும் என்பதை உங்களுக்கு நான் உறுதியாகத் தெரிவித்து, அந்தப் பட்ஜெட் விவசாயிகளுக்காக இருந்தாலும், நெசவாளர்களுக்காக இருந்தாலும், படித்துப்பட்டம் பெற்றவர்களுக்காக இருந்தாலும் பாட்டாளி மக்களுக்காக, தொழிலாளத் தோழர்களுக்காக இருந்தாலும் கூட, ஒரு பகுதி உங்களுக்காகவும் அந்த பட்ஜெட் இருக்கும் என்பதை மாத்திரம் நான் உங்களுக்குச் சொல்லி விடைபெறுகிறேன். ✶



# ஆகஸ்ட் மாதத்திற்குள் தகவல் தொழில்நுட்ப சாலைப்பணிகள் நிறைவுறும்



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள்
சென்னை, மத்திய கைலாஷ்-சிறுசேரி தகவல் தொழில்நுட்ப சாலைப்பணிகளை 3.3.2007 அன்று நேரில் சென்று ஆய்வு செய்தார். அதனையடுத்து, செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு:

*செய்தியாளர்* : இன்று மாலையில் சாலைப் பணிகளையெல்லாம் சுற்றிப் பார்த்தீர்களே. பணிகள் வேகமாக நடைபெறுகிறதா?

*முதலமைச்சர்* : மத்திய கைலாஷ் கோவில் உள்ள பகுதியிலிருந்து சிறுசேரி வரையிலே சாலைப் பணிகளை செய்து முடிக்க 20 கிலோ மீட்டருக்கு 205 கோடி ரூபாயில் திட்டம் போட்டிருந்தார்கள். ஆனால் ஆட்சி மாற்றம் வரை 5 கோடி ரூபாய் அளவிற்குத் தான், அதாவது மொத்தப் பணியில் 8 சதவிகித அளவிற்குத் தான் செய்திருந்தார்களே தவிர, அதற்கு மேல் வேலை நடக்கவில்லை. தற்போது தி.மு.கழக ஆட்சி வந்த பிறகுதான் இதுவரை 20 சதவிகித வேலையை முடித்திருக்கிறோம். வருகின்ற ஆகஸ்ட் மாதத்திற்குள் முழுப் பணியும் நிறைவுறும்.

பெரும்பாலும் அங்கே அமைக்கப்பட்டுள்ள ஐ.டி. தொழில் நிறுவனங்களில் இன்னும் மூன்றாண்டு காலத்திற்குள் மூன்று இலட்சம் பேர்கள் அந்தப் பகுதியில் வேலை பார்க்கின்ற நிலை உருவாகும். அதன் காரணமாக அந்தப் பகுதி வளரும். தற்போது கட்டப்பட்டுள்ள ஐ.டி. தொழிற்சாலைகளை அன்னியில் மேலும் தொழிற்சாலைகளை உருவாக்குவதற்கு காலி இடங்கள் அந்தப் பகுதியிலே இருக்கிறதா என்பதையும் பார்த்து வந்திருக்கிறோம்.

ஐ.டி.யைப் பொறுத்தவரையில் இந்தப் பணிகள் எல்லாம் முழுமையாக நிறைவேற்றப்பட்டுவிட்டால், உலகத்திலேயே அனைவருடைய கவனத்தையும் ஈர்க்கத்தக்க அளவிற்கு இந்த இடம் சிறப்பாகத் திகழும்.

தாம்பரம்–பள்ளிக்கரணை ரெயில்வே மேம்பாலப் பணிகளையும் பார்வையிட்டேன்.

*செய்தியாளர்* : பள்ளிக்கரணை பகுதியில் பார்த்தீர்களே?

*முதலமைச்சர்* : பள்ளிக்கரணையில் 12 கோடி ரூபாய் செலவில் மேம்பாலம் ஒன்று கட்டப்படுகிறது. அந்தப் பணிகளையும் பார்த்தோம். அதுபோலவே 35 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தாம்பரத்தில் ரயில்வே மேம்பாலம் ஒன்று கட்டப்படவுள்ளது. அந்த இடங்களையும் பார்த்தோம்.

*செய்தியாளர்* : தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் பணிகள் திருப்திகரமாக உள்ளதா?

*முதலமைச்சர்* : முன்பு வேலையே நடைபெறாமல் இருந்தது. இப்போது வேலை திருப்திகரமாகவும் துரிதமாகவும் நடைபெற்றுக் கொண்டுள்ளது. ●




# நீதிமன்றத்திற்கு எல்லா வசதி வாய்ப்புகளும் ஏற்படுத்தித் தரப்படும்

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
## கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்

இன்று நடைபெறுகின்ற இந்த இனிய விழாவில் நான் கலந்துகொள்வதில் பெருமையடைகின்றேன். பூரிப்பும் கொள்கிறேன். பெருமைக்குக் காரணம் நம்முடைய உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி மாண்புமிகு கே.ஜி. பாலகிருஷ்ணன் அவர்களை தமிழகத்தில் வரவேற்பதில் தமிழக முதலமைச்சர் என்ற முறையில் பெருமையடைகிறேன்.






அவர் சில நாட்களுக்கு முன்பு கேரளத்தில், கேரள முதலமைச்சரால் வரவேற்கப்பட்ட ஒரு படக்காட்சியை பத்திரிகைகளிலே பார்த்த போது எனக்குக் கொஞ்சம் பொறாமையாக இருந்தது. தமிழக முதலமைச்சராகிய நாமல்லவா முதலில் அவரை இங்கே வரவேற்றிருக்க வேண்டும், என்ன இருந்தாலும் கேரளத்தில் அல்லவா அவரை முதலில் வரவேற்று விட்டார்கள் என்று கொஞ்சம் பொறாமையாக இருந்தது. ஆனால் இன்றைக்கு அந்த பொறாமை உணர்வு என்னை விட்டு நீங்கி விட்டது. அவர்கள் இங்கே வந்திருந்து நம்மையெல்லாம் வாழ்த்துகின்ற வாய்ப்பை அவர் நமக்கு வழங்கியிருப்பதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று இந்த நீதிமன்றத்தை நான் நினைத்துப் பார்க்கிறேன். நான் ஐந்தாறு முறை இந்த நீதிமன்றத்திற்கு வந்திருப்பதை இங்கே நம்முடைய உச்ச நீதிமன்ற நீதிபதி மாண்புமிகு லெட்சுமணன் அவர்களும் சுட்டிக்காட்டினார்கள். மற்றவர்களும் பேசும்போது எடுத்துக்காட்டினார்கள். இந்த நீதிமன்றத்திற்கும் எனக்கும் இயல்பாகவே ஒரு தொடர்பு இருக்கிறது. ஏனென்றால் இந்த உயர் நீதிமன்றத்தின் வாயிற்புறத்திலே இருக்கின்ற சிலை, நீதிக்கு அடையாளமாக மனு நீதிச் சோழனுடைய சிலை. மனு நீதிச் சோழன் திருவாரூரை ஆண்ட மன்னன், நான் திருவாரூர்க்காரன். எனவே எனக்கும் நீதிக்கும் உள்ள தொடர்பை – நீதியை உணர்ந்தவர்கள், நீதியை அறிந்தவர்கள் நிச்சயமாக அறிவீர்கள் என்றே நான் நம்புகிறேன்.

இன்றைக்கு இந்த வளாகத்தில் டிஜிட்டல் தகவல் பலகையை நான் திறந்து வைத்திருக்கிறேன். ''டிஜிட்டல்'' தகவல் பலகை என்பது ஒரு நவீன முறையில் இயங்கக் கூடிய இயந்திரம். ஒவ்வொரு நீதிமன்றத்திலும் அப்போது என்ன வழக்கு நடைபெறுகிறது என்பதை, இன்னொரு நீதிமன்ற வளாகத்தில் இருந்து கொண்டே தெரிந்து கொள்ள வழக்கறிஞர்களுக்கோ அல்லது நீதிபதிகளுக்கோ மெத்தவும் அது பயன்படும். எந்தெந்த நீதிமன்ற வளாகத்திலே என்னென்ன வழக்குகள் நடைபெறுகின்றன என்பதை, அதற்கு முன்பு என்ன வழக்கு நடைபெற்றது என்பதையும் தெரிந்து கொண்டு வழக்கறிஞர் தேவையான நீதிமன்ற வளாகத்திற்குச் செல்ல இந்த ''டிஜிட்டல்'' தகவல் பலகை பெரிதும் பயன்படும் என்பதை நான் அறிந்த போது மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன்.

இந்தக் கருவியால் நன்மையும் உண்டு, தீமையும் உண்டு. என்ன நன்மை என்றால் நாம் அதிலே கலந்து கொள்ள வேண்டுமே என்ற கவலை இருந்தால், எந்த நீதிமன்றத்தில் எந்த வழக்கு நடைபெறுகிறது என்பதை அறிந்து உடனடியாக அங்கே விரைகின்ற நன்மை வழக்கறிஞருக்கு ஏற்படும். அதை எப்படியாவது தவிர்க்க வேண்டுமென்று மனதிற்குள் எண்ணியிருந்தால் அது இந்தக் கருவியின் காரணமாக இயலாமல் போய் விடும். இது தீமை. இப்படி இரு சாராருக்கும் பயன்படக் கூடிய தகவல்

பலகை தான் டிஜிட்டல் தகவல் பலகை. இந்த நவீனக் கருவியை இந்த நீதிமன்றத்திலே ஒவ்வொரு கூடத்திலும், மேலும் முக்கியமான ஆறு இடங்களிலும், அது போலவே மதுரை மாநகரில் இருக்கின்ற நீதிமன்றத்தில் இரண்டு இடங்களிலும் ஏற்படுத்தி, அதைத் திறந்து வைக்கும் நிகழ்ச்சியில் என்னையும் கலந்துகொள்ள செய்ததற்காக என்னுடைய நன்றியை நான் அவர்களுக்கெல்லாம் கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்த டிஜிட்டல் தகவல் பலகைகள் இணைய தளத்தோடும் இணைக்கப்பட்டிருக்கின்ற காரணத்தால் வழக்கில் தொடர்புடைய பொதுமக்களுக்குக் கூட நீதிமன்றத்திற்கு வெளியே இருந்தே, தங்களுடைய வழக்கு எங்கே நடைபெறுகிறது, இன்று நடக்கிறதா இல்லையா என்பதைத் தெரிந்து கொள்ளக் கூடிய வசதி வாய்ப்புகள் எல்லாம் இந்த டிஜிட்டல் தகவல் பலகை மூலமாகப் பெற முடியும். இதிலிருந்து விஞ்ஞானத்தின் வளர்ச்சியிலே ஏற்பட்டிருக்கின்ற விசித்திரங்களை நாம் மேலும் மேலும் உணர்ந்து பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இன்றைக்கு தமிழகத்திலே மாத்திரமல்ல, இந்தியாவிலே ஐ.டி. எந்த அளவிற்கு விரிவடைந்திருக்கிறது என்பதை நான் சொல்லத் தேவையில்லை. நான் அதைப் பற்றி ஒரேயொரு நிகழ்ச்சியை மாத்திரம் சொல்ல வேண்டுமேயானால், எனக்கே ஒரு ஆவல், சென்னை மாநகரத்தைச் சுற்றிப் பார்த்து, சில இடங்களில் ஐ.டி. தொழிற்சாலைகள் அமைந்திருக்கின்ற பகுதிகளையும் இன்னும் தொழிற்சாலைகளை அமைக்க இடம் கிடைக்குமா என்ற நிலைமைகளையும் ஆராய நானும், நண்பர்களும் நேற்று அதிகாரிகளை அழைத்துக் கொண்டு சென்னையைச் சுற்றிவர நேற்று மாலையிலே புறப்பட்டேன்.

மத்திய கைலாஷ் கோவில் உள்ள பகுதியிலிருந்து சிறுசேரி வரையிலே சாலைப் பணிகள் எந்த அளவிற்கு நிறைவேறியிருக்கின்றன, எப்போது முடிவடையும் என்பதையெல்லாம் சுற்றிப் பார்த்து, ஆங்காங்கு அதிகாரிகளை அழைத்துப் பேசி, பணியாற்றிய விவரத்தைக் கேட்டுக் கொண்டு, அதை ஆய்ந்து வீடு திரும்பினேன். அப்போது என்னிடம் அதிகாரிகள் சொன்ன விவரம் என்னவென்றால், அந்தப் பகுதியில் சிறுசேரி வரையில் சாலைப் பணிகளைச் செய்து முடிக்க ஏறத்தாழ 20 கிலோ மீட்டருக்கு 205 கோடி ரூபாயில் திட்டம் தீட்டியிருந்ததாகவும், ஆனால் அந்தத் திட்டம் இதுவரையிலே எவ்வளவு நிறைவேறியிருக்கிறது என்றால், 8 சதவிகித அளவிற்குத் தான் நிறைவேறியிருக்கிறது என்றும், இந்த ஆட்சி மறுபடியும் வந்த பிறகு, இந்த ஆறேழு மாத காலத்தில் 20 சதவிகித அளவிற்கு பணி நிறைவேறியிருப்பதாகவும் வருகின்ற ஆகஸ்ட் மாதத்திற்குள் முழுப் பணியும் நிறைவேறி இந்த 205 கோடி ரூபாயும் இந்தத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகை செலவழிக்கப்பட்டு, சாலைப் பணிகள் அந்தப் பகுதியிலே முடிவுறும் என்கிற மகிழ்ச்சியான செய்தியை எனக்கு அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

அது மாத்திரமல்ல, இன்னொரு மகிழ்ச்சியான செய்தி. ஒரு மூன்று மாத காலத்தில் உலகத்திலேயே இந்தப் பகுதி தான் இந்த ஐ.டி. யைப் பொறுத்தவரையில் பிரதானப் பகுதியாக கருதப்படும் என்றும் சொன்னார்கள். மூன்று இலட்சம் பேருக்கு அந்தப் பகுதியிலே வேலைவாய்ப்பும் ஏற்படும், உருவாகும் என்ற என் உள்ளம் மகிழத்தக்க செய்தியையும் சொன்னார்கள். ஆகவே இன்றைக்கு ஐ.டி. எந்த அளவிற்கு சிறந்து விளங்குகிறது, எந்த அளவிற்கு மக்களின் தேவைகளில் ஒன்றாக ஆகி விட்டிருக்கிறது என்பதையெல்லாம் எண்ணும்போது அந்த ஐ.டி. துறையின் அமைச்சராக இருக்கின்ற தம்பி தயாநிதி மாறன் மூன்று கோடி ரூபாய் இந்த உயர் நீதி மன்றத்திற்காக நிதி ஒதுக்கீடு செய்தார் என்பதை தலைமை நீதிபதி அவர்கள் எடுத்துச் சொல்லும் போது நான் அகமகிழ்ந்தேன்.

அவர் தமிழகத்திற்கு மாத்திரமல்லாமல், இந்தியா முழுமைக்கும் இந்தப் பணியிலே ஈடுபட்டிருக்கின்ற காரணத்தால் இந்தப் பணி வெகு விரைவிலே இந்தியாவை ஐ.டி.யில் சிறந்த நாடுகளில் ஒன்றாக ஆக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது. அந்த நம்பிக்கை வீண் போகாது என்று நான் கருதுகிறேன்.

இந்த வளாகத்தில் என்னென்ன பணிகள் இன்னும் நிறைவேற வேண்டும் என்பதை நம்முடைய மாண்புமிகு தலைமை நீதிபதி அன்பிற்குரிய ஷா அவர்கள் இங்கே எடுத்துச் சொன்ன போது ஒன்றைச் சொன்னார்கள். கடந்த கால நிலையில்



பட்ஜெட்டில் இவைகள் எல்லாம் குறிப்பிடப் படுவதில்லை, இனிமேல் இந்தப் பெரிய செலவினங்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் பட்ஜெட்டில் குறிப்பிடப்பட்டு ஒதுக்கப்பட வேண்டும் என்ற கருத்தைச் சொன்னார்கள். இந்தக் கருத்தை அவர்கள் என்னிடத்திலே முன்பு ஒரு முறை சொல்லியிருக்கிறார்கள். கடந்த காலத்திலே நடந்தவைகளையெல்லாம் மறந்து விட வேண்டும். நிச்சயமாக இனி அப்படி பட்ஜெட்டில் ஒதுக்கப்படுகிற தொகை எவ்வளவு இருக்க வேண்டுமென்று நீங்கள் கருதுகிறீர்களோ அந்தத் தொகையை முழுமையாக, உடனடியாக ஒதுக்கப்படாவிட்டாலும், ஒரு மொத்தத் தொகை எவ்வளவு என்று குறிப்பிட்டு – அந்த மொத்தத் தொகையைப் படிப்படியாக – அடுத்தடுத்த ஆண்டுகளில் தொடர்ந்து செலவழிக்கப்படும் என்ற உறுதியை நான் இந்த மாமன்றத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நான் இதைச் சொல்வதற்குக் காரணம், இப்போது பட்ஜெட் தயாரித்துக் கொண்டிருக் கிறோம். பட்ஜெட் இன்னும் இருபது, இருபத்தைந்து நாட்களில் சட்டப்பேரவையிலே படிக்கப் படவிருக்கிறது. அப்படி படிக்கப்படுகிற நேரத்தில் நானே இப்போது இவ்வளவு ரூபாய் கேட்டீர்களே, இவ்வளவு ஒதுக்குகிறோம் என்று சொன்னால், அப்போது பட்ஜெட் ரகசியம் வெளியாகிவிட்டதென்று என் மீது வழக்கு உங்களிடத்திலேயே வரும். அந்தச் சங்கடத்தை உங்களுக்கு ஏற்படுத்த வேண்டா மென்பதற்காகத்தான் நான் படிப்படியாக அந்தத் தொகை இரு நூறு கோடி என்றாலும், முன்னூறு கோடி என்றாலும், இந்த ஆண்டு நிச்சயமாக ஐம்பது கோடி ரூபாய்க்குக் குறையாமல், இந்தச் செலவினங் களுக்காக ஒதுக்கப்படும் என்பதையும், இந்த வளாகத்தில் நீதிமன்றத்தின் தேவைகளுக்கான எல்லா வசதி வாய்ப்புகளும் ஏற்படுத்தித் தரப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏற்கெனவே 1996ஆம் ஆண்டு, இந்த நீதிமன்றத்தின் கோரிக்கையை ஏற்று, சென்னை உயர் நீதிமன்றம் கணினி மயமாக ஆக்கப்பட்டது என்பதையும் நான் நினைவூட்டுகிறேன். அப்போது என்னுடைய தலைமையிலேதான் ஆட்சி இருந்தது.

பிறகு 2006இல் அதே தி.மு.கழக ஆட்சியில் 37 இலட்சம் ரூபாய் செலவில் சென்னை உயர்நீதி மன்றத்திற்கு கணினிகள் வழங்கப்பட்டது.

3.10.2006இல் மதுரை உயர் நீதிமன்றம் 69 இலட்சம் ரூபாய் செலவில் கணினி மயமாக்கப்பட்டது.



10.10.2006இல் 2 கோடி ரூபாய் செலவில் சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் கட்டடம் கட்ட ஆணை பிறப்பிக்கப்பட்டு, அதற்கான அடிக்கல் நாட்டு விழா இன்றைக்கு நடைபெற்றிருக்கின்றது. அதை நம்முடைய உச்ச நீதிமன்ற நீதிபதி மேன்மைமிகு பாலகிருஷ்ணன் அவர்கள் நாட்டியிருக்கின்ற காரணத்தால் அவருடைய கைராசி என்று சொல்லமாட்டேன், அவருடைய திறன், அவருடைய அறிவாற்றல், அவருடைய நம்பிக்கை இவற்றின் அடிப்படையிலே இந்த அடிக்கல் நாட்டு விழா – பல இடங்களிலே வேறு பலரால் அடிக்கல் நாட்டப்பட்டவை, அடிக்கல்லாகவே இருப்பதைப் போல இல்லாமல் – இங்கே விரைவிலே கட்டடம் எழும்ப என்னாலான உதவிகளை – என்னாலான உதவிகளையென்றால் தமிழக அரசின் சார்பான உதவிகளை நிச்சயமாக வழங்குவேன் என்ற உறுதியை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

நீதிக்கும் நிதிக்கும் அதிக வித்தியாசம் இல்லை. நிதி–நீதி; எனவே நிதி, நீதியைக் காப்பாற்றும். நீதி, நிதியின் பக்கம் இருக்கும். நீதியும் நிதியும் சேர வேண்டும், வேறு விவகாரத்திலே சேரக் கூடாது. நீதியை வளர்ப்பதிலே – நாட்டை வளர்ப்பதிலே – வளத்தைச் சேர்ப்பதிலே நீதியும் நிதியும் ஒன்று சேரும் என்ற நம்பிக்கையை நான் உங்களுக்கு வழங்கி, நம்முடைய உச்ச நீதிமன்றத்தினுடைய தலைமை நீதிபதி அவர்களுக்கு தமிழ் மக்களின் சார்பாக என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்து அதைப் போலவே நம்முடைய சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி அவர்களுக்கும் என்னுடைய வாழ்த்துக்களையும், என்னுடைய உறுதியையும் எடுத்துச் சொல்லி உங்கள் அனைவருக்கும் வணக்கம் கூறி என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்.

*– சென்னை, உயர்நீதிமன்றத்தில் 4–3–2007 அன்று டிஜிட்டல் தகவல் பலகையைத் திறந்துவைத்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை.*

## இதர மாநிலங்களுடன் ஒப்பிடுகையில் தமிழக நீதிமன்றங்களில் போதுமான வசதிகள் உள்ளன

மாண்புமிகு
உச்ச நீதிமன்ற
தலைமை நீதிபதி
திரு. **கே.ஜி.பாலகிருஷ்ணன்**
பாராட்டு



சட்ட அலுவலர்களுக்கான புதிய கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டி மாண்புமிகு உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி திரு.கே.ஜி.பாலகிருஷ்ணன் அவர்கள் பேசும்போது கூறியதாவது :–

*"பொதுமக்களுக்கு நீதித்துறை மீது அதிக நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் உள்ளது. நீதிபதிகளாகிய நாங்கள் எங்கள் பொறுப்புகளை நன்கு உணர்ந்துள்ளோம். தற்போது நீதிமன்றங்களில் அதிக எண்ணிக்கையில் வழக்குகள் வருகின்றன.*

*உச்சநீதிமன்றத்தில் ஆண்டு ஒன்றுக்கு 35 ஆயிரம் வழக்குகள் தாக்கல் செய்யப்படுகின்றன. ஆனால் 10 ஆண்டுகளுக்கு முன்பு வழக்குகளின் எண்ணிக்கை 25 ஆயிரமாக இருந்தது. வழக்குகளின் எண்ணிக்கை உயர்ந்துள்ள அளவுக்கு நீதிபதிகளின் எண்ணிக்கையோ, நீதிமன்றங்களின் எண்ணிக்கையோ அதிகரிக்கப்படவில்லை.*

*நீதிமன்றங்களில் தீர்ப்புகள் தாமதமாக வழங்கப்படுகிறது என்பது நீதிபதிகளாகிய எங்களுக்கு நன்கு தெரியும். நாங்கள் இதை உணராமல் இல்லை. தாமதம் ஆவதற்கு நீதித்துறை நிர்வாகத்தில் எங்கேயோ தவறு இருக்கிறது. அதனால்தான் இதுபோன்ற நிகழ்ச்சிகளை எங்கள் கோரிக்கையை தெரிவிக்கும் தளமாக பயன்படுத்திக் கொள்கிறோம்.*

*இதர மாநிலங்களுடன் ஒப்பிடும்போது தமிழ்நாட்டில் நீதிமன்றங்களில் போதுமான வசதிகள் செய்து கொடுக்கப் பட்டுள்ளன".*



# இந்தியாவிலே இருக்கின்ற நதிகளையெல்லாம் இணைக்க வேண்டும்

- மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள்

இன்று தஞ்சையில் நடைபெறுவது விவசாயத் தொழிலாளர்கள் – விவசாயிகள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத்திட்டத் தொடக்க விழாவா ? அல்லது இங்கே நம்முடைய மணிசங்கர் அய்யர் தொட்டு பல நண்பர்களும் எடுத்துக் கூறியதைப் போல, ஏறத்தாழ 38 ஆண்டுகால முயற்சிக்குக் கிடைத்த பலனுக்கான விழாதானா ? அல்லது மாநாடா ? மாநாடு என்றால் தஞ்சை மாவட்ட மாநாடா ? அல்லது காவிரி நதி தீரத்தினுடைய குடிமக்களெல்லாம் இணைந்திருக்கிற மாநாடா ? மாநில மாநாடா ? தமிழகமே தஞ்சைக்குத் திரண்டு வந்து மகிழ்ச்சியைத் தெரியப்படுத்துகின்ற விழாவா என்றெல்லாம் புரியாத வகையில் இந்த இடத்திலே அமர்ந்திருக்கின்றேன்.

தஞ்சையில் இந்த இடம் எனக்குப் புதிதல்ல. தஞ்சையே எனக்குப் புதிதல்ல. எனவே இப்படிப்பட்ட இந்த இடத்தில் இவ்வளவு பெரிய மக்கள் திரளை என்னுடைய பொது வாழ்க்கையிலே இன்றைக்குத்தான் முதன்முதலாகச் சந்திக்கின்ற வாய்ப்பைப் பெற்றிருக்கின்றேன். இதற்குக் காரணம், நான் ஏற்றிருக்கின்ற பொறுப்பை உங்களுடைய அன்பான ஆதரவால் உங்களுடைய பக்கபலத்தால் நிறைவேற்றிக் கொண்டு வருகின்றேன். அதற்கு நீங்கள் அவ்வப்பொழுது எனக்கு ஊக்கத்தையும் உற்சாகத்தையும் அளித்து வருகின்றீர்கள். அந்த வகையில் இன்றைக்கு இந்த விழாவிற்கு நாம் இட்டிருக்கின்ற தலைப்பு; "விவசாயத் தொழிலாளர்கள், விவசாயிகள் சமூகப் பாதுகாப்பு திட்டத்தினுடைய தொடக்க விழா" என்பதாகும்.

**விவசாயத் தொழிலாளர் நல வாரியம்**

1997 ஆம் ஆண்டு தி.மு.கழக ஆட்சியில் 'கோலப்பன் குழு' என்ற ஒரு குழுவை நாம் தொடங்கினோம். விவசாய சங்கங்களின் வேண்டுகோளை ஏற்று; அந்தச் சங்கத்திலே தொடர்பு கொண்டிருந்த கம்யூனிஸ்ட் கட்சியைப் போன்ற பல கட்சிகளுடைய கருத்தை ஏற்று அந்தச் சங்கத்தை மெருகேற்றிக் கொண்டிருந்த நம்முடைய துரைமாணிக்கம் போன்ற தோழர்களுடைய ஊக்க உணர்ச்சியை, அந்த உணர்ச்சியின் அடிப்படையில் வெளியிடப்பட்ட அந்த வேண்டுகோள்களை எல்லாம் ஏற்று 1997 ஆம் ஆண்டு கோலப்பன் குழு அமைக்கப்பட்டது. கோலப்பன் குழு எதற்காக "நான்



அமைக்கப்பட்டது என்றால் – ஏதோ கேட்டார்கள், ஒரு குழு அமைக்க வேண்டும் என்பதற்காக... என்று அமைக்கப்பட்டதல்ல. விவசாயிகளுடைய பிரச்சினைகளை ஆராய்ந்து, அவர்கள் ஒவ்வொரு நாளும் பெற வேண்டிய கூலி, அவர்களுடைய வாழ்வு அமைப்பு – இவைகளுக்கு ஏற்ப அரசு எப்படியெல்லாம் அவர்களுக்குத் துணை நிற்க வேண்டும் என்பதை எடுத்துரைக்க அந்தக் குழு அமைக்கப்பட்டு, பல பரிந்துரைகளை கோலப்பன் குழு அளித்தது. அந்தப் பரிந்துரைகளின் அடிப்படையில்தான் 2000ஆம் ஆண்டு "விவசாயத் தொழிலாளர் நல வாரியம்" அமைக்கப்பட்டது. 2000ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட அந்த வாரியம், விவசாயத் தொழிலாளர்களுடைய சமூகப் பாதுகாப்பு என்ற குறிக்கோளோடு 2001 ஆம் ஆண்டு திருத்தி அமைக்கப்பட்டு, தன்னுடைய பணிகளைத் தொடங்கியது. 2001 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் "இவ்வளவுதான் அமைத்துவிட்டாயே, கொஞ்ச நாள் ஓய்வு பெறு" என்று எனக்கு நீங்கள் ஓய்வு கொடுத்து விட்டீர்கள். அந்த ஓய்வு கொடுக்கப்பட்ட நேரத்தில் இந்த சமூகப் பாதுகாப்பு, விவசாயிகளுக்கும் விவசாயத் தொழிலாளர் களுக்கும் என்று சமூகப் பாதுகாப்புக்காக அமைக்கப்பட்ட இந்தத் திட்டம் ஒதுக்கி வைக்கப்பட்டது. ஏன் ஒதுக்கி வைத்து விட்டீர்கள் என்று விவசாயத் தொழிலாளர்கள், விவசாயப் பெருங்குடி மக்கள், அவர்களுக்காகப் பாடுபட்ட பல்வேறு அமைப்புகள், சங்கங்கள், கட்சிகள் அனைத்தும் வெளியிலும் குரல் கொடுத்து, சட்டப்பேரவையிலும் குரல் கொடுத்த பிறகு, நல்ல வேளையாக அடுத்த பொதுத் தேர்தல் வந்தது. 2006ஆம் ஆண்டு அந்தத் தேர்தலுக்கான அறிகுறிகள் வெள்ளி முளைத்தது போல் முளைத்த அந்த நேரத்தில் "மீண்டும் நாங்கள் இந்தத் திட்டத்தை கொண்டு வருகிறோம். எப்படி கொண்டு வருகிறோம் என்றால் கருணாநிதி அறிமுகப்படுத்திய திட்டத்தை அறவே ஒழித்து விட்டு, வேறு திட்டம் கொண்டு வருகிறோம்" என்று ஒரு திட்டத்தை கொண்டு வந்தார்கள். அந்தத் திட்டம் முழுமையான பயனை விவசாயிகளுக்கு அளிக்கவில்லை. ஆனால் விவசாயப் பெருங்குடி மக்கள் பழைய திட்டத்தை – முதலில் தி.மு.கழக ஆட்சியில் இருந்த போது அறிமுகப்படுத்தப்பட்ட அந்தத் திட்டத்தை மீண்டும் கொண்டு வாருங்கள் என்று சட்டப்பேரவையிலும், மன்றங்களிலும், சங்கங்களிலும் தீர்மானம் நிறைவேற்றி கேட்டுக் கொண்ட பிறகு நாம் இந்தத் திட்டத்தை 2001ஆம் ஆண்டில் கொண்டு வந்து இடையிலே அவதிகளுக்கு ஆளான அந்தத் திட்டத்தை 2006–2007 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே அறிவித்து விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் நலன் காக்க விவசாயத் தொழிலாளர் நல வாரியம் அமைக்கிறோம் என்று அமைத்து, அதற்கான ஒரு சட்டத்தை – இது சட்டமாக ஆக்கப்பட்டதன் முக்கிய நோக்கமே; இது வெறும் அமைப்பு என்று அறிவித்தால் ஆட்சிக்கு வருகின்றவர்களெல்லாம் அதை அகற்றிவிடமுடியும் என்பதற்காக சட்டமாக ஆக்கிவிட்டால் அவ்வளவு சுலபமாக அதை அகற்ற முடியாது. அதனால்தான் பெருந்தலைவர் காமராஜர் பெயரால் அவர் பிறந்த நாளில் மாணவர்களுக்கு கல்வி வளர்ச்சி நாள் என்று பள்ளிக்கூடங்களிலே விடுமுறை விடப்பட்டு, விழாவும் கொண்டாடுவோம். அதைக்கூட சட்டமாக ஆக்கிவிட்டது நம்முடைய ஆட்சி. அப்படி சட்டமாக ஆக்கியதற்கு என்ன காரணம் என்பதை நான் சொன்னேன், சட்டமாக ஆக்கினால்தான் அந்தப் பெயரை யாராவது மாற்றினால், ஏன் மாற்றினாய் என்று கேட்பதற்கு



சட்டசபையிலே ஆட்கள் இருப்பார்கள். வெளியிலிருந்து கூச்சல் போட்டால் அதை கேட்டுக்கொள்ளத் தயாராக இருக்கமாட்டார்கள். அப்படிப்பட்ட அரசுகளைப் பார்த்த அனுபவம் நமக்கு இருக்கின்ற காரணத்தால், காமராஜருடைய பிறந்த நாளை "கல்வி வளர்ச்சி நாள்" என்ற பெயரால் கொண்டாட வேண்டும் – ஒவ்வொரு பள்ளியிலும் கொண்டாட வேண்டுமென்ற அந்தத் திட்டத்தையே நாம் சட்டமாக்கினோம்.

### விவசாயிகளுக்கு அடையாள அட்டைகள்

அதைப்போலத்தான் விவசாயிகளுடைய வாழ்வை விவசாயத் தொழிலாளர்களுடைய வாழ்வை உறுதி செய்கின்ற, வளப்படுத்துகின்ற அவர்களுக்கு பல்வேறு நன்மைகளை நேரமறிந்து தருகின்ற இந்த அருமையான திட்டத்தையும் சட்டமாக நாம் சட்டப்பேரவையில் கொண்டு வந்து 29.12.2006இல் நிறைவேற்றி இருக்கின்றோம். அதைத் தொடர்ந்து தமிழகத்திலே உள்ள விவசாயிகள் ஏறத்தாழ 72 இலட்சம் விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளுடைய குடும்பங்களுக்கு புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டைகள் வழங்கும் பணி 29.12.2006இல் தொடங்கப்பட்டு இதுவரையில் 51 இலட்சத்து 18 ஆயிரத்து 929 விவசாயத் தொழிலாளர்கள், விவசாயிகளுடைய குடும்பங்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டு விட்டன என்பதை இந்த மாபெரும் கூட்டத்தில் மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடையாள அட்டை வழங்குகின்ற பணி நின்றுவிடவில்லை. தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. இத்திட்டத்தில் உறுப்பினராகச் சேருவதற்கு விவசாயத் தொழிலாளர்களும் விவசாயிகளும் உறுப்பினர் கட்டணமோ, கட்டணமோ செலுத்தவேண்டியதில்லை. மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை உறுப்பினர் பதிவை அவர்கள் புதுப்பிக்க எந்தவொரு கட்டணமும் செலுத்தத் தேவையில்லை. இந்தத் திட்டத்திலே சேர்க்கப்படும் அனைத்து குடும்பங்களுக்கும் அடையாள அட்டைகள் இலவசமாக வழங்கப்படும். ஏதோ இந்தத் திட்டத்தை கிராமங்களிலே சொல்வார்களே, அதைப்போல "மானாங்கணியாக அறிவித்துவிட்டு," "திட்டம் அறிவித்து விட்டோம், அது காற்றிலே பறந்து வருகிறது, முடிந்தால் பிடித்துக் கொள்ளுங்கள்" என்று சொல்லாமல், இந்தத் திட்டத்திற்கு 252 கோடியே 46 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடும் வழங்கப்பட்டிருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். இந்தத் திட்டத்தினால் என்னென்ன பயன்கள் என்பதை நான் ஒவ்வொன்றாகச் சொல்லி

> "தமிழகத்திலே உள்ள விவசாயிகள் ஏறத்தாழ 72 இலட்சம் விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளுடைய குடும்பங்களுக்கு புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டைகள் வழங்கும் பணி 29.12.2006இல் தொடங்கப்பட்டு இதுவரையில் 51 இலட்சத்து 18 ஆயிரத்து 929 விவசாயத் தொழிலாளர்கள், விவசாயிகளுடைய குடும்பங்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுவிட்டன."

நேரத்தை வீணாக்க விரும்பவில்லை. ஏனென்றால் இன்று சென்னை திரும்பி, நாளைக்கு கோவைக்குச் செல்ல வேண்டிய அவசியத்தில் நான் இருக்கின்ற காரணத்தால் எட்டு மணி இரயிலை பிடிக்க வேண்டும். அதற்காக நான் அந்த விவரங்களுக்குச் செல்ல விரும்பவில்லை.

### விவசாயிகளின் நலனுக்காகப் பாடுபடும் அரசு

தரப்படுகின்ற பல்வேறு உதவிகளில் மிக முக்கியமான இதுவரையிலே எந்தத் திட்டத்திலும் இல்லாத அளவிற்கு இந்தத் திட்டத்தில் விவசாயிகளினுடைய குடும்பங்களின் கர்ப்பவதிகளுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் முதல் மூன்று மாதங்களுக்கு ஆயிரம் ரூபாய் வீதம் மூவாயிரம் ரூபாய். குழந்தை பிறந்த பிறகு அடுத்த மூன்று மாதங்களுக்கு பராமரிப்புக்காக மாதம் ஆயிரம் ரூபாய். மூன்று மாதங்களுக்கு மூவாயிரம் ரூபாய். ஆக, கர்ப்பவதிகளுக்கு ஆறாயிரம் ரூபாய் நிதியுதவி அளிக்கின்ற ஒரே அரசாக இந்தியாவிலே – தமிழகத்திலே திராவிட முன்னேற்றக் கழக அரசு செயல்படுகிறது என்பதை இந்தத் திட்டத்தை தொடங்கி வைக்கின்ற இந்த நேரத்திலே உங்களுக் கெல்லாம் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

விவசாயிகளினுடைய நலனுக்காகப் பாடு படுகின்றவர்கள், பணியாற்றுகின்றவர்கள், அதற்காகப் போராடியவர்கள் இன்றைக்கு ஆட்சியிலே இருக்கின்றார்கள் என்பதை நீங்கள் மறந்துவிடக்கூடாது. என்னைப் பொறுத்தவரையிலே சொல்லவேண்டு மேயானால் நான் அடிக்கடி சொல்ல விரும்புவதுண்டு.

"நான் தஞ்சை மாவட்டத்திலே பிறந்தவன். விவசாயிகளுடைய கஷ்டநஷ்டங்களை உணர்ந்தவன். அவர்களுடைய வேதனைகளைப் புரிந்துகொண்டவன். அவர்கள் எத்தகைய நிலப்பிரபுக்களால் அடக்கு முறைகளுக்கு ஆளானார்கள், தடியடிக்கு ஆளானார்கள், எத்தனை கொடுமைகளுக்கெல்லாம் ஆளானார்கள் என்பதையெல்லாம் நேரிலே கண்டவன். அதன் காரணமாக நான் மாத்திரம் பெரியாரையும், அண்ணாவையும் சந்திக்காமல் இருந்திருந்தால் ஒரு கம்யூனிஸ்டாகவே இருந்திருப்பேன்" என்றுகூட நான் பலமுறை சொல்லியிருக்கின்றேன்.

அந்த அளவிற்கு விவசாயிகள் கொடுமைகளை அனுபவித்த தமிழகத்திலே ஒரு மாவட்டம் உண்டென்றால் அது தஞ்சை மாவட்டம்தான். சாணிப்பால் கூழாக்கி அந்த சாணிப்பாலைக் கரைத்து விவசாயிகளுடைய உடலிலே ஊற்றி சவுக்கால் அடிக்கின்ற கொடுமைகளெல்லாம் தஞ்சை மாவட்டத்தில் நடைபெற்றிருக்கிறது. அப்படிப்பட்ட தஞ்சை மாவட்டத்தில் மணலி கந்தசாமி போன்றவர்கள், சீனிவாசராவ் போன்றவர்கள் அவர்களுக்காகப் போராடியதும் அந்தப் போராடிய நேரத்தில் இரத்தப் புரட்சி அங்கே நடைபெற்றதும் அவற்றையெல்லாம் கண்ணுற்றவன், கேள்வியுற்றவன் என்ற காரணத்தால் நானும் அந்தக் கொள்கையிலே ஈர்க்கப்பட்டவன்.

"சித்திரச் சோலைகளே! உமை நன்கு
திருத்த இப் பாரினிலே – முன்னர்
எத்தனை தோழர்கள் ரத்தம் சொரிந்தனரோ!
உங்கள் வேரினிலே"

என்று பாரதிதாசன் கேட்டாரே,

அந்தப் பாட்டை என்னுடைய இதயம் முணுமுணுத்துக் கொண்டே இருக்கும்.

"சிற்றூரும், வரப்பெடுத்த வயலும், ஆறு
தேக்கியநல் வாய்க்காலும், வகைப் படுத்தி
நெற்சேர உழுதுழுது பயன்வி ளைக்கும்
நிறையுழைப்புத் தோள்களெல்லாம்
எவரின் தோள்கள்?

என்று பாரதிதாசன் அன்றைக்குக் கேட்ட கேள்வி என்னுடைய இதயத்திலிருந்து எதிரொலித்துக் கொண்டிருக்கும்.

**ஏழை விவசாயிக்கு இலவச நிலம்**

அப்படி ஏழை பாழைகளுக்காக, தொழிலாளர்களுக்காக, விவசாயப் பெருங்குடி மக்களுக்காக, இளம் பிராயத்திலே என்னை ஒப்படைத்துக் கொண்டவன் என்ற காரணத்தினாலேதான் இன்றைக்கு எனக்கு சிலபேர் புத்தி சொல்கிறார்கள். "நீ விவசாயிகளை மறந்துவிட்டாய், விவசாயிகளுக்காக பாடுபடவில்லை" என்றெல்லாம், விவசாயிகளைப் பற்றி எனக்கு நினைவூட்டுகிறார்கள் என்றால் அது எனக்கு பழக்கமான ஒன்று. எது? எனக்கு புத்தி சொல்கிறார்களே அதைக் கேட்பது அல்ல. நான் விவசாயிகளுக்கும் தொழிலாளர்களுக்கும், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் பணியாற்றுவது என்பது என்னுடைய ரத்தத்தோடு கலந்த ஒன்று. என்னுடைய மூச்சோடு கலந்தது ஒன்று. என்னுடைய இதயத்துடிப்போடு கலந்த ஒரு துடிப்புதான் இந்த உணர்வுகளெல்லாம். அதை எனக்குக் கற்றுத்தர தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும் எனக்கு ஆசிரியர்களாக இருந்து என்னை வளர்த்திருக்கின்றார்கள். ஆகவே அந்த வழியிலே நடைபோடுகின்ற நாம், இன்றைக்கு விவசாயப் பெருங்குடி மக்களுக்காக, அந்தக் குடும்பங்களுக்காக; அந்த வீட்டுச் செல்வங்களுக்காக எந்தெந்த வகையிலெல்லாம் சட்டங்களை இயற்றவேண்டுமோ, திட்டங்களைத் தீட்டவேண்டுமோ அவைகளை தோழமைக் கட்சிகளின் துணையோடு நம்முடைய அமைச்சரவையில் இருக்கின்ற பெருமக்களுடைய ஆலோசனையோடு, அதிகாரிகளின் ஒத்துழைப்போடு, பொதுமக்களுடையே நல்உணர்வோடு நடத்திக் கொண்டிருக்கின்றேன். இங்கே தம்பி எல்.கணேசன் பேசியபோது, மணலி கந்தசாமி சொன்னதைச் சொன்னார். திருத்துறைப்பூண்டியிலேதான் அந்த விழா நடைபெற்றது. மூன்று இலட்சம் மக்களுக்கு கூலி வேலை செய்கிறார்கள். அந்தக் குப்பத்திலே அல்லது அந்த வயலிலே அல்லது அந்தக் கழனியிலே என்று அந்தக் கழனியிலே கொட்டகை போட்டு அவர்களை உட்கார வைத்து, "அந்தக் கொட்டகையெல்லாம் உனக்குச் சொந்தமல்ல. நான், "போ!" என்று சொன்னால் பிரித்துக் கொண்டு போக வேண்டும். அது உனக்குச் சொந்தமான மனைஅல்ல. அந்த மனையெல்லாம் மிராசுதாரராகிய எனக்குத்தான் சொந்தம்" என்று அன்று கொக்கரித்துக் கொண்டிருந்த அந்தக் காலத்தில்தான், குடியிருப்பு மனைச் சட்டத்தை கொண்டு வந்து, அந்த ஒரே நாளில் நிறைவேற்றப்பட்ட சட்டம்தான், ஏறத்தாழ இரண்டு இலட்சத்து எழுபதாயிரம் விவசாயக் குடும்பங்கள் தங்களுடைய சொந்த வீட்டிலே குடியிருக்கக்கூடிய ஒரு நிலையை ஒரே இரவிலே போட்ட உத்தரவால், உருவாக்க முடிந்தது. 30 ஸ்டான்டர்ட் ஏக்கரா என்று இருந்த நில உச்சவரம்புச் சட்டத்தை 15 ஸ்டான்டர்ட் ஏக்கர் என்று ஆக்கி,





அந்த ஒரே உத்தரவின் மூலமாக அதுவரையிலே ஸ்டான்டர்ட் ஏக்கரா உச்ச வரம்புச் சட்டத்தால் மிச்சமே இல்லை என்று இருந்த நிலை இருந்ததை மாற்றி இரண்டு இலட்சத்து 20 ஆயிரம் ஏக்கரா நிலத்தை ஏழை விவசாயிகளுக்குப் பிரித்துக் கொடுக்கின்ற நிலைமையும் அன்றைக்குத்தான் ஏற்பட்டது.

இப்பொழுதும் அறிவித்திருக்கின்றோம். வேறு சில மாநிலங்களில் வெற்றிகரமாக நடைபெறவில்லை என்றாலும் கூட நாம் இன்றைக்கு அறிவித்து, தரிசு நிலங்களை மேம்படுத்தி, அரசாங்க புறம்போக்கு நிலங்களை மேம்படுத்தி, அவைகளையெல்லாம் நிலம் இல்லாத ஏழை விவசாயிகளுக்குத் தருவது என்று அறிவித்து 2 தவணைகளிலே தமிழ்நாடு முழுவதும் நானும், நமது அமைச்சர் பெருமக்களும் வழங்கிய வகையில் இது வரையில் 50 ஆயிரம் ஏக்கரா தரிசு நிலம் ஏழை எளிய விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. எங்கே இருக்கிறது தரிசு நிலம் என்று கூட கேட்டார்கள்? எப்படிக் கொடுக்கமுடியும் என கேட்டார்கள். எனக்குத் தருவாயா என்று கூட கேட்டார்கள். நான் சொன்னேன் – "ஒரு கையகல தரிசு நிலம் கிடைத்தாலும், அது ஒரு ஏழை விவசாயிக்குத்தான் தருவேனே தவிர, உங்களுக்குத் தர மாட்டேன்" என்று சட்டமன்றத்திலே சொன்னேன்.

இப்படி சாதாரண சாமான்ய – மக்களுக்காக கஷ்டப்படுகின்ற விவசாயிகளுக்காக, வியர்வை சிந்துகின்ற விவசாயப் பெருமக்களுக்காக வேளாண்மைத் துறையிலே நாளெல்லாம் பாடுபடுகின்ற அந்த மக்களுக்காக இந்த ஆட்சி, இத்தகைய திட்டங்களைத் தீட்டுகிறது – அதிலே ஒரு மாபெரும் திட்டம்தான் இன்றைக்கு தஞ்சை தரணியிலே தொடங்கி வைக்கப் பட்டிருக்கின்றது. இந்த விழாவிலே மிக முக்கியமாக என்னுடைய நண்பர்கள் என்னுடைய தம்பிமார்கள், அமைச்சர்கள் எல்லாம் பேசினார்கள்.

இறுதியாகப் பேசிய தம்பி துரைமுருகன் உட்பட அத்தனை பேரும் இப்போது நமக்குக் கிடைத்திருக்கின்ற நடுவர் மன்றத்தின் பயனைப் பற்றிச் சொன்னார்கள். எல்லோரும் எனக்கு நன்றி சொல்கிறார்கள், ஆனால் நடுவர் மன்றம் அமைந்ததற்கும், அந்தத் தீர்ப்பு கிடைத்ததற்கும் காரணமாக இருந்த ஒருவருக்கு நன்றி சொல்ல மறந்து விட்டார்கள். தமிழகத்திலே நன்றி சொல்வதை மறக்கக் கூடாது, அதிலும் தஞ்சைத் தரணியிலே பிறந்தவர்கள் மறக்கக் கூடாது, அதிலும் தி.மு.கழகத்திலே உள்ளவர்கள் மறக்கக் கூடாது, மறக்கமாட்டார்கள். அவர்கள் அனைவர் சார்பிலும் நான் நன்றி கூறுகிறேன்.

**முதலமைச்சர்களோடு பேச்சுவார்த்தை**

எத்தனையோ முறை கேட்டும் கிடைக்காத நடுவர் மன்றத்தை அமைப்பதற்கு நமக்கு அனுமதி அளித்த அன்றைய இந்தியப் பிரதமர் வி.பி.சிங் அவர்களுக்கு இந்த மாபெரும் கூட்டத்தில் நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். அந்த நன்றியை அறிவிக்கும் வகையில், நீங்கள் அத்தனை பேரும் ஓங்கி கையொலி செய்ய வேண்டுமென்று உங்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால், வி.பி.சிங் அவர்கள் காலத்தில் நான் இதற்காக வாதிட்டேன், போராடினேன். அதற்கு முன்பு அன்னை இந்திரா காந்தி அம்மையார் அவர்களிடத்திலே இதைப்பற்றிக் கேட்டபோது, அவர்கள் இதற்காக பெருமுயற்சி எடுத்துக் கொண்டு, தேவராஜ் அர்ஸ் போன்ற கர்நாடக மாநில முதலமைச்சரோடு அவர்களும் பேசிப்பார்த்து, அப்போது நாம் போட்டிருந்த வழக்கை வாபஸ் வாங்கினால்தான் நாங்கள் பேச முடியுமென்று அவர்கள் ஒரு நிபந்தனை போட அன்னை இந்திராகாந்தி அம்மையாரின் சொல்லைக்கேட்டு, அவர்களுக்கு, ஒரு பிரதமருக்கு அளிக்க வேண்டிய மதிப்பை அளித்து, அந்த வழக்கைத் திரும்பப் பெற்றுக் கொண்டு – நான் ஒருவனே முடிவெடுத்து திரும்பப் பெற்றுக் கொள்ளவில்லை – அனைத்துக் கட்சித் தலைவர்களையும் அழைத்து, தலைமைச் செயலகத்திலே கேபினட் அறையிலே அவர்களையெல்லாம் அமர வைத்து, நிலைமையைச்

சொல்லி, அத்தனை பேரும் நிறைவேற்றிக் கொடுத்த தீர்மானம்; "இந்த வழக்கைத் திரும்பப் பெறலாம் – அதுவும் மீண்டும் தேவைப்பட்டால் மீண்டும் வழக்கைத் தொடரலாம்" என்ற நிலையில் – அந்த வழக்கைத் திரும்பப் பெற்றால்தான் தேவராஜ் அர்சோடு பேச்சுவார்த்தை நடத்த முடியும் என்ற நிலையிருந்த காரணத்தால், திரும்பப் பெற்று அதிலே நாம் வெற்றி பெற முடியாமல், அதற்குப் பிறகும் வெற்றி பெற முடியாமல் – மத்தியிலே உள்ள அமைச்சர்கள் எல்லாம் இதற்காகப் பாடுபட்டார்கள். ஒரு நாள் இரவு 9 மணிக்கு உட்கார்ந்து, மறுநாள் காலை 7 மணி வரையிலே பாபு ஜெகஜீவன் ராம் அவர்கள் எங்களோடு அமர்ந்து இந்தப் பேச்சுவார்த்தையிலே ஈடுபட்டு எவ்வளவோ முயற்சித்துப் பார்த்தார். முடியவில்லை. தம்பி துரைமுருகன் எடுத்துக்காட்டியதைப்போல கர்நாடகத்தின் 11 முதல் அமைச்சர்களோடு நான் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்துகின்ற வாய்ப்பினைப் பெற்றேன்.

என்னுடைய தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பில் இருந்த 1968ஆம் ஆண்டு ஹேமாவதி அணை கட்டப்படுகிறது, அதை முதலில் தடுக்க வேண்டும் என்பதற்காக கே.எல். ராவ் அவர்கள் தலைமையிலே நடைபெற்ற முதல் அமைச்சர்கள் மாநாட்டிற்கு என்னை அனுப்பினார். டெல்லியில் அந்த மாநாடு நடைபெற்றது.

### இந்தியாவின் ஒற்றுமை

அப்போது கர்நாடகாவின் முதலமைச்சர் வீரேந்திர பட்டீல். வீரேந்திர பட்டீல் அவர்களில் தொடங்கி துரைமுருகன் இங்கே படித்துக் காட்டிய அத்தனை முதல் அமைச்சர்களும் என்னோடு இந்தக் காவேரிப் பிரச்சினையிலே வாதிட்டிருக்கிறார்கள். அவர்களில் பலரும் இன்றைக்கு இல்லை. நான் இருக்கிறேன். என்ன வாய்ப்பு பாருங்கள் எனக்கு? இவ்வளவு நாள் வாழ்ந்ததற்கு எனக்குப் பரிசு கிடைத்திருக்கிறது. அந்தப் பரிசுதான் இவ்வளவு நாள் வாழ்க்கையிலே என்னுடைய தமிழர்களுக்காக, என்னுடைய விவசாயப் பெருங்குடி மக்களுக்காக, என்னுடைய மாவட்டம், என்னுடைய தஞ்சைத் தரணி வளம் பெறுவதற்காக இந்தக் காவேரி பிரச்சினையிலே கிடைத்திருக்கின்ற இந்த வெற்றிக்கு – இதை நான் மற்றவர்கள் சொல்வதைப்போல மகத்தான வெற்றி என்று சொல்லி நான் குதியாட்டம் போடவில்லை. தாண்டவமாடவில்லை. தத்தோம் என்று குதிக்கவில்லை. இதை நான் டெல்லியிலே கேள்விப்பட்டபோதே சொன்னேன். நியாயம் கிடைத்திருக்கிறது. ஆறுதல் கிடைத்திருக்கிறது என்று சொன்னேன். நியாயம் கிடைத்திருக்கிறது என்றால், கர்நாடகத்திற்கு என்றார்கள். நான் அன்றைக்கு மகிழ்ச்சி கிடைத்திருக்கிறது என்று சொல்லாததற்குக் காரணம், "கர்நாடகத்து விவசாயிகளும் சேர்ந்து தமிழ்நாட்டு விவசாயிகளைப் போல இதை வரவேற்பார்களேயானால், அப்போதுதான் முழு மகிழ்ச்சி எனக்குக் கிடைத்ததாக நான் சொல்லுவேன் என்று குறிப்பிட்டேன். ஏனென்றால் இந்தியா ஒரு நாடு என்று நாம் ஒத்துக் கொண்டிருக்கிறோம். இந்தியாவை ஒரு நாடு என்று எடுத்துக்கொண்டு நாம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம். ஒரு காலத்தில் நாம் பிரிவினை எல்லாம் கேட்டதுண்டு. ஆனால் ஒருமைப்பாடு, இறையாண்மை, ஒற்றுமை இதிலே அழுத்தமான நம்பிக்கை உள்ளவர்கள் நாம். இதிலே வெறும் தண்ணீர்ப் பிரச்சினைக்காக ஒரு மாநிலம் இன்னொரு மாநிலத்தின் பகையாக ஆகிவிடக் கூடாது. இந்தியாவைத் துண்டாக்குவதிலே பயன் இல்லை. ஆகவே இந்தத் தண்ணீர் பிரச்சினையில் நாம் ஒன்றுபட்டிருப்போம். இந்தியா நமது நாடு என்ற உணர்வோடு செயல்படுவோம். அதற்குத்தான் – அதற்கு ஒரே வழி இந்தியாவிலே இருக்கின்ற நதிகளையெல்லாம் இணையுங்கள் – நதிகளை இணைத்தால்தான் ஒருமைப்பாடு முற்றாக முடியும். இல்லாவிட்டால் இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்ற இந்தப் பங்கீடுகூட சில பேருக்குத் திருப்தி இருந்தாலும் கூட, ஓ... தி.மு.க பெற்ற வெற்றி என்பதற்காக, திருப்தி இல்லாததைப்போல் காட்டிக் கொள்வார்கள். அவர்களுடைய நிலத்துக்கேகூட தண்ணீர் வந்து கொண்டிருக்கும். இருந்தாலும் குதர்க்கம் பேசுவார்கள். இது என்ன பெரிய வெற்றி? என்று சொல்லுவார்கள். காரணம், தி.மு.க. ஆட்சிக் காலத்திலே கிடைத்த இந்த ஆதாயம். தி.மு.க. ஆட்சிக் காலத்திலே கிடைத்ததாகக் கருதப்படுகிற இந்த வெற்றி – இந்த மகிழ்ச்சி நமக்கு வந்து சேரக்கூடாது என்பதற்காக சிலபேர் இதை இன்றைக்கு கேலி பேசிக் கொண்டிருக்கிறார்கள். நான் அதைப் பற்றிக் கவலைப்படவில்லை.

நாம் செல்கின்ற வழி ஒளிமயமான வழி – தூய்மையான வழி – நேரான வழி. நாம் எந்த இலக்கை அடைய வேண்டும் என்று கருதுகிறோமோ, அந்த இலக்குக்கு நம்மை இட்டுச் செல்கிற வழி. எனவே, அந்த வழியில் நாம் போகும்போது யார் யார் எதிரிலே இடையிலே கேலி செய்தாலும், கிண்டல் செய்தாலும், ஒருவேளை கல் வீசினாலும், ஏன் இன்னும் இழிவான பொருளை எடுத்து நம்மீது வீசினாலும், அவைகளையெல்லாம் மலர்களாகக் கருதிக் கொண்டு, நம்முடைய பயணத்தை நடத்துவோம் என்ற முறையிலே தான் நம் பயணம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்தப்





பங்கீடு பற்றி தம்பி துரைமுருகன் இங்கே சொன்னார். ஒரு நீதிமன்றம் போல நடுவர் மன்றம் அமைக்கப்பட்டு நம்முடைய தமிழக சட்டமன்றத்தில் நிறைவேற்றிய தீர்மானத்தை ஏற்றுக்கொண்டு வி.பி.சிங் அவர்கள் அனுமதித்து அந்த நடுவர் மன்றம் நடத்திய விசாரணையில் நாமும் வாதாடியிருக்கிறோம். அவர்களும் வாதாடியிருக்கிறார்கள். நாம் வாதாடுவதற்கு கடைசி வரையில் நமக்கு உதவி செய்த வழக்கறிஞர், நான் அன்றும் சரி கடைசியிலும் சரி – இடையிலே வேறு வழக்கறிஞர் வேண்டாம் என்று வைத்து வாதாடிய வழக்கறிஞர் திரு.பராசரண். வழக்கறிஞர் பராசரண் திராவிட இயக்கத்தைச் சேர்ந்தவர் அல்ல. இன்னும் சொல்லப் போனால், ஒரு பார்ப்பன நண்பர். ஆனால், படித்தவர் – பட்டறிவு மிக்கவர். எல்லாவற்றையும் விட காவிரித் தண்ணீரைக் குடித்த நன்றிக்கு உரியவர். அப்படிப்பட்ட பராசரணை வைத்து நாம் வாதாடினோம், கடைசி வரையில்.

கடந்த ஆட்சியில்கூட இரண்டு மூன்று வழக்கறிஞர்களை மாற்றினார்கள். இப்படி அடிக்கடி வழக்கறிஞர்களை மாற்றினால், வழக்கே மாறிவிடும் என்று நாங்கள் சிந்தித்து மாற்றாமலே பராசரணைக் கொண்டே வழக்கை நடத்தினோம். ஆகவே, நாம் வாதாடும்போது தமிழ்நாட்டிற்குப் பாசனம் செய்யக்கூடிய பரப்பளவு 29.26 இலட்சம் ஏக்கர், நாம் கேட்டது. 29 இலட்சத்து 26 ஆயிரம் ஏக்கருக்கு நாம் கேட்டோம். இதிலே நடுவர் மன்றம் அனுமதித்திருப்பது 24.70 இலட்சம் ஏக்கர். இதில் பெரிய வித்தியாசம் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால், கர்நாடக மாநிலத்திற்கு பாசனத்திற்காக அவர்கள் கோரியது 27.28 இலட்சம் ஏக்கர். நடுவர் மன்றம் அனுமதிகொடுத்தது 18 இலட்சத்து 85 ஆயிரம் ஏக்கர். இதை நான் சொல்வதற்கு காரணம், நாம் ஒன்றும் நஷ்டப்பட்டுவிடவில்லை. நாம் கேட்டதிலே கொஞ்சம் குறைவாகக் கிடைத்தது. ஆனால், கர்நாடகம் கேட்டதிலே கொஞ்சம் அதிகமாகக் குறைந்து விட்டது. அவர்கள் 27 இலட்சம் கேட்டார்கள். 18 இலட்சம் அளவுக்குக் கிடைத்தது. நாம் 29 இலட்சம் அளவிற்குக் கேட்டோம். 24 இலட்சம் அளவிற்குக் கிடைத்திருக்கிறது. எனவேதான் ஆறுதல் என்று சொன்னேன். இதுபோன்ற நேரங்களில் நமக்கும் கர்நாடத்திற்கும் சிக்கல் ஏற்பட்டு விட்டது. எப்படி ஒரு குடும்பத்திலே ஒரு கணவனுக்கும் மனைவிக்கும் இடையில் தகராறு ஏற்பட்டு பிரிந்து போகிற நிலைமை ஏற்பட்டுவிடுவதாக வைத்துக் கொள்வோம். நீதிபதி கணவனையும், மனைவியையும் அழைத்து, "சரி நீங்கள் இருவரும் பிரிவதாகத் தீர்மானித்து வீட்டீர்கள் – நானும் அனுமதிக்கிறேன்." என்று தீர்ப்பு கொடுத்துவிட்டு, பிறகு "சரி குழந்தையை யார் வைத்துக் கொள்வது" என்று கேட்டார். "நான்தான் பெற்றேன்" என்று தாயும், "உருவாக்குவதற்கு நான்தான் காரணம்" என்று கணவனும் – இரண்டு பேரும் சண்டை போடும்போது நீதிபதி என்ன சொல்வார். "ஒரு வாரத்தில் நான்கு நாட்களுக்கு நீ குழந்தையை வைத்துக்கொள் – மூன்று நாள் அந்த அம்மா வைத்துக் கொள்ளட்டும்" என்று தீர்ப்பு அளிப்பதைப்போல, அளிக்கப்பட்ட தீர்ப்புதான் இது. எனவே குழந்தைக்கு ஒன்றும் ஆபத்து ஏற்பட்டு விடவில்லை என்பதை மாத்திரம் உங்களுக்கு எடுத்துச் சொல்லி, இந்த இனிய விழாவிலே தோழர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் ஏழை எளிய மக்களுக்கும், முதியோர்களுக்கும் இந்தச் சலுகைகளையெல்லாம் வழங்கி விடைபெறுகிறேன்.

**22.2.2007 அன்று தஞ்சாவூரில்**
**தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர் –**
**விவசாயிகள் சமூகப் பாதுகாப்பு**
**மற்றும் நலத்திட்டம்**
**தொடங்கி வைத்து**
**மாண்புமிகு தமிழக முதலமைச்சர்**
**கலைஞர் அவர்கள்**
**ஆற்றிய உரை.**

# சாதி வேறுபாடுகளை அகற்றிட இடஒதுக்கீடு முறையை நடைமுறைப்படுத்தி வருகிறோம்



24.2.2007 அன்று
கோவையில் நடந்த
பாரதியார் பல்கலைக்கழக
வெள்ளி விழாவில்,
**'பாரதியார் தமிழ்ச் செம்மல்'**
விருதைப் பெற்று
மாண்புமிகு
தமிழக முதலமைச்சர்
**கலைஞர்**
**மு.கருணாநிதி**
அவர்கள் ஆற்றிய உரை.

இன்று மிகுந்த எழுச்சியோடு நடைபெறுகின்ற பாரதியார் பல்கலைக்கழக வெள்ளி விழாவில் நமது மதிப்புக்குரிய நான் தொடக்கத்தில் குறிப்பிட்டவாறு இனிய தமிழர் மேதகு குடியரசுத் தலைவர் அவர்களும், மேதகு தமிழக ஆளுநர் அவர்களும் வருகை தந்து சிறப்பித்திருப்பது நமக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது.

இன்று இந்தியாவில் உள்ள 354 பல்கலைக் கழகங்களில் சிறந்து விளங்கும் முதல் 10 பல்கலைக் கழகங்களுள் ஒன்றாகத் திகழுகின்ற இந்த பாரதியார் பல்கலைக்கழகம், தனது வெள்ளி விழா நிகழ்ச்சியை யொட்டி எனக்கு ''பாரதியார் தமிழ்ச் செம்மல்'' எனும் விருது வழங்கி என்னைச் சிறப்பித்திருக்கிறது.



புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் *அவர்கள் வேறு எந்தக் கவிஞரும் இதுவரை* புகழ்ந்திராத வகையில், மகாகவி பாரதியாரைப் பற்றிப் பாடும்பொழுது,

''பைந்தமிழ் தேர்ப்பாகன், அவனொரு
செந்தமிழ்த் தேனீ, சிந்துக்குத் தந்தை !
குவிக்கும் கவிதைக் குயில் ! இந் நாட்டினைக்
கவிழ்க்கும் பகையைக் கவிழ்க்கும் கவிமுரசு !
நீடு துயில் நீக்கப் பாடி வந்தநிலா
காடு கமழும் கற்பூரச் சொற்கோ !
கற்பனை ஊற்றாம் கதையின் புதையல் !
திறம்பாட வந்த மறவன்; புதிய
அறம்பாட வந்த அறிஞன்; நாட்டில்
படரும் சாதிப் படைக்கு மருந்து !
மண்டும் மதங்கள் அண்டா நெருப்பவன்!

–என்று அருமையாகப் புகழ்ந்திருக்கிறார்.

புரட்சிக் கவிஞர் புகழ்ந்த மகாகவி பாரதியார் பெயரில் விருது பெறுவதை ஒரு பெரும் பேறாக நான் கருதுகிறேன். எனக்கு விருது வழங்கிச் சிறப்பித்துள்ள மேதகு குடியரசுத் தலைவர், மேதகு தமிழக ஆளுநர், துணை வேந்தர், பல்கலைக்கழக ஆட்சி மன்றக் குழுவினர் அனைவருக்கும் என் இதயங்கனிந்த நன்றியைத் தெரிவித்து மகிழ்கிறேன்.

''செந்தமிழ் நாடெனும் போதினிலே – இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே''

–என உற்சாகக் கவிதை பொழிந்து, வீரசுதந்திர சங்கநாதம் புரிந்த முறுக்குமீசைக் கவிஞன் சுப்பிரமணிய பாரதியார் பிறந்து வளர்ந்த எட்டயபுரத்தில் உள்ள அவரது வீட்டினை **12.5.1973** ஆம் ஆண்டு அன்று பாரதியார் நினைவு இல்லமாகத் தமிழக தி.மு.க அரசின் சார்பில் திறந்து வைத்ததையும்,

இந்தப் பல்கலைக்கழக வளாகத்தில், **18.7.1989** அன்று பாரதியாருக்குச் சிலையெடுத்துச் சிறப்பித்ததையும்,

*1997 ஆம் ஆண்டில் தமிழக அரசின் சார்பாக* ''பாரதியார் விருது'' ஒன்றை நிறுவி, ஆண்டுதோறும் சிறந்த தமிழ்க் கவிஞர் ஒருவருக்கு ஒரு இலட்சம் ரூபாய் பொற்கிழியுடன் தங்கப் பதக்கம் ஒன்றையும் *அணிவித்து ''பாரதியார் விருது'' வழங்கிப்* போற்றுவதையும் இந்த வேளையில் நினைவு கூர்ந்து மகிழ்கிறேன்.

### மக்கள் கவிஞராகத் திகழ்ந்தவர்

மகாகவி பாரதியார் அவர்களைப் பற்றி எண்ணுகின்றபோது, பேரறிஞர் அண்ணா அவர்கள் 1948 ஆம் ஆண்டில் "People's Poet" என்னும் தலைப்பில் அகில இந்திய வானொலியில் முதன் முதலில் ஆங்கிலத்தில் ஆற்றிய உரையின் ஒரு பகுதி இங்கே நினைவுகூரத்தக்கது.

"Bharathi was not merely the bard of Nationalism; he was certainly the morning star *of reformation only because he was the* People's Poet".

''பாரதியார் தேசியத்தைப் பாடுவதுடன் சாதாரணமாக நின்றிடவில்லை; அவர் மக்கள் கவிஞராகத் திகழ்ந்த காரணத்தினாலேதான் சீர்திருத்தத்தின் விடிவெள்ளியாக வலம் வந்தார்''.

"He was angry with the foreigner and wanted his country to become free but that was not his goal that was not to be his end. It *was but the beginning- he wanted to free his* countrymen from all shackles, wanted them to rise up in the estimation of the world, wanted to see, a new land peopled by men and women of a new type altogether."

''அவர் வெள்ளையரைச் சினந்தார்; தமது நாடு விடுதலை பெற விரும்பினார். ஆனால், அதுமட்டும் அவர் இலக்கு அன்று; அதுவே தனது முடிவான விருப்பம் என்றும் அவர் கருதிடவில்லை; ஆனால், அதுவே தொடக்கம். அவர் தனது நாட்டு மக்கள் அனைவரும், எல்லாவிதமான தளைகளில் இருந்தும் விடுதலை பெற வேண்டும் என்றார்; உலகம் மதிக்கத்தக்க அளவுக்கு அவர்கள் எழுச்சி பெற்று உயர வேண்டும் என்றார்; ஆணும் பெண்ணும் புதிய சிந்தனைகளுடன் கூடி வாழும் நாடாகத் தமது நாட்டைக் காண விரும்பினார்''.

"He found the people enveloped in fear. Fear was written on their very faces. They were afraid of anything and everything. Not only did they fear the foreigner and his gun; but their own brethren chanting some slogans - they were afraid of ghosts and phantoms."

அதாவது,

"மக்கள் அச்சத்தில் மூழ்கி இருப்பதைக் கண்டார். அச்சம் அவர்களுடைய முகத்திலேயே எழுதப்பட்டிருப்பதைக் கண்டார். அவர்கள் எதைக் கண்டும், எல்லாவற்றைக் கண்டும் அஞ்சினர்; வெள்ளையரையும், அவர்களது துப்பாக்கிகளையும் கண்டு மட்டும் அஞ்சுவதல்ல; சொந்த சகோதரர்கள் பேய், பூதம், பிசாசு என்று முழங்கிய மந்திரங்களைக் கேட்டும் அவர்கள் அஞ்சி நடுங்கியதைக் கண்டு வருந்தினார்."

–என்று அண்ணா, பாரதியாரைப் பற்றிக் கூறுகிறார்.

இதிலிருந்து "பாரதியார் நாட்டு விடுதலையை மட்டுமல்ல; சமுதாயத்தில் படிந்து கிடந்த சாதிச் சழக்குகளை, மூடப் பழக்கங்களை உடைத்தெறிந்து, ஆணும் பெண்ணும் முழு உரிமை பெற்றுச் சரிநிகர் சமானமாக வாழ வேண்டும்; பெண்களுக்கு இழைக்கப்படும் தீமைகள் அகற்றப்பட வேண்டும்; என்பதில் நாட்டம் மிகக் கொண்டிருந்தார் என்பதை அறியலாம்.

பாரதியார் சமுதாயச் சீர்திருத்தத்தில் கொண்டிருந்த அழுத்தமான உணர்வை அவரது "சந்திரிகையின் கதை" மேலும் தெளிவு படுத்துகிறது. அக்கதையிலே, ஓர் அக்கிரகாரம் குறிப்பிடப்படுகிறது.

அந்த அக்கிரகாரத்தில் பூகம்பம் ஏற்பட்டு அங்கிருந்த வீடுகள் எல்லாம் அந்தப் பூகம்பத்திலே இடிந்து அழிந்திட, அங்கு வாழ்ந்தவர்கள் எல்லாம் இறந்துவிட, அந்த நேரத்திலே பிரசவ வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிற ஒரு பெண்ணும், அந்தப் பெண்ணுக்கு அருகிலே விசாலாட்சி என்ற ஒரு விதவைப் பெண்ணும் மட்டுமே உயிர் பிழைக்கின்றனர்.



**"பாரதியார் நாட்டு விடுதலையை மட்டுமல்ல; சமுதாயத்தில் படிந்து கிடந்த சாதிச் சழக்குகளை, மூடப்பழக்கங்களை உடைத்தெறிந்து, ஆணும் பெண்ணும் முழு உரிமை பெற்றுச் சரிநிகர் சமானமாக வாழ வேண்டும்; பெண்களுக்கு இழைக்கப்படும் தீமைகள் அகற்றப்பட வேண்டும் என்பதில் நாட்டம் மிகக் கொண்டிருந்தார்"**

பிரசவ வேதனையிலிருந்த அந்தப் பெண், குழந்தையைப் பெற்றெடுத்தபின் பூகம்ப அதிர்ச்சியினால் ஏற்பட்ட வேதனையில் இறந்து விடுகிறாள். இறக்கும்வேளையில் விசாலாட்சி என்கிற அந்த விதவைப் பெண்ணிடம்,

"நான் இரண்டு நிமிடங்களுக்குமேல் உயிரோடு இருக்கமாட்டேன். என் பிராணன்போகும் முன்னர் உன்னிடம் சில வார்த்தைகள் சொல்லிவிட்டுப் போகிறேன். அதை உன் பிராணன் உள்ளவரை மறந்து போகாதே!

முதலாவது, நீ விவாகம் செய்துகொள். விதவை விவாகம் செய்யத் தக்கதே. ஆண்களுக்குப் பெண்கள் அடிமைகளாய், ஆண்களுக்குப் பெண்கள் அஞ்சி ஜீவனுள்ளவரை வருந்தி வருந்தி மடிய வேண்டிய அவசியமில்லை.

எனவே, நீ ஆண் மக்கள் எழுதி வைத்திருக்கும் நீசத்தனமான சுயநல சாஸ்திரங்களைக் கிழித்துக் கரியடுப்பிலே போட்டுவிட்டுத் தைரியத்தோடு சென்னைப் பட்டணத்திற்குப் போய், அங்கே கைம்பெண் விவாகத்தைப் பதிவு செய்யும் சபையாரைக் கண்டுபிடித்து, அவர்கள் மூலமாக நல்ல மணமகனைத் தேடி வாழ்க்கைப்படு.



இரண்டாவது, நீ உள்ள வரையில் என் குழந்தையைக் காப்பாற்று. அதற்கு 'சந்திரிகை' என்று பெயர் வை" –என்று சொல்லிவிட்டு உயிர் விடுகிறாள்.

அவள் கூறிய வார்த்தைகளில் எவ்வளவு பெரிய புரட்சிகரமான கருத்தை எடுத்துச் சொல்லியிருக்கிறார் என்பதை – அதை பாரதியார் வாழ்ந்த காலத்தோடு நீங்கள் ஒப்பிட்டுப் பார்த்து உணரவேண்டும்; இப்பொழுது ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது அது பெரிதாக நமக்குத் தெரியாது.

இந்தச் 'சந்திரிகை கதை'யின் மூலம் மகாகவி பாரதியார் காண விரும்பிய சமுதாயத்தைப் படைக்க நினைத்ததன் விளைவுதான் தந்தை பெரியார் வழியில், பேரறிஞர் அண்ணா அவர்கள் வழியில் 1974ஆம் ஆண்டில் விதவை மறுமணத் திட்டம் கொண்டு வரப்பட்டு, விதவைப் பெண்களைத் திருமணம் செய்து கொள்பவர்களுக்கு ஊக்கப்பரிசாக 10,000 ரூபாய் நிதியுதவி வழங்கும் திட்டம் இன்றும் தொடர்ந்து நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது, இந்த அரசாங்கத்தால்.

அதேபோல, மகாகவி பாரதியார்,

"சாதிகள் இல்லையடி பாப்பா – குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்
நீதி உயர்ந்தமதி, கல்வி – அன்பு
நிறைய உடையவர்கள் மேலோர்"

–என்று பாடிச் சாதி வேறுபாடுகள் கூடாது என்பதைச் சமுதாயத்தில் குழந்தைப் பருவம் முதலே கற்பித்திட வேண்டுமென்றார்.

சாதி வேறுபாடுகளைத் தகர்ப்பதில் அவருக்கிருந்த ஆர்வம் மகத்தானது. அவர் தமது பிராமண சமுதாயத்திற்குரிய வழக்கத்தின்படி பூணூலை அணிந்து கொள்ளவில்லை; குடுமியைக் கத்தரித்துவிட்டுக் கிராப்பு வைத்துக் கொண்டார்; மீசை வைத்துக் கொண்டார்; புதுச்சேரியிலே அவர் வாழ்ந்தபொழுது, கனகலிங்கம் என்ற ஓர் ஆதிதிராவிடச் சிறுவனை அழைத்துவந்து அவனுக்குப் பூணூல் மாட்டி உபநயனமும் செய்து வைத்துச் சாதி வேறுபாடுகளைக் கடுமையாக எதிர்த்தார்.

இவற்றையெல்லாம் கண்ட உயர்சாதிக்காரர்கள் – அவருடைய சாதிக்காரர்கள் வெகுண்டு எழுந்தார்கள். அப்பொழுது,

"சமூகத் தொண்டு, நாட்டு விடுதலைத் தொண்டு என்பது இரண்டு கண்கள். இதில் சமூகத் தொண்டை நிறுத்திவிட்டு, விடுதலைத் தொண்டை மட்டும் ஆற்று என்கிறார்களே, அது எப்படி சாத்தியம்? ஒரு கண்ணை மூடிக் கொண்டு ஒரு கண்ணைத் திறந்து வைத்துக் கொண்டு தூங்கமுடியுமா? எனவேதான் நான் இந்த இரண்டு தொண்டையும் ஆற்றுகிறேன்"

–என்று பாரதியார் அன்றைக்குக் குறிப்பிட்டார்.

பாரதியார் அக்காலத்தில் ஆற்றிய அந்தச் சமுதாயத் தொண்டுகளைத்தான் தந்தை பெரியார் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும் ஆற்றி வந்தார்கள். அவர்களைத் தொடர்ந்து, இந்த அரசும் அப்பணிகளை நிறைவேற்றி வருகிறது.

**இடஒதுக்கீட்டு முறையால் சமுதாயம் முன்னேறும்**

சாதி வேறுபாடுகள் கூடாது என்ற பாரதியாரின் எண்ணத்திற்கேற்ப; "சாதி வேறுபாடுகள் மறைந்திட கலப்புத் திருமணங்கள் நடைபெற வேண்டும்" என்ற அண்ணல் அம்பேத்கர் விரும்பியதற்கேற்ப; சாதி வேறுபாடுகளை அகற்றுவதில் ஒரு கட்டமாக 1974 ஆம் ஆண்டிலேயே கலப்புத் திருமணம் செய்து கொள்ளும் தம்பதிகளை ஊக்கப்படுத்திட அவர்களுக்குத் தங்கப் பதக்கம் அளித்து, நிதியுதவியும் வழங்கப்பட்டது.

அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்பு திருமண நிதியுதவித் திட்டமெனும் பெயரில் செயல்படுத்தப்பட்டு வரும் அத்திட்டத்தின்கீழ் கலப்புத் திருமணம் செய்து கொள்ளும் தம்பதியருக்கு இன்று 20 ஆயிரம் ரூபாய் நிதி வழங்கி ஊக்கப்படுத்துகிறோம்.

சாதி வேறுபாடுகளை அகற்றிட இடஒதுக்கீடு முறையை நடைமுறைப்படுத்தி வருகிறோம்.

இடஒதுக்கீட்டின் வரலாற்றினை நீங்கள் அறிந்திருப்பீர்கள். அதைவிளக்கிட வேண்டிய அவசியமில்லை.

1990 ஆம் ஆண்டு முதல் 69 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கும் திட்டம் தமிழகத்தில் நடைமுறையில் உள்ளது. இந்த இடஒதுக்கீட்டு முறையால் இங்கே அமர்ந்திருக்கக்கூடிய உங்களில் பலரும் பயன்பெற்று வருகிறீர்கள் என்பதைச் சுட்டிக்காட்டிடக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இந்த இடஒதுக்கீடு 50 விழுக்காட்டிற்கு மேல் கூடாது என்றும், 'கிரீமிலேயர்' எனும் சொல்

கொண்டு இந்த இட ஒதுக்கீட்டின் விளைவாகத் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப் பட்ட, மிகப் பிற்படுத்தப் பட்டவர்கள் பெற்றுவரும் பயன்களை முற்றிலும் தடுத்துவிட வேண்டுமென்றும் சிலர் தொடர்ந்து முயன்று வருகின்றனர்.



இதனை இன்றைய தாழ்த்தப்பட்ட, மலைவாழ் இன, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயங் களைச் சேர்ந்த இளைஞர்கள் நன்கு புரிந்துகொள்ள வேண்டும்.

இடஒதுக்கீடு முறை நீடிப்பதால் ஒடுக்கப்பட்டுக்கிடந்தவர்கள் கல்வி, வேலை வாய்ப்புகளைப் பெற்று முன்னேற்றம் அடைவதன் மூலம் சமுதாயத்தில் அனைவருக்கும் சமவாய்ப்புகள் கிடைத்து தமிழகம் சமதர்ம சமுதாயமாக உருப்பெறும்; பாரதியார் கண்டித்து வெறுத்த சாதி வேறுபாட்டுத் தளைகள் முற்றிலும் அகன்று விடும்; அந்த நாளை நோக்கி நாம் முன்னேற இன்றைய இளைஞர் சமுதாயமும், சமுதாய நலன் கருதும் சான்றோர்களும் விழிப்புடன் செயலாற்றிட வேண்டும் என்பதை இந்த நேரத்தில் வலியுறுத்துவதோடு, என்னதான் உலகத்தைப் பற்றியும், சமுதாயத்தைப் பற்றியும் பரந்த நோக்கிலே சில செய்திகளைச் சொன்னாலும், உள்ளூர் விஷயங்கள் உள்ளத்திலே பதிந்திருக்கின்ற காரணத்தால் அதைப் பற்றி சில உறுதிகளை உங்களுக்கு அளிக்க விரும்புகின்றேன்.

நீண்டகாலமாக கோவை நகரத்தில், அதன் சுற்றுப்புறத்தில் இருக்கின்ற ஆவல் ததும்பிய ஒரு கவலை நெடுஞ்சாலைத்துறை, கோவை ஒண்டிப் புதூர் மேம்பாலத்தைப் பற்றியதாகும். ஒண்டிப்புதூர் என்றதுமே எழுகின்ற கையொலியைப் பார்த்ததும், நான் எவ்வளவு முக்கியமான விஷயத்தைப் பற்றி உங்களிடம் சொல்லவிருக்கிறேன் என்பதை உணர முடிகிறது.

நாகப்பட்டினம் – கூடலூர் மைசூர் சாலை கிலோ மீட்டர் **334/6** கோவை ஒண்டிப்புதூரில் அமைக்கப்பட்டு வரும் ரெயில்வே மேம்பாலப் பணியானது ரயில்வே துறை மூலம் மேற்கொள்ளப் பட்டு வரும் ரெயில்வே பகுதிப் பணி முடிவுறும் முன்பே மாநில நெடுஞ்சாலைத் துறையைச் சேர்ந்த பகுதிப் பணிகள் வருகின்ற **14.4.2007** அன்று முடிவுறும் என்ற செய்தியை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

7 ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கப்பட்டது. இதுஎப்போது முடிய வேண்டும் என்ற நேரம் வருமோ அந்த நேரத்தில்தான் முடியும் என்பார்கள் வைதீகர்கள். நான் வைதீக மனப்பான்மையோடு சொல்லவில்லை. ஐதீக மனப்பான்மையோடு சொல்கிறேன். ஐதீகம் என்றால் பழைய மனப் பான்மை. வைதீகம் என்றால் பழமை மனப்பான்மை. பழைய என்பதற்கும் பழைமை என்பதற்கும் நிறைய வேறுபாடு உண்டு. எனவே அந்தப் பழைய வரலாறு 7 ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கப்பட்ட ஒண்டிப்புதூர் மேம்பாலம் **14.4.2007** அன்று முடிவடையும். இதற்கு ஆகிற செலவு **16.50** கோடி ரூபாயாகும்.

அதைப் போலவே வாலாங்குளம் ரயில்வே மேம்பாலம். புறவழிச் சாலையில் அமைக்கப்பட்டு வரும் இந்த மேம்பாலப் பணி ரயில்வே பகுதிப் பணி முடிவுற்ற பிறகு மூன்று மாதங்களில் இந்த ஆண்டு இறுதிக்குள் மாநில நெடுஞ்சாலைத் துறையைச் சார்ந்த பணி முடிக்கப்படும் என திட்டமிடப் பட்டுள்ளது. இதற்கு மதிப்பீட்டுத் தொகை **15** கோடியே **40** இலட்சம். இந்தப் பணியும் விரைவில் முடிவுறும் என்ற மகிழ்ச்சியான செய்தியை உங்களுக்குத் தெரிவித்து, இந்த விழாவில் எனக்கு அளிக்கப்பட்டுள்ள இந்த விருதினை மேலும் என்னைச் சிறப்பிப்பதற்காக என்னை ஊக்கப்படுத்துவதற்காக அளிக்கப்பட்ட விருது என்ற உணர்வோடு இதனை அளித்த நல்ல உள்ளங்களையெல்லாம் நன்றியோடு பாராட்டி, வாழ்த்தி அனைவருக்கும் கடமைப்பட்டவன் என்பதை உணர்த்தி இந்த அளவில் என் உரையை நிறைவு செய்கிறேன்.





மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களை ஜப்பான் வெளியுறவு வர்த்தக அமைப்பின் தலைவர் திரு.ஓசாமோ வாட்னாபே அவர்கள் சந்தித்து, தமிழகத்தில் தொழில் வர்த்தகத் துறையில் முதலீடு செய்வது குறித்துப் பேசினார். (16-2-2007)



மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், தருமபுரி மாவட்டத்தில் நடைபெற்ற இரண்டாம் கட்ட இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் விழாவில், பயனாளிகளுக்கு தொலைக்காட்சிப் பெட்டிகளை வழங்கினார். (15.2.2007)



சென்னைக்கு வருகைதந்த மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு.ஆ.ப.ஜெ. அப்துல்கலாம் அவர்களை, மேதகு தமிழக ஆளுநர் திரு.சுர்ஜித்சிங் பர்னாலா அவர்களும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களும் விமானநிலையத்தில் வரவேற்றனர். (23-2-2007)



மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள், தமிழ்த்தாத்தா டாக்டர் உ.வே.சா. அவர்களின் 153ஆவது பிறந்தநாளை முன்னிட்டு அன்னாரது திருவுருவச்சிலைக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். உடன் மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி, மாண்புமிகு நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் வெள்ளக்கோயில் திரு. சாமிநாதன், தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை செயலாளர் திரு.து.இராசேந்திரன்,இ.ஆ.ப., செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு.சி.கோசலராமன், இ.ஆ.ப., ஆகியோர் உள்ளனர். (19-2-2007)



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களை, ஸ்பெயின் நாட்டின் பெபிசா கன்ஸ்ட்ரக்சன் டெக்னாலஜி ஆம்பியன்ட் நிறுவனம், ஐ.வி.ஆர்.சி.எல். கட்டமைப்பு மற்றும் திட்ட நிறுவன உயர் அலுவலர்கள் கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம் குறித்துப் பேசினர். உடன் மாண்புமிகு மத்திய தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு.தயாநிதி மாறன், மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் திரு.ஆர்க்காடு நா. வீராசாமி, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின், தலைமைச் செயலாளர் திரு.எல்.கே.திரிபாதி.இ.ஆ.ப. மற்றும் உயர் அலுவலர்கள் உடன் உள்ளனர் (25-2-2007)



மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் - கூட்டப்பனையில் டாட்டா நிறுவனம் நிறுவிய சுனாமி குடியிருப்புகளை குத்துவிளக்கேற்றி திறந்துவைத்தார். உடன் மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு.இரா. ஆவுடையப்பன், மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் டாக்டர் திருமதி.பூங்கோதை ஆகியோர் உள்ளனர். (27-2-2007)



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் முன்னிலையில்.
தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கும். தேசிய அனல்மின் கழகத்திற்கும் இடையே ஆந்திர மாநிலத்திலுள்ள
சிம்ஹாத்ரி அனல் மின் நிலையத்தில் உற்பத்தியாகும் மின்சாரத்தை பகிர்ந்துகொள்வது தொடர்பான
ஒப்பந்தம் கையெழுத்தானது (28-2-2007)



மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி அவர்கள். சென்னை காந்தி மண்டபத்தில்.
சென்னை மாவட்ட செய்தி-மக்கள் தொடர்பு அலுவலகத்தின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள
பல்துறை பணி விளக்க முகாமினைத் திறந்துவைத்துப் பார்வையிட்டார்.
உடன் மாவட்ட ஆட்சியர் திருமதி.ஆர்.ஜெயா.இ.ஆ.ப. உள்ளார் (28-2-2007)



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் தலைமையில்,
மாநில திட்டக்குழுக் கூட்டம் நடைபெற்றது. இதில் தலைமைச் செயலாளர் திரு.எல்.கே.திரிபாதி,இ.ஆ.ப.,
திட்டக்குழு துணைத்தலைவர் பேராசிரியர் மு. நாகநாதன், உறுப்பினர்-செயலர் திருமதி.கிரிஜா வைத்தியநாதன்,இ.ஆ.ப.,
உறுப்பினர்கள் டாக்டர் சீனிவாசன், டாக்டர் ஜெகதீசன், திரு.தமிழருவி மணியன், பேராசிரியர் சிதம்பரம்,
திரு.லஷ்மிகாந்தன் பாரதி, திரு.கருமுத்து கண்ணன் மற்றும் நிதித்துறை செயலாளர் திரு.கு.ஞானதேசிகன்,இ.ஆ.ப.,
திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை செயலாளர் திரு.டி.வி.சோமநாதன்,இ.ஆ.ப.,
ஆகியோர் கலந்துகொண்டனர் (5-3-2007)



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களை, மலேசிய நாட்டு பினாங்கு மாநிலத்தின்
மாண்புமிகு முதலமைச்சர் டான்ஸ்ரீ டாக்டர் கோ சு கூன் அவர்கள் தலைமையில், அம்மாநிலத்தின்
மாண்புமிகு அமைச்சர்கள் டாக்டர்.டெங் ஹாக் நன் மற்றும் திரு.சுப்பையா ஆகியோர் சந்தித்தனர்.
உடன் பினாங்கு முதலீட்டு அமைப்பு மேலாளர் திரு.எஸ்.பூபாலன்,
மலேசிய உயிரி தொழில்நுட்பக்கழக தொழில் வளர்ச்சிப் பிரிவு
துணைத்தலைவர் திரு.செல்வம் ராமராஜ் ஆகியோர் உடனிருந்தார். (6-3-2007)

# தமிழர் பண்பாட்டைக் காக்கும் அமைப்புகளுக்கு தமிழ்ப்பெருமக்கள் ஆதரவு தர வேண்டும்



இந்த நல்ல மாலை நேரத்தில் தமிழ்க்கடலில் நீந்துகின்ற ஒரு அருமையான வாய்ப்பை நாமெல்லாம் பெற்றிருக்கின்றோம். இந்த வாய்ப்பு சென்னை மாநகரத்தில் தொடர்ந்து இன்னும் நான்கைந்து நாட்களுக்கு கிடைக்கவிருக்கிறது என்பதை அறியும்போது, நான் மெத்தவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

இங்கே நான் யார் யாரைக் காணுகிறேன் என்றால், என்னுடைய வழித் தோன்றல் கனிமொழியை மாத்திரமல்ல, அது எனக்கு எந்த வகையிலே வழித்தோன்றல் என்றால், கவிதை வழியிலே வழித்தோன்றல் – தமிழ் மொழி வழியிலே வழித்தோன்றல் – என்னுடைய உழைப்பு ஆர்வத்தின் வழித்தோன்றல் – கலையின் வழித்தோன்றல் என்ற முறையில், கனிமொழியின் பணியை இங்கே நான் அமர்ந்து இதுவரையிலே ஏறத்தாழ இரண்டு மணி நேரம் சுவைத்திருக்கின்றேன்.

நான் கனிமொழி பிறந்தபோது, அதற்கு கனிமொழி என்று பெயரிட்ட அந்தக் காலக் கட்டம் இருக்கிறதே, பேரறிஞர் அண்ணா அவர்கள் நடத்திய உலகத் தமிழ் மாநாடு நடை பெற்றபோது – உலகத் தமிழ் மாநாட்டின் ஊர்வலம் நடைபெற்ற அந்த நேரத்திலே தான் கனிமொழி பிறந்தது. உலகத் தமிழ் மாநாட்டின்போது பிறந்த குழந்தை என்ற காரணத்தினால் இன்று தமிழை உலகத்திலே பரப்புகின்ற இந்தப் பணியை ஏற்றிருப்பதாகவே நான் கருதுகின்றேன். அந்த வகையில் கனிமொழி என்னுடைய வழித்தோன்றலாக அமையுமானால், எனக்குப் பிறகு அந்தப் பணியை ஆற்ற என் குடும்பத்திலே ஒரு வழித்தோன்றல் உருவாகியிருக்கின்றது என்ற நிம்மதி எனக்கு ஏற்படும். அது ஏற்படுவதற்கு கனிமொழி காரணமாக இருக்கும் என்பதில் கிஞ்சிற்றும் எனக்கு ஐயப்பாடில்லை.








நான் வழித்தோன்றல் என்று குறிப்பிட்டேன். இங்கே பல நண்பர்களைப் பார்க்கிறேன். இந்தக் கலை மேடையை உருவாக்கியிருக்கின்ற தோட்டா தரணி, கனிமொழி அவருடைய பெயரைச் சொல்லி அழைத்தபோது, அவர் இங்கே மேடையிலே ஏறிய நேரத்தில் என்னுடைய நினைவு தோட்டா தரணியைச் சுற்றிச் சுழலவில்லை. அவருடைய தந்தை "தோட்டா" அவர்களைத் தான் சுற்றிச் சுழன்றது. ஏனென்றால் அவருடைய தந்தை தோட்டா அவர்கள் என்னுடைய படங்களுக்கு அந்தக் காலத்திலே "ஆர்ட் டைரக்டர்" ஆக இருந்தவர். இன்றைக்கு அவருடைய மகன், என் கண் எதிரே இப்படிப்பட்ட ஒரு அருமையான மாளிகையை உருவாக்கியிருக்கிறார் என்றால், இந்த மாளிகை எவ்வளவு அற்புதமாக இங்கே உருவாக்கப்பட்டிருக்கிறதென்றால் வழித்தோன்றல்கள் நிச்சயமாக நம்மை ஏமாற்றமாட்டார்கள். நம்முடைய கனவை நிறைவேற்றுவார்கள் என்பதற்கு இது அடையாளமாக அமைந்திருக்கின்றது.

**கதைக்கு வயது 60**

பிரகாஷ்ராஜ் அவர்கள் இங்கே ஒரு கவிதையைச் சொன்னார். அது நான் எழுதிய கவிதை என்பது உங்களுக்கெல்லாம் தெரியும் என்ற காரணத்தால் அதை யார் எழுதியது என்று அவரும் குறிப்பிடவில்லை. ஏனென்றால் அது பிரபலமான கவிதை. அதை என்னுடைய ஆருயிர் நண்பன் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் சொல்லாத மேடையில்லை.

"குடிசை தான் ! ஒரு புறத்தில்
கூரிய வேல் வாள்
வரிசையாய் அமைந்திருக்கும் – வையத்தைப்
பிடிப்பதற்கும், வெம்பகை முடிப்பதற்கும்
வடித்து வைத்த படைக்கலம்போல் மின்னும்,மிளிரும்"

என்று தொடங்கும் அந்தக் கவிதை, நான் 1945 ஆம் ஆண்டு தந்தை பெரியாரிடத்திலே, குடியரசு அலுவலகத்தில் துணை ஆசிரியனாக இருந்தபோது எழுதிய கவிதை. ஏறத்தாழ 60 ஆண்டுகளுக்கு மேல் அந்தக் கவிதைக்கு வயதாகிறது. அதை நான் எழுதிய பிறகு 1952 ஆம் ஆண்டு "பராசக்தி" படம் வெளிவந்தது. அந்தப்படம் வெளிவந்தபோது, ஒரு வாரப் பத்திரிகையில் பராசக்தி படத்தை விமர்சனம் செய்து, அதைத் தாக்கி எழுதியிருந்தார்கள். அந்தப் பத்திரிகையின் பெயரை இப்போது குறிப்பிடுவது நாகரிகம் இல்லை என்ற காரணத்தால் குறிப்பிடவிரும்பவில்லை. அட்டைப் படமே கூட, பராசக்தி என்று போடாமல், "பரப்பிரம்மம்" என்று போட்டு, பரப்பிரம்மம் என்ற பெயரால் நான் ஒரு வக்கிரமான கதையை எழுதியிருப்பதாகக் குறிப்பிட்டு, கதை வசவு தயாநிதி என்று போட்டிருந்தார்கள். தயாநிதி கூட இப்போது இங்கேயிருக்கிறார். அந்தப் பெயர் தான் இன்று என்னுடைய பேரனுக்கு அமைந்திருக்கின்றது. கதை வசவு தயாநிதி என்று போட்டு அதன் அட்டைப் படத்தில் நிர்வாணமாக ஒரு பெண்ணின் படத்தையும் போட்டு – அந்த நிர்வாணப் பெண்ணை எப்படி பரப்பிரம்மம் என்று அழைக்கிறோமோ அதுபோல கருணாநிதி எழுதிய கதையும் "பராசக்தி" என்று பெயர் பெறுகிறது என்று குறிப்பிட்டிருந்தார்கள்.

***சிவாஜிக்காக எழுதப்பட்ட கவிதை***

நான் அன்று இரவே அமர்ந்து – நானும் என்னுடைய ஆருயிர் நண்பர் சிவாஜி நடிப்பதற்காக "பரப்பிரம்மம்" என்ற பெயராலேயே ஒரு நாடகம் எழுதினேன். அந்தப் பத்திரிகை தந்த தலைப்பையே வைத்துக் கொண்டு நாடகம் எழுதி, அது ஏறத்தாழ தமிழ்நாட்டிலே என்னுடைய இயக்கத்தின் பிரச்சாரத்திற்காக 500 நாடகங்களுக்கு மேல் நடைபெற்றது. பிரச்சாரத்திற்காக நடைபெற்றது. இயக்கத்தைச் சேர்ந்தவர்களுடைய குடும்ப நல உதவிகளுக்காகவும் அந்த நாடகம் பயன்படுத்தப்பட்டது.



அந்த "பரப்பிரம்மம்" நாடகத்தில் இந்த "குடிசை தான் ஒரு புறத்தில்" என்று ஆரம்பமாகிற இந்தக் கவிதை வசனத்தை 'நடிகர் திலகம் சிவாஜி அவர்கள் பேசுவார். அதற்குப் பிறகு சில ஆண்டுகள் கழித்து, அந்த வசனத்தை நான் சிவாஜி என்னோடு அதிக தொடர்புகொள்ள முடியாத திரைப்படப் பணிகளிலே இருந்த காரணத்தால், இன்னொரு நடிகருக்கு அதை வழங்கிவிட்டேன். அவர் அந்தப் படத்திலே அதைப் பேசிவிட்டார். அதற்குப் பிறகு "ராஜாராணி" படம் வெளிவந்தது. அதிலே சிவாஜி சேரன் செங்குட்டுவனாக நடித்தார். சேரன் செங்குட்டுவனாக சிவாஜி நடித்தபோது, இதே "குடிசை தான் ஒரு புறத்தில்" வசனத்தை அவருக்குக் கொடுத்தனுப்பினேன். இயக்குநர் பீம்சிங் அந்தப் படத்தை இயக்கினார். சிவாஜி கோபத்தோடு, இதை கலைஞரிடமே திருப்பிக் கொடுத்து விடுங்கள். நான் பேசமாட்டேன், ஏனென்றால் நான் 500 நாடகங்களிலே பேசிய அவருடைய இந்த வசனத்தை கலைஞர் அவருடைய வேறொரு படத்திற்கு இன்னொரு நடிகருக்கு கொடுத்துவிட்டார். எனவே நான் அதைப் பேச மாட்டேன் என்று அவரிடம் சொல்லுங்கள்" என்று சொல்லியனுப்பிவிட்டார். இயக்குநர் திணறுகிறார் தயாரிப்பாளர்கள் தவிக்கிறார்கள். வேறு வழியில்லாமல் என்னுடைய வீட்டிற்கு டைரக்டர் பீம்சிங் ஓடோடி வந்து என்ன செய்வதென்று கேட்டார். என்ன அதைப்போல இன்னொரு வசனம் தானே வேண்டுமென்று அப்போது உட்கார்ந்து உடனடியாக ஒரு மணி நேரத்திலே எழுதிக் கொடுத்தேன்.

"காவிரி தந்த தமிழகத்து புது மணலில்
களம் அமைத்துச் சேர சோழ பாண்டி மன்னர்
கோபுரத்துக் கலசத்தில்
யார் கொடி தான் பறப்பதென்று
போர் தொடுத்துக் கொண்டிருந்த காலமது!
அந்நாளில் ஓர் களத்தில்,

தாய்நாடு காக்கத் தாவிப் பாய்ந்து செத்தார்
தந்தை என்ற சேதி கேட்டுத்
தணல் வீழ் மெழுகானாள் தமிழகத்துக்
கிளியொருத்தி"

என்று தொடங்குகின்ற இந்தக் கவிதையை எழுதி சிவாஜிக்கு அனுப்பினேன். உடனே அதை வாங்கிப் பார்த்து விட்டு சிவாஜி அந்தப் படத்திலே அதைப் பேசினார். நிம்மதியாயிற்று.

அதற்குப் பிறகுதான் "குடிசை தான் ஒரு புறத்தில்" என்ற கவிதையை நானே பல மேடைகளிலே பாடிப் பாடி கையொலி பெற்றிருக்கிறேன். பாராட்டுப் பெற்றிருக்கிறேன்.

அப்போது எனக்கு ஓர் ஆதங்கம். இந்த வசனத்தை மறுபடியும் சிவாஜி பேசவில்லையே – என்கிற ஓர்











ஆதங்கம் உண்டு. இரண்டு நாட்களுக்கு முன்பு கூட கனவு கண்டேன். அந்தக் கனவில் சிவாஜி வந்ததைப் போல – அடிக்கடி கனவில் நான் சிவாஜியைக் காண்பதுண்டு – அதனுடைய அடையாளம்தான் கடற்கரையிலே இருக்கின்ற சிவாஜியின் சிலை என்பதை நீங்கள் அறிவீர்கள். அந்தக் கனவிலே கூட நான் சிவாஜியைப் பார்த்தபோது சொன்னேன். 'நீ மறுபடியும் வந்து இந்த "குடிசைதான் ஒரு புறத்தில்" என்ற வசனத்தைப் பேசிக் காட்ட மாட்டாயா ?" என்று கேட்டேன். அந்தக் கனவில் சிவாஜி மௌனப் புன்னகையோடு போய்விட்டார். இன்று பார்த்தால் பிரகாஷ்ராஜை அனுப்பியிருக்கிறார். எனக்குப் பதிலாக நீ சென்று பேசு என்று அனுப்பியிருக்கிறார். ஆகவே பிரகாஷ்ராஜ்க்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



பிரகாஷ்ராஜ்க்கும் எனக்கும் எப்படிப்பட்ட உறவு என்றால் என்னோடு பேசாத உறவு – மௌனமான காதல் எனக்கும் அவருக்கும் – நான் அதிகமாக அவரை ரசிக்கின்ற ஒரு ரசிகன். ஆனால் என்னைக் கண்டாலே பேசாமல் ஓடி விடுகின்ற ஒரு நடிகர் பிரகாஷ்ராஜ். வேண்டுமானால் அவரிடமே உண்மையா இல்லையா என்று கேட்டுப் பாருங்கள். நான் இரண்டு மூன்று முறை – கடந்த முறை அமைச்சராக இருந்த போது கூட – ஒரு விழாவிலே அவருக்கு பரிசளித்திருக்கிறேன். பரிசு வாங்கிக் கொண்டு வணக்கம் கூட சொல்லாமல் பேசாமல் போய் விட்டார். அவ்வளவு வெட்கம் – நன்றி கூடச் சொல்லாமல் போய் விட்டார் – அவ்வளவு நாணம். பார்த்தால்தான் பெரிய திடகாத்திரமாக ஆஜானுபாகுவாகத் தெரிகிறார். நாணம் அவரை என்னோடு பேசுவதற்கு பலமுறை தடுத்துவிட்டது. ஆனால் என் வசனத்தைப் பேசுவதற்கு தடையில்லாத காரணத்தால் இன்றைக்கு அவர் பேசி உங்களுடைய கைதட்டலை எல்லாம் பெற்றிருக்கிறார். இந்த நிகழ்ச்சியிலே என்னுடைய கவிதையும் இடம் பெற்றது. எனக்குப் பெரும் மகிழ்ச்சி ஏனென்றால் இந்த நிகழ்ச்சி தொடர்ந்து நடக்கப் போகின்ற நிகழ்ச்சி.





நம்முடைய அருமை நண்பர், அருள்திரு ஜெகத் கஸ்பார் அவர்கள் இங்கே எடுத்துக்காட்டியதைப்போல எதிர்காலத்திலே இன்றைக்கு நடைபெறுகின்ற நிகழ்ச்சி, தமிழ் மக்களுடைய நிகழ்ச்சியாக ஆகவிருக்கின்றது. அப்படி ஆகின்ற நேரத்திலே பழந்தமிழகத்தை நாம் மீண்டும் பார்க்கப் போகிறோம். பழந்தமிழகம் என்றால் – விஞ்ஞானம் இன்றைக்கு வளர்ந்திருக்கிறதே – இந்த விஞ்ஞான வளர்ச்சி இல்லாத தமிழகம் அல்ல – அன்றொரு நாள் – பன்னெடு நாட்களுக்கு முன் – பழந்தமிழர் காலத்தில் – பசும்புல் தரையில் – பால் வண்ண உடை உடுத்தி – காதலுக்கும் கடவுளுக்கும் வேறுபாடில்லை, அவை காலத்தால் அழிவதும் இல்லை என்று வாழ்ந்தானே தமிழன் – அந்த தமிழனுடைய நாடு, அந்தத் தமிழனுடைய பண்பாடு, அந்தத் தமிழனுடைய வரலாறு இவைகள் எல்லாம் மீண்டும் நமக்குத் திரும்பக் கிடைக்கக் கூடிய அளவிற்கு நம்முடைய தலைவர்கள் பட்ட பாடெல்லாம் வெற்றிகரமாக நிகழ்கின்ற அளவிற்கு கலை, கலாச்சாரம், இசை, நாடகம் – இந்தத் தமிழர்களுடைய பண்பாடெல்லாம் தொடர்ந்து காப்பாற்றக் கூடிய அளவிற்கு இதுபோன்ற அமைப்புகள், மையங்கள் நிறையத் தோன்ற வேண்டும். இப்படித் தோன்றுகின்ற மையங்களை தமிழ்ப் பெருமக்களாகிய நீங்கள் எல்லாம் ஆதரவு தந்து வாழ்த்த வேண்டும், வரவேற்க வேண்டுமென்று உங்களையெல்லாம் கேட்டு என் உரையை நிறைவு செய்கிறேன்.





சமூக நீதி காத்த சான்றோர் - 3



# மகாத்மா காந்தி

## (1869 - 1948)

புத்தர், இயேசு ஆகியோருக்கு இணையாக வைத்துப் போற்றப்பட வேண்டியவர் என மௌண்ட்பேட்டனால் புகழப்பெற்ற காந்தி, சூரியன் மறையாத சாம்ராஜ்யத்தை, சட்டைக் கூட போடாமல் சுண்டைக்காய் அளவு சுருக்கிவிட்ட விந்தை புரிந்த ஒரு மாமேதை. இரண்டாயிரம் ஆண்டுகளாக இந்தியாவை பீடித்திருந்த சாதி, மத வெறி மற்றும் தீண்டாமையை எதிர்த்து ஒரு யுத்தத்தையே நடத்தினார்.

### தென்னாப்பிரிக்கா

1893–ஆம் ஆண்டு தாதா அப்துல்லா என்ற தொழிலதிபரின் வழக்கு தொடர்பாக தனது 24ஆம் வயதில் காந்தி, தென்னாப்பிரிக்கா செல்ல நேரிட்டது. தென்னாப்பிரிக்கா வந்து இறங்கிய ஒரு வாரத்தில் இனவெறி என்பது என்ன என்பதை அனுபவித்துத் தெரிந்து கொண்டார். டர்பன் நகரிலிருந்து பிரட்டோரியா நகருக்கு காந்தி ஒரு இரயில் பயணம் மேற்கொண்டார். பாதி வழியில் ஒரு ஆங்கிலேய டிக்கெட் பரிசோதகர் காந்தி இருந்த பெட்டிக்கு வந்து, காந்தி வெள்ளை இனத்தவரை சேர்ந்தவரல்லர் என்ற ஒரே காரணத்தால், அவரை வெளியேற உத்தரவிட்டார். தான் முறையான முதல் வகுப்பு டிக்கட் பெற்றிரு ப்பதைக் கூறியும், அதை ஏற்க மறுத்த டிக்கட் பரிசோதகர், பீட்டர் மாரிட்ஸ் பர்க் என்ற இரயில் நிலையத்தில் ஒரு போர்ட்டரின் உதவியுடன் காந்தியை அவரது பெட்டிகளுடன், ரயிலிலிருந்து வெளியே தள்ளினார். அன்று இரவு முழுவதும் குளிரில் நடுங்கிய வண்ணம் அந்த இரயில் நிலையத்திலேயே கடவுளை வேண்டிய வண்ணம் கழித்தார். மறுநாள் முற்றிலும் மாறிவிட்ட வித்தியாசமான காந்தி தோன்றினார்! ஆம்! அங்கே ஒரு யுகப் புருஷன் தோன்றினான்.

டர்பன் நகரில் இந்தியர்களுக்கென ஃபீனிக்ஸ் குடியிருப்பை காந்தி உருவாக்கினார். அப்பொழுது 8 வயது நிரம்பிய இந்தியர்கள் தங்களது பெயரையும், கைரேகையையும் பதிவு செய்ய வேண்டும் ; கிறிஸ்துவ முறைப்படி செய்யப்பட்ட திருமணங்கள் மட்டுமே செல்லும்; மற்றவை செல்லாது என தென்னாப்பிரிக்கா அரசு அறிவித்தது. உடனே, (11.9.1906) காந்தி, ஜோகன்னஸ்பர்க்கில் உள்ள எம்பயர் தியேட்டரில் அனைத்து இந்தியர்கள் கூட்டத்தைக் கூட்டி தென்னாப்பிரிக்க இனவெறி அரசின் அடக்குமுறைச் சட்டங்களை வன்மையாகக் கண்டித்தார். "செத்து மடிவேனே தவிர, இச்சட்டத்திற்கு அடிபணிய மாட்டேன்", என்று கூறி சத்யாகிரகப் பேராட்டத்தில் ஈடுபட்டார். இனவெறிப் பிடித்த தென்னாப்பிரிக்காவில் வாழும் இந்தியர்களின் சுயமரியாதைக்காக 21 ஆண்டுகள் போராடினார். அதில் 249 நாட்களை சிறையில் கழித்தார். இறுதியில் காந்தியே வெற்றி பெற்றார்.

### கிலாபாத் இயக்கம்

இஸ்லாமியர்களின் அனைத்து புண்ணியத் தலங்களுக்கும் துருக்கியின் சுல்தான் தலைவராக (காலிபத்) இருந்தார். ஆனால் முதல் உலகப் போரின் முடிவில் கையெழுத்தான உடன்படிக்கையில் இந்த அந்தஸ்து ரத்து செய்யப்பட்டது. இங்கிலாந்தின் இந்தப் போக்கை இந்திய முஸ்லீம்கள் வன்மையாக கண்டித்தனர். 1919ஆம் ஆண்டு இந்தியாவிலும், இங்கிலாந்திலும் முஸ்லீம்கள் கடுமையான போராட்டத்தில் ஈடுபட்டனர். இப்போராட்டத்திற்குப் பெயர் தான் கிலபாத் இயக்கம் ஆகும். காந்தி, இந்திய முஸ்லிம்களுக்கு முழு ஆதரவு வழங்கினார். 1919ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 23ஆம் நாள் அகில இந்திய கிலாபத் மாநாடு டெல்லியில் கூடிய போது, காந்தி அதன் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். முஸ்லீம்களின் பிரச்சினை உடனடியாகத் தீர்க்கப்படா விட்டால், பகிஷ்கரிப்பும் ஒத்துழையாமையும் தொடங்குவோம் என்று காந்தி கூறினார்.

ஒத்துழையாமை என்பது நம்மிடையே உள்ள ஒரே ஆயுதம். ஒருவனுடைய மதம் மற்றும் ஆன்ம உணர்வுகள் அவமானப்படுத்தும்போது ஒத்துழையாமை என்பது கடமையாகிறது. முஸ்லீம்களுக்கு வாழ்வா ? சாவா ? என்ற அளவிற்கு முக்கியமான பிரச்சினையில் நாம் கண்டு கொள்ளாமல் இருப்போம் என்று ஆங்கிலேயர் எதிர்பார்த்தால் அது மிகவும் தவறு. " நாம் யாராக இருந்தாலும் – இந்துக்கள், முஸ்லீம்கள், பாரசீகர்கள், கிறிஸ்துவர்கள், யூதர்கள் – என்று யாராக இருந்தாலும் ஒருவரின் நலனே மற்றவர்களுக்கும் நலன் என்று கருதினால் மட்டுமே இந்தியா ஒரே நாடாக இருக்க முடியும்" என்று காந்தி கூறினார்.

அடுத்த ஐந்தாண்டுகள் இந்து – முஸ்லீம் ஒற்றுமை, தீண்டாமை ஒழிப்பு, பெண்ணுரிமை, கிராம பொருளாதார மேம்பாடு ஆகியவைகளுக்காக போராடினார். "I am not interested in freeing India merely from the English yoke. I am bent upon freeing India from any yoke whatsoever" என்று காந்தி குறிப்பிட்டார்.

### மோப்ளா கலவரம்

கேரளக் கடற்கரையில் வசித்து வந்த 'மோப்ளா' எனப்படும் முஸ்லீம் பிரிவினர் 1921ஆம் ஆண்டு பெரும் கலவரத்தில் ஈடுபட்டனர். ஆகஸ்ட் – 20ஆம் நாள் கோழிக்கோடு நீதிபதி, சில தலைவர்களைக் கைது செய்ய உத்தரவிட்டபோது பெரிய கலவரம் மூண்டது. சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து போனது. வன்முறை எங்கும் தாண்டவமாடியது. அப்போது நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களைக் கண்டித்து காந்தி, 21நாள் உண்ணாவிரதத்தை மேற்கொண்டார். பல்வேறு மதத்தைச் சேர்ந்த மக்கள் தங்களின் வேற்றுமைகளை மறந்து ஒற்றுமையுடன் வாழ்வதாக காந்தியிடம் உறுதியளித்ததைத் தொடர்ந்து காந்தி உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்டார்.

> தவிர்க்க முடியாத காரணங்களால் பிப்ரவரி மாத இதழில் சமூக நீதி காத்த சான்றோர் கட்டுரை இடம்பெறவில்லை. அதையும் சேர்த்து இந்த இதழில் இரண்டு கட்டுரைகள் வெளியிடப்பட்டுள்ளன.
>
> – ஆசிரியர்

1932ஆம் ஆண்டு ஆகஸ்ட் 16ஆம் நாள் ராம்சே மெக்டொனால்டு "கம்யூனல் அவார்டை" அறிவித்தார். அதன்படி முகமதியர்கள், ஐரோப்பியர்கள், சீக்கியர்கள், அரிஜன மக்கள் ஆகியோருக்கு தனி வாக்குரிமை (Separate electorate) வழங்குவதாக அறிவித்தார். இதை எதிர்த்து செப்டம்பர் 20ஆம் நாள் காந்தி, சாகும்வரை உண்ணாவிரத போராட்டத்தை அறிவித்தார். அடுத்த ஆறு ஆண்டுகளுக்கு தீண்டாமை ஒழிப்பிற்காகவே காந்தி தன்னை அர்ப்பணித்துக் கொண்டார். தன்னுடைய சபர்மதி ஆசிரமத்தை அரிஜனங்களுக்கு வழங்கி விட்டு காந்தி வார்தாவிலுள்ள ஆசிரமத்திற்கு குடியேறினார். தீண்டாமை ஒழிந்தால்தான் நாடு பூர்ண சுயராஜ்யம் பெற்றதாகப் பொருள் என காந்தி கூறினார். 1933ஆம் ஆண்டு மே திங்கள் 8ஆம் நாள் ஹரிஜன மக்களின் மேம்பாட்டிற்காக – தன்னைத்தானே மேலும் புனிதமாக்கிக் கொள்ள 21 நாள் உண்ணாவிரதம் மேற்கொண்டார்.

### நவகாளி

கிழக்கு வங்காளம், நவகாளி மாவட்டத்தில் வன்முறைகளை கேள்வியுற்ற காந்தி நவகாளிக்குச் சென்றார். நவகாளியில் காந்தி, கிராமம், கிராமமாகச் சென்று பிரசாரம் செய்து மக்கள் மனதில் தைரியத்தையும், அன்பையும் ஊற்றெடுக்கச் செய்தார். 1946ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் ஏழாம் நாள் முதல் 1947ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 2ஆம் நாள் வரை காந்தி நவகாளியில் முகாமிட்டிருந்தார். அதன் பலனாக, நவகாளியில் அமைதி திரும்பியது. "காந்தியின் புனிதமான வாழ்க்கை



என்ற புத்தகத்தில் புனிதமான அத்தியாயம் நவகாளி யாத்திரைதான்" என இராஜாஜி குறிப்பிட்டார்.

### ஒரு மனிதர் எல்லைப்படை (One man boundary force)

இந்த நாடே தீப்பற்றி எரிந்தாலும், 'பாகிஸ்தான்' என ஒரு அங்குல நிலத்தைக் கூட விட்டு தரமாட்டேன் என காந்தி கூறி வந்தார். ஆனால், நாடு இரண்டாக பிரிந்தது. இந்து முஸ்லிம் கலவரம் கோரத் தாண்டவமாடியது. பஞ்சாப் மிக மோசமாக பாதிக்கப்பட்டது. மௌண்ட் பேட்டன் பஞ்சாபிற்கு அனுப்பிய இராணுவத்தால் சட்டம் ஒழுங்கை சிறிதளவு கூட காப்பாற்ற முடியவில்லை. இந்நிலையில் கல்கத்தாவில் மதக்கலவரம் ஆரம்பித்துவிட்டால் இந்த நாடே தீப்பற்றி எரியும் சூழ்நிலை நிலவியது. அவருடைய இராணுவப் பலத்தால் ஒன்றும் செய்யமுடியாது. அப்பொழுது அவருக்கு ஒரே ஒரு தீர்வு மட்டும் தோன்றியது. காந்தியிடம் சென்று நிலைமையை விளக்கினார். கல்கத்தா தீப் பிடித்து எரிந்தால் நாடே தீப்பற்றி எரியும். என்னுடைய இராணுவம் ஒன்றும் செய்ய இயலாது. ஆகவே, என்னுடைய ஒரு மனிதர் எல்லைப் படையாக (One man boundary force) நீங்கள்தான் கல்கத்தா சென்று, அமைதி ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

மௌண்ட்பேட்டனின் இந்தக் கோரிக்கையை ஏற்ற காந்தி கல்கத்தா சென்றார். அங்கே ஒரு பாழடைந்த வீட்டில் தங்கி அனைத்து மதத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி – அது பலனளிக்காதபோது உண்ணாவிரதம் மேற்கொண்டு கல்கத்தாவில் அமைதியை கொண்டு வந்தார். சண்டை போடும் இரு பிரிவினரிடையே ஒப்பந்தத்தை ஏற்படுத்தி அதைக் காப்பாற்ற தன் உயிரையே பணயம் வைப்பதுதான் அகிம்சைத் தத்துவத்தின் மையக் கருத்தாகும். சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொண்டு கல்கத்தாவில், அமைதியை காந்தி கொண்டு வந்தார். உண்ணாவிரதம் மேற்கொண்டும், கைராட்டினத்தில் நூல் நூற்றுக்கொண்டும் பிரார்த்தனை செய்து கொண்டும் காந்தி, இந்தியாவின் விடுதலை நாளை கல்கத்தாவில் கொண்டாடினார்.

### காந்தியின் கடைசி உண்ணாவிரதம்

கல்கத்தாவிலிருந்து டெல்லி திரும்பிய காந்தி, டெல்லியில் தலைவிரித்தாடிக்கொண்டிருந்த கலவரத்தை அடக்கவும், இருநாடுகளுக்கிடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி இந்தியா, பாகிஸ்தானுக்கு தரவேண்டிய ரூ.85 கோடி உடனே தரவேண்டுமென, நேருவை வற்புறுத்தியும் 1948ஆம் ஆண்டு ஜனவரி 13ஆம் நாள் உண்ணாவிரதம் மேற்கொண்டார். அவர் எதிர்பார்த்த விளைவுகள் வர ஆரம்பித்தன. அனைத்து மதத்தலைவர்களும் ஒன்று கூடி தாங்கள் ஒற்றுமையாக இருப்பதாக உறுதி செய்துகொடுத்த பின்னரே தன்னுடைய 121 மணி 30 நிமிட உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்டார். டெல்லியில் கலவரம் மெல்ல மெல்ல ஓய்ந்து அமைதி திரும்பியது.

### காந்தியின் மரணம்

காந்தியின் கடைசி உண்ணா விரதத்தை, முஸ்லீம்களுக்கு ஆதரவானதெனக் கருதி, இந்து மதத் தீவிரவாதியான நாதுராம் கோட்சே 1948ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 30ஆம் நாள், டில்லியில், காந்தி மாலை பிரார்த்தனைக்கு சென்றுகொண்டிருக்கும்போது, நேர் எதிரே வந்து சுட்டுக்கொன்றான். அப்போது நேரம் சரியாக மாலை 5.17. வாழ்நாள் முழுவதும் இந்து முஸ்லிம் தீவிரவாதத்தை ஒழித்து, மத நல்லிணக்கம் ஏற்பட தன்னுடைய வாழ்க்கையையே அர்ப்பணித்த காந்தி மதவெறியின் காரணமாகவே சுட்டுக் கொல்லப்பட்டார்.

– ந. இளங்கோ
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்







# தந்தை பெரியார்

(1879 - 1973)

அத்தனையும் தூள் தூளாக வேண்டும்; தடையாக வருவது எதுவாக இருந்தாலும் உடைத்தெறிவதே பெரியாரின் செயற்கரிய தொண்டாகும். மூடப் பழக்கங்களில் முடங்கிப் போன முட்டாள்களுக்கு அவர் கருணை காட்டியதில்லை. உண்மைக்கு மிகப்பெரிய வெளிச்சத்தைப் போட்டுக் காட்டியவர். அந்த வெளிச்சத்தில் அறியாமையும், மூடநம்பிக்கைகளும் சுட்டெரிக்கப்பட்டன.

இருபதாம் நூற்றாண்டின் தலைசிறந்த சிந்தனையாளர். இரண்டாயிரம் ஆண்டுகளாக தூங்கிக் கிடந்த தமிழ் மக்களைத் தட்டி எழுப்பிய புயல் வீரர் – உண்மை, நேர்மை, நியாயத்தின் உறைவிடம், மூட நம்பிக்கைகளை சுட்டெரித்த சூரியன் – பகுத்தறிவுப் பகலவன் ஈ.வெ.ரா. பெரியார் வெங்கட்ட நாயக்கர் – சின்னத்தாயம்மையார் தம்பதியருக்கு மகனாக ஈரோட்டில் 1879–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 17ஆம் நாள் பிறந்தார். 1898ஆம் ஆண்டு நாகம்மையை மணந்தார்.

சமுதாயத்தில் சாதி மத பேதங்கள் நீங்க வேண்டும். உயர்ந்தோர், தாழ்ந்தோர், ஆண்டான், அடிமை, மேலோர், கீழோர் என்ற பாகுபாடுகளை வேரோடு களைந்தெறிய வேண்டும். அதற்குத் தடையாக வேதங்களும், இந்து மதமும், மூடப் பழக்க வழக்கங்களும், ஒரு சதவிகிதத்திற்கும் குறைவான மக்களின் ஆணவமும், அதிகாரமும் என்று எதுவரினும்

### வைக்கம் போராட்டம்

கேரளத்தில் வைக்கம் என்ற ஊரில், கோவிலைச் சுற்றியுள்ள ஒரு தெருவில் தாழ்த்தப்பட்டவர்கள் செல்லக் கூடாது என்ற கட்டுப்பாடு இருந்தது. அந்தக் கட்டுப் பாட்டைத் தகர்க்க விரும்பிய கேரள காங்கிரஸ் தலைவர் ஜார்ஜ்ஜோசப் ஒரு சத்யாகிரகப் போராட்டத்தைத் துவக்க முடிவுசெய்தார். ஆனால் அவரையும், அவருடன் இருந்த 19 தலைவர்களையும் கைது செய்தார்கள். சிறையில் இருந்த ஜார்ஜ்ஜோசப்பும், குரூர் நீலகண்ட நம்பூதிரியும் பெரியாருக்கு ரகசியமாக ஒரு கடிதம் எழுதினர். "பெரிய காரியத்தை தொடங்கி விட்டோம் – அடக்குமுறை பலப்பட்டு விட்டது. இவ்வளவு சீக்கிரத்தில் நாங்கள் எல்லோரும் கைது செய்யப் படுவோம் என்று எதிர்பார்க்கவில்லை. தாங்கள் உடனே வைக்கம் வந்து சத்யாகிரகத்தை ஏற்று நடத்தினால்தான்

கேரளத்தினுடைய மானமும், எங்களுடைய மானமும் மிஞ்சும். காலதாமதம் செய்யவோ யோசித்து பார்க்கவோ நேரமில்லை. உடனே வரவும்". தகவல் கிடைத்ததும் பெரியார் உடனே (1924) வைக்கம் புறப்பட்டார். வைக்கத்தில் மகாதேவர் கோவில் முன்பு தீண்டாமை ஒழிப்புச் சத்தியாகிரக போராட்டம் நடத்தி இரண்டு முறை சிறைச் சென்றார். அவரைத் தொடர்ந்து அவரது மனைவி நாகம்மையார் போராட்டத்தில் ஈடுபட்டார். இறுதியில் பெரியார் வெற்றி பெற்றார். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தெருவில் நடக்கும் உரிமை வழங்கப்பட்டது. இத்தகைய வெற்றி இந்தியாவிலேயே முதன் முதலாக வைக்கம் போராட்டத்திற்குத் தான் கிடைத்தது என்பது குறிப்பிடத்தகுந்தது. இந்தப் போராட்டமே இந்தியாவில் நடைபெற்ற முதல் மனித உரிமைப் போராட்டம் எனலாம். இதனைத் தொடர்ந்து கோயில் பிரவேசக்கிளர்ச்சி ஏற்பட்டு திருவாங்கூர் கோயில்கள் அனைத்தும் தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் திறந்துவிடப்பட்டன. நாடெங்கும் புகழ்ப்பெற்ற இந்த சத்தியகிரகப் போராட்டத்திற்குப் பின்னர் பெரியார் "வைக்கம் வீரர்" என்றழைக்கப்பட்டார்.

### வகுப்புவாரி பிரதிநிதித்துவம்

1920 ஆம் ஆண்டு திருநெல்வேலியில் நடைபெற்ற தமிழ்நாடு காங்கிரஸ் மாகாண மாநாட்டில் பெரியார், வகுப்புவாரி தீர்மானத்தை ஆலோசனைக் குழுவில் 6 வாக்கு வித்தியாசத்தில் நிறைவேற்றினார். ஆனால் மாநாட்டுத்தலைவர் எஸ்.சீனிவாசய்யங்கார் "இது பொது நலத்துக்குக் கேடு" என்று கூறி அனுமதிக்க மறுத்துவிட்டார். இதே தீர்மானத்தை, 1921ஆம் ஆண்டு தஞ்சாவூர் மாநாட்டில் பெரியார் முன்மொழிந்த போது இதைக் கொள்கையாக வைத்துக் கொள்வோம். தீர்மானமாக வேண்டாம் என இராஜாஜி தடுத்துவிட்டார். 1922ஆம் ஆண்டு திருப்பூர் மாநாட்டில் பெரியாரின் தீர்மானத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டதால் வெகுண்டெழுந்த பெரியார் மனுதர்ம சாஸ்திரத்தையும், இராமாயணத்தையும் நெருப்பில் போட்டுக் கொளுத்த வேண்டும் என்றார். 1923ஆம் ஆண்டு திருவண்ணாமலையில் பெரியார் இத்தீர்மானத்தைக் கொண்டு வந்தபோது (பெரியார் தான் இம்மாநாட்டின் தலைவர்) எஸ். சீனிவாசய்யங்கார் கடுமையாக எதிர்க்கவே, தீர்மானம் தோற்றது. 1925ஆம் ஆண்டு காஞ்சிபுரம் மாநாட்டில் பெரியார் இதே தீர்மானத்தை முன் மொழிந்தபோது திரு.வி.க. இதை அனுமதிக்க மறுத்துவிட்டார். எனவே, கோபமடைந்த பெரியார் காங்கிரஸை விட்டு வெளியேறினார்.

காங்கிரஸை விட்டு வெளியேறியதும் 1926 டிசம்பர் 25,26 ஆம் நாட்களில் மதுரையில் மாகாண மாநாட்டை நடத்தினார். அதைத் தொடர்ந்து மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் இதுபோன்ற மாநாடுகளை நடத்தினார். "நமது மூடநம்பிக்கையும் முட்டாள்தனமும் நம்மை விட்டு விலகி சுயமரியாதை அடைந்த பிறகுதான் நாம் ஆட்சிபுரிவதற்கு உரியவர்களாவோம். நமது நாட்டில் உயர்ந்த ஜாதி என்கிற கொள்கை அழிந்துவிட்ட பின் தான் சுயமரியாதையை நினைப்பதற்கு யோக்கியதை உண்டு" என்று பெரியார் தமிழ்நாடெங்கும் முழங்கினார். சாதி ஒழிப்பு பிரச்சாரத்தைத் தீவிரமாக மேற்கொண்டார்.

"இப்பொழுதுள்ள சமூக அமைப்பு, பல பிரிவினைகளுக்கு இடமளிக்கிறது. உயர்வு, தாழ்வுகளுக்கு அடிப்படையானது; சண்டை சச்சரவுகளுக்குக் காரணமானது; மக்களுக்குள் ஒற்றுமை தோன்றுவதற்கு இடமளிக்காதது; பிற நாட்டினர் ஆதிக்கம் செலுத்துவதற்கு வழிகோலியது. ஆதலால், இப்பொழுதுள்ள சமூக அமைப்பு அடியோடு மாறவேண்டும். மக்களெல்லாம் ஒரு குலம் ஆகும்படியான புதிய சமூகமாக மாற வேண்டும்" என்றார் பெரியார்.

மனிதனுக்கு மனிதன் தொடக்கூடாது; கண்ணில் படக்கூடாது; தெருவில் நடக்கக் கூடாது; கோயிலுக்குள் போகக்கூடாது; குளத்தில் தண்ணீர் எடுக்கக் கூடாது என்கிறவை போன்ற கொள்கைத் தாண்டவமாடும் நாட்டில் இருந்துக் கொண்டு உயிர்வாழ்வதைவிட, அவர்கள் இம்முயற்சியில் உயிர் துறப்பதை உண்மையிலேயே தப்பு என்று யாராவது நினைக்கின்றீர்களா ?" என்று முழங்கினார்.

### காந்தியும் பெரியாரும்

1927 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் காந்தி, மைசூரில் பேசும்போது, வருணாசிரமத்தை வைத்துக் கொண்டே தீண்டாமையை ஒழிக்கலாம் என்று குறிப்பிட்டார். இது தொடர்பாக பெரியார், காந்தியை 1927ஆம் ஆண்டு பெங்களூரில் சந்தித்துப் பேசினார். இதுபற்றி 28.8.1927 நாளிட்ட குடியரசு பத்திரிகையில் கீழ்க்கண்டவாறு பெரியார் குறிப்பிட்டார். "முக்கியமாக, மூன்று விஷயங்களைப் பற்றியேதான் மகாத்மாவிடம் நானும், நமது நண்பரான திரு.எஸ். ராமனாதனும்



சம்பாஷித்தோம்... அதாவது, ஒன்று காங்கிரஸ் என்பதை ஒழிக்கவேண்டியது. இரண்டாவது, ஜாதி ஒழிக்கப்பட வேண்டும். அதற்கு இந்து மதம் என்பதை ஒழிக்க வேண்டும்; பார்ப்பன ஆதிக்கத்தை ஒழிக்க வேண்டும் என்பதாகும். இம்மூன்று விஷயங்களைப் பற்றியும் மகாத்மா சொன்ன சமாதானங்கள் எம்முடைய அபிப்பிராயத்தை மாற்றக் கூடியதாக இல்லை என்று சொல்லி மகாத்மாவிடம் உத்தரவு பெற்றுக் கொண்டு வந்துவிட்டோம்." என்று குறிப்பிட்டார்.

1928 ஆம் ஆண்டு 'ரிவோல்ட்' என்ற ஆங்கில ஏட்டைத் துவக்கினார். 1929 ஆம் ஆண்டு செங்கல்பட்டில் முதல் மாநில சுயமரியாதை மாநாட்டையும், 1930 ஆம் ஆண்டு ஈரோட்டில் 2ஆம் மாநில சுயமரியாதை மாநாட்டையும், 1931ஆம் ஆண்டு விருதுநகரில் 3ஆம் மாநில சுயமரியாதை மாநாட்டையும் நடத்தினார். 1934ஆம் ஆண்டு 'பகுத்தறிவு' வார ஏட்டையும், பின்னர் 'பகுத்தறிவு' நாளேட்டையும் நடத்தினார்.

1938ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 13ஆம் நாள் சென்னையில் டாக்டர் தருமாம்பாள் தலைமையில் நடைபெற்ற பெண்கள் மாநாட்டில் தான் ஈ.வெ.ராவுக்கு 'பெரியார்' என்ற பட்டம் வழங்கப்பட்டது.

### வெளிநாடுகளில் பிரசாரம்

தமிழ்நாட்டில் மட்டுமின்றி நாட்டின் எல்லைகளைக் கடந்து பெரியார், மலேசியா, இலங்கை, பர்மா, எகிப்து, கிரீஸ், துருக்கி, ரஷ்யா, ஜெர்மனி, இங்கிலாந்து, இத்தாலி, ஸ்பெயின், பிரான்ஸ், போர்ச்சுக்கல் உள்ளிட்ட பல்வேறு அயல்நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு பிரசாரம் நடத்தினார். அப்பொழுது ஓரிடத்தில் "நான் ஒரு புது மதத்தைப் போதிக்க வரவில்லை. ஒழுக்கத்திற்கு விரோதமான கொள்கைகளை மதம் என்றும் சாமி என்றும், புராணம் என்றும் பின்பற்றாதீர்கள். ஒழுக்கமாகவும், உண்மையாகவும் மற்ற மக்களிடத்தில் அன்பாகவும், சமபாவிப்பாகவும், பரோபகார எண்ணத்துடன் இருந்தால் போதும் என்றுதான் சொல்கிறேன். அதற்குத் தகுந்த கொள்கைளை ஏற்பது அது எந்த மதமாயினும் சரி, அது மதம் இல்லாவிட்டாலும் சரி என்று தான் சொல்லுகிறேன்" என்றார்.

1933 ஆம் ஆண்டு குடியரசு இதழில் இன்றைய ஆட்சி முறை ஏன் ஒழிய வேண்டும் ? என்ற தலைப்பில் தலையங்கம் எழுதியமைக்காக பெரியார் டிசம்பர் 30ஆம் நாள் கைது செய்யப்பட்டு கோவை சிறையிலடைக்கப் பட்டார். அங்கு ஏற்கெனவே, ராஜாஜி கைதியாக இருந்தார். அங்கு இருவரும் கலந்து ஆலோசித்து மக்கள் எண்ணிக்கைக்கு ஏற்றார் போல அரசியல் பிரதிநிதித்தும் மற்றும் வேலைவாய்ப்பு வழங்க வேண்டும் என ஒரு பொது வேலைத் திட்டத்தை உருவாக்கி காந்திக்கு அனுப்பி வைத்தனர். ஆனால் காந்தி இத்திட்டத்தை ஏற்கவில்லை என ராஜாஜி பின்னர் கூறினார். ஆனால் இத்திட்டத்தை நீதிக்கட்சி ஏற்றுக்கொண்டது. எனவே, பெரியார் நீதிகட்சியை ஆதரித்து தீவிரம் பிரசாரம் மேற்கொண்டார்.

### திராவிடர் கழகம்

பெரும் தலைவராகத் தனிப்பெரும் நாயகராக உருவாகி, மக்களின் மனதில் நிலைத்த பெரியாரை அவரது உருவப்படத்தை நாற்காலியில் வைத்து நீதிக்கட்சி அவரைத் தலைவராக அதே ஆண்டு தேர்ந்தெடுத்தது. 1944 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 27 ஆம் நாள் சேலத்தில் நடைபெற்ற நீதிக்கட்சி மாநாட்டிற்கு தலைமைத் தாங்கினார். அம்மாநாட்டில் நீதிக்கட்சியின் பெயர் திராவிடர் கழகம் என மாற்றப்பட்டது.

பெரியார் பல நூல்களை எழுதி வெளியிட்டார். 1950ஆம் ஆண்டு செப்டம்பர் 18ஆம் நாள் பெரியார் எழுதிய "பொன்மொழிகள்" என்ற நூலுக்காக ஆறு மாதம் சிறை தண்டனை விதிக்கப்பட்டார். ஆனால், 10 நாட்களில் விடுதலை செய்யப்பட்டார்.

தமிழ் மக்களின் மூடப்பழக்க வழக்கங்களை தன் வாழ்க்கையின் கடைசி நாள் வரை எதிர்த்துப் போராடிய தந்தை பெரியார் 1973 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 24ஆம் நாள், தன்னுடைய 95ஆம் வயதில் இயற்கை எய்தினார்.

இரண்டாயிரம் ஆண்டுகளாக திராவிட சமுதயாத்தின் கரங்களில் பூட்டப்பட்டிருந்து அடிமைச் சங்கிலியை ஐம்பதே ஆண்டுகளில் உடைத்தெறிந்த தமிழ்நாட்டின் புத்தர் – தமிழ்நாட்டின் சாக்ரடீஸ் – பெரியார் ஒரு யுகப்புருஷரே.

– ந.இளங்கோ
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்

சிறுகதை

# சிதறல்கள்

– விழி.பா. இதயவேந்தன்

அவன் ஆழ்ந்த நம்பிக்கையோடுதான் கடை விரிக்க ஆரம்பித்தான். எப்படியும் இங்காவது ஆட்களை வளைத்துப் பிடித்துவிடலாம் என்கிற எண்ணம் உள்ளுக்குள் வலுத்தது. இன்றைய பொழுதின் உயிர் நாடியே இங்குதான் இருக்கிறது. அவன் நெஞ்சின் இறுக்கம் கலைந்து துரிதமாய் செயல்பட்டான்.

தொடர்ந்து இரண்டு இடங்களில் வைத்துப் பார்த்தான். யாரும் வருவதாய் இல்லை. ஆஞ்சநேயர் கோயில் குளத்தைச் சுற்றி நிறைய வண்டிகள் வந்து நிற்கும். வெளியூர் வண்டிகள். ஊரிலிருந்து காய்கறி, மளிகை... சாமான் என சிற்றூர்களுக்கு மொத்தமாக வாங்கி எடுத்துச் செல்வதற்கு வந்து குளத்தைச் சுற்றி நிற்கும்.

'பில்லூர் முனுசாமி' லாடம் என்றால் அந்தப் பகுதி வண்டிக்காரர்களுக்கும் சரி, வெளி ஊரிலிருந்து வரும் வண்டிக்காரர்களுக்கும் சரி பிடிக்கும்படி இருக்கும். தொழில் சுத்தம் இருக்கிறதோ இல்லையோ, பேசும் பேச்சில் சுத்தம் தெரியும். ஊரையே வளைத்துப் பேசுவான்.

அதற்குத் தகுந்தாற்போல 'லாடம்' அடிக்க மாட்டைக் கொண்டு வரும்போது, 'இதப்பாரு முனுசாமி போன தடவ அவசரத்தில் அந்த ஒதவாக்கர கோவிந்தன்கிட்ட அடிச்சேன் ; உடம்புல இரத்தம் இருந்தாதான் அடி பலமா விழும்; தோ பாரு ஆணி சுழட்டிகிட்டு லாடம் நிக்கில. மாடு வேற நொண்டுது' என்பார்கள்.

"அதப்பத்திக் கவலப்படாதீங்க, அருமையா வேலய முடிச்சிர்ரேன், தோ பாருங்க லாடம், ஆணியெல்லாம் மெட்ராசிலேர்ந்து வர்றது. நம்மகிட்ட காசு பிரச்சின இல்ல, தொழிலுதான் முக்கியம். பணம் இன்னிக்கு போவும் நாளைக்கு வரும். மனுசன் நாலுபேர் நம்மளத் தேடி வரணும், இன்னா சொல்ற'' என்பான்.

அவன் சொல்லுவதுபோல் விரித்து வைத்த சாக்குப் பையில் ஆணிகளும் லாடங்களும் வெவ்வேறு அளவுகளில் பளபளவென மின்னிக் கொண்டிருக்கும்... உள்ளூர்க்காரன் மட்டமான லாடங்களையும் ஆணிகளையும் வரவழைத்து விற்பதைப் பலர் வாங்கி ஏதோ அன்றைக்குப் பொழுதைக் கச்சிதமாய் முடித்துவிட வேண்டும் என்று துடிப்பார்கள்.

முனுசாமிக்கு அப்படி எண்ணமில்லை. உள்ளூரிலேயே கொஞ்சம் காசு கூட. ஆனாலும் விலையுயர்ந்த லாடங்களை வாங்கித் தொழில் செய்வான். ஆணிகளும் அவ்வளவு சீக்கிரம் ஒடிந்து போகாது. என்னதான் மாடுகள் ஓட்டம் ஓடினாலும் ஆட்டம் ஆடினாலும் உடும்புப்பிடியாக நகங்களைப் பிடித்துக் கொள்ளும் லாடங்களோடு ஆணிகள். தொழிலில் குறை இல்லாதவாறு தனது கற்பனையைச் செலுத்தி தனது அப்பா சொல்லிக் கொடுத்த அத்துணை வேலைப்பாடுகளையும் திரட்டி இடையிடையே ஏராளமான பேச்சுக்களோடு ஆளையும் சேர்த்து வளைத்துப் போட்டு விடுவான்.

அன்றைக்குப் பார்த்து ஒருவனும் வந்து தமது பிடியில் சிக்காதவாறு விலகி விலகி நின்றது அவனுக்கு வருத்தம் ஏற்பட்டது.





"என்ன கோபாலு ரொம்ப நாளு ஆச்சே மாடு இன்னா சொல்லுது.''

"வா, வா முனுசாமி சவுக்கியமா ? மாடு இன்னா சொல்லுது; விக்கிற வெலவாசில அதுக்குத் தீனிகூட எட்டல, பேசாம வித்திட்டு வேற கூலி வேல செய்யலாம்.''

"ஆமாமாம், முன்ன மாதிரி சுறுசுறுப்பா இல்லியே உன் மாடு''

"எப்பிடி சொல்ற ?''

"பாத்தாதான் தெரிதே காலெல்லாம் குச்சி மாதிரி கெடக்குது.''

"இன்னா செய்யிறது இதவெச்சிக்கிட்டுத்தான் நானும் பொழப்பு நடத்துறேன்.''

"ஆமாம் எப்ப லாடம் அடிச்சே, ஆறு மாசம் இருக்காது ?''

"மேலேயே ஆயிடுச்சு, நீ அடிச்சதுதான். எல்லாம் போயிடுச்சு.''

"இப்ப அடிச்சிடலாமா''

"வேணாம்பா, இந்த மாசம் நெறைய செலவு; ஒன்னும் சமாளிக்க முடியல.''

முனுசாமிக்கு அவன் குறையைச் சொன்னதும் தன் குறையை யாரிடம் சொல்வது என்றாகிவிட்டது. இரண்டு மாட்டுக்கு லாடம் அடிச்சாலும் வர்ற காசில அரிசி, காய்கறி வாங்கிப் போய் ராத்திரியோட ராத்திரி ஏதாச்சும் ஆக்கித் தின்றுவிடலாம். பையன் வேற வரும்போதே பட்டாணியும் வருக்கியும் கேட்டிருந்தான். அவன் ஆசையைத் தீர்க்க வேண்டும்: முழுகாமல் இருக்கும் மனைவி வரும்போதே, 'மாங்காயும் கருவாடும் வாங்கி வாங்க நல்லா கொழம்பு வெச்சித்தர்றேன்' என்று தன் ஆசையை மறைமுகமாகச் சொல்லி அனுப்பியிருந்தாள்.



"சரி கோபாலு, இருக்கிறதக் குடுப்பா, லாடம் அடிக்கிறேன், மீதி நாளைக்கு வாங்கிக்கிறேன், எங்கப் போயிடப் போவுது உன்கிட்ட காசு" முனுசாமி வளைத்துப்பிடித்தான்.

"இப்ப எவ்வளவு ஜோடி மாட்டுக்கு"

முனுசாமிக்கு உற்சாகம் அதிகமானது. கோபால் சற்று இறங்கி வருவதாகத் தெரிந்தது.

"கொஞ்சதான் ஏறியிருக்கு இருவது ரூபா ; ஆணி, லாடம் வெலயெல்லாம் ஏறியிடுச்சி தெரியுமில்ல"

"அப்பிடியா, என்னப்பா போனதடவ பாஞ்சு ரூபாய்க்கு அடிச்சேன், இப்ப இருவது இன்ற"

"சரி கோபாலு நமக்குள்ளே இன்னா, ஒருபா சேத்துக்குடேன், ஜாமான எடுத்து வாடா."

"இரு இரு வேணாம், நாளைக்கு அடிக்கிறேன்."

முனுசாமிக்கு பேச்சுத் தளர்ந்தது. வேறு திசையில் பார்வைகள் துழவின.

"அந்த காலத்தில் ஒருபா குடுத்தா ங்கொப்பன் லட்சனமா அடிப்பாரு தெரிமா ?

"சரி அது யாரு வண்டி முன்ன நிக்கிறது."

"அதுவா, கோலியனூரான் வண்டி"

"யாரு சின்னப்பன் மவனா"

"ம்"

"கடத்தெருவுக்கு ஜாமான் வாங்கப் போயிருக்கான்"

முனுசாமிக்கு கொஞ்சம் முன்னேறி அடுத்த வண்டி அருகே சென்றான். மாடு தன்னுள் மடக்கிக் கொண்டிருந்த கால்களை இழுத்தான். அவைகள் மிரண்டு எழுந்தன. லாடங்கள் முழுக்க தேய்ந்திருந்தது. சாய்வாய் நின்றிருந்த வண்டியில் ஒருவன் படுத்திருந்தான் கவனமாய் எழுப்பினான்.

"தம்பி தம்பி"

"என்னங்க"

"லாடம் கட்டலாமா ?"

"வேணாங்க, அப்புறம் பாக்கலாம்"

"மாடு சரியாகவே நடக்காதே"

"எப்பேர்பட்ட மாடும் என்கிட்டே நடக்கிற,தின்னா, ஓடும்."

"அப்பிடியா"

"ம்"

"எப்பிடி"

"குடுக்கிற எடத்தில நாலுகுடுத்தா ஓடாதா"

"அதெல்லாம் பாவம், வாயில்லா ஜீவன்."

"வாயில்லா ஜீவன்னு நெனச்சுதான் தண்ணி காட்டறோம், தீனி போடறமில்ல."

"அதுமட்டும் போதுமா, அடிக்கடி குளிப்பாட்டணும் கொம்புகளை சீவிவிடணும், லாடம் அடிக்கணும் அப்பதான் அதுங்க தெம்பா இருக்கும், இல்ல நிறைய வியாதி வரும் தெரியுமா ?"

"நம்ம வியாதிய கவனிக்கவே முடியல, இது....."

அப்பிடியெல்லாம் சொல்லாத தம்பி. இதுங்கள வெச்சுதான பொழப்பு நடத்துறோம்.

"ஏங்க இப்ப காசில்ல, அப்புறம் பாத்துக்கலாம்" அவன் வெடுக்கென சொல்லிவிட்டுப் படுத்துக் கொண்டான்.

எவ்வளவு நன்மை தீமைகளை எடுத்துச் சொல்லியும் அவன் பிடி கொடுப்பதாய் இல்லை. அடுத்தடுத்து வண்டிகள் வரிசையாய் நின்றிருந்தும் ஒருவரும் ஆட்கள் இல்லை. குளத்தோரம் நிறுத்திவைக்கப்பட்டிருந்த சைக்கிளைத் தள்ளிக்கொண்டு சாக்கு மூட்டை பின்னால் வைத்தபடி உள்ளதா என்பதைப் பார்த்துக் கொண்டு அடுத்து அவன் கடைபோடும் இடத்திற்கு வந்தான்.

பூங்கா சந்தில் வரிசையாக வாடகை வேன்கள் நிறுத்தப்பட்டிருக்கும். சற்று தூரத்தில் மரத்தடியில் வண்டியை நிறுத்திவிட்டு, மெயின் ரோட்டில் போகும் வரும் வண்டிகளைப் பார்த்தபடி நின்றிருந்தான்.

தூரத்தில் செங்கல் ஏற்றிக் கொண்டு டயர் வண்டியில் ஒருவன் எதிரே வந்தான். தெரிந்தவன்தான். இந்த மாடு பொல்லாத மாடு. ஏற்கெனவே லாடம் அடிக்கும்போது நெஞ்சில் விட்ட அடியில் ஒருமாதம் பிழைப்பின்றி கஷ்டப்பட்டது நினைவுக்கு வந்தது.

"என்னப்பா கட்டிடலாமா ?"

அவன் புரிந்து கொண்டான்.



"அவசரமா போய் எறக்கணும்."

"பத்து நிமிசத்தில அடிச்சிர்றேன், மாடு பாரு எப்பிடி போவுது இந்த வெய்யில்ல"

"வேணாம் ஆளுங்க கட்டடத்தில் நிக்கும். கல்லுப் போவணும். நாளைக்குப் பார்க்கலாம்".

காலைலேர்ந்து டீ தண்ணிக்குக் கூட வழியின்றி சாப்பிடவும் வழியின்றி அரை மயக்கத்திலிருந்தான் முனுசாமி.

ஒவ்வொரு வண்டிக்காரனும் ஒவ்வொரு சோகக் கதையைச் சொல்லிவிட்டுப் போனான். 25 ரூபா வட்டிக்காரனிடம் வாங்கி ஆணியும் லாடங்களும் வாங்கி வைத்தது அப்படியே இருக்கிறது. அவனுக்கும் பொழுது போய் பதில் சொல்ல வேண்டும். இல்லாவிட்டால் அவன் வாயில் வந்தபடி திட்டுவான். பொழுது சாய நின்று ஒருவனும் சிக்கவில்லை. பிறகொரு யோசனை வந்து புத்துணர்ச்சி பெற்றவனாய் சைக்கிளைத் தள்ளிக் கொண்டுக் கிளம்பினான்.



சைக்கிள் அவன் ஓட்டுவதைவிடத் தள்ளிக் கொண்டு போவதுதான் அதிகம். முன் டயர் வெடித்து அது தைக்கப்பட்டிருந்தது. பின்னால் டயர் காற்றடித்து கிழிந்ததில் உப்பிக் கொண்டிருந்தது. மார்க்கெட் கமிட்டிக்கு போனான். விவசாயிகள் கொண்டு வந்த பருத்தி, மணிலா... போட்டு விட்டு இந்நேரம் பணம் பெற்றுத் திரும்பும் நேரம். ரெண்டு வண்டி மாடுகள் கிடைத்தால் போதும். இன்றைய பொழுது ஓடிவிடும் கடன்காரனுக்கும் ஏதாவது கொஞ்சம் கொடுத்து விடலாம் என்ற லட்சியக் கனவில் வேகமாய் தள்ளிக் கொண்டு வந்தான். முழுமூச்சாய் இங்கு வந்து சேர்ந்தான்.

கமிட்டியின் வாசலில் வரிசையாய் லாரிகள் நிறுத்தப்பட்டிருந்தன. கொஞ்சம் தள்ளி அந்த சுவரோரம் வெற்று இடம். சைக்கிளை நிறுத்திவிட்டு சாக்கு மூட்டையை அவிழ்த்தான். பெருக்கல் குறி மாதிரி இருந்த கட்டை, சுத்தி, லாடங்கள், ஆணி என்று தனித் தனியாய் விரித்து கடைப் பரப்பி இருந்தான்.

கமிட்டியின் வாசலிலிருந்து வெளிவந்த ஒரு மாட்டு வண்டியைப் பார்த்துக் கையைக் காட்டினான். அவன் காதில் விழாததுபோல் மாட்டு வாலைத் திருவி வேகமாக ஓட்டினான். அடுத்து வந்த வண்டியை நெருங்கினான்.

"லாடம் கட்டிடலாமா"

"எவ்ளோ கேக்கற"

வண்டிக்காரனின் கேள்வி முனுசாமியின் உள்ளம் குளிர்ந்தது.

"எல்லாரும் குடுக்கிற மாதிரி குடுங்க ; வண்டிய ஓரம் நிறுத்துங்க, மாட்ட அவருங்க"

முனுசாமி வேட்டியை இழுத்துக் கட்டிக் கொண்டு தலைப்பாகையை அழுத்தி சொறுவினான்.

"தோ பாருப்பா, கரக்டா சொல்லிடு, அப்புறம் லாடம் கட்ன பிறகு சண்ட வேணாம்."

"நமக்குள்ள இன்னாங்க சண்ட, நீங்களும் கூலிக்காரன் நானும் கூலிக்காரன். ரண்டு மாட்டுக்கும் இருபது ரூபாதான். மாட்ட கொண்டாங்க."

"வேணாம் வேணாம், ரெண்டு மாசத்துக்கு முன்னாடி கொளத்தூரான்கிட்ட அடிச்சேன் பாஞ்சு ரூபாதான். நீ இன்னா இப்படி கேக்கற."

"தோ பாருங்க நம்மிகிட்ட தொழிலு சுத்தமா இருக்கும். நகத்த சமமா சீவிட்டு ரெண்டு இருக்கு இருக்குனா ஆறு மாசம் ஆனாலும் லாடம் உடாது. ஒஸ்தி லாடம் வேணும்னா தோ பாருங்க. அவ்ளோ சீக்கிரம் தேயவும் தேயாது."

"அதெல்லாம் வேணாம், பாஞ்சு ரூபாதான் தருவேன், இன்னா சொல்ற பொழுதுபோச்சு. நான் ஊரு போயி சேரணும்."

முனுசாமி சற்றுத் தயங்கியபடியே, "வாங்க வாங்க" என்றபடி நிறுத்தி மாட்டை அவிழ்த்து வரச் சொன்னான்.

எந்திரமயமாக கட்டையைத் தூக்கிப் போடுவதும் சுத்தியலை எடுப்பதும் லாடங்களைக்கலைத்து தரமான லாடங்களைப் பொறுக்கி எடுப்பதும் ஆக இருந்தான். கயிற்றை எடுத்து மாட்டு முன்காலில் போட்டு சுறுக்கு கட்டி இழுத்து வண்டிக்காரன் உதவியின்றி மாட்டை லேசாய் சாய்ந்து விழுமாறு செய்த பின்பு நான்கு காலையும் சேர்த்துக் கட்டி கட்டை மேல் வைத்து நிறுத்தி நான்கு காலின் நகங்களை மருத்துவர்கள் பரிசோதிப்பதுபோல் ஒரு பார்வையைச் செலுத்திவிட்டு மீண்டும் தனது சாமான்களின் பக்கம் திரும்பியதும் மோட்டார் வண்டி வந்து நிற்கும் சத்தம் கேட்டு நிமிர்ந்து பார்த்தான்.

முனுசாமி எழுந்து கும்பிட்டான்.

"எடத்த காலிபண்ணு மொதல்ல" என்றபடி எட்டி உதைத்தான். பின்னால் உட்கார்ந்திருந்தவன் இறங்கி பளீர் பளீரென்று அறைந்தான். மாடு எழுந்து நிற்கத் துள்ளியது.

"கட்ட அவுறுடா, வண்டி உன்னதுதான் எடு, டேய் நீ ஏன்டா பாக்குற" என்றபடி லாடங்களை ரோட்டில் தூக்கி எறிந்தான். சைக்கிளைப் பூட்சு காலால் எட்டி உதைத்தான்.

"நாங்க போய் வருவோம். வரும்போது திரும்ப இருந்திச்க அப்புறம் உள்ளத் தள்ளிடுவேன்" வண்டி வேகமாக சீறிட்டுச் சென்றது.

வண்டிக்காரன் விட்டால் போதும் என்று மாட்டை அவிழ்த்துக்கொண்டு ஓடினான்.

முனுசாமி வரிசையாய் நின்றிருந்த லாரிகளைத் தாண்டி ரோட்டில் மோட்டார் வண்டி சென்ற பாதையைக் கவனித்தான். இருட்டில் அதன் சத்தம் மட்டும் கேட்டது.

சைக்கிள், லாடங்கள் பக்கம் அவன் கவனம் திரும்பியது.

கண்கள் இருட்டத் தொடங்கின.

– நன்றி: சாகித்திய அக்காதெமி வெளியிட்ட "நவீன தமிழ்ச் சிறுகதைகள்"

## வேலைவாய்ப்பு அலுவலகப் பதிவு புதுப்பித்தல் குறித்து சிறப்புச் சலுகை

வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து 1.1.2001 முதல் 31.12.2003 வரையுள்ள காலங்களில் (அதாவது 2001, 2002 மற்றும் 2003 ஆகிய ஆண்டுகளில்) பதிவினைப் புதுப்பிக்கத் தவறியவர்களுக்கு அரசாணை நிலை எண்.22. தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள். 1–2–2007இன் படி சிறப்பு புதுப்பித்தல் சலுகை மீண்டும் வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி மேற்படி காலத்திற்குள் புதுப்பிக்கத் தவறியவர்கள் 30.4.2007க்குள் சம்பந்தப்பட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு வேலைவாய்ப்பு அலுவலக அடையாள அட்டையின் நகலுடன் நேரிலோ அல்லது பதிவஞ்சல் மூலமோ மனு செய்து தங்களது பதிவினைப் புதுப்பித்துக் கொள்ளலாம்.



# விஞ்ஞானயுகம் வளர்ந்து வரும் காலத்தில் ஏழைகளின் ரதம் புதிய ரெயிலை இயக்குவது சாலப்பொருத்தமாகும்



ஏழைகளின் ரதம்
சென்னை - டெல்லி
அதிவேக
விரைவு ரயிலை
துவக்கி வைத்து
மாண்புமிகு
தமிழக முதலமைச்சர்
கலைஞர் அவர்கள்
ஆற்றிய உரை.
21.2.2007

"ஏழைகளின் ரதம்" என்று பெயர் சூட்டப்பட்ட அதிவேக விரைவு ரயிலைத் தொடங்கி வைக்கின்ற விழா நிகழ்ச்சியிலே கலந்துகொள்கின்ற வாய்ப்பு பெற்றமைக்காக மகிழ்ந்து, இந்த வாய்ப்பினை வழங்கிய ரயில்வே இணை அமைச்சர் திரு. வேலு அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் இங்கே திரண்டிருக்கின்ற உங்களையெல்லாம் காணும்போது, இந்த ஏழைகளின் ரதத்தைத் தொடங்குவதை நீங்கள் எல்லாம் எவ்வளவு ஆர்வத்தோடு வரவேற்கிறீர்கள், எதிர்பார்க்கிறீர்கள் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடிந்தது. ஆனால் இந்த வாக்கியத்திலேயே ஒரு முரண்பாடு இருந்தாலும்கூட, ஏழைகளின் ரதம், ஆனால் அதிவேக விரைவு என்று போடப்பட்டிருக்கிறது. ரதம் எப்போதும் மெதுவாகத் தான் செல்லும். வேகமாகச் செல்லாது. அதை விளக்குவதற்காகத்தான் எங்கே ரதம் என்றதும், மெதுவாகத்தான் செல்லும் போலும் என்று நீங்கள் கருதிவிடக்கூடாது என்பதற்காக நம்முடைய வேலு அவர்களும், பொது மேலாளர் அவர்களும் மிகுந்த கெட்டிக்காரத்தனமாக "அதிவேக விரைவு ரயில்" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். வேகம் என்றாலே விரைவுதான், அதோடு விரைவு என்பதையும் சேர்த்து அதிவேக விரைவு என்று உங்களுக்குச் சந்தேகம் ஏற்படாமல் நீங்கள் விரைவிலே போய்ச் சேர வேண்டிய இடத்திற்குச் சேரலாம் என்ற நம்பிக்கையை இந்த அடைமொழிகளின் மூலமாக அவர்கள் தந்திருக்கிறார்கள்.

### ஏழு கல் தொலைவு நடந்துசென்று ரயிலைப் பார்த்த நினைவு

பொதுவாக ஐம்பதாண்டு காலத்திற்கு முன்பு, அறுபதாண்டு காலத்திற்கு முன்பு போக்குவரத்துக்குப் பயன்பட்ட பழைய சாதனங்களில் ஒன்றாக ரயில் நமக்கு அன்றைக்கு தொடங்கப்பட்டது. ரயில் தொடங்கப்பட்ட போது, என்னைப் போன்றவர்கள் எல்லாம் கூட சிறிய வயது மாணவர்களாக இருந்த அந்தக் காலக் கட்டம். கிராமப்புறங்களிலே இருக்கின்ற மக்களுக்கு ரெயிலே தெரியாத ஒரு நிலை கூட இருந்தது. ரெயிலையே பார்க்காத மக்கள் எல்லாம் கூட இருந்தார்கள். ரெயிலைப் பார்ப்பதற்காகவே நாங்கள் எங்கள் ஊரிலிருந்து பெரியவர்கள், தாய்மார்கள், இளைஞர்கள் பயணம் புறப்பட்டு, திருவிழாவிற்குப் போவதைப்போல குறிப்பாக நான் பிறந்த ஊர் திருக்குவளை என்றால், அங்கிருந்து திருநெல்லிக்காவல் என்ற புகை வண்டி நிலையத்திற்கு ரயில் வருகின்ற நேரம் தெரிந்துகொண்டு, ஏழு கல் தொலைவு நடந்தே சென்று, அங்கே காத்திருந்து ரெயிலைப் பார்த்து விட்டு வந்த அந்த நினைவெல்லாம் எனக்கு இருக்கின்றது.

அந்த ரெயில் வரும்போது கன்னத்திலே கைகளால் போட்டுக் கொண்டு, ஏதோ ஒரு தெய்வம் வருவதைப்போல வணங்கிய நம்முடைய தாய்மார்கள், பெரியவர்கள் எல்லாம் கூட அன்றைக்கு இருந்தார்கள்.




ஆனால் இன்று, ரெயில் மிக மிகச் சாதாரண போக்குவரத்துச் சாதனங்களில் ஒன்றாக, அடிக்கடி பயன் படுத்தக் கூடிய ஒன்றாக ஆகிவிட்டிருக்கின்றது. இன்றைய தினம் ஒரு நகரத்திற்கும் இன்னொரு நகரத்திற்கும் உள்ள தூரம் மாத்திரமல்ல, ஒரு நாட்டிற்கும் இன்னொரு நாட்டிற்கும் உள்ள தூரம் கூட இத்தகைய வாகன வசதிகளால் குறைந்துவிட்டிருக்கின்றது. பத்தாயிரம் மைல் இங்கிலாந்து தேசம் என்றால், அந்த பத்தாயிரம் மைலைக் கடக்க நம்முடைய பழைய காலத்துப் போக்குவரத்து வசதிகளைப் பயன்படுத்தினால் எத்தனை நாட்களாகும், எத்தனை மாதங்களாகும் என்பதையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

**வளரும் விஞ்ஞான யுகம்**

ஆனால் இன்றைக்கு பத்தாயிரம் மைல் பறந்து செல்ல விமானத்தில் ஏறினால் ஒரு நாளில் பத்து மணி நேரத்தில், 12 மணி நேரத்தில் குறிப்பிட்ட இடத்தில் இங்கிலாந்து சென்று நாம் இறங்க முடியும் என்கிற அளவிற்கு பயண வசதிகள் பெருகியிருக்கின்ற இந்த நிலையை நாம் காண்கிறோம். விஞ்ஞான வசதியால் இது எங்கே போய் நிற்கும், நம்முடைய காலத்திற்குப் பிறகு கூட, இன்றைக்கு நாம் காணுகின்ற பல அற்புதங்களை யெல்லாம் பார்க்கும்போது எதிர் காலத்திலே சந்திர மண்டலத்திற்குச் செல்ல, சந்திர மண்டலத்தைச் சுற்றியிருக்கின்ற கிரகங்களுக்குச் செல்ல எவ்வளவு டிக்கெட் என்று புகைவண்டி நிலையத்திலே போய்க் கேட்பதா அல்லது துறைமுகத்திலே போய்க் கேட்பதா, அல்லது விமான நிலையத்திலே போய்க் கேட்பதா என்கின்ற அளவிற்கு விஞ்ஞான யுகம் இன்றைக்கு வளர்ந்து கொண்டிருக்கின்றது. அப்படிப்பட்ட காலக் கட்டத்தில் ஒரு புதிய ரெயில் ஏழைகளின் ரதம் என்கிற பெயரால், ரெயில்வே துறை அமைச்சர் என்னுடைய அருமை நண்பர் லல்லு அவர்களும், இணை அமைச்சர் வேலு அவர்களும் உருவாக்கி அதனை இங்கே தொடங்கி வைக்கின்ற இந்த விழாவினை நடத்துவது சாலப் பொருத்தமாகும்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலே வேலு அவர்கள் இங்கே ஒரு பட்டியலையே படித்துக் காட்டினார். எவ்வளவு ரயில்கள், எவ்வளவு ரயில் பாதைகள் புதிதாக அமைக்கப்பட்டிருக்கின்றன, எத்தனை பாதைகள் புதிதாக மாற்றப்பட்டிருக்கின்றன, எத்தனை பாதைகள் அகலப்படுத்தப்பட்டிருக்கின்றன, எத்தனை புதிய பாதைகள் போடப்பட விருக்கின்றன என்பதையெல்லாம் இங்கே எடுத்துச் சொன்னார். இவ்வளவு முயற்சிகளும் இன்றைக்கு தமிழகத்திலே வெற்றிகரமாக நடை பெற்றிருக்கின்றன என்றால், அதற்கு நாம் பாராட்ட வேண்டிய ஒருவர் நம்முடைய அருமை மத்திய இணை அமைச்சர் ஆர். வேலு அவர்கள் தான் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது. அவரை நான் தமிழ்நாட்டு மக்களின் சார்பாக, என் சார்பாக. இந்த ஆட்சியின் சார்பாக பாராட்டி நன்றி கூறி வாழ்த்துகின்றேன்.

அவருடைய முயற்சிகள் மேலும் மேலும் வளரவும், மக்களுடைய போக்குவரத்துத் தேவைகள் இன்னும் சீராகவும் நாம் அவருக்கு நம்முடைய வாழ்த்துகளைக் கூறி உங்களுடைய இனிய வாழ்த்துக்களோடு இந்த அதிவேக விரைவு ரயிலைத் தொடங்கி வைக்கின்றேன்.





# ரூ.4 ஆயிரம் கோடியில் மோட்டார் வாகனத் திட்டம்

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் முன்னிலையில் தமிழ்நாடு அரசுக்கும் வாகன உற்பத்தி செய்யும் நிறுவனங்களான மகிந்திரா அண்ட் மகிந்திரா, ரெனால் மற்றும் நிசான் நிறுவனங்களுக்கும் இடையே 26.2.2007 அன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கையெழுத்தாகியது.

இந்திய நாட்டின் மகிந்திரா அண்ட் மகிந்திரா, பிரான்சு நாட்டின் ரெனால் மற்றும் ஜப்பான் நாட்டின் நிசான் நிறுவனங்கள், கூட்டமைப்பு ஒன்றினை ஏற்படுத்தி சென்னைக்கு அருகில் ஒரகடம் சிப்காட் தொழிற் பூங்காவில் ஒருங்கிணைந்த மோட்டார் வாகனத் திட்டம் ஒன்றினை உருவாக்கி, அதன் மூலம் பல்வகைப் பயன்பாட்டு வாகனங்கள் மற்றும் கார்கள் உற்பத்தி செய்யப்படவுள்ளது. எஞ்சின் ஆலை, செலுத்து வரிசை ஆலை, அழுத்தப் பிரிவு, உருவகப் பிரிவு, வண்ணப் பிரிவு, சேர்க்கை வரிசை போன்ற ஒருங்கிணைந்த மோட்டார் வாகன உற்பத்தி வசதிகளை உள்ளடக்கியவையாக இத்திட்டம் இருக்கும். முதலில், ஆண்டொன்றுக்கு 4 இலட்சம் வாகனங்களை உற்பத்தி செய்யக் கூடிய திறனை இத்திட்டம் உருவாக்கும். நாளடைவில் இத்திறன் வெகுவாக அதிகரிக்கப் படும். இத்திட்டம், முதலில் சுமார் 4,000 கோடி ரூபாய் முதலீட்டினைக் கொண்டிருக்கும். எனினும், இறுதி முதலீடு மேலும் கூடுதலாக இருக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது. இது இந்தியாவிலேயே ஒரே இடத்தில் அமையக் கூடிய மிகப்பெரிய வாகன உற்பத்தி மையமாகத் திகழும்.

இவை தவிர, இத்திட்டம் ஆண்டொன்றுக்கு 50,000 டிராக்டர்களை உற்பத்தி செய்யும்.



சென்னைக்கு அருகிலுள்ள மகிந்திரா வேர்ல்ட் சிட்டியில் மகிந்திரா ஆராய்ச்சிக் கூடமும் அமைக்கப்படும்.

முழுத் திறனில் செயல்படும் போது, இத்திட்டம், அதன் துணைத் தொழில்கள் மற்றும் ஆதரவுப் பணி அளிப்போர் உள்ளிட்ட சுமார் 41,000 பேருக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பினை உருவாக்கும். இத்திட்டத்தினால், தமிழ்நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில், ஆண்டொன்றுக்கு 18,000 கோடி ரூபாய் அளவிற்கு மொத்த மதிப்புக் கூடுதல் ஏற்படும். விற்பனையாளர்களும், ஆதரவுப் பணி அளிப்போரும் இம்மாநிலத்தில் கூடுதலாக சுமார் 10,000 கோடி ரூபாய் முதலீடு செய்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாறு, தமிழ்நாட்டின் உற்பத்தித் துறையில், குறிப்பாக மோட்டார் வாகனங்கள் மற்றும் மோட்டார் உதிரிபாகங்கள் உற்பத்திக்கு இத்திட்டம் மிகுந்த உத்வேகத்தை அளிக்கும். தெற்காசியாவின் டெட்ராய்ட் ஆக சென்னையை உறுதியாக நிலைபெறச் செய்ய இத்திட்டம் உதவி புரியும்.

தமிழக அரசின் சார்பாக தொழில்துறைச் செயலாளர் திரு. சக்திகாந்த தாஸ், இ.ஆ.ப., மகிந்திரா அண்ட் மகிந்திரா நிறுவனத்தின் சார்பாக அந்நிறுவனத்தின் மோட்டார் வாகனப் பிரிவின் தலைவர் டாக்டர் பவன் கோயங்கா, ரெனால் நிறுவனத்தின் சார்பாக அந்நிறுவனத்தின் நிருவாகத் துணைத் தலைவர் திரு.மேட்ரிக் பெலாடா, நிசான் மோட்டார் நிறுவன நிருவாகத் துறைத் தலைவர் மற்றும் இயக்குநர் குழுத் தலைவர் திரு.கார்லோஸ் தவாரெஸ் ஆகியோர் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகும் போது, மாண்புமிகு மத்திய தொலைத் தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு.தயாநிதி மாறன், உயர்கல்வி, கனிமத் துறை அமைச்சர் டாக்டர் க.பொன்முடி, அரசு தலைமைச் செயலாளர் திரு.எல்.கே.திரிபாதி,இ.ஆ.ப., நிதித்துறைச் செயலாளர் திரு.கு. ஞானதேசிகன்,இ.ஆ.ப., தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு.தேவ ஜோதி ஜெகராஜன்,இ.ஆ.ப., மகிந்திரா அண்ட் மகிந்திரா நிறுவனத் தலைவர் திரு.கேசுப் மகிந்திரா, மகிந்திரா அண்ட் மகிந்திரா நிறுவனத்தின் செயல் இயக்குநர் மற்றும் தலைவர் திரு.அருண் நந்தா, ரெனால் இந்தியா நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.சில்வைன் பிலைன், நிசான் மோட்டார் நிறுவன பொது மேலாளர் திரு.ஹோரியுசி மோஷியோ மற்றும் தமிழக அரசின் இதர உயர் அலுவலர்களும், மகிந்திரா அண்ட் மகிந்திரா, ரெனால் மற்றும் நிசான் நிறுவனங்களின் உயர் அலுவலர்களும் உடனிருந்தனர்.

★ ★ ★







# தமிழ்நாட்டை தொழில் வளமிக்க மாநிலமாக உருவாக்குவோம்!

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **கலைஞர் மு.கருணாநிதி** அவர்கள்

**வே**லை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கு இரண்டாவது கட்டமாக அரசின் உதவித் தொகை வழங்குகின்ற விழா, தகவல் தொழில்நுட்பப் பூங்காவிற்கு அடிக்கல் நாட்டுகின்ற விழா, புதிய வளர்ச்சிப் பணிகளைத் தொடங்கி வைத்து, அரசின் நலத் திட்ட உதவிகளை வழங்குகின்ற விழா, கோயம்புத்தூரில் 24.2.2007 அன்று நடைபெற்றது. இவ்விழாவில் பங்கேற்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் விழாப்பேருரையாற்றும்போது,

"வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு ஒரு தொகை – நிறைவான தொகை அல்ல. முழுமையான அளவிலே அல்ல– இந்த அரசால் இயன்ற அளவிற்கு அளிக்கக்கூடிய தொகையை வழங்குகின்ற நிகழ்ச்சி இப்போது கோவையில் – இரண்டாவது கட்டமாக நடைபெறுகிறது.

இந்தத் திட்டத்தை திருச்சியிலே நான் தொடங்கி வைத்தேன். இது இரண்டாவது கட்டம். திருச்சியிலே இந்தத் திட்டத்தை நான் தொடங்கி வைத்தபோது அறிவிக்கப்பட்டது. எஸ்.எஸ்.எல்.சி. அதாவது பத்தாம் வகுப்பு தேர்ச்சிப் பெற்று வேலையற்று இருப்பவர்களுக்கு 150 ரூபாய் வீதமும் +2 அல்லது மேல்நிலைக் கல்வியிலே தேர்ச்சி பெற்றவர்களுக்கு 200 ரூபாய் வீதமும், இளங்கலைப் பட்டதாரி, முதுநிலைப் பட்டதாரி படித்து விட்டு வேலையற்று இருப்போர்களுக்கு 300 ரூபாய் வீதமும் உதவித்தொகை வழங்கும் திட்டம் 11.11.2006 அன்று திருச்சியிலே தொடங்கி வைக்கப்பட்டது.

அப்படி வழங்கியபோது முதல் கட்டமாக 11.11.2006 அன்று திருச்சியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் நான் தொடங்கி வைத்தேன். திருச்சியிலே நான் தொடங்கி வைக்க நம்முடைய அமைச்சர் பெருமக்களெல்லாம் ஒவ்வொரு நகரத்திலும் அதே நாளில் தொடங்கி வைத்து அந்த ஒரே நாளில் தமிழகம் முழுவதும் உள்ள எல்லா மாவட்டங்களிலும் அமைச்சர்களால் வழங்கப்பட்டு, இந்தத் திட்டத்தின் மூலமாக முதற்கட்டமாக





2 இலட்சத்து 6 ஆயிரத்து 766 பேர்களுக்கு வேலை வாய்ப்பில்லாமல் இருந்தவர்களுக்கு உதவித்தொகை வழங்கப்பட்டது.

இன்றைக்கு இரண்டாவது கட்டம். கோவையில் நான் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்கிற நேரத்தில் முதற்கட்டத்திலே நிதி உதவி செய்யப்பட்ட 2 இலட்சத்து 6 ஆயிரம் பேர்களை அன்னியில், இரண்டாவது கட்டத்தில் மேலும் கூடுதலாக மாநிலம் முழுவதிலுமாக 1இலட்சத்து 3 ஆயிரத்து 629 பேருக்கு தற்போது உதவித்தொகை வழங்கப்படுகிறது. ஆக இரண்டு கட்டத்திலும் சேர்த்து மொத்தம் 3 இலட்சத்து 10 ஆயிரத்து 395 பேருக்கு இந்த உதவித்தொகை இனி மாதந்தோறும் வழங்கப்படும்.

முதல் கட்டமாக உதவித்தொகை 12 கோடியே 30 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டது. 2 ஆவது கட்டமாக தற்போது முதலில் வழங்கப்பட்டவர்களுக்கும், தற்போது மேலும் சேர்க்கப்பட்டவர்களுக்கும் சேர்த்து உதவித் தொகை 18 கோடியே 43 இலட்சம் ரூபாய் மாநிலம் முழுவதும் உள்ளவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற தொகையாகும். ஆகமொத்தம் இந்த இரண்டு கட்டத்திலுமாக படித்துவிட்டு வேலைவாய்ப்பில்லாத இளைஞர்களுக்காக வழங்கப்பட்டுள்ள தொகை 30 கோடியே 73 இலட்சம் ரூபாய் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் திட்டத்தை மாத்திரமல்லாமல், இன்றைக்கு இந்த நகரத்தில் நடைபெறுகின்ற இந்த விழாவில் அடிக்கல் நாட்டியிருக்கின்றோம். நலத்திட்ட உதவிகளை வழங்கியிருக்கின்றோம். 731 கோடி ரூபாய்க்கு 188 பணிகளுக்கு அடிக்கல் இன்றைக்கு நாட்டப்பட்டிருக்கின்றது.

41 கோடியே 53 இலட்சம் ரூபாய் மதிப்பிலான பல்வேறு திட்டப்பணிகள் இன்றைக்கு திறந்து வைக்கப்பட்டிருக்கின்றன. 35 ஆயிரத்து 409 பயனாளிகளுக்கு பல்வேறு துறைகளின் கீழ் 17 கோடியே 31 இலட்சத்து 9 ஆயிரம் மதிப்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கப் படுகின்றன.

ஆக இந்த ஒரு நாள் விழாவில் 790 கோடியே 22 இலட்சம் ரூபாய் மதிப்பிலான பல்வேறு பணிகள் கோவை மாவட்டத்தில் செயலாக்கம் பெறுகின்றன என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

டைடல் பூங்கா பற்றி இங்கே பேசியவர்கள் எல்லாம் குறிப்பிட்டார்கள். டைடல் பூங்கா என்று ஒரு பூங்காவுக்கு பெயரல்ல. டைடல் பூங்கா என்பது சென்னையில் இருக்கின்ற பூங்காவிற்குத்தான் பெயர். ஏன் அது டைடல் பூங்கா என்று குறிப்பிட்டோம் என்றால் அந்தக் காரணத்தை விளக்கிச் சொல்லிவிடுவது நல்லது; என்று கருதுகின்றேன். சென்னையில் அமைக்கப்பட்ட அந்தத் தொழில் பூங்கா. அதில் எல்காட் நிறுவனத்தினுடைய பங்கு 50 சதவிகிதம், டிட்கோ நிறுவனத்தினுடைய பங்கு 40 சதவிகிதம். டிட்கோ, எல்காட் இரண்டும் சேர்ந்ததுதான் டைடல் பூங்கா சென்னையில் இருக்கின்ற டைடல் பூங்கா போல ஒவ்வொரு நகரத்திலும் கோவை, மதுரை, சேலம், திருச்சி, நெல்லை போன்ற இந்த மாவட்டத்தினுடைய தலைநகரங்களில் பூங்காக்களைத்தான் அமைக்க முடியுமே தவிர, அமைக்கின்ற பூங்காக்களை டைடல் பூங்கா என்று நாங்கள் சொல்ல முடியாது. நீங்கள் சொல்லிக் கொண்டால் டைடல் பூங்கா மாதிரி என்று அதற்கு பெயரிட வேண்டுமே தவிர டைட்டல் பூங்கா என்று பெயரிடுவது தவறு. டைடல் பூங்கா மாதிரி, கோவையில் டைடல் பூங்கா மாதிரி ஒன்று அமைகிறது. இதைத் தொடர்ந்து மதுரையிலும் இது அமையும். அதைத் தொடர்ந்து நெல்லையிலும், சேலத்திலும், திருச்சியிலும் அமையும். டைடல் பூங்கா மாதிரி. ஆனால் அந்தந்த பூங்காக்கள் தனித்தனி பெயரிலேதான் அழைக்கப்படும் என்பதை நான் இங்கே தெளிவாக்க கடமைப்பட்டிருக்கின்றேன். கோவை போல மற்ற மாநகரங்களிலும் இப்படிப்பட்ட பூங்காக்களை அமைத்து தமிழகத்தை தொழில் வளம் மிக்க ஒரு மாநிலமாக உருவாக்கி, வேலையில்லாதவர்களே கிடையாதென்ற ஒரு சூழ்நிலையை நிச்சயமாக நம்மால் ஏற்படுத்த முடியும்'' என்று குறிப்பிட்டார். ✱



# புதுக்கோட்டை மாவட்டத்தில் புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் விழுப்புரத்தில் பாதாளச் சாக்கடைத் திட்டம்



மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் ஒப்புதல் அளித்தார்

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் மாவட்டங்கள்தோறும், ஆய்வுகள் மேற்கொண்டு, மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அரசு அதிகாரிகளுடன் கலந்து ஆலோசித்து, மக்கள் பிரதிநிதிகளின் கோரிக்கைகளை ஏற்று, துரித நடவடிக்கைகள் எடுத்து, மக்களுக்கு குடிநீர்த் தேவையில், நிரந்தர மற்றும் நெடுங்காலத் தீர்வுக்கான குடிநீர் வழங்கல் வசதிகளைப் பெருக்கிட போர்க்கால அடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொள்ள ஆணை பிறப்பித்தார்.

ரூபாய் 42 கோடியே 22 இலட்சம் மதிப்பீட்டில் புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள ஆவுடையார் கோயில், அரிமளம், அறந்தாங்கி, மணமேல்குடி ஒன்றியங்களைச் சார்ந்த 706 குடியிருப்புகள், கந்தர்வக்கோட்டை, புதுக்கோட்டை, திருவரங்குளம் ஒன்றியங்களைச் சார்ந்த 81 வழியோரக் குடியிருப்புகள் மற்றும் அறந்தாங்கி நகராட்சி, தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள தஞ்சாவூர், திருவையாறு, பூதலூர் ஒன்றியத்தைச் சார்ந்த 39 வழியோரக் குடியிருப்புகள் ஆகிய பகுதிகளில் வசிக்கும் சுமார் 3 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினை செயலாக்க மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் ஒப்புதல் அளித்து 9.2.2007 அன்று ஆணை பிறப்பித்துள்ளார்கள்.

இந்தத் திட்டத்தில் பயன்பெறப் போகும் குடியிருப்புப் பகுதிகளில் தற்போது கிடைக்கப் பெறும் நிலத்தடி நீர், இரும்புச்சத்து மற்றும் உப்புத் தன்மை அளவுக்கதிகமாக இருப்பதினால் குடிப்பதற்கு உகந்ததாக இல்லை. மேலும், பருவ மழை பொய்த்து விடுவதால் கோடைக் காலங்களில் நீர் கொடு திறன் அளவு குறைந்து குடிநீர்ப் பற்றாக்குறை நிலவி வருகிறது.

இக்குடியிருப்புகளுக்கு, குடிநீர்த் தேவையில் நீண்ட மற்றும் நெடுங்காலத் தீர்வாக, கொள்ளிடம் ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு ஒரு பெரிய அளவிலான கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயலாக்கப்பட உள்ளது. கொள்ளிடம் ஆற்றில் மணல்மேடு கிராமத்தில் அமைக்கப்பட உள்ள நீர் சேகரிப்புக் கிணறுகளிலிருந்து குடிநீர் எடுக்கப்பட்டு சுமார் 160 கி.மீ. தூரம் குழாய்கள் மூலம் கொண்டுவரப்பட்டு, புதிதாகக் கட்டப்படவுள்ள 302 மேல் நிலைத் தொட்டிகள் மற்றும் ஏற்கெனவே பயனில் உள்ள 252 மேல் நிலைத் தொட்டிகள் மூலமாக குடிநீர்

## ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப் புள்ளிகள் இணைய தளம் வாயிலாக நடைமுறைப்படுத்துவதற்கான அறிவிக்கை

மாண்புமிகு
தமிழக முதலமைச்சர்
அவர்களின் அறிவிப்பு (10.2.2007)

*அரசு மற்றும் அரசு நிறுவனங்களின் கட்டுமானப்பணிகளை நிறைவேற்றுவதிலும் அரசுக்குத் தேவையான பொருள்கள் மற்றும் சேவைகளைக் கொள்முதல் செய்வதிலும் வெளிப்படையான மற்றும் பாரபட்சமற்ற முறை கடைப்பிடிக்கப்பட வகைசெய்யும் தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தை, தி.மு.கழக அரசுதான் 1998ஆம் ஆண்டில் இயற்றியது. காலத்தின் மாற்றத்திற்கு ஏற்ப, கொள்முதல் முறைகளை கணினிமயமாக்கி, இணையதளம் மூலமாகவும் அரசு ஒப்பந்தப்புள்ளிகளை கோரவும், ஒப்பந்தக்காரர்கள் தமது ஒப்பந்தப்புள்ளிகளை இடையூறின்றி சமர்ப்பிக்கவும் வழிவகை செய்வதற்கான தேவையையும், அரசின் பல்வேறு துறைகள் பரவலாக கணினிமயமாக்கப்பட்டு வருவதையும் கருத்தில் கொண்டு, ஒப்பந்தப்புள்ளி நடைமுறைகளை இணைய தளம் மூலமாக மேற்கொள்ள வகைசெய்யும் மின்னணு ஒப்பந்தப்புள்ளி முறையை (e-tendering) அறிமுகப்படுத்த இந்த அரசு முடிவு செய்துள்ளது. அரசின் பல்வேறு துறைகளிலும், அரசு நிறுவனங்களிலும் படிப்படியாக இந்த முறை அறிமுகப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்படும். 1998ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் மற்றும் விதிகளில், இதற்குத் தேவையான திருத்தங்கள் மேற்கொள்ளப்படும்.*

பகிர்ந்தளிக்கும் வகையில் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

அறந்தாங்கி நகராட்சிக்கு, சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான உள்கட்டமைப்பு வளர்ச்சித் திட்டத்தின் கீழும், ஊரகக் குடியிருப்புகளுக்கு தமிழ்நாடு குறைந்தபட்ச தேவைத் திட்டத்தின் கீழும் நிதி பெறப்பட்டு இக்குடிநீர்த் திட்டம் செயலாக்கப்பட உள்ளது.

இத்திட்டம் பயனுக்கு வரும்போது நகராட்சியில் தற்போதுள்ள குடிநீர் அளவு உயர்த்தி நாளொன்றுக்கு நபரொருவருக்கு 90 லிட்டர் வீதம் ஆகவும், ஊரகக் குடியிருப்புகளில் நாளொன்றுக்கு நபரொருவருக்கு 40 லிட்டர் வீதம் ஆகவும் உயர்த்தி வழங்கப்படும்.

### விழுப்புரம் பாதாளச் சாக்கடைத் திட்டம்

தமிழகத்தின் அனைத்து நகரங்களிலும், புறநகர்ப் பகுதிகளிலும், பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் விரிவுபடுத்தப்படும் என்ற தமிழக அரசின் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு, முதற்கட்டமாக 2006–2007ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் உள்ள 18 மாவட்டத் தலைநகரங்களில் பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் ரூபாய் 801 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று சட்டப்பேரவையில் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மானியக் கோரிக்கையின் போது, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் அறிவிப்பு வெளியிட்டார்.

இதனைத் தொடர்ந்து, விழுப்புரம் மாவட்டத்தின் தலைநகரமான விழுப்புரம் நகராட்சியில் ரூ.27.63 கோடி மதிப்பீட்டில் பாதாளச் சாக்கடைத் திட்டம் நிறைவேற்றிட அரசு ஒப்புதல் வழங்கப்பட்டு பணிகள் தொடங்கப்படவுள்ளன.

இந்நகராட்சியில் உற்பத்தியாகும் கழிவு நீர் சுமார் 84.52 கி.மீ நீளம் அமைக்கப்படவுள்ள கழிவு நீர் சேகரிப்புக் குழாய்கள் மூலம் சேகரிக்கப்பட்டு நவீன தொழில்நுட்பத்துடன் அமைக்கப்படவுள்ள கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் மூலம் சுத்திகரிக்கப்படவுள்ளது. இவ்வாறு சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீர், பாசனத்திற்கு பயன்படுத்தப்பட்டு, சுற்றுப்புற சுகாதாரத்தினையும், நீரினால் பரவும் நோயிலிருந்தும் மக்கள் பாதுகாக்கப்படுவார்கள். இத்திட்டத்தினால் ஒரு இலட்சம் மக்கள் பயனடைவார்கள்.

இத்திட்டம், நகர்ப்புற உள்கட்டமைப்பு வளர்ச்சித் திட்டம் 3ன் கீழ், செயற்படுத்தப்படவுள்ளது. இத்திட்டத்திற்கான நிதி ஆதாரம் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி மானியம் மூலம் ரூ.8.29 கோடியும், தமிழ்நாடு நகர்ப்புற உள் கட்டமைப்பு நிறுவன நிதிக் கடன் மூலமாக ரூ.11.76 கோடியும், உள்ளாட்சி மற்றும் பொதுமக்கள் பங்களிப்பு மூலமாக ரூ.7.58 கோடியும் பெறப்பட்டு, இத்திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் நிறைவேற்றப்படவுள்ளது.



# கலைகளைப் பேணிப் பாதுகாக்க வேண்டும்

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும்
உள்ளாட்சித்துறை அமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் உரை











'தமிழ் மையம்' என்ற அமைப்பு தமிழக அரசின் சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறையுடன் இணைந்து 'சென்னை சங்கமம்' என்ற கலை, கலாச்சார விழாவை சென்னையில் பிப்ரவரி 20–26, 2007 வரை, ஒருவாரம் நடத்தியது. இதன் ஒரு பகுதியான நெய்தல் சங்கமம் திருவிழாவை 20.2.2007 அன்று குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்து மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் பேசியதாவது :

"பாரம்பரியக் கலைகளை பேணிப் பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கில் தமிழ் மையம் என்ற அமைப்பு, தமிழக சுற்றுலாத்துறையுடன் இணைந்து 'சென்னை சங்கமம்' என்ற நிகழ்ச்சியை நடத்துகிறது. இதற்கு ஏற்பாடு செய்த அனைவருக்கும் குறிப்பாக எனது அன்புக்குரிய தங்கை கனிமொழியை பாராட்டக் கடமைப்பட்டு உள்ளேன்.

குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமானால் அன்புத் தங்கை கனிமொழி, சென்னை சங்கமம் நிகழ்ச்சியின் ஒருங்கிணைப்பாளராக இருப்பதற்கு தனிப்பட்ட முறையில் அவருக்கு வாழ்த்துச் சொல்ல வேண்டும். இல்லாவிட்டால் அவர் கோபித்துக் கொள்வார். அவர் கோபித்துக்கொள்வார் என்பதற்காக இதை நான் குறிப்பிடவில்லை.

அன்புக்குரிய தங்கை கனிமொழி, எந்தப் பணியில் தன்னை ஒப்படைத்துக் கொண்டாலும் அது தனிச் சிறப்பாக இருக்கும். அதில் அவர் தனிமுத்திரை பதிப்பார் என்பதற்கு பல்வேறு உதாரணங்களைச் சொல்ல முடியும். அதுபோலவே 'சென்னை சங்கமம்' திருவிழாவும் முத்திரை பதிக்கும் நிகழ்ச்சியாக அமையும்.

நம் நாட்டில் இசைக்கலை, நடனக்கலை, நாட்டியக்கலை உள்பட பல்வேறு கலைகள் உள்ளன. இந்த கலைகள் மக்களிடம் இருந்து பிரிந்து போய்விடும் சூழ்நிலையில் தத்தளித்துக் கொண்டிருக்கின்றன.

இந்த நிலையில், கலைகளையும் மக்களையும் இணைக்கும் பாலமாக சென்னை சங்கமம் திருவிழா நடத்தப்படுகிறது. கலைகளையும், மக்களையும் நிச்சயம் இந்த திருவிழா இணைக்கும். எதிர்காலத்தில் இந்த திருவிழா மக்களே நடத்தும் மக்கள் திருவிழாவாக மாற வேண்டும். கலைகள் ஒரு போதும் அழியாது; நலிவடையும் செய்யாது. இருந்தபோதிலும், அவற்றை நாம் பேணிப் பாதுகாக்க வேண்டும்''. ■

# திக்கற்றவர்களைத் தேடிக்கண்டுபிடித்து உதவிகளைச் செய்யவேண்டும்



உடல் ஊனமுற்றோர்
விருது வழங்கும் விழாவில்
மாண்புமிகு முதலமைச்சர்
கலைஞர் மு.கருணாநிதி
அவர்கள்
வேண்டுகோள்!

இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு உணர்வுகள் அலை மோதுகின்ற, உருக்கம் உள்ளத்தை தடவுகின்ற ஒரு நிலைக்கு உள்ளாகி உங்கள் முன்னால் நான் அமர்ந்திருக்கின்றேன். ஊனமுற்றவர்கள் என்று சொல்வதே ஊனமுற்றவர்களுக்கு நாம் ஒரு இழுக்கைக் கற்பிக்கின்றோம் என்று உலகத்தில் அறிவுடையவர்களால் பேசப்பட்டு, ஒரு நிகழ்ச்சியில் நான் வள்ளுவர் கோட்டத்தில் கலந்து கொண்டபோது, நான்காயிரத்திற்கு மேற்பட்ட மனநிலை திரிந்தோர் மற்றும் ஊனமுற்றோர் கலந்துகொண்ட நிகழ்ச்சியில் – அதை அமைத்தவர்கள் – அந்தப் பிள்ளைகளைப் பார்த்து, அந்த நண்பர்களைப் பார்த்து சிறப்பு மனிதர்கள் என்று அழைத்தார்கள். சிறப்பாக சமுதாயத்திலே உள்ள மனிதர்கள் – ஆனால் தனி மனிதர்கள் என்பதை கோடிட்டு காட்டுவதைப் போல, சிறப்பு மனிதர்கள் என்று அழைத்து, அதனால் அவர்களுக்கு சிறப்புச் செய்வது என்று அந்த அமைப்பாளர்கள் என்னிடத்திலே கூறினார்கள். அந்த அளவிற்கு இன்றைக்கு உலகத்தில் உறுப்புக்களில் ஊனமுற்றவர்கள், உடலில் வேறு வகையான ஊனங்களைப் பெற்றவர்கள் – இவர்களை அனுசரித்து, அரவணைத்து, ஆதரித்து அன்பு காட்டி, பாசம் காட்டி, நேசம் காட்டி அவர்கள் வாழ்வதற்கு வழி செய்பவர்கள்தான் ஊனம் இல்லாதவர்கள், அத்தகைய வழி செய்ய எண்ணாதவர்கள்தான் ஊனமுற்றவர்கள் என்பது என் கருத்தாகும்.

ஊனமுற்றவர்களுக்கு நம்முடைய இந்த "எபிலிட்டி பவுண்டேசன்" சார்பாக அருமைத் தம்பி ரெங்கநாதனும் அவருடைய குடும்பத்தாரும் ஆற்றுகின்ற பணி என்னை புல்லரிக்கச் செய்கிறது. மகிழ்ச்சியடையச் செய்கிறது.





அவருடைய குடும்பத்தார் என்று நான் பிரித்துப் பேசுவதாக எண்ணக் கூடாது. இது என்னுடைய குடும்பம்தான். நான் அவர்களுடைய வீட்டிலே சம்மந்தம் செய்து கொண்டபோது, அவர் ஒரு பெரிய வாணிப நிபுணர் என்று மாத்திரம்தான் அவரைப்பற்றி அறிந்திருந்தேன். அவருடைய ஆற்றல், வியாபார அளவிலே அந்தத் துறையிலே தான் கொடி கட்டிப் பறக்கும் என்று கருதிக் கொண்டிருந்தேன். ஆனால் இன்றைய தினம் அவர் ஒரு வியாபாரியா? வாணிபவேந்தரா? கோடீஸ்வரரா? பெரும் பணக்காரரா? என்பதையெல்லாம் விட நிச்சயமாக எனக்குத் தெரிகிறது. தம்பி ரெங்கநாதன் ஒரு கோடீஸ்வரனா? அறிஞனா? புலவனா? திறமைசாலியா? என்பதையெல்லாம் பிறகுதான் பார்க்க வேண்டும்.

முதலில் மனிதனாக இருக்க வேண்டும். அப்படி மனிதனாக இருக்கின்ற அந்த மாண்பு, அந்தப் பண்பு கொண்ட ஒரு தம்பியை நாம் எல்லாம் ஒரு குடும்பம் என்றாலும்கூட சிறப்பாகவும், குறிப்பாகவும் கோடிட்டுக் காட்ட என்னுடைய குடும்பத்தைச் சேர்ந்தவர் என்பதிலே நான் கர்வமடைகிறேன், நான் பெருமையடைகிறேன். இது போன்ற அறவழி தொண்டுகளை அவர் ஆற்றுவதற்கு நீண்ட காலம் அவர் வாழ்ந்து இந்தச் சமுதாயத்திற்கு அரும்பணிகளைச் செய்திட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இங்கே மூன்று பேருக்கு விருதுகள் வழங்கப்பட்டன. அந்த மூன்று பேரும் தங்களுக்கு ஏற்பட்டுள்ள ஊனத்தால் அந்த உறுப்புச் சிதைவால் தங்களுடைய ஊக்கத்தை இழந்துவிடவில்லை. ஊக்கம் உடையவர்களாக இருக்கின்ற காரணத்தால்தான் ஒருவர் வழக்கறிஞராகவும், ஒருவர் ஆடிட்டராகவும், ஒருவர் தனக்கு உதவுகின்ற சைக்கிள் வண்டியை பலருக்கும் அந்த வண்டிகளைச் செய்து தருகின்ற ஆற்றலாளராகவும் இருப்பதைக் காண முடிந்தது. அவர்கள் எல்லாம் இங்கே அழைத்து வரப்பட்டு கௌரவிக்கப்பட்டார்கள். நான் தம்பி ரெங்கநாதனுக்குச் சொல்லிக் கொள்வேன்.

இங்கே வந்திருக்கின்ற மற்ற நண்பர்களுக்கும் சொல்லிக் கொள்வேன். எனக்கும் சொல்லிக் கொள்வேன். இவர்கள் எல்லாம் நம்முடைய கண்ணுக்குத் தெரிந்து இந்த மேடைக்கு அழைத்து வரப்பட்டிருக்கிறார்கள். நம்முடைய கண்ணுக்கு எட்டாத தொலைவில் ஆயிரக்கணக்கான, இலட்சக்கணக்கான மக்கள் திசை தெரியாமல், திக்கற்றவர்களாக நாட்டில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அவர்களையெல்லாம் தேடிக் கண்டுபிடித்து அவர்களுக்கு உற்ற உதவிகளை இந்தச் சமுதாயம் செய்ய வேண்டும்.

ஒரு சர்க்கார் தன்னால் முடிந்த அளவிற்குத் தான் நன்மைகளைச் செய்ய முடியும். என்னைப் பொறுத்த வரையில் நான் 1969ஆம் ஆண்டு அண்ணா அவர்களின் மறைவுக்குப் பிறகு ஆட்சிப் பொறுப்பையேற்ற அந்தக் காலந்தொட்டு கண்ணொளி வழங்குகின்ற திட்டம், பிச்சை எடுக்கின்றவர்களையெல்லாம் ஒரு இடத்தில் தங்க வைத்து அவர்களுக்கு ஒவ்வொரு நாளும் பசியைத் தீர்த்து அவர்களுக்கு உணவு உடை வழங்குகின்ற திட்டம், கைரிக்ஷாக்களை ஒழித்து சைக்கிள் ரிக்ஷாக்களை வழங்கும் திட்டம் – இதுபோன்ற திட்டங்களை தொடர்ந்து ஆற்றி வருகிறேன். இருந்தாலும் ஒரு சர்க்கார் அவ்வளவு பேருக்கும் இந்தப் பணியைச் செய்ய முடியாது. அவரவர்களும் ரெங்கநாதனைப் போன்றவர்கள் ஆங்காங்கே ஒவ்வொருவரும் இத்தகைய பணிகளைச் செய்ய ஆரம்பித்தால்தான் சமுதாயத்திலே இன்றைக்கு தேய்ந்து போயிருக்கின்றவர்கள், வாழ்வதற்கு வழி ஏது என்று கேள்விக் குறியாக இருப்பவர்கள், நிமிர்ந்து நின்று வாழ்வதற்கு வழியேற்படும். அந்த வாழ்வை வழங்க ஒரு ரெங்கநாதன் அல்ல, ஓராயிரம் ரெங்கநாதன்கள் உருவாக வேண்டும் என்ற என்னுடைய ஆசையைத் தெரிவித்து இந்த அளவில் என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்.

– சென்னையில் 4.3.2007 அன்று
எபிலிட்டி பவுண்டேசன் நிறுவனத்தின்
உடல் ஊனமுற்றோர்கள்
விருது வழங்கும் விழாவில்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
அவர்கள் ஆற்றிய உரை





# 9 மாதங்களில் அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரியம் மூலம் 75 ஆயிரம் பேருக்கு உதவித் தொகை



தமிழக அரசு ஏற்படுத்தியுள்ள அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரியங்கள் இன்னும் செயல்படத் தொடங்கவில்லை என்றும், அவைகளில் சேர்ந்துள்ள உறுப்பினர்களுக்கு உதவித் தொகைகள் வழங்கப்படவில்லை என்றும், சில நாளிதழ்களில் செய்தி வெளியாகிவுள்ளன.

அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்கள் பற்றிய விவரங்கள் பின்வருமாறு :

2000ஆம் ஆண்டில் திராவிட முன்னேற்றக்கழக அரசு அமைப்பு சாரா தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்காக ஒன்பது தொழிலாளர் நல வாரியங்களை தனித்தனியே அமைத்தது. 2001ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்ற அ.தி.மு.க. அரசு தனித் தனியாக இயங்கிய தொழிலாளர் நல வாரியங்கள் அனைத்தையும் ஒன்றாக இணைத்து தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் நல வாரியம் என்ற பெயரில் ஒரே வாரியமாக அறிவித்தது.

திராவிட முன்னேற்றக் கழகத் தேர்தல் அறிக்கையில் அறிவித்தபடி, இந்த அரசு பொறுப்பேற்றவுடன் அமைப்பு சாரா தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் ஒரே அமைப்பாகச் செயல்பட்ட உடலுழைப்புத் தொழிலாளர் நல வாரியத்தை (1) தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் நல வாரியம், (2) தமிழ்நாடு சலவைத் தொழிலாளர் நல வாரியம், (3) தமிழ்நாடு முடிதிருத்துவோர் நல வாரியம், (4) தமிழ்நாடு தையல் தொழிலாளர் நல வாரியம், (5) தமிழ்நாடு பனைத் தொழிலாளர் நல வாரியம், (6) தமிழ்நாடு கைவினைத் தொழிலாளர் நல வாரியம், (7) தமிழ்நாடு கைத்தறி மற்றும் பட்டு நெசவாளர் நல வாரியம், (8) தமிழ்நாடு ஓவியர் நல வாரியம், (9) தமிழ்நாடு பொற்கொல்லர் நல வாரியம், (10) தமிழ்நாடு மண்பாண்டத் தொழிலாளர் நல வாரியம், (11) தமிழ்நாடு காலணி மற்றும் தோல் பொருள் உற்பத்தி மற்றும் தோல் பதனிடுதல் தொழிலாளர் நல வாரியம் (12) தமிழ்நாடு ஆட்டோ ரிக்ஷா மற்றும் டாக்ஸி ஓட்டுநர் நல வாரியம் (13) தமிழ்நாடு வீட்டுப் பணியாளர் நல வாரியம் என பதிமூன்று வாரியங்களாகத் தனித் தனியாக உருவாக்கி அவற்றுக்கு உரிய அதிகாரிகளையும் நியமித்துள்ளது.

இவற்றையன்னியில் விவசாயத் தொழிலாளர்கள், விவசாயிகள் நல வாரியம் அமைக்கப்பட்டு செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. அந்த வாரியத்தின் மூலம் இதுவரை 8,918 பேர் பயன் பெற்றுள்ளனர். அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள உதவித் தொகை 2 கோடியே 16 லட்சம் ரூபாய்.



மேலும், அண்மையில் மீனவர்கள் நல வாரியம், உடல் ஊனமுற்றோர் நல வாரியம் மற்றும் கிராமக் கோவில் பூசாரிகள் நல வாரியம் அமைக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் நல வாரியம் உள்ளிட்ட பதின்மூன்று அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களில் உறுப்பினர்களாகச் சேர மனு செய்த பதினைந்து நாட்களில் சரி பார்த்து உறுப்பினர்களுக்கு புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை வழங்கப்படுகிறது. உதவித் தொகை பெற மனு செய்த நாளிலிருந்து அதிகபட்சமாக மூன்று மாதத்திற்குள் உதவித் தொகை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

இந்த நல வாரியங்களில் உறுப்பினர்களாகச் சேருபவர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவித் தொகை மற்றும் திருமண உதவித் தொகை, மகப்பேறு உதவித் தொகை, ஓய்வூதியம், உறுப்பினர்கள் இறக்க நேரிட்டால் அவர்தம் குடும்பத்தினருக்கு உதவித் தொகை, உறுப்பினர்களுக்கு விபத்து நேரிட்டால் உதவித் தொகை, ஈமச்சடங்குகளுக்கு உதவித் தொகை ஆகிய உதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன.

தி.மு.க. அரசு 13.5.2006இல் அமைந்த பின் இந்த ஒன்பது மாத காலத்தில் தனித்தனியே இயங்கி வரும் பதிமூன்று நல வாரியங்களில் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை 2 லட்சத்து 64 ஆயிரத்து 723. இவர்களில் உதவித் தொகை பெற்ற தொழிலாளர்களின் எண்ணிக்கை 75 ஆயிரத்து 114. இவர்களுக்கு வழங்கப்பட்ட உதவித் தொகை 15 கோடியே 68 இலட்சம் ரூபாய்.

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தைப் பொறுத்தவரையில் இந்த ஒன்பது மாத கால தி.மு.க. ஆட்சியில் குறுகிய காலத்திலேயே சேர்க்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை 2 இலட்சத்து 41 ஆயிரம். இவர்களில் உதவித் தொகை பெற்ற தொழிலாளர்களின் எண்ணிக்கை 35 ஆயிரம், இவர்களுக்கு வழங்கப்பட்ட உதவித் தொகை 11 கோடியே 2 லட்சம் ரூபாய்.

தொழிலாளர் நலவாரியப் பணிகளைக் கவனிப்பதற்காக பதினைந்து மாவட்டங்களில் மண்டல அலுவலகங்கள் புதிதாக அமைக்கப்பட்டு ஒவ்வொரு மண்டலத்திற்கும் ஒரு உதவி ஆய்வாளர், இரண்டு உதவியாளர், ஒரு இளநிலை உதவியாளர், ஒரு கணினி இயக்குபவர், ஒரு அலுவலக உதவியாளர் பணியிடங்கள் புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மேலும் ஒரு இணை ஆணையர் மற்றும் ஐந்து உதவி ஆணையர் பணியிடங்களும் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. *

## 30 மாவட்டங்களில் வாரிய அலுவலகங்கள்

தமிழகத்தில் 30 மாவட்டங்களில் வாரிய அலுவலகங்கள் திறக்கப்பட்டுள்ளன. அமைப்பு சாரா தொழிலாளர் நலவாரியம் மூலம் திட்டங்கள் விரைவாகச் சென்றடையும் என அரசு அறிவித்துள்ளது.

இதுகுறித்து அரசின் செய்திக்குறிப்பு வருமாறு:

புதியதாக பொறுப்பேற்ற பின் தமிழக அரசு, தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு வாரியம் மற்றும் 12 தொழில்களுக்கு தனித்தனி வாரியங்கள் மற்றும் தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியங்களின் பணிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

வாரியங்களின் பணி செவ்வனே நடைபெற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவுகளின் அடிப்படையில் அதிக பணி இடங்கள் வாரியங்களில் ஏற்படுத்தப் பட்டுள்ளன. தொழிலாளர் நல அமைச்சர் அறிவுரையின் அடிப்படையில் 146 பணியிடங்கள் நிரப்பப்பட்டன. (ஒரு நிர்வாக அலுவலர், 19 கண்காணிப்பாளர்கள், 66 உதவியாளர்கள், 28 இளநிலை உதவியாளர்கள், 32 அலுவலக உதவியாளர்கள் நியமிக்கப்பட்டனர்) இதைத் தவிர 30 மாவட்டங்களில் வாரிய அலுவலகங்கள் புதியதாக திறக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் மக்களுக்கு அரசின் நலத்திட்டங்கள் விரைவாக சென்றடையும்.

* * *

# சென்னையில்
# மகளிர்க்கான இடைக்கால தங்கும் விடுதி

மகளிர் மேம்பாட்டிற்கென பல்வேறு நலத் திட்டங்களை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது. இந்நிதியாண்டில் மகளிர்க்கான இடைக்காலத் தங்கும் விடுதி (Transit Hostel) ஒன்று சென்னையில் ஏற்படுத்திட அரசு முடிவெடுத்துள்ளது. கணினி மற்றும் தகவல் துறையின் அபரிமிதமான வளர்ச்சியின் காரணமாக தமிழகமெங்குமிருந்து படித்த பெண்கள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் உயர் கல்வி பெறுவதற்காக அடிக்கடி சென்னை வர வேண்டிய தேவை ஏற்படுகிறது. சென்னையில் தங்க வேண்டிய சூழ்நிலையில், பாதுகாப்பான மற்றும் குறைந்த செலவில் பெண்கள் தங்குவதற்கான விடுதி ஒன்றினை மாநில அரசு தொடங்கியுள்ளது. தற்போது 50 பேர் மட்டும் தங்கும் வகையில், இந்த விடுதி திறக்கப்பட்டுள்ளது. இதில் தங்குவதற்கான விடுதி மற்றும் உணவுக் கட்டணம் நாளொன்றுக்கு ரூ.50 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில், ஒரு நாள் முதல் ஒரு வாரம் வரையில் மட்டுமே தங்க இயலும். இவ்வாறு இவ்விடுதியில் தங்குவதற்கு அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் பெறப்பட்டுள்ள பணி நியமன ஆணை நகல் அல்லது பணியில் மற்றும் கல்வி நிறுவனங்களில் சேர்வதற்கான நேரடித் தேர்விற்கான அழைப்பின் நகலினை உடன் எடுத்து வர வேண்டும். விடுதியின் முகவரி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

**அரசு பணிபுரியும் மகளிர் விடுதி,**
எண் 8, இரண்டாவது குறுக்குத் தெரு, சாஸ்திரி நகர், அடையாறு, சென்னை–600 020

மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள் :

044–28545728 (சமூக நல இயக்ககம்)
044–24354568 (மாவட்ட சமூக நல அலுவலகம், சென்னை)

# தற்காலிக பகுதி நேரத் தொழிற்கல்வி ஆசிரியர்கள் நிரந்தர ஆசிரியர்களாக நியமனம்

தமிழ்நாடு சட்டப்பேரவையில், 2006–2007ஆம் ஆண்டிற்கான பள்ளிக் கல்வித்துறை மானியக் கோரிக்கை விவாதத்தின்போது, ``தற்பொழுது அரசு மற்றும் நிதி உதவி பெறும் மேல்நிலைப் பள்ளிகளில், பள்ளி பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் மூலம் முற்றிலும் தற்காலிக அடிப்படையில் பகுதி நேரத் தொழிற்கல்வி ஆசிரியர்களாக நியமனம் பெற்றுப் பணிபுரிபவர்களில் முழுக் கல்வித் தகுதி பெற்ற 213 தொழிற்கல்வி ஆசிரியர்கள் அரசால் அனுமதி வழங்கப்பட்டு காலியாக உள்ள தொழிற்கல்வி ஆசிரியர் பணியிடங்களில் முறையான ஊதிய விகிதத்தில் முன்னுரிமைப்படி நியமனம் செய்யப்படுவார்கள்'' என அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பினைத் தொடர்ந்து, முழுக் கல்வித் தகுதி பெறாத 12 பகுதி நேரத் தொழிற்கல்வி ஆசிரியர்களுக்கு குறுகிய கால பயிற்சி வழங்கப்பட்டு, அவர்களை இரண்டாம் நிலை தொழிற்கல்வி ஆசிரியர்களாக நியமனம் செய்து 12.9.2006 அன்று ஆணை வெளியிடப்பட்டது. எஞ்சியுள்ள 201 காலிப் பணியிடங்களில் முழுக் கல்வித் தகுதி பெற்று தற்காலிகப் பகுதி நேரத் தொழிற்கல்வி ஆசிரியர்களாக பணிபுரிபவர்களை முன்னுரிமைப்படி இரண்டாம் நிலை தொழிற்கல்வி ஆசிரியர் பணியிடத்தில் ரூ.4500–125–6000 என்ற ஊதிய விகிதத்தில் நியமனம் செய்து, மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், 6.2.2007 அன்று அறிவித்துள்ளார். இதன் மூலம் அரசுக்கு ஆண்டொன்றுக்கு ஏறத்தாழ 2 கோடியே 12 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவாகும்.



## தருமபுரி மாவட்டத்தில்
# மலைக்கிராம மக்களின் வீட்டிற்கே சென்று பயனளிக்கும் அரசுத் திட்டங்கள்

தருமபுரி மாவட்டத்தில் பல கிராமங்கள் போக்குவரத்து வசதி இன்றியும், சாலை வசதிகள் இன்றியும் மலைகிராமங்களாகவும், மிகவும் பின்தங்கிய குக்கிராமங்களாகவும் அமைந்துள்ளன. இத்தகைய கிராமங்களில் வசிக்கும் மக்களில் பெரும்பாலானோர் தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாழ் இனத்தை சேர்ந்தவர் களாகவும், மிகவும் பின்தங்கிய வகுப்பைச் சார்ந்தவர்களாகவும், குறிப்பாக எழுத்தறிவு இல்லாதவர் களாகவும், நகர்ப்புற தொடர்பு இல்லாதவர்களாகவும் வசித்து வருகிறார்கள். இவர்கள் அனைவரும் வறுமைக்கோட்டிற்கு கீழிருந்து விவசாயக் கூலித்தொழில் செய்தும், இதர கூலி வேலைகளைச் செய்தும் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் வயது முதிர்வுற்ற காலத்தில் ஆதரவற்ற நிலையில் உண்ண உணவின்றியும், உறைவிடமும் இன்றி அல்லல் படுகின்றனர். சிலர் கணவனை இழந்தும், ஆதரவற்ற நிலையில் கணவனைப் பிரிந்த மகளிரும், உடல் ஊனமுற்ற நிலையில் உள்ளவர்களும், உரிய அரசின் உதவிகளைப் பெற இயலாத நிலை உள்ளது.

இந்நிலையில் தருமபுரி மாவட்டத்தில் அரசின் முன்னோடித் துறையான வருவாய்த்துறையினர் மேற்குறிப்பிடப்பட்டுள்ள குக்கிராமங் களுக்கு நேரடியாகச் சென்று அவர்களது கதவுகளை தட்டி அரசின் உதவிகளை அவர்களது இல்லத்தில் கொண்டு சேர்க்கும் வகையிலும், அவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கத்திலும் புதிய திட்டம் ஒன்று மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. பங்கஜ் குமார் பன்சல், இ.ஆ.ப., அவர்களால் வடிவமைக்கப்பட்டது.

பாதிக்கப்பட்டவர்களும், தகுதியுள்ளவர்களும் அவர்களாகவே நம்மைத்தேடி வந்து மனுக்களை வழங்கி



அதன்பின்னர் அரசின் உதவிகளை வழங்குவதை விட, நாமே அங்கு சென்று இயலாதவர்களுக்கு உதவிகளை வழங்கினால் அது ஏற்புடையதாக இருக்கும் என்றும், வறுமையில் அல்லல்படுவோருடைய சமூகப் பொருளாதாரத்தினை உயர்த்தி வாழ்க்கையில் மேம்பாடு அடையச் செய்து, போராட்டத்தினையே வாழ்க்கையாகக் கொண்டு வாழ்ந்த அவர்கள் எஞ்சிய வாழ்நாட்களை இனிதே கழித்திட திட்டம் தீட்டப்பட்டு செயல் வடிவம் கொடுக்கப்பட்டது.

வாரந்தோறும் செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் மாவட்டத்திலுள்ள ஐந்து தாலுக்காக்களிலும், எல்லையோர கிராமங்கள், மலைக்கிராமங்கள் மற்றும் தீவுக்கிராமங்கள் கண்டறியப்பட்டு தனி வட்டாட்சியர்கள், மருத்துவ அலுவலர்கள், வருவாய் ஆய்வாளர்கள் மற்றும் கிராம நிருவாக அலுவலர்கள் அக்கிராமங்களுக்குச் சென்று குறிப்பிட்ட நாளில் காலை 8 மணியளவில் சிறப்பு முகாம்கள் நடத்திட உத்தரவிடப்பட்டது.

முகாம் நடைபெறும் செய்தி நாளிதழ்களில் விளம்பரப்படுத்தப் பட்டதோடு, இரண்டு தினங்களுக்கு முன்னதாகவே கிராம நிருவாக அலுவலர் வாயிலாக விளம்பரப்படுத்தப்பட்டது. குக்கிராமங்களில்

செயல்படும் தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள், செவிலியர்கள், அடிப்படை பணியாளர்கள் ஆகியோரை கலந்தாலோசித்து அங்கு சமூகப் பொருளாதார நிலை, கலாச்சார மற்றும் விதிமுறை மீறல்கள் கண்டறியவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

தேர்வு செய்யப்பட்ட கிராமங்களின் பெயர்கள் வாரந்தோறும் செய்தி வெளியீடாக நாளிதழ்களுக்கு வழங்கப்படுவதோடு, அன்றைய தினம் தனி வட்டாட்சியர் தலைமையிலான அக்குழுவினர் கிராமம் முழுவதும் சுற்றி அங்கு தேவையான குடிநீர் வசதி, சுகாதாரம், சாலை வசதி, கல்வி வசதி மற்றும் மக்களுக்கு தேவைப் படும் பொதுத் தேவைகளைக் கண்டறிந்து, அறிக்கையினை மாவட்ட ஆட்சியருக்கு வழங்கவும் அறிவுரை வழங்கப்பட்டது.

முகாம்களில் முதியோர், ஆதரவற்ற விவசாயத் தொழிலாளர்கள், ஆதரவற்ற விதவைகள், கணவனால் கைவிடப்பட்டோர் மற்றும் ஊனமுற்றோர் ஆகியோரை மருத்துவ அலுவலரிடம் காண்பித்து மருத்துவச் சான்று பெற்று தகுதியானவர் களுக்கு அம்முகாமிலேயே உரிய உதவிகள் வழங்க ஆணைகள் பிறப்பிக்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர் களின் விவசாயிகள் சமூகப் பாதுகாப்பு நலத் திட்டத்தின் தகுதியுடைய நபர்கள் விடுபடாமல் சேர்க்க நடவடிக்கை மேற்கொள்ளவும் அறிவுரை வழங்கப்பட்டது.

அதுபோலவே கிராமங்களில் வசிக்கும் பொதுமக்கள் மற்றும் பள்ளி மாணவ, மாணவியர்களுக்குத் தேவையான சான்றிதழ்களை அங்கேயே ஆய்வு செய்து வழங்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது. குறிப்பாக வாக்காளர் அடையாள அட்டை, குடும்ப அட்டை வழங்குவதற்குகான நடவடிக்கைகள் இம்முகாம்களின் வாயிலாக துரிதப்படுத்தப்பட்டுள்ளது. அனைத்திற்கும் மேலாக தகுதியற்ற நபர்களுக்கு உதவித்தொகை வழங்கியிருப்பின் அதனைக் கண்டறியவும் ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

வருவாய்த்துறையின் கீழ் வழங்கும் பட்டாமாறுதல் மற்றும் இதர சான்றிதழ்கள் தேவையான நபர்களுக்கு வழங்க அறிவுரைகள் வழங்கப்பட்டன.

வாரந்தோறும் செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் நடைபெறும் முகாம்களில் மொத்தம் பெறப்பட்ட மனுக்கள், ஏற்பளிக்கப்பட்டது, தள்ளுபடி செய்யப்பட்டது போன்ற விவரங்கள் அறிக்கையாக தனிநபர் மூலம் மாவட்ட ஆட்சியருக்கு சமர்ப்பிக்க அறிவுறுத்தப்பட்டது.

வாரத்தில் இரண்டு தினங்கள் நடைபெறும் இம்முகாம்களில் மாவட்ட ஆட்சியர், மாவட்ட வருவாய் அலுவலர், தனித் துணை ஆட்சியர் மற்றும் மண்டல அலுவலர்கள் (துணை ஆட்சியர் நிலை) தவறாது கலந்து கொள்வதோடு தனிக்கவனம் செலுத்தி, கண்காணித்து செயல்படுத்தப் பட்டு வருகிறது.

இம்முகாம்களின் முக்கிய நோக்கமே அரசின் திட்டங்கள், உதவித்தொகைகள், ஏழை எளிய படிப்பறிவில்லாத பாமர மக்களுக்கும் அவர்களது வீட்டு வாசற்படியை சென்றடைய வேண்டும் என்பதே. அத்தோடு அனைவருக்கும் கட்டாயக்கல்வி, குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பு, பெண் சிசுக்கொலை தடுப்பு, பெண் கல்வி, மகளிர்க்கு வழங்கும் சலுகைகள், மகப்பேறு திட்டப்பணிகளில் பெண் குழந்தைக்குரிய உதவித்தொகை முதலியவை குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்துவதாகும்.

இத்திட்டம் 5 தாலுக்காக்களில் வாரந்தோறும் இரண்டு தினங்கள் செயல்படுத்தப்பட்டு இன்று வரை ஒவ்வொரு தாலுக்காவிலும் 15 முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. மொத்தம் நடத்தப்பட்ட 75 முகாம்களில் 1,831 மனுக்கள் பெறப்பட்டு அதில் வருவாய்த்துறை மட்டும் 1,418 மனுக்களை தன்னகத்தே வைத்துக் கொண்டது. 413 மனுக்கள் பிற துறைகளின் ஆய்வுக்காக அனுப்பி வைக்கப்பட்டு பரிசீலனையில் உள்ளது. முதியோர் உதவித்தொகை கோரி வரப்பெற்ற 1,412 மனுக்களில் 418 மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன. பல்வேறு காரணங்களுக்காக 994 மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டது. துயர் துடைப்பு உதவி கோரி பெறப்பட்ட, 6 மனுக்களும் ஏற்றுக்கொள்ளப் பட்டன. 3.11.2006 முதல் 22.12.2006 வரை 50 நாட்களில் தாலுக்கா தோறும் நடைபெற்ற 15 முகாம்களில் 418 நபர்களுக்கு முதியோர் உதவித்தொகைக்கான ஆணையும், 6 நபர்களுக்கு நலிந்தோர் நிவாரண உதவியும் அவர்களது இல்லங்களிலேயே வழங்கப்பட்டது குறிப்பிடத் தக்கதாகும்.

மாவட்டம் முழுமையும் நடத்தப்பட்ட முகாம்களில் அவர்களது இல்லங்களிலேயே அரசின் உதவித்தொகைகள் வழங்கப்பட்டது, கிராம மக்களிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளது. அதுமட்டுமல்லாமல் அந்தந்த பகுதிகளில் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளும் பங்கேற்று இத்திட்டத்தினை வெற்றியடையச் செய்துள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். பணியாற்றிய அலுவலர்களும், பயனாளிகளின் இல்லத்திலேயே உதவிகளை வழங்கும்போது அவர்கள் பெறும் இன்பத்திற்கு அளவில்லை என்பதை கண்டறிந்தபோது தாங்கள் மனம் நெகிழ்ந்ததாகவும் தெரிவித்துள்ளார்கள்.

**மு.பழனிசாமி,**
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
தருமபுரி மாவட்டம்.

★ ★ ★





# திருப்பெரும்புதூரில் ரூ.300 கோடியில் மேலும் ஒரு தொழிற்சாலை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் முன்னிலையில் ஒப்பந்தம் கையெழுத்தானது

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் முன்னிலையில் தமிழ்நாடு அரசுக்கும் இங்கிலாந்தைச் சார்ந்த கெபாரோ குழும நிறுவனமாகிய கெபாரோ வாகன பொருட்கள் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கும் இடையே 8.3.2007 அன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கையெழுத்தாகியது.

சென்னைக்கு அருகிலுள்ள சிப்காட் திருப்பெரும்புதூர் தொழில் வளாகத்தில் ரூ.300 கோடிக்கும் கூடுதலான முதலீட்டில், மோட்டார் உதிரி பாகங்கள் உற்பத்தி செய்வதற்கான திட்டம் ஒன்றினை ஏற்கெனவே கெபாரோ நிறுவனம் அமைத்து வருகிறது. முதலீடுக்கான சாதகமான சூழ்நிலை, தமிழ்நாடு அரசு அளித்த ஆதரவு ஆகியவை தந்த ஊக்கத்தினால், தற்போது ரூ.300 கோடிக்கு மேலான முதலீட்டில், கெபாரோ வாகனப் பொருட்கள் இந்தியா லிமிடெட் என்ற நிறுவனம் மூலமாக மோட்டார் வாகனம் மற்றும் ஏரோஸ்பேஸ் ஆகியவற்றுக்குத் தேவையான ட்யூபுலர் பாகங்கள், மோட்டார் வாகன ப்ரேக்கிங் ஸிஸ்டம், ஃபாசனர்ஸ் ஒருங்கிணைந்த பொருட்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்வதற்கும், பரிசோதனைகள் செய்வதற்காகவும் ஒரகடம் சிப்காட் தொழிற் பூங்காவில் புதிய திட்டம் ஒன்றினைச் செயல்படுத்த கெபாரோ கருதியுள்ளது. இதனால், 850 பேருக்கு நேரடி வேலை வாய்ப்பு உள்ளிட்ட மொத்தம் சுமார் 2,000 பேருக்கு வேலைவாய்ப்பு உருவாக்கப்படும்.

தமிழக அரசின் சார்பாக தொழில்துறைச் செயலர் திரு.சக்திகாந்த தாஸ், இ.ஆ.ப., அவர்களும் கெபாரோ வாகனப் பொருட்கள் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் சார்பாக கெபாரோ – இந்தியாவின் தலைவர் திரு.அங்கத் பால் அவர்களும், புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகும்போது, அரசு தலைமைச் செயலர் திரு.எல்.கே.திரிபாதி, இ.ஆ.ப., நிதித்துறைச் செயலர் திரு.கு.ஞானதேசிகன், இ.ஆ.ப., தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு.தேவ.ஜோதி ஜெகராஜன், இ.ஆ.ப., சிறப்புச் செயலர் (தொழில்), திரு.க.ராசாராமன், இ.ஆ.ப., தொழில் வழிகாட்டி அமைப்பின் இயக்குநர் திரு. எம்.வேல் முருகன், கெபாரோ வாகனப் பொருட்கள் இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் தலைமைச் செயல் அலுவலர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு.சுனில் பகிலாஜானி ஆகியோர் உடனிருந்தனர். ○

# சென்னையில் நான்கு புதிய மேம்பாலங்கள்



சென்னை நகரின் போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் நான்கு புதிய மேம்பாலங்கள் கட்ட உத்தரவிட்டுள்ளார்கள். மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 04.03.2007 அன்று இம்மேம்பாலங்கள் கட்டப்படும் இடங்களை நேரில் பார்வையிட்டு செய்தியாளர்களிடம் பேசுகையில், "பசும்பொன் முத்துராமலிங்க சாலை மற்றும் டர்ன்புல்ஸ் சாலை சந்திப்பில் 646.9 மீட்டர் நீளத்தில் 7 மீட்டர் அகலத்தில் மேம்பாலம் ரூ.12.50 கோடி மதிப்பீட்டிலும், வடக்கு உஸ்மான் சாலை மற்றும் டாக்டர் எம்.ஜி.ஆர்.சாலை சந்திப்பில் 464.5 மீட்டர் நீளத்தில் 7 மீட்டர் அகலத்தில் மேம்பாலம் ரூ.9.72 கோடி மதிப்பீட்டிலும், கோபதி நாராயணா சாலை மற்றும் திருமலை சாலை சந்திப்பில் 505 மீட்டர் நீளத்தில் 14 மீட்டர் அகலத்தில் மேம்பாலம் ரூ.16.50 கோடி மதிப்பீட்டிலும், உஸ்மான் சாலை மற்றும் துரைசாமி சாலை சந்திப்பில் 789 மீட்டர் நீளத்தில் 10 மீட்டர் அகலத்தில் மேம்பாலம் ரூ.19.80 கோடி மதிப்பீட்டிலும், ஆக மொத்தம் நான்கு மேம்பாலங்கள் ரூ.58.52 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட உள்ளது.

இந்த நான்கு மேம்பாலப் பணிகள் அனைத்தும் வடிவமைப்பு, பொறியியல், கொள்முதல் மற்றும் கட்டமைப்பு முறையில் (DEPC-Turn Key Basis) மேற்கொள்ள ஒப்பங்கள் பெறப்பட்டுள்ளது. நான்கு மேம்பாலத் திட்டப்பணிகளுக்கும் திருவாளர்கள் கேமன் இந்தியா லிமிடெட் அவர்களுக்கு முறைப்படி ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டுள்ளது. ஒப்பந்தத் தொகையான ரூ.40.80 கோடிக்கு தமிழக அரசு அனுமதி வழங்கியுள்ளது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இந்த நான்கு மேம்பாலப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பணியைத் துவக்கி வைப்பார்கள். நான்கு மேம்பாலப் பணிகளும் 15 மாத காலத்திற்குள் முடிக்கப்படும். சென்னை மாநகராட்சியும் தமிழக அரசும் 15 மாதத்திற்குள்ளாக இந்த நான்கு மேம்பாலங்களை முடிக்க நடவடிக்கை எடுக்கும். இந்தப் பாலங்கள் அனைத்தும் இரு வழிப்பாதையாக அமையும். தென்சென்னையில் இந்தப் பாலங்கள் அமைவதால் பெரிதும் போக்குவரத்து நெரிசல் குறையும். இதன் காரணமாக உள் கட்டமைப்பு சாலையிலும், போக்குவரத்து நெரிசல் குறையும். நவீன தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுவதால் போக்குவரத்து நெரிசல் பாலப்பணி மேற்கொள்ளும்போது ஏற்படாது" என்று தெரிவித்தார்கள். மேலும் பசும்பொன் முத்துராமலிங்கம் சாலை (சேமியர்ஸ் சாலை மற்றும் டர்ன்புல்ஸ் சாலை சந்திப்பில் மேம்பாலம் கட்டப்படுவதால் ஆழ்வார்பேட்டை, கோட்டூர்புரம், சி.ஐ.டி. நகர், நந்தனம் ஆகிய முக்கிய சாலைகளில் போக்குவரத்து நெரிசலின்றி பொதுமக்கள் செல்லலாம். வடக்கு உஸ்மான் சாலை மற்றும் டாக்டர் எம்.ஜி.ஆர். சாலை (கோடம்பாக்கம் நெடுஞ்சாலை) சந்திப்பில் மேம்பாலம் அமைவதால் கோடம்பாக்கம், நுங்கம்பாக்கம், மகாலிங்கபுரம், தியாகராயநகர் ஆகிய முக்கிய சாலைகளில் போக்குவரத்து நெரிசலின்றி செல்லலாம். கோபதி நாராயணா சாலை மற்றும் திருமலை சாலை சந்திப்பில் மேம்பாலம் அமைவதால் சுற்றுப்புற சாலைகளில் போக்குவரத்து நெரிசல் குறையும். மேலும் உஸ்மான் சாலை மற்றும் துரைசாமி சாலை சந்திப்பில் மேம்பாலம் அமைவதால் வாசன் சாலை, மகாராஜபுரம் சந்தானம் சாலை, முருகேசன் சாலை, கோட்ஸ் சாலை, பிரகாசம் சாலை மற்றும் நாகேஸ்வரராவ் சாலை ஆகிய சாலைகளில் பொதுமக்கள் போக்குவரத்து நெரிசலின்றி செல்ல முடியும். இந்த ஆய்வின் போது வணக்கத்திற்குரிய சென்னை மாநகராட்சி மேயர் திரு.மா.சுப்பிரமணியம், ஆணையாளர் திரு.ராஜேஷ்லக்கானி,இ.ஆ.ப., தலைமைப் பொறியாளர் திரு.பாலசுப்பிரமணியம், கண்காணிப்புப் பொறியாளர் திரு.ராமமூர்த்தி, மண்டல அலுவலர்கள் திரு.மதியழகன், திரு.கிருஷ்ணமூர்த்தி, சென்னை மாநகராட்சி எதிர்க்கட்சி தலைவர் திரு.சைதை பிரவி, மன்ற உறுப்பினர் திரு.மா.பா.அன்புதுரை ஆகியோர் உடனிருந்தனர்.

– ச.செல்வராஜ்,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
சென்னை மாநகராட்சி






# தமிழர் கலைக்குப் பெருமை சேர்த்த சென்னை சங்கமம்




செழுமையான கலைவெளிப்பாடுகளுக்குச் சொந்தக்காரர்கள் தமிழர்கள். சங்க காலம் தொடங்கி இன்றைய 21ஆம் நூற்றாண்டு வரை கலையின் கூறுகளை உள்வாங்கிய சமூகம் தமிழ்ச் சமூகம். நெடிய வரலாற்றுப் பின்னணியுடைய தமிழ்க் கலைகள் நவீன மயமாகி வரும் இந்தக் கணினி உலகிலும் தன்னைப் புதுப்பித்துக் கொண்டு, மேலும் சிறப்புற வளர வேண்டியது அவசியம் அல்லவா. இந்த இன்றியமையாத பணியைத்தான் 'சென்னை சங்கமம்' செய்துள்ளது.

இறுக்கமாகிப்போன சென்னை மாநகர மக்களின் வாழ்வில் மகிழ்வை ஏற்படுத்த இசை, நடனம், நாடகம் போன்ற கலை நிகழ்ச்சிகள் சிறப்பாகவே பயன்பட்டன. தமிழக அரசின் சுற்றுலா–பண்பாட்டுத் துறையின் உதவியுடன் தமிழ் மையம் அமைப்பு ஏற்பாடு செய்திருந்த சென்னை சங்கமம் கலை விழாவிற்கு ஒருங்கிணைப்பாளர் கவிஞர் கனிமொழி வடிவம் கொடுத்திருந்தார்.

பிப்ரவரி 20ஆம் நாள் மாலை வேளையில் சென்னை, அடையாறு ஐ.ஐ.டி. வளாகத்தில் 'சங்கே முழங்கு' என்ற நிகழ்ச்சியின் மூலம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் சென்னை சங்கமம் விழாவினைத் தொடங்கி வைத்தார். 3 மணி நேரம் நிகழ்ந்த இந்நிகழ்ச்சி சென்னை மக்களை வெகுவாக ஈர்த்தது. 200 கலைஞர்கள் பங்கேற்ற இந்நிகழ்ச்சியில் தப்பாட்டம், பொய்க்கால் குதிரை, நையாண்டி மேளம், நாதசுரம், காவடியாட்டம், கோலாட்டம், ஒயிலாட்டம் என தமிழர் நாட்டுப்புறக் கலை வெளிப்பாடுகள் கண்ணையும், கருத்தையும் கவர்ந்தன. சென்னை சங்கமத்தின் ஒரு பகுதியான "நெய்தல் சங்கமம்" வளாகம் திறப்பு விழா அன்று காலை கடற்கரை சாலையில் உள்ள வெலிங்டன் சீமாட்டி திடலில் நடந்தது. மாண்புமிகு ஊரக வளர்ச்சி




மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இவ்வளாகத்தைத் திறந்து வைத்தார். இந்த வளாகம் தமிழ்நாட்டில் உள்ள கிராமங்களை நினைவுபடுத்தியது. சிற்றூர்களில் நிகழும் திருவிழாக்களை நம் கண் முன் நிறுத்தும் வண்ணம் அத்துனை அம்சங்களும் நெய்தல் சங்கமத்தில் இடம்பெற்றிருந்தன. கைவினைப் பொருட்கள் கண்காட்சி, டூரிங் டாக்கீஸ், வீரவிளையாட்டுக்கள், நாட்டுப்புற கலைநிகழ்ச்சிகள் ஆகியவை அனைவரையும் ஈர்த்தன. அய்யனார் கோயில், தேநீர் அங்காடி, கிராமத்து வீடுகள் என சென்னை மாநகரத்திற்குள் ஒரு சிற்றூரையே இந்த நெய்தல் சங்கமத்தில் காணமுடிந்தது. மாநகரத்தைத் தாண்டி தமிழ்நாட்டின் உட்பகுதியைப் பார்த்தறியாத சென்னை வாழ் மக்கள் ஆர்வத்துடன் இந்த நெய்தல் கிராமத்தை வலம் வந்தனர். குழந்தைகளின் குதூகலத்தையும், கும்மாளத்தையும் கண்டு பெற்றோர்கள் அகமகிழ்ந்தனர்.

சென்னை சங்கமத்தின் இன்னொரு நிகழ்வான தமிழ்ச் சங்கமம் நிகழ்ச்சி, பிலிம்சேம்பரில் பிப்ரவரி 21ஆம் நாள் தொடங்கியது. தமிழின் முன்னணி எழுத்தாளர் திரு. த.ஜெயகாந்தன் தொடக்கவுரையாற்றிட திருமதி.ராஜாத்தி அம்மையார் குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார். பொது நூலகத் துறை வழங்கிய இந்நிகழ்ச்சியை தமிழ்ச் சங்கமம் அமைப்பாளர் கவிஞர் இளையபாரதி முன்னின்று நடத்தினார். பிப்ரவரி 21 முதல் 25 வரை நடந்த இந்த இயல் விழாவில் தமிழகத்தின் முன்னணிப் படைப் பாளிகள் திரு.கி.ராஜநாராயணன், திரு.பிரபஞ்சன், திரு.கவிக்கோ அப்துல் ரகுமான், தோழர் தா. பாண்டியன், சுகி சிவம், கவிஞர் ஞானக்கூத்தன், சாரதா நம்பியாரூரன், கவிஞர் இன்குலாப், கவிஞர் கவிதைப்பித்தன், கவிஞர் அறிவுமதி, கவிஞர் மரபின் மைந்தன் முத்தையா, கவிஞர் ஆண்டாள் ப்ரியதர்சினி, கவிஞர் நா.முத்துக்குமார், கவிஞர் கபிலன், கவிஞர் சாவல்பூண்டி சுந்தரேசன், எஸ்.ராமகிருஷ்ணன், தமிழருவி மணியன், சுப்பு ஆறுமுகம், பர்வீன் சுல்தானா, ஆனந்த லெட்சுமி, ஜெகதீஸ்வரி, பிரேமா குமார், சங்கீதா, ரேவதி கிருபாகரன், கவிஞர் சிற்பி ரகுநாதன், கலாப்பிரியா, விக்ரமாதித்யன், த.பழமலய், தமிழச்சி, இளம்பிறை, சல்மா, அப்பாஸ், யவனிகா ஸ்ரீராம், மாலதி மைத்ரி, சுகிர்த ராணி, முத்தமிழ் விரும்பி, வெண்ணிலா, லதா இராமகிருஷ்ணன், தாமரை, தென்பாண்டியன், வேல ராமமூர்த்தி, லட்சுமணப்பெருமாள், பவா செல்லதுரை, நாஞ்சில் நாடன், சுதேசமித்திரன் ஆகியோர் பங்கு கொண்ட கதை சொல்லுதல், கருத்தரங்கம், கதா நிகழ்வு, கவியரங்கம், வழக்காடு மண்டபம், பட்டிமன்றம் ஆகியவை நடைபெற்றன. ஓவியர் ட்ராட்ஸ்கி மருதுவின் ஓவியக் கண்காட்சியும் நடந்தது.

சென்னை சங்கமத்தின் முதன்மை இலக்கான **'கலைகளை மக்களிடம் நேரடியாகச் சேர்க்கும் நிகழ்ச்சிகள்'** மயிலாப்பூர் நாகேஸ்வராவ் பூங்கா மற்றும் மாடவீதி, கலைஞர் கருணாநிதி நகர் சிவன் பூங்கா, தியாகராயர் நகர் நடேசன் பூங்கா, அண்ணா நகர் டவர் பூங்கா, கோட்டூர்புரம் பூங்கா, ராயபுரம் ராபின்சன் பூங்கா, பெசன்ட் நகர் மற்றும் மெரினா கடற்கரை ஆகிய இடங்களில் பல்வேறு கலைநிகழ்ச்சிகள் நிகழ்த்தப்பட்டன. இவ்விழாக்களில் நாதசுரம், பாட்டுக் கச்சேரி, வில்லுப்பாட்டு, பாவைக்கூத்து, தப்பாட்டம், பறையாட்டம், காவடியாட்டம், தெரு நாடகம், துடும்பாட்டம், பொய்க்கால்குதிரை, கானா, மண்ணின் பாடல், கனியன் கூத்து, செண்டை மேளம், பெரிய மேளம், ஒயிலாட்டம், கரகாட்டம், கொக்கிலியாட்டம், கட்டைக்கால் ஆட்டம், தமிழிசை நிகழ்ச்சி, கர்நாடக சங்கீதம் என தமிழ்க் கலைகளின் ஒட்டு மொத்த நிகழ்வுகளும் நடந்தேறின. இந்த நிகழ்ச்சிகளில் தமிழகத்தின் முன்னணி கலைஞர்கள் பங்கேற்றனர். இந்த இடங்கள் தவிர நகரின் பல பகுதிகளிலும் ஆங்காங்கே சாலைகளிலும், 60 அரசு மற்றும் தனியார் பள்ளிகள், 60 கல்லூரிகள், 16 மாற்றுத்திறன் கொண்டோர் பள்ளிகள், 7 முதியோர் இல்லங்கள் மற்றும் புழல் சிறைச்சாலை ஆகிய இடங்களில் 400க்கும் அதிகமான நிகழ்ச்சிகளை நடத்தி நாட்டுப்புறக் கலைஞர்கள் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தி மகிழ்வித்தனர்.

சென்னை சங்கமத்தின் நிறைவு நாளான பிப்ரவரி 26 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பழைய சட்டமன்ற உறுப்பினர் விடுதி வாளகத்தில் நாட்டுப்புற கலைஞர்களின் நிகழ்ச்சிகளைக் கண்டு களித்தார். அன்று மாலை சென்னை பெசன்ட் நகர் கடற்கரையில் நடந்த நிறைவு விழாவில் மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.பரிதி இளம் வழுதி அவர்கள் பங்கேற்றார்.

இங்கு மிகப்பிரம்மாண்டமாக அமைக்கப்பட்டிருந்த அரங்கத்தில் ஒட்டுமொத்த கலைக்குழுவினரும் நிகழ்ச்சிகளை நடத்தினார்கள். பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்ட இந்நிகழ்வு வாண வேடிக்கைகளுடன் நிறைவு பெற்றது.

சென்னை மக்களுக்கு தமிழ்க் கலைகளைக் கொண்டு சேர்த்த நிறைவை இந்த சென்னை சங்கமம் திருவிழா ஏற்படுத்தியது. தமிழகம் முழுவதுமிருந்து சுமார் 780 கலைஞர்கள் புத்துணர்ச்சியோடு பங்கேற்றது குறிப்பிடத்தக்கது. இவர்களுடன் 166 கர்நாடக இசைக் கலைஞர்கள், 20 நுண்கலை ஓவியர்களும் தமது கலையை மக்களிடம் வெளிப்படுத்தினர்.

சென்னை சங்கமத்தையொட்டி கோ–ஆப் டெக்ஸ் சார்பில் கண்காட்சி விற்பனையும் நடத்தப்பட்டது. இலவச மருத்துவ முகாமுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டது. தமிழ்க் கலைகளின் சிறப்பை வலியுறுத்தும் பாடல்கள் அடங்கிய ஒலி குறுந்தகடும் வெளியிடப்பட்டது. இதில் கவிப்பேரரசு வைரமுத்து, கவிஞர் கனிமொழி உள்ளிட்டோர் எழுதிய பாடல்கள் இடம்பெற்றிருந்தன.

சென்னை வாழ் தமிழர்கள் மட்டுமன்றி, பிற மாநிலத்தாரும், வெளிநாட்டினரும் சென்னை சங்கமத்தைக் கண்டு களித்தது தமிழக சுற்றுலாத்துறைக்கு பொலிவைக் கூட்டியது.

தமிழர்களின் கலைத்திறத்தைப் பாராட்டுவதாகவும், நாட்டுப்புற கலைஞர்களுக்கு உயரிய மரியாதையையும் ஏற்படுத்தி தமிழ்ப் பண்பாட்டின் முதன்மைக்கூறான தமிழர் கலைக்கு சென்னை சங்கமம் பெருமை சேர்த்தது என்றே சொல்ல வேண்டும்.

*– தொகுப்பு : தி.பெ.கா.*



# கடலூரில் அரசின் சாதனைகளை விளக்கும் பல்துறை பணிவிளக்க முகாம்

## மேதகு ஆளுநர் அவர்கள் பாராட்டு

அரசின் பல்வேறு நலத்திட்டங்கள், வளர்ச்சிப் பணிகள் போன்ற பல்வேறு பணிகளை மக்களுக்கு எடுத்துரைத்தலும், அவற்றை மக்கள் அறியும் வண்ணம் அரசின் திட்டங்கள், திட்டங்களின் பயனை எய்தும் வழிமுறைகளை எடுத்துக் கூறுவதே பல்துறை பணி விளக்க முகாம். இந்த முகாம் மூலம் மக்களிடம் மனுக்களைப் பெற்று, அவற்றை முறையாக மாவட்ட ஆட்சியரிடம் ஒப்படைத்து, உரிய பயனாளிகளையும் பயனடையச் செய்வதே பல்துறை பணிவிளக்க முகாமின் முதன்மை நோக்கமாகும். தமிழ்நாட்டில் கடந்த பிப்ரவரி 8 முதல் மார்ச் மாதத்திற்குள் தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் 10 நாட்கள் அரசின் சாதனைகளை விளம்பரப்படுத்தும் வகையில் பல்துறை பணிவிளக்க முகாமினை நடத்த அரசு உத்தரவிட்டிருந்தது. இந்த உத்தரவின்படி, கடலூரில் 8.2.2007 முதல் 17.2.2007 வரை முதன்முதலாக 10 நாட்கள் அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகள் குறித்த பல்துறை பணிவிளக்க முகாம் அனைத்து அரசுத் துறைகளுடனும் இணைந்து நடத்தப்பட்டது. இந்த பல்துறை பணிவிளக்க முகாமினை கடலூர் டவுன்ஹாலில் 8.2.2007 அன்று மாவட்ட ஆட்சியர் திரு.ராஜேந்திர ரத்னூ, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள் துவக்கிவைத்தார்.

இந்த பல்துறை பணிவிளக்க முகாமில் அரசுத் துறைகள் சார்பில் வருவாய்த் துறை, ஊரக வளர்ச்சித் துறை, வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத்துறை, கால்நடை பராமரிப்புத் துறை, கல்வித் துறை, சமூக நலத்துறை, ஆவின் மற்றும் செய்தித் துறை உள்ளிட்ட 28 அரசுத் துறை அரங்கங்களில், அரசின் திட்டங்கள், சாதனைகள் குறித்த விளக்க மாதிரிப் படிமங்கள், புகைப்படங்கள் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன. மேதகு தமிழக ஆளுநர் திரு. சுர்ஜித் சிங் பர்னாலா அவர்கள் கடலூருக்கு 12.2.2007 அன்று வருகை புரிந்தபோது கடலூரில் நடைபெற்ற பல்துறை பணிவிளக்க முகாமில் பங்கேற்றுள்ள அரசுத் துறை அரங்குகளையும், மகளிர் சுயஉதவிக் குழு அரங்குகளையும் ஆர்வத்துடன் பார்வையிட்டார். மேலும் மேதகு ஆளுநர் அவர்கள் வேளாண்மைத் துறை, வேளாண்மைப் பொறியியல் துறை அரங்குகளைப் பார்வையிட்டு, அங்கு வைக்கப்பட்டிருந்த சொட்டு நீர்ப்பாசன கருவி, விவசாய செயல்விளக்க உபகரணங்களையும் பார்வையிட்டு பாராட்டுத் தெரிவித்தது குறிப்பிடத்தக்கதாகும். பல்துறை பணிவிளக்க முகாம் தொடர்பான விளம்பர போர்டுகள், பேனர்கள், அரசின் சாதனைகள் குறித்த சிறு கைபேடுகள், மடிப்பேடுகள், மருத்துவ முகாம்கள், கலை நிகழ்ச்சிகள் மற்றும் வீடியோ படக்காட்சிகள் நடத்துதல் பற்றிய துண்டுப்





பிரசுரங்கள் விநியோகம் செய்யப்பட்டு முகாம் சிறப்பாக நடத்தப்பட்டது.

இம்முகாமில் மகளிர் சுயஉதவிக் குழுக்கள் தயாரித்த பொருட்கள் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்தன. தினந்தோறும் பள்ளி மாணவ, மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள், அரசு சாதனைகள் பற்றிய நாடகங்கள் மற்றும் பட்டிமன்றங்கள் நடத்தப்பட்டன. மருத்துவத் துறையின் சார்பாக எய்ட்ஸ் விழிப்புணர்வு பட்டிமன்றம், வருமுன் காப்போம் திட்டம், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு உதவித் திட்டம் நடத்தப்பட்டது. சராசரியாக ஒரு நாளைக்கு 2,000க்கும் அதிகமானோர் அரங்குகளைப் பார்வையிட்டு, கலைநிகழ்ச்சிகளைக் கண்டுகளித்தனர். இங்கு தினமும் இலவச மருத்துவப் பரிசோதனை நடத்தப்பட்டது. இம்முகாமின் மூலம் 1,000க்கும் மேற்பட்டோர் இலவச மருத்துவ சிகிச்சை பெற்றனர்.

அதேபோல், அரசின் சாதனைகள் பற்றி கிராமப்புற பொதுமக்கள் அறிந்துகொள்ளும் விதமாக சாதனை ரதம் என்னும் விளம்பர ஊர்தி மாவட்டம் முழுவதும் விளம்பரப் பணியில் ஈடுபட்டு, ஒரு நாளைக்கு இரண்டு ஊராட்சிகளில் இரவு சாதனை விளக்கத் திரைப்படம் காண்பிக்கப்பட்டு மொத்தம் 40 படக்காட்சிகள் நடத்தப்பட்டன. கிராமங்களில் 32 மருத்துவ முகாம்களும், 45 கால்நடை மருத்துவ முகாம்களும், 13 கண் சிகிச்சை முகாம்களும், 45 மண் பரிசோதனை முகாம்களும், அரசின் சாதனைகளை விளக்கும் கலை நிகழ்ச்சிகள் 20 நடத்தப்பட்டன. இம் முகாம்கள் மூலம் அரசின் சாதனைகள் மற்றும் திட்டங்கள், மருத்துவ சிகிச்சைகள் போன்ற நலத் திட்டங்கள் மூலம் சுமார் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்டோர் பயனடைந்துள்ளனர்.

கடந்த 8.2.2007 அன்று மகளிர் திட்டம் மூலம் கோலப் போட்டி நடத்தப்பட்டது. 16.2.2007 அன்று ஒருங்கிணைந்த குழந்தைகள் திட்ட அலுவலகம் மூலம் கொழு கொழு குழந்தைகள் போட்டியும், மருத்துவத் துறை மூலம் பட்டி மன்றமும் நடத்தப்பட்டது. கால்நடை பராமரிப்புத் துறை மூலம் நாய் கண்காட்சி நடத்தப் பட்டது. கொழு கொழு குழந்தைகள் போட்டியில் வெற்றிபெற்ற ஒரு வயதிற்குட்பட்ட மூன்று குழந்தைகளுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன. கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் நடைபெற்ற நாய்கள் கண்காட்சியில் பங்கேற்ற காவல்துறை மோப்ப நாய்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. விழாவில் கரகாட்டம் நிகழ்ச்சி நடத்திய புனித அன்னாள் மேல்நிலைப் பள்ளி மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. இந்த பல்துறை பணிவிளக்க முகாமில் அரங்கு அமைத்து பங்கேற்ற அரசுத் துறைகளில் வேளாண்மைப் பொறியியல் துறைக்கு சிறந்த அரங்கிற்கான முதல் பரிசும், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம், தோட்டக்கலைத் துறை அரங்குகளுக்கு முறையே இரண்டாவது, மூன்றாவது பரிசுகளும், மற்ற அரங்குகளுக்கு ஆறுதல் பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

இந்த அரசு ஆட்சிப் பொறுப்பேற்றதில் இருந்து எண்ணற்ற திட்டங்களை கடந்த ஒன்பது மாத காலங்களில் நிறைவேற்றியுள்ளது. அரசின் இத்திட்டங்களைப் பற்றியும், திட்டங்களின் பயன்கள் பற்றியும், குறுகிய காலத்தில் அரசு செய்த சாதனைகள் பற்றியும் கலை நிகழ்ச்சிகள், நாடகங்கள் மூலம் மக்களுக்கு குறிப்பாக கிராம மக்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டது. குறிப்பாக சாதனை ரதம் மூலம் ஒவ்வொரு கிராமமாகச் சென்று அரசின் சாதனைகளை விளக்கும் வீடியோ படக்காட்சிகள் திரையிடப்பட்டும், மருத்துவ முகாம், கண்சிகிச்சை முகாம், மண் பரிசோதனை முகாம், கால்நடை சிகிச்சை முகாம் போன்ற முகாம்கள் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் முதல் கட்டமாக தேர்வு செய்யப்பட்டுள்ள 136 கிராமங்களிலும் இந்த பல்துறை பணிவிளக்க முகாம்கள் நடத்தப்பட்டன.

எம்.ஆர்.லிங்கம்,
செய்தி – மக்கள் தொடர்பு அலுவலர்,
கடலூர்

❖ ❖ ❖

திருநெல்வேலி மாவட்டத்தில் இராதாபுரம் வள்ளியூர் ஊராட்சி ஒன்றிய பகுதிகள் சுனாமி என்னும் ஆழிப் பேரலையால் தாக்கப்பட்டு கடலோர மக்கள் உயிர், உடமைகளை இழந்து வாழ்வாதாரம் எதுவும் இல்லாமல் தவித்தார்கள். இம்மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த மத்திய மாநில அரசுகள், தனியார் தொண்டு நிறுவனங்கள் உதவிக் கரங்களை நீட்டியது. மேலும், சுயஉதவிக் குழுக்களுக்கு பயிற்சிகள் அளித்து வருகிறது. தொழில் தொடங்க மொத்த மூலதன மதிப்பிட்டில் 50 சதவிகிதம் மானியமாகவும், 50 சதவிகிதம் வங்கி கடனாகவும் வழங்கப்படுகிறது. இதுவரை மாவட்டத்தில் சுய உதவிக் குழுக்களுக்கு மீன்வலை பின்னுதல், பனை ஒலை பின்னுதல், மீன் விற்பனை செய்தல் ஆகிய தொழிலுக்காக ரூ. 32.43 இலட்சம் மானியமாகவும், ரூ.53.20 இலட்சம் வங்கிக் கடனாகவும் வழங்கப்பட்டுள்ளது.



# தொழில் செய்வதற்கு ஊனம் ஒரு தடையல்ல

திருநெல்வேலி மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட ஊனமுற்றவர்கள் தொழில் செய்ய ரூ.10,000 மானியத்துடன் ரூ.5,000, வங்கிக் கடனாகவும் மொத்தம் ரூ.15,000 வழங்கி இவர்களின் வாழ்வாதாரத்தை தமிழ்நாடு அரசு மேம்படுத்தி வருகிறது. மாவட்டத்தில் இதுவரை 412 ஊனமுற்ற நபர்களுக்கு பெட்டிக்கடை, மீன்வலை பின்னுதல், பல சரக்குகடை, தையல் கடை, போன்ற பல்வேறு தொழில்கள் தொடங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதன் முலம் தையல் கடை வைக்க கடனுதவி பெற்ற திரு.ராஜேஷ் தெரிவித்ததாவது–

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டத்தில் தெ. கள்ளிகுளம் பஞ்சாயத்தில் அமைந்துள்ள ஆறுபுளி என்னும் சிற்றூரில் பிறந்தவன். என்னுடைய பெயர் ராஜேஷ், மயோபதி என்ற ஊனத்தால் பாதிக்கப்பட்டவன். என்னுடைய குடும்பம் மிகவும் ஏழ்மையானது. வாத நோயினால் பாதிக்கப்பட்டு என் தாய் வீட்டிலேயே உள்ளார். என் தந்தை கூலி வேலை செய்து குடும்பத்தை காப்பாற்றி வருகிறார். என்னால் அதிக தூரம் நடந்து செல்ல முடியாது. இருந்தபோதிலும், சைக்கிள் ஒட்ட கற்றுக்கொண்டு சைக்கிள் ஒட்டுவேன். பேருந்து வசதி இல்லாத கிராமம் என்பதால், அதிகம் வளர்ச்சி அடையாத கிராமமாகவே உள்ளது. அருகாமையில் உள்ள கிராமங்களுக்கு நடந்தேதான் செல்ல வேண்டும். நான் பக்கத்தில் உள்ள கள்ளிகுளம் என்ற கிராமத்திற்கு சென்று தையல் வேலை செய்து நாள் ஒன்றுக்கு ரூ.60 வருமானம் கிடைத்தது. எனக்கு நீண்டநாள் ஆசை என்னவென்றால் ஒரு தையல் நிலையம் வைக்க வேண்டும் என்பதுதான். அதை நிறைவேற நிதியுதவி கிடைக்காமல் கஷ்டப்பட்டேன்.

அந்த சமயத்தில்தான் இராதாபுரம், வள்ளியூர் ஊராட்சி ஒன்றியங்களில் சுனாமியால் பாதிக்கப்பட்டோர்க்கு தமிழக அரசின் சுனாமி அவசர கால உதவி திட்டத்தின் கீழ் ஊனமுற்றோருக்கு வாழ்வாதார உதவித்தொகை ரூ.10,000 மானியமாக வழங்குவதை கேள்விப்பட்டு, மாவட்ட சுனாமி திட்ட செயலாக்கப் பிரிவு, திருநெல்வேலியில் மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு மையம் மூலமாக, ஊனமுற்றோருக்கான நிதியுதவி பெற 2006ஆம் ஆண்டு நவம்பர் மாதம் விண்ணப்பித்தேன். விண்ணப்பித்த ஒரு மாத காலத்திற்குள் ரூ.10,000 கிடைத்தது. மானியம் கிடைத்தவுடனேயே இரண்டு தையல் இயந்திரம் வாங்கினேன். ஒரு கடையை வாடகைக்கு எடுத்து ஒரு பையனை வேலைக்கு அமர்த்தி ராஜேஷ் தையல் நிலையம் என்று பெயர் சூட்டி ஆரம்பித்துள்ளேன். தற்போது ஒரு நாளைக்கு ரூ.200 வருமானம் கிடைக்கிறது. ஒரு நபருக்கு வேலையும் கொடுத்து, நானும் அதிகபடியாக ஈட்டுவதற்கு உதவிசெய்த தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்கும், மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். தொழில் செய்வதற்கு உடல் ஊனம் ஒரு தடையல்ல என்பதை என்போன்ற உடல் ஊனமுற்றவர்கள் புரிந்துகொண்டு விடாமுயற்சியுடனும், தன்னம்பிக்கையுடனும் செயல்பட்டால் ஊனம் ஒரு தடையாக இருக்காது. என்னுடைய நீண்ட நாள் கனவு நிறைவேறியது. தற்போது, நான் மிகவும் [illegible] இருக்கிறேன்.

உல. இரவீந்திரன்,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
திருநெல்வேலி மாவட்டம்.

228653





தலைமுறைகளாய் தொடரும் பந்தம் – கோ-ஆப்டெக்ஸ்

தமிழரசு

R.N.I. No.21446/70-Regn.No.TN/ARD/48/0
TN/PMG(CCR) WPP-518/06-08

பாரதியார் பல்கலைக்கழகம் வெள்ளி விழா (1982-2007)



